# தமிழ்ச் சோலை

அல்லது

# கட்டுரைத் திரட்டு

(இரண்டாம் பகுதி)

ஆக்கியோர் :

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனூர்

சாது அச்சுக்கூடம்

மயிலாப்பூர், சென்னை-4

1959

உரிமையுடையது

விலை ரூபா 5

முதற் பதிப்பு : 1935
மூன்றாம் பதிப்பு : நவம்பர், 1959

# முகவுரை

போதகாசிரியத் தொழிலை விடுத்த பின்னைப் பத்திரிகாசிரியத் தொழிலை மேற்கொண்டேன். 'தேசபக்தன்', 'நவசக்தி' என்னும் இரண்டு பத்திரிகைகட்கு ஆசிரியனானேன்.

1917-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் நாள் 'தேசபக்தன்' (தினப் பதிப்பு) ஆசிரிய பீடத்தில் அமர்ந்தேன்; 1920-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் நாள் அதனினின்றும் விலகினேன். பின்னே 1920-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் நாள் 'நவசக்தி' (வாரப் பதிப்பு) தொடங்கப்பட்டது. 'நவசக்தி' ஆசிரியனாகப் பதின்மூன்று ஆண்டு சேவை செய்தேன்.

'நவசக்தி'யின் பத்தாம் ஆண்டில் அரசாங்கத்தாரால் ஈடுகாணம் கேட்கப்பட்டது. அது காரணமாக 'நவசக்தி' ஆறுமாதகாலம் நிறுத்தப்பட்டது. இவ் வாறுமாதகாலத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள், 'நவசக்தி'யை இடையிடையே கிரகணம் பற்றுமாறு செய்தன. அதன் பயனாக இப்பொழுது 'நவசக்தி' மீண்டும் நின்றிருக்கிறது.

'தேசபக்த'னும், 'நவசக்தி'யும் அரசியற் கிளர்ச்சிக்கெனத் தோற்றுவிக்கப்பட்ட பத்திரிகைகளாதலால், அவைகளில் பெரிதும் அவ்வப்போதைய அரசியல் நிலையை ஒட்டி ஆசிரியக் கட்டுரைகள் எழுதப்படுவது வழக்கம்; சிலபோது பொதுக் கட்டுரைகளும் எழுதப்படுவதுண்டு.

'தேசபக்த'னில் என்னால் எழுதப்பெற்ற பொதுக் கட்டுரைகளில் ஒரு சிறு பகுதி நூலாக வெளிவந்துள்ளது. அந் நூலின் பெயர் 'தேசபக்தாமிர்தம்' என்பது.

'நவசக்தி'யில் ஆசிரியக் கட்டுரைகளுடன், முதற் பக்கத்தில் 'சிலம்பொலி' என்னுந் தலைப்பின்கீழ் வேறு பல கட்டுரைகளும் என்னால் வரையப்பட்டுள்ளன. அவ் வாசிரியக் கட்டுரைகளிலும் 'சிலம்பொலி'க் கட்டுரைகளிலும் பொதுவாயுள்ளனவற்றை நூல்வடிவில் வெளியிடுமாறு தோழர் சிலர் விரும்பினர்.

அக்கட்டுரைகளை யெல்லாம் திரட்டி வெளியிடின் நூல் தொகையில் பெருகும். அவ்வளவு அநாவசியம். சில கட்டுரைகளைத் திரட்டி நூலாக்கி இரண்டொரு பகுதிகளாக வெளியிடும் முயற்சியில் தலைப்பட்டேன்.

பலதிறக் கட்டுரைகளால் ஆக்கப்பெற்ற இந்நூலுக்கு எப்பெயர் சூட்டுவது என்று எண்ணலானேன். பலதிற மரஞ் செடி கொடி முதலியவற்றைக் கொண்ட சோலை மீது எனது எண்ணஞ் சென்றது. அவ்வெண்ணம், 'தமிழ்ச் சோலை' என்று பரிணமித்தது.

'தமிழ்ச் சோலை' ஓர் ஒழுங்குபட்ட நூலன்று. பல வேறு காலங்களில் பலவாறு எழுதப்பெற்ற கட்டுரைகளைக் கொண்ட ஒரு நூல் எங்ஙனம் ஒழுங்குபட்டதாகும்? பல வகைக் கலம்பகங்களைத் தொடர்புபடுத்தலும் அருமையன்றோ? தலைப்புக்களை யொட்டி ஒரு வழியில் கட்டுரைகள் கோவை செய்யப்பட் டிருக்கின்றன. பொருளில் சில தொடர்பு பெற்றும், சில தொடர்பு பெறுமலும் இருக்கும்.

இந்நூற் கட்டுரைகள் யாவும் 'நவசக்தி'யில் வெளி வந்தவை. அவைகளுள் பெரும்பான்மையன, 'நவசக்தி'க் கென்று எழுதப்பட்டன. சிறுபான்மையன, நண்பர்கள் விருப்பத்துக்கிணங்கி, அவர்களால் நடத்தப்பெறும் பத்திரிகைகட்கென்று வரையப்பெற்றன. மிகச் சில சொற்பொழிவுகளு மிருக்கின்றன. இவைகள் 'நவசக்தி'யில் வெளிவந்த முறைப்படி, கட்டுரைகளின் அடியில் நாட்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் முறையில் எழுதப்பெற்ற கட்டுரைகளில் தன்மைப் பன்மையும், மற்றக் கட்டுரைகளில் தன்மை ஒருமையும் பெய்யப்பட்டிருத்தல் கவனிக்கற்பாலது.

பத்திரிகைக் கட்டுரைகள் சுருங்கியமுறையில் எழுதப் படுவது வழக்கம். சில இடங்களில் விளக்கம் தேவையா யிருக்கும். இந்நூற்கண் அத்தேவை நேருமேல், என்னால் இயற்றப்பெற்றுள்ள வேறு நூல்களுடன் உறவு கொள்ளுமாறு நேயர்களை வேண்டுகிறேன். பிழை பொறுக்க.

**திருவாரூர் - வி. கலியாணசுந்தரன்**

# உள்ளுறை

பக்கம்


| | |
|---|---|
| அகக்கண் | ... 318 |
| அஞ்சாமை | ... 136 |
| அந்தண நிலையும் அரசியலும் | ... 291 |
| ஆண்மையும் அடிகளும் | ... 18 |
| ஆறுவருடம் | ... 49 |
| ஆன்மசக்தி | ... 214 |
| இதிகாச புராணங்கள் | ... 306 |
| இமயமலை | ... 178 |
| இயற்கையின் முனிவு | ... 189 |
| இவ்வுலக வாழ்வு | ... 115 |
| இளைஞர்களுக்கு ஒரு விண்ணப்பம் | ... 24 |
| இறையுளமும் இல்லறமும் | ... 100 |
| உலக வாழ்வு | ... 120 |
| ஊடல் | ... 52 |
| எவர் கடமை? | ... 295 |
| எனக்கினிய தொண்டு | ... 373 |
| எனது நிலை | ... 329 |
| ஒழுக்கம் | ... 157 |
| ஒழுங்கு I, II, III | 149, 153, 154 |
| கவி தாகூர் | ... 60 |
| கஸ்தூரிபாய் காந்தி வாழ்க | ... 35 |
| காந்தி சமயம் | ... 16 |

| | பக்கம் |
|---|---|
| காந்தியடிகள் | ... 9 |
| 'குடியரசி'ன் குதர்க்கம் | ... 350 |
| சக்தியினிடத்தில் சுயராஜ்யம் | ... 91 |
| சந்நியாசிகள் | ... 285 |
| சமரசம் | ... 263 |
| சமரச சன்மார்க்கம் | ... 258 |
| சன்மார்க்கம் | ... 274 |
| சன்மார்க்க சங்கம் | ... 278 |
| சிறையோ? நிறையோ? | ... 42 |
| சீர்திருத்தம் I, II | 338, 341 |
| திரிகடுகம் | ... 41 |
| திருநாள் | ... 29 |
| திலகர்பெருமான் | ... 58 |
| திறந்த மடல் | ... 360 |
| தொடர் முடங்கல் | ... 367 |
| நீத்தார் பெருமை | ... 301 |
| பாரதியாரும் தேசபக்தியும் | ... 322 |
| பாவம் | ... 143 |
| பிள்ளைப்பேறு | ... 210 |
| பெண்ணினம் | ... 68 |
| பெண்மக்களும்! | ... 74 |
| பெண்மக்கள் நிலை | ... 86 |
| பொருளாராய்ச்சி | ... 377 |
| மலைப்பொழிவு | ... 39 |
| மலைவாசம் | ... 171 |
| மழை | ... 185 |

பக்கம்

மனிதனும் அழகும் ... 200
மாற்றம் ... 254
விலகல் ... 372
விலங்கு - மனிதன் - தெய்வம் ... 218
வீரம் ... 130
வெள்ளக்கொடுமை ... 193
வெற்றிக்கு வழி ... 124
வேள்வி ... 312
ஹிந்துக்கள் கொள்கையும் அனுஷ்டானமும் ... 234
ஹிந்துமத தர்ம ஸ்தாபனங்கள் ... 247
ஹிந்து மதமும் வழிபாடும் ... 225

# தமிழ்ச்சோலை

## அல்லது

# கட்டுரைத் திரட்டு

## காந்தியடிகள்

உலகத்தில் அறந்தேய்ந்து மறம் மலியும் வேளையில், ஆண்டவன் அருளால் பெரியோர்கள் தோன்றி, அறம் வளர்த்து மறங் கடிவது வழக்கம். அவ்வழக்கம், கடந்த பல ஊழிகளில் நிகழ்ந்து வந்திருப்பதைச் சரித்திரங் கூறுகிறது. இந்நாளில் உலகமெங்கும் அறந்தேய்ந்து மறம்மலிந்து வருவதை உணராதாரில்லை. உணர்ந்தும், மக்கள் மறவழியில் விருப்பும், அறவழியில் வெறுப்பும் கொள்வது வியப்பே.

பண்டைக் காலத்தைப் பார்க்கிலும் இக்காலத்தில் கற்றோர் தொகை பெருகியிருக்கிறது ; கல்லூரிகள் தொகை பெருகியிருக்கிறது. கற்றோர் தொகை அருகியிருந்த அந்நாளில் - மா நிழல் கல்லூரியாக இருந்த அக்காலத்தில் - அன்பும் அருளும் மலிந்த அறவழி ஒழுங்குபெற்றிருந்தது. கற்றோர் தொகை பெருகியுள்ள இந்நாளில் - கல்லூரித் தொகை பெருக்கெடுத்துள்ள இக்காலத்தில் - வன்கண்மையும் கொலையும் செறிந்துள்ள மறநெறி வளம் பெற்றிருக்கிறது. ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதும், ஒரு குடும்பத்தாரை மற்றொரு குடும்பத்தார் வஞ்சிப்பதும், ஒரு நாட்டாரை

வேறொரு நாட்டார் துன்புறுத்துவதும் அறநெறியோ? மற நெறியோ? அன்பர்களே ஆராயுங்கள்.

பண்டைநாளில் அச்சுக்கூடங்களில்லை; அச்சு விமானங்களில்லை. பனை ஓலைகளிலும், தோல்களிலும், தகடுகளிலும் நூல்கள் எழுதப்பட்டன. செப்புத்தகடுகள் கற்கள் முதலியவற்றிலும் அரிய கருத்துக்கள் வரையப்பட்டன. உபநிடதங்கள் பைபில் கொரான் முதலிய அருள்நூல்களைப் பழைய காலத்தில் எல்லாரிடத்திலுங் காண்டலரிது. இப்பொழுது இவை யாவும் அச்சு விமானங்களிலேறிப் பலர் கரத்தில் உலவுகின்றன. பைபில், கோடிகோடியாகப் பல மொழிகளில் அச்சிடப்படுகிறது. ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் அந்நூல் இருக்கும். மற்றக் கண்டங்களிலும் அந்நூல் பரவிவருகிறது. அந்நூலை ஓயாது ஓதும் ஐரோப்பிய உலகம் இப்பொழுது எந்நிலையிலிருக்கிறது? பைபிலெங்கே? கிறிஸ்து எங்கே? அவர் சுவிசேஷமெங்கே? ஐரோப்பா, பீரங்கியில் - வெடி குண்டில் - கொலையில் - அறிவைச் செலுத்தி வருகிறது!

இந்நாளில் பயிலப்படுங் கல்வி கல்வியாகாது. ஏட்டுக் கல்வியால் என்ன பயன் விளையும்? எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் அறக்கல்வியைக் காணோம். வஞ்சனை சூது மோசம் பொறாமை முதலிய தீக்குணங்களை வளர்க்கும் மறக்கல்வியன்றோ இப்பொழுது பரவிவருகிறது? வக்கீல் கல்வி என்ன கல்வி? அந்தோ! கல்வி கல்வி என்று மக்கள் படுகுழியில் வீழ்கிறார்கள்! அவர்கள் அறமென்று மறத்தை வளர்க்கிறார்கள்! என்ன கொடுமை! விலங்கினின்றும் வந்த மக்கள், தேவர்களாதற்குப் பதிலாக, மீண்டும் விலங்குகளாக வழிகோலுகிறார்கள்! என்னே காலம்!

உலகில் மக்கள்நிலை குன்றிவரும் இந்நாளில், அவர்கள் நிலையைப் பண்படுத்த ஒரு பெரியார் தோன்றியிருக்கிறார். அவர் யார்? அவர் மகாத்மா காந்தி. அவர் இப்பொழுது எங்கேயிருக்கிறார்? சிறையிலிருக்கிறார். உலகுய்ய, அறம் வளர, அன்பு பெருக, அருளோங்கத் தோன்றிய

ஒரு பெரியார் சிறையில் வதியுங்காலம் அறம் பெருகியுள்ள காலமாமோ ? அறமும் சிறைப்படுங் காலமன்றோ இக்காலம் ? இக்காலத்தின் கொடுமையை என்னென்பேம் ! என்னென்பேம் ! அறவடிவாகவுள்ள ஆண்டவனே ! உன் திருவிளையாட்டென்னே ! என்னே ! உன்னால் அனுப்பப்பட்ட பெரியோர் சிறையில் உறைகின்றார் !

காந்தியடிகள் ஏன் சிறை புகுந்தார் ? எவர் பொருட்டுச் சிறை புகுந்தார் ? கொல்லாமையை - அஹிம்சையை - உலகில் வளர்க்கக் காந்தியடிகள் சிறைபுகுந்தார். அவ்வறத்தை வளர்க்கவேண்டிய இந்திய மக்கள், தங்கள் கடமையைச் செவ்வனே ஆற்றாமையால், அவர்கள் பொருட்டு மகாத்மா சிறைபுகுந்தார். மகாத்மா சிறைபுகுந்த காரணத்தை ஊன்றி நோக்குதல்வேண்டும். ஏதோ அரசியல் கிளர்ச்சி செய்து, அதன் காரணமாக அவர் சிறைப்பட்டார் என்று சொல்வோரும் உளர். இவர் சொல்வது ஸ்தூல காரணம். சூட்சும காரணமே கருதற்பாலது.

மகாத்மா காந்தி சாதாரண மனித உடல் தாங்கியவரே. ஆனால் அவர் உடலில் உள்ள ஆன்ம சக்தியோ விண்ணையும் முட்டுவது. அத்தகை ஆன்ம சக்தியை அவர் எங்கிருந்து பெற்றார் ? அவர் எங்கிருந்தும் அதைப் பெற்றாரில்லை. ஆன்ம சக்தி என்பது ஒவ்வொருவரிடத்திலு மிருப்பது. அச் சக்தியை அறியாமல் வாழ்கிறார் மனிதர் பலர். அதற்குரிய கல்வி பயின்றால் அதை அறியலாம். வெறும் புறப்பொருட் கல்வியால் ஆன்ம சக்தியின் உண்மை நினைவும் தோன்றாது. இலௌகிகக் கல்வி மாத்திரம் பெறுகிறவர் தேகாத்மவாத புத்தியுடையவராக இருப்பார். இலௌகிகக் கல்வியோடு வைதிகக் (அறிவு - ஒழுக்கக்) கல்வி பெறுவோர், ஆன்ம ஆராய்ச்சி புரிந்து ஆன்ம சக்தி பெறுவர். மகாத்மா காந்தி இளமையில் இலௌகிகக் கல்வியைப் பயின்று வந்ததோடு வைதிகக் கல்வியையும் பயின்று வந்தார் ; முன்னையதைக் கற்களால் கட்டப்பெற்ற கல்லூரியில் பயின்றார் ; பின்னையதை வீட்டுத்தெய்வமாகிய தமது அன்னையாரிடம் பயின்றார். காந்தியடிகள், தமது அருமை அன்னையாரைக் கடவுளாகக்

கொண்டு, அவர் உரைவழி நடக்கும் அறிவு ஒழுக்கக் கல்வியை இளமையில் பயின்றார். அதனால் காந்தியடிகள் தேகாத்மவாதியாய்ச் சுயநலப்பேய்க்கு இரையாகவில்லை. அவர் ஆன்மசக்தி பெற்று, மற்றவர்க்கு உழைக்கும் தெய்வ வழிபாடு செய்து, அதன் பயனை இப்பொழுது சிறையில் வதிகிறார். அவர் பயின்ற கல்வி - அவர் கொண்ட அறிவு ஒழுக்கம் - பெறுவோர், அவர்போல ஆன்மசக்தி பெறுவர்; தெய்வ வழிபாட்டிற் சிறந்து தமது என்பையும் பிறர்க் குரிமையாக்குவர்; தமக்கென வாழாது, பிறர்க்கென வாழ்வர்; வரும் இடர்களை யெல்லாம் இன்பத்தோடு ஏற்பர்.

காந்தியடிகளை மகாத்மா என்று உலகம் வழிபடுகிறது. உடல் பொருள் ஆவி மூன்றையும், தம் வாழ்வுக்கெனக் கொள்ளாது, பிறர் வாழ்வுக்கென அர்ப்பணஞ் செய்கின்றவர் பெரியோர்; அவரே மகாத்மா ஆவர். நங் காந்தியடிகள் வாழ்வை எடுத்துக்கொள்வோம். அவர் செல்வக் குடியில் பிறந்தவர்; பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவர்; அத்தொழிலில் ஏராளமான வருவாய் பெற்றிருந்தவர்; மனைவி மக்களை உடையவர். காந்தியடிகள் தமது செல்வத்தில் பற்றுக் கொள்ளவில்லை; அப் பொருட்செல்வத்தை ஏழைகளுக்குப் பயன்படுத்தினார்; பாரிஸ்டர் பட்டத்தையும், தொழிலையும் காற்றில் பறக்கவிட்டார்; அவை அவருக்குக் கனவுபோல் தோன்றி மறைந்தன. மனைவி மக்களையும் மற்ற வுயிர்களைப் போல அவர் கருதலானார். எனவே, தமக்கென அவர் ஒன்றையுங் கொண்டாரில்லை. ஆகவே, அவரை மகாத்மா என்று உலகம் போற்றுகிறது.

உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்து பிறர்க்குழையாது, காடு புகுந்து தவங்கிடக்க அடிகள் சென்றிருப்பாராயின், அவரை மகாத்மா என்று உலகம்போற்றாது. காந்தியடிகள் தமக்குள்ள பற்றுக்களை எல்லாம் ஒழித்துப் பிறர்க்குழைக்கும் ஒரு பற்றைப் பற்றுக் கொண்டார். அப் பற்றைப் பற்றிய எம்பெருமான் உலகை நோக்கினார்; மக்கள் துன்பத்தைக் கண்டார்; நாடு காடா யிருப்பதைக் கண்டார்; காட்டில் வலிய விலங்குகள் எளிய விலங்குகளை வதைப்

பதைப்போல, வலியார் எளியாரை வதைப்பதைக் கண்டார்; செல்வரால் வறியர் படும் பாட்டைக் கண்டார்; கண்ணீர் விட்டார்; அவர் மனங் குழைந்தது. அடிகள், உலகிலுள்ள அரசாட்சிகளெல்லாம் செல்வர்வழி நடப்பதே துக்கத்துக்குக் காரணம் என்னும் உண்மையைக் கண்டார்; கண்டு என் செய்தார்? செல்வ அரசாட்சிகளைச் சீர்திருத்தினால், மனிதவாழ்வு விலங்கு வாழ்வாகாமல், தெய்வ வாழ்வாக ஓங்கும் என்று எண்ணி, உலகத்துக்கு எளிய வாழ்வை அறிவுறுத்தினார்; அறிவுறுத்தியவாறு தாம் நடந்து காட்டினார்; காட்டுகிறார். முதலாவது அவரே எளிய வாழ்வை மேற்கொண்டார். அவர் ஒற்றைத் துணி அணிந்து வாழ்கிறாரெனில், அவரது எளிய வாழ்வை என்னென்று கூறுவது?

ஒவ்வொருவனும் தனக்கு வேண்டுவனவற்றைத் தானே செய்துகொள்ள வேண்டுமென்று உலகத்துக்கு அடிகள் உபதேசித்தார். இவ்வோர் உபதேசம், உலகத்திலுள்ள உயர்வு தாழ்வு முதலிய வேற்றுமைகளை அறவே ஒழிக்கும்; அரசாட்சிகளைத் திருத்தும். உலகம் இப்பொழுது ஹிம்சைமயமா யிருப்பதற்குக் காரணம், மனிதன் இயந்திரங்களின் உதவி நாடிப், பலர் உழைப்பை ஒருசிலர் நுகர்ந்து இன்பந் துய்ப்பதாகும். மகாத்மா இதைக் கண்டு அஹிம்சா தர்மத்துக்கு முதல் படியாக, அவனவனுக்கு வேண்டுவனவற்றை அவனவனே செய்துகொள்ள வேண்டுமென்பதை அருளினார். இவ்வுண்மையை வலியுறுத்தவே சர்க்கா என்னுஞ் சக்கரத்தை மகாத்மா தமது கரத்திலேந்தினார்.

காந்தியடிகள் உபதேசத்துக்குப் பெரிதும் தியாகம் வேண்டற்பாலது. காந்தியடிகளின் தியாகம் உலகறிந்ததொன்று. தியாக உணர்வு இல்லாத மனிதன், பிறரை வருத்தித் தான் நிரம்ப உண்டு களிக்கவே விரும்புவான். இக்களியாட்டயர்வோனுக்கு என்றும் இன்பமில்லை; அவன் என்றும் அச்ச முடையவனாய்க் கவலை யுடையவனாய் வாழ்வன். தியாகம் பெருகப் பெருகச் சுதந்திர வுணர்வும் இன்ப நிகழ்ச்சியும் பெருகும். மகாத்மா, தியாகத்தைத் தமக்குரிய அணியாக அணிந்து, மக்களுக்குப் பாடுபட்டுச் சிறை புகுந்து, இன்பக்

கடலில், 'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம் - ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் இன்பமே எந்நாளுந் துன்பமில்லை' என்று இறுமாப்பொடு திளைத்திருக்கிறார். தற்கால உலகில் மகாத்மா காந்தியைப்போல இன்பம் நுகர்வோர் அரியர் என்றே கூறலாம். தியாகமுள்ள இடத்தில் இன்பமில்லாமல் போகுமோ?

உலகிலுள்ள ஒவ்வொருவனும் தியாகியாய்விட்டால், அவன் வாழ்வும், அவன் குடும்பமும், அவன் தேசமும், அத்தேசம் வகுக்கும் அரசாட்சி முறையும் ஹிம்சையை குறிக்கொண்டியங்குமோ? இயங்கா. தியாகத்தால் மகாத்மா காந்தி பெற்ற ஆன்மசக்தியை எல்லாரும் பெறலாம். ஆன்ம சக்தி என்பது வெளியே இருந்து வந்து புகுவதன்று. அஃது உள்ளிருந்து அரும்பி மலர்வது. அதற்குத் தியாகம் அன்பு முதலியன வேண்டும்.

மகாத்மா, ஆன்மசக்தி பெற்றமையால், சிறிதும் அச்சமின்றி, ஆயுத பலத்தைப்பொருட்படுத்தாது, சாத்விக வழியில் நின்று அதை எதிர்க்கிறார். ஆயுத பலத்தில் பெரு நம்பிக்கையுடைய ஜெர்மெனியே இப்பொழுது காந்தியடிகள் உபதேசத்துக்குச் செவிசாய்க்கிறது. ஐரோப்பாப்போரில் வெற்றிபெற்ற பிரான்சு தேசம், தோல்வியுற்ற ஜெர்மெனி சில நிபந்தனைகளை நிறைவேற்ற இயலாமை கண்டு, அதன்மீது ஆக்கிரமித்தது. ஜெர்மெனி என்ன செய்கிறது? சாத்விகப் போர் முறையைக் கைக்கொண்டு நிற்கிறது. அவ்வாறே எல்லாத் தேசங்களும், அத்தேச ஆட்சிகளும் காந்தியடிகள் உபதேசத்துக்குச் செவிசாய்க்குங் காலம் வரும். இந்தியாவில் பிறந்த நாம் - தர்மத்தை யுணர்ந்த முனிவர்கள் வழி வந்த நாம் - அஹிம்சையில் பேர்பெற்ற நாம் - என்ன செய்தல் வேண்டும்?

உலகத்தைத் திருத்தவந்த பெரியோர் நமது தேசத்தில் தோன்றியவர்; அவரை - நம்மவர் - நம் தேசத்தார் - என்று அழைக்கும் பேற்றை நாம் பெற்றிருக்கிறோம். அவரும் நம் தேசத்தவராகவே, தேச ஆசாரவழி நின்று, தேச தருமத்தை

உலகுக்கு அறிவுறுத்துகிறார். மகாத்மா காந்தி உலகத்தை ஒழுங்குபடுத்த - உலகத்தில் அஹிம்சா தர்மத்தைப் பரப்ப - நமக்கே கட்டளை யிட்டிருக்கிறார். நாம் என்ன செய்தோம்? செய்கிறோம்? நமது கடமையை நாம் செய்தோமா? செய்கிறோமா? இந்திய சகோதரிகளே! சகோதரர்களே! உங்கள் மனச்சான்றைக் கேளுங்கள். உங்கள் வாயிலாக உலகில் அறநெறியோம்ப ஒரு பெரியாரை உங்கள் நாட்டில் தோன்றுமாறு ஆண்டவன் அருள் செய்தான். நீங்கள் அவர் சொல்வழி நிற்கிறீர்களா? அவர் சொல் யாது?

மகாத்மா இந்தியாவிற்கு விடுத்துள்ள செய்தி என்ன? சட்டசபை, பிரிட்டிஷ் நீதிஸ்தலம், அரசாங்க உதவிபெறும் பள்ளிக்கூடம் இவைகளைப் பகிஷ்கரிக்கச் சொன்னார். சகோதரர்களே! இவ்வேலையைச் செய்தீர்களா? முற்றும் மாறாகவன்றோ நடக்கிறீர்கள்? சட்டசபை வேட்டை நாளுக்குநாள் வலுத்து வருகிறது. நீதிஸ்தலங்களில் வக்கீல் கூட்டம் ஊற்றுப்போல் பெருக்கெடுத் தோடுகிறது. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் நிரம்பித் ததும்புகிறார்கள். இந்தியர்களே! என்ன நன்றி!

இன்னும் மகாத்மா என்ன சொன்னார்? கதரை அணியச் சொன்னார்; கள்ளை விலக்கச் சொன்னார்; தீண்டாமையை ஒழிக்கச் சொன்னார். இவ்வேலைகளையாவது நாம் செய்தோமா? இவைகளால் சுயராஜ்ஜியம் வருமா என்று ஞானம் பேசுகிறோம்; தர்க்கஞ் செய்கிறோம். நாம் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். ஆனால் என்ன செய்தோம்? மகாத்மா தங்கடமையைச் செய்துவிட்டுச் சிறை புகுந்தார். அடிகள் அறிவுறுத்திய அஹிம்சா தருமத்தை வளர்க்க இந்தியராகிய நாமே முதலில் கடமைப்படுதல் வேண்டும்.

கடவுளால் அனுப்பப்பட்ட பெரியோர் - உலகை உய்விக்க வந்த உத்தமர் - அஹிம்சா தர்மத்தை அறிவுறுத்திய அறிஞர் - நமது தேச காந்தி - தர்மத்தின் பொருட்டுச் சிறை புகுந்தநாள், வரும் ஞாயிற்றுக்கிழமை உறுகிறது. அந்நாளைக்

கொண்டாடுங்கள். சகோதரர்களே! அன்று ஒரு வேலையுஞ் செய்யாதேயுங்கள்; அஹிம்சா தர்மத்தைச் சிந்தனை செய்யுங்கள்; அத்தருமம் உலக மெங்கணும் பரவக் கடவுளைத் தொழுங்கள்; காந்தியடிகளைப் போற்றுங்கள். அவர் சொல்வழி உலகம் நடந்தால், உலகத்தில் மறந்தேய்ந்து அறம் வளரும். உபநிடதம், பைபில், கொரான் முதலிய அருள் நூல்களின் உண்மை உலகில் நிலவும். ஆதலால், காந்தியடிகள் கூறும் வழியை நாடுங்கள்; அவர் திருநாளைக் கொண்டாடுங்கள். வந்தே மாதரம். காந்தியடிகள் வாழ்க.

(16-3-1923)

## காந்தி சமயம்

காந்திடியகள் உலகத்துக்கு விடுத்துள்ள செய்தியை ஆராய்ந்து பார்த்தால், அது சமயஞானத்தை அறிவுறுத்துவது காணலாம். காந்தியடிகள் உலகத்துக்கு என்ன போதிக்கிறார்? சத்தியம் அஹிம்சை என்னும் இரண்டையும் போதிக்கிறார். இவ்விரண்டும் உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களின் அடிப்படை. சமயங்களுக்கு அடிப்படையான தருமங்களைப் போதிக்கக் காந்தியடிகள் புறப்பட்டமையா லன்றோ, அவரை எம்மதத்தினரும் போற்றுகிறார்? உலகத்தில் எப்பகுதியிலும் இந்நாளில் சமயங்கள் தேய்ந்து வருவது வெளிப்படை. மதப்பற்றும் மதவைராக்கியமும் மதவேஷமும் இப்பொழுது நிலவுகின்றனவன்றி, மதங்களின் உண்மை, செய்கையில் நிலவுவதில்லை. மக்கள் சமய உண்மையை மறந்து, அரசியலை மதமாக்கொண்டு, உலகத்தைக் கலக்கி, இடர் விளைத்துவருவது கண்டு, சமயத்தின் மூல தருமங்களாகிய சத்தியத்தையும் அஹிம்சையையும் மகாத்மா காந்தி போதிக்கத் தொடங்கினார். காந்தியடிகள் போதிக்கும் சமயத்துக்குச் 'சத்தியாக்கிரகம்' என்று பெயர்.

அரசியலால் கட்டப்பட்ட அரசாங்கங்களை அழித்து, அவைகளைச் சத்தியத்தால், அஹிம்சா தருமத்தால் அமைத்தால், உலகில் சத்தியநெறி வளரும் என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. இக்காரணம்பற்றி அவர் அரசியல் குறியொன்றே யுடைய அரசாங்க அமைப்புக்களோடு ஒத்துழையாதிருக்கப் போதித்தார். எனவே, சத்தியாக்கிரக சமயத்துக்கு ஒத்துழையாமை தற்போது சிறந்த விரதமாயிருக்கிறது. சத்தியாக்கிரக சமயத்துக்குக் கதராடை தரித்தல், குடி யொழித்தல், தீண்டாமை விலக்கல் ஆகிய மூன்றும் சிறந்த அனுஷ்டானச் சின்னங்களாகவும் முறைகளாகவும் விளங்குகின்றன. இவ்விரதமும் அனுஷ்டானமும் மனிதனைத் தூய்மைப்படுத்துவன. மனிதன் தூய்மைப்பட்டால், அவன் நடாத்தும் அரசாங்கம் முதலியனவும் தூய்மையுறும். காந்தியடிகளின் சத்தியாக்கிரக சமயம், தற்போதுள்ள அரசாங்கங்களைத் தூய்மைப்படுத்தும் வாயிலாக உலகத்தைச் சீர்திருத்த வல்லது.

காந்தியடிகள் தம் சமயத்தை முதல் முதல் தேச மகா சபையாகிய காங்கரஸ்வழி வளர்க்க முயன்றார். காங்கரஸூம் அவர் போதனையை ஏற்று நடந்துவருகிறது. ஆனால் காங்கரஸில் சமயவாசனை யறியாதாரும் சேர்ந்துள்ளமையால் அன்னார் காந்தியடிகளது போதனையின் நுட்பத்தை உணராது, அரசியல் அஞ்ஞானத்தைக் கொணர்ந்து இடையிடை விடுகிறார். இப்பொழுது காங்கரஸில் பிளவையும் பிரிவையும் உண்டுபண்ணி யிருப்பவர் பெரிதும் சமயப்பற்றில்லாதவரா யிருத்தல்வேண்டும். கோபமுடையோர், வன்மமுடையோர், பொய்மாயப் பெருமையுடையோர் ஒத்துழையாமையில் சேர்ந்து உழைத்தமையாலன்றோ ஒத்துழையாமை உரம் பெறவில்லை? சத்தியாக்கிரக சமயத்தில் பற்றில்லாதாரும் காங்கரஸில் நுழைந்து இன்னும் காங்கரஸைக் கலக்கி வருகிறார். காங்கரஸ் சத்தியாக்கிரகத்தை விலக்கிவிட்டால், தேசத்துக்கு விடுதலை சமீபத்திலில்லை என்னலாம். காங்கரஸால் நாட்டுக்கு நன்மை விளையவேண்டுமானால், அது சத்தியாக்கிரகத்தை நேரிய முறையில் அனுஷ்டித்தல் வேண்டும்.

சத்தியாக்கிரக சமயத்தைக் காங்கரஸ் கைவிட்டாலும் இனித் தேசம் கைவிடாது; தேசம் விட்டாலும் உலகம் விடாது. காங்கரஸ்காரர் அல்லாத பலரும் சத்தியாக்கிரகத்தை அனுஷ்டித்து வருகிறார். காந்தியடிகள் சமயம் இப்பொழுது உலகத்தில் மிக விரைவாகப் பரவிவருகிறது. இவ்வேளையில் இந்தியாவில் பிறந்த சில முதியோர், காங்கரஸைச் சத்தியாக்கிரகத்தினின்றுந் திருப்ப முயன்று வருகிறார். அவருக்குச் சத்தியாக்கிரகம் பிடியாவிடின், காங்கரஸை விடுத்து நீங்கித் தனி இயக்கமொன்று உண்டாக்கிக் கொள்வது நலம்; காங்கரஸைக் கெடுக்க முயல்வது பாவம். காங்கரஸ் அவர்வழித் திரும்பினால், சத்தியாக்கிரகிகள், ஒரு தனி இயக்கம் கண்டு, அதன்வழிக் காந்தி சமயத்தை வளர்ப்பார்களாக. (6–7–1923)

## ஆண்மையும் அடிகளும்

ஆண்மை என்பது யாது? இதுகுறித்து விரித்துக் கூறவேண்டுவதில்லை. ஆண்மை அதனினும் நல்லாண்மை என்பது யாது என்று இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நந் தமிழ்நாட்டிற் றோன்றிய ஆண்டகையார் ஒருவர் கூறிப்போந்தார். அவ்வாண்டகையார்,

'நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்'

என்று கூறிப்போந்தார். இத்திருக்குறள், 'குடிசெயல்வகை' என்னும் அதிகாரத்தில் மிளிர்வதாயினும், அஃது இது போழ்து நாம் பிறந்த இல்லாகிய பாரத நாட்டின்மீது எமது கருத்தைச் செலுத்துகிறது. அக் கருத்துக்கொண்டு, அத் திருக்குறளை நோக்குமாறு ஏனைய அன்பர்களையும் வேண்டுகிறோம்.

நல்லாண்மை என்பது எது? நேயர்களே! கூர்ந்து சிந்தியுங்கள். 'நல்லாண்மை என்பது ஒருவன் தான்பிறந்த இல்லாண்மை ஆக்கிக் கொளல்' என்று திருவள்ளுவனார் அறிவுறுத்துகிறார். தான் பிறந்த இல்லைப் பிறர் வயப்படுத்திக் காலங்கழிப்பது ஆண்மையாகுமோ? தனது இல்லைப் பிறர் வயப்படுத்தி வாளா காலங்கழிப்போன் நாணுடையோன் ஆகான். ஆண்மைக்குறள் மிளிரும் அதிகாரம், 'நாணுடைமை' என்னும் அதிகாரத்தின் பின்னர் வைக்கப்பட்டதுங் கவனிக்கத் தக்கது. நல்லாண்மைக்கு நாண் இயற்கை அணி போன்றதன்றோ? நாணிழந்து உலகில் வாழ்தலினுஞ் சாதலே நன்று. நாணில்லார் உயிருடைய மாந்தராவரோ?

'அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை' என்றும்,

'நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்' என்றும்,

'நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று' என்றும்

நம் ஆண்டகையார் கூறியிருத்தல் காண்க.

நாம் பிறந்த பெரிய இல்லம் நமது நாடு. அப்பேரில்லம் நமதுவழி இயங்கவில்லை எனில், நாம் பிறந்த சிறிய இல்லம் நம்வழி எவ்வாறியங்கும்? இல்லறமாகிய அக இன்பத்துக்கு ஊறுநிகழாதவாறு காக்கவேண்டுமானால், புற இன்பத்துக்கு ஊற்றாகவுள்ள நாடு நம்வழி இயங்கல்வேண்டும். உரிமை இல்லா நாட்டில் வாழும் மக்கட்கு இன்பம் இல்லை என்று தெளிவாகக் கூறலாம். இன்பத்துக்குப் பிறப்பிடம் உரிமை என்பதை விளக்கவேண்டுவது அநாவசியம். 'நாமார்க்குங் குடியல்லோம்' என்றருளிய அப்பர் சுவாமிகள், அதற்கு அவரே பொருள் விரித்தாற்போல, அதே திருப்பாட்டில், 'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று அருளியது

காண்க. அடிமை நீங்கிய உரிமையிலேயே இன்ப மணம் கமழுமென்க.

'நமது நாட்டிலுள்ள இல்வாழ்க்கை இப்பொழுது செவ்வனே நடைபெறுவதில்லை. வறுமையாலும், பிணியாலும், பிணக்காலும், வேறு பலவற்றாலும் பீடிக்கப்பட்டு, இல்வாழ்வு குலைந்து வருவதை நாமும் கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும், நாணமின்றி வாழ்ந்து வருகிறோம். வறுமை முதலிய குறைபாடுகள் உறுதற்குக் காரணம் என்னை? போதிய பொருளின்மையாகும். 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்' என்று ஆண்மை இயல்பு உணர்ந்த திருவள்ளுவனார் அறைதல் காண்க. 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமன்றே' என்றார் மணிவாசகனாரும். இவ்வுலக வாழ்விற்குப் பொருள் இன்றியமையாதது. பொருள் வளஞ் சுருங்கச் சுருங்க இன்ப நலனும் சுருங்குதல் இயல்பு. பொருள் போக்கிற்குக் காரணம் நாம் பிறந்த இல்லம் நம்வழி இயங்காமையாகும். துணிக்கு மாத்திரம் நமது நாட்டுப் பொருள் அறுபது கோடி வெளிநாட்டுக்குப் போகிறதெனில், மற்றவற்றிற்கு எவ்வளவு பொருள் போகுமென்பதைப் பற்றிக் கூறுதலும் வேண்டுமோ? வீட்டுப்பொருள் பெரிதும் வெளி சென்றுகொண்டிருந்தால், வீட்டில் இன்பம் ஏது? இன்பம் இல்லா வீட்டில் சண்டையும் கூச்சலும் குழப்பமும் நிகழ்தல் இயல்பு. நமது நாட்டின் நிலை இதுபோழ்து எவ்வாறிருக்கிறதென்பது வெள்ளிடைமலை.

நாம்பிறந்த இல்லமாகிய பாரதநாட்டின் வளங்குறைந்து வருதல் காணும் மைந்தர் பலர், அக்குறைபாட்டை நீக்க முயலாது, குறைபாட்டிற்கே பெரிதும் முயன்று வருதல் கண்கூடு. இவ்வாறு சொல்லுதல் நியாயமோ என்று சிலர் கருதலாம். அவ்வன்பர்கள் நம்மவர்கள் செயலைச் சிறிதுநேரம் உற்றுநோக்குவார்களாக. முதலாவது பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களைக் கவனிக்கலாம். இவர்கள் எவ்வெண்ணத்தோடு பள்ளி நுழைகிறார்கள்? 'படித்து ஏதாயினும் உத்தியோகம் பெறலாம்' என்னும் எண்ணமன்றி வேறெவ்வெண்ணம் அவர்கள் உள்ளத்தில் குடிகொள்கிறது? இளமை

யிலேயே இவ்வெண்ணத்துக்கு எளியராகும் மாணுக்கர், பின்னை நாட்டின் நலங்கருதி உழைப்போராதல் அரிது. அவர்கள் பயிலும் கல்வியோ அவர்கட்கு உரிமை உணர்வு ஊட்டுவதுமன்று. இப்பொழுது இத்தகை மாணுக்கர்களா யிருப்பவர்களே, பின்னைப் போலீஸ் அதிகாரிகளாகவும், மாஜிஸ்டிரேட்டுகளாகவும், கலெக்டர்களாகவும், நிர்வாக அங்கத்தவர்களாகவும் வரப்போகிறுர்கள். இவர்கள் வாயி லாகத் தேசசேவையை எவ்வாறு எதிர்பார்த்தல் முடியும் ?

இப்பதவி பெருத சில மாணுக்கர் வக்கீல்களாகிறுர். அவர் கருத்து வழக்கின்மீதும் பொருளின்மீதும் படிகிற தல்லாமல், உரிமையின்மீது படிகிறதில்லை. வக்கீல் கூட்டத் திலும் சில நன்மக்களிருக்கலாம். பொதுப்பட வக்கீல்கள் செய்யுங் கிளர்ச்சியின் அடிப்படையை ஆராய்ந்தால், அது தன்னலத்தில் முடிவது காணலாம். இவர்கள் செய்யுங் கிளர்ச்சி, அதிகாரவர்க்க அமைப்புகளில் அங்கம்பெறல் முதலியவற்றைக் குறிக்கொண்டு நிற்பதாகும்.

வக்கீலாகாத மாணுக்கர் சிலர் உற்றவயதில் வாணிபஞ் செய்யப் புறப்படுகிறுர். இவர் வாணிபம் மேல்நாட்டுப் பொருளை வாங்கி விற்றுச் சிறு ஊதியம் பெறுவதாகும். இஃதென்ன வாணிபம் ? இதனுல் நாட்டுக்கு நலன் உண்டா? கேடு உண்டா? இவ்வாணிபம், நமது நாட்டுத் திருவை மேல் நாட்டுக்குத் தூக்குவது.

மற்ற மாணுக்கர்கள் தொழிற்சாலைகளிலும், அரசாங்க சாலைகளிலும் கணிதர்களாகிறுர்கள். இவர்கள் இயந்திரங் கள் போல உழன்று உழன்று ஓய்வடைந்து விடுகிறுர்கள். இவர்கள் உள்ளத்தில் உரிமைத் தெய்வம் எவ்வாறு கோயில் கொள்ளும் ?

கற்றவர் நிலை இவ்வாருக, கல்லார் நிலை எவ்வாருகிறது ? அவருள் பலர் மேல்நாட்டு முதலாளிகளின் தொழிற்சாலை களில் தொழில் புரிபவர்களாய் விடுகிறுர். மற்றவர் விவ சாயம் முதலிய தொழில் புரிகிறுர். மேல்நாட்டுப் பொருள் மலிவால், நாட்டுத் தொழிலாளர் பலர், நாட்டுத் தொழில் புரிய இடம்பெருது கூலியாட்களாக வெளிநாடு செல்கிறுர்.

பாரத நாடெனும் நமது வீட்டு மக்கள் இங்ஙிலையுற்றிருக்கிறார்கள் ! தாம் 'பிறந்த இல்லாண்மையாக்கிக் கொள்ளுந்' திறன் நம்மவர்கள்பால் காணோம் ; காணோம்.

தாதாபாய், திலகர் முதலிய ஒரு சிலர்க்கு உரிமை வேட்கை எழுந்தது. அவ்வெழுச்சிக்குத் துணைபுரிய நாடு சித்தமாகவில்லை. மேற்கூறியவாறு நாட்டிற் பிறந்த மக்களே நாட்டு நினைவிழந்து வாழ்வார்களாயின் ஒரு சிலர் முயற்சி என் செய்யும்? தலைவர்கள் உழைப்பும் காங்கரஸ் முயற்சியும் பயன்படாமை கண்ட ஒருவர் 'எத்துணைநாள் நாம் பிறந்த வீட்டை நமக்குரிமையாக்காது கிடப்பது' என்றெண்ணி அறக் கிளர்ச்சி புரியத் தொடங்கினார். 'நமது வீட்டில் நமக்கு உரிமை யில்லையா' என்ற நாணுடைமை அவர்க்கு ஆண்மையை எழுப்பிற்று. அவரும் தாம் பயின்ற கல்விவழி நின்று, பாரிஸ்டர் தொழில் செய்து, மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கி யிருப்பாரானால், ஆண்மை அவர்மாட்டும் எழுந்திராது. தம்மைப் பற்றிய தீட்டுக்கு அவர் தென்னாப்பிரிக்காவில் கழுவாய் தேடிக் கொண்டமையால், தாம் பிறந்த நாடாம் வீட்டின்மீது அவரது கருத்துச் சென்றது. அதன் நிலையையுணர்ந்து, நாணுடையராய், 'எனது வீட்டை எனதாக்கிக் கொள்ளாதவரை எனக்கு வீடென்ன வாசலென்ன' என்று எல்லாந் துறந்து, நாட்டின் நிலையை அறிவிக்கும் ஒரு கோலந் தாங்கி, ஆண்மையுடன் உழைத்து வருகிறார். திருவள்ளுவனார் கூறும் நாணுடைமைக்கும் நல்லாண்மைக்கும் இலக்கியம் அப்பெரியார். அவர் யாவர் ?

காந்தியடிகள் முதல்முதல் மக்கள் ஆண்மை கெடுக்கும் மூல காரணங்கள் இன்ன இன்ன என்று கண்டார். கண்டு நல்லாண்மையைக் கெடுக்கும் பள்ளிக்கூடத்தை - நீதிமன்றத்தை - சட்டசபையை - ஒழிக்குமாறு தம்முடன் பிறந்தாரை வேண்டிக்கொண்டார்; இழந்த ஆண்மையைப் பெறத் தீண்டாமையை விலக்குமாறும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்குமாறும், ராட்டினத்தைச் சுழற்றுமாறும் வேண்டினர். அவர் வேண்டுதல் நிறைவேறிய இடங்களில் தளர்ச்சி நீங்கி, ஊக்கமெழுந்து, ஆண்மை யுறலாயிற்று.

இளவரசர் வரவேற்பை விலக்குமளவும் ஆண்மைத் திறன் எழுந்தது.

பின்னை ஆண்மையைக் கெடுக்கும் முயற்சி தலை காட்டிற்று. மீண்டும் நம்மவர்கள் ஆண்மையைக் குலைக்கும் நெறி பற்றலாயினர். ஆண்மை மிகுந்த ஒருவர் என் செய் வார்! அவரவர் சொல்வழிச் சொல்வழிக் காங்கரஸை விடுத் தார். நல்லாண்மையை வழங்கவந்த மருத்துவர், ஆண்மைக் குரிய ஒத்துழையாமையை ஒடுக்க ஒருப்பட்டாலும், அதன் உயிராக உள்ள ஒன்றை இன்னும்விட ஒருப்படவில்லை. அவ்வொன்று யாது? அதுதான் கைராட்டினம். அதன் வழித் தம்முடன் பிறந்தார்க்கு ஆண்மையை எழுப்ப அடிகள் முயல்கிறார்.

காந்தியடிகள் எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்தார்; ராட்டினத்தை இன்னும் விட்டுக்கொடுக்கவில்லை. ராட்டி னத்தை அடிகள் என்றும் விட்டுக் கொடுக்கமாட்டார். நாட்டில் ஒத்துழையாமை - தூலத்தில் - ஒடுங்கினாலும், அது - சூக்குமத்தில் - இன்னும் ஒடுங்கவில்லை என்பதை ராட்டின இயக்கம் காட்டுகிறது. காந்தியடிகள் தாங்கியுள்ள கைராட்டினத்தில் பகிஷ்கார நிர்மாண முறைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. பிரணவ மந்திரம் போன்றது கைராட்டினம். மந்திரங்கட்கெல்லாம் உயிர் பிரணவமன்றோ? கைராட்டினமும் எல்லா முறைகட்குந் தாரகம் போன்றது. இதைக் கூர்ந்து சிந்திப்போர்க்கு நுட்பம் புலனாகும்.

முதல் முதல் கைராட்டின அழிவால் நமது நாட்டின் ஆண்மை குலைந்தது. கைராட்டின அழிவால் அறுபதுகோடி ரூபா நமது நாட்டை விட்டுச் செல்கிறது. இவ்வொன்றால் நாட்டுக்கு விளைந்த கேடோ பெரிது. இதை உயிர்ப்பித்தால் எல்லாம் நலமுறும். ஒத்துழையாமை என்னும் ஆறு, பல கிளைகளாகப் பிரிந்து நாட்டில் பாய்ந்துகொண்டிருந்தது. இப் பொழுது அக்கிளைகளெல்லாம் ஒன்றுபட்டுப் பேராறாக ஓடுகிறது. அப்பேராறே கைராட்டினம். கைராட்டினத்தில்

கதர் என்னும் ஆக்கமும், பிற நாட்டுத் துணி விலக்கு என்னும் அழிவும் அடங்கியிருத்தல் காண்க. கதர் உரிமைக்கு அறிகுறியாகும்.

இப்பொழுது நாட்டிலுள்ள கட்சித் திட்டங்களெல்லாம் ஆண்மையை எழுப்புவனவல்ல. அவையாவும் அதிகாரவர்க்க அறைகளாகிய அமைப்புக்களில் அடங்கி ஆண்மையைக் கெடுப்பனவாகும். நல்லாண்மை இயல் காந்தியடிகள் காட்டும் கைராட்டினத்தில் இருக்கிறது. சட்டசபை நுழைவும் பிறவும் வீண் ஆரவாரமன்றி ஆண்மையை ஊட்டுவனவல்ல. 'இல்லாண்மையாக்கிக் கொள்ளும்' வழியைக் காந்தியடிகள் காட்டுகிறார். கண்ணுள்ளோர் அவ்வழிபற்றி நடப்பாராக.

(9–10–1925)

# இளைஞர்களுக்கு ஒரு விண்ணப்பம்

இன்று காந்தி அடிகள் பிறந்த திருநாள். இத்திருநாள் திருநாளாகவே யாண்டுங் கொண்டாடப்படும். ஊர்வல ஒழுங்கும், விழா எடுப்பும், கூட்டச் செறிவும், வாழ்த்தொலியும் இன்று நாட்டைக் காந்தி மயமாக்கி யிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறப்பமைந்த காந்தியடிகள் திருநாளாகிய இற்றை ஞான்று நாம் என்ன எழுதுவது? எமது அருமைத் தமிழ் நாட்டார்க்கு என்ன உரைப்பது? நாம் எந்நிலையிலிருக்கிறோம்? பிற நாட்டினர் எந்நிலையிலிருக்கின்றனர்? இவ்வெண்ணமே எமது உள்ளத்தில் அரும்பி மலர்ந்து இக்கட்டுரை எழுதுமாறு உந்திற்று.

எல்லா நாடுகளும் எந்நிலையிலிருக்கின்றன? அவை உரிமை இன்பத்தில் திளைத்திருக்கின்றன. நமது நாடோ - நமது பாரத நாடோ - நேயர்களே! சிறிது நேரஞ் சிந்தியுங்கள். உங்கள் உள்ளம் உருகும்; கண்ணீர் கலங்கும். எத்துணை நாள் நாம் உரிமையிழந்து கிடப்பது?

நமது நாட்டில் என்ன குறையுண்டு? இயற்கை வளஞ் செறிந்த நாடன்றோ நமது நாடு? மலைவளத்தில் குறையுண்டோ? நீர்வளத்தில் குறையுண்டோ? எவ்வளத்தில் குறையுண்டு? இமயம் நம்முடையது; கங்கை நம்முடையது. கருமலையின் கூட்டமும், பசுங் காட்டின் ஈட்டமும், ஆறுகளின் ஓட்டமும், கடல்களின் சூழலும் நமது நாட்டின் பொருட்காட்சி. மலைபடு பொருளும், கான்படு பொருளும், கடல்படு பொருளும் மிடையுந் திருநாடு நமது பாரதநாடு. பொன்னும் மணியும் முத்தும் நெல்லும் புல்லுங் கொழிக்குஞ் செழுமைநாடு நமது பாரதநாடு. இவ்வியற்கைப் பொருள் கொண்டு, ஞாயிற்றின் வெம்மையன்றிப் பிறிதொரு வெம்மை படாமலும் கலப்பையன்றிப் பிறிதொரு கருவி தொடாமலும், இல்லறமாம் நல்லறம் பேணி, இயற்கை இன்பந் துய்த்து, அருநெறி யோம்பிவந்தனர் நமது பண்டை மூதறிஞர்.

அவர் வழிவழி வந்த நம்மக்கள் இதுபோழ்து எந்நிலையி லிருக்கிறார்கள்? நகரத் தெருக்களில் சிறிதுநேரம் நின்று நம் மக்களை உற்றுநோக்கினால் அவர்கள்நிலை இனிது புலனாகும். எத்துணை என்புக்கூடுகள் - தோற்பாவைகள் - குழி விழுந்த கண்கள் - தசையிலா மார்பங்கள் - சூம்பிய தோள்கள் - வற்றிய உடல்கள் - காட்சியளிக்கும்! மக்கள் இருமல் ஒலி பிச்சைக்காரர்கள் கூச்சலையும் வென்றுவிடும். இடையிடையே தொழுநோய் புலனாகும். அகச்சோர்வுடனும் முகச்சோர்வுடனும் செல்வோர் எத்துணைபேர்! கவலையால் பித்தர்போல் நடப்போர் எத்துணைபேர்! கொழுமையுஞ் செழுமையுங் குவிந்து அழகொழுகும் மக்களைக் காண்டல் அருமையா யிருக்கும்.

இச் சிறுமைநிலை எய்தியுள்ள ஆண்மக்களும், பெண் மக்களும்கூடி நடாத்தும் இல்லறத்தில் இன்பம் நிலவுமோ? ஆடவர் மூலக்குழியும் மகளிர் கருக்குழியும் பசையிழந்து வறட்சியுற்றிருக்கின்றன. இக் காரணத்தால் கட்டழகுக் கான்முளைகள் பிறப்பதில்லை. கருவினில் சிதையும் முளைகள் எத்துணை! மண்ணிலுதித்ததும் மாளுங் குழவிகள் எத்துணை! ஒரு திங்களில் ஓராண்டில் சாவன எத்துணை! குழந்தை

மரணம் நமது நாட்டில் அமிதம்; அமிதம். இஃதொன்றே நமது நாட்டு நிலையைப் புலப்படுத்தும். நமது நாடு வறுமைக்கும் பிணிக்கும் அகால மரணத்துக்கும் இரையாகிறது என்று சுருங்கக் கூறலாம். உள்நாட்டு நிலை இவ்வாறாக ; வெளிநாட்டிலோ நம்மவர்கள் உற்றுவருந் துன்பத்துக்கோர் அளவும் உண்டோ ? இவ்வுலகில் இந்தியருக்குள்ள சிறுமை வேறு எவருக்கு உண்டு ?

இச் சிறுமைநோய்க்குக் காரணம் என்னை ? இமயஞ் சாய்ந்ததோ ? கங்கை வறண்டதோ ? மற்ற இயற்கைவளம் சுருங்கிற்றோ ? எல்லாம் இருக்கின்றன. பின்னை என்னே காரணம் ? ஆட்சிமுறை நம் வயப்பட்டில்லை. நமது நாட்டுப் பொருள் நமக்குப் பயன்படவில்லை. இதனால் வறுமை நமது நாட்டில் நிலையாக நின்றுவிட்டது. இப்பொழுது நாம் என் செயல்வேண்டும் ? ஆட்சிமுறையை மாற்றி ஜனப்பொறுப்பாட்சியாக்கல்வேண்டும். அதுகுறித்து நம்மவர்கள் பலதுறைகளிலும் முயன்று முயன்று உழைத்தும் பயன்விளையவில்லை.

1921-ம் ஆண்டில் தோன்றிய ஒத்துழையா இயக்கத்தால் பொறுப்பாட்சி மலரும் என்பது எதிர்பார்க்கப்பட்டது. ஈராண்டு நாட்டில் சுதந்திரதேவி தாண்டவம் ஆடினாள். காந்தியடிகளும் அலி சகோதரர்களும் நாட்டின் - வடக்கும் தெற்கும் மேற்கும் கிழக்கும் - நாலுபக்கங்களிலும் - திரிந்து திரிந்து பொழிந்த சொன்மழையால் உரிமை வான்பயிர் வளரலாயிற்று. இந்திய மக்கள் கருத்துக்களெல்லாம் அழிவுவேலையிலும் ஆக்கவேலையிலும் பதிந்துகிடந்தன. சட்டசபையும், நீதிமன்றங்களும், பள்ளிக்கூடங்களும் துச்சமாகப் பாவிக்கப்பட்டன. ஒருவன் தன்னைச் சட்டசபை அங்கத்தவன் என்றோ, மன்றாடும் வக்கீல் என்றோ, பள்ளிமாணாக்கன் என்றோ சொல்லவும் நாணமுற்றான். சட்ட மீறலுக்கும் மறியல் வேலைக்கும் தொண்டர்கள் நடுக்கின்றி நின்றார்கள். இளவரசர் வரவேற்பில் கலவாதிருக்க நாடு சித்தமாயிருந்ததென்றால், அந்நாளைய நாட்டின் நிலையை அளந்து கூறவேண்டுவதில்லை. பெருந் தலைவர்களும்தொண்டர்களும் ஒருவர்பின் ஒருவராகப் புற்றீசல்போலச் சிறைபுகுந்து அதிகார

வர்க்கத்தை நடுக்குறச் செய்தது மறக்கற்பாலதோ? கதரே இல்லா நாட்டில் எங்கணுங் கதர் மயமாக்கும் முயற்சி எழுந்தது. அதிகாரவர்க்கம் அருகி, ஜனப்பொறுப்பாட்சி பெருகுங் குறியுந் தோன்றிற்று. இவ்வளவும் போரின்றி - இரத்தஞ் சிந்தலின்றிப் - பொறாமையின்றிப் - பொறுமை வழி நிகழ்ந்தன. இப் பெரும்போரை - உலகில் என்றும் நடைபெறாத அன்புப்போரை - அறப்போரை - நடாத்தின தலைவர் எவர்? அவர், ஒற்றைத் துணியணிந்து உப்பிலா உணவுகொண்டு மெலிந்த உடலுடைய ஒருவர். அச் சிறு வடிவம் இவ்வளவிற்குங் காரணம்!

அவ்வளவு விரைந்து எழுந்து உரிமை வேட்கை கொண்டோடிய நாடு, இப்பொழுது அவ்வேட்கையிழந்து கிடக்கிறது. ஒத்துழையாமை கனவென மறைந்துபோயிற்று. ஒத்துழையாமை எங்கே? சட்டசபை பகிஷ்காரம் எங்கே? மறியல் எங்கே? சிறை எங்கே? எல்லாம் போயின. கதருக்கும் காலன் வந்திருக்கிறான். காந்தியடிகள் போர் முனையினின்றுந் தூரத்தப்பட்டார். அவரது பகிஷ்கார நிர்மாணப் போர்க்கருவிகள் பிடுங்கப்பட்டன. அவர் கட்டிய உரிமைக்கோட்டை தகர்க்கப்பட்டது. காந்தியடிகள் ஒரு செயலுமின்றி ஒதுங்கி நிற்கிறார். இக் கொடுமைகள் செய்தவர் யாவர்? நம்மை ஆள்வோரா? அல்ல; அல்ல. நமது நாட்டிற் பிறந்தவரே இத்துணை வினையாற்றினர். உரிமையளிக்கவல்ல ஓர் இயக்கத்துக்குக் கேடுசூழ்ந்த கூட்டத்தார் வேறென்ன செய்யார்? அன்னார்மீது பழிசுமத்த ஒருப்படுகின்றோமில்லை. அவரைப் பற்றியுள்ள மேல்நாட்டு நாகரிகப் பேய் அவரை அலைத்து வருகிறது. அக்-கூட்டத்தார் ஒத்துழையாச் செயலை வீழ்த்திவிட்டார். இப்பொழுது அன்னார் ஒத்துழையா நினைவையுங் களைந்துவருகிறார். நாளடைவில் அவர் ஒத்துழைப்பாளராவர் என்பது திண்ணம். அவர் வழியில் நாட்டை விடுவது அறமாமோ? கிழக்கூட்டம் எவ்வழியில் ஏகினும் ஏக. அவரை இப்பொழுது வழிமறிக்க வேண்டுவதில்லை. இப்பொழுது நாட்டைப் பண்படுத்தும் முயற்சியில் தலைப்படுவது அறிவுடைமை.

முயற்சியில் தலைப்பட வேண்டியவர் யாவர்? இளைஞரே யாவர். சட்டசபை நேயரும், வக்கீல்களும், அவரனைய பிறரும் முன்னணி வேலைக்கு வரமாட்டார். அவர் மாயவலையில் பட்டுச் சிறகிழந்த பறவைகளாயினர்; ஒத்துழைப்பின்றித் தன்னந் தனியராய் எவ்வினையும் ஆற்ற இயலாதவ ராயினர்; எல்லாவற்றிற்கும் அதிகாரவர்க்கத்தார் துணையை நாடுவோராயினர். பாரதமாதாவின் முதல்தளையா யிருப்பவர் இக்கூட்டத்தார்; இவர் மனோநிலையை மாற்ற முதலில் முயலல்வேண்டும். எவ்வழியில் மாற்றுவது? இனி எவரும் புதுவழி காட்டவேண்டுவதில்லை. காந்தியடிகள் வழிகாட்டி இருக்கிறார். அவ்வழிபற்றி நடக்க இளைஞர் ஒருப்படல் வேண்டும். இளைஞர் சத்தியாக்கிரகத்தில் உறுதி காட்டினால் உலகம் அவர் வயப்படும். எவர் எத்திற ஊறு நிகழ்த்தினும், பழிக்குப் பழிவாங்கும் இழிமுறை விடுத்துப், பொறுமை காத்து, எவர்க்குந் தீங்கு செய்யா அறத்தில் உறுதியாக நிற்கும் நிலைத்த நெஞ்சம்பெற இளைஞர் முயலுதல் வேண்டும். அந்நெஞ்சம் பெறுதார் அறத்துறையில் தலைப்பட்டுழைக்க அருகரல்லர். இப்பொழுது ஆங்காங்குள்ள இளைஞர் சத்தியாக்கிரகப் பயிற்சி பெற்றுவரல்வேண்டும். கிராமத்துக்கு மூவர் முற்படின், நோக்கம் விரைவில் நிறைவேறும். இளைஞர் கூட்டம் சத்தியாக்கிரகப் பயிற்சியில் பண்படுதற்கு இதுவே சமயம். இளைஞர் தமக்கென ஓர் இயக்கங் கண்டு காந்தியடிகள் அறத்தை வளர்க்க முயலலாம்.

ஐரோப்பாவில் நடைபெற்ற பெரும்போரில் தலைப்பட்ட நாடுகளிலுள்ள இளைஞர், தத்தம் தாய்நாட்டுக்காகத், தமது இன்னுயிர் துறந்ததை எவரே அறியார். அத்தகைப் போருக்கு இப்பொழுது இளைஞர்கள் அழைக்கப்படுகிறார்களில்லை. காந்தியடிகள் போர் பொறுமைப்போர்; அறப் போர்; பிற உயிர்க்குத் தீங்கு செய்யா அன்புப்போர். இப் போருக்கு இளைஞர்கள் தேவை. இப்பொழுது ஒழுங்கு பட்ட இயக்கம் இல்லையேனும், ஆங்காங்குள்ள இளைஞர் உள்ளத்தில் அதற்குரிய விதை விதைக்கப்படல்வேண்டும். இத் தொண்டைத் தேசபக்தர்கள் செய்வார்களாக. தேர்தல்

காலத்தில் மக்கள் ஆயிரம் ஆயிரமாகப் பொருள் செலவழிக்கிறார்கள். அப்பொருளில் இளைஞர் இயக்கத்துக்கென்று ஒரு பகுதி வழங்கலாகாதா? இளைஞரைக்கொண்டு தேச சேவை செய்வித்தல் நல்லது. இனி முதியவர்களால் நாட்டின் கட்டை அறுக்கவல்ல ஒருமுறை காண்டல் இயலாது. அம்முறை காணவல்லார் இளைஞரே.

நாட்டின் உயிராகிய இளைஞர்களே! உலகை நோக்குங்கள்; நீங்கள் பிறந்த நாட்டை நோக்குங்கள். உரிமையிழந்து வாழும் வாழ்வும் வாழ்வாமோ? ஆண்டவன் நமக்கு இமயந் தந்தான்; கங்கை தந்தான். அவ்வியற்கையைப் பயன்படுத்த வேண்டுவது நமது கடமை. அக்கடனாற்ற எழுங்கள்; எழுங்கள். சாதி சமய வேற்றுமை அரும்பாத உள்ளமுடைய இளங்கன்றுகளே! நீங்களே தேச சேவைக்கு அருகர்கள். பாரதமாதா உங்கள் முகம் நோக்குகிறாள். அவள் முகம் நோக்குங்கள். உங்கள் மனம் உருகும். நம்மை ஈன்ற தாய்க்கு நாமன்றோ கடனாற்றல் வேண்டும்? பிறர் தளைக்கு அவளை விட்டிருப்பது அறமாகுமா? இளைஞர்களே! உரிமைப் போருக்கு உரியவர் நீங்களே. எழுங்கள்; எழுங்கள். காந்தியடிகள் பிறந்த திருநாளாகிய இன்று உங்களை நோக்கிச் செய்துகொள்ளும் விண்ணப்பம் இதுவே. (2-10-1925)

# திருநாள்

இவ்வாரம் ஒரு பெருஞ் சிறப்புடையது. அச்சிறப்பு அளவிடற்பாலதன்று. அஃது அளப்பரிது. சிறப்பெனில் எத்தகைச் சிறப்பு? எண்ணில் எழுத்தில் அடங்காச் சிறப்பு; ஒரு மத அளவில், ஒரு வகுப்பளவில், ஒரு மொழி அளவில், ஒரு நாட்டளவில், ஒரு நிற அளவில் கட்டுப்படாச் சிறப்பு; உலகுக்குரியதாய் உலக நோக்கையே ஈர்க்கும் பேராற்றல் வாய்ந்ததாயுள்ள சிறப்பு. அச் சிறப்பை எவ்வழியில் - எம்மொழியில்-கட்டுப்படுத்திக் கூறிட்டு அளந்துகூறல் இயலும்?

அன்புக்கு அளவும் உண்டோ ? 'அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாழ்' என்றார் திருவள்ளுவர்.

உலகச் சிறப்புக்குரிய உயிர்நாடி தோன்றிய நாள், இவ்வாரம் உறுகிறது. அத்திருநாள் 'என்று வரப்போகிறது. என்று வரப்போகிறது' என்று மன்பதை அவாவி நிற்கிறது. அவ்வவா எழாத இடமில்லை. அவ்வவா, உலகின் நாலு பக்கங்களிலும் முருகி முருகி எழுந்து வீறிடா நிற்கிறது. வீறுடன், அந்நாளின் கொண்டாட்டுக்குரிய முயற்சிகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

அப் பெருநாள் சேய்மையிலில்லை. அது மிக மிக அணித்தே நிற்கிறது. அந்நன்னாள் வரும் வெள்ளிக்கிழமை உறுகிறது. அத்திருநாளை உலகமே கொண்டாடப்போகிறது. அந்நாளின் பெற்றி என்னே ! என்னே !

அன்று எங்குங் காந்தி - மக்கள் உள்ளத்தில் காந்தி - மக்கள் பேச்சில் காந்தி - மக்கள் செயலில் காந்தி - எங்குங் காந்தி மிளிரும். அன்று மன்பதையின் உள்ளம், காந்தியடிகளின் கோயிலாகத் திகழும்.

அன்று அடிகளின் பெயரால் எங்கணும் நோன்பு, எங்கணும் ஜெபம், எங்கணும் விழா, எங்கணும் பஜனை, எங்கணும் ஏழைகட்குச் சோறு கூறை வழங்கல் முதலியன நிகழ்த்த முன்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய எல்லாவற்றையுங் கடந்து நின்று, எல்லாராலும் எங்கும் கொண்டாடப்பெறுந் திருநாள், இஃதன்றி வேறொன்றுண்டோ ? காந்தியடிகள் உலகுக்கு ஒருவராக நிற்கிறார்.

வரும் வெள்ளிக்கிழமை காந்தியடிகட்கு நடக்கப்போகுஞ் சீருஞ் சிறப்பும் இந்நாளில் எவர்க்குண்டு ? எம் மதாச்சாரியர்க்குண்டு? எம் முடிசூடும் மன்னர்க்குண்டு? எம் முடிசூடா மன்னர்க்குண்டு ? இவர்கட்குக் குறிப்பிட்ட சிற்சில இடங்களில், குறிப்பிட்ட சிற்சிலர் முயற்சியால், மூடநம்பிக்கை காரணமாகவும், அச்சங் காரணமாகவும், பிற தயை

தாட்சண்யம் காரணமாகவுஞ் சீரும்சிறப்பும் நிகழ்தல் காண்கிறோம். காந்தியடிகட்கோ, உலகம் - நானாவித உலகம்-சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றை மறந்து, அன்பால் விழுங்கப்பெற்ற ஒருமை யுளத்தால், சீருஞ் சிறப்புஞ் செய்யத் தானே வலிந்து விரைந்து நிற்கிறது. காந்தியடிகட்கு யானையில்லை ; ஒட்டையில்லை ; விருது முழக்கங்களில்லை ; நீண்ட அங்கியில்லை ; அவருக்கு நீட்டலுமில்லை ; மழித்தலுமில்லை ; முடியுமில்லை ; உச்சிக் குடுமியும், உடைந்த பல்லும், மெலிந்த உடலும், மாந்தளிர் மேனியும், கீளார் கோவணமும் உடைய ஒரு 'பக்கிரி' காந்தி. அப் 'பக்கிரி' பிறந்த திருநாளைக் கொண்டாட உலகம் போட்டி போடுகிறது ! இஃதென்ன வியப்பு !.

உலகின் செயற்கைக் குணம் எதுவாயினும் ஆக. அதன் இயற்கைக் குணம் அடியார்களிடத்தும், முனிவார்களிடத்தும், பெரியோர்களிடத்தும் அன்பு செய்வதாகும். அவ்வியற்கை இவ்விருண்ட நாளிலும் புலனாகிறது. காந்தியடிகள் இந்தியாவில் கூர்ஜரத்தில் பிறந்தவர். அவரைக் கூர்ஜரத்தார் அல்லது இந்தியர் என்ற முறையிலா நானாவித உலகம் போற்றுகிறது ? இல்லை. அவரை அடியார், முனிவர், பெரியார் என்ற முறையிலேயே உலகம் போற்றுகிறது.

1869ஹூ அக்டோபர்மீ 2உ இம் மண்ணிற்றோன்றிய காந்தியடிகள் எவ்வழியில் பெரியாரானார் ? 'தாம் பெரியாதல் வேண்டும்' என்ற எண்ணத்துடன் சேவை செய்வோர் உண்மை யுலகில் பெரியாராகார். 'தம்மை'க் கருதாது எவர் தொண்டு செய்கிறாரோ அவரையே உலகம் பெரியாராகக் கொள்ளும். காந்தியடிகள் தொண்டில் 'நிராசை-நிஷ்காமியம்'' இருத்தல் கவனிக்கத்தக்கது. நிராசைத் தொண்டு அல்லது நிஷ்காமியச்சேவை யாண்டுளதோ, ஆண்டு ஆன்ம சக்தியை எழுப்புவது இயற்கையின் இயல்பு. இயற்கை அன்னை ஒவ்வொருவரிடமும் ஆன்மசக்தியை எழுப்பக் கருணை சொரிகிறாள். அக்கருணை நிஷ்காமியத் தொண்டரிடத்தில் படியும் ; மற்றவரிடத்திற் படியாது ஒதுங்கி நிற்கும்.

காந்தியடிகளின் நிஷ்காமிய உளத்தில் இயற்கை அன்னையின் கருணை படிந்து, ஆன்மசக்தியை எழுப்பி யிருக்கிறது.

காந்தியடிகளின் ஆன்மசக்தி - பருநோக்குக்குப் புலப்படாத அச்சோதி - உலக முழுவதும் ஒளிர்கிறது. அச்சோதியில் உலகம் வயப்பட்டுக் கிடக்கிறது. காந்தியடிகளின் பருவுடல் தற்போது இங்கிலாந்திலிருக்கிறது. 'ஆளப்படும் இந்தியாவின் சுயராஜ்யத்தின் பொருட்டுப் போர் புரிந்து, அதைப் பெறுதற்கு, ஆளும் இங்கிலாந்துக்குக் காந்தியடிகள் போந்துள்ளார்' என்று புறஉலகங் கொண்டிருக்கிறது. இங்கிலாந்து இப்பொழுது காந்தியடிகளிடம் எப்படி நடந்துவருகிறது? கடவுள் காட்சிக்கு அடியார்கள் காத்து நிற்பதுபோலக் காந்தி தரிசனத்துக்கு இங்கிலாந்து மக்கள் காத்து நிற்கிறார்கள்.

அந்நியத்துணி மறியலால் பெருந்துன்பத்துக்கு உட்பட்டது லங்காஷயர் என்பது உலகறிந்ததொன்று. அந்த லங்காஷயருக்குக் காந்தியடிகள் அழைக்கப்பட்டார். போலீஸ் ஏற்பாடுகளும் பெருமிதமாயிருந்தன. 'அந்தோ! நம் வயிற்றில் மண்ணிட்ட காந்தி வருகிறார்' என்று காந்தியடிகளைப் பகைவராக லங்காஷயர் மக்கள் கருதினார்களா? இல்லை. அல்லது அவர்கள் ஒதுங்கியாவது நின்றார்களா? இல்லை. பின்னை அவர்கள் என்செய்தார்கள்? அவர்கள், காந்தியடிகளை அன்புடன் வரவேற்றார்கள். காரணம் என்னை? காந்தியடிகள் நெஞ்சில் பகைமையில்லை; காழ்ப்பில்லை; கரவில்லை. ஆதலால் லங்காஷயரில் பகைமையோ காழ்ப்போ கரவோ எதிராக எழவில்லை. இஃதே ஆன்மசக்தியின் பெற்றி. ஆன்மசக்தி என்பது செயற்கருஞ் செயல்களைச் செய்யும் வல்லமை வாய்ந்தது.

'செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் - செயற்கரிய செய்கலா தார்' என்று திருவள்ளுவர், பெரியார் இயல் கூறியுள்ளார். 'இவ்வியலின்படி காந்தியடிகள் எவ்வெச் செயற்கருஞ் செயல்கள் செய்துள்ளார்' என்று சிலர் கருதலாம். 'செயற்கருஞ் செயல்கள்' என்றதுஞ் சிலர்க்கு 'அற்புதங்கள்' மீது கருத்துச் செல்வது வழக்கம். காந்தியடிகளின் செயற்

கருஞ் செயல்கள் - அற்புதங்கள் - காலதேச வர்த்தமான நிலையை உன்னி ஆராய்வோர்க்கு நன்கு விளங்குமென்று நம்புகிறோம். அவைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும். ஆதலால், இரண்டொன்றை மட்டுங் குறித்துச் செல்கிறோம்.

இக்காலம், இயந்திர காலம் - இயந்திர நாகரிகத்தில் மக்கள் மயங்கி மதுமலர் வண்டேபோல் மயங்கிக் கிடக்குங் காலம். இஃது ஆகாயத்திற் பறக்கும் இருபதாம் நூற்றாண்டு. விதவிதமான - கண்ணையுங் கருத்தையுங் கவரத்தக்க - மிக மெல்லிய மெல்லிய - விலையுயர்ந்த - துணிகளைக் கட்டிய மக்களைக் காடா துணியை அதாவது கதரைக் கட்டுமாறு காந்தியடிகள் செய்தாரெனில், அவர்தஞ் செயல், செயற்கருஞ் செயலா அன்றா என்பதை நேயர்கள் உன்னுவார்களாக. நேயர்களே! சரோஜினியை நினையுங்கள்; பண்டித மோதிலாலை நினையுங்கள்; சித்த ரஞ்சன தாஸரை நினையுங்கள்; இவரனைய பிறரையும் நினையுங்கள்; இவர்கள் வாழ்வை நினையுங்கள். இவர்களையும் காந்தியடிகளின் ஆன்மசக்தி கதரணியச் செய்தது! இப்பொழுது கதரியக்கம் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. இது செயற்கருஞ் செயலன்றோ? அற்புதமன்றோ?

கட்குடி மோகத்தைப்பற்றி விரித்துக் கூறவேண்டுவதில்லை. குடியர் கள்ளை வெறுத்தல் அரிதென்பது வெள்ளிடைமலை. மாலைதோறும் கள்ளுக்கடை போந்து ஓயாமற் குடித்துவந்த சிலர், காந்தியடிகளின் உபதேசவழி நின்று, குடியை ஒழித்து, மறியல் தொண்டராயினர். இவரை இம்மாறுதலுறச் செய்தது செயற்கருஞ் செயலா அன்றா என்பதும் கருதற்பாலது.

போரிடைப் பெரிதும் மக்கள் சீற்றமுறுவது வழக்கம்; நிராயுதபாணிகளாய் அடி யுதை படும்போது உள்ளங் கனன்றெழல் இயல்பு. காந்தியடிகளின் ஆத்ம சக்தி, போரின் போது தொண்டர்கள்பால் சீற்றத்தை மறைக்கச் செய்தது. அச் செயல் எத்தகையது? நேயர்களே! கூர்ந்து நோக்குங்கள். ஒருவரது ஆத்மசக்தி அவரளவில் சீற்ற மெழாதவாறு காக்கலாம். அச்சக்தி மற்றவர் சீற்றந் தணிப்பதாயின்,

அஃது அருமையன்றோ ? அவ்வருமையை அற்புதமென்றுங் கூறலாம் ; அதற்குமேலுங் கூறலாம். கராச்சியில் பகத்சிங் கூட்டத்தார் வாயிலாக எழுந்த ஆலகால விஷம், அடிகள் கழுத்தில் பொறுமை வாகை மாலையாகப் பொலிந்ததும் இங்கே நினைவிற்கு வருகிறது.

பிரிட்டிஷ் சிங்கம் எத்தன்மையது ? அச் சிங்கத்தின் முன்னே ஜெர்மெனியும் விழுந்து பட்டதன்றோ ? அச் சிங்க நோக்கின் திறத்தைக் கூறவும் வேண்டுமோ ? அந்நோக்கிற்கும் அஞ்சாது, ஆன்மசக்திப் போரால், அன்பால், அதைத் தம்பக்கந் திருப்பியுள்ள அடிகளது செயல் எத்தகையது ? அது செயற்கருஞ் செயலே யாகும். இப்பொழுது காந்தியடிகள் யாண்டுள்ளார் ? பிரிட்டிஷ் சிங்கம் அவரை எம்முறையில் நோக்குகிறது ? பிரிட்டனிலும் காந்தியடிகள் திருநாளைக் கொண்டாட முயற்சிகள் நடைபெறுவதை ஈண்டுச் சிறப்பாகக் குறித்தல் சாலும்.

காந்தியடிகளின் தாய் தந்தையர் பக்தி, ஈசுர பக்தி, எளிய வாழ்க்கை, தியாகம், நெறியிற் பிறழாமை, சத்தியம், அஹிம்சை, பெண்ணுரிமை நாட்டம், தீண்டாமை விலக்கில் உறுதி, சமத்துவ நோக்கம், உயரிய ஒழுக்கம் முதலியன அவரைப் பெரியராக்கிச் செயற்கருஞ் செயல்களைச் செய்விக்கின்றன. காந்தியடிகள் இல்லொழுக்கத் திருந்தே பெரியராணா ரென்பதும், மூக்கைப் பிடிக்க எல்லாவற்றையும் விடுத்துக் காட்டுக்கோடித் திரிந்து அலைந்து பெரியராகவில்லையென்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கன.

'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்னும் நாத்திகப் பேய்க்கும் மூர்க்க சக்திக்கும் இரையாகிக், கொலை கொள்ளை முதலிய அரக்க நீர்மைகளை வளர்த்துவரும் உலகைப் பொது முறையிலும், மேல்நாட்டைச் சிறப்பு முறையிலும் அஹிம்ஸா தர்ம வழியில் நிறுத்திப் பண்படுத்த இந்நாளில் தோன்றியவர் காந்தியடிகள் என்பது, அவர் தஞ் செயல்களால் நனி விளங்குகிறது. அத்தகைய ஒருவர் பிறந்த

திருநாளைக் கொண்டாட வேண்டுவது மன்பதையின் அன்புக் கடனாகும். திருநாள் கொண்டாட்டத்துக்கென வரும் வெள்ளிக்கிழமை முதல் ஒரு வாரம் வகுக்கப்பட்டிருக்கிறது. அக்காந்தி வாரத்தை நேயர்கள் சிறப்பாகக் கொண்டாடுவார்களாக. அவ்வாரத்தில் சிறப்பாகக் கதர் தானமும் அன்ன தானமும் நடைபெறுதல் வேண்டும். காந்தியடிகள் வாழ்க.

(30-9-1931)

# கஸ்தூரிபாய் காந்தி வாழ்க

கஸ்தூரிபாய் காந்தி வாழ்க; வாழ்க. கஸ்தூரிபாய் என்னுங் கற்புக்கரசியை வாழ்க்கைத் துணைநலனாக் கொண்ட காந்தியடிகளின் அறுபதாவது ஆண்டு விழாவைக் காணுந் திருநாள் இந்நாள். இப்பெருநாள் உலகிற்கு ஒருநாளாக யாண்டுங் கொண்டாடப்படுகிறது.

இவ்வுலகம் எத்துணையோ பெரியாரின் அறுபதாம் ஆண்டு விழாக்களைக் கண்டிருக்கிறது; ஆனால் காந்தியடிகளைப் போன்றாரது அறுபதாவது ஆண்டு விழாவைக் கண்டிருக்குமோ? காந்தியடிகள் உலகிற்கு ஒருவராக விளங்குகிறார். அவர் உலகிற்கு ஒருவராகப் போற்றப்படுகிறார். நாடு, மொழி, நிறம், வகுப்பு முதலிய வேற்றுமைகளைக் கடந்து காந்தியடிகளின் காந்தி ஒளிர்கிறது. அவரை எந்நாட்டவரும், எம்மொழியினரும், எந்நிறத்தவரும், எவ்வகுப்பினரும் வாழ்த்துகிறார். உள்ளொளி என்னும் ஆத்ம சக்திக்கு இந்நாடு, இம்மொழி, இந்நிறம், இவ்வகுப்பு என்னும் வேற்றுமை உண்டோ?

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் - தோன்றலிற் தோன்றாமை நன்று' என்றார் திருவள்ளுவனார். தோன்றிற் புகழொடு தோன்றுதல் வேண்டும். காந்தியடிகளின் புகழைப்பற்றிப் பேசுதலும் வேண்டுமோ? காந்தி

யடிகள் தாமே வலிந்து புகழை விரும்புவதில்லை. ஆனால் உலகம் அவரைப் புகழ்கிறது.

புகழ் என்பது யாது? இந்நாளில் புகழ் என்பது வெவ்வேறு வழியில் திரிக்கப்படுகிறது. அதுகுறித்து ஈண்டு விரிவுரையாடப் புகுகிறேமில்லை. 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது - ஊதியம் இல்லை உயிர்க்கு' என்னுந் திருக்குறளின் உட்கிடக்கையை உற்று நோக்குக. 'ஈதல் இசைபட வாழ்தல்' என்றார் நம் பெரியார். புகழுக்கு உறைவிடம் ஈதல் என்பது கவனிக்கத்தக்கது.

எவனொருவன் தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்து, மற்றவர்க்கென வாழ்வு நடாத்துகிறானோ, அவனே இசைபட வாழ்பவனாகிறான். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் பொய்யா மொழிக்கு இலக்கியன் அவனே.

காந்தியடிகளின் வாழ்வை உற்று நோக்கி ஆராய்ந்தால், அதன்கண் ஒன்று சிறந்து மிளிர்வதைக் காணலாம். அஃதென்னை? அதுவே தியாகம் தியாகம் என்பது. அத்தியாகம் (ஈகை) காந்தியடிகளைப் புகழொடு தோன்றிய ஒருவராக்கியது. காந்தியடிகளின் தியாகம் உலகுக்குத் தெரியும். அதை விரித்துரைத்தல் அநாவசியம். அவர் தென்னாப்பிரிக்காவில் கால்வைத்த நாள்தொட்டு, இன்றுவரை, தியாகமூர்த்தியாய் விளங்குகிறார். அத்தியாகமும், அதனால் விளைந்த புகழும் காந்தியடிகளின் அறுபதாவது ஆண்டு விழாவை உலகங் கொண்டாடுமாறு செய்திருக்கின்றன.

உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்து, மற்றவர்க்கென வாழும் பெரியோர்கட்குத், தனித்த செல்வமாதல், தனித்த பிறவாதல் வேண்டுவதில்லை. இறைவனது இயற்கை உடைமையெல்லாம் அவருடையனவாகித் துணை செய்யும்.

'தந்தைதாய் குரவன் ஆசான் சங்கரன் நிராசை பெண்டிர்
மைந்தர்பல் லுயிரும் சுற்றம் மாசிலா ஈசன் அன்பர்

அந்தமில் பிறவி ஏழும் அடுபகை என்ப தோர்ந்தேம்
எந்தையார் கருணை காட்டி எம்மைஆட் கொண்ட அன்றே'

என வரூஉம் பரஞ்சோதி முனிவரர் திருவாக்கை ஓர்க.

காந்தியடிகள் எளிய இயற்கை வாழ்வு நடாத்திவரல் வெள்ளிடைமலை. அவர் தமது வாழ்வை ஆண்டவனிடத்தில் அடைக்கலஞ் செய்திருக்கிறார். அவர்க்கெனத் தனித்த ஒன்றில்லை. புகழின் நுட்பம் இன்னதென் றுணராது, போலிப் புகழுக்கு உலகம் இரையாகும் இந்நாளில், உண்மைப்புகழின் பொருளாய் ஒருவர் இலங்குகிறார். அவரது அறுபதாவது ஆண்டுவிழாவை உலகங் கொண்டாடுகிறது.

காந்தியடிகளின் தியாக வாழ்வினின்றும் 'சத்தியாக்கிரகம்' என்னும் பேரறம் மலர்ந்து நிற்கிறது. அவ்வறம் அகத்தையும் தூய்மைப்படுத்தவல்லது; புறத்தையும் தூய்மைப் படுத்தவல்லது. காந்தியடிகள் அகந்தூயராய், புறந்தூயராய், ஆத்ம சக்திக்கு உறையுளாய்ப் பொலிவது உலகறிந்ததொன்று. காந்தியடிகட்கெனப் பொன்னில்லை; பொருளில்லை; வீடில்லை; வாசலில்லை; நிலமில்லை; புலமில்லை. அவரை உலகம் புகழ்கிறது. காரணம், அவர்தந் தியாகத்தினின்றும் எழுந்து ஒளி செய்யும் ஆத்மசக்தியே யாகும்.

உலக சரித்திரத்தை உற்றுநோக்குழி, ஆத்மசக்தி வாயிலாக அரசியற்போர் நிகழ்த்துமாறு உலகிற்கு அறிவுறுத்திய முதற் பெரியார் காந்தியடிகள் என்பது புலனாகும். காந்தியடிகள் ஒரு புது தர்மயுகத்தை உண்டுபண்ணினார் என்று கூறல் மிகையாகாது. அப் புதுயுகங் கண்ட ஒருவரின் அறுபதாவது ஆண்டுப் பெருநாளை உலகம் இன்று போற்றுகிறது.

காந்தியடிகளின் தியாகமும் பிறவும், அவரைக் கடவுள் படைப்பாகிய இயற்கை உலகைத் துறக்கச் செய்யவில்லை. இயற்கையைத் துறப்பது இன்பத்தைத் துறப்பதாகும்; செயற்கை நரகில் வீழ்வதாகும். காந்தியடிகள் மனையறத்தில் நிற்கிறார். அவ்வறம் அவரது பெருமைக்கு நிலைக்களனாக நிற்கிறது. அவ்வறவோர் வாழ்க வாழ்க என்று உலகம் வாழ்த்துகிறது.

காந்தியடிகளின் அறுபதாவது ஆண்டுத் திருநாளைப் பொதுவாக உலகமும், சிறப்பாக இந்தியாவும் கொண்டாடுகின்றன. அக் கொண்டாட்டத்துக்கு யாதாயினும் பொருளிருத்தல் வேண்டும். காந்தியடிகளைப் போற்றுவதாவது காந்தியடிகளின் அறவழி நிற்க உறுதிகொள்வதா யிருத்தல் வேண்டும். அவ்வுறுதியில் கருத்திருத்தாது, வெறும் நாளையும், வெற்றுடலையும் மட்டும் போற்றுதல், விளையாட்டும் விக்கிரக ஆராதனையுமாக முடியும். ஆகவே, மக்கள் காந்தியடிகளின் அறவழி நிற்க ஒல்லும் வகையாதல் முயலல் வேண்டும்.

காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தை அறிவுறுத்துகிறார். சத்தியாக்கிரகம் உலகில் பெருகப் பெருக உலகம் தூய்மையுறும். காந்தியடிகள் இந்தியாவின் உரிமைக்காகப் பாடுபடுகிறார்; அவ்வுரிமைப் பேற்றிற்குத் தீண்டாமை விலக்கு, ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமை, கதராடை இன்றியமையாதன என்கிறார். இவைகளை மக்கள் வாழ்வில் ஏற்று நடந்தால் மற்ற ஆக்கவேலைகட்கும், அழிவுவேலைகட்கும் வழி தானே ஏற்படும் என்பது அடிகள் கருத்து. உரிமைப் பேற்றிற்கு இவைகளாதல் நிகழ்த்தப்படல் வேண்டுமன்றோ? ஆதலால் அடிகளின் அறுபதாவது ஆண்டை முன்னிட்டு, நாட்டு மக்கள், அவர்வழி நின்று ஒழுக உறுதிகொள்வார்களாக.

முனிவர்களும், வீரர்களும் தோன்றிய ஒரு நாட்டில் உதித்து, அந்நாட்டின் அறவழி நின்று வாழ்வு நடாத்தி, முனிவராய், வீரராய், அந்நாட்டின் அடிமைஇருள் கடியும் வழி உலக இருளையே கடியக் கதிரொளியில் மூழ்கிக், காற்றில் தோய்ந்து, நீரிற் படிந்து, இயற்கை உணவுகொண்டு, ஒற்றைக்கலை யணிந்து, அருள், அஞ்சாமை, தியாகம், பொறுமை, நோன்பு, பயன்கருதாமை, மன்னிப்பு என்னும் ஏழ்கதிர் சொரிந்து ஒளிரும் இந்திய ஞாயிற்றை - கஸ்தூரிபாய் காந்தியை - மகாத்மாவை - வாழ்த்துகிறோம்; வணங்குகிறோம். கஸ்தூரிபாய் காந்தி வாழ்க; வாழ்க. (2-10-1929)

# மலைப் பொழிவு

இவ்வாரம் முதற்பக்கத்துக்கு என்ன எழுதலாம் என்று எண்ணிக்கொண் டிருந்தபோது கிறிஸ்து நாதர் மலைமீதிவர்ந்து பொழிந்த அருண்மொழி நினைவிலுற்றது. இம்மொழி, காந்தியடிகள் வாழ்வைச் சத்தியாக்கிரகத்தில் ஈர்த்து ஆண்டது என்பது கவனிக்கத்தக்கது. அது, காந்தியடிகளை மட்டுமன்று மற்ற எத்துணையோ எத்துணையோ மக்களை அவ் வுண்மைநெறியில் நிறுத்தி ஆண்டிருக்கிறது. மனிதப்பிறவியின் நோக்கமும், முடிவும், அவை பெறுதற்குரிய வழியும் அச் சொற்பொழிவில் மிளிர்கின்றன.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் சத்தியாக்கிரகப் போர் தொடங்கியிருந்தபோது, அவரது வரலாற்றை எழுதப் புகுந்த அன்பர் ஜோஸப் டோக் என்பார், காந்தியடிகளை நோக்கித் 'தங்கட்கு இவ்வுணர்வு (சத்தியாக்கிரக உணர்வு) யாண்டிருந்து பிறந்தது' என்று கேட்டனர். அதற்குக் காந்தியடிகள் கூர்ஜரப் பாட்டொன்றிலுள்ள ஒருகூறும், கிறிஸ்துநாதரின் மலைப்பொழிவும் காரணம் என்று கூறினர். காந்தியடிகள் சத்தியாக்கிரக வாழ்விற்கு விதை விதைத்த மெய்யுரை, தற்கால அரசியல் உலகத்தார்க்கும் உரியதாகும் என்பது நமது கருத்து. இப்பொழுது நமது அரசியல் உலகுக்கு உற்றுள்ள )நோயைக் குணப்படுத்தும் ஆற்றல், கிறிஸ்துவின் மலைமருந்துக்கு உண்டு.

நமது நாட்டில் சத்தியாக்கிரகப் போரில் தலைப்பட்ட நண்பர் சிலர், சின்னாளாகச் சாதிப்பூசலுக் கிரையாகிச், சினந்து, நெறியல்லா நெறிநின்று, எழுதியும் பேசியும் வருவது, நமதுள்ளத்து உறும்போதெல்லாம், நாம் இளமை தொட்டுப் பொன்னேபோல் போற்றிவரும் கிறிஸ்துவின் மலைமொழிமீது நமது கருத்துச் செல்வது வழக்கம். அம் மறைமொழி, வாழ்வை நேர்மையில் நிறுத்திப் பண்படுத்தும் இயல்பு வாய்ந்தது.

மனிதப்பிறவி விலங்கிற்கும் தெய்வத்திற்கும் இடையில் நிற்பது. இக்காரணத்தால் மனிதன்மாட்டு வன்மம் வன்கண்மை பொருமை முதலிய விலங்கு நீர்மைகளையும், அன்பு இரக்கம் பொறுமை முதலிய தெய்வ நீர்மைகளையும் காண்கிறோம். விலங்கு நீர்மை துராக்கிரகத்தையும், தெய்வ நீர்மை சத்தியாக்கிரகத்தையும் எழுப்புவன. இவ்வுலகில் பெரிதும் முழுச் சத்தியாக்கிரகிகளைக் காண்டல் அரிது. அந்நிலை எய்த ஒவ்வொருவரும் முயலல்வேண்டும்.

சத்தியாக்கிரக உணர்வு பெருகித் துராக்கிரக உணர்வு சுருங்கிவரும்போழ்தும், சிற்சில சமயத்தில் துராக்கிரகம் முட்டி எழுதலுமுண்டு. அவ்வெழுச்சிக்கு இடந்தாராமல் அதை ஒடுக்கமுயல்வது அறிவுடைமை. ஒருவேளை அறியாமையால் துராக்கிரகம் எழுந்து விளையாடினும், அது குறித்துப் பின்னை வருந்தியும் விரதமிருந்தும் ஆண்டவனை வழுத்தியும் கழுவாய் தேடல்வேண்டும். குற்றங் குறித்து வருந்தும் மனமுடையான், உய்யுநெறி எளிதிற் காண்பவனுவன். 'கொடிறும் பேதையுங் கொண்டது விடா' என்றபடி, தான் செய்தது தவறென உணர்ந்தும், கழுவாய் தேட ஒருப்படாதவனைக் குறித்து இரங்கவேண்டுவதே.

உலகில் சத்தியாக்கிரகத்தில் விருப்புக் கொண்டு, அவ்வழியில் நிற்க முயல்வோர் சத்தியாக்கிரகிகள் என்று சொல்லப்படுகிறார். அவர்கள், ஒல்லும்வகை தூய வழியில் நிற்பதோடு, தூய்மைக்கு ஊறு நிகழும்போதும் வருந்தி வருந்திக் கழுவாய் தேடி, மேலும் மேலும் தூய்மையை வளர்த்துச் செல்லல் வேண்டும். 'தன்னைப்போலப் பிறரைப் பாவித்தல்' என்னும் பேரறம், சத்தியாக்கிரகத்தின் உயிர்நாடி என்பதை உணர்ந்து, எவர்க்கும் எவ்வழியினுந் தீங்கு செய்யாப் பெருநெறி நிற்க முயல்வது சிறப்பு. அம்முயற்சி துராக்கிரகத்தைச் சிதைப்பதாகும். பிறர் துராக்கிரகத்தைப் போக்க எழுதற்கு முன்னர், ஒருவன் தன்பாலுள்ள துராக்கிரகத்தை ஒழிக்கக்கடவன்.

காந்தியடிகள், தாம்பெற்ற (சத்தியாக்கிரக) இன்பத்தை நமது நாடும் - நாட்டுவாயிலாக உலகமும் - பெறவேண்டு

மென்னுங் கருணை மேலீட்டான், சத்தியாக்கிரகக் கிளர்ச்சியைப் பலமுறை எழுப்பினார். அவ்வாறெழுந்த கிளர்ச்சிகளுள் தலையாயது சத்தியாக்கிரகத்தின் ஒரு கூறாகிய ஒத்துழையாமை. இக்கிளர்ச்சி நாட்டைத் தூய்மைப்படுத்த எழுந்தது என்பது மிகையாகாது. இஃது இதுபோழ்து ஒடுக்கப்பட்டது. இவ்வேளையில் நாட்டின் அரசியல்நிலை எவ்வாறிருக்கிறது? குறைகூறல், சாதிப்பூசல், வசைமொழிதல் முதலியன அரசியல்ஞானத் துறைகளாகக் கருதப்படுகின்றன. இவை மலியும் இவ்வேளையில் கிறிஸ்துவின் மலைப்பொழிவு ஒவ்வொருவர் நினைவிலும் உறவேண்டுவது அவசியம். கிறிஸ்துவின் மலைப்பொழிவைப் பார்க்க. (5–2–1926)

## திரிகடுகம்

மூன்று காரமுள்ள பொருள்களுக்குத் 'திரிகடுகம்' என்று பெயர். அவை சுக்கு திப்பிலி மிளகு என்பன. இம் மூன்று பொருளும் மனிதன் நோயைப் போக்கி அவனுக்கு இன்பந் தருவன.

மகாத்மாகாந்தி, தேசத்தின் அடிமை நோயைப் போக்கித் தேசத்துக்குச் சுதந்திர இன்பத்தை ஊட்ட வல்ல மூன்று வழங்கியிருக்கிறார். அவை கதராடை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல் என்பன. இம் மூன்றும் திரிகடுகம் போன்றன.

காந்தியடிகளின் திரிகடுகம் தேசத்தின் பிணிகளை அறுப்பன என்பதை இன்னுஞ் சிலர் உணராமலிருப்பதைக் குறித்து வருந்துகிறோம். காந்தியடிகள் பிறந்தநாளை வருந் திங்கட்கிழமை கொண்டாடும் ஒவ்வொருவரும், அவர் திரிகடுகத்தால் விளையும் நலத்தை மக்களுக்கு அறிவுறுத்துவாராக.

கதராடை பாரதமாதாவின் மானத்தைக் காப்பது; வறுமையை ஒழிப்பது. மதுவிலக்கு மனிதர்க்குத் தெய்வ சுபாவத்தை உண்டாக்குவது; ஒழுக்கத்தை வளர்ப்பது. தீண்டாமை ஒழிவு பாரதமாதாவின் மூலப்பிணியை அறுப்பது; சகோதரநேயத்தை வளர்ப்பது.

இம் மூன்றையும் ஒழுங்காக அனுஷ்டிக்குமாறு காந்தியடிகள் பிறந்தநாளை முன்னிட்டு நேயர்களைக் கேட்டுக்கொள்கிறோம். இம்மூன்றும் எல்லா அரசியல் கட்சிக்காரர்க்கும் பொதுவாயிருப்பன. இவைகளை ஒற்றுமையாக எல்லாரும் அநுஷ்டிக்கலாகாதா? (15–9–1922)

## சிறையோ? நிறையோ?

நமது உண்மை எங்கே? நமது பொறுமை எங்கே? நமது அருள் எங்கே? நமது உயிர் எங்கே? நங்காந்தியடிகள் எங்கே? உண்மையும் பொறுமையும் அருளும் உயிரும் யாண்டும் என்றும் இலங்குவன. அவைகளின் வடிவான காந்தியடிகளும் யாண்டும் பொலிகிறார். காந்தியடிகள் இப்பொழுது எங்கும் விளங்குகிறார். உண்மையும் பொறுமையும் அருளும் உயிரும் யாண்டும் மிளிர்வது, அறியாமையால் மூடப்பட்ட மாக்களுக்குப் புலனாவதில்லை. அறியாமை நீங்கி அறிவு விளங்கப்பெற்ற மக்களுக்கு அவை எங்கணுந் திகழ்வது புலனாகும். அவ்வாறே ஊனக்கண் கொண்டு பார்ப்பவர்க்குக் காந்தியடிகள் உடல் சிறையில் உறைவதாகத் தோன்றும்; ஞானக்கண் கொண்டு பார்ப்பவர்க்கு அப்பெரியார் எங்கும் நிறைவாயிருப்பது தோன்றும். காந்தியடிகள் சிறையிலிருக்கிறார் என்று கயவர் கூறுவர்; அவர் நிறைவில் வாழ்கிறார் என்று அறிஞர் கூறுவர்.

உண்மை உள்ள இடத்தில் பொறுமையும், அருளும், மெய்யுணர்வும், தியாகமும் ஒளிர்தல் இயல்பு. காந்தியடிகள், உண்மை கடைப்பிடிப்பவர்; எவர் என்ன கூறினும், என்ன செய்யினும் பொறுமைகாப்பவர்; பொறுமை மேம்பாட்டால் எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாத அருள் விளக்கப்பெற்றவர்; அருள் விளக்கத்தால் 'நான் தேகமல்ல' என்ற மெய்யுணர்வு பெற்றவர் ; மெய்யுணர்வால் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் உலகத்துக்கு அர்ப்பணஞ் செய்தவர். இவ் வியல்புகளால் அவர் மகாத்மா ஆனார்.

காந்தியடிகள் உடல் சிறையிலிருக்கிறதன்றி அவரது ஆத்மசக்தி எங்கணும் வீசுகிறது. உண்மையை - பொறுமையை - அருளை - அஹிம்சையைப் போதித்து வந்த பெரியாரை எந்தக் கல்சுவர் கட்டுப்படுத்தும் ? எந்தப் பாசம் கட்டுப்படுத்தும் ? 'எவ் வுயிர்க்குந் தீங்கு செய்யாதே" என்னும் பேரறத்தைப் போதித்த பெருமான் வாழுமிடம் சிறையாமோ ? உயிர்க்குத் தீங்குசெய்யும் குற்றம் உடையார்க்கன்றோ அது சிறையாகத் தோன்றும் ? காந்தியடிகள் 'நிறை'வில் வாழ்கிறார். அவர் சிறையில் உறைகிறாரென்று - சகோதரிகளே! - சகோதரர்களே ! கருதாதேயுங்கள். பேரானந்த நிறைவில் காந்தியடிகள் உள்ளம் ததும்பிக்கொண்டிருக்கிறது.

சபர்மதி ஆசிரமத்திலிருந்த காந்தியடிகளின் உடல், இப்பொழுது சபர்மதிச் சிறைக்கூடத்தில் இருக்கிறது. அவர் ஆசிரமத்திலிருந்து செய்துவந்த தொண்டை இனிச் சிறைக் கூடத்திலிருந்து செய்துவருவார் ; முன்னே பேசியும் எழுதியும் செய்துவந்த தொண்டை இனி மனத்தால் செய்து வருவார். வாக்குத் தொண்டு காயத் தொண்டு செய்து நிலைத்த நெஞ்சம் பெற்றவர் ஆற்றும் மானதத் தொண்டு, வாக்குத் தொண்டினும் காயத் தொண்டினுஞ் சிறந்து விளங்கும். வாக்கு காயத்தொண்டுகளைக் காந்தியடிகள் அளவின்றிச் செய்திருக்கிறார். ஆதலால், அவரது மானதத் தொண்டு, இனித் தேசத்துக்கும் உலகத்துக்கும் பெருநலஞ் செய்யும்.

பண்டைக்காலத்தில் சத்தியத்தின் பொருட்டு அரிச்சந்திரன் நகரம் விடுத்து ஈமங் காத்ததையும், தந்தை சொல் காத்தற்பொருட்டு ஸ்ரீராமபிரான் மகுடாபிஷேகத்தை வெறுத்து வனம்புக்கதையும், ஞானத்தின்பொருட்டுப் புத்தர் பிரான் திடீரென அரசபோகங்களெல்லாவற்றையுந் துறந்து காடு நோக்கியதையும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் வேறு பல நூல்களிலும் வாசிக்கிறோம். இதோ இந்நாளில், நம் கண்முன்னே, ஒருவர் உலகத்தின்பொருட்டு - அஹிம்சையின் பொருட்டு - எல்லாவற்றையுந் துறந்து, ஒற்றைக் கலையணிந்து சிறையில் வதிகிறார். காந்தியடிகள் செல்வமெங்கே? மனையெங்கே? மக்களெங்கே? அவைகளெல்லாவற்றையும் உலகத்தின் பொருட்டு - அஹிம்சையின் பொருட்டு - அவர் தியாகஞ் செய்தார். அத் தியாகத்தின் பயனை அவர் இப்பொழுது தவங்கிடக்கிறார். தற்கால நாகரிகக் கல்வியால் செருக்குண்டு திரியும் சகோதரர்கள், காந்தியடிகள் நிலையைக் கருதியாவது மனம் திரும்புவார்களாக.

காந்தியடிகள் ஓயாது இரவு பகல் அஹிம்சையைப் போதித்துவந்தார். அவர் போதனை இப்பொழுது இந்திய மக்களை ஆள்கிறது. 'நான் பிடிபட்டால், எல்லாரும் அஹிம்சா தருமத்தைக் கையாண்டு சாந்தவழி நின்று பணிசெய்க' என்று காந்தியடிகள் கட்டளையிட்டார். அப்படியே தேசம் அஹிம்சா தருமத்தைக் கடைப்பிடித்துச் சாந்தவழி நிற்பதைக் காண்கிறோம். இக்காட்சி லார்ட் ரெடிங்குக்கும் ஸர் ஜார்ஜ் லாயிட்டுக்கும் புலனாகுமோ? காந்தியடிகள் ஒருவர் உபதேசவழி முப்பத்துமுக்கோடி மைந்தர்கள் நிற்கிறார்கள். என்ன வியப்பு! அஹிம்சையைக் கடைப்பிடிக்குமாறு காந்தியடிகள் ஆயுதங்களாலோ சட்டங்களாலோ பயமுறுத்தினாரா? இல்லை. ஆயுதங்களாலும் அநாகரிகச் சட்டங்களாலும் ஒரு மனிதக் கூட்டத்தை இன்னொரு மனிதக் கூட்டம் கட்டுப்படுத்தி நடாத்துவது அறிநெறியாமோ?

காந்தியடிகள் ஒருவர்; சேனையில்லாதவர்; ஆயுதமில்லாதவர்; சிறிய வடிவினர். அவர் இன்சொல்லால், அனுஷ்டானத்தால், தியாகத்தால் மன்பதையை நடத்துகிறார்.

அவரது இன்சொல்லும், அனுஷ்டானமும், தியாகமும் மக்களை ஆள்கின்றன. காந்தியடிகள் சிறை புகும்போது, கலகங்களும் குழப்பங்களும் கொலைகளும் நடைபெறு மென்று சிலர் எதிர்பார்த்திருக்கலாம். மூர்க்க சக்தி எழுச்சியே காணோம். எங்கணும் சாந்தம் ; எங்கணும் முக மலர்ச்சி ; எங்கணும் அஹிம்சா தருமப் பெருமை ! காந்தி யடிகளின் மெல்லிய உடலில் நுழைந்துள்ள ஆத்மசக்தியின் வலிமை என்னே! என்னே!! காந்தியடிகளின் ஆத்மசக்தியை என்னென்று வருணிப்பது? அவரது ஆத்மசக்தி செய் துள்ள அரும்பெருஞ் செயல்களை என்னென்று எழுதுவது ? அவரது ஆத்மசக்தி, முஸல்மான்கள் செய்து வந்த பசுக் கொலையை நிறுத்தியது ; ஹிந்துக்களைக் கிலாபத்துக்காகப் பாடுபடச் செய்தது ; வீரதீர சிங்கங்களாகிய அலி சகோ தரர்களையும் சாந்த மூர்த்திகளாக்கிற்று ; தேசபக்த தெய்வ மாகிய லாலா லஜபதிராயைச் சிறைக்கனுப்பிற்று ; மோதிலால் நேருவை அரச இன்பத்தினின்றுந் துறக்கச் செய்தது ; சித்தரஞ்சன தாஸரைச் சந்நியாசி ஆகச் செய்தது ; எத் துணையோ நாத்திகர்களை ஆத்திகர்களாக மாற்றிற்று; ஹிம்சை யில் மனங் கொண்டிருந்த பலரை அஹிம்சையில் திருப்பிற்று ; இப்பொழுது இந்தியாவையே அவர்வழியில் நடத்துகிறது ; இனி உலகத்தையே அவர்வழியில் நடத்தப் போகிறது. இத்துணை ஆத்மசக்தி பெற்றுள்ள ஒருவர் வாழும் இடமோ சிறைக்களம் ? அது 'நிறை'யென்னும் பேரின்பமன்றோ ?

காந்தியடிகள் சிறைச்சாலை நோக்கும் முன்னர், அவர் தேசத்தார்க்குச் செய்த உபதேசங்கள் பல. அவைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும். அவர் என்ன போதித்தார் ? 'தீங்கு செய்பவர்க்குந் தீங்கு செய்யாதேயுங்கள் ; அவர்க்கும் மனமார நன்மையே செய்யுங்கள்' என்று போதித்தார். இப்போதனை செய்த பெரியாரைப் புத்தரெனப் போற்ற வேண்டாமா? கிறிஸ்துவென வணங்கவேண்டாமா? திருவள் ளுவரெனச் சிந்திக்க வேண்டாமா ? எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாத நல்லறத்தால் சுயராஜ்யம் பெறக் கிளர்ச்சி செய்த

ஒருவர் வதியும் இடமோ சிறைக்களமாகும்! அது குறைவிலா இறைவாகிய ஆண்டவன் பீடமன்றோ?

உலக சரித்திரத்தை நோக்குவோம்; சுதந்திரத்துக்காகச் செய்யப்பட்ட போர்களைச் சிந்திப்போம்; கொடுமைகள் நடுக்குறச் செய்கின்றன. சுதந்திரத்துக்காக எத்துணையோ சண்டைக் கப்பல்கள் கட்டப்பட்டன; எத்துணையோ கோரமான ஆயுதங்கள் செய்யப்பட்டன; எத்துணையோ உயிர்கள் மாண்டன; எவ்வளவோ இரத்த வெள்ளம் ஓடிற்று. என்ன பயன் விளைந்தது? உலகத்தில் சுதந்திரம் முளைத்துவிட்டதோ? ஒருவரை ஒருவர் அடக்கியாளும் முறை நிகழுமட்டும் உலகத்தில் சுதந்திரம் உதயமாகாது. சுதந்திரத்துக்கு அடிப்படையாக உள்ள சகோதரநேயம் சமத்துவம் முதலியன வேரூன்றாமல் உண்மைச் சுதந்திரம் பரிணமியாது. சகோதர நேயத்தை - அஹிம்சையை - அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு ஞானப்போரைக் காந்தியடிகள் தொடங்கியிருக்கிறார். எவ்வுயிர்க்குங் கேடு சூழாது, எல்லாக் கஷ்டங்களையும் எல்லா வருத்தங்களையும் எல்லாத் துன்பங்களையும் தாமே தாங்கிப், பொறுமையால் எதிர்க்கும் அறப்போரைக் காந்தியடிகள் புரிகிறார். இந்தப் போரில் ஆயிரக்கணக்கான சத்தியாக்கிரகிகள் சிறைச்சாலையில் வாகைமாலை சூடி நிற்கிறார்கள். தளகர்த்தர்கள் முகமலர்ச்சியோடு ஒத்துழையாப் போர் புரிந்து சிறைபுகுந்து வெற்றிச் சின்னம் பிடிக்கிறார்கள். இப்பொழுது பெருந்தலைவராகிய காந்தியடிகளே போர் செய்து சிறையில் வதிகிறார். ஆதலால், எல்லாரும் காந்தியடிகள் வழிபற்றி நடந்தால் உண்மைச் சுதந்திரம் பரிணமிக்கும். ஆயுதமில்லா அறப்போர், அகமலர்ச்சியோடு சிறை புகுதல், எவ்வுயிர்க்குந் தீங்குசெய்யா அரசியல்—என்னே காந்தியடிகள் உபதேசம்! என்னே காந்தியடிகள் பெருமை! இத்தகைய மகான் - சாது - தீனதயாளன் - வாழும் இடமோ சிறைச்சாலை? கொலையிலே பிறந்து, கொலையிலே வளர்ந்து, கொலையிலே வாழும் மக்களுக்குக் காருண்ய மூர்த்தியின்

பெருமை எவ்வாறு புலப்படும்? அக் கொலைஞர்களையும் திருத்தவேண்டுவது சத்தியாக்கிரகிகளின் கடமையாகும்.

சாந்தமலை பிடிபட்டபோது, 'காந்தியடிகளோ சிறை புகுந்தார்; வழக்கு என்ன ஆகுமோ?' என்று சிலர் கருதியிருக்கலாம். 'அந்தோ! மனங் குழைகிறதே; கண்ணீர் பெருகுகிறதே; உடல் நடுங்குகிறதே; ஊன் துடிக்கிறதே. என் செய்வோம்!' என்று சிலர் புலம்பியிருக்கலாம். 'கடவுளே! எல்லாவற்றையும் கண்டுங் காணாம விருக்கிறாயோ? உனக்குக் கண்ணில்லையோ? காதில்லையோ? சபர்மதி ஆசிரமத்திலிருந்த உடல், சபர்மதி சிறையிலன்றோ இருக்கிறது' என்று சிலர் இரங்கியிருக்கலாம். எமக்குஞ் சயந்தன் புலம்பலும், சந்திரவதியின் புலம்பலும், சீதையின் புலம்பலும், தமயந்தியின் புலம்பலும் செவிகளில் கேட்கின்றன. துரியோதனன் சபையில் திரௌபதை தோன்றுகிறாள்; தருமராஜன் சாந்தத்தின்மீது நோக்கஞ் செல்கிறது. கோப அலை வீசவில்லை; எங்கணுஞ் சாந்தம் மல்கியிருக்கிறது. பரதேச ஆடைகள் எரிக்கப்படுகின்றன. சுதேச ஆடைகள் உடுக்கப்படுகின்றன. மூர்க்க சக்தி தலைகாட்டவில்லை.

இரண்டு ஆண்டுகளாகக் காந்தியடிகள் செய்து வந்த உபதேச வழியில், வக்கீல்களும் மாணாக்கர்களும் சட்டசபைப் பிரதிநிதிகளும் நின்றிருப்பார்களாயின், சுயராஜ்யக் கமலம் எப்பொழுதோ மலர்ந்திருக்கும். காந்தியடிகளைச் சிறைக்கு அனுப்பினவர்கள் வக்கீல்களும் மாணாக்கர்களும் சட்டசபைப் பிரதிநிதிகளுமே யாவர். அவர்கள் மனத்தையும் திருப்பவே காந்தியடிகள் தம்முடலை அதிகாரவர்க்கத்தார் வசம் ஒப்புவித்துவிட்டார். இனியாவது அவர்கள் மனங் கரையுமா?

காந்தியடிகளே! எம்மை உய்விக்க வந்த குருநாதரே! பரோபகாரத்தின் பொருட்டுக் தொழிலை விடுத்தீர்; பொருளைத் தொலைத்தீர்; மனைவி மக்கள் மீதுள்ள பற்றை வெறுத்தீர்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் மனங் கொண்டீர்; உணவைக் குறைத்தீர்; உப்பை ஒழித்தீர்; தருமத்தின்பொருட்டுப் பட்டினி கிடந்தீர்; உடையையும் விலக்கி

னீர். வெயிலும் நிலவும் உமது மேனிமேல் வீசுகின்றன. கோவணதாரியாய் விளங்குகிறீர்; சுதந்திரத்தின் பொருட்டு எல்லாவற்றையுந் துறந்தீர்; இப்பொழுது சிறையில் வதி கிறீர். ஆடைக்கும் பரதேசத்தை நோக்கிக்கொண் டிருந்த எமக்குக் கைராட்டினத்தால் சுதேச வாழ்வளித்த பெரு மானே! உம்மைப்போலத் தியாகமூர்த்தியைப் பாரதமாதா எப்பொழுதாவது கண்டாளோ? காண்பாளோ? சாந்த மூர்த்தி! உமது வடிவம் எம்முடைய உள்ளத்தைக் கோயில் கொண்டிருக்கிறது. நீர் எங்கணும் விளங்குகிறீர். விருப்பு வெறுப்பில்லா ஆண்டகையே! முப்பத்து முக்கோடி மக்க ளின் உடல்கள் உம்முடைய உடலாகும்; அவர்களுடைய புயங்கள் உம்முடைய புயங்களாகும். நீர் பாரதமக்களோடு கலந்திருக்கிறீர். நீர் எம்மைவிட்டுப் பிரிந்ததாக எமக்குத் தோன்றவில்லை. உம்முடைய அரும்பெருங் குணம் எமக்கு வேண்டும். நீர் செய்யவேண்டிய கடமை ஒன்றுமில்லை. உமது உபதேசவழி நிற்கவேண்டிய கடமை எம்மைப் பொறுத்து நிற்கிறது. உமது விருப்பப்படி நடக்க முயல் வோம். திருவடிகளுக்கு வணக்கம்.

பாரத மாதாவே! உலகெலாம் போற்றுங் காந்தியடிகளை ஈன்ற தாயே! உன் பெருமை என்னே! அரசுகள் அழியும்; அரண்மனைகள் அழியும்; கோட்டைகள் அழியும்; சேனைகள் அழியும். காந்தியை ஈன்ற உன்புகழ் அழியுமோ? மற்ற மாதரசிகள் பட்டாடைகள் தாங்கி, இரத்தினாபரணங்கள் அணிந்து, களித்து, இறுமாந்து, அரியாசனத்தில் வீற்றிருக் கிறார்கள். எமது அருமை அன்னாய்! நீயோ கதருடை தரித்துச் சிறையில் இருக்கிறாய். இயற்கை அரியாசனம் உனக்கிருக்கிறது. பரதேச உடைகளை அணியாது நிர்வாண மாக இருந்த நீ, இப்பொழுது அரையில்மட்டும் கதருடை அணிந்திருக்கிறாய்; நல்வாழ்வை உனக்களிக்க உன் புதல் வர்கள் முயன்று வருகிறார்கள். அவர்கட்கு அருள் செய். வந்தேமாதரம். (17–3–1922)

# ஆறு வருடம்

சிறையாம்! ஆறு வருடச் சிறையாம்! வெறுங் காவலாம்! காந்தியடிகள் ஆறு வருட வெறுங்காவல் தண்டனை பெறுவாரென்று நாம் எதிர்பார்க்கவில்லை. காந்தியடிகள் ஆறு வருடக் காவல் பெற்றார் என்னுஞ் செய்தி எமக்கு எட்டியபோது, எமது அடியிலிருந்து முடிவரை மின்சாரம் ஊடுருவிப் பாய்ந்தாலென ஒருவித நடுக்குண்டாயிற்று. பின்னர்ச் செய்கையற்று நின்றோம். கண்ணில் நீர் ததும்பிற்று. கை கால்கள் ஓய்ந்தன. நீண்டநாள் எம்மாட்டிருந்த ஒரு பொருள், எம்மையறியாமல் நழுவி விழுந்தது போன்ற தோற்றம் உண்டாயிற்று. எம்மெதிரிலிருந்த நண்பர்கள் முக மலர்களும் வாட்டமுற்றதைக் கண்டோம். வெளியே வந்து பார்த்தோம். எவர் முகத்திலும் மலர்ச்சியைக் கண்டோமில்லை. அப்பொழுது எமது கண்ணுக்குப் புலப்பட்ட மரங்களும் சோர்ந்து நின்றன. இலைகள் அசையவில்லை. மரங்களிலிருந்த பறவைகளிடத்திலும் மகிழ்ச்சியைக் காணோம். நண்பகல் நள்ளிரவுபோல் தோன்றிற்று. உலகமே இருளடைந்ததுபோல் காணப்பட்டது. 'மகாத்மா சிறைபட்டாராம்; காந்தி சிறைபட்டாராம்; உண்மை சிறைபட்டதாம்; பொறுமை சிறைபட்டதாம்!' என்னும் பேச்சன்றி வேறு பேச்சுக்கள் எம் காதில் விழவில்லை. மீண்டும் உள்ளே நுழைந்து சோர்வால் உறக்கம் எய்தினோம். கிறிஸ்துநாதரின் சிலுவை அடிக்கடி காட்சியளித்தது. விழிப்பு உண்டாயிற்று. 'அன்பு சிறைபடுமோ? உண்மை சிறைபடுமோ?' என்ற ஓர் எண்ணம் எம்மை எழுப்பிற்று. உலகம் வெளிச்சமாகத் தோன்றிற்று. நாம் சென்றவாரங் குறிப்பிட்ட 'சிறை'யிலே காந்தியடிகள் வீற்றிருக்குந் தோற்றம் மனத்தில் உதயமாயிற்று. 'உண்மையால் உலகை வெல்லலாம்; கதரால் சுயராஜ்யம் பெறலாம்' என்னும் உறுதி எமது மனத்திடைப் பூத்தது. காந்தியடிகள் அடிக்கடி உபதேசித்த உண்மை

என்னும் வில்லும், அஞ்சாமை என்னும் அம்பும், அறப் போர்க்களமும் நம் முன்னே நின்றன.

நேயர்களே! காந்தியடிகள் சிறையிலில்லை. அவர் உடல் ஏதோ ஒரு சிறையிலிருக்கிறது. காந்தியடிகள் எங்கும் விளங்குகிறார். அவர் விளங்காத இடமில்லை. அவரது ஆத்மசக்தி உலக முழுவதும் பாய்ந்திருக்கிறது. உலகம் போற்றும் ஆத்மசக்தியுடைய ஒருவர் வாழும் இடத்தையோ சிறை என்று கருதுவது? அது குறைவிலா நிறைவே யாகும். காந்தியடிகளின் ஆத்மசக்தி, கடல்களையும் மலைகளை யும் கடந்து கடந்து, உலக முழுவதும் பரவியுள்ள அருமையை உணர்ந்து ஆறுதல் அடைமின். கோபம் வேண்டாம்; கொடுமை வேண்டாம்; வன்மம் வேண்டாம். சாந்தமா யிருங்கள்; அஹிம்ஸா தருமத்தை வளர்க்க முந்துங்கள்.

காந்தியடிகள் மன்றத்தில் வழங்கிய அறவுரைகளை அன்பர்களே! நோக்குங்கள்; அவ்வுரைகளைப் பொற்பேழை யில் வைத்துப் போற்றுங்கள்; அவைகளில் பாரதமாதாவைக் காணுங்கள்; அவைகளை ஒருமுறைக்குப் பலமுறை வாசி யுங்கள்; அவர் ஏழைகள் பொருட்டு வருந்துவதை நோக் குங்கள்; நீங்களும் காந்திநிலையை அடைவீர்கள்; அழுகையை அன்பாக மாற்றுங்கள்; தளர்ச்சியைத் தொண்டாக மாற் றுங்கள்; நீங்களும் காந்தியடிக ளாகலாம். ஒரு காந்தி போனால் ஒருகோடி காந்தி கிளம்புதல் வேண்டும். உலக முழுவதுங் காந்திகள் மலியுமாறு கடவுளை வேண்டுங்கள். உலக முழுவதுங் காந்திகள் நடமாடுங் காலமே உலக சகோதர நேயத்துக் குரியதாகும். எவரெவர் காந்தியாகி றாரோ அவரவர் சுதந்திரம் பெற்றவராவர்.

காந்தியடிகளே! உண்மையே! ஒழுக்கமே! முப்பத்து முக்கோடி மக்களுக்கு உடலாகவும், உயிராகவும் விளங்கிய நீர், நான்கு சுவர் சூழ்ந்த ஒருசிறு கட்டிடத்திலா வாழ் கிறீர்! உமது ஆத்மசக்தி எங்கும் பொலிகிறது. இந்தியா உம்மை மறவாது; அற உலகம் உம்மை மறவாது. நீர் உபதேசித்த அஹிம்ஸையில் தேசம் கருத்தைச் செலுத்து

கிறது. நீர் வெளியில் உலவிய காலத்துச் சிலர் உம்மைப் போற்றாதிருந்தனர். இப்பொழுதோ உம்மை எல்லாரும் போற்றுகிறார். உமது கொள்கையை ஆதரியாத 'ஜஸ்டிஸ்' பத்திரிகையும் இப்பொழுது உம்மை மகாத்மா என்று அழைக்கிறது; உமக்கு விதித்த தண்டனை கடுமையானது என்று கலங்குகிறது. உம்முடைய கொல்லா விரதம் எவருடைய உள்ளத்தைத்தான் உருகச்செய்யாது? உம்மைப் பகைப்பவர்கள் கொலையாளிகளாகவே இருத்தல்வேண்டும். உம்முடைய குணநலன் நீதிபதியையும் கவர்ந்துவிட்டதன்றோ? உமது சிறை, உலகத்துக்கே நன்மை செய்வதாம். உமக்குக் கவலை வேண்டாம். உமது தருமத்தை இந்தியா வளர்க்கும்.

கடவுளே! முப்பத்து முக்கோடி மக்களின் மனத்தைக் கோயில் கொண்டுள்ள ஒருவரை உன்னிடத்தில் ஒப்புவிக்கிறோம். அவரைக் காக்கவேண்டுவது உனது கடமை. உன்னுடைய தருமம் அவர்போன்றவரா லன்றோ பரவுதல் வேண்டும்? இக்காலத்தில் அவரை எமக்களித்ததற்கு உன்னைப் போற்றுகிறோம்.

இங்கிலாந்தே! உனது அரசு கிறிஸ்து தர்மத்தை அடிப்படையாகக்கொண் டியங்குவது. உன்பெயரால் இங்கு எம்மை ஆளும் அதிகார வர்க்கத்தார் கிறிஸ்து போன்ற காந்தியடிகளை ஓர் உலகச் சட்டத்தால் கட்டி இருக்கிறார். உனக்கு உண்மை வேண்டாமா? அன்பு வேண்டாமா? பொறுமை வேண்டாமா? உண்மை காந்தியடிகள்; அன்பு காந்தியடிகள்; பொறுமை காந்தியடிகள்; மனிதர்கள் செய்த சட்டக் கண்கொண்டு காந்தியடிகளை நோக்காதே; கிறிஸ்துவக் கண்கொண்டு நோக்கு. உண்மையும் அன்பும் பொறுமையும் புலனாகும். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(24–3–1922)

# ஊடல்

ஊடல் என்பது ஒரு தனித் தமிழ்ச்சொல். அச்சொல்லைத் தொல்காப்பியம், களவியல், திருக்குறள் முதலிய பண்டைத் தமிழ் நூல்களில் காணலாம். பழந்தமிழ் நூல் ஆராய்ச்சி யுடையார்க்கு ஊடல் என்னுஞ் சொல்லின் செம்பொருள் இனிது புலனாகும். அச்சொல் மேல்நாட்டுப் புலமை மிக்குடையார்க்குப் புதியதுபோலத் தோன்றும்.

பல செந்தமிழ்ச் சொற்கள் வழக்காறற்றுப் போயின. காரணம் நமது நாட்டுக் கல்வி அருகியதாகும். வழக்காறற்றுக் கிடக்கும் நம்மொழிக்கணுள்ள பல சொற்களை ஆட்சியில் கொணர வேண்டுவது தேசபக்தரின் கடன்களுள் ஒன்று.

இப்பொழுது காந்தியடிகள் ஒரு தெய்விக இயக்கத்தைத் தோற்றுவித்திருக்கிறார். அதன் செம்பொருள் தேறாது, அதை இராஜத்துரோக இயக்கமென்றும், நியாய வரம்புகடந்த இயக்கமென்றும் சிலர் கூறி வருகிறார். காந்தியடிகளின் தெய்விக இயக்கத்தை ஒத்துழையாமை என்றும், உதவி மறுத்தல் என்றும், ஒற்றுமை மறுப்பு என்றும் நண்பர்கள் சொல்கிறார்கள். இவை Non-co-operation என்னும் ஆங்கிலத்துக்கு ஒருவித மொழிபெயர்ப்பு உரைகளாம். காந்தியடிகளின்கருத்தை வெள்ளிடைமலைபோல் தெரிக்கும் ஒரு பழந் தமிழ்ச்சொல் உண்டு. அஃது ஊடல் என்பது.

காந்தியடிகள் எவ்வுயிரிடத்தும், எம்மக்களிடத்தும், எந்நாட்டாரிடத்தும் வெறுப்புக் காட்டும் நீர்மையரல்லர். அன்னார் எக்காரணம் பற்றியும் எவரிடத்தும் இகல் கொள்வதில்லை. அவர் கடைப்பிடித்தொழுகுவது அன்பு நெறி. இப்பொழுது காந்தியடிகள் நடாத்திவரும் தெய்விக இயக்கமும் அன்பை அடிப்படையாகக்கொண்டு எழுந்ததே யாகும். காந்தியடிகள் இந்திய மக்களை எவ்வாறு நேசிக்கிறாரோ

அவ்வாறே ஆங்கில மக்களையும், மற்றவர்களையும் நேசிக்கிறார். ஆங்கிலமக்கள்பால் அவர்க்கு எவ்விதக் காழ்ப்புமில்லை. இவ்வுண்மை காந்தி அடியவர்களுக்கும், அவர் நிலையிலுள்ள ஏனையோர்க்கும் செவ்விதிற் புலனாகும்.

காந்தியடிகள் இப்பொழுது எழுப்பியுள்ள இயக்கம் அன்பை அடிப்படையாகக் கொண்டதென்பதை அறிஞர் எவரும் மறுக்கமாட்டார். லௌகிகச் சட்ட நிபுணர்களும், செல்வச் செருக்கில் களியாட்டயரும் மாக்களும் என்ன கூறினுங் கூறுக. இயற்கை வழிநின்று, அறிவு விளங்கப் பெற்று, அன்பு நிலையிலுள்ள மேன்மக்கள் கருத்தே போற்றுந் தகையது. அன்பு நிகழ்ச்சியின்றி, என்புதோல் போர்த்த உடம்பினராய், மாடியில் உலாவி, மன்றத்தில் பொருள் பறிப்போர் கருத்துப் போற்றுந் தகையதன்று. காந்தியடிகள் அன்பால் அடிகோலி எழுப்பியுள்ள இயக்கத்தை ஊடலின்பாற் படுத்துவது எவ்வாற்றானும் பொருந்தும்.

பிணக்குகள் பலதிறத்தன. பிணக்கு, துவேஷங் காரணமாகவும் வேறு பல மறநெறி காரணமாகவும் விளைவதுண்டு. இவை காரணமாக எழும் பிணக்கு ஊடலாகாது. ஊடல் என்பது அன்பு காரணமாக நிகழும் பிணக்கேயாகும்.

தலைவன் தலைவி என்னும் இருவர், உடலால் வேறுபட்டிருப்பினும் உயிரால் ஒன்றுபட்டவர். அவர்தம் உயிரை ஒன்றுபடுத்திப் பிணித்திருப்பது அன்புக் கயிறு. அதுவே காதல் என்பது.

காதல் கண்ணுக்குப் புலனாகாத நுண்பொருள்; அஃது அகத்தே நின்று அன்பு நீரை இடையறாது சொரிந்துகொண்டிருக்கும் அழியா ஊற்று. காதலால் விளையும் இன்பமே இன்பம். அவ்வின்பம் ஒப்பற்றது; உயர்வற்றது. அதன் முதிர்ச்சியே கடவுளின்ப மென்பது.

அன்புக் கயிற்றினால் கட்டப்பட்டு, ஓருயிரும் ஈருடலுந் தாங்கி, இன்பத்தை நுகர்ந்துவருந் தலைவனுக்குந் தலைவிக்கும் சில காரணத்தால் பிணக்கு நிகழ்வதுண்டு. தலைவனது

மாறுபட்ட செயல்களைத் தலைவி கண்டுழி, அவன்மாட்டு அவள் பிணங்கி நிற்பள். தலைவி பிணங்கிநிற்பினும் தலைவன்மாட்டுள்ள அவளது அன்பிற்கு இடர் நிகழ்வதில்லை. இவ்வன்புப் பிணக்கே ஊடல் என்பது.

தலைவி ஊடல் கொண்டிருப்பதை உணருந் தலைவன், தன்பாலுள்ள குற்றமுணர்ந்து, அதனின்றுந் திருந்தி, தன் மனைவியை இன்பச் சொல்லானும், அன்புச் செயலானும் பணிந்துங் குறையிரந்தும் அவள் ஊடலை ஒழிக்க முயல்வன். பின்னை இருவர்க்கும் முன்னையினுந் தலைசிறந்த இன்பந்தரக் கூடிய கூடல் நிகழும். இது தமிழ்நாட்டின் பண்டை வழக்க ஒழுக்கம். இற்றைநாளில் காதல்மணம் அழிந்துபட்டு, வேறு வித மணம் நிகழ்ந்து வருதலால், தலைவன் தலைவியரின் இன்பவாழ்க்கை குலைந்துவருகிறது.

தலைவன் தலைவி உதாரணத்தை அரசியலுக்கும் எடுத்தாளலாம். எவ்வித ஆட்சிமுறையினும் ஆள்வோர் ஆளப்படுவோர் என்ற இரு வகுப்பு உண்டு. சிறப்பாகக் குடிக்கோனாட்சியில் இம்முறை தலைசிறந்து விளங்கும். கோனுங் குடியும் அன்பென்னும் பாசத்தால் கட்டப்படல் வேண்டும். அன்புவழி ஆட்சிமுறை நடைபெறுங்கால் கோனுக்கும் குடிக்கும் எவ்வித மாறுபாடும் நிகழாது. கோன் அடாத செயல்களை ஆற்றுங்கால் குடிகள் ஊடல் கொள்வது இயல்பு. இதனால் கோனிடத்துக் குடிகள் கொண்டுள்ள அன்பு அழிவதில்லை. குடிகளின் மனப்பாங்கைக் கோன் உணர்ந்து, அவர்கள் வழியே திருந்தி, ஊடலைப்போக்குவன். மீண்டும் கோனுக்கும் குடிகளுக்கும் கூடல் நிகழும்; ஆட்சி செவ்விதில் நடைபெறும். கொடுங்கோன் மன்னன், குடிகளின் ஊடலை உணராது, அவர்களை வருத்தி, இறுதியில் தானும் வருந்தி இடர்ப்படுவன். இதை விரித்துக்கூற வேண்டுவது அநாவசியம்.

இப்பொழுது நமது இந்தியாவில் நடைபெறுவது பிரிட்டிஷ் ஆட்சி. நடைபெறுவது பிரிட்டிஷ் ஆட்சியாயிருப்பினும், பிரிட்டிஷ் குடிமக்களுக்குள்ள உரிமைகள் இந்தியர்களுக்கில்லை. அவ் வுரிமைகளைப்பெற இந்தியமக்கள்

காங்கரஸ் வாயிலாக நியாய வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சி செய்துவந்தார்கள். அக்கிளர்ச்சி பிரிட்டிஷ் குடிமக்களுக்குப் பூரணமாக எட்டுவதில்லை. அதிகார வர்க்கத்தார் தம் விருப்பப்படி ஆட்சிமுறை நடாத்தி வருகிறார். நாளுக்கு நாள் கொடுஞ் சட்டங்கள் பெருகுகின்றன. இவைகளையெல்லாம் இந்தியர்கள் பொறுமையால் தாங்கிக்கொண்டு வந்தார்கள். பஞ்சாபில் படுகொலை நிகழ்ந்தது. அக் கொலைக்குக் காரணராயிருந்தவர்கள் தண்டிக்கப்படவில்லை. பார்லிமெண்டிலும் நியாயம் பிறக்கவில்லை. பாரதமக்களில் ஒரு பகுதியினராகிய முஸ்லிம்களின் அன்புக்குரிய கிலாபத்துக்கும் நியாயம் பிறக்கவில்லை. பிரிட்டிஷ் மக்களின் பிரதிநிதிச் சபை என்று, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பொறுப்பை ஏற்றுள்ள பார்லிமெண்டிலும் மந்திரி சபையிலும் இந்தியாவிற்கு நியாயம் பிறவாவிடின், இந்தியர்கள் என்செய்தல் வேண்டும்? பிரிட்டிஷ் குடிமக்களுக்கு அவர்கள் தங்கள் துக்கத்தைப் புலப்படுத்தல் வேண்டுமன்றோ? எவ்வாறு துக்கத்தைப் புலப்படுத்துவது? விண்ணப்பங்கள் உத்தியோகஸ்தர்கள் கரத்திலேயே சிக்கிக்கொள்ளும். தீர்மானங்களும் இங்கிலாந்து செலவும் வீணேயாயின. முறையீடுகள் பாழ்படுகின்றன. வேறு என்செய்வது? அறிவுடையோர் இதைச் சிந்தித்தல் வேண்டும். பஞ்சாப் படுகொலைக்கே நியாயம் பிறக்கவில்லையெனில், வேறு எதற்குத்தான் நியாயம் பிறக்கப்போகிறது? பஞ்சாப் படுகொலையை ஒரு பக்கமும், அதைப்பற்றிப் பிறந்த 'நியாயத்தை' மற்றொரு பக்கமும் நிறுத்தி நேர்மை என்னும் கண்கொண்டு பார்த்தல் வேண்டும்.

பல காரணங்களை மனத்திலிருத்தியே காந்தியடிகள் தெய்விக இயக்கத்தைத் தோற்றுவித்தார். காந்தியடிகள் முப்பதாண்டுகளாகப் பிரிட்டிஷ் ஆட்சியோடு கலந்து உழைத்து வந்திருக்கிறார். டிரான்ஸ்வால் யுத்தத்திலும், ஐரோப்பா யுத்தத்திலும் காந்தியடிகள் பிரிட்டிஷாருக்குப் போதிய உதவி புரிந்திருக்கிறார். இத்துணைநாள் அரசாங்கத்தோடு கூடிக் கலந்து ஒத்துழைத்து வந்த காந்தியடிகள்,

இப்பொழுது ஏன் ஒத்துழையா இயக்கத்தைத் துவங்கல் வேண்டும்? பிரிட்டிஷ்மக்களின் பிரதிநிதிகளாயிருந்து தற்காலம் ஆட்சிமுறையைச் செலுத்துவோரிடம் நியாயம் பிறவாமையைக் காந்தியடிகள் கண்டார்; ஒத்துழையாமையிற் கருத்தைச் செலுத்தலானார். பஞ்சாப் படுகொலை, கிலாபத் இவ்விரண்டிற்கும் நியாயம் பிறவாத காரணத்தை முன்னிறுத்தியே காந்தியடிகள் தெய்விக இயக்கத்தை எழுப்பியுள்ளார். பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் நல்லறிவு பெற்றுப் பஞ்சாப் படுகொலைக்கும், கிலாபத்துக்கும் நியாயம் பிறப்பித்து, இந்தியாவிற்கு சுயராஜ்யம் வழங்குவாராயின், ஒத்துழையா இயக்கத்தைக் காந்தியடிகள் ஒடுக்கிவிடுவர். நியாயம் பிறவாத காரணங்கொண்டு செய்யும் அறக் கிளர்ச்சி நியாயவரம்பு கடந்ததாகாது.

காந்தியடிகள் பிரிட்டிஷ் மக்களிடத்தில் துவேஷங் கொள்ளாது, அவர்கள் பிரதிநிதிகள்வசம் சிக்கியுள்ள ஆட்சிமுறையைத் திருத்தவே, இப்பொழுது அரசாங்கத்தோடு பிணக்குக் கொண்டுள்ளார். இப்பிணக்கு அன்பு காரணமாக எழுந்ததொன்றாதலால், இதனை ஊடல் என்று கூறலாம். இஃது அரசியல் ஊடலாகும். இவ்வூடலெழுச்சி வளர்ந்து வளர்ந்து தன் வினையைச் செய்யும்பொழுது, பிரிட்டிஷ்மக்கள் கண்விழித்து, இந்தியாவிற்கு ஒரு நல்லாட்சி முறையை வழங்க முந்துவார்கள். அவ்வாட்சிமுறை இந்தியாவின் சுதந்திரத்தைக் காப்பதா யிருக்கும். பிரிட்டிஷ் மக்களின் கண்ணைத் திறக்கவல்லது இவ்வூடல் இயக்கம் ஒன்றே.

வீட்டிலுள்ள மனைவியின் குறைகளைக் கவனியாத நாயகன் ஒருவன் இருந்தான். தன் குறைகள் நாயகனால் கவனிக்கப்படும் என்ற எண்ணத்தோடு நீண்டநாள் மனைவி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கடிதம் எழுதிக்கொடுத்தும் பார்த்தாள்; வாய்திறந்து முறையிட்டும் பார்த்தாள். எதையும் நாயகன் கவனிக்கவேயில்லை. இறுதியாக நாயகி ஒருநாள் ஒருவேலையுஞ் செய்யாமல் படுத்துக்கொண்டாள். நாயகன் வழக்கம்போல உத்தியோகத்தினின்றும் வீடு சேர்ந்தான். வீடு இருள்மயமாக இருந்தது. கால் அலம்ப நீரையுங்

காணோம். சமையல் அறைக்குச் சென்றான்; அங்கே அடுப்பில் பூனை உறங்குவது கண்டான்; மனைவியைத் தேடித் தேடிப் பார்த்தான்; அவள் ஓர் அறையில் படுத்திருப்பதைக் கண்டதும் அவளைக் காலால் உதைத்தான்; கையால் அடித்தான்; தடியால் புடைத்தான்; என்னென்னவோ ஊறுகள் செய்தான். அவள் மௌனவிரதம் பூண்டு பொறுமையா யிருந்தாள். கடைசியில் தலைவன் மனமுடைந்து தெருத் திண்ணையிலிருந்து நீண்டநேரம் யோசித்தான்; மனைவிபாலணுகினன்; 'என்னருமைக் காதலி! உனக்குள்ள குறைகளை ஒழிக்க முயலாதுபோனது எனது கவலையீனமே. உன் குறைகளென்னை? முறையிடு. இப்பொழுதே அவைகளைத் தீர்க்கிறேன்' என்று கூறினன்; பின்னை மனைவியின் குறைகளைக் கேட்டு அவைகளை நிவர்த்தி செய்தான். அதற்குமேல் இருவருங் கலந்து கூடி ஒத்துழைத்து இல்லறத்தை நன்முறையில் நடாத்தி வந்தனர். இச்சிறு கதையை நேயர்கள் நோக்குவார்களாக.

காந்தியடிகள் இப்பொழுது அரசாங்கத்தின்மாட்டுக் கொண்டுள்ள ஊடலை நியாயவரம்பு கடந்த இயக்கமென்று முதல் முதல் கூறினவர் ஸ்ரீமான் எஸ். சீநிவாச ஐயங்கார். இவர் உரையை எடுத்துக்காட்டி, லார்ட் வெல்லிங்டன் கடந்த சென்னைச் சட்டசபை முடிவில் ஒத்துழையாமை இராஜத் துரோக இயக்கமென்றும், நியாயவரம்பு கடந்த இயக்கமென்றும் வலியுறுத்திப் பேசினர். பின்னை ஸ்ரீமான் சீநிவாச ஐயங்கார் கூடலூரில் என்னென்னவோ சமாதானங் கூறினராம். 'ஹிந்து' 'ஜஸ்டிஸ்' என்னும் இரண்டு பத்திரிகைகளும் ஒத்துழையா இயக்கத்தை மறுப்பினும், அவ்வியக்கம் நியாயவரம்பு கடந்ததன்று என்று எழுதின.

ஸ்ரீமான் சீநிவாச ஐயங்கார் மொழியும், லார்ட் வெல்லிங்டன் கூற்றும் தமிழ் நாட்டிலுள்ள சிலரைக் கலங்கச் செய்திருக்கலாம். தமது உரையின் உண்மையைத் தேறாது லார்ட் வெல்லிங்டன் பேசினர் என்று ஸ்ரீமான் சீநிவாச ஐயங்கார் கூடலூரில் குறிப்பிட்டமையான், அவரை விடுத்து விடுகிறோம். தேசத்தார்க்கு நேர்ந்துள்ள அதிருப்தியை

ஒழிக்க ஸ்ரீமான் ஐயங்கார் தாம் சர்வ கலாசாலைப் பிரதிநிதியாய்ச் சட்டசபையில் அமர அபேட்சகராக நிற்பதினின்றும் விலகித் தேசத்தாரை மகிழ்விப்பரோ ?

கவர்னர் பதவியிலுள்ள லார்ட் வெல்லிங்டன் தமது அதிகாரத்தையே மதித்து இறுமாந்து வாயில் வந்தவாறு பேசியது தவறு. லார்ட் வெல்லிங்டன் எவ்வெவ் வழியில் ஒத்துழையாமை இராஜத்துரோக இயக்கமாகும் என்பதை நியாய முறையில் விளக்கிக் காட்டல்வேண்டும்.

தொழிற்சாலைகளில் முதலாளிகளின் அதிக்கிரமச் செயல்களை முன்னிட்டுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்வது நியாய வரம்பு கடந்த செயலாகுமோ ? இதற்கு லார்ட் வெல்லிங்டன் பதிலிறுத்தல் வேண்டும்.

ஒத்துழையாமை இராஜத்துரோக இயக்கமுமன்று ; நியாயவரம்பு கடந்த இயக்கமுமன்று. ஆதலால் சட்டசபை அபேட்சகர்களும் அச்சமின்றித் தமது விருப்பமின்மையைத் தாராளமாக வெளியிடலாம் ; வாக்காளரும் தமது வாக்கைக் கொடாம லிருக்கலாம். இன்று இவ்வளவோடு நின்று விடுகிறோம். (29-10-1920)

## திலகர் பெருமான்

திலகர் பெருமான் திருநாள், நாளை சனிக்கிழமை உறுகிறது. திலகர் பெருமான் வாழ்வெனில் பாரதநாட்டின் உரிமை உணர்வின் தோற்றம் என்பதாகும். அந்நிய ஆட்சி முறையால், பாரதநாட்டின் வழக்க ஒழுக்கமும், கலைகளும், நாகரிகமும், பிறவும் இறந்துபட்டு இருள்மேலிட்டு வரும் நாளில், அவ்விருள்போக்க மகாராஷ்டிரத்தில் உதித்த சுதந்திரபானு பாலகங்காதர திலகர். பாலகங்காதர திலகர் அன்று தோன்றாதிருப்பரேல் நாட்டில் உரிமை வேட்கை

ஏது? 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்னுஞ் செம்மொழியை நமக்களித்த பெரியாரல்லரோ திலகர் பெருமான்? அவர், 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்று வாயால் சொல்லி வாளா கிடந்தவரோ? அச்சொல்வழி நின்று உழைத்துப் படாத பாடெல்லாம் பட்டவர் நம் பெரியார்.

'கல்வியாலாய பயன் நாட்டுக்கு உழைத்தல்' என்று திலகர் பெருமான் கருதி, நாட்டுக்குரிய தொண்டாற்றப் புகுந்தார். அப்பெருமான், நாட்டை எவ்வெவ்வழியில் தட்டி எழுப்பினார் என்பதை விரிக்கிற் பெருகும். தற்கால நாகரிகத்துக்கு இன்றியமையாத மேல்நாட்டுக் கல்வியோடு நமது கீழ்நாட்டுக் கல்வியையும் திலகர் பெருமான் பயின்றார். பாலகங்காதரர், பத்திரிகை வாயிலாகவும் பிரசார வாயிலாகவும் நாட்டிற்குப் புத்துயிரளித்தார். இவ்வளவில் அவர் நில்லாது மூன்றுமுறை சிறையும் புகுந்தார். இச் சிறைவாசத்தோடு அவர் சில அரிய நூல்களையும் யாத்தார். திலகர் பெருமான் கல்விப்பெருக்கால், பிரசாரத்தால், சிறைவாசத்தால், நூற்களால் நாட்டுக்கு நல்லுணர்வு தந்தார் என்று சுருங்கச் சொல்லலாம். அவ்வொருவர் தியாகம் இப்பொழுது நாட்டின் கண்ணை எவ்வெவ் வழியில் திறந்திருக்கிறது என்பதை விளக்கவேண்டுவதில்லை. திலகர் பெருமான் அறிவுங் குணமுஞ் செயலும் எல்லாவற்றிற்குங் காரணமாக நின்றன.

அவர் அறிவுங் குணமுஞ் செயலும் உரிமை நாட்டத்தில் படிந்துகிடந்தன. அதனாலன்றோ 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்னும் சீரிய மொழி அவரிடத்திருந்து பிறந்தது? 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்று எவரே சொற்றனர்? திலகர் பெருமான் ஒருவரே சொற்றனர். அத் திருவாக்கின் செம்பொருள் மகாத்மா காந்தி.

'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்னும் அறம் இவ்வுலகில் வளர மகாத்மாகாந்தி முயன்று வருகிறார். 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்பதன் நுண்பொருள் உலகோர்

ஒவ்வொருவர் உள்ளத்திலும் விளங்கினால் உலகில் கொடுமை நிலவுமோ? ஒருவரை ஒருவர் அடக்கியாளும் முறையைக் கடைப்பிடித் தொழுகுவோர் அனைவரும் பிறப்புரிமை இன்னது என்பதை உணராதவரே யாவர். பிறப்புரிமையின் பெற்றி தேர்ந்த ஒருவர், பிறர் உரிமைக்கு இடையூறு நிகழ்த்த ஒருப்படார். ஆகவே, உலகம் பயிலவேண்டிய பெரும் பாடம் 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்பது. இம் மூலத்தை மொழிந்த முதல்வர் திலகர் பெருமான்.

திலகர் பெருமான் வாழ்நாளில் சிறப்பாக அறியக் கிடப்பதொன்றுளது. அஃதென்னை? கர்ம யோகத்தின் மாண்பாகும். கர்ம யோகத்தின் மாண்பைத் திலகர் பெருமான் அறிவுறுத்தியதுபோல - செயலிற் செய்துகாட்டியது போல - எவரும் அறிவுறுத்தவுமில்லை; செய்துகாட்டவு மில்லை. நிஷ்காமிய கர்மயோகத்துக்குப் பேர் இலக்கியமாக விளங்கினவர் பாலகங்காதர திலகர். இதுகாலை நமது நாட்டுக்கு வேண்டற்பாலது திண்ணைத் தூங்கும் வேதாந்த மன்று. நிஷ்காமிய கர்மயோகமே வேண்டற்பாலது. காலத்துக்கேற்ற அறத்தை ஓம்பிவந்த பெரியார் நாளை - பிறப்புரிமை நாளை - பிறப்புரிமையில் பற்றும் வேட்கையுமுடைய அனைவரும் கொண்டாடிப் போற்றுவாராக. திலகர் பெருமான் வாழ்க. (31-7-1925)

## கவி தாகூர்

இந்நாளில் உலகுக்கு ஒரு கவியா யிலங்கும் ரவீந்திரநாத் தாகூரின் எழுபதாம் ஆண்டுத் திருநாள், சென்ற வெள்ளிக் கிழமை, உலகின் பல பாகங்களில் கொண்டாடப்பட்டது. அத் திருநாள் சாந்திநிகேதனத்திலுங் கொண்டாடப் பட்டது. அன்று கவிமன்னர் தாகூர் விடுத்த செய்தி போற்றற்குரியது. அச் செய்திக்கண் பலதிறப் பொருள்களிருக்கின்றன. அவைகளைத் திரட்டி இங்கே முக்கூறு படுத்திக்

கொள்கிறோம். ஒன்று இறைவனைப் பற்றியது; மற்றொன்று உலகைப் பற்றியது ; இன்னொன்று நமது இந்தியாவைப் பற்றியது. இம் மூன்றும், ஒன்றையொன்று பற்றியும், ஒன்றில் ஒன்று விராவியும் இருத்தல் கருதத்தக்கது.

'உலகம் பலவிதம்' என்பது பழமொழி. இப் பழமொழிக்குப் பலவிதப் பொருள் கூறுவோருமுளர். பலவித உலகங்களில் இன்பமுடையது எது? எவ்வுலகில் இகல், கொலை, வேறுபாடு முதலியன இல்லையோ, அவ்வுலகே இன்பமுடையதாகும். இவ்வின்ப உலகப்பேற்றிற்கு வேறு உலகம் போக வேண்டுவதில்லை. இம் மண்ணுலகிலேயே அதைப் பெறுதல் கூடும். 'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று பாடியவர் இம் மண்ணில் வாழ்ந்தபோதே இப் பாட்டைப் பாடினர்.

எவ்வுலகம் இகல், கொலை, வேறுபாடு முதலியவற்றைக் கடந்து நிற்கிறது ? கூர்ந்து கூர்ந்து சிந்திக்கச் சிந்திக்க அது கவியுலகமென்பது புலனாகும்.

இயற்கையன்னை பாட்டாக நிற்கிறாள் ; அவள் உறுப்புக்களெல்லாம் பாட்டின் உறையுளாக நிற்கின்றன. இகல் முதலியன இல்லாத ஒருவன் புலனுக்கு இயற்கையின் பாட்டின்பம் பொருளாதல் ஒருதலை.

மலை, ஆறு, காடு, பொழில், கடல் முதலியன பாட்டாகவே பரந்து கிடக்கின்றன. ஆங்கே பண்ணோசை எழுந்த வண்ணமா யிருக்கிறது. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்னும் அப்பர்மொழி இங்கே நினைவிற்கு வருகிறது. இயற்கை யுலகில் யாண்டும் என்றும் எழுதரும் பண்ணோசையை எல்லாரும் பருகுகிறார ?

புலன்களின் இயல்பு பாட்டில் படிவதாகும். காண்டல், கேட்டல், உறுதல், சுவைத்தல், முகர்தல் முதலிய யாவும் இயற்கை வழியில் இயங்குவனவாகவே படைப்பில் அமைந்திருக்கின்றன. அவ்வியல்பை மனிதன் பற்பல செயற்கைக் கருவிகளால் சிதைக்கிறான் ! பாவி !

இயற்கைப் பாட்டின்பத்தை நுகரும் முறையில், செயற்கையில் வீழ்ந்துள்ள புலன்களைப் பண்படுத்தல் வேண்டும்; அப் பண்புக்குரிய வாழ்வு நடைபெறல் வேண்டும்; அவ் வாழ்வுக்குரிய கல்வி, அரசு, நாகரிகம் முதலியன சூழ்ந்து துணைசெய்தல் வேண்டும்.

இயற்கையோடியைந்த வாழ்வே இன்பமானது. அவ்வின்ப வாழ்வுடையவனே மனிதன். அவன் கண்களே கண்கள்; அவன் காதுகளே காதுகள்; அவன் மூக்கே மூக்கு; அவன் நாவே நா; அவன் உடலே உடல்.

இந்நாளைய வாழ்வையும், வாழ்வுத் துறைகளையும் நினைக்கவும் மனம் நடுக்குறுகிறது. மக்கள் இயற்கையை மறந்து, இன்பமிழந்து, நிலைகுலைந்து கிடத்தலை என்னென்று கூறுவது? இக்குலைவை ஒழுங்குபடுத்த ஆங்காங்கே பலதிற இயக்கங்கள் தோன்றி வருகின்றன. இவைகளின் உயிர்நாடி கவியுலக இயக்கமாகும். இது நமது நாட்டினின்றுந் தோன்றியிருத்தல் நமக்கு மகிழ்ச்சிதருகிறது.

கவி தாகூரைப்பற்றிக் கேள்வியுறாத அறிஞரிரார்; அவர் கவிகளின் மாண்பை உணராத கற்றவரிரார். ஆகவே, அவரைப்பற்றி விரித்துக் கூறாது, அவருக்கு வாழ்த்துக்கூறி, அவர் தமது எழுபதாம் ஆண்டுத் திருநாளின்போது விடுத்த செய்தியின்மீது கருத்துச் செலுத்துவோம்.

முதலாவது தம் வாழ்வின் நோக்கைத் தாகூர் விளக்குகிறார். இயற்கையை உடலாக்கொண்டு, அவ்வியற்கை அழகின் வாயிலாகத் தனதிருப்பை உணர்த்தும் இறைவன் அருட்டிறத்தைத் தம்மாட்டு அரும்பச் செய்வது தமது வாழ்வின் நோக்கம் என்று அவர் கூறுகிறார். தம்மை உளப்படுத்தித் தாகூர் மன்பதைக்கு அறிவுறுத்துஞ் செம்மொழி இஃதாகும்.

இயற்கை, இறைவன் உடல் என்றும்—இறைவன், இயற்கையின் உள்ளுறை என்றும்—ஆன்றோர் பலர் கூறிப் போந்தார். இயற்கை வருணனைகள் யாவும் இறைவனை வழுத்

துதல் என்று அறிஞர் கொள்வர். இவ்வருணனைகள் காவியங்களில் நிரம்பிக் கிடக்கின்றன. காவியங்களெல்லாம் இறைவனுக்கு அணியப்பெறும் பாமாலைகளென்க. கவி தாகூர் 'கீதாஞ்சலி'யால் இறைவனைப் போற்றியிருக்கிறார். இயற்கையோடியைந்த வாழ்வால், உள்ளத்துள்ள இறைவனை உணரக்கூடுமென்பது தாகூர் கொள்கை.

மனிதரெல்லாரும் மனிதரல்லர். இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தாமலும், தன்னுள்ளத்துள்ள சித்சக்தியை எழுப்ப முயலாமலும் கிடக்கிற மனிதன் வாழ்விழந்த ஒருவனாவன். தன்மாட்டுள்ள சித்சக்தியை எழுப்ப முயல்வோன் மனிதனாவன். தாகூர் அவ்வழியில் நிற்கிறார். அவர், தமது அநுபவத்தை உலகுக்கு அறிவுறுத்துகிறார்.

உள்ளத்துள்ள சித்சக்தியை எழுப்பவல்லது எது? இதற்குப் பலர் பலவாறு கூறுப. அவ்வாற்றல் வாய்ந்தது பாட்டு என்று சுருங்கச் சொல்லலாம். பாட்டு, சித்சக்தியை எழுப்புவதுபோல மற்றொன்று எழுப்புதல் அரிது. இறைவன் உடலாகிய இயற்கையுடன் உள்ளம் இயைந்து ஒன்றிப், பாட்டின்பத்தை நுகர்ந்து திளைக்கும்போது சித்தசக்தி எழும்.

'உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டு பாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலை யாமே.'

'தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.'

'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் னலங்கலணிந் தருளே.'

இப் பாடல்களை நோக்குக. இறைவன் உடலாகிய இயற்கை அழகு, பாட்டாகப் பொலிதல் காண்க. இப் பாக்களின் பொருளாய இயற்கையில் பண்ணிசை முழங்குவது இயற்கைப் பாவலர்க்குப் பெருவிருந்தாகும்.

இயற்கைப் பண்ணின் இசையை இறைவனாக வன் தொண்டர் வாழ்த்தியிருக்கிறார். 'ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' என்று அவர் பாடியிருத்தலை நோக்குக.

இப் பாட்டின் அருமையை இராமலிங்க சுவாமிகள்,

'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்' என்றுமுன்னீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைத் திடிலடியேன் அருங்காணங் கரைந்துகரைந்
தூழியிலின் புறவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே'

என்று போற்றியிருத்தல் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. 'பாம் பறியும் பாம்பினகால்' என்ற மூதுரைப்படி, இயற்கைப் பாவலர்க்கு இயற்கைப்பாவலரின் உள்ளந் தெரியும். இயற்கையிலுள்ள ஏழிசையின் நட்பமுணர்ந்து, அவ்விசையை ஆண்டவனாகப் போற்றிய பெரியார் வாழ்வைப் பல்வழியிலும் புரைந்து நிற்பது கவி தாகூர் வாழ்வு என்று கூறல் மிகையாகாது. இவ்வாழ்வு, உள்ளத்துள்ள சித்சக்தியை எழுப்புவதாகும்.

தாகூர், இறைவன் உண்மையை உணர்த்தவல்ல இயற்கையின் அழகைப் பாட்டாகப் பாடி, இம்மருண்ட யுகத்திலும் இறைவன் நினைவை ஊட்டி வருகிறார்; தமது பிறந்தநாளிலும் உலகிற்கு விடுத்த செய்தியில் இயற்கைவாயிலாக இறைவன்

உண்மையை உணர்வதை அறிவுறுத்தியிருக்கிறார். தாகூர் வாழ்வின் நுட்பமுள்ள இடம் இதுவே.

தற்கால உலகம் செயற்கை நரகில் விழுந்துகிடப்பது கண்கூடு. மக்கள் இயற்கை வாழ்வை மறந்துவருகிறார்கள். இயற்கை வாழ்வை விடுவதால் துன்பம் பெருகும். ஆதலால் சகோதரர்களே! செயற்கை வாழ்வை மெல்லமெல்ல விடுத்தொழியுங்கள்; இயற்கை வாழ்வில் மூழ்குங்கள்; பாட்டின் நுட்பம் புலனாகும்; இறைவன் உண்மை புலனாகும்; இன்பம் பெருகும். 'கவியெனக் கோதாவரி'யைக் கொண்ட மனதை- 'தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தமிக்கது' என்ற மனதைப் பெற முயலுங்கள். இந்நாளில் இம்மனதைப் பெற்று, அதைப் பலரும் பெறுமாறு 'விசுவபாரதி' வாயிலாக முயன்று வருவோர் கவியரசர் ரவீந்திரநாத் தாகூர். அவர் நீண்டநாள் வாழ்ந்து, உலகுக்கு நலஞ் செய்யுமாறு ஆண்டவன் அருள் செய்வானாக.

இரண்டாவதாகத் தாகூர் கூறியது, தற்கால உலகை நல்வழியில் நிறுத்தி ஆள்வதாகும். நாகரிகம் தோன்றுதற்கு முன்னர் மனிதர்கள் பிரிவுற்று ஒன்றிய சகோதர நேயத்தை உணராது கிடந்தமை போன்றதொருநிலை இப்பொழுது தோன்றி யிருக்கிறதென்றும், ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தில் எளிதில் போக்குவரவு செய்துகொள்ளத்தக்க சாதனங்கள் பெருகியது காரணமாக வலிய தேசத்தார் மெலிய தேசத்தாரைப் பற்றிக் கொள்ளையிடல் நேர்கிறதென்றும், இதனால் மெலிய தேசத்தார் தற்காப்புக்காக விரும்பத்தகாத முறைகளைக் கையாளல் நேர்கிறதென்றும், இவை யாவும் விரைவில் ஒழியத்தக்க குறிகள் தோன்றிவருகின்றனவென்றும், இந்தியா தன் உரிமைப் போராட்டத்தால் எல்லா உயிர்களும் உரிமையின்பத்தை நுகரும்முறை மலருமாறு முயலல் வேண்டுமென்றும், அதுவே இந்தியாவின் உயிர் நோக்கமென்றும், அதனின்றும் இந்தியா வழுவலாகாதென்றுங் கூறியிருக்கிறார்.

'இயற்கை வாயிலாக இறைவனை உணர்தல்' என்னும் நோக்கு, உலக சகோதரநேயத்தை வளர்க்குமேயன்றிக்

கட்டுப்பட்ட தேசநேயத்தை வளர்ப்பதாகாது. மேல் நாட்டுக்கு இந்த ஞானம் இப்பொழுது வேண்டற்பாலது. இதைத் தாகூர் பாட்டால் அறிவிக்கிறார்; காந்தியடிகள் அஹிம்ஸா தர்மத்தால் அறிவிக்கிறார்.

தாகூர் விடுத்த செய்தியின் இரண்டாவது கூறு தற்போதைய உலகிற்கு இன்றியமையாதது. மேல்நாட்டின் சகோதரநேயம் தேசத்தளவில் கட்டுப்பட்டுக் கிடக்கிறது. அதனால் தேசத்துக்குத் தேசம் பகைமை கொள்வதாகிறது. இறையன்பு, தேசம் என்னும் எல்லையையுங் கடந்து செல்வது என்பதை மேல்நாட்டார் உணர்தற்குரிய அருள் நெறியைத் தாகூர் செய்தியாக விடுத்தார்.

தாகூர்வாயிலாக வெளிவருங் கருத்துக்களெல்லாம் பண்டை இந்திய முனிவர்கள் வாயிலாக வெளிவந்தனவாம். அவைகளைத் திரட்டித் தற்கால முறைமைக்கு ஏற்றவாறு செப்பஞ் செய்து தாகூர் உலகுக்கு உதவி வருகிறார். ஆகவே, தாகூர் அறிவுறுத்துவதென்னை? விரிவு இங்கே வேண்டுவதில்லை. 'தேசம்' (Nation) என்பது கட்டுப்பட்ட அன்புக்குரியது என்பதும், அக்கட்டைக் கடந்தது சகோதரநேயம் என்னும் கடவுள் அன்பு என்பதும் அவர் அறிவுறுத்தலின் சாரம் என்று கூறலாம். இயற்கையை உடலாக்கொண்ட ஒரு பொருளைத் தம் வாழ்வில் உணரும் ஒருவர், பிறப்பு நாடு மொழி நிறம் முதலிய கட்டுக்களைக் கடந்த பேரன்பில் நிற்பவரென்றுணர்க. 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பது அவரது உபதேசம்.

கவி தாகூர் இந்தியாவிற்கு அறிவுறுத்தியுள்ளது தற்காலத்துக்கு மிக மிக இன்றியமையாதது. தற்பொழுது இந்தியாவில் ஆவேச ஆரவாரம் அதிகம்; குறியில்லாத கூக்குரலும் கொள்கையில்லாத கூச்சலும் அதிகம். வெறும் ஆவேசத்திலும் வீண் கூக்குரலிலும் சக்திகளையெல்லாஞ் செலவழித்தலாகாதென்றும், அவைகளைச் சீரிய செயல்களாக மாற்றல் வேண்டுமென்றும் தாகூர் கூறியுள்ளார்.

தேசியக் கொடியை உயர்த்துவதாலும், சர்க்காவைச் சுழற்றுவதாலும் சுயராஜ்யம் வாராதென்று தாகூர் சொல்லி

யுள்ளார். கவி தாகூர் இதைச் சொல்லாமலிருக்கலாம். தாகூர் கருத்து, 'தேசியக் கொடி வேண்டாம்; சர்க்கா வேண்டாம்' என்பதா யிராதென்று நம்புகிறோம். அவைகளை ஆவேசத்துக்கு இரையாக்காமல் செயலிற் கொண்டுவரல் வேண்டுமென்பது அவர்தம் உள்ளக்கிடக்கையா யிருக்கு மென்று கருதுகிறோம்.

கிராமங்களில் ஆக்கவேலை செய்யுமாறு தாகூர் நாட்டவரைக் கேட்டுக்கொள்கிறார். ஆக்கவேலைகளில் உயிர் போன்றது மக்களை இயற்கை நோக்கில் திருப்புவது. இயற்கையுடன் பின்னிக்கொண்டிருந்த இந்திய வாழ்விற்குத் தற்கால நாகரிகம் இடையூறு செய்கிறதன்றோ? இயற்கை அன்பில்லா நாகரிகம் ஒழிக ஒழிக.

கவி தாகூர் செய்தியின் சுருக்கம், இயற்கையின் வாயிலாக இறைவனை உணரும் பேரன்பு வேண்டற்பாலதென்பதும், அவ்வன்புக்குத் தேசம் முதலிய கட்டுகளில்லையென்பதும், தற்கால உலகம் 'தேசம்' என்னுங் கட்டால் பிணக்குறுகிற தென்பதும், அப்பிணக்கை ஒழிக்கவல்ல உலக சகோதர நேயத்தைப் புதுக்கும் உரிமைப் போராக இந்தியாவின் போர் இருத்தல் வேண்டுமென்பதும், இன்னோரன்ன பிறவுமாகும். இந்திய உரிமைப் போராட்டத்தில் தலைப்பட்டுள்ளவர்கள், தாகூர் உள்ளக்கிடக்கையை உணர்ந்து தொண்டாற்றுதல் சிறப்பு.

இப்பொழுதுள்ள சில நல்லியக்கங்களுடன், இயற்கையின் நுட்பமும், இயற்கை வாழ்வும், அவைகளை அறிவுறுத்தும் காவிய நேயமும், கலைகளின் உணர்வும் மக்களுள் ஊடுருவி நிற்கத்தக்க வேறு இயக்கங்களும் தேவை என்பதை அன்பர்கள் உணர்வார்களாக.

கவி தாகூர் உலகம், இயற்கையின்பப் பாட்டுலகம். காந்தியடிகள் உலகம், 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்னும் அறவுலகம். இரண்டும் ஒன்றி இயங்கின், அவை பொன் மலர் நாற்றம் பெறுவது போன்று உலகுக்கு நலஞ்செய்யும்.

(13-5-1931)

# பெண்ணினம்

பெண்ணினம் யாண்டில்லை? நிலையியற்பொருட்கண்ணும், இயங்கியற்பொருட் கண்ணும் பெண் ஆண் என்னும் ஈரினமுண்டு. ஈரினம் இல்லையேல் உலகில் படைப்பேது? ஓரினத்துக்கு மற்றோரினம் இன்றியமையாததா யிருக்கிறது. இவ்வாறாக, ஆறறிவுடைய மக்களுலகில் பல இடங்களில் ஆணுக்குயர்வும் பெண்ணுக்குத் தாழ்வும் யாண்டிருந்து முளைத்தன? இவ்வுயர்வு தாழ்வு, மக்களுடல் தாங்கியவர்களால் கருதப்படுகின்றனவேயன்றி, மற்ற உடல் தாங்கியுள்ள உயிர்களால் கருதப்படுவதில்லை. புல் செடி கொடி முதலிய தாவரங்களும், மற்ற ஊர்வன நடப்பன பறப்பன நீர் வாழ்வன முதலியனவும் தங்கள் பெண்ணினத்தைத் தாழ்வாகக் கருதுவதாகத் தெரியவில்லை. எல்லாப் பிறவிகளினும் விழுமியது என்று சொல்லப்படும் மக்கட்பிறவி யுலகிலே உயர்வு தாழ்வு கருதப்படுகின்றன. வெட்கம்! வெட்கம்!

மக்கள் உடல் தாங்கிய ஆணினத்தார் எல்லா வழிகளினும் அஃறிணை உயிர்களைவிட உயர்ந்து விளங்குகிறார். ஆனால் பெண்ணினத்தை வருத்துவதில் அவ்வாணினத்தார் அஃறிணை உயிர்களினுந் தாழ்ந்தவராகிறார். பெண்ணினத்தைச் சமமாகக் கருதிப் போற்றும் ஆண்மக்கள் இலை மறை காய் போல் ஆங்காங்கே வதிவதை நாம் மறுக்கிறோமில்லை. பெரும்பான்மை நோக்கிப் பொதுப்பட ஆணினம் என்று கூறிச் செல்கிறோம்.

ஆண்மக்கள் முதல்முதல் தங்கள் நலத்தின்பொருட்டுப் பெண்மக்களை அடிமைப்படுத்தினார்கள். தொடக்கத்தில் ஆண்மகன் பெற்றிருந்த உரிமையெல்லாம் பெண்மகளும் பெற்றிருந்தாள். உலகிலுள்ள எந்தப் பழைய நூலை ஆராய்ந்தாலும் இவ்வுண்மையைக் காணலாம். பின்னை நாளடைவில் ஆண்மக்கள் தங்கள் நலங்கருதிப் பெண்மக்களுக்கு அறியாமை விலங்கிட்டு அவர்களைச் சிறைப்படுத்தினார்கள். ஈண்டு

உலகிலுள்ள பல தேசப் பெண்மக்கள் நிலையைக் குறித்து விரித்துரைக்கப் புகுகின்றோமில்லை. நாகரிகத்தில் சிறந்ததென்றும், ஞானத்தில் சிறந்ததென்றுஞ் சொல்லப்படும் இந்தியாவிலுள்ள பழைய குடிமக்களாகிய ஹிந்துப் பெண்மணிகளின் நிலைமீது நமது கருத்துச் செல்கிறது. இந்தியா பெருமை பெற்றிருந்த காலம் உண்டு. அக்காலம் பெண்மக்கள் முழு உரிமை பெற்றிருந்த காலம் என்க. பெண்மகளை என்று ஆண்மகன் சிறுமைப்படுத்தத் தொடங்கினனோ அன்றே தேசம் அடிமைக்குழியில் விழுந்துவிட்டது.

ஹிந்து மதத்தின் பெயரால் ஹிந்துக்கள், பெண்மக்களை ஆடுமாடுகளாக்கினார்கள் என்று சொல்வது மிகையாகாது. கடவுளர்களுக்குப் பெண்கூறு கூறும் ஹிந்துமதம், பெண்ணினத்தை எவ்வாறு சிறுமைப்படுத்தும் ? ஆதலால் பெண் சிறுமைக்கு மதம் காரணமாக நிற்கவில்லை. அம் மதத்தின் பெயரால் ஆண்மக்கள் கொடுமை நிகழ்த்தி வருகிறார்கள். பார்வதி பரமசிவன், இலட்சுமி நாராயணன், வள்ளிமணாளன், சீதாராமன், இராதாகிருஷ்ணன் என்று கடவுளை வாழ்த்தும் ஹிந்து ஆண்மக்கள், தங்கள் பெண்மக்களை ஏனோ படுகுழியில் தள்ளிப் பாழ்படுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை.

முதல் முதல் நமது நாட்டில் பெண்ணினத்தைக் கட்டுப்படுத்திச் சிறைகாப்பில் தூக்கிய அடக்குமுறைச் சட்டம் பெண்மக்கள் கல்வி பயிலலாகாது என்பது. இவ்வொன்றினின்றும் பிறந்த கிளைச் சட்டங்கள் பற்பல. ஆணின் நலத்துக்காகப் பெண் படைக்கப்பட்டாள் என்னும் எண்ணம் எத்தகையது ? அது பேயெண்ணமன்றோ ?

இந்தியாவில் பிறந்த ஒருவன் இதுபோழ்து பெண்ணை எவ்வாறு நினைக்கிறான் ? வேலைக்காரியாக நினைக்கிறான் ; காமக் கிழத்தியாக நினைக்கிறான் ; சடப்பொருளாகவும் நினைக்கிறான். அந்தோ ! நம் பெண்ணினல்லார் ஆண்பாலரிடம் படும் அல்லல் என்னே ! என்னே ! பிறந்த அகத்தில் அண்ணன் தம்பிமாரால் சிறுமை ; புகுந்த அகத்தில் புருஷனால் சிறுமை ; நாட்டில் பெண்மக்கள் தாங்கள் படுந்துன்பங்

கண்டன்றோ 'பெண்ணாய்ப் பிறப்பதினும் மண்ணாய்ப் பிறக்கலாமே' என்று சொல்லிச் சொல்லி வருந்தினார்கள். அது நாளடைவில் பழமொழியாகவும் நிலவிவிட்டது.

ஆணுடல் தாங்கிய உரிமைகொண்டு, ஒருவன் ஒருத்தியோடு வாழாது, பல மகளிரோடு வாழ்கிறான்! என்ன கொடுமை! ஒழுக்கம் என்பது பெண்மக்கட்குத்தானோ! ஒருவன் பல பெண்களோடு கலந்து வாழ்ந்தால் உலகம் அவனைப் பழிப்பதில்லை. ஒருத்தி சிறிது தவறி நடந்துவிடுவாளானால் ஆ! ஆ! என்ன கட்டுப்பாடு! பெண்மகள் பலரோடு கூடி வாழ்வது தவறாகாதென்று நாம் கூறுகின்றோமில்லை. ஒருத்தி ஒருவனோடே வாழவேண்டுமென்று ஒருமுறைக்கு ஆயிரமுறை வலியுறுத்துகிறோம். அவ்வாறே ஒருவனும் ஒருத்தியோடு வாழவேண்டுமென்று வலியுறுத்துகிறோம். உலகிலுள்ள ஆண்மக்கள் ஒவ்வொருவரும், தத்தமக்குரிய ஒவ்வொருத்தியோடு வாழ்ந்து வருவரேல், பெண்மக்களில் வேசையர் என்னும் ஓரினந் தோன்றியிருக்குமோ? உலகில் வேசைத் தொழிலுக்குப் பெண்மக்களைத் திரட்டுவது ஆண்மக்களது தீயொழுக்கம் என்பது கூர்ந்து கவனிக்கற்பாலது. ஆண்மக்கள், பெண்மக்களைக் காமப்பொறியாகக் கருதியது முற்றிலும் வெறுக்கத்தக்கது.

பெண்மக்கள் கல்வியறிவு பெறாமலும், அடிமைவேலை செய்தும், ஆண்மக்கள் ஆட்டும் பொம்மைகளாகித் தங்கள் நிலையை மறந்து வாழ்பவர்களானார்கள். பெண்மக்கள் உற்றுள்ள சிறுமைகளை முறை முறையாக ஈண்டு விரிக்கிற் பெருகும். இன்றியமையாத சிலவற்றை ஈண்டுக் கூற முற்படுகிறோம்.

வேசைத் தொழில் என்பதொன்று இதுபோழ்து உலகில் எப்பாங்கரினும் நிகழ்ந்து வருகிறது. இத்தொழிற் பெருக்குக்குக் காரணர் ஆண்மக்கள் என்பதை மேலேகுறிப்பிட்டிருக்கிறோம். இத்தொழிலை நிறுத்த உலகிலுள்ள பல அறிஞர் முயன்று வருகிறார். ஆணுலகந் தூய்மையுறுமட்டும் அத்தொழில் ஒடுங்குதல் அரிது. சிற்சில இடங்களில் சட்டங்

கள் செய்யச் சிலர் முயல்கிறார். சட்டம்செய்யும் ஆண்மகன் எவ்வளவுதூரம் அச் சட்டத்துக்குக் கட்டுப்படுகிறான் என்பது ஆராயற்பாற்று. ஒரு பக்கம் பெண்ணுடன் விபசாரம்; மற்றொருபக்கம் விபசாரச் சட்டம்; இன்னொரு பக்கந் தண்டனை. இவைகளை ஆணினத்தார் கொடுமை எனக் கூறாது வேறென் கூறுவது?

நமது நாட்டிலுஞ் சட்டசபை அங்கத்தவர்களிற் சிலர் விபசாரத்தைச் சட்ட வாயிலாகத் தொலைக்க முயல்கிறார். புறமுயற்சியினும் அகமுயற்சி வேண்டற்பாலது. சட்டசபை அங்கத்தவருள் எத்துணைப் பேர் தமக்குரிய ஒரு மனைவியோடு வாழ்கிறார் என்பதை ஆராய ஒரு விசாரணைக் கூட்டம் ஏற்படுத்தினால் உண்மை விளங்கிவிடும். விபசாரக்காரர் சட்டசபையில், அங்கம் பெற்றுள்ளவரை சட்டம் எவ்வாறு அத் தீத்தொழிலை நிறுத்த வல்லதாகும்?

பொருளுக்கு மானம் விற்கும் வேசையர்கள் ஒருபால் கிடக்க. நமது நாட்டில் தாசிகள் என்னும் ஒரு வகுப்பார் இருக்கிறார். பண்டைக் காலத்தில் இவர்கள் கடவுளுக்குத் தொண்டுசெய்வதற்கென அடியாரினத்தில் சேர்ந்திருந்தார்களாம். 'தேவடியாள்' 'தாசி' என்னுஞ் சொற்கள் நற்பொருளையே தருவன என்பது வெளிப்படை. தே அடியான், தாசன் என்னும் ஆண்பாற் பெயர்களுக்குத் தே அடியாள், தாசி என்பன பெண்பாற் பெயர்கள். இதுபோது அச்சொற்கள் பொருளிழந்து நிற்பது எவரும் அறிந்தவொன்று. நல்லொழுக்கமுடையளாய், கடவுளிடத்து மெய்யன்புடையளாயுள்ள ஒருத்தியை இதுபோழ்து எவராவது தேவடியாள் அல்லது தாசி என்றழைத்தால் உடனே அவள் மனம்வருந்தி வழக்குத் தொடர்வாள். காரணம், அச்சொற்கள் இதுகாலைத் தீயொழுக்கமுடைய இனத்தாரைக் குறிப்பதே யாகும்.

கடவுள் தொண்டுக்கென அர்ப்பணஞ் செய்யப்பட்ட பெண்ணன்பர்களைக் கெடுத்தது யார்? அக்கடவுளைப் பூசிக்கும் ஆண்மகன்; அக்கடவுள் அறம் வளர்க்கப் புகுந்த 'தர்மகர்த்தன்'; அக்கடவுளை வழிபடச் செல்லும் 'அடியவன்.'

இவ்வாண்மக்கள் கொடுமையால் தேவடியார்களாக இருந்த பெண்மக்களும் வேசையர்களாக மாறிவிட்டார்கள். ஒரு சில நல்லோர் அரியராய் இருக்கலாம்.

ஹிந்துக்கள் ஆலயங்களில் தேவடியார்களாகப் பொட்டுக் கட்டிக்கொள்ளப் புகும் சகோதரிகள் நிலை குறித்துப் பெரிதும் இரங்குகிறோம். மதத்தின் பெயரால் - கடவுள் பெயரால் - மானம் விற்று வயிறு வளர்ப்பதினும் இழிவு வேறொன்றுண்டோ? 'சாஸ்திரம் சாஸ்திரம்' என்று ஆண் மக்கள் இளங் கன்னிகளைக் கற்பழித்து வருவது பாவம்! பாவம்! தற்காலக் கோயில்களில் தாசிகள் பொட்டுக்கட்டலுக்கும், அவரது தூர்த்த கோலத்துக்கும், ஆடலுக்கும் பாடலுக்கும் தத்துவார்த்தங் கூறும் வேதாந்த பானுக்களில்லாமலில்லை. இளஞ்சிறார்கள் விபசார நோக்கோடு கோயில்செல்வது உண்மை. அவர்களை மயக்கத் தாசிகளென்போர் ஆடுவதும் பாடுவதும் உண்மை. இவைகளுக்குத் தத்துவார்த்தங் கூறும் மக்களைப்பற்றி என்ன கூறல் வேண்டும்?

தெய்வ வடிவாகவும், அன்புக்கு நிலைக்களனாகவும், கடவுளால் படைக்கப்பட்ட பெண்ணைக் கோயிலுக்கென உரிமைப்படுத்தி, அவளை ஆடச்செய்தும் பாடச்செய்தும் காமுறுவதோ கடவுள் வழிபாடு? ஹிந்து ஆண்மக்களே! சிறிது கூர்ந்து கவனியுங்கள்! ஒரு பெண்ணைப் பல ஆடவரிடை நிறுத்தி, அவளது நாணத்தை எறியச்செய்து, அவள் கையையும் கண்ணையும் பார்த்துக் களிப்பது பெண்ணினத்தைப் பழிப்பதன்றோ? இவ்வாறு பெண்ணுலகை இழிவுபடுத்துவது? இந்தியாவில், அதினும் ஹிந்து மதத்தில், அதினும் தேவாலயத்தில் பெண்ணினம் சிறுமைப்படுவதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சியுறும் ஆண்மக்கள் உலகத்தின்முன் மானமிழந்தவர்களே யாவார்கள். 'மதத்தின் பெயரால் - தெய்வத்தின் பெயரால் - பெண்ணைக் கடவுள் முன்னிலையில் மானபங்கஞ் செய்வோர் ஹிந்துக்கள்' என்று மற்றத் தேசத்தார் எள்ளி நகையாட நாம் இடந்தந்திருக்கிறோம். இழிவு! இழிவு!

இவ்விழிவைப் போக்கப் பெருமுயற்சி செய்தல்வேண்டும். மகாத்மா காந்தி, ஆண்டுரூஸ் துரை மகனூர் முதலியோர் இவ்விழிவைப் போக்க முயன்று வருகிறார். தேசத்தில் பல துறைகளைக் குறிக்கொண்டெழுந்த சத்தியாக்கிரகம், இத்துறையில் வீறுகொண் டெழவேண்டுமென்பது எமது கோரிக்கை. 'சமீபத்தில் மாயவரத்தில் கூடிய இசை வேளாளர் சங்கமும், அவிநாசியில் கூடிய செங்குந்தர் சங்கமும் இத்துறைபற்றிச் சில தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கின்றன. இத் தீர்மானங்களைச் செயலில் கொணர அவரோடு மற்றவரும் முயலல்வேண்டும். கேவலம் வயிற்றின் பொருட்டுப் பொட்டுக் கட்டிப் பொதுமகளிராகி வாழ்வோர், தங்கள் வீட்டில் வாழும் பெண்ணினத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சகோதரர்கள் மறத்தலாகாது.

பொட்டுக் கட்டும் வழக்கத்தை நிறுத்துதற்கு உழைத்து வருஞ் சங்கங்கள் பெரும் பொருளீட்டல் வேண்டும். அப் பொருளைச் சிறுமைத் தொழிலினின்றும் நீங்குஞ் சகோதரிகளுக்கெனப் பயன்படுத்தல்வேண்டும். அச் சகோதரிகளை மணஞ் செய்விக்குங் கடமையுஞ் சில காலம் அச்சங்கங்களையே பொறுத்து நிற்றல் வேண்டும். இப்பொழுது தாசிகளென்று இழிவாகக் கருதப்படும் சகோதரிகள் கூர்த்த மதியினர்; மெய்யன்பினர். அம்மதியும் அன்பும் அவர்களைக் காவாதவாறு ஆண்மக்கள் கொடுமை குறுக்கிட்டு நிற்கிறது. மதியாலும் அன்பாலும் சகோதரிகள் வேறு நற்றுறை பற்றி வாழ்வு நடாத்தலாம். இன்று இவ்வளவோடு நின்று விடுகிறோம். (8–1–1926)

# பெண் மக்களும் !

'பெண் மக்களும்' என்னுந் தலைப்பிற் போந்துள்ள உம்மைக்குப் பொருள் புலவர்கள் பலவாறு கூறுவார்கள். பொருளாராய்ச்சியைப் புலவர்கள்பால் விடுக்கிறோம். அவ்வாராய்ச்சிக்குக் கருவியாக இக்கட்டுரையை வரைகிறோம். இக்கட்டுரையை முற்றிலும் வாசிப்போர்க்குப் 'பெண் மக்களும்' என்னுந் தலைப்பின்கண் போந்துள்ள உம்மைப்பொருள் நனிவிளங்கும்.

உலகம் பெண்மக்களாலும் ஆண்மக்களாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. உயர்திணை அஃறிணை என்னும் இரண்டு உலகத்திலும் பெண்பால் ஆண்பால் உண்டு. பெண்ணின்றி ஆணில்லை ; ஆணின்றிப் பெண்ணில்லை. இவ்வாறாக, ஆண் மக்களுக்கு உயர்வும் பெண்மக்களுக்குத் தாழ்வும் பல இடங்களில் எப்படி ஏற்பட்டன ? உரிமை என்பது பெண் மக்களுக்கும் ஆண்மக்களுக்கும் பொது.

மேல்நாட்டுப் பெண்மக்கள் பலதுறை பற்றிக் கிளர்ச்சி செய்து செய்து உரிமை பெற்றுக்கொண்டார்கள் ; இப்பொழுது அரசியல் இயக்கங்களிலுந் தலைப்பட்டுக் கடனாற்றி வருகிறார்கள். மேல்நாட்டில் பெண்மக்கள் ஆண்மக்களைப் போலக் கல்வி பயில்கிறார்கள் ; தொழில் செய்கிறார்கள் ; பொது இயக்கங்களிலெல்லாம் சேர்ந்து உழைக்கிறார்கள் ; அந்நாட்டில் பெண்மக்களுக்கெனச் சில அமைப்புகளுண்டு. அந்நாட்டுப் பெண்மக்கள் தேசபக்தியிலும் இனப்பற்றிலும் தலைசிறந்து வாழ்கிறார்கள். தங்கள் தேசமும் இனமும் எல்லாத் தேசங்களினும் எல்லா இனங்களினும் சிறந்து விளங்கவேண்டுமென்ற எண்ணம் அப் பெண்மக்களுக்குக் கருக்குழியிலேயே ஊறிவிடுகிறது. தேசப்பற்றும் இனப்பற்றும் அவர்கள் வாழ்க்கையாகப் பரிணமிக்கின்றன. கடவுள் நினைவு அவர்கள் உள்ளத்தில் உதயமாவது அருமை. அவர்கட்குக் கடவுள், அவர்கள் பிறந்த தேசமே யாகும்.

தேசத்தின்பொருட்டு அவர்கள் எவ்வித இழிதொழிலும் உயர்தொழிலும் செய்வார்கள்.

யுத்த காலத்தில் இங்கிலீஷ் பெண்மணிகளும் பிரஞ்சு மாதர்களும் காட்டிய அருஞ்செயல்கள் வருணிக்கற்பாலன வல்ல. தேசத்தின்மீது கொண்ட கழிபெருங் காதலால், சில பெண்மணிகள், ஆண்வேடந் தரித்துப் போர்க்களம் புகுந்த செய்தியைப் பத்திரிகைகளில் வாசித்தோம். இன்னுஞ் சின்னாளில் மேல்நாட்டுப் பெண்மக்கள் மந்திரி பதவி முதலிய சீரிய பதவிகளையும் பெறுவார்கள். ஆண்மக்கள் உதவியின்றித் தாங்களே வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றைச் சேமித்துக்கொள்ளும் அறிவையும் ஆற்றலையும் அந்நாட்டுப் பெண் மக்கள் பெற்றிருக்கிறார்கள்.

மேல்நாட்டுப் பெண்மக்களிடைக் கீழ்நாட்டு நாகரிகம் பரவுமாயின், அவர்கள் சிறந்த தெய்வப் பெண்கள் போல் உலகில் ஒளிர்வார்கள். ஒருவித பைசாசநாகரிகம் அவர்களைப் பற்றி அலைக்கிறது. அதன்வழியே அவர்களும் உழன்று வருகிறார்கள். மேல்நாட்டில் சில பெண்மக்கள் திருமணத்தை வெறுத்து, மகப்பேற்றைச் சிதைக்கிறார்கள். இவ்வநாகரிகச் செயலைக் கேள்வியுறுங்கால் உள்ளம் நடுங்குகிறது.

மேல்நாட்டுச் சார்பை நமது நாடு இப்பொழுது பெற்றிருக்கிறது. இச் சார்பால் கெடுதியில்லை. ஆனால் இச்சார்பைக் கொண்டு அவ்வந் நாட்டுக்குரிய இயற்கை வழக்க ஒழுக்கங்களைச் சிதைத்தலாகாது. நமது நாட்டு ஆண்மக்கள், மேல்நாட்டவரைப்போல நடித்துத் தங்கள் இயற்கை வாழ்க்கையைக் குலைத்து வருகிறார்கள். இவ்வாண்களால் நம் பெண்கள் அறிவும் ஆற்றலும் குன்றி வருகின்றன. இந்தியப் பெண்மக்களின் வாழ்க்கையில் விஷம் கலக்கப்படுகிறது. இவ்விஷத்தால், நம் பெண்மக்கள் வாழ்வு குலையாதவாறு காத்துக்கொள்ள வேண்டுவது எவர் கடமை?

இந்தியப் பெண்மக்கள் நலங்கருதி உழைப்போர் ஒருசிலரே யாவர். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெற்றுக்கு' என்னும் பழம்பாட்டைப் பாடுஞ் சகோதரர்கள்

இன்னும் இருக்கிறார்கள். அச் சகோதரர்களுக்குப் பதில் கூறுமளவில் சில சகோதரர்கள் நிற்கிறார்கள். சில சகோதரர்கள், சந்திரவதியின் உறுதியையும், சீதையின் குணத்தையும், சாவித்திரியின் கற்பையும், தமயந்தியின் அறிவையும், கண்ணகியின் வீரத்தையும், மணிமேகலையின் ஒழுக்கத்தையும் பேசியும் எழுதியுங் காலத்தைக் கழிக்கிறார்கள். இதுகாலை எத்துணைச் சந்திரவதிகள், சீதைகள், சாவித்திரிகள், தமயந்திகள், கண்ணகிகள், மணிமேகலைகள் இருக்கிறார்கள் என்பதை அச் சகோதரர்கள் கவனிப்பதில்லை. நமது நாட்டில் பழம் பெருமை பேசிப் பேசி வாசாகைங்கர்யஞ் செய்வோர் பலருளர். இவர்தம் 'கைங்கர்யத்தால்' ஒரு பயனும் விளையாது. உயரிய குணத்தோடு தற்பொழுது வாழும் மேல்நாட்டுப் பெண்மணிகளின் வரலாறுகளை அறிஞர்கள் கூறி மகிழ்வெய்துங் காலத்து, நம்மவர்களிற் சிலர், 'நமது நாட்டிலும் பண்டைநாளில் இத்தகைப் பெண்மணிகள் எத்துணையோ பேர் இருந்தார்கள்' என்று கூறித் தமக்குள் நிறைவெய்துகிறார். இஃது அறிவுடைமையோ? நேயர்களே! யோசியுங்கள்.

பெண்மக்கள் நலனை நாடுபவர்போல நடித்து, அவர்கள் வழக்க ஒழுக்கங்களைப் பாழ்படுத்துஞ் சில ஆசார சீர்திருத்தக்காரர்களும் உளர். அவ்வநாசார சீர்திருத்தக்காரர்களால் நமது நாடே கெட்டு வருகிறது. அன்னார் கூட்டுறவால் நம் மாதரசிகளின் இயற்கைக் குணங்களும் அழிந்து வருகின்றன. சில சகோதரர்கள் நம் பெண்மக்களைத் தற்கால நாகரிகக் கல்வி போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு அனுப்பி வருகிறார்கள். இப் பாடசாலைகளில் பயில்வோர் திரிசங்கு சொர்க்க இன்பத்தை நுகர்ந்து வருகிறார். தற்கால நாகரிகக் கல்வியில் உயர்தரப் புலமைபெற்றுள்ள பெண்மக்களுள் எத்துணைப் பேருக்குத் தேசபக்தி ததும்பி வழிகிறது என்பது ஆராயப்பெறல்வேண்டும். தேசப்பற்றை விளைவியாப் பாடசாலைகளுக்குப் பெண்மக்களை ஏன் அனுப்புதல் வேண்டும்? ஆண்மக்களிடைத் தேசபக்தி வளர்ந்து வருவதுபோல் பெண்மக்களிடையும் அப்பக்தி வளர்ந்து வருதல்வேண்டும்.

நமது நாட்டு ஜனத்தொகை ஏறக்குறைய முப்பத்து மூன்று கோடி. இத்தொகையில் பாதிக்கு மேற்பட்டது பெண் மக்கள் ஜனத்தொகை. ஆண்மக்களினும் பெண்மக்கள் நீண்டகாலம் ஜீவிக்கிறார்கள். கூரிய மதியும் சலிப்பிலா உறுதியும் நம் பெண்பாலார்க்கு உண்டு. ஜனத்தொகையி லும், கொழு மதியிலும், பிற திறனிலும் மிகுந்து விளங்கும் பெண்பாலாரை, அஃறிணைப்பிராணிகள்போல் வளரவிடுவது, ஆண்மக்களின் அறியாமையையும் வன்னெஞ்சையும் புலப் படுத்துகிறது.

நமது நாட்டுப் பெண்மக்கள் — ஏறக்குறைய எல்லா ரும் — பிற நாயகனைத் தீண்டலாகாதென்ற ஓர் அறத்தை மட்டும் சிறப்பாகக் கொண்டொழுகுவதில் கண்ணுங் கருத் துமா யிருக்கின்றனர். இவ்வியல்பை நாம் குறைகூறவில்லை. இவ்வொன்றே போதும் என்றிருத்தல் கூடாது. இவ் வொன்றுடன் வேறு பல இயல்புகளும் அரும்புதல்வேண் டும். அவைகள் உரிமை வேட்கையை எழுப்பும். 'ஆண் மக்களுக்கு அடிமைப்பட்டு வாழ நாம் படைக்கப்பட்டோம்' என்ற உணர்வுடன் எத்துணையோ பெண்மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆண்மக்களுக்கு வேலைசெய்து கருக்கழிக் கும் இயந்திரங்களாக நம் பெண்மணிகள் வாழ்ந்துவருவதை நோக்குழி உள்ளம் உருகுகிறது. ஆண்மக்களைப் போன்ற அறிவும் ஆற்றலும் உடைய பெண்மக்கள் ஏன் அடிமை உணர்வுடன் வாழ்தல் வேண்டும் ?

நம் பெண்மணிகள் நாயகன்மாரிடத்திலும், மாமிமா ரிடத்திலும், மற்றவரிடத்திலும் படும் பாட்டிற்கு அளவே யில்லை. விதவைகளில் எண்ணிறந்தோர் அடைந்துவருந் துயரங்களை எழுதவுங் கை நடுங்குகிறது. தற்கால நாகரிகத் துறையில் இறங்கி ஆடல்புரியும் நாயகிமார் சிலரால் சில நாயகன்மாரும் துன்பப்பட்டு வருந்துகிறார். நமது நாட்டுப் பெண்மக்களின் மூடச் செயல்களால் விளையுந் துன்பங்கள் எண்ணிறந்தன. அவைகளை அறியாத இந்தியர் இல்லை என்று கூறலாம்.

நம் பெண்மணிகளிடைக் கமழ்ந்து கொண்டிருந்த தெய்வ மணமும் அருகிவிட்டது. அவர்கள் எண்ணங்கள் கட்டுப்பட்ட எல்லைக்குள் நின்று தவிக்கின்றன. அவர்களுக்குத் தேசமென்ற நினைவு தோன்றுவதில்லை. உண்பதும், உறங்குவதும், ஆடை தரிப்பதும், அணிபூண்பதுமே தங்கள் கடமை என்று அவர்கள் நினைத்துவிடுகிறார்கள். நம் பெண் மக்கள் அறியாமையை வருணித்தற்கு ஒருநாள் போதாது. அறியாமைக்குக் காரணம் கல்வியின்மையாகும். கல்வியால் நம் மாதர்கள் எல்லா நலனையும் பெறுவார்கள். நமது நாட்டுக் கல்வியும், அதை அழகுசெய்யத்தக்க பிறநாட்டுக் கல்வியும் பெண்மக்களுக்குப் போதிக்கப்படல் வேண்டும். கல்வியறிவால் சகோதரிகள் தங்கள் உரிமையை விரைவில் பெறுவார்கள்.

இந்திய ஆண்மக்கள் இப்பொழுது எக்குறியுடன் கல்வி பயின்று வருகிறார்கள்? பெரிதும் வயிற்றின் பொருட்டு என்று கூறலாம். வயிற்றுப் பிழைப்புக்காக நம்மவர்கள் படும் பாட்டை என்னென்று சொல்வது? மானம் இழந்து இழிதொழிலையுஞ் செய்ய நம்மவர்கள் முந்துகிறார்கள். நம்மவர்கள் மானத்தைத் தற்காலக் கல்விமுறை காப்பதில்லை. அத்தகைக் கல்வியை உதவிவரும் பாடசாலைகளினின்றும் மாணுக்கர்கள் விலகவேண்டும் என்று காங்கரஸ் தீர்மானித்திருக்கிறது.

ஆண் மாணுக்கர்கள் பள்ளிகளினின்றும் விலகுவதைப் பல முதியோர்கள் மறுக்கிறார்கள். இவர்கள் மறுப்பை நாம் ஏற்பதில்லை. காந்தியடிகள் முயற்சியால் எழுந்த சுதந்திர இயக்கத்தை அழிக்க அடிமைநேயர்கள் முயன்று வருகிறார்கள். இவ்வடிமைநேயர்களும், சிறுவர்கள் பாடசாலையினின்றும் விலகுவதை மறுப்பதுபோலச், சிறுமியர்கள் விலகுவதை மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

நம் பெண்மக்கட்கென ஏற்பட்டுள்ள பாடசாலைகளை நரகக் குழிகளுக்கு ஒப்பிடலாம். முதலாவது மூலாதாரப் பாடசாலைகளை எடுத்துக்கொள்வோம். அவைகளில் நம்

குழந்தைகளுக்குத் திக்கிளர்ச்சி எழுப்பக்கூடிய பாடல்களும் ஆடல்களும் போதிக்கப்படுகின்றன. பின்னை வாழ்க்கைக்கு வேண்டற்பாலனவாய கல்வித்துறைகள் குழந்தைகளுக்குப் போதிக்கப்படுவதில்லை. குழந்தைகள் வீட்டிலிருந்து தொந்தரவு கொடாத ஒரு பயனையே பெற்றோர்கள் பெறுகிறார்கள்! குழந்தைகள் அடையும் பயன் என்ன?

குழந்தைகள் வீட்டிலிருப்பினும், தாய்மாரிடத்திலுள்ள நறுங் குணங்களையும் சிறந்த செயல்களையும் கண்டு நாளுக்கு நாள் திருந்துவார்கள்; தாய்மார்களோடு கலந்து சிறு சிறு வேலைகள் செய்து தேக வலிமை பெறுவார்கள்; அறுசுவை உண்டி சமைக்கவும் பயில்வார்கள். சிறுமியர்கள், இளமைப் பருவத்தைத் தற்காலப் பாடசாலையில் கழிப்பதனால், பின்னை வாழ்க்கைக்கு அவர்கள் சிறிதும் பயன்படாதவர்களாகிறார்கள். அவர்கள் பூபாரமாகி வருந்துகிறார்கள்; பிறரையும் வருத்துகிறார்கள். பின்னை வாழ்க்கைக்குரிய தேக வலிமையும் அவர்கட்கு உண்டாவதில்லை.

உயர்தரக் கலாசாலையில் பயிலும் சகோதரிகளோ தேசத்தை மறந்து, மேல்நாட்டினின்றுங் குதித்த வெள்ளைத் தெய்வங்களாகத் தங்களைக் கருதிவிடுகிறார்கள். இவர்கள் கல்வி எவருக்கும் பயன்படுவதில்லை. இவர்களைத் தாங்கும் பூமியும் தேசமும் தவிர, ஏனைய தத்துவங்களெல்லாம் அயல் நாட்டு மயமாக இருக்கின்றன. தற்காலப் பள்ளிக்கூடங்களால் பெண்மக்களின் வாழ்வு குலைகிறது. அதனால் தேச நலமுங் குன்றுகிறது.

நமது நாட்டின் பல பாகங்களில் பெண் பாடசாலைகள் இருக்கின்றன. அவைகள் அரசாங்க உதவிபெற்று நடைபெறுகின்றமையான், அவைகள் நமது நாட்டு வழக்க ஒழுக்கங்களுக்கேற்ற பாடங்களையும், தேசபக்தி யூட்டக்கூடிய பாடங்களையும் போதிப்பதில்லை. அரசாங்கத்தார் கட்டுத் திட்டங்களுக்கு அடங்கியே அப் பாடசாலைகள் நடைபெறல் வேண்டும். அப் பாடசாலைகளில் சிறந்த தேசியப் பத்திரிகைகள் நடமாடுவதில்லை. சில பாடசாலைகளில் மிதவாதப் பத்திரிகைகளும், ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளுமே

நடமாடுகின்றன. பெண்மக்கள் வாசிக்கும் பாடங்கள் அவர்கள் வாழ்க்கைக்கு உரியனவல்ல. பெண்மக்களின் இளமை, பாடசாலேகளில் பாழ்படுகிறது. என் செய்வது !

பெண்மக்கள் பாடசாலேகள் அனைத்தையும் அரசாங்கச் சார்பினின்றும் விலக்குவது நலம். சட்டசபையில் அங்கம் பெற அபேட்சகர்கள் செய்யுஞ் செலவில் ஒரு பகுதியைக் கொண்டு எத்தனையோ பெண்பாடசாலேகள் காணலாம். செல்வர்கள் தங்கள் செல்வத்தைப் பெண்மக்கள் பாடசாலேக்கு அர்ப்பணஞ் செய்யலாம். நமது நாட்டிலுள்ள பாடசாலேகள் அரசாங்க உதவி சிறிதே பெறுகின்றன. அவ்வுதவியின்றிப் பாடசாலேகள் நடைபெறுதற்கு மாணுக்கர்கள் சம்பளமும் ஒரு சிறு முதலுமே சாலும். தேசபக்தர்கள் உடனே இவ்விடயத்தைக் கவனித்தல் வேண்டும். ஆங்காங்குள்ள தேசபக்தர்கள் பிச்சையெடுத்தாவது பெண்பாடசாலேகளேப் பாதுகாத்தல் வேண்டும். பெண்மக்களே நாட்டு வாசனை வீசாத பாடசாலேகளுக்கு அனுப்புவது அவர்களின் பின்னை வாழ்க்கையைக் கெடுப்பதாகும். 'இனிப் பெண்மக்களே அப்பாடசாலேகளுக்கு அனுப்புதல் கூடாது' என்னும் விரதத்தைத் தாய் தந்தையர்கள் ஏற்று நடத்தல் வேண்டும். பெண்மக்கள் பாடசாலேகளே நாட்டுப் பாடசாலேகளாக மாற்றுவது தேசத்தையே நல்வழியில் திருப்புவதாகும். பெண்மக்கள் போதிய கல்வியறிவு பெற்றிருப்பின், அவர்கள் ஆண்மக்களேப் பார்க்கிலும் மிக உரமாகத் தேச சேவையில் ஈடுபடுவார்கள். அவர்கள் உறுதி ஆண்மக்களேயுந் திருந்தச் செய்யும்.

இப்பொழுது கெட்டுள்ள ஆண் உலகத்தைத் திருத்த வல்லவர்கள் பெண்மக்களே யாவர். ஆண்மக்களிடை இப்பொழுது நாத்திகம் பழுத்து வருகிறது. அவர்கள் தேசாசாரத்தை அறவே கைவிட்டிருக்கிறார்கள். உலகாயத மத அனுஷ்டானத்தில் ஆண்மக்கள் தலேசிறந்து விளங்குகிறார்கள். இவ் வாண்மக்களேப்போலவே பெண்மக்களும் நாத்திக வழியைக் கடைப்பிடித்து ஒழுகி வருவார்களாயின், இந்தியாவின் சொரூபமே அழிந்துபோகும். ஆண்மக்களே ஈசுர பக்தர்களாக்கவும், தேசபக்தர்களாக்கவும் பெண்மக்கள்

உதவி இன்றியமையாதது. ஆதலால் பெண்மக்களுக்கு நாட்டுக் கல்வி போதிக்கப்படல்வேண்டும்.

பெண்மக்கட்கென நாட்டுப் பாடசாலைகள் அமைத்து விடும் ஒரு செயலால் மட்டும் அவர்களுக்குப் போதிய கடனைச் செலுத்திவிட்டதாக நம்மவர்கள் கருதிவிடலாகாது. நம் பெண்மக்கள் பெரிதும் ஆண்மக்கள் வருவாயையே எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். ஆண்மக்கள் வருவாய்க்கு முட்டு நேருங்காலத்துப் பெண்மக்கள் எப்படியாவது குடும்பத்தை நடாத்தும் ஆற்றலுடையவர்களாயிருத்தல்வேண்டும். பெண்மக்களையும் பலதுறைத் தொழின் முறைகளிற் பயிற்சி செய்விக்க முயலல் வேண்டும். கல்வித் துறைகளையும் தொழின் முறைகளையும் போதிக்கப் பெண்மக்கட்கெனத் தனித்தனிக் கூடங்கள் ஏற்படுத்தல்வேண்டும். அவைகள் பெண்மக்கள் பார்வையிலேயே விடப்படல் வேண்டும். ஒவ்வொரு பெண்மகளும் தன்னையும் தன்னைச் சார்ந்துள்ள குடும்பத்தையும் போஷிக்கத்தக்க அறிவையும் தொழிலையும் பெறுமட்டும் மணஞ் செய்துகொள்ளலாகாது. குடும்பப் பொறுப்பை உணராத இளம் பெண்கள், மணஞ் செய்துகொள்வதும் அவள் வாழ்க்கை நடாத்தப் புகுவதும் போற்றத்தக்கனவல்ல.

கல்வியறிவு பெறுமலும், கைத்தொழில் பயிலாமலும் வயதை யடைந்து வாழ்க்கைத்துணையாய் ஒருவனுக்கு அமரும் பெண்மகளின் வாழ்வு இரங்கற்குரியதே. நாயகன் உத்தியோகத்தினின்றும் விலக்கப்படினும் நோய்வாய்ப்படினும் அல்லது மரணமடையினும் நாயகி, எவர் உதவியையும் நாடாது, எவர்மாட்டும் அணுகாது, தன் கல்வியறிவால், கைத்தொழிலால் தன் வயிற்றை வளர்த்துக்கொள்ளத்தக்க நிலையில் இருத்தல்வேண்டும். அவள், அண்ணன் வீட்டை அணைவதும், அண்ணி கையை எதிர்பார்ப்பதும், மைத்துனன் வீட்டை நண்ணுவதும், மற்றவர் வாயி லேறுவதும் இழிவு! இழிவு!!

ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள். பெண்மக்களுக்கும் கைகால்களிருக்

கின்றன ; மூளையிருக்கிறது. எல்லா அங்கங்களையுமுடைய பெண்மக்கள் ஏன் வயிற்றுக்கு மற்றவர்களை எதிர்பார்த்தல் வேண்டும்? பெண்மக்கள் தங்கள் வாழ்நாளில் குடும்பத்தை யும் தேசத்தையும் நடாத்தும் அறிவாற்றல் பெறுமாறு தாய் தந்தையர்கள் அவர்களைப் பயிற்சி செய்வித்தல்வேண்டும்.

பல பெண்பாடசாலைகளில் ஆண்பாலார் ஆசிரியராக இருக்கிறார். காரணம், பெண் ஆசிரியர் தொகை பெருகா மையேயாம். பெண்பாடசாலைகளில் பெண்பாலர் ஆசிரியரா யிருத்தல் நல்லது. கல்வி யறிவுடைய சில பெண்மக்கள் ஆசிரியத்தொழில் செய்ய நாணமுறுகிறார்கள். அவர்கள் நாணமுறுவதால் அவர்களுக்கோ தேசத்துக்கோ நன்மை விளையப் போவதில்லை. பெண்மக்களுக்குப் பெண்மக்கள் போதிக்க ஏன் நாணமுறல்வேண்டும்? பெண் ஆசிரியர் தொகை பெருகப் பெருக எல்லாம் ஒழுங்குபெறும். புத்தகம் வெளியிடல், பத்திரிகை நடாத்தல் முதலிய தொழில்களிலும் பெண்மக்கள் பயிற்சி பெறலாம்.

பண்டைக் காலத்தில் பெண்மக்களிற் பலர் வைத்தியஞ் செய்துவந்தனர். இன்னுஞ் சில இடங்களில் பெண் வைத்தியர் இருக்கின்றனர். பெண்மக்களுக்கு வைத்தியந் தெரியவேண்டுவது அவசியம். பெண்மக்கள் பெரிதும் சமையல் தொழில் செய்துவருதலால், அவர்கள் வைத்தியம் பயில வேண்டுவது அவசியமாகும். பெண்மக்களுக்கு வைத்தியம் போதிக்கத் தனியாக ஆயுர்வேத பாடசாலை அமைக்கப்படல்வேண்டும். வைத்தியத்தால் எத்தனையோ பெண்மக்கள் வாழ்க்கை நடத்தலாம்.

பெண்மக்களுக்கெனச் சங்கீத பாடசாலைகள் வேண்டும். இந்தியர் உலகத்துக்குதவிய இன்பத்துறைகளுள் சங்கீதமும் ஒன்று. பண்டை நாகரிகச் சங்கீதவளங் குறைந்துகொண்டு வருகிறது. பண்டை இசைக் கருவிகளை வாசிப்போர் அரிய ராயினர். சங்கீதம் பெரிதும் பெண்மக்களாலேயே வளர்க்கப் பட்டு வந்தது. சங்கீதத்துக்கென ஓர் இனம் ஒதுக்கப்பட் டிருப்பதும், அவ்வினம் மணம்புரியாது தீயொழுக்கத்துக்

கிரையாவதும் வெறுக்கத்தக்கன. பெண்மக்கள் சங்கீதப் பயிற்சியாலும் தங்கள் வாழ்க்கையை நடாத்தலாம்.

சித்திர மெழுதல், படமெழுதல், தையல் வேலை முதலிய தொழில்களை நன்ருகப் பெண்மக்கள் கற்றுக்கொண்டு காலங் கழிக்கலாம் ; தையல் தெரிந்த பெண்மக்கள் வீட்டில் தையல் கூலி மிகுதியாகும். படமெழுதுந் தொழிலில் பெண்மக்கள் ஏராளமான பொருள் சேர்க்கலாம். சில வீடுகளில் ஏழைப் பெண்மக்கள் இலை தைத்தும், அப்பஞ் சுட்டும் வயிறு வளர்த்து வருகிருர்கள் ; வேறு பல குற்றேவல் செய்துங் காலங்கழிக்கிருர்கள். இச்சிறு தொழில்களால் சிறு ஊதியம் பெற்று வருந்துவதைப் பார்க்கிலும், கடவுள் அளித்த அறிவைக்கொண்டு பேர் ஊதியம் அளிக்கத்தக்க சீரிய தொழில்களை ஏன் பெண்மணிகள் செய்தல் ஆகாது ?

பெண்மக்களுக்கு ஒரு சிறந்த கைத்தொழிலை ஈண்டுக் குறிப்பிடுகிருேம். அஃது எவரானும் போற்றத்தக்கது. அத் தொழிலை இன்னும் சில இடங்களில் பெண்மக்கள் செய்து வருகிருர்கள். அது, நூல் நூற்றுத் துணி நெய்வதாகும். இப்பொழுது இயந்திரங்களால் நெய்யப்படும் பரதேச வஸ்திரங்கள் நமது நாட்டின் செல்வத்தை உறிந்துகொண் டிருக்கின்றன. அவைகளை ஒழிக்கச் சுதேசியக் கிளர்ச்சி எங்கணுங் கொதியா நிற்கிறது. செய்கையில் சுதேசியத்தை வளர்க்கவேண்டுமானுல், ஒவ்வொரு வீட்டிலும் ராட்டினம் சுழலல்வேண்டும் ; கைத்தறி ஓடுதல்வேண்டும். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள பெண்மக்கள் ஓய்ந்த நேரங்களில் நூற்றும் நெய்தும் வந்தால், அவர்கள் தங்கள் குடும்பங்களுக்கு வேண்டிய வஸ்திரங்களைப் பெறலாம். அத் தொழிலிலும் பெண்மக்கள் ஏராளமாகப் பொருள் சேர்க்கலாம்.

நமது நாடு விதவைகளை நாளுக்கு நாள் பெருக்கி வருகிறது. நமது நாட்டில் விதவைமார்கள் எவ்வாறு பாவிக்கப் படுகிருர்கள் என்பதை இங்கே விரித்துக்கூற வேண்டுவதில்லை. அவர்கள் சிறுமையை வருணிக்க வேண்டுவதும் அநாவசியம். விதவைகள் துக்கம் ஒழியவேண்டுமானுல்,

அவர்கள் நூல் நூற்றல் - துணி நெய்தல் - முதலிய தொழில்களைப் பயில்வது நலம்.

பெண்மக்களைத் தொழில் புரியுமாறு கூறுவது இழிவு என்று சிலர் நினைக்கலாம். பழைய காலத்துப் புராணங்களை வாசித்துப் பார்த்தால், நம் பெண்மக்கள் என்னென்ன தொழில் செய்தார்கள் என்பது புலனாகும். கிராமங்களில் நம் பெண்மணிகள் கழனிகளில் வேலை செய்கிறார்கள் ; நூல் நூற்கிறார்கள் ; வேறு பல தொழில்களும் செய்கிறார்கள். அத்தொழில்களோடு தற்காலத்துக்கு வேண்டற்பாலனவாம் தொழில் முறைகளையும் பயில்வது நலந் தருவதாகும்.

பெண்மக்கள் சோம்பேறிகளாகக் காலங் கழித்தலாகாது. அவர்கள் உலகம் மிகச் சுறுசுறுப்பாக இயங்குதல் வேண்டும். அவர்கள் சுறுசுறுப்பு, ஆண் உலகத்தையும் எழுப்பும் ; திருத்தும். ஜெர்மெனி முதலிய இடங்களில் பெண் மக்கள் செய்யும் எத்தனையோ பொருள்கள் கப்பல் கப்பலாக இந்தியாவுக்கு வருகின்றன. மேல்நாட்டின் செல்வநிலைக்குப் பெண்மக்கள் உழைப்புங் காரணமாயிருக்கிறது. ஆதலால் பெண்மக்கள் தொழில்புரிவது இழிவாகாது.

பெண்மக்கள் கல்வியறிவின்றியும் தொழில்ஞானமின்றியும் வளர்வது மரம் வளர்வதுபோலாகும். மரத்தைப்போல வளர்ந்துவரும் பெண்மக்களால் குடும்பம் வறியநிலை அடைந்துகொண்டே போகும். கல்வியறிவில்லா ஒருத்தி, நாயகன் வருவாய்நிலையைக் கவனிப்பதில்லை. தன் நாயகன் கடன்பட்டோ பிச்சையெடுத்தோ மானமிழந்தோ தனக்கு நகை வாங்கிப் பூட்டவேண்டுமென்றே அவள் கருதுகிறாள். இவ்வறியாமையுடைய பெண்மக்கள் தொகை நமது நாட்டில் நிரம்பியிருக்கிறது. பொருளின் அருமையும் பொருளாதார நிலையும் அவளுக்குத் தெரிந்திருக்குமாயின், அவள் புருஷன் மானத்தைப் போக்கடிக்கமாட்டாள். மூடப்பெண்மக்களால் குடும்பங்கள் வறுமையால் பீடிக்கப்படுகின்றன. நாயகன் வருவாய்க்குத் தக்கவாறு செலவுசெய்பவளே சிறந்த வாழ்க்கைத்துணை என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். குறள்

முதலிய நூல்களை நம் பெண்மக்கள் பயின்று அறிவு வளம் பெருமையால், நமது நாடே சிறுமையுற்று நலிகிறது.

பெண்மக்கள் போதிய பொருளாதார அறிவு வாய்க்கப் பெறுவார்களாயின், அவர்களும் தேசத் தொண்டில் தலைப் படுவார்கள். பொதுநலத்தின் பொருட்டு, நாயகனுக்கு ஏதாவது இடையூறு நேருங்காலத்து, நாயகியின் உதவியும் உற்சாகமும் துணைசெய்யும். பெண்மக்கள் உள்ளத்தில் தேச பக்தி பதியுமாயின், அவர்கள் தங்கள் நாயகன்மார்களைத் தேசத்தொண்டில் ஈடுபடுமாறு தூண்டுவார்கள். தங்கள் சொற்படி நாயகன்மார்கள் நடவாவிடின், தாங்கள் அவர்களோடு ஒத்துழைக்க மறுத்துவிடுவார்கள். பெண்மக்கள் தேசப்பற்று கொள்வார்களாயின், ஆண்மக்களில் தேசத் துரோகிகள் குறைந்துபோவார்கள். ஆதலால் பெண்மக்களும் எல்லாத் துறைகளிலும் தலைப்பட்டு உழைத்தல் வேண்டும்.

மகாத்மா காந்தி யாண்டுச் செல்லினும் ஆண்டுள்ள பெண்மக்களுக்கு நல்லுபதேசஞ் செய்து, அவர்களுக்குச் சுதேசிய உணர்ச்சியை எழுப்பிவருவதை மற்றத் தேசத் தொண்டர்களுங் கவனித்து நடக்குமாறு கேட்டுக்கொள் கிறோம். (26-11-1920, 10-12-1920)

# பெண்மக்கள் நிலை

மக்களுள் பெண் ஆண் என்னும் இருபாலுண்டு. மக்களல்லாத மற்ற அஃறிணைப் பிராணிகளினும் இவ்வேற்றுமை உண்டு. உலகம் என்று சொல்வது பெண் ஆண் என்னும் இருபாலாலும் ஆக்கப்பட்ட தொன்றே யாகும். பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றிப் பெண்ணில்லை. இரண்டும் இன்றியமையாதன. இன்று உயர்திணை உலகைப்பற்றிப் பெண்மக்கள் நிலையைச் சிறிது ஆராய்வோம்.

உலகம் பெண் ஆண் என்னும் இருபாலால் ஆக்கப்பட்டிருப்பினும், நீண்டகாலமாக ஆணுலகம் பெண்ணுலகத்தை அடக்கி ஆண்டுவருகிறது. முதலாளிகள் தொழிலாளிகளை அடக்கி ஆள்வதுபோல ஆண்மக்கள் பெண்மக்களை அடக்கி ஆண்டுவருகிறார்கள். தங்களுக்கு ஊழியஞ் செய்யவே 'பெண்மக்கள் படைக்கப்பட்டார்கள்' என்று ஆண்மக்கள் நினைக்கிறார்கள். பெண்மக்கள் உரிமையை ஆண்மக்கள் கட்டுப்படுத்தி வருவதன் காரணம் சுயநலமேயாகும். பெண்மக்கள் உரிமையை ஆண்மக்கள் கட்டுப்படுத்தலால், உலக வளர்ச்சி குன்றிவருகிறது. இருபாலாரின் உரிமை, உலகை வளர்க்குங் கருவி என்பதை எவரும் மறத்தலாகாது.

கொடுங்கோன் மன்னரைக் குடிமக்கள் விரும்பமாட்டார்கள். கொடுஞ்செயல்புரியும் முதலாளிகளைத் தொழிலாளிகள் விரும்பமாட்டார்கள். அதுபோலக் கொடுமை புரியும் ஆண்மக்களையும் பெண்மக்கள் விரும்பமாட்டார்கள். இதை உணர்ந்த ஆண்மக்கள் பெண்மக்களுக்குக் கல்வி கொடுப்பதைத் தடுத்துவிட்டார்கள். பெண்மக்கள் போதிய கல்வி அறிவு பெறுவார்களாயின், தங்கள் உரிமையை உணர்ந்து, அடிமைத் தன்மையை ஒழிக்கமுயல்வார்கள். அதனால் ஆண்மக்கள் சுயநலச் சுகங்கள் குறையும். பெண்மக்கள் தங்கள் நிலையை உணராதவாறு தடுக்கும்பொருட்டே, ஆண்மக்கள் அவர்களை அஞ்ஞான அந்தகாரத்தில் அழுத்தி வருகிறார்கள். பெண்மக்கள் கல்வி அறிவின்மையால் 'நாம் ஆண்மக்களுக்கு

அடிமைகளாக வாழவே படைக்கப்பட்டோம்' என்று கருதித் தங்கள் உரிமையை நாடிக் கிளர்ச்சி செய்வதில்லே.

இப்பொழுது உலகத்தின் சில பாகங்களில் பெண்மக்கள் உணர்ச்சி பெற்றுத் தங்கள் உரிமையை நாடி உழைக்கிறூர்கள். அவர்கள் உணர்வுக்குக் காரணம் அவர்கள் போதிய கல்வியறிவு பெற்றிருப்பதே யாகும். மேல்நாட்டுப் பெண்மக்கள் அரசாங்கச் சபைகளில் அங்கம்பெறக் கிளர்ச்சி செய்து வெற்றி பெற்று வருகிறூர்கள். அமெரிக்காவில் பெண்மக்கள் ஒத்துழையாமை அனுஷ்டித்துத் தங்கள் உரிமையை நாட்டினூர்கள். அமெரிக்காவில் பெண்மக்கள் சாந்த முறைபற்றிக் கிளர்ச்சி செய்து சிறை புகுந்தார்கள். அதுகாலே, செனட்டர்களின் மனேவிமார்கள் சிலரும் சிறை புகுந்தமை கவனிக்கற்பாலது. அமெரிக்கா தேசத்துப் பெரிய மனிதர்கள், தங்கள் தொழிற்சாலேகளினின்றும் வீடு புகுங்காலத்து, ஆண்டுத் தங்கள் மனேவிமார்களேக் காணுது, அவர்கள் சிறை சென்றிருப்பதை உணர்ந்து, மூக்கில் கையை வைத்து, நாற்காலியில் அமர்ந்து யோசனேயில் இருப்பார்களாம். அமெரிக்கப் பெண்மணிகள் பொறுமை எதிர்ப்பைக் கையாண்டு தங்கள் முயற்சியில் வெற்றிபெற்றூர்கள். இங்கிலாந்து பெண்மக்கள் பொறுமை எதிர்ப்பைக் கையாளாது முரட்டுச் செயல்களேக் கையாண்டார்கள். அமெரிக்கா தேசத்துப் பெண்மக்கள் செயலே போற்றுந் தகையது. மேல்நாட்டுப் பெண்மக்கள் தங்கள் உரிமையைநாடிக் கிளர்ச்சிசெய்து வெற்றி பெற்றுவரும் இந்நாளில், கீழ்நாட்டுப் பெண்மணிகள் வாளா காலங் கழிக்கலாமோ? மேல் நாட்டுப் பெண்மக்கள் தங்கள்நாட்டு நாகரிகத்துக்கேற்ற உரிமைபெற முயன்று வருகிறூர்கள். கீழ்நாட்டுப் பெண்மக்களும் தங்கள்நாட்டு நாகரிகத்துக்கேற்ற உரிமைபெற முயலல் வேண்டும். இதைக் கீழ்நாட்டுப் பெண்மக்கள் மறத்தலாகாது.

இந்தியப் பெண் மக்கள் நிலேயை நோக்குவோம். சரித்திர காலத்துக்கு முன்னர், இந்தியப் பெண்மக்கள் உரிமை பெற்றிருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுக

ளுண்டு. பின்னைக் காலத்தில் இந்தியப் பெண்மக்கள் தங்கள் உரிமையிழந்து சடப்பொருள்கள் போல உழன்று வரலானார்கள். ஆண்மக்கள், 'பெண்மக்கள் படித்தலாகாது' என்ற விதியை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவ்விதிக்கு மாறுபட்டு மிகச் சில பெண்மணிகள் தங்கள் முயற்சியால் கல்வி அறிவுபெற்று வந்தார்கள். பொதுவாக நம் பெண்மணிகள் கல்வியின்மையால் தங்கள் நிலையுணராது அடிமைகளாக வாழ்ந்துவருகிறார்கள். பெண்மக்கள் அடிமைக் கூட்டில் அகப்பட்டு, அணிகலன்களையும் பட்டாடைகளையும் தரிப்பதனால் என்ன பயன்? ஆண்மக்கள், பெண்மக்களுக்குக் கல்வியென்னும் உயரிய ஆபரணத்தைத் தரிப்பதற்குப் பதிலாகப், பொன்னாபரணங்களைப் பூட்டி, அவர்களை ஆசைப்படுகுழியில் வீழ்த்திவிட்டார்கள். இந்தியப் பெண்மக்களுக்குப் பொன்னாபரணங்களிலுள்ள ஆசை, வேறு பொருள்களில் கிடையாது. ஆண்மக்கள் மிகத் தந்திரமாகப் பெண்மக்கள் உரிமையை அழித்தார்கள். முதலாளிகள் தொழிலாளர்களை ஏமாற்றி வருவது போல ஆண்மக்களும் பெண்மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இந்தியப் பெண்மக்கள், பிள்ளைகளுக்குத் தாய்மார்களாக இருக்கவும், நாயகன்மார்களுக்கு நாயகிமார்களாக இருக்கவும், அடுப்பூதவும் பயின்றிருக்கிறார்கள். அவர்கள் உலகத்திலுள்ள இயற்கை இன்பங்களையும், வேறு பல இன்பங்களையும் நுகர்கின்றார்களில்லை. அவர்கள் அறிவு, பானைசட்டி அளவாக - வீட்டளவாகக் - கட்டுப்பட்டுக் கிடக்கிறது. அவர்கள் அறிவை வியாபகப்படுத்தாது, கட்டுப்படுத்துவது பெரும் பாவம்.

ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் அறிவில் வேற்றுமையுண்டோ? எவ்வித வேற்றுமையுங் காணோம். வீணாக எற்றுக்கோ பெண்ணறிவைக் கட்டுப்படுத்தல்வேண்டும்? பெண்மக்கள் எல்லாவற்றிற்கும் ஆண்மக்களையே எதிர்பார்க்கிறார்கள். ஆண்மக்கள் தங்கள் விருப்பம்போலப் பெண்மக்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். பெண்மக்கள் ஆண்மக்களைக் கட்டுப்படுத்துங் காலம் வரின், அப்பொழுது ஆண்மக்கள்

என்ன பாடு படுவார்கள்? இதை ஆண்மக்கள் உய்த்து உணர்வார்களாக.

கல்வி அறிவு ஒழுக்கத்தால் பண்பெற்று, நன்மை இது தீமை இது என்று பகுத்தறிவு பெறுமுன்னரே பெண்மக்கள் மணஞ்செய்து கொடுக்கப்படுகிறார்கள். பண்டைக் காலத்திருந்த காதல் மணம் அறவே அழிந்துபட்டது. பெண்மக்கள் இயல்பாக அறிவு விளங்கப்பெற்று, அன்பு இன்னது — மரியாதை இன்னது — என்பதை உணருமுன்னர், மற்றவர்களால் அவர்களுக்கு அன்பும் மரியாதையும் போதிக்கப்படுகின்றன. இவை செயற்கை ஞானமாகவே பெண்மக்களை மணஞ் செய்கின்றன. தன்னுள்ளத்தில் அன்பு கொள்ளாத ஒருவனிடத்தில், அன்புகொள்ளுமாறு ஒருத்தியைத் தூண்டுவது பாவமன்றோ? அவள் உள்ளநிலை ஓரிடத்தில் கிடக்க, அதை வேறோரிடத்தில் வலிந்து தள்ள முயல்வது அவளைக் கொலை செய்வதாகும். இச்செயலால் தீயொழுக்கங்கள் பெருகுகின்றன.

ஆண்மகன் தனக்கு வேண்டிய உரிமைகளைப் பெற்றிருக்கிறான். அவன், தான் விரும்பும் பெண்மக்களை மணஞ் செய்ய உறுதி கொள்கிறான்; பல பெண்மக்களை மணஞ் செய்யும் உரிமை பெற்றிருக்கிறான்; மனைவி யிறந்தால் மற்றொருத்தியை மணஞ் செய்துகொள்கிறான். அறுபது வயது கடந்த கிழவனும் 4-ந் தாரம் 5-ந் தாரம்வரை செல்கிறான். மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருந்தால், கணவன் இன்னொரு பெண்ணைத் தேடுகிறான். ஆண்மகன் கொடுமை என்னே! பெண்மகள் சிறுமை என்னே! ஆண்டவனே! நீ எங்கே இருக்கிறாய்?

பிறப்பில் பேடாயிருக்கின்றவனுக்கும், இடையில் தீயொழுக்கத்தால் ஆண் தன்மை இழந்தவனுக்கும் சந்தானம் உண்டாகாது. சில தாய்மார்களும் தந்தைமார்களும் தங்கள் வீட்டுப் பிள்ளையின் குற்றத்தை உணராது, கட்டழகும் இளமையும் மிக்க செல்வியை 'மலடி' என்று கொண்டு, மற்றும் பல இளங்கொடிகளைக் கொண்டுவந்து தடியனுக்குக்

கட்டுகிறார்கள். அந்தோ! இக்கொடுமையை என்னென்று சொல்வது!

இந்தியாவில் பெண்மக்கள் உரிமையிழந்து படுந் துன்பத்தை வருணித்தல் முடியாது. கைம்பெண்கள் படுந் துன்பத்துக்கோ அளவில்லை. பெண்மக்களுக்குள்ள கட்டுப்பாடுகள் ஆண்மக்களுக்கிருந்தால் அவர்கள் அவைகளை ஒழிக்க முயல்வார்கள். அதுபோலப் பெண்மக்களும் தங்களுக்குள்ள கட்டுப்பாடுகளை நீக்கிக்கொள்ளத் தாங்களே முயற்சி செய்தல் வேண்டும். பெண்மக்கள் தங்கட்கெனச் சங்கங்கள் அமைத்தும், தங்கட்கெனப் பத்திரிகைகள் உண்டாக்கியும், அவைகளின் வாயிலாகத் தேச தருமத்துக்கு மாறுபடாது, பெருங்கிளர்ச்சிசெய்து சுதந்திரம் பெறுவார்களாக.

இந்தியா அந்நிய ஆட்சிக்கு உட்பட்டு வருந்துதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, பெண்மக்களை ஆண்மக்கள் வருத்தி அவர்கள் உரிமையைக் கொள்ளையடித்தது.

பெண்ணுக்கு உரிமை வழங்கிவிடின், கற்பு நிலை குன்றிப் போகும் என்று நம் நாட்டார் கூறுவது வழக்கம். இது மடவோர் கூற்றும். கற்பு என்னுஞ் சீரிய பொருள் பெண்மகள் பொறுப்பிலிருப்பது. அதைக் காப்பதும் விடுவதும் அவளது மனோநிலையைப் பொறுத்து நிற்கின்றன.

பிறர் கட்டுப்பாட்டால் கற்பு காக்கப்படுமென்று நினைப்பது அறியாமை. கட்டுப்பாடில்லையேல் கற்பழியுமென்று கூறுவதை நாம் ஏற்கமாட்டோம். கட்டுப்பாட்டுக்குள் அடங்கி ஒடுங்கியுள்ளவரிடத்துக் கற்பு அழிவதில்லைபோலும்! ஆசிரியர் திருவள்ளுவர் கூறியுள்ள அருள் மொழியைக் கூர்ந்து ஆராய்வோர்க்குக் கற்புநிலை புலனாகும்.

'சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.'

இத் திருக்குறளானே பெண்மக்கள் உரிமையைச் சிறைப்படுத்தலாகாது என்பது தொனித்தல் காண்க.

நம்மவர்களிற் சிலர் திரேதாயுக கிரேதாயுகக் கதைகளைக் காட்டி வாதஞ் செய்கிறார். அக்கால நிலை வேறு; இக் கால நிலை வேறு. அது தெய்விகக்காலம். நாயகன் இறந்தான் என்று கேட்ட உடனே, நாயகியின் உயிர் இயல்பாக எவ்வித முயற்சியுமின்றிப் பிரியுமென்று புராணங்கள் கூறுகின்றன. இப்பொழுது அவ்வாறு உயிர் பிரிகிறதா? அந்தக் காலக் கதைகளைப் பேசுவது தேச சுதந்திரத்தை நாடுவதாகாது.

காலநிலையை உணர்ந்து, தங்கள் பொறுப்பிலுள்ள பெண் மக்கள் நிலையைப் பண்படுத்த ஆண் மக்கள் முயல்வார்களாக. தேச தருமத்துக்கு மாறுபடாத வழியில் தங்கள் உரிமையைப் பெறப் பெண்மக்கள் முயல்வார்களாக. இன்று இவ்வளவோடு நின்றுவிடுகிறோம். (4–3–1921)

## சக்தியினிடத்தில் சுயராஜ்யம்

'சர்வம் சக்தி மயம் ஜகத்' என்னும் முதுரை, இமயத்தை முடியாக் கொண்ட நமது தேசத்தில் பிறந்தது. இவ்வுண்மையைக் கண்ட நம் முன்னோர்கள் அறிவாற்றலைப் புகழ்ந்துரைக்கவேண்டுவது நமது இன்றியமையாக் கடனுள் ஒன்று. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுக்குங் காரணி சக்தியே என்று வேதாகம புராணேதிகாசங்கள் முழங்குகின்றன; சக்தியின் பரிணாமமே ஜெகமும் பிறவும். எல்லாவற்றிற்கும் தாயகமாயிருந்து வருஞ் சக்தியை என்றும் மறத்தலாகாது.

சக்தியின் மாண்பு கண்டே நம் முன்னோர்கள் சக்தி பூசையைப் பெரிதும் போற்றிவந்தார்கள். சக்தியை வழுத்துகிறவர்களுக்குச் சாக்தேயர்களென்றும், அவர்கள் சமயம் சாக்தேயமென்றும் வழங்கப்படுகின்றன. சக்தியை மறந்த பிருங்கி முனிவன் தனது சக்தியை இழந்து பட்டபாட்டைப் புராணங்களிற் காணலாம்.

சக்தியைப் பூசிப்பவர்களிடத்தில் அச்சம் சிறிதுந் தலை காட்டாது. அவர்கள் என்றும் ஆனந்த பரவசராய், கருணைக் கடல்களாய் வதிவார்கள். நாடோறும் சக்தியை மனமொழி மெய்களால் ஏத்துவோர் வடிவம் அருள் மயமாக மாறும். அவர் தங் கரணங்களும் அருள்மயமாகும். சக்தியின் வடிவம் அருள் என்றே உண்மை நூல்கள் கூறுகின்றன. 'எல்லாம் அருள் வடிவம்' என்னும் உணர்ச்சி, சக்தி பூசை கைவரப் பெற்ற பெரியோர்களுக்கு எளிதில் தோன்றும். அன்னார் எவ்விதக் கொலைத் தொழிலையும் செய்ய ஒருப்படார். அக் குணமுடையவர்கள் சத்தியாக்கிரகிகள் எனப்படுவார்கள்.

உலகத்தைச் சுழற்றுகிறதும், பிற கோள்களை உருட்டு கிறதும், சூரியனை அசைவிக்கிறதும் சக்தியே என்பதை ஆராய்ச்சியில் காணலாம். உயிர்களுக்கு உடலாகவும், உலக மாகவும், பிற துணைக்கருவிகளாகவும் இலங்குவதும் அச் சக்தியே யாகும். மின்சாரம் முதலிய சட சக்திகளெல்லாம் அச் (சித்) சக்தியின் துணையால் இயங்குவனவேயாம். சக்தி யின் இயக்கம் நின்றுவிடின், அண்டங்க ளெல்லாம் தத்தம் நிலை குலைந்து ஒன்றோடொன்று மோதித் தூள்பட்டுப் போகும். எல்லாவற்றையும் பிணித்து, ஒரு கட்டில் நிறுத்தி, முறையாக இயக்குவிக்குஞ் சக்தியின் மாண்பை என் னென்று சொல்வது!

சக்தியின் வடிவு, மனமொழி முதலிய கருவிகளாலும் அளக்குந் தன்மையதன்று. அஃது எவ்வளவைக்கும் எட் டாதது. அஃது அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியா யிருப்பது. அத்தகைச் சக்தியைக் கட் டுப்பட்ட அறிவு குணஞ் செயலுடையார் போற்றுவது அருமையினும் அருமை. அவ்வருமையை உணர்ந்த நம் முன் னோர்கள் சகுண உபாசனையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சகுண உபாசனையை முறையே நிகழ்த்துவோர்க்குக், கட் டுப்பட்ட அறிவு குணம் செயல் ஒழிந்து, அகண்டாகார நிலை தோன்றிப், பின்னைச் சர்வம் சக்தி மயமாயிருப்பது புலனாகும். ஆதலால் சக்தியைச் சகுணத்தில் வழிபடும் நெறி பற்றவே எம்போன்றார் முயலல் வேண்டும்.

சக்தியின் வடிவு பெண் வடிவாகும். 'ஆணெலாம் இறைவன் பெண்ணெலாந் தேவி' என்று சைவபுராணங் கூறுகிறது. சக்தி பெண் மயமா யிருப்பவள் என்பதை நந் தேசத்தார்க்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. ஆதலால் பெண்ணை வழிபடுவது சக்தியை வழிபடுவதாகும்.

பெண்ணினுஞ் சிறந்த பொருள் உலகத்தில் பிறிதொன்றில்லை. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்றார் வள்ளுவரும். பெண்ணின் பெருமை உணராத மனிதர்கள் நாகரிகமெய்தாதவர்கள். பெண்ணின் பெருமை உணர்ந்த உலகமே நாகரிக உலகம் எனப்படும். பெண்ணின் பெருமை உணராத தேசம் சுதந்திர மிழந்து பல்வகைத் துயரால் இடர்ப்படும். பெண்ணின் பெருமை உணர்ந்து நடப்பது நாகரிகத்தை வளர்ப்பதாகும்.

உலகத்தில் தோன்றும் உயிர்களெல்லாம் பெண்ணாகிய சக்தியினிடத்தில் தோன்றுவனவாம். உலகத்தில் தோன்றிப் புகழை நிறுத்திய ரிஷிகள், முனிவர்கள், அறிஞர்கள், அன்பர்கள், பாவலர்கள், நாவலர்கள் எல்லாரும் பெண்ணின் வயிற்றிற் பிறந்தவரே. ஆசாரியர்களாகத் தோன்றி மதங்களை நிலைநாட்டிய பெரியோர் அனைவரும் பெண்ணின் வயிற்றில் பிறந்தவரே. ஸ்ரீராமர், கண்ணபிரான், புத்தர், கிறிஸ்து, மகமது, எல்லாரும் பெண்வயிற்றில் பிறந்தவரே. எவர்க்கும் எல்லாவற்றிற்கும் தாய் பெண்ணே. தாயாக ஈன்று, தங்கையாக நேசித்துத், தாரமாக காப்பவள் பெண்ணே. அத்தகைப் பெண்ணைத் தெய்வமாக அன்றோ தொழுதல் வேண்டும்?

நம் முன்னோர்கள் பெண்ணின் பெருமை கண்டு, பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் முறைகளை ஏற்படுத்தினார்கள். எந்தக் கருமமோ, இடைக்காலத்தில் பெண்ணை இழிவுபடுத்திற்று! பெண்ணின் பெருமை குன்றிய நாள் தொட்டுத் தேசமும் பெருமை குன்றி, முடிவில் அடிமைக் குழியில் விழுந்து அலமருகிறது. மீண்டுந் தேசஞ் சுதந்திர மலையில் எழுந்து நிற்கவேண்டுமாயின், தேசத்தார் பெண்ணைப்

போற்றும் முறையை உயிர்ப்பித்தல் வேண்டும். பெண் மக்களைப் பேய்களென்றும் நாய்களென்றும் பேசி, அவர்களை அடித்தும் உதைத்தும், அடிமைகளாக ஆண்மக்கள் வைத்துக்கொண்டிருக்குமட்டும், தேசத்தின் 'அடிமை' நீங்காதென்பது திண்ணம்.

பாலூட்டும் பரம்பொருளை - அன்னமளிக்கும் தெய்வத்தை - இன்பமூட்டும் இறைவியை - எவ்வாறு போற்றல் வேண்டும்? எவ்வாறு நேசித்தல் வேண்டும்? பெண் தெய்வத்தை வெறுப்பதும், இழித்துக் கூறுவதும், அடிப்பதும், உதைப்பதும் அந்தோ! கொடுமை கொடுமை!

நமது தேசத்தில் சுயராஜ்யக் கிளர்ச்சி எழுந்து தாண்டவம் புரிகிறது. அத்தாண்டவம் அநவரதத் தாண்டவமாக வன்றோ ஆதல்வேண்டும்? சுயராஜ்யத் தாண்டவத்தை அநவரதத் தாண்டவமாக்கும் ஆற்றல் பெண்ணென்னுஞ் சக்திக்கு உண்டு. இது வெளிப்படை.

'சுயராஜ்யம் கதிர் முனையில், (கதர் உடையில்) இருக்கிறது என்று மகாத்மா காந்தி முதலிய பெரியோர்கள் சொல்கிறார்கள். கதர் உடை பெருகப் பெருகச் சுயராஜ்யத் தாண்டவமும் பெருகும். கதர் உடையில் கருத்தைச் செலுத்துவது சுயராஜ்யத்தில் கருத்தைச் செலுத்துவதாகும். கதர் உடையில் பெண்மக்கள் காதல் கொண்டாலன்றி, அவ்வுடை பெருகுதல் அரிது. கதர் உடையால் தேசஞ் சுதந்திரம் பெறும் என்னும் உணர்ச்சி பெண்மக்கள் உள்ளத்தில் பதிதல்வேண்டும். அவர்கள் மனத்தில் அவ்வுணர்ச்சி பதிந்துவிட்டால், அதைத் தொலைத்தல் பிரமதேவனாலும் முடியாது. உண்மையாகச் சுயராஜ்யப் பேற்றை விரும்புவோர் பெண்மக்கள் மனத்தைக் கதருடையில் நிறுத்த முயலல்வேண்டும். காலை முதல் மாலை வரை, வயிற்றுக்கே உழைக்கும் ஆண்மக்கள் முயற்சியால், கதர் உடை பெருகுவதைப் பார்க்கிலும் அத்தகை உழைப்பில்லாப் பெண்மக்கள் முயற்சியால் கதருடை அதிகம் பெருகும் என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக.

நமது பொருள் பெரிதும் பெண்மக்களுக்குச் செலவாகிறது. நகைகளுக்கும் பட்டாடைகளுக்கும் செலவழியும்

பணம் எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். நகைகள் ஒருபால் கிடக்க. பெண்கள் ஆடைகளை எடுத்துக்கொள்வோம். தற்கால ஆண்மக்கள் வருவாய் பெண்மக்கள் ஆடைகளுக்கே போதாது என்று கூறுவது மிகையாகாது. ஏழைகள் உடுக்கும் மட்டிப் புடைவைக்கே ரூபா ஏழோ எட்டோ அழுதல் வேண்டும். செல்வர்கள் சாதாரணமாக வீடுகளில் தரிக்கும் புடைவைகள் குறைந்தது ரூபா ஐம்பது பெறும். அவர்கள் வெளியே செல்லும்போது அணிந்துகொள்ளும் உடையின் விலையை ஈண்டுக் குறித்தலும் வேண்டுமோ? ஒரு மனிதனுடைய வருவாய் அவன் குடும்பப் பெண்களுக்குப் பெரிதுஞ் செலவாகிறது. பிற செலவுகளுக்கு அவன் கடன் வாங்கும் கடமை ஏற்றுக்கொள்கிறான்.

பெண்மக்கள் அணியும் புடைவைகளும் பிறவுடைகளும் எந்த நூலால் நெய்யப்படுகின்றன? அவைகள் பெரிதும் மேல்நாட்டு நூலால் நெய்யப்படுகின்றன. பெண்மக்கள் தொகை ஏறக்குறைய பதினாறு கோடி என்னலாம். இவர்கள் - ஏறக்குறைய அனைவரும் - மேல்நாட்டு நூலால் நெய்யப்படும் உடைகளைத் தரிக்கிறார்கள். இவர்கள் கதர் உடை தரிக்கக் காதல் கொள்ளுமாறு சொல்லவேண்டுவது எவர் கடமை?

சுயராஜ்யக் கிளர்ச்சியில் பெரிதும் ஓய்வில்லா ஆண்மக்களே தலைப்பட்டிருக்கிறார்கள். ஒரு சரோஜினி ஒரு சாரளாதேவி தலைப்பட்டிருப்பது சாலாது. தேசத்திலுள்ள எல்லாப் பெண்மக்களும் சுயராஜ்யத்திலும், அதற்குரிய கதர் உடையிலும் விருப்பஞ் செலுத்தல் வேண்டும். கதர் இப்பொழுது ஆண்மக்களுக்கே போதிய அளவு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. கதர் உடை ஆண்மக்களுக்கே போதாமலிருப்பதற்குக் காரணம் யாது? பெண்மணிகள் கதரில் விருப்பஞ் செலுத்தாமையாகும். பெண்மக்கள் சுயராஜ்ய வேட்கைகொண்டு, கதரில் உள்ளத்தைப் பதித்து, ராட்டினங்களைச் சுற்றுவார்களாயின், தேசத்தில் கதர் உடைக் காட்சி எங்கணும் நிலவும். பெண்மக்களை மேல்

நாட்டு உடைகளால் அலங்கரித்து, வீட்டில் இருத்தி, ஆண் மக்கள் மட்டும் கதர் உடை தரித்து, மேடைகளில் பேசுவதனல், கதர் உடை எவ்வாறு தேசத்தில் பெருகும்?

பெண்மக்களுக்கு முதலாவது தேசத்தினிடத்துப்பற்று உண்டாதல் வேண்டும். அதற்குத் தேசஞ் சுதந்திரமிழந்து நிற்பதைப் பலமுகமாக அவர்கட்கு அறிவுறுத்தல் வேண்டும். சுதந்திரத்துக்கு வழி கதர் உடை தரிப்பது என்னும் உணர்வு அவர்கட்கு உதயமாகுமாறு போதித்தல் வேண்டும். கதர் உடையால் தேசஞ் சுதந்திரமடையும் என்னும் ஞானம் பெண்மக்களுக்கு உதயமானதும், அவர்கள் தங்கள் வீடுகளி லுள்ள பரதேச ஆடைகளை அடுப்பிலிட்டு எரிப்பார்கள்; அவர்கள் 'பரதேச உடைகளைத் தரியோம்' என்னும் விரதங் கொள்வார்கள்; விரதத்தை வளர்க்கக் கைராட்டினங்களைத் தேடுவார்கள். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள பெண்தெய்வங்கள் தங்கள் கரத்தில் சக்கரந் தாங்கிச் சுழற்றுவார்களானல், அவ்வொலிகேட்கச் சுதந்திர தெய்வம் ஓடிவரும். அப்பொழுது சுதந்திர தெய்வம் அநவரதத் தாண்டவம் புரியத் தொடங்கும். ஒருசில ஆடவர், கதர் உடை தரிப்பதனல் அத்தாண்டவம் அநவரதம் நிகழ்தல் அருமை. இந்தியாவின் சுயராஜ்யம் பெண்மக்கள் கரத்தில் பொலிகிறதென்பதை விரித்துக் கூறவேண்டுவதில்லை.

பெண்மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்றுக் கைராட்டினந் தாங்குவரேல், தேசத் துரோகக் கூட்டம் அருகும். இப்பொழுது தேசத் துரோகக் கூட்டம் பெருகி வருதற்குக் காரணம், பெண்மக்கள் சுதந்திர உணர்ச்சி பெருமையாகும். பெண்மக்கள் கதர் உடை தரிப்பதில் மனத்தை நிறுத்தி விடுவார்களாயின், எந்தப் பிள்ளை பரதேச உடையை அணியும்? எந்த நாயகன் பரதேச ஆடையை அணியத் துணிவன்? தேசத்திலுள்ள சிறுவர், சிறுமியர், செல்வர், வறியர் எல்லாருங் கதர் உடை தரிப்பர். அன்றுதான் பாரத தேவியின் நிருவாணநிலை ஒழியும்; அவள் தன்னுடை தாங்கி அரியாசனம் அமர்வாள்.

காங்கரஸில் பெண்மக்கள் பெரிதும் சேர்வதில்லை. காங்கரஸ் கூட்டங்களில் அவர்கள் நிழல் படுவதில்லை. பெண் மக்கள் நிரம்பா மகாநாடுகளில் மூதேவி மூச்சுத்தான் பரவும். சக்தி இல்லாத இடத்தில் அருட்பொலிவு இராது. சக்தி சொரூபங்களாகிய பெண்தெய்வங்கள், காங்கரஸ் கூட்டங்களை அழகு செய்யச் செய்யத் தேசத்தில் சுதந்திர தேவி விழித்து வருவாள். தூர்த்தர்கள் கூடுங் கூட்டங்களுக்கும், நாடகங்களுக்கும், சினிமாக்களுக்கும், பிற ஆபாச இடங்களுக்கும் தாய்மார்களை அனுப்ப மனங்கொள்ளும் பாவிகள், அவர்களைத் தேசபக்தர்கள் நிரம்பும் காங்கரஸ் கூட்டங்களுக்கு அனுப்ப ஏன் மனங்கொள்வதில்லை? தூர்த்தக் கூட்டங்களுக்குப் பெண்மக்கள் போதலால், அவர்கள் மனம் பரதேச உடைகளிலும் களியாடல்களிலும் செல்கிறது. அவர்கள் வீடு சேர்ந்ததும் விலையுயர்ந்த ஆடையாபரணம் வாங்கி அளிக்குமாறு ஆண்மக்களைத் தொந்தரவு செய்வார்கள். ஆண்மகன் எவ்வளவு தேசபக்தனு யிருப்பினும், எத்தகை அறிஞனுயிருப்பினும் பெண்மகள் விருப்பத்தை நிறைவேற்றக் கடமைப்படுகிறுன். பெண்மக்களைக் காங்கரஸ் கூட்டங்களுக்கு அனுப்புவதனுல் பல நலங்கள் விளையும். அக்கூட்டங்களினின்றும் பெண்மணிகள் வீடு சேர்ந்ததும் பரதேச ஆடைகளில் வெறுப்புக்கொள்வார்கள்; சுதேச உடையில் விருப்பங்கொள்வார்கள்; பட்டாடை வாங்கி அளிக்குமாறு மன்றுடமாட்டார்கள்; எல்லாக் காலங்களிலும் கதர் உடை தரிக்க ஒருப்படுவார்கள். இதனுல் தேசச்செல்வம் தேசத்தில் தங்கித் தேசத்தைச் செழுமை பெறுவிக்கும்.

தேசச் செல்வத்துக்கும் பிற செழுமைகளுக்கும் காரணத் தெய்வங்களாயுள்ள பெண்மக்களை அலட்சியஞ் செய்வது எவ்வளவு அறியாமை? இனியாவது தேசத்தார் பெண்மக்களைப் போற்றுவரோ? பெண்மக்களை வருத்து மட்டும் - அவர்களை அறியாமைச் சேற்றில் அழுத்தியிருக்கு மட்டும் - தேசம் சுதந்திரம் பெறுதென்பதை அடிக்கடி நினைவூட்டுகிறேம்.

மகாத்மாகாந்தி தம் அருமை மனைவியாரைத் தம் வழியே திருப்பியிருக்கிறார். அம்மையார் கதராடை தரிக்கிறார்; சக்கரஞ் சுழற்றுகிறார்; கதராடையில் சுயராஜ்யம் மலரும் என்னும் உண்மையை உணர்ந்திருக்கிறார். காந்தியடிகள் நாளை சிறைபுகினும், அவர்தொண்டு அவர்மனைவியார் வாயிலாக வளர்ந்துவரும். மௌலானா மகமத்அலி சிறைபுகுந்தார். அவர் மனைவி என்ன செய்கிறார்? 'கோபம் வேண்டாம்; கதராடை தரியுங்கள்; சக்கரஞ் சுழற்றுங்கள்' என்று உபதேசஞ் செய்கிறார். மௌலானா உடல் சிறையிலிருந்தாலும், அவர் உயிர், தன் தொண்டைச் செய்கிறது. மற்றும் பல தேசபக்தர்களும் தங்கள் சக்திகளுக்குச் சுதந்திர வேட்கையை எழுப்பியிருக்கிறார்கள். சரோஜனி தேவியார் விலையுயர்ந்த பட்டாடைகளை அணிந்துகொண்டிருந்தனர். இப்பொழுது தேசத்தின்பொருட்டுக் கதர்உடை தரித்துத்தேசத்தொண்டு செய்கிறார். கதர் உடை கிடையாவிடின் 'மரத்தழையைத்' தரிக்குமாறு அவர் உபதேசஞ் செய்கிறார். 'கதர் உடையில் சுயராஜ்யம் பொலிகிறது' என்ற உணர்ச்சி, காட்டுத் தீப்போல் பரவிவரும் இந்நாளில், விலையுயர்ந்த பரதேசப் பட்டாடைகளால் பெண்மக்களை அழகு செய்து களிப்புறுவோர்க்குப் பெரிதும்பிரங்காது வேறென்செய்வது? ஆண்பேய்கள், தங்கள் மாயைக் கண்ணுக்குக் களிப்பூட்டப் பரதேச ஆடைகளைப் பெண் தெய்வங்களுக்கு அணியப் புகுந்தாலும், பெண்தெய்வம் அவைகளை அணிதலாகாது.

ஆண்மக்கள், முதலாவது பெண்மக்கள் பெருமையுணர்ந்து, அவர்களைத் தெய்வமாகப் போற்றும் முறைகளைப் பயிற்சி செய்தல்வேண்டும். அவர்களை வருத்துமுறை அறவே தேசத்தைவிட் டகலல்வேண்டும். பெண்மக்களுக்குத் தேசப்பற்று ஊட்டக்கூடிய கல்வி போதித்தல் வேண்டும். பரதேச ஆடையாபரணங்களில் விருப்பஞ் செல்லாதவாறு பெண்மக்களைத் திருத்திக் காத்தல்வேண்டும். தேசச் செல்வநிலை, குடும்பச் செல்வநிலை, வீட்டுச் செல்வநிலை, நாயகன் வருவாய் முதலியவற்றை உணர்ந்து செலவழிக்கும் ஞானத்தை

ஒவ்வொரு பெண்மகளும் பெறல்வேண்டும். ஏழைப் பெண்கள், விதவைகள், அநாதைகள் இவர்கட்கென ஆசிரமங்கள் அமைக்கப்படல் வேண்டும். பல்லாற்றானும் செல்வாக்குப் பெற்றுள்ள பெண்ணுலக வளர்ச்சியை நாடி ஆணுலகம் உழைப்பதாக.

தங்களைப் போன்ற மெல்லியலார்களால் பிற தேசங்கள் முன்னேற்றமடைந்த வரலாறுகளை நம் பெண்மக்கள் உணர்வது நல்லது. தேசநலத்தை நாடி, ஆடையாபரணங்களிலுள்ள மாயப்பற்றைப் பெண்மக்கள் அறுத்துத் தள்ளுவது சிறப்பு. தேசத்துக்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்யப் பெண்மக்கள் முந்துதல்வேண்டும். இப்பொழுது சுயராஜ்யம் கதிர்முனையி லிருக்கின்றமையால், பெண்மகள் ஒவ்வொருத்தியும் சர்க்கா ஏந்திச் சுதந்தர ஒலியைக் கிளப்பவேண்டும். முற்காலத்தில் நூல் நூற்குந் தொழில் பெண்மக்களை விடுத்துப் பிரியாமலிருந்தது. அவர்கள் நூற்ற நூலால் நெய்யப்பட்ட ஆடைகள் அரசர்களையும் அழகுசெய்து வந்தன. மீண்டும் அத் தொழில்மீது பெண்மக்கள் மனஞ் செலுத்துவார்களாக.

பெண்மணிகளே ! நீங்கள் சக்திமார்கள். உங்கள்பால் எல்லாச் சக்திகளும் அடங்கியிருக்கின்றன. உங்கள் சக்திகள் உங்கள் விரோதிகளால் அடக்கப்பட்டன. உங்கள் சக்தி வெளிக் கிளம்பவேண்டிய காலம் இதுவே. சுயராஜ்யம் உங்களிடத்திலிருந்து அரும்புதல்வேண்டும். அதற்கு ஆதாரமாயுள்ள ராட்டினத்தை எடுத்துச் சுழற்றுங்கள். உங்கள் உழைப்பால் வரும் நூலால் நெய்யப்படுங் கதருடையை அணியுங்கள் ; மற்றவர்களையும் அணியுமாறு செய்யுங்கள். நீங்கள் மனங்கொண்டால் தேச முழுவதும் கதர் உடையைப் பரப்பலாம். கைராட்டினத்தைச் சுழற்றக் கூடாதென்றோ - கதர் உடையைத் தரிக்கக் கூடாதென்றோ—தந்தை கூறினும், சகோதரன் சொல்லினும், நாயகன் வேண்டினும், மற்றவர் தடுப்பினும், அவர்கள் உரைக்குஞ் செயலுக்குஞ் செவி

சாயாதேயுங்கள். கண்ணனைய நண்பர்கள் மறித்தாலும் கைராட்டினத்தை விடாதேயுங்கள்; கதர் உடையைக் கைவிடாதேயுங்கள்; சுதந்தர தேவி உங்கள் காத்தில் நிற்கிறாள்; அவளைத் தாண்டவம் புரிய விடுங்கள்; சக்திமயமான உங்களுக்கு வணக்கம். 'சர்வம் சக்திமயம் ஜகத்.'

(2–12–1921)

## இறையுளமும் இல்லறமும்

(சில குறிப்புக்கள்)

சாத்தூர்க்கு யான் புதியவன் அல்லன். ஆனால் இத் தமிழ்ச்சங்கத்துக்கு யான் புதியவன். இச்சங்க ஆண்டுவிழாவில் (25–12–24) திருவிதாங்கூர் திருவாளர் இலக்குமணப் பிள்ளை அவர்கள் தலைமையில் யான் பேசும் பேறு பெற்றதைக் குறித்து மகிழ்வெய்துகிறேன். இப்பொழுது இங்கே பேச எடுத்துக்கொண்ட பொருள் 'இறையுளமும் இல்லறமும்' என்பது.

இறை உளத்தின் நோக்கமென்னை? இல்லறத்தின் நோக்கமென்னை? இவ்விரண்டிற்குமுள்ள தொடர்பு யாது? என்று பிரித்துப் பொருளை ஆராய்வோமாயின், 'இறை உளமும் இல்லறமும்' என்பதன் உள்ளக்கிடக்கை செவ்விதிற் புலனாகும்.

இறைவன் எவன் என்பதைப்பற்றி விரித்துரைத்தல் வேண்டுவதில்லை. யாண்டும் நீக்கமின்றி உறைகின்ற ஒருவனே இறைவன். அவன் உயிர்களின் கண்களினின்றும் எல்லாவற்றையும் காண்கிறான்; செவிகளினின்றும் எல்லாவற்றையுங் கேட்கிறான். சுருங்கக்கூறின் எல்லாவற்றையும் ஆட்டுவிப்பவன் அவனே! அவனுக்குமேல் ஒரு பொருளும் இன்மையால் அவனை இறைவன் என்று உலகம் போற்றுகிறது.

இறைவன் எல்லாஞ்செய்ய வல்லவன் என்று அவன் இயல்புணர்ந்த சான்ஞேர் கூறியிருக்கிருர். இறைவனுக்கு எல்லாம்வல்ல இயல்புண்மை எதனுல் விளங்குகிறது என்பது கருதற்பாற்று. அவன் என்றுந் துன்பமில்லா இன்ப வடிவினனு யிருத்தலான், அவன்பால் எல்லாஞ் செய்யவல்ல தன்மை இயல்பாய் அமைந்து கிடக்கிறது. துன்பத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன், எல்லாஞ் செய்ய வல்லவனுகான். துன்பத்திற்குத் தோற்றக் கேடுகளுண்டு. இன்பத்திற்கோ அவையில்லை. இறைவன் இன்பம் என்பதனை 'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே' என்று மணிவாசகனுர் விளக்கியிருத்தல் காண்க.

இறைவன் இன்ப மயமாயிருப்பதனுல், உயிர்களாகிய நமக்கு என்ன பயன் என்று ஒரு வினு எழலாம். இறைவன் திருவருளையே திருமேனியாக்கொண்டு உயிர்கள் உய்யும் பொருட்டு ஆனந்தத்தாண்டவம் புரிபவன். ஆதலால் அவன் தனது இன்பத்தை உயிர்களும் நுகர்தல் வேண்டும் என்னும் உள்ளமுடையவனு யிருக்கிருன். எனவே, இறைவன்றன் உள்நோக்கு, உயிர்களின் துன்ப நீக்கத்துக்கும் இன்ப ஆக்கத்துக்கும் செந்நெறி கோலிக்கொண்டிருப்பது என்று சொல்லலாம். இனி அச்செந்நெறி யாது என்பதைச் சிறிது ஆராய்வோம். இவ்வாராய்ச்சியால் இல்லறத்தின் நோக்கம் இனிது புலனுகிவிடும்.

இல்லறமென்பது ஒருத்தியும் ஒருவனும் கூடி வாழும் வாழ்வு என்று உலகிலுள்ள எவரும் கூறுவர். ஒருத்தி ஒருவனேடு கூடிவாழும் வாழ்வு எற்றுக்கு என்று சிறிது சிந்திப்போமாயின், அஃது உயிர்களின் துன்ப நீக்கத்துக்கும் இன்ப ஆக்கத்துக்கும் உறுதுணை செய்வது என்பதை உணரலாம். இறைவனது திருவுள்ளக் கருத்தையும் இல்லறத்தின் நோக்கத்தையும் ஒருமைப்படுத்திக் காட்டுவது இச்சொற்பொழிவின் குறிக்கோள். ஆதலின், இரண்டிற்கும் உள்ள தொடர்பை முறை முறையே ஆராயவேண்டுவது அநாவசியம். அத்தொடர்பை உணர்த்த மேலே தொகையாகக் குறிப்பிட்ட

இறைவனுளம் என்பதையும் இல்லறம் என்பதையும் சிறிது விரித்துரைக்க முயல்கிறேன்.

இறைவன் உயிர்களின் துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் கருதிப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் புரிகிறான் என்று மறைகள் முழங்குகின்றன. உலகிலுள்ள பல சமயத்தாரும் படைப்பை ஒத்துக்கொள்கிறார். ஆனால் படைப்பு நிகழ்ச்சி கூறுமிடத்து ஒருவரோடொருவர் மாறுபட்டு வேறுபடுகிறார். அக் கருத்து வேற்றுமையில் கவலை செலுத்த வேண்டுவதில்லை.

ஆண்டவன், உலகு உயிர்களைப் படைக்கிறான் என்பதொன்றே ஈண்டுக் கவனிக்கற்பாற்று. ஆண்டவன் படைக்கிறான் என்பதைக் கொண்டு, இல்லாத ஒன்றை அவன் படைக்கிறானென்று கோடலாகாது. உள்ள ஒன்றையே ஆண்டவன் தோற்றுவிக்கிறான். உள்ளதற்கே தோற்றம் உண்டு.

உள்ள ஒன்றை ஆண்டவன் தோற்றுவிப்பானேன் என்னும் கேள்வி எழாமற்போகாது. ஆண்டவன் துன்பமில்லா இன்பவடிவினன் என்பது மேலே சொல்லப்பட்டது. அவ்வின்பத்தை உயிர்களுக்கு ஊட்டவே ஆண்டவன் படைப்புத் தொழிலை மேற்கொள்கிறான். உயிர்கள் அவ் வின்பப் பொருளாயின், ஆண்டவன் படைப்புத் தொழிலுக்கே இடமில்லாமற் போகுமன்றோ? உயிர்கள் இன்பப்பொருளா, துன்பப் பொருளா என்றொரு வாதம் உண்டு. அவ் வாதப் போர் நீண்டகாலமாக நிகழ்ந்துவருகிறது. அவ்வாதத்தில் ஈண்டுத் தலைப்பட யான் சிறிதும் விரும்புகிறேனில்லை. உயிர்கள் இன்பப் பொருளெனக் கூறுவோரும் விவகாரத்தில் உயிர்கட்குத் துன்பமுண்டு என்று கூறுகிறார். இவ்வுலகில் வாழும் நாம் விவகார நிலையிலிருந்து ஒன்றை ஆராயவேண்டுமேயன்றிப் பாரமார்த்திக நிலையைக் குறித்துப் பேசுவது வீண்பொழுது போக்குவதாகும். இவ்வுலகிலிருந்தே பாரமார்த்திக நிலையைப்பற்றிப் பேசுவோர் பேசுக; எழுதுவோர்

எழுதுக. இன்ப துன்ப உணர்ச்சியையுடைய சிறியேன் அப் பேச்சுக்கும் எழுத்துக்கும் சேயன். இங்நிலையிலுள்ள எனக்கு ஆண்டவன் படைப்புத் தொழில் உயிர்களின் துன்ப நீக்கத்துக்கும் இன்ப ஆக்கத்துக்கும் நிகழ்வதென்றே தோன்றுகிறது.

உடலோடு கூடும் வாழ்வு பெறுதற்கு முன்னர், உயிர் எத்தன்மையதாய் இருந்தது என்பதை விரிவாக ஆராய வேண்டுவதில்லை. 'காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல்' எனவரூஉந் தாயுமானுர் திருவாக்கு உயிர்களின் முன்னைய நிலையை அறிவுறுத்துவது காண்க. இருட்டுன்பத்தில் வீழ்ந்துகிடக்கும் உயிர்களை, அருள் இன்பத்தில் சேர்க்கவே, எல்லாம்வல்ல எம்பெருமான், உயிர்கட்குத் தநுகரண புவன போகங்களைக் கொடுக்கிறுன். இத் தநுகரண புவன போகங்கள் எற்றுக்கு? உயிர்களின் துன்பநீக்கத்திற் கல்லவோ? மாயாகாரியமாகிய தநுகரண புவன போகங்களின் வாயிலாக உயிர்கட்கு இன்ப மூட்ட இறைவன் கொண்டுள்ள திருவுளப்பான்மையை ஏழையேன் விளக்க வல்லனே?

ஆண்டவன், உயிர்களின் இன்பம் நாடி உடலோடு கூடிய வாழ்வை அவைகட்குக் கொடுக்கிறுன் என்பதை அறிஞர் பலரும் ஏற்றுக்கொள்வர். தநுகரண புவன போகங்களை இறைவன் உயிர்கட்கு எவ்வழியில் கொடுக்கிறுன் என்பதை ஏற்றுக்கொள்வதில் சிற்சில கருத்து வேற்றுமைகள் உண்டு. நூலளவில் தம் மதங்கொண்டு வாதப்போர் புரிவோர்க்கு வணக்கமொன்றே செலுத்த வல்லேன். இயற்கைக்கும் அளவைக்கும் அநுபவத்துக்கும் மாறுபட்ட கருத்து எதுவாயினும் அதை ஏற்றுக் கொள்ள என் மனம் ஒருப்படாது. இறைவன் உயிர்கள் பொருட்டு உடல்வாழ்வை எதன் வாயிலாக நல்குகிறுன் என்பதை விளக்க எவ்வளவை வேண்டும்? காட்சியளவை ஒன்றே சாலும். எனது அருமைத் தந்தையும் தாயும் ஒன்று பட்டு இல்லறம் நடத்தாதொழிந்திருப்பரேல் யான் இவ்வுல கில் தோன்றியிருப்பனே? மாயாகாரியமாகிய எனது உடலை

ஆண்டவன் என் தாய் தந்தையர் ஏற்ற இல்லற வழியான் எனக்கு நல்கியிருக்கிறான் என்பதை விளங்க உரைக்கவும் வேண்டுமோ? இவ்வாறே ஒவ்வொருவரும் தத்தம் பிறப்பு வரலாற்றை ஆராய்வாராயின், இல்லறத்தின் நோக்கம் இனிது விளங்கப்பெறுவர். உயிர்கள் படைப்பிற்கு இல்லற மல்லாத வேறோர் அறத்தை எனக்கு எவரேனும் காட்டுவாராயின், அதைப்பற்றி ஆராய்ந்து உண்மைகாண முயல்வன். இது நிற்க.

உயிர்கள் பெண் ஆண் வடிவங்களாகத் தொன்றுதொட்டுத் தோன்றி வருகின்றன. புல்முதல் மக்களீருகவுள்ள எல்லா உயிரும் பெண் ஆண் வடிவமாக இருத்தல் கண்கூடு. உயிர்கள் பெண் ஆண் வடிவமாகத் தோன்ருவிடின், பெண் ஆண் கூட்டுறவிற்கு இடம் இராது. பெண் ஆண் கூட்டுறவு இல்லையேல் உயிர்கள் எங்ஙனம் தோன்றும்? ஆண்டவன் உயிர்களை எங்ஙனம் இன்பக்கரை ஏற்றுவன்? அவன் திருநோக்கத்திற்கே இடையூறு நேரும். ஆகவே, இல்லற மென்னும் பேரறம், கடவுள் உளக்கருத்தை நிறைவேற்றும் பெருங்கருவி என்பது கவனிக்கற்பாற்று. இல்லறமில்லையேல் கடவுள் திருநோக்கம் நிறைவேறுமோ? ஆண்டவன் திருவுள்ளக் கிடக்கையை நிறைவேற்றும் இல்லறமே செந்நெறி என்க. அதைச் சிறுநெறி என்று கூறுவோர் பெரியரோ சிறியரோ என்பதை நேயர்களே தீர்மானித்தல் வேண்டும். இல்லறம் இறைவன் திருநோக்கத்தை நிறை வேற்றவல்ல இயற்கைச் செந்நெறி என்பதை இன்னும் விளக்க வேண்டுவதில்லை. இத்தகை நல்லறத்தை வெறுப்போர் செயற்கை நரகில் வீழ்வோராவர். ஆதலால், மக்கட் பிறவி எய்தினோர் ஒவ்வொருவரும் இல்லறமேற்று வாழ்தல் வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

'உயர்ந்த' வேதாந்தத்தையும் 'மேலான' துறவறத்தையும் பேசும் மகன், தாய் தந்தையர் உதவியின்றித் தான் எவ்விடத்தினின்றும் முளைத்தான் என்பதை ஆராய்ந்து பார்ப்பானாக. தாய் தந்தையர் வாயிலாக உடல் வாழ்வு பெற்று, இவ்வுலகிலுள்ள இன்பங்களைத் துய்த்துப், பின்னை மேலாம்பதவி

ளய்த முயலும் இச்செம்மகன், தன்னைப்போல் ஏனைய உயிர்களும் உடல் வாழ்வு பெற்று, இவ்வுலக இன்பந் துய்த்துப் பின்னைப் பெரும் பதவி எய்த, துணைநிற்க வேண்டுமா? வேண்டாமா?

ஒருவன் மனைவியோடு கூடி வாழாமையான், சில உயிர்கள் துன்ப நீக்கத்துக்கே இடம்பெறுதொழிகின்றன. அப்பாவம் யாரைச் சாரும்? இல்லறத்தை வெறுத்த சிறியோனையன்றோ சாரும்? மேலும் இவன் கடவுள் நியதிக்கு மாறுபட்டு நடக்கிறவனும் ஆகிறான். எப்படி? மனிதப்பிறவி தாங்கிய பயனால் பெறத்தக்க இன்பத்தை இவன் நுகர்கிறான். இதேபோல இன்னும் உடல் தாங்காது காரிட்ட ஆணவத்தில் கட்டுப்பட்டுக் கிடக்கும் உயிர்களும் அவ்வின்பத்தைநுகர்தல் வேண்டாமா? இல்லறத்தை ஏலாத இவன் அந்நுகர்ச்சியைத் தகைபவனாகிறான். இவன் இறைவன் நியதிவழி எங்ஙனம் நிற்பவனாவன்? இல்லறத்தை ஏலாத ஒருவனை, இறைவன் திருவுளக் கருத்தை நிறைவேற்றாதவன் என்றும், உடல்வாழ்வு பெறாத உயிர்களை வருத்துகிறவன் என்றும், வன்கணாளன் என்றும், தன்னலத்தன் என்றும் யான் பறைசாற்றிக் கூறுவேன்; அதனால் ஒருவேளை பாவம் விளையுமானால், அதையும் ஏற்கச் சித்தமா யிருக்கிறேன்.

இல்லறத்தால் பெறற்கரிய பேறு எவ்வாறு பெறுவது என்று சிலர் கேட்கின்றனர். ஆணவச் சிறையில் கட்டுப்பட்டுக் கிடக்கும் உயிர்களின் விடுதலைக்கென ஏற்பட்ட நல்லறமே இல்லறம் என்பதை மேலே எடுத்துக் காட்டியுள்ளேன். இவ்வுண்மையைச் சிறிது விரித்துக்கூற விரும்புகிறேன். ஒருவன் இளைஞனா யிருக்கும்போது, அவன் பெரிதும் தன்னைத் தானே நேசிக்கிறான். இஃது உலக இயல்பு. அவனே பின்னை மனத்திற்கினியந்த இல்லாளோடு கூடிவாழும் மனையறத்தை மேற்கொள்ளும்போது, தன்னைத் தான் எவ்வாறு நேசித்து வந்தானோ, அவ்வாறே தன்னில்லக் கிழத்தியையும் நேசிக்கத் தொடங்குகிறான். ஓருயிரிடத்துக்

கட்டுப்பட்டுக் கிடந்த அன்பு, இப்பொழுது மற்றோருயிரிடத்தும் பாய்ந்து நிற்கிறது. பின்னை இருவருஞ் சேர்ந்து சேய்களை ஈனுகிறார். இவ்விருவர் மாட்டும் உலவிக் கொண்டிருந்த அன்பு, இப்பொழுது சேய்களிடத்தும் புகுந்து பாய்வது காணலாம். உலகில் ஒருவன் மறவினை நிகழ்த்தும்போது, அவனைப் பார்த்து உலகோர் என்ன சொல்கிறார் ? 'அடா ! பிள்ளை பெறாத பாவி !' என்றன்றோ சொல்கிறார். இதன் பொருளென்னை ? பிள்ளை பெறாதவன் அன்பில்லாதவன் என்பதன்றோ ? இதனால் அன்புக்கு ஊற்றாயிருப்பது இல்லறமென்பது நனி விளங்குகிறது. தன் மாட்டும், மனைவிமாட்டும், மக்கள் மாட்டும் கட்டுப்பட்டுக் கிடக்கும் அன்பை, அவ்வந்நிலையில் ஒருவன் ஒடுக்கிக்கொள்வானாயின், அவன் இன்பப்பேற்றை எய்துவோன் ஆகான். ஆனால் இல்வாழ்வும் பிள்ளைப்பேறும் பிறவும் ஒருவனது அன்பைக் கட்டுப்படுத்துவதில்லை. அவை, பிறவுயிர்களிடத்தும் அன்பு செலுத்துமாறு தூண்டிக்கொண்டே யிருக்கும். இஃது இல்லறத்தின் இயல்பு.

துறவறம் என்பதென்னை ? இதை விரிக்கப் புகின் சொற்பொழிவு நீளும். சுருங்கச் சொல்ல முயல்கிறேன். இல்லறமே துறவறம். இல்லறத்தில் பல கூறுகளுண்டு. அவைகளின் முடிந்த ஒன்று துறவு. துறவு இல்லறத்தின் முழுநிலை (Perfection) என்க. இல்லறத்தின் முழுநிலை எது ? எல்லா உயிரையும் தன்னைப்போலக் கருதி முழு அன்பில் உறைந்து நிற்பது இல்லறத்தின் முழுநிலையாகும். தன்னைப் போலவும், தன் மனைவி மக்கள் உற்றார் உறவினரைப் போலவும் மற்ற உயிர்களையும் நேசிக்கிறவன் எவனோ அவனே இல்லறத்தின் முழுநிலை கண்டவன். அவனே துறவறத்தானவன். எல்லாவற்றையும் வெறுத்துக் காட்டுக்கு ஓடுகிறவன் துறவறத்தானாகான்.

துறவறமென்பது உலகை விடுத்து உயர உயரப் பாய்வதன்று. எல்லா வுயிர்களையும் தன்னைப்போல நேசிக்கும் ஒரு பெரும் நிலையே துறவாகும். இந்நிலைக்குத் துணைபுரியவல்ல

இல்லறத்தையா வெறுப்பது ? திருவள்ளுவர் திருக்குறளை நன்காராய்ந்தால் இவ்வுண்மை காணலாம். அன்னார், 'அழுக்கா றவாவெகுளி இன்னுச்சொல் நான்கும் - இழுக்கா வியன்ற தறம்' என்றும்—'மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்தறன்' என்றும்—அற இயல்பு கூறி, மனமாசகற்ற முதற்கண் இல்லறத்தைக் குறித்துப் பின்னை அதற்குரிய வாழ்க்கைத் துணை நலத்தை அமைத்து, அதற்குமேல் மக்கட்பேற்றைப் பெய்து, பின்னே அன்புடைமையை வகுத்திருத்தல் காண்க; அன்புடைமை வளர்ந்து வளர்ந்து முடிவில் எல்லா வுயிரை யும் நேசிக்கும் பேரறநிலை பெறுவிப்பதைத் துறவற இய லால் விளக்கியிருப்பதைக் கூர்ந்து நோக்கல் வேண்டும். இம் முறையை ஈண்டு விரிக்கிற் பெருகும். இல்லறம், முழு அன்பு வளர்ச்சிக்கு ஊற்முயிருக்கும் உயர்வுடைய தென்பதே இங் குக் கவனிக்கற்பாலது. படிப்படியாக அன்பு வளர வளர அதற்கேற்றபடி அறியாமை தேய்ந்து தேய்ந்து அகலும். அன்பு வளர்ச்சிக்கும் அறியாமைத் தேய்வுக்கும் காரணமா யுள்ள இல்லறத்தை இழிவாகக் கருதுவது பெரும் பாவம்.

உண்மையாகப் பிறர்நலம் நாடும் எவனும் உலகை வெறுத்துக் காட்டுக்கு ஓடான். காட்டுக்கு ஓடுகிறவன் தன்னலத்தான் என்பதை நேயர்கட்கு விளக்க வேண்டுவ தில்லை. தன்னலம் நாடிக் காட்டுக்கு ஓடுவோன் எப்படி உய்ந்துவிடுவான் ? அவன் பெண்ணோடு வாழும் பேற்றை இழந்தமையால், அவன் உள்ளத்தைப் பெண்ணுசை முதலிய நசைகள் அலைத்துக்கொண்டே யிருக்கும். அவைகளால் குலைவுறும் அன்னுன் மறைவாகக் கூடாவொழுக்கத்தை மேற்கொள்ளும் அநியாய வாழ்வில் தலைப்படுவோன் ஆகிறுன் ; இங்கே பெண்ணை வெறுத்த பாவத்தை அனு பவிக்கிறுன் பாவி !

சிலர் தீயொழுக்கத்தின்பாற்படாது வேறு வழிகளில் பெண்ணின்பத்தை வெறுக்க முயல்கிறுர். அவ்வழி கள் : மருந்துண்ணல், இயற்கைக்கு மாறுபட்ட செயல் கள் முதலியனவாம். தன்பால் இயற்கையாக எழும் இன்ப உணர்வை அழிக்க மருந்துண்ணலும் - வேறு பல

செயற்கை வினைகள் நிகழ்த்தலும் - மகன் வாழ்வைக் கெடுத்து, விரைவில் அவனைக் காலன் உலகிற்கு அனுப்பும். பெண்ணுடன் கூடிவாழும் ஒருவன் நோயின்றி வாழ்வதோடு கூர்த்த மதியுடையனாயும் வாழ்வன். ஆண், பெண்ணுக்கென வும் - பெண், ஆணுக்கெனவும் - ஏனைய இயற்கைப் பொருள் களைப்போலக் கடவுளால் படைக்கப்பட்டனவாம். ஒரு வரோடொருவர் கூடி இன்ப வாழ்வை நடாத்துதற்கு ஏற்ற வாறு இயற்கை அமைப்புகளும் ஒழுங்குபடுத்தப்பட் டிருக் கின்றன. அவ் வியற்கை ஒழுங்கு முறைக்கு மாறுபட்டு வாழ்கிறவன் உடல் சாக்கடைபோல் நாறும். அன்பு வளர்ச் சிக்கு இல்லறத்தை ஏற்று, உயிர்களை ஈன்று, அவைகளின் துன்பத்தைப்போக்கி, இம்மை மறுமைப்பயன்களை அடைய முயலும் ஒருவனே இறைவன் நோக்கத்தை நிறைவேற்றும் அடியவனாவன்.

நமது நாட்டில் உலகை வெறுத்து ஓடும் துறவு என்ப தொன்று, பின்னைப் பௌத்த சமணசமயக் குரவன்மார் களால் தோற்றுவிக்கப்பட்டது. பண்டைநாளில் பெண்ணை வெறுக்கும் போலித் துறவு, நமது தமிழ் நாட்டிடை நில வியதாகத் தெரியவில்லை. பெண்ணை வெறுக்கும் ஒருநெறி, தமிழ்நாட்டுக்கு உரியதாயின், தமிழ்நாட்டில் அகப்பொரு ளியல் தோன்றியிராது.

அகப்பொருளும் மக்கள் வாழ்வில் ஊடுருவி நீண்ட காலம் நிற்கவில்லை. அதன் நுட்பம் நாளடைவில் மக்கட்குப் புலனாகா தொழிந்தது. அதற்குக் காரணங்கள் பலவுள. அவைகளுள் சிறந்தது, பெண் இன்பத்தையும் - இயற்கை அழகையும்-வெறுத்தல்வேண்டும் என்றெழுந்த போலிஞான உணர்வாகும். அவ்வுணர்வு, நமது நாட்டின் இயற்கை ஆராய்ச்சியை - இலக்கியப் பெருக்கை - பாச்சுவையை - வேறுபல இன்பத்துறைகளை - இறந்துபடச் செய்தது.

இல்லறத்திற்கு உயிர்போன்ற பெண்ணை இழிவாகக் கருதும் மடமை, நாட்டைவிட்டு என்று அகலுமோ அன்றே நாட்டிற்கு நலம் விளையும். உயிர்களின் தோற்றத்துக்கு

நிலைக்களனுயுள்ள தாயையா குறைகூறுவது? ஒரு பெரியார், 'திங்கள், மலர், பாட்டு, பெண், கிறிஸ்து ஆகிய இவ்வைந்தும் தம்முள்ளத்திற்கு இன்பூட்டும் பொருள்கள்' எனக் கூறியுள்ளார். யான் இவ்வைந்தும் பெண்ணே என்று சொல்வேன். அழகிய திங்களையும், செழிய மலரையும், இன்பப் பாட்டையும், அன்புக் கிறிஸ்துவையும் பெண்தெய்வத்தினிடத்தில் காண்கிறேன். அத்தகைப் பெண்தெய்வத்தைப் பேயெனவும், நாயெனவும், மலமெனவும் பேசுவதைக் கேட்பதே பெரும் பாவம். பெண்ணைத் தெய்வமாகப் போற்றுவதினுஞ் சிறந்த ஞானம் வேறுண்டுளதோ? பெண்ணினிடத்து விலங்கின்பம் இருப்பதாகக் கருதி, அவ்வழியில் அறிவைச் செலுத்துகிறவன் மனித நிலையினின்றும் இழிந்தவனுவன். உண்மையாகப் பெண்ணின்பால் குற்றமில்லை. ஆண்மகன் உள்ளத்துள்ள குற்றம் பெண்ணைச் சிறுமையாகக் கருதச் செய்கிறது. குற்றமிலா ஆண்மகனுக்குப் பெண், தெய்வமாகத் தோன்றுவள்.

பெண் பேரின்பப் பொருள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. காதல் நுட்பம் தேர்ந்தோர்க்கு இவ்வுண்மை இனிது புலனுகும். காதற்றன்மை புணராக் காமுகரைப்பற்றி ஈண்டு ஒன்றுங் கழறவேண்டுவதில்லை. இப்பாவிகள் உள்ள மட்டும் பெண் உலகுக்குச் சிறுமையே விளைந்துகொண்டிருக்கும்; தீயொழுக்கமும் பெருகிக்கொண்டிருக்கும். பண்டைக்காலத்தில் காதல் மணம் நிகழ்ந்து வந்தமையான், தீயொழுக்கமும் பெருகவில்லை; பெண்ணுலகுக்குஞ் சிறுமை நேரவில்லை. காதலின்பம் மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தி வந்தது.

காதலற்ற காமத்தில் இன்பம் உண்டோ? இன்பம் என்பது காம உணர்வைக் கடந்து நிற்பது; காதலில் படிந்து கிடப்பது. 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் - ஒண்டொடி கண்ணே யுள' என்னவரூஉம் திருவள்ளுவர் செம்மொழியின் பொருளை ஓர்க. ஓரின், காதலின்பத்தின் பெற்றி செவ்விதிற் புலப்படும். ஆண்டவனோடு நட்புக் கிழமை பூண்டொழுகிய வன்தொண்டப் பெருந்தகையாரும்

'பண்மயத்த மொழிப்பாவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்' என்று தமக்கும் தமது இன்னுயிர்க் காதல் கிழத்திமார்க்கும் உற்றிருந்த நேயம் கடவுள் நேயம் என்பதை விளங்க ஓதியுள்ளார். காதல் மணம் இறந்துபட்டுள்ள இந்நாளில், பெண்ணினிடத்துள்ள கடவுட்டுன்மையை அறிதல் அரிதே.

பழந்தமிழ்மக்கள், அறம் - பொருள் - இன்பம் என்னும் மூவகைப் பேற்றையே அடைய முயன்று வந்தார்கள். பின்னை மக்கள் இயற்கை வாழ்வை விடுத்துச் செயற்கை வாழ்வில் தலைப்பட்ட நாள்தொட்டு, அவர்கள் மூன்றாவதாய இன்பத்தைச் சிற்றின்பமெனவும் பேரின்பமெனவும் இருகூறு படுத்தினார்கள். பண்டைநாளில் இன்பம் என்னும் ஒன்றில், சிற்றின்பம் - பேரின்பம் என்னும் இரண்டும் அடங்கியிருந்தன. பின்னாளில் இரண்டாகப் பிரிந்த ஓரின்பத்தேன் பெண் வாயிலாகப் பிலிற்றிக்கொண்டிருந்தது. இத்துணைப் பெருமை வாய்ந்த பெண்ணையா வெறுப்பது? பழிப்பது? அறியாமை! அறியாமை!! அகப்பொருள் தோன்றப் பெற்ற தமிழ்நாடே! நீயுமா பெண்ணைப் பழிக்கின்றாய்? நினது இயல்பு அஃதன்று.

காலநிலை தேசநிலை முதலிய நிலைகளை நோக்கி, 'இல்லற வாழ்வு வேண்டாம்' என்று சிற்சில அறிஞர் அவ்வப்போது கூறுவதுண்டு. அக்கூற்றை அழியா அறநெறியாகக் கோடல் ஆகாது. மனைவியோடு கூடி வாழாத ஒரு கூட்டத்தார் சேவை வேண்டப்படும்போது, அறிஞர் இல்லறம் ஏலாது பிறர்க்கு உழைக்கப்புகுவது வழக்கம். அப்பெரியோர், பிறர் நலம் நாடி, பெண்ணோடு வாழும் வாழ்வைத் துறப்பதால் கேடு நேரிடாது. அவர் தீயொழுக்கத்திலும் வீழ்ந்து இடர்ப்படார். இந்நாளில் மகாத்மா காந்தி மணவினை வேண்டாமென்று சொல்கிறார். எக்காரணம் பற்றி அவர் அவ்வாறு சொல்கிறார் என்பதை ஆராய்தல் வேண்டும். கடவுள் திருவுள்ளக் கருத்துக்கு மாறுபட்டு நின்றுதல், பெண்ணைப் பழித்தாதல் காந்தியடிகள் அவ்வாறு கூறுகின்றாரில்லை. நாடு உரிமை யிழந்து வறுமையாம் சிறுமைக் குழியில்

வீழ்ந்து இடுக்கணுறும் இவ்வேளையில், குழந்தைகளைப் பெற்று அவைகளைப் பாதுகாத்து அறவழியில் வளர்க்கப் போதிய பொருள் வருவாயின்றி அல்லற்படுவதை நிறுத்த வேண்டி, இரக்க மேலீட்டான், மணவினை வேண்டாமென்று அடிகள் அறைகிறார். காலநிலை நோக்கி, ஒரு பெரியார் வெளியிடும் கருத்தை, என்றும் நிலைபேறாக நிலவும் அழியா மூலக் கருத்தாகக் கொள்ளுதல் தவறு. உரிமைப்போருக்கு எப்பற்றுமில்லா இளைஞரைப் பண்படுத்தவும், நாட்டில் சின்னாள் மணவினை நிறுத்தப்படல் வேண்டுமென அடிகள் சொல்கிறார். காலநிலைக்கு ஏற்றவாறு அடிகள் பகர்ந்த அறவுரையைப் பெண்ணை என்றும் பழித்துக்கூறும் பாவிகள் ஆண்டு, உலகை ஏமாற்றலாகாது.

இதுபோழ்து உலகுபுகழ் கவியரசரும், இந்திய மணியும், வங்கச் செல்வமுமாகிய கவிச்சக்கரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர் யாத்துள்ள பாக்களின் கருத்துக்கள், பழந் தமிழ் மக்களின் இன்ப வாழ்வை நினைவூட்டுகின்றன. தாகூர் எதையும் வெறுக்குமாறு அறிவுறுத்துகிறாரில்லை ; எதையும் பொய்யென்று புகல்கிறாரில்லை; எல்லாவற்றையும் இறைவன் வடிவமாகக் கொள்ளுமாறு கூறுகிறார். அவரது போதனை இந்தியாவைப் பழைய நிலைக்குக் கொண்டுவரும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இல்லறத்தை வெறுக்குங் கூட்டத்தாரும், அவரொழுகும் நூல்களும் பெருகப் பெருக இன்பநெறி இன்னதென்றே தெரியாமற் போகும். இந்நாளில் ஞானநூல்களெனச் சொல்லப்படும் சில நூல்களை வாசித்ததும், மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை என்னும் மூவாசையைத் துறக்க வேண்டுமென்றும், வேதாந்த வீட்டை நாடவேண்டு மென்றும் ஊராருக்குச் சொல்லித், தாங்கள் மாத்திரம் வயிறார உண்டு, களியாடல்களில் மூழ்கி, எல்லாம் கடவுள் மயம் என்று கூறித் தூர்த்தர்களாகத் திரியும் சகோதரர்களுக்கு இரங்குகிறேன். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் போலித் துறவறம் நுழைந்து, நமது ஊக்கத்தை - ஒழுக்கத்தை - உறுதியைக் - குலைத்து வருகிறது.

வெறுப்பு என்னும் சொல்லே நமது நாட்டைக் கெடுத்து விட்டது. எதையும் ஆண்டவன் அன்பு வடிவாக நோக்கினால் வெறுக்கத்தக்கது ஒன்றிருக்குமோ? ரவீந்திரநாத் தாகூர் இவ்வுண்மை உணர்ந்தே வெறுப்பை வெறுக்குமாறு கூறுகிறார். அவர் நூல்களை நம் நாட்டார் பயின்று வருவாராயின், பழைய இல்லறநெறி மீண்டும் புத்துயிர் பெறுமென்பது நிச்சயம்.

வெறுத்தல் - துறத்தல் என்பன, இலை தழை அரும்பு மலர் காய் கனி இல்லா வற்றல் மரம்போல் தோன்றுகின்றன. ஆதலால் இனி வெறுத்தல், துறத்தல் என்பன சிறுவருள்ளத்தில் பதியாதவாறு காக்கவேண்டுவது தாய் தந்தையர் கடமை. கல்விபயின்று, தொழில் மேற்கொண்டு, அறவழியில் பொருளீட்டி, இல்லறமேற்று, இறைவன் திருவுள்ளக் கருத்தை நிறைவேற்ற இயலாத சோம்பர்கள், பிழைக்கும் வழி தெரியாமையாலும், 'மனைவிமக்கள் பொருட்டு நாம் ஏன் உழைத்தல் வேண்டும் என்னுந் தீய எண்ணத்தாலும், மொட்டையடித்தோ சடைவளர்த்தோ துவராடை புனைந்தோ 'சந்யாச' வேடந்தாங்கித் திரியும் தீயொழுக்கம் நாட்டில் பல இடங்களில் பரவியிருக்கிறது. ஒன்று இல்லறமேற்று அன்பு நெறி வளர்த்தல்வேண்டும்; அல்லது அவ்வற மேற்கொள்ளாது உலகுய்யுநெறி பற்றி ஒழுகுதல்வேண்டும். இவ்விரண்டுமின்றிச் சோம்பேறிகளாகத் திரிந்து கூடாவொழுக்கத்தில் தலைப்பட்டுத் தீநெறி வளர்த்துவரும் போலிச் சந்யாசிகளையும் அவர்கள் போதனைகளையும் ஏற்றுக்கொள்ள எவரும் ஒருப்படலாகாது.

நமது இந்திய நாட்டில் ஐம்பது லட்சம் சோம்பேறிச் சந்யாசிகள் திரிகிறார்களாம். இவர்களுள் கள்ளர் பலர்; குடியர் பலர்; கொலைஞர் பலர். இவர்கள் எத்தனை இல்லறத்தார் பொருளை நேர்வழியிலும் வேறுவழியிலும் பறித்துவருகிறாரென்பது நாட்டார்க்கு நன்கு தெரியும். இக்கூட்டத்தவருள் சிறிது கற்றவராயிருப்பவர், தமது சோம்பற் கூட்டத்தார் பிழைப்புக்கெனச் சில போலி நூல்களை எழுதி வெளியிடுகிறார். அந்நூல்கள், கல்வியில்லா ஏழைமக்களை எவ்வெவ்

வழியில் ஏமாற்றுகின்றன என்பதை விரிக்கிற் பெருகும். இக்கூட்டம் பெருகப் பெருக நாடு பலவழியிலும் இழிநிலை எய்தி இடருறுமென்பது திண்ணம். இறைவன் திருவுளக் கருத்துக்கு மாறுபட்டுத் திரியும் இவ்வினத்தார், ஒருவித நாத்திகத்தை வளர்த்து வருகிறாரென்று கூறலாம். இன்னவர்க்குத் துணைபுரிவது இறைவனை அவமதிப்பதாகும்.

இனித் தமிழ்மக்கள், பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து அவைகளுட் போந்துள்ள இல்லற மாண்பையும் பெண்ணின் பெருந்தகைமையையும் பழையபடி நாட்டிற் பரப்பக் காப்புக் கட்டி உழைப்பார்களாக; உழைத்துவரின், இறைவன் உளமும் இல்லறமும், இரண்டிற்குமுள்ள அன்புத் தொடர்பும் நனிவிளங்கும். நாம் பயிலும் கல்வியும், நினைக்கும் நினைப்பும், பேசும் பேச்சும், எழுதும் எழுத்தும், செய்யும் செயலும் எல்லாம் அவ்வன்புத் தொடர்பை உணர்த்துவனவா யிருத்தல் வேண்டும்.

இவ்வுலகை வெம்மை தண்மை என்னும் இரண்டும் இயக்கி வருகின்றன. வெம்மை ஆணுக்கு அறிகுறி; தண்மை பெண்ணுக்கு அறிகுறி. இயற்கைநிலை இவ்வாறாகத் தண்மையாம் பெண்ணை ஏனோ வெறுத்தல் வேண்டும்? இனிய அமிழ்து பொழியுந் திங்களை வெறுப்போர் யாவர்? உடலமைப்பில் ஊறுடையாரே அவ்வெண்ணிலவை வெறுப்பர். அதுபோல உடலில் உரமில்லாதாரும், நரம்பு தளரப்பெற்றோரும், நோய்வாய்ப்பட்டோரும், தீயொழுக்கத்தால் உடல் வளத்தைச் செகுத்துக்கொண்டோரும், இன்னவரன்ன பிறரும் அழகுறையும் இன்பத் தெய்வமாகிய பெண்ணை வெறுத்துக் கூறுவர். இவர்கள் சபிக்கப்பட்டவர்களென்று அறிஞர் கூறுவர்.

உலகில் பிறப்பது எற்றுக்கு? பெண்ணோடு கூடிப் பேரின்பம் துய்ப்பதற்கன்றோ? பெண்ணை வாழ்க்கைத்துணை நலனாக்கொண்ட இல்லறத்தை ஏற்றுப் போற்றாதார் யாரே? 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற் — போஒய்ப் பெறுவ தெவன்' என்று திருவள்ளுவ நாயனா

திருவாய் மலர்ந்திருப்பதைக் காண்க. ஔவையார் மிகச் சுருங்கிய உரையால் 'இல்லற மல்லது நல்லற மன்று' என்று கூறிப் போந்தார். இல்லறமல்லாத அறம் நல்லறமாமோ? இல்லறமே இயற்கை அறம்; மற்றையது செயற்கை அறம்.

அன்பர்களே! உங்கட்கு இயற்கைவேண்டுமா? செயற்கை வேண்டுமா? இன்பம் வேண்டுமா? துன்பம் வேண்டுமா? இன்பம் வேண்டுமேல் இயற்கையை விரும்புங்கள்; துன்பம் வேண்டுமேல் மற்றொன்றை விரும்புங்கள்; பெறற்கரிய மக்கட்பிறவி தாங்கி ஏனோ செயற்கைத் துன்பத்தில் விழுந்து வருந்தல் வேண்டும்? இயற்கைக்குரிய இல்லறத்தில் இறங்குங்கள்; அஃதே இறை உளம் என்பதை உணருங்கள்; இல்லறமில்லையேல் எத்துணை உயிர்கள் துன்பத்தில் வீழ்ந்து கிடக்கும்? உயிர்களின் துன்பத்தை நீக்கவல்ல இல்லறத்தை—இயற்கை யறத்தை — ஓம்ப எழுங்கள்! எழுங்கள்!! அவ்வறத்துக்குரிய பெண்மக்களைப் போற்றுங்கள்; அவர்களே உங்கள் உடல் பொருள் ஆவி எல்லாம்! எல்லாம்! நீங்கள் பெண்ணைப் போற்றிய நாளில் உங்கள் நாடு எந்நிலையிலிருந்தது? உங்கள் மொழி எந்நிலையிலிருந்தது? உங்கள் சமயம் எந்நிலையிலிருந்தது? இப்பொழுது இவைகள் எந்நிலையிலிருக்கின்றன? நீங்கள் பெண்மக்களை அடிமைக ளாக்கிவிட்டீர்கள். நீங்கள் அடிமைகளானீர்கள். உங்கள் நாடு அடிமைக் குழியில் விழுந்துவிட்டது. நீங்கள் மீண்டும் துன்பக்கடல் கடந்து இன்பக்கரை ஏறவேண்டுமானால் பெண்ணைப் போற்றுங்கள்; பெண்ணுக்குப் பெருமை கொடுங்கள்; அன்பு நெறியாகிய இல்லறத்தை ஓம்புங்கள்; இல்லறத்திற்குரிய அகப்பொருளை ஆராயுங்கள்; தமிழ் மக்களே! தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் படியுங்கள். இறையனாரகப் பொருளை வாசியுங்கள்; மணிவாசகனார் திருக்கோவையாரை ஓதுங்கள்; இறை உளத்தை அறியலாம்; இல்லறத்தை உணரலாம்; இரண்டிற்கும் உள்ள தொடர்பை—அதற்குரிய பெண்ணின் பெருமையை—அறியலாம். (28–8–1925, 4–9–1925)

# இவ்வுலக வாழ்வு

"இப்பரிய இவ்வுலகில் என்னை இனி ஏச்சு
என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு"

—இராமலிங்க சுவாமிகள்

இவ்வுலக வாழ்வைப்பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. அக் கருத்துக்களை வெளியிட்ட பலரையும் உலகம் பெரியாரென்றே போற்றிக்கொண்டிருக்கிறது. பெரியார் கருத்துக்கள் ஏன் பலதிறத்தனவாயிருத்தல் வேண்டும்?

காலதேசவர்த்தமான நிலைகளை ஒட்டியே பெரியோர் பெரிதுங் கருத்துக்களை வெளியிடுவர். அவர் கருத்துக்களின் பொருள் நுட்பத்தை ஆராய்ந்து உணர்தற்கு முன்னர், அக் கருத்துக்கள் பிறந்த காலதேசவர்த்தமான நிலைகளை ஓர்ந்துணர முயலல்வேண்டும். அம்முயற்சியில் தலைப்படாது, பெரியோர் கருத்துக்களை உணரப் புகுவோர்க்குப் பொருள் நுட்பம் பொருந்திய முறையில் புலப்படுதல் அரிது.

இவ்வுலக வாழ்வைக் குறித்துப் பிறந்த கருத்துக்கள் எண்ணில. அவைகளை, இக்கட்டுரையின் நோக்கிற் கேற்ப முக்கூறுபடுத்திக் கொள்கிறேன். ஒன்று இவ்வுலக வாழ்வு பொய்யென்பது; மற்றொன்று அவ்வாழ்வு மெய்யென்பது; இன்னொன்று அது பொய்யும் மெய்யும் விரவிய ஒன்றென்பது. இம் மூன்றன்கண்ணும் பொருட் செறிவு உண்டு. அச்செறிவு அவ்வக் காலதேச வர்த்தமான சரித்திர உலகில் நின்று பார்ப்போர்க்குப் புலனாதல் ஒருதலை.

இவ்வுலக வாழ்வே மெய்யென்று மக்கள் கொண்ட போது, பெரியோர் இவ்வுலக வாழ்வு பொய்யென்று கூறினர். 'இவ்வுலக வாழ்வா அது பொய் பொய்' என்று உயிர்கள் எண்ணிய வேளையில், அதனை மெய் மெய் யென்று பெரியோர் வலியுறுத்தினர். இவ்விரு கருத்துக்களும்

உலகில் பரவிய பின்னைச் சிலர் இவ்வுலக வாழ்வு ஒரு நிலையில் பொய்யென்றும், மற்றொரு நிலையில் மெய்யென்றும் அறிவுறுத்தலானார்.

'முற்காலக் கருத்துக்கள் வேண்டுவதில்லை; தற்கால நிலையில் இவ்வுலக வாழ்வை எவ்வாறாகக் கொள்வது பொருத்தம்' என்னுங் கேள்வி பிறத்தல் இயல்பு. இதற்குத் தற்போதைய உலகை இரு கூறிட்டுக்கொள்வது ஏற்புடைத்தாகும். அவ் விருகூறு மேல்நாடு கீழ்நாடு என்பன.

இப்பொழுது மேல்நாடு இவ்வுலக வாழ்வை எங்ஙனங் கொண்டொழுகுகிறது? கீழ்நாடு அதனை எவ்வாறு கொண்டிருக்கிறது? பொதுப்பட நோக்கின், அந்நாடு இவ்வுலக வாழ்வை நிலைபேறாகவும், இந்நாடு அவ்வாழ்வை நிலையாமையாகவுங் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. சிறப்பு முறையில் சிற்சில இடங்களில் மாறுபட்ட ஒழுக்கமு மிருக்கலாம். பொதுமைக்குரிய பெரும்பான்மையே ஈண்டுக் கோடற்பாற்று.

இவ்வேளையில் மேல்நாட்டிற்கு இவ்வுலக வாழ்வு பொய்யென்னும் அறிவுறுத்தலும், கீழ்நாட்டிற்கு அது மெய்யென்னும் அறிவுறுத்தலும் வேண்டற்பாலன என்று சொல்வது நலன். உலக ஆசையைப் பெருக்குதலைத் தனக்குரிய வாழ்வு முயற்சியாக மேல்நாடு கொண்டிருக்கிறது. கீழ்நாடோ, 'அப்பா ஆசையை விடு; இவ்வுலகம் நிலையுதலில்லாதது; எல்லாம் ஊழ்வழி நடக்கும்' என்று உலக ஆசையைத் துறத்தலில் பற்றுக்கொண்டு கிடக்கிறது. இம் மாறுபட்ட கொள்கைக்குத் தட்ப வெப்ப நிலையைக் காரணமாகச் சில அறிஞர் கூறுகிறார். இக்கூற்று மறுத்தற்குரியதுமன்று; முற்றுங் கோடற்குரியதுமன்று. அதனை 'ஓரோவழி' என்னும் நியாய முறையில் கொள்ளலாம்.

மேல்நாடு, 'ஆசையை வளர்த்தல்' என்னும் பொருளாதாரத் தத்துவத்தை அடிப்படையாகத் தன்வாழ்க்கையில் கொண்டிருக்கிறது. இதன் விரிவை மேல்நாட்டுப் பொருளாதார நூல்களிற் பரக்கக் காணலாம். கீழ்நாடோ 'ஆசை

யைத் தேய்த்தல் ' என்னும் வேதாந்தத்தைத் தன் வாழ்வின் அடிப்படையில் கொண்டிருக்கிறது. இவ்விரு நாடுஞ் சேர்ந்த உலகம் ஒன்றுபடல் வேண்டும். என் செய்வது ? இயற்கை அன்னை இதற்கு வழிகோலிக் கொண்டிருக்கிறாள்.

மேல்நாடு ' ஆசையைப் பெருக்கல் ' என்பதைக் கொண்டமையான், அங்கே ஆசை, இயந்திரங்களாய், தொழிற்சாலைகளாய், வாணிபங்களாய், இவைகட்கு ஊற்றாயுள்ள பொறாமைகளாய், போர்களாய், கொலைகளாய், நாடுகளைக் கவர்வதாய், பிறவாய்ப் பரிணமித்துப் பெருகிப் பெருகி எங்கும் வெள்ளக்காடாய்விட்டது. கீழ்நாடு ' ஆசையைத் தேய்த்தல் ' என்பதைக் கொண்டமையான், சோம்பற்பெருக்கில் அழுந்தி அயர்ந்து, மேல்நாட்டு வெள்ளப்பெருக்கிற்கும் இடந்தரலாயிற்று. இதனால் கீழ்நாடு அடிமைப்பட்டு விட்டது. இவ்விருநாடுஞ் சேர்ந்த உலகை ஒழுங்குபடுத்த வேண்டுவது இயற்கை அன்னையின் கடன்.

இயற்கை அன்னை, தன் கடனாற்றத் துவங்கியிருக்கிறாள். மேல்நாட்டில் முதலாளி தொழிலாளி போராட்டம் தோன்றியிருக்கிறது. கீழ்நாட்டில் உரிமையில் விழிப்பும், அடிமையில் வெறுப்புந் தோன்றியிருக்கின்றன. இவ்விரண்டிற்குங் காரணமாக நின்றது, நான்கு ஆண்டு இடையறாது நடைபெற்ற ஐரோப்பாப் போரேயாகும். அப்போர் இயற்கை அன்னையின் ஆணையால் பிறந்தது என்று கூறல் மிகையாகாது.

உலகம் வரம்புகடந்த நடக்கையில் வீழ்ந்து நெளியும் வேளையில் அதைச் செப்பஞ்செய்ய இயற்கை அன்னை மறக் கருணை பொழிவது வழக்கம். எரிமலைகளும், புயல்களும், கொடுங் கொடும் நோய்களும், பெரும் பெரும் போர்களும், இன்னோரன்ன பிறவும் அவளுக்குரிய மறக்கருவிகளெனக் கொள்க. செம்மலை, பனிங்கருவி, நறுங்கால், செழுமை, அன்பு, அருள் முதலியன அவளுக்குரிய அறக்கருவிகளெனக் கொள்க. இரண்டின் வாயிலாகவும் அவள் உலகை ஓம்பிவருவாள்.

இப்பொழுது இயற்கைஅன்னை ஆங்காங்கே மறக்கருணை பொழியத் துவங்கிவிட்டாள். மேல்நாடு தன் தவறுதல்களை உணரும் நாள் அணித்தே நிற்கிறது. கீழ்நாட்டிற்கும் அந் நாள் சேய்மையிலில்லை. ஆகவே, இப்பொழுது ஆங்காங்குள்ள அறிஞர்கள், இயற்கை அன்னையின் நோக்குணர்ந்து கடனாற்ற எழுவார்களாக. ஆசையால் விளைந்த தீமைகளை மேல்நாட்டுக்கு உணர்த்த இதுவே சமயம். துறவால் விளைந்த தீமைகளைக் கீழ்நாட்டுக்கு உணர்த்துதற்கும் இதுவே சமயம். அதையும் இதையும் பரப்புதற்குப் பற்பல முறைகளைக் கொள்ளலாம். அம்முறைகள் அன்பையும் அருளையும் அறத்தையும் அடிப்படையாக் கொண்டனவா யிருத்தல்வேண்டும். மேல்நாடு ஆசையில் வெறுப்பும், கீழ்நாடு அதைத் துறத்தலில் வெறுப்புங்கொள்ளும் நாளே உலகம் ஆன்மநேய ஒருமைப்பாட்டில் திளைத்து இன்புறும் நாளாகும். அந்நாளில் இவ்வுலக வாழ்வு பொய்யா மெய்யா என்னும் நுட்பம் மன்பதைக்கு இனிது புலனாகும்.

'தற்காலத் தொண்டு நடைபெறும் வழியில் நடைபெறுக. காலதேச வர்த்தமானநிலை இயங்கும் வழி இயங்க. இவ்வுலக வாழ்வை மெய்யெனக்கொள்வதா? பொய்யெனத் தள்வதா?' என்று சிலர் கேட்டே தீர்வர். இதற்கு என்ன விடையிறுப்பது? இவ்வுலக வாழ்வை மெய்யென்று கொண்டமையால் மேல்நாடு கெட்டது; பொய்யென்று தள்ளினமையால் கீழ்நாடுகெட்டது. ஆகவே, அந்நாட்டிற்கு வேண்டற்பாலது எது என்பதும், இந்நாட்டிற்கு வேண்டற்பாலது எது என்பதும் மேலே குறிக்கப்பெற்றன. இந்நிலையில் நிலைபேறுக வுள்ள அறம் எது என்பதைக் கிளந்துகூறுதல் அருமை. அதனால் மயிர்ப்பாலத்தில் நிற்கும்நிலை ஏற்படும்.

புலன்களுக்கு ஆர்ந்த இன்பத்தை நல்கி வரூஉம் இவ்வுலக வாழ்வைப் பொய்யென்று கூற என் மனம் ஒருப்படவில்லை. மெய்யென்று கூறலாமா வெனில், பொருளில் மாறுபாடு தோன்றுகிறது. என் செய்வது?

வாழ்வில் இருவித நிகழ்ச்சிகளுறுதல் பெறுகிறோம். ஒன்று, அழுக்காறு அவா வெகுளி முதலிய தீமைகளைக்

கொண்டது; இன்னொன்று, அன்பு அருள் பொறுமை முதலிய நலங்களைக் கொண்டது. இவ்விரண்டில் பொய்யின் பாற் பட்டது முன்னையது; மெய்யின் பாற்பட்டது பின்னையது. எனவே, அவ்வாழ்வைப் பொய்யென்றும், இவ்வாழ்வை மெய்யென்றுங் கொள்க.

பொய் பொய்யென்று பெரியோர் சொல்லியது, அழுக்காறு முதலியவற்றைக் கொண்ட வாழ்வை யென்க. மெய் மெய்யென்று அவர் அறிவுறுத்தியது அன்பு முதலிய வற்றைக்கொண்ட வாழ்வை யென்க. பொய்யைப் போக்கி, மெய்யைப் பெறுதற்குரிய வழி, ஒன்றைத் துறத்தல் அன்று என்பதை என்னுடைய நூல்களிலெல்லாம் விளக்கிக் காட்டியிருக்கிறேன்.

'இவ்வுலகில் என்ன இனி ஏச்சு' என்று இராமலிங்க சுவாமிகள் கூறிய உலகம், அழுக்காறு முதலியன அடர்ந்த தொன்றையென்க. அவ்வாழ்வு தம்மைவிடுத்து விலகியதைக் கண்டு, ஆனந்தப் பெருக்கிடை மூழ்கி, மகிழ்ச்சி மேம்பாட்டால், சுவாமிகள் (தம்மை விடுத்து ஒதுங்கிநின்ற அதனை - அதாவது அழுக்காறு முதலியவற்றைக்கொண்ட உலக வாழ்வைச்) சுட்டி, 'இவ்வுலகிலென்ன இனி ஏச்சு' என்று கூறினார்கள். அழுக்காறு முதலியவற்றைக்கொண்ட உலக வாழ்வையே சுவாமிகள் வெறுத்துக் கூறினார்கள் என்பது 'என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு' என்று பின்னே தொடர்ந்து கூறியதனால் நனிவிளங்கும். பிறவித் துன்பத்தைக் கொடுத்து வருவன அழுக்காறு முதலியன என்பது வெளிப்படை.

அழுக்காறு முதலியன செறிந்த பொய்யுலகில் வாழாது, அன்பு முதலியன நிரம்பிய மெய்யுலகில் வாழ முயல்வது அறிவுடைமை. இம்மெய்யுலக வாழ்வு அன்பெனுங் கடவுளுடன் கலந்த இன்ப வாழ்வாகும். இதனை 'இறைகளோடிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு' என்றார் வன்றொண்டரும். (3-12-1930)

# உ லக வா ழ் வு

உலக வாழ்வின் இன்றியமையாமையைப்பற்றி விரித்துக் கூறவேண்டுவதில்லே. உயிர்களின் இன்பப் பேற்றிற்கு உலக வாழ்வே அடிப்படை. அத்தகைய வாழ்வின்மீது கருத்துச் செலுத்தாது, வாழ்வு என்று ஏதோ ஒன்றை நடாத்தல் அறியாமை.

உலகவாழ்வை வெறுத்துக் கூறுவோருமுளர். அன்னர் யாண்டிருந்து அதை வெறுத்துக் கூறுகிருர் என்பது சிந்திக்கத்தக்கது. உலகிடை வாழ்ந்துகொண்டே, உலகை வெறுத்து வருவதில் எத்தகை இன்பமும் நிலவாது. உலக வாழ்விற்கேற்ற வண்ணம், இம்மை மறுமைப் பயன்கள் விளைதலால், அவ்வாழ்வின்மீது பெருங்கவலே செலுத்த வேண்டுவது மக்கள் கடமை.

அத்தகை உலகவாழ்வு இந்நாளில் எங்ஙனமிருக்கிறது? பலவழியிலும் அது சீர்கெட்டிருக்கிறது. இந்நாளைய கல்வி, தொழில், வாணிபம், அரசு முதலிய யாவும் மக்கள் வாழ்வு நோக்கத்தை நிறைவேற்றத்தக்க நிலேயிலில்லே.

எல்லாவற்றிற்கும் அடிப்படை கல்வி. அக்கல்வியே ஒருவன் வாழ்வை ஒழுங்குபடுத்தவல்லது. அத்தகைக் கல்வி, முறைப்படி போதிக்கப்பெறல் வேண்டும். இல்லேயேல், வாழ்வே குலேந்துபோகும்.

• பொதுவாக உலகில் இப்பொழுது நல்வாழ்விற்குரிய கல்வி போதிக்கப்படுவதில்லே. ஆசைவளர்ச்சி, போராட்டம் முதலிய தீத்துறைகளில் அறிவு படியுங் கல்வி போதிக்கப் படுகிறது. இதனல் மக்கள், தங்கள் வாழ்வில் அன்புக் கடவுளே உணராதொழிகிருர்கள். மக்கள்வாழ்வில் எவ்வாருதல் அன்புக்கடவுளே உணர்ந்து தீரல்வேண்டும். அதற்கென இவ்வுலக வாழ்வு நல்கப்படுகிறது. இக் கருத்துடன் நல்கப் பெற்ற உலகவாழ்வு, ஆசைப் பேய்க்கும் பிறவற்றிற்கும் இரையாகிறது.

இப்பொழுது மனிதனது கல்வி எவ்வெதற்குப் பயன்படுகிறது? ஒருவரை ஒருவர் வஞ்சித்தற்கும் போராட்டத்தை எழுப்புதற்கும் தற்காலக்கல்வி, பயன்பட்டு வருகிறதென்று கூறல் மிகையாகாது.

வக்கீல்களும் பத்திரிகாசிரியர்களும் கற்றவர்களா? கல்லாதவர்களா? அவர்களைக் கற்றவர்களென்று எவருங் கூறுவர். அக் கற்றவரால் விளைவதென்னை? அவர்களால் போராட்டம் பெருகுதல் கண்டுகூடு.

ஒருநாட்டின் ஒழுக்கநிலையை அளந்து கூற வேண்டுமேல் அந்நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் தொகையை முதலாவது அளந்து பார்த்தல் வேண்டும். நீதிமன்றங்களின் பெருக்கம் எதைக் காட்டும்? மக்களின் ஒழுக்க ஈனத்தைக் காட்டும். மக்களது ஒழுக்க ஈனத்தால் நீதிமன்றங்கள் பெருகுகின்றனவா அல்லது நீதிமன்றங்களால் ஒழுக்க ஈனம் பெருகுகிறதா என்பது ஒரு வினா? கூர்ந்து ஓர்ந்தால் நீதிமன்றங்களின் பெருக்கும் ஒழுக்கஈனத்துக்கு ஒருவகைக் காரணம் என்பது செவ்விதிற் புலனாகும்.

வக்கீல்கள் வழக்குகளை நாடுவார்களா? நாடாதொழிவார்களா? 'வக்கீல் நாட்டம் வழக்கிலே' என்றொரு வழக்குண்டு. காலை எழுந்திருக்கும்போதே வக்கீல் எந்நினைவுடன் எழுகிறார்? 'ஏதாயினும் வழக்கு வருமா' என்னும் எண்ணத்துடனன்றோ எழுகிறார்? அவ்வெண்ணம் எத்தகைத்து? சிந்தியுங்கள். மக்களின் ஒன்றிய அன்புவாழ்வை வக்கீல் கருதுகிறாரில்லை. மக்களிடை வேற்றுமைக்குரிய பகைமைவாழ்வை அவர் விரும்புகிறார். இவ்வாறு வாழ்வைக் குலைக்கவல்ல வக்கீல் கல்வி, கல்வியாகுங்கொல்!

வாழ்வைப் பிளக்குங் கருத்தே உறுத்து உறுத்துக் காழ்ப்பேறிய மனமுடைய வக்கீல்கள், பெரும் பொருளீட்டிய பின்னை, மற்றவர்க்குழைத்தல் - தேசத்தொண்டு முதலிய பெயர்களான் அரசியலில் தலைப்படுகிறார்கள். அத்துறையில் வெற்றிபெற அவர்கள் தங்கள் சூழ்ச்சிகளையெல்லாங் கையாள்கிறார்கள். சூழ்ச்சி அறியா மக்கள் மிக

எளிதில் அவர்கள் மாயவலையில் சிக்குறுகிறார்கள். வக்கீல்கள், ஏழைமக்கள் பொருள்கொண்டே ஏழைமக்களை ஏமாற்றுகிறார்கள். ஏமாற்றம் என்பது அவர்கள் அறமாய்விடுகிறது. பொய்யறம் ஓம்புநர் எங்ஙனங் கற்றவராவர் ?

பொதுவாகப் பத்திரிகைகள் - சிறப்பாக வர்த்தமானப் பத்திரிகைகள் - உலகை எந்நெறிப் படுத்துகின்றன என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? பத்திரிகைகள் மக்கள் வாழ்வை நோய்வாய்ப்படுத்துகின்றன என்று சுருங்கச் சொல்கிறோம். கட்சிப் பத்திரிகைகளின் கூக்குரல் மக்களை விலங்குகளாக்குகின்றன என்றுஞ் சொல்லலாம். உலகப் போராட்டத்துக்குத் தாயகம் பத்திரிகை யுலகமென்பது எவரும் அறிந்ததொன்று. அப்பத்திரிகைகளை நடாத்துவோர் படித்தவரா ? படியாதவரா ? அவர்கள் படிப்பு அவர்களையும் உலகையுங் கெடுக்கத் துணைபுரிகிறதன்றோ ? அப் படிப்புப் படிப்பா ?

இக் கல்வியால் உலக வாழ்வு பண்பட்டுச் செம்மை பெறல் அரிது. கல்வி கல்வி என்று எங்கணும் பெரும் பெருங் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. அக்கட்டிடங்களினின்றும் பிள்ளைகள் பெறுங் கல்வி அவர்கள் வாழ்விற்கே கேடு சூழ்வதாகிறது. இப்போசிக் கல்வி, சில இடங்களில் கட்டாய முறையிலிருக்கிறது. சில இடங்களில் அம்முறையில்லை. நமது நாட்டில் கட்டாயக் கல்விக் கூச்சல் நாளுக்கு நாள் பெருகுகிறது. சில இடங்களில் கட்டாயக் கல்வி முறை ஆட்சியி லிருந்துவருகிறது. அக் கட்டாயக் கல்வியால் குழந்தைகளின் பின்னை வாழ்விற்கு எவ்வழியினும் பயன் விளைவதில்லை. பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்ட கல்வி, நல்லொழுக்கத்துக்குத் துணைநின்றது போலத், தற்காலப் பள்ளிக்கூடக் கல்வி துணைநிற்பதில்லை. கல்விமுறை கோடின், வாழ்வுமுறையுங் கோணுதல் இயல்பு.

தற்காலத் தொழின்முறைகளிலும், வாணிபத்துறைகளிலும் நிகழும் வஞ்சனை சூது வாது பொய் பித்தலாட்டங்களை

விரிக்கிற் பெருகும். அவை வாழ்வில் இப்பொழுது படிந் திருத்தலை மறுப்பாரில்லை.

தற்கால நாகரிகம் ஈன்றுள்ள இயந்திரவுலகம், மக்கள் வாழ்விற்குப் புரிந்துவரும் இன்னலை எழுத்தால் எழுதல் முடியாது. இயந்திரங்கள், முதலாளி தொழிலாளிப் போராட்டத்தை வளர்த்து வருவதோடு, மக்களை இயற்கையினின்றும் பிரித்துத் துன்புறுத்துகின்றன. உண்ணும் உணவுகளிலுள்ள ஜீவசத்துக்களையெல்லாம் இயந்திரங்கள் தொலைத்து உயிர்களை வருத்துகின்றன. இவ்வியந்திரங்கள் மக்கட்கு நல்வாழ்வை எங்ஙனம் நல்கும்?

தற்கால உலக அரசியலைப்பற்றி ஒன்றுஞ் சொல்ல வேண்டுவதில்லை. அரசியல்வாதிகள் புரிந்துவருந் திருவிளையாடல்கள் நமது கண்முன்னே நிற்கின்றன. அவர்களின் புரட்டுகளும், பொய் புளுகுகளும், போற்றல்களும், தூற்றல்களும், பிறவும் வாழ்வை எங்ஙனந் தூய்மைப்படுத்தும்? அவர்கள்வழி நடைபெறும் அரசுகள் எத்தன்மையனவாயிருக்கும்?

அவ்வரசுகள்வழித் தேசங்கள் இயங்கி வருகின்றன. தேசங்கள் சேர்ந்த ஒன்றே உலகம். ஆகவே, உலகின் கதி என்ன? உலகம் பொய்க்கும் போருக்கும் பிற சிறுமைகட்கும் இரையாகி அல்லற்படுகிறது.

மக்களின் பெரும் பேற்றிற்கென வாழ்வு நல்கப்பட்டது. வாழ்வுக்கு நிலைக்களனாயுள்ள உலகமோ நெறியல்லா நெறியில் உழல்கிறது. மக்கள் வாழ்வுநோக்கம் எங்ஙனம் நிறைவேறும்? உலகில் தோன்றிய பெரியோர்கட்கு அளவில்லை. அவர்கள் திருவாயினின்றும் பிறந்த அறவுரைகட்கும் அளவில்லை. அவைகளையெல்லாம் தற்கால உலகம் விழுங்கவும் முனைந்து நிற்கிறது. தற்கால உலகவாழ்வு, வாழ்விற் குரியதன்று.

இச் சிறுமைவாழ்வினின்றும் விலக அன்பர்கள் முயலல் வேண்டும். அன்பை ஒடுக்கிப் பகைமையை வளர்க்கும்

இயக்கங்களில் மக்கள் சேர்தலுங் கூடாது ; அவைகட்குத் துணைபுரிதலுங் கூடாது. அவைகளின் வாடை படாத முறையில் வாழ்வு நடாத்தப் பயிறல்வேண்டும்.

புத்தர், கிறிஸ்து, மகம்மது, திருவள்ளுவர் முதலிய பெரியோர் வாழ்வுகளை மக்கள் தங்கள் வாழ்விற்குக் குறிக் கோளாகக் கோடல்வேண்டும். அப் பெரியோர் அருளிய வாய்மொழிகளை உயிர்த்துணையாகக் கோடல்வேண்டும். வீண் ஆரவாரம் பொய் முதலியவற்றில் கருத்துச் செலுத்த லாகாது.

இவ்வுலக வாழ்வு, பின்னைய அழியா வாழ்வுப்பேற்றிற் கென அளிக்கப்பட்ட தென்பதை மக்கள் மறத்தலாகாது. அழியா வாழ்வு பெறுதற்கு இவ்வுலக வாழ்வை ஒழுங்கு படுத்திக் கொள்வது அறிவுடைமை. ஒழுங்கிற்கு மாறுபடும் எத்துறையிலும் நண்ணலாகாது. விளையாட்டாகவும் தீமை களில் வீழ்தலாகாது. நன்னெறி நின்று உலக வாழ்வைப் பின்னை வாழ்விற்குப் பயன்படுத்த முயல்வது அறிவுடைமை.

(2–5–1928)

# வெற்றிக்கு வழி

மக்கள் எம்முயற்சியில் தலைப்படினும் அம்முயற்சியில் வெற்றி பெறவே மன எழுச்சி கொள்வது வழக்கம். வெற்றிக்குரிய வழிகளைச் செப்பஞ் செய்யப் புகுவதும் அவர்கள் இயல்பு. வழிகளை ஒழுங்குபடுத்தாமல், திடீரென ஒரு துறையில் இறங்குவது, மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினவன் கதையாக முடியும்.

பொதுவாக மேல்நாட்டார்-சிறப்பாக இங்கிலீஷ்காரர்-முயற்சியில் வெற்றி பெறும் வழிகளைக் கோலுவதில் பேராற்றலுடையவர் என்பதைச் சரிதங்கூறும். இங்கிலீஷ் சாதியார் ஒரு சிறு தீவில் வசிக்கிறவர். சிறு தீவில் வாழும்

சிறு கூட்டத்தாராகிய அன்னார், உலகத்தின் பல பாகங்களை ஆள்வோராயினர். நமது இந்தியாவும் அவர் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் யாது? அவர் தாம் தலைப்படும் முயற்சியில் வெற்றிபெறும் வழிகளைத் தொடக்கத்தில் கோலிக் கொள்வதாகும்.

இந்தியர், முயற்சியில் தலைப்படும்பொழுது, தொடக்கத்தில் வழிகளைச் செவ்வனே கோலிக்கொள்வதில்லை. வழிகளைச் செப்பஞ் செய்யாது, ஆவேசத் துறையில்மட்டும் வீழ்வது வெற்றி தருவதாகாது. ஆதலால் வெற்றிதரும் வழிகளை முதலில் கோலவேண்டுவது அறிஞர் கடமை.

இப்பொழுது இந்தியாவில் ஒரு பெரும்முயற்சி நடைபெற்று வருகிறது. அம் முயற்சியின் நோக்கம் சுயராஜ்யம் பெறவேண்டு மென்பது. சுயராஜ்யம் பெறுவதற்கு ஒத்துழையா இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வியக்கத்துக்கு வெற்றி தேடவேண்டுவது ஒவ்வோர் இந்தியர் கடமை. அவ்வியக்கத்தைத் தோற்றுவித்த பெரியார், வெற்றி பெறுதற்குரிய வழிகளையும் செவ்வனே தோலியிருக்கிறார். அவர் உபதேசவழி நின்று, ஒத்துழையா இயக்கத்துக்கு வெற்றிதேட முயலல்வேண்டும்.

இன்னும் ஏழு மாதத்துக்குள் சுயராஜ்யம் பெறவேண்டுமென்று காந்தியடிகள் சொல்கிறார். ஏழு மாதத்துக்குள் சுயராஜ்யம் பெறுவதற்குரிய வழிகளை இவ்வாரம் வெளிப்போந்த 'எங் இந்தியா'வில் காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார். காந்தியடிகள் உபதேசப்படி நடந்தால், ஏழு மாதக்துக்குள் சுயராஜ்யம் பெறலாம். அடிகள் குறிப்பிட்டுள்ள வழிகள் மனிதர் கடைப்பிடித்தொழுகக் கூடியனவேயாம்.

ஒரு தேச சுதந்திரத்தை நிலைநிறுத்த அளவிலாச் சேனைகள் வேண்டும்; ஆயுதங்கள் வேண்டும்; பொருள் வேண்டும். காந்தியடிகள் நமது தேச சுதந்திரத்துக்கு மிகச் சுருங்கிய முறைகளைக் குறிப்பிட்டிருக்கிறார். அம் முறைகள்

அனுஷ்டிக்கப்பட்டு வரின், ஒத்துழையா இயக்கம் வெற்றி பெறும்; நமது நோக்கமும் நிறைவேறும்.

காந்தியடிகள், மூர்க்க சக்தியை ஒழிக்கப் பயிலுமாறு கூறுகிறார்; ஒவ்வொரு கிராமத்திலும் காங்கரஸ் சபை அமைக்கச் சொல்கிறார்; ஒவ்வோர் இல்லத்திலும் கைராட்டினமும், கைத்தறியும் முறையே சுழன்று ஓடுமாறு உரைக்கிறார்; அவைகளின் வாயிலாக நூற்றும் நெய்தும் பெறும் துணிகளை அணியுமாறு அறிவுறுத்துகிறார்; கூடியவரை நிதி சேர்க்குமாறு மொழிகிறார்; ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்க வேண்டுமென்று பகர்கிறார்; தீண்டாமையென்னும் குற்றத்தைக் களையுமாறு கழறுகிறார்; குடி முதலிய மறச் செயல்களை ஒழிக்குமாறு போதிக்கிறார். இக் காரியங்கள் அரியனவோ? எளியனவோ? சகோதரர்களே! சிந்தியுங்கள். இம்முறைகளை அனுஷ்டித்தால் ஏழு மாத காலத்துக்குள் சுயராஜ்யம் மலருமென்பது காந்தியடிகள் கருத்து.

காந்தியடிகள் உபதேசவழி நின்று, தேச சேவை செய்வது, காந்தியடிகளுக்குச் செலுத்தவேண்டிய வணக்கமாகும். அவரது உபதேசவழி நில்லாது, அவரை மட்டும் போற்றுவதும் புகழ்வதும் அவர் முயற்சிக்குக் கேடு சூழ்வதாகும். காந்தியடிகள் குறிப்பிட்டுள்ள காலம் நெருங்குகிறது. அதற்குள் காந்தியடிகள் முயற்சி வெற்றிபெறும் வழியைத் தேடுதல்வேண்டும்.

நமது இந்தியாவில் ஒத்துழையா இயக்கத்தை ஒழிக்க அதிகாரவர்க்க தேவதை ஆயிரமுகங் கொண்டு வேலை செய்கிறது. அம் முகங்களைக் கண்டு அஞ்சுதலாகாது. காந்தியடிகள் காட்டியுள்ள வழியில் நடக்க ஊக்கங்கொண்டு உழைத்தல் வேண்டும். அதிகாரவர்க்க தேவதையின் காதில் புகையெழும்; கண்களில் பொறி பறக்கும். அத் தேவதை கோபாக்கினி சிந்தும்; மூர்க்க சக்தியால் எதிர்க்கும்; பற்களைக் கடிக்கும். இக் கோரங்களை அதிகாரவர்க்கம் புலப்படுத்துங்கால், நாம் அவைகளைக் கண்டு அஞ்சுதலாகாது; எதிர்த்தலாகாது. அச் செயல்களை நாம் கடைப்பிடித்தலுமாகாது.

அத் தேவதை கோபத்தைக் காட்டும்போது நாம் சாந்தத்தைக் காட்டல்வேண்டும். அது பற்களைக் கடிக்கும்போது நாம் புன்சிரிப்புக் கொள்ளல் வேண்டும். அது மூர்க்க சக்தியைக் காட்டும்போது நாம் ஆத்மசக்தியைக் காட்டல் வேண்டும். இச் சத்தியாக்கிரக நெறியை நாம் கடைப்பிடித்தொழுகுமட்டும் வெற்றி நம்முடையதே.

ஒத்துழையா இயக்கத்தில் தலைப்படுவோர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவரா யிருத்தலாகாது; அவ்வியக்கத்தில் எவரும் பிழைப்புக்காகச் சேர்தலாகாது; வியாபாரத்துக்காகச் சேர்தலாகாது; பேருக்கும் புகழுக்கும் சேர்தலாகாது. காந்தியடிகள் உபதேசவழி நிற்க இயலாதவர் ஒதுங்கி நிற்றல் நல்லது. சுருங்கக் கூறின் வேஷக்காரர்கள் சத்திய இயக்கத்தில் சேர்தல் கூடாது.

இராஜப் பிரதிநிதியின் உபந்நியாசத்தையும், கவர்னர்களின் பேச்சுக்களையும், பிற அடக்குமுறைகளையும் கண்டுங் கேட்டும் ஒத்துழையா இயக்கம் ஒழிந்துபோய்விடுமென்று எண்ணுதல் தவறு. ஒத்துழையா இயக்கத்தின் வலுவைக் கண்டே இராஜப்பிரதிநிதிபேசுகிறார்; கவர்னர்கள் பேசுகிறார்கள்; அடக்குமுறையும் தலைவிரித்தாடுகிறது. ஆதலால், பேச்சுகளும் அடக்குமுறையும் ஊக்கத்தைத் தடுக்குங் கருவிகளாகுமாறு விடுதலாகாது. சட்டசபைகள் நடைபெறுவதையும், பிரிட்டிஷ் நீதிஸ்தலங்கள் வக்கீல்களின்றிக் கஷ்டப்படாமல் நடந்து வருவதையும், பள்ளிப் பிள்ளைகள் கூட்டங் கூட்டமாக வெளியே வருவதையும் உள்ளே நுழைவதையும் குறிப்பிட்டு, ஒத்துழையா இயக்கம் தோல்வி யுற்றதென்று அதிகாரவர்க்கத்தாரும், மற்றவரும் சொல்லிக் காட்டுவர். அவ்வுரைகளுக்கு நம்மவர்கள் செவிசாய்த்தலாகாது. ஓர் இயக்கம் பெரும்பான்மையோரால் கொள்ளப்படும்போது அதில் சேர்வதும், சிறுபான்மையோரால் கொள்ளப்படுங் காலத்து அதை விடுத்து நீங்குவதும் அறிவுடைமையல்ல. கூட்டத்தின் பெருமை சிறுமைகளைக் கருதி ஓர் இயக்கத்தில் சேர்ந்து உழைப்பது மடவோர் செயலாகும். ஒருவன் தன்

மனச்சான்றுக்கு மாறுபடாத இயக்கத்தில் - அதில் பெரும் பான்மையோர் சேரினும் சோரவிடினும் - தலைப்பட்டுச் சேவைசெய்வது பயன் தருவதொன்றாகும். காந்தியடிகள் எப்பொழுதும் தம்மைப் பின்பற்றுவோர் தொகையைக் கவனிப்பதில்லை. பலர் தம்மைப் பின்பற்றினும் பற்றுவிடினும் தாம் கொண்ட உறுதிவழி நின்று அவர் சேவைசெய்து வருகிறார். இதுவே சுயநலமற்ற தேசபக்தர் இலக்கணம்.

ஒத்துழையா இயக்கத்தில் தலைப்பட்டிருப்போர் உடல் பொருள் ஆவி மூன்றையுங் கருதாது தேசசேவை செய்ய முந்துதல் வேண்டும். இம் மூன்றினும் பற்றுக்கொண்டு ஒத்துழையா இயக்கத்தில் சேர்வது அவ்வியக்கத்துக்குத் தோல்வி தேடுவதாகும். மனிதர்களுக்கு உலகத்தில் எத்தனையோ துன்பங்களுண்டு. குடும்பங்களிலும், தொழில் முறைகளிலும், பிற லௌகிக காரியங்களிலும் எத்தனையோ இடையூறுகள் நேர்கின்றன. நாள்தோறும் நீதிமன்றங்களில் விசாரணைகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. எத்தனையோ பேர் தண்டனை அடைகின்றனர். எண்ணிறந்தோர் மரண மடைகின்றனர். மனிதவாழ்க்கைக்குத் துன்பமில்லாத காலமில்லை என்று கூறலாம். இத்துணைத் துன்பங்களை மனிதர் அனுபவித்துக்கொண்டே காலங் கழிக்கிறார். இவ்வளவு துன்பங்களைத் தங்கள் பொருட்டு ஏற்குஞ் சகோதரர்கள், தேச சுதந்திரத்தின்பொருட்டு ஏன் பலவகைத் துன்பங்களை ஏற்றலாகாது? என்றைக்காவது மரணமடைவது நிச்சயம். உலகத்தில் நீடூழிகாலம் வாழ்வோர் ஒருவருமில்லை. தம் பொருட்டு வாழ்ந்து மரணமடைவதைப் பார்க்கிலும், பிறர் பொருட்டு வாழ்ந்து மரணமடைவது போற்றத்தக்கது. தம்பொருட்டு வாழ்ந்து இறப்போர் அடைவது நரகம். பிறர்பொருட்டு வாழ்ந்து இறப்போர் அடைவது மோட்சம். இவ்வுண்மை உணர்ந்தோர் தேச சுதந்திரத்துக்கு எவ்விதத் துன்பத்தையும் ஏற்க ஒருப்படுவர். தேசத்துக்காகச் சில துன்பங்களை ஏற்றே தீரல்வேண்டும். துன்பங்களுக்கு அஞ்சித் தேசத்தை மறப்பது பெரும் பாவம்.

தேசத்தின் அடிமை நிலையையுன்னி, எல்லாச் சுகங்களை யும் வெறுத்து, முனிவர் வாழ்க்கையை மேற்கொண்டொழு கும் மகாத்மா காந்தி, ஒத்துழையா இயக்கத்தைத் தோற்று வித்து, அவ்வியக்கம் வெற்றி பெறவேண்டிய வழிகளையும் செப்பஞ் செய்துவிட்டார். அவ்வழியில் நடந்து சுயராஜ்ய பதவியை அடையவேண்டுவது நம் கடமை. காந்தியடிகள் தம் கடமையைச் செலுத்திவிட்டார். இனிக் கடமையைச் செலுத்தவேண்டியவர் யாவர்? இந்தியாவில் பிறந்த மக்கள் அனைவருமாவர். தோல்வி வெற்றிக்கு இனிப் பொறுப்பாளி காந்தியடிகளல்லர் என்பதை வலியுறுத்துகிறோம்.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் காந்தியடிகளின் இயக்கம் வெற்றி பெறுமாறு பல கடமைகளை நிறைவேற்றல் வேண்டும். அவைகளில் தலையாயது ஒன்று. அது தெய்வப் பிரார்த்தனை. தேசபக்தர்கள், நாள்தோறும் கடவுளைநோக்கி, ஒத்துழையா இயக்கம் வெற்றி பெறுமாறும் — காந்தியடிகள் வழியில் நடக்கத் தங்களுக்கு அஞ்சாமையும் ஆற்றலுந் தந் தருளுமாறும் — வேண்டுதல் செய்வார்களாக.

கடவுளே! அற இயக்கம் வெற்றிபெற அருள் செய்க. இல்லையேல் இவ்வுடலை வேறு, உயிரை வேறு பிரித்தருள்க. எமக்கு வேண்டுவது இரண்டிலொன்று. நாங்கள் இனி படமாட்டோம் துயரம்! பட்டது போதும்! இதுவே நல்ல தருணம். இதைவிடத் தருணம் எமக்கு வாய்ப்பதரிது. இப்பொழுதே எங்கள் வேண்டுதலை நிறைவேற்றுக.

“ தருவகையித் தருணநல்ல தருணமிதி லெனக்கே
தனித்தஅருட் பெருஞ்சோதி தந்தருள்க இதுதான்
ஒருவகையீ திலையெனில்வே றொருவகையென் னுடைய
உடலுயிரை ஒழித்திடுக உவப்பினொடே இந்த
இருவகையுஞ் சம்மதமே திருவடிசாட் சியதாய்
இயம்பினன்என் னிதயமுன்றன் இதயமறிந் ததுவே
அருவகையோ டுருவகையு மாகியென்னு ளமர்ந்தாய்
அம்மேயென் னப்பாஎன் னய்யாஎன் னரசே ”

—இராமலிங்க சுவாமிகள்

(4-3-1921)

# வீ ர ம்

வீரம் — வீரமென்பது எது? வீரம் என்ற உடனே சிலருக்குக் கோபம், கொதிப்பு, வன்மம் முதலியன கிளம்பக் காண்கிறோம். வீரம் கோபமா? கொதிப்பா? வன்மமா? இன்னோரன்ன பிறவா? வீரம் கோபத்தில் பிறப்பதோ? பிறவற்றில் பிறப்பதோ? கோபமும் கொதிப்பும் பிறவும் எவரிடத்தில் உதிப்பன? உடலில் போதிய வல்லமை யில்லாதாரிடத்தில் உதிப்பன. உடலாற்றலிழந்து கிடப்போர்பால் வீரம் எவ்வாறு எழும்? கோபம் முதலியன, நரம்பு மெலிவுற்றோர்பால் நிகழ்வன. இஃது அறிஞர் பலரும் ஒப்ப முடிந்த உண்மை. உடல் நலமிலா ஒருவன், அடிக்கடி சினமென்னும் பேய்க்கு இரையாதலியல்பு. சினமுடையானைப் பலமுடையான் என்று எப்படிச் சொல்வது? அவனை வீரனென்று எங்ஙனம் அழைப்பது.

வீரம் என்னுஞ் சீரிய குணம், பகவனுக்குரிய அறு குணங்களுள் ஒன்று. அவ்வறு குணங்களாவன :—ஞானம், புகழ், திரு, வைராக்கியம், அருள், வீரம் என்பன. பகவனுக்குரிய குணங்களுள் ஒன்றாய வீரம், கோபிகளிடத்தும் மற்றத் தீயர்களிடத்தும் எவ்வாறு மிளிரும்? பொறாமையாலோ வன்மத்தாலோ சினந்து பிறரை வருத்த எழும் பேய்க்குணத்தைச் சிலர் வீரமென்று நினைக்கிறார். இக்குணம் வீரமாகாது. பிறரை வருத்த நினைக்கிறவன் எப்பொழுதும் அச்சமேலீட்டான் கோலையுங் கொலைக் கருவியையுந் தாங்கித் திரிவன். கோலையுங் கொலைக் கருவியையுந் தாங்கித் திரிபவன் வீரனாவதெப்படி? கோலுங் கருவியுமில்லா விடத்து இவன் கதி என்னவாகும்? கோலின்றிக் கருவியின்றி வாழ இயலாத ஒருவன் வீரனாவனோ?

சினம் முதலிய தீயிடைஎழுவது வீரம்அன்று. தீக்குணம் இல்லாத இடத்துக் கிளம்புவது வீரமென்பது. சுருங்கக் கூறின், அச்சமில்லாத இடத்தில் அரும்புவது வீரமென்று

கூறலாம். அச்சம் எவரிடத்தில் நிகழும்? தம்மைப்போல் பிறரைக் கருதாதவர், பேராசையுடையோர், மறவழியில் பொருளீட்டுவோர், பிறர்மனை நயப்போர், பிறர் தேயங்களை அபகரிப்போர், கள்வர், கொலைஞர் முதலியோர்பால் அச்சம் நிகழ்தல் இயல்பு. இவ்வச்சங் காரணமாக இவர்கள் தங்கள் காப்புக்குப் பல ஆயுதங்கள் தாங்கித் திரிகிறார்கள். இவர்கள் உள்ளத்திலிருப்பது அச்சம். அது வீரமாகாது. அச்சமுள்ள இடத்தில் வீரம் இராது. அச்சமின்றி உலகில் வாழ்வோன் எவனோ அவனே வீரன். அவன் பேராசையின்றி உலகில் வாழ்வன்; தன்னைப்போலப் பிறரைப் பாவிப்பன்; ஒழுக்கத்தை உயிரினுஞ் சிறப்பாக ஓம்புவன். இன்னோரன்ன அருட்குணமுடைய ஒருவன் எவருக்கும் அஞ்சி வாழ வேண்டுவதில்லை. இவ் வச்சமில்லாத ஐயனே வீரன்.

வீரத்தைப் பற்றிப் பல அறிஞர் பலவாறு பகன்றுள்ளார். அவர் உரைகள் பலவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும். ஒரு பெரியார் ஓரிடத்தில் அருளிச்செய்துள்ள ஒரு பாட்டை ஈண்டு எடுத்துக் காட்டுகிறோம்.

'ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ.'

இச் செய்யுளிற் போந்துள்ள கருத்துக்களை நேயர்கள் ஊன்றி நோக்குவார்களாக. வீரர்களுக்கு ஆரம் கண்டிகையாம்; ஆடை கந்தையாம். இவை, எளிய இன்ப வாழ்வுக்கு அறிகுறிகள். பொன்னணியும் பட்டாடையும் வீர உடைகளல்லபோலும்! அவைகள் அச்சத்தை ஊட்டுவன போலும்! எளிய வாழ்விலுள்ள இன்பம் செல்வவாழ்விலில்லை என்பது நிச்சயம். எளிய வாழ்வை விரும்பும் ஒருவன் வீரமே வீரம். பொன்னணிமீதும் பட்டாடைமீதும் உள்ளம் படிந்து, ஆசை யென்னும் அரக்கனைப் படைக்கும்போது, அவ்வரக்கனை, அறிவாம் வாள்கொண்டு சேதிக்கும் வீரம்

எளியவன்பால் எழும். அரக்கனைக் கொல்லும் ஆற்றலில்லா ஒருவனை எப்படி வீரனென்றழைப்பது ?

வீருக்குப் பாரம் ஈசன் பணியன்றிப் பிறிதில்லை. ஈசன் பணி எது ? ஈசன் என்றும் உறையும் உயிர்களை வழி படுவது ஈசன் பணியாகும். உயிர்களை வழிபடப் புகுகிறவன் தன்னலத்தை அறுத்த வீரனாவன். உலகில் ஒருவனுக்குப் பெரும்பகைமையாய் இடர்செய்வது தன்னலமே யாகும். தன்னனலமுடையவன் பிறர்நலங் கருதி உழைக்கமாட்டான். தன்னலத்தை அறுப்பது எளிதன்று. அதை அறுப்பது வீரம். தன் உள்ளத்தெழும் ஆசையாம் பேயைக் கொல்ல வல்ல வீரனைக் காண்டல் அரிது. தன்னலத்தைப் பலியிட்டு உயிர்களாம் ஈசனை வழிபடும் பாரமுடையவனே வீரன்.

சுயநலத்தை அழித்த மக்கள்தொகை பெருகியுள்ள நாடே வீரஞ்செறிந்த நாடு. அந்நாட்டில் வீரக் குழந்தைகள் பிறக்கும். முதலாவது வீரம் தாய்மாரிடத்தில் நிலைத்து நிற்றல் வேண்டும். வீரத்தாய்மாரில்லா நாட்டில் வீரப் பிள்ளைகள் எவ்வாறு பிறக்கும் ? ஆகவே, வீரத்துக்கு ஊற்றுக்களனா யிருக்குமாறு தாய்மாரைப் பண்படுத்தல் வேண்டும். ‘ ஓ ! இந்தியாவே ! நின் பெண்மை நாயகத்துக்கு இலக்கியமாக உள்ள சீதை, சாவித்திரி, தமயந்தி இவர்களை மறவாதே ’ என்று விவேகானந்தர் நினைவூட்டியதை நாம் மறத்தலாகாது. பெண்ணிடத்துள்ள வீரமே பின்னை ஆணிடத்தில் பரிணமிக்கும்.

வீரரை ஈர அன்பினர் என்றும், யாதுங் குறைவிலார் என்றும் பெரியோர் அழைக்கின்றனர். முனிவுடையார் உள்ளத்தில் வீரமெழுதலில்லை என்பது மேலே சொல்லப் பட்டது. உயிர்களிடத்துக் கனிவுடையார் மாட்டும் வீரஞ் செறியு மென்க. ஈர அன்பினர் எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யார். அவர்பால் கோபமேது ? வேறு கொடுமை யேது ? அன்புடைய வீரர்க்குக் குறையுண்டோ ? குறை எவருக்குண்டு ?

பேராசையில் வீழ்ந்து கிடப்போர் என்றும் நிறை நெஞ்சம் பெறார். 'நிறைநெஞ் சுடையாரை நல்குரவு அஞ்சும்' என்பது ஆன்றோர் மொழி. குறைவு நிறைவு என்பன அவரவர் செல்வ நிலையைப் பொறுத்து நிற்பன வல்ல; அவரவர் உள்ள நிலையைப் பொறுத்து நிற்பன. அன்பு நிலவும் உள்ளம் நிறையுள்ளமே யாகும். அன்புச் செல்வத்துக்கு முன்னே பிற செல்வங்கள் நிற்குமோ? அன்பு நிறைந்த உள்ளமுடைய வீரர்களுக்கு உலகில் என்ன குறையுண்டு? அவர் யாதுங் குறைவிலார்.

எளிய வாழ்வும், உயிர்கள் வழிபாடும், அன்பும், குறை விலா உளமும், பிறவும் வீரத்துக்கு அறிகுறிகளாகும். தற் போது உலகில் இவைகள் இறந்துபட்டு வருவது கண்கூடு. அவ்வருங் குணங்களை மீண்டும் மக்கள் பெறுவார்களாயின், பழைய ஞான வீரம் — அன்பு வீரம் — உலகில் எழும். ஆதலால், மக்கள் வீரர்களாக முயலல் வேண்டும். வீரம் பெறுவோர், புகழ் திரு முதலிய குணமெலாம் பெற்றுச் சாந்தகுண மூர்த்திகளாய்ப் பகவன் நிலையையும் பெறலாம்.

வசிஷ்டர், தம்மீது விசுவாமித்திரன் சினந்து விடுத்த அம்புகளைக்கண்டு ஓடியொளியாமலிருந்ததும்—அரிச்சந்திரன், தனக்கிருந்த செல்வப்பெருக்கு முதலியவற்றைப் பொருட் படுத்ாது உண்மை குறித்து எல்லாவற்றையுந் துறந்ததும்— ஸ்ரீராமர், உலகை ஒரு நொடிப்போழ்தில் துகள் செய்யக் கூடிய கோதண்டம் தம் கரத்திருந்தும், தம்பி இலட்சுமணன் துணையும் ஊரார் அனைவருடைய உதவியுமிருந்தும், அவை களைப் பொருளென மதியாது, தந்தை சொல் காக்கவும் சிறிய தாயார் விருப்பத்தை நிறைவேற்றவும் மகுடாபிஷேக இன்பந் துறந்து வனம்புக ஒருப்பட்டதும் — தருமராஜன் அருச்சுனன் காண்டீபத்தையும் பீமன் கதையையுங் கருதி முனைந்து போர்புரியாது காடு சென்றதும் — இவைபோன்ற பிறவும் — சிறந்த வீரச் செயல்களாம். தற்போது மகாத்மா காந்தி பெரிய வீரராக விளங்குவது கண்கூடு. முனைப் பாலும் கோபத்தாலும் நிகழ்த்தப்படுவன வீரச் செயல்க

ளாகா. மிருக சுபாவ எழுச்சியை வீரம் என்று கருதுவது தவறு. மிருக சுபாவத்தால் விழுங்கப்பட்டுள்ள 'வீரர்' பலர் உலகில் வதிகிறார். அவர் கோழைத் தன்மையை வளர்ப்பதில் 'வீரராக' விளங்குபவர். எவர்க்குந் தீங்கு புரியாது, சமயம் நேரும்போது பிறர்பொருட்டுத் தாம் வருந்த மகிழ்ச்சியோடு உடன்படுவது வீரம். கிறிஸ்து, அப்பர் முதலியோர் இவ்வீரம் பெற்றிருந்தார்.

எவர்க்குந் தீங்கு செய்யாது எத்துன்பத்தையும் தாங்கும் ஆற்றல் பெறும் வீரர் உள்ளத்தில் பகைமை வன்மம் முதலிய தீக்குணங்களிரா. அதனால் அவரைப் புலி கரடி முதலிய கொடிய விலங்குகளும் ஒன்றுஞ் செய்வதில்லை. பண்டைநாளில் காடுகளில் வாழ்ந்த முனிவர்கள், எவர்பால் லைசென்ஸ் பெற்று எந்தத் துப்பாக்கியைக் கரத்தில் தாங்கித் திரிந்தார்கள்? இப்பொழுதுள்ள'வீரர்கள்' துப்பாக்கியின்றிக் காட்டுக்குச் செல்ல அஞ்சுகிறார்கள். காட்டுக்கா? நாட்டில் வாழவுந் துப்பாக்கி தேடுகிறார்களே! இவர்கள் வீரத்தை என்னென்று புகழ்வது? இவர்கள்பாலுள்ள குற்றங் குறைகள் இவர்களை அச்சுறுத்திக் கோழைகளாக்கித் துப்பாக்கி தூக்கச் செய்கின்றன.

வீரம் பெறவேண்டுமேல், முதலாவது உடல்நலம் பேணல்வேண்டும். உடல் உரமில்லாதார் வீரராதல் இயலாது. நல்ல குணத்துக்கு உடல்நலம் இன்றியமையாதது. உடல் நலத்துக்கெனக் கண்டதைத் தின்று கொழுத்தலாகாது. உணவுக்கேற்ற குணம் பதிதலால் சாத்விக உணவு கொள்ளல் வேண்டும். சாத்விகத்தில் எழும் வீரமே வீரம். எளிய வாழ்வு, களியாடலில் வெறுப்பு, இயற்கையில் விருப்பு, ஒழுக்கம் ஓம்பல், உயிர்களைக் கடவுளாக வழிபடல், அன்புவழி நிற்றல் முதலிய செம்மைநெறி பற்றி வாழ்ந்தால் வீரம் பெறலாம்.

உணவைப்பற்றிச் சிறப்பாகக் கவனித்தல் வேண்டும். புலால்உணவு, வீரத்தை எழுப்புவதெனச் சிலர் கருதுகிறார். புலால்உணவு, ஒருவித இராஜோகுணத்தை எழுப்புமேயன்றி

வீரத்தை எழுப்பாது. இராஜோகுணச் செயல்களை வீரச் செயல்களாகக் கொள்வது தவறு. அக்குணமுடையார் அச்சத்தால் தம்மைக் காத்துக்கொள்ளப் பிறரை இரக்கமின்றி வருத்துவர். இது வீரமாகுமா? வீரச்செயல் இரக்கத்தை—ஒப்புரவை—அடிப்படையாகக் கொண்டொளிரும். ஆதலால் புலால் உணவால் நிகழும் இராஜோகுண எழுச்சியை வீரமென்று கொள்ளலாகாது. இவ்வுண்மை கண்டு, மேல்நாட்டு அறிஞர் பலர், இப்போது தாம் சைவ உணவு கொண்டு வருவதோடு உலகில் அதைப் பரப்பவும் முயன்று வருகிறார். இராஜோகுணம் தருமத்தையழித்து இடர்ப்படுத்துவதை அவர் உணர்ந்து, இதுபோழ்து அருள்வழி பற்ற முயன்று வருகிறார்.

வீரம் வீரமென்று புலால் உணவின்பொருட்டு வாயில்லாப் பிராணிகளை வதைப்போர் தமது வீரத்தைச் சிறிது நேரஞ் சிந்தித்துப் பார்ப்பாராக. வாயில்லாப் பிராணிகளை—தங்களைக் கொல்ல வருவோரை எதிர்த்து நிற்கும் ஆற்றலின்றித் தலை சாய்க்கும் எளிய உயிர்களை — சுட்டும் வெட்டியும் கொல்லும் அன்பர்களின் வீரத்தை என்னென்று புகழ்வது? அவர்கள் அன்பென்னே! அவர்கள் வீரமென்னே! அழகிய பறவைகளைச் சுட்டு வீழ்த்துவதும், துள்ளியோடும் இளமான் கன்றுகளைச் சுட்டுச் சாய்ப்பதும் வீரமாமோ? தன்னலத்தின் பொருட்டு ஏழை உயிர்களை வதைத்து, அவைகளின் புலாலை உண்பதால் வீரம் எங்ஙனம் பெருகும்? புலால் உண்ணாதவர்பால் வீரமிராதென்று நினைப்பவர் வீரத்தின் இயல்புணராதவ ராவர். அந்நண்பர்கள் ஒருவிதச் சினக்குறியை வீரமென்று கருதுகிறார்கள். அது தவறு. வீரம் சாத்விகத்தில் அரும்புவது. சாத்விகத்தை வளர்க்க முயல்பவன் வீரம்பெற முயல்பவனாவன். (23-1-1925)

# அஞ்சாமை

இப்பொழுது நாட்டுக்கு எது தேவை? அஞ்சாமை தேவை. அஞ்சாமையால் உண்மை அரும்பும்; உண்மையால் உணர்வு பிறக்கும்; உணர்வால் சுயஆட்சி கிடைக்கும்; சுயஆட்சியால் உலக இன்பம் நுகரலாம்; உலக இன்பத்தால் பேரின்பம் பெறலாம். ஆதலால், வரம்பிலா இன்பத்துக்கு அடிப்படை அஞ்சாமை என்பதை ஈண்டு ஒருமுறைக்குப் பன்முறை வலியுறுத்துகிறோம்.

தேசபக்த சிரோமணியாகிய சித்தரஞ்சினதாஸர் சிறைக்குள் நுழைவதற்கு முன்னர் விடுத்த திருமுக மொன்றில் அஞ்சாமையை மூன்றிடங்களில் சிறப்பாக வகிக்குமாறு குறிப்பிட்டிருக்கிறார். (1) சிறைபுகுதற்கும் (2) அடி உதைபடுதற்கும் (3) பீரங்கி குண்டு பிரயோகத்துக்கும் அஞ்சுதலாகாது என்று அப்பெரியார் தேசத்தார்க்கு அறிவுறுத்தினார். இந்திய மக்கள் இப்பொழுது முதலிரண்டு சோதனைகளுக்கு இடங்கொடுக்கவில்லை. இந்திய மக்கள் தாராளமாக அகமுக மலர்ச்சியோடு சிறை புகுகிறார்கள். ஆகவே அவர்கட்குச் சிறை பயம் ஒழிந்தது. இந்திய மக்கள் அடி உதைபடுதற்கு அஞ்சுகிறார்களில்லை. ஆகவே அவர்கள் அடி உதை, அச்சத்தையுங் கடந்து நிற்றல் விளங்குகிறது. பீரங்கி பயம் உண்டாகாதென்று நம்புகிறோம். காந்தியடிகள் ஆணைவழி மூர்க்கமில்லா ஆக்ம சக்தி வழிநின்று, பிறர்க்கு எவ்வழியிலுங் கேடு சூழாது, ஒத்துழையா இயக்கத்தை வளர்த்து வருமட்டும் பீரங்கிப் பிரயோகத்துக்கு இடமே நேராது. ஆதலால் பீரங்கி பயம் நேர்தல் அருமை. நியாயவரம்பு மீறிச் சில முரட்டு உத்தியோகஸ்தர்கள் பீரங்கி துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யினும், அதற்கும் அஞ்சுதலாகாது. தேசபந்து சித்தரஞ்சின தாஸர் சிறைச்சாலை நண்ணுவதற்கு முன்னர்த் தேசத்தார்க்குச் செய்த உபதேசம் அஞ்சாமையைப் பற்றியதேயாம்.

'சிறை புகுவதில் அஞ்சாமை காட்டலாம்; அடி உதை படும்போதும் அஞ்சாமை காட்டலாம்; பீரங்கி முன்னே அஞ்சாமையை எப்படிக் காட்டுவது?' என்று சிலர் வினவலாம். பீரங்கி முன்னே அஞ்சாமை காட்டுவதுதான் உண்மையும் உறுதியும் நிரம்பிய அஞ்சாமை. ஒருவன் பீரங்கி எடுத்துச் சுடுங்காலத்து, அச் சுடுதலுக்குப் பயந்து, பீரங்கியால் அவனை எதிர்த்துச் சுட நினைப்பதும் முயல்வதும் அஞ்சாமையின்பாற்பட்டன வாகா. ஆயுதம் தாங்குகிறவன் அச்சம் உடையவனேயாவன். அச்சம் இல்லாதவன் ஆயுதந் தாங்கமாட்டான். பீரங்கியைப் பீரங்கியால் எதிர்க்கிறவன் அஞ்சாமை உடையவனல்லன். பீரங்கியை ஆத்மசக்தியால் எதிர்ப்பதே ஆண்டகைமை. பீரங்கிமுன் பீரங்கி காட்டாது, ஆத்மசக்தி காட்டி, அஞ்சாது நிற்பவனே மனிதன்.

விசுவாமித்திரன் ஆயுதந் தாங்கி எதிர்த்தபோது, வசிஷ்டர் ஆயுதந் தாங்கி எதிர்த்தாரோ? இரணியனால் ஏவப்பட்ட கொலைஞர் ஆயுதங்களைக் காட்டிய நேரத்தில் பிரகலாதன் என்ன செய்தான்? ஆயுதம் தாங்கினனோ? யமன் பாசத்தை வீசிய வேளையில் மார்க்கண்டேயர் பாசத்தை அறுத்தெறிய வாள் ஏந்தினரோ? கிறிஸ்து சிறையில் அறையப்பட்ட சமயத்தில், அவர் சத்துருக்களை வதைக்க நினைந்தாரோ? யானை வந்தெதிர்த்தபொழுது திருநாவுக்கரசர், அதை, மூர்க்க சக்தியால் எதிர்த்தாரோ? இல்லையே! இவர்கள் அஞ்சாமலிருந்ததற்குக் காரணமென்னை? இவர்கட்கு ஆத்மசக்தியில் நம்பிக்கை யிருந்தமையே யாகும். ஆத்ம சக்தியில் முழு நம்பிக்கை யுடையவர் எல்லாச் சோதனைகட்கும் அஞ்சாது நிற்பர். அவர் உள்ளத்தில் அஞ்சாமை பதிந்து கிடக்கும். மகாத்மா காந்தி, ஆத்மசக்தியில் முழு நம்பிக்கை கொண்டுள்ளமையால், அஞ்சாமை அவர்பால் பணிசெய்கிறது.

நமது தேசநிலை, காலநிலை, அதிகார வர்க்கத்தார் நிலை முதலிய நிலைகளைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால், நமக்கு அஞ்சாமை வேண்டற்பாலதென்பது தெற்றென விளங்கும். தேசம் அதிகாரவர்க்கத்தார் ஆட்சி முறைவழி

உழல்கிறது; காலமும் அவர்காலமாக இருக்கிறது. இந்நெருக்கடியான நிலையில் நாம் சுயராஜ்ய முயற்சி செய்கிறோம். நம் முயற்சியை அடக்குமுறைகள் ஒடுக்குகின்றன. அதிகாரவர்க்கத்தார் இப்பொழுது சட்டங்களைப் பிரயோகித்து வரும் முறையைப்பற்றி நாம் விரித்துக் கூறவேண்டுவதில்லை. அடக்குமுறையை நாணுறச் செய்யவேண்டுவது தேசத்தார் கடமை. அதற்குக் கருவி யாது? அஞ்சாமை. தேசத்தார் அஞ்சாமை, தேசத்தையும் காலத்தையும் அதிகாரவர்க்கத்தாரையும் குணப்படுத்தும். ஆதலால் வேண்டுவது அஞ்சாமை.

இப்பொழுது தேசத்தில் அஞ்சாமை நிலைபெற்றாலன்றி, ஒத்துழையா இயக்கம் வெற்றி பெறாது. ஒத்துழையாமை என்னும் தெய்விக இயக்கம், அஞ்சாமையை அடிப்படையாக் கொண்டிலங்குகிறது. ஒத்துழையா இயக்கத்துக்கு அஞ்சாமை வேண்டும் வேண்டும் என்று காந்தியடிகள் சொல்லி வந்தார்., காந்தியடிகள் சொல்லிவந்த அஞ்சாமையை லார்ட் ரெடிங் தேசத்தில் செய்கையில் நிலைபெறுத்துகிறார். அவரைத் தலைமைகொண்ட அதிகாரவர்க்கம், ஒத்துழையா இயக்கத்தை ஒடுக்க அடக்குமுறையைக் கையாண்டு வருகிறது. அடக்குமுறையின் நெருக்கடி அஞ்சாமையை உண்டுபண்ணுவது இயல்பு. சிறைவாசத்துக்கு அஞ்சிக்கொண்டிருந்த எத்தனையோ சீமான்கள் இப்பொழுது சிறைவாசத்துக்கு அஞ்சுகிறார்களில்லை. லார்ட் ரொனல்ட்ஷே, ஸர் ஹார்கோர்ட்பட்லர் முதலாயினோர் தேசத்தில் அஞ்சாமையை வளர்க்கின்றனர். இன்னும் இவர்கள் தங்கள் பிடிவாதத்தை விடாமலிருக்கிறார்கள். அப்பிடிவாதத்தால் தேசத்துக்குக் கெடுதி விளையாது.

கூட்டங் கூட்டமாகச் சிறைபுகுவதன் பொருள் லார்ட் ரெடிங்குக்குத் தெரியவில்லை போலும்! லார்ட் ரெடிங் பலவித வித்தைகள் பயின்றிருக்கலாம். அவர் எத்தனையோ யுத்தங்களைக் கண்டிருக்கலாம்; கேட்டிருக்கலாம்; எத்தனையோ தேச சரித்திரங்களைப் படித்திருக்கலாம். ஆனால் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்தின் வித்தையை லார்ட் ரெடிங்

எந்தச் சர்வகலாசாலையிலும் பயிலவில்லை. இவ்வருமையான வித்தையைப் பயில எந்தக் கலாசாலையையுந் தேடி ஓடவேண்டுவதில்லை. இயந்திரத்திலும் பீரங்கியிலும் வாழ்வை நடத்துவோர்க்குச் சத்தியாக்கிரகத்தின் நுண்மை புலனுதல் அருமை. இயற்கையோடியைந்த வாழ்வை நடாத்துவோர்க்குச் சத்தியாக்கிரகத்தின் நுண்மை புலனுகும். 'இந்தியாவிலுள்ள சில கொடிய சட்டங்களைக் கொண்டு சத்தியாக்கிரகத்தின் ஒரு பகுதியாகிய ஒத்துழையா இயக்கத்தை ஒடுக்கலாம்' என்று லார்ட் ரெடிங் கருதியிருக்கின்ருரோ என்னவோ தெரியவில்லை. ஒத்துழையாமையை ஒடுக்கும் முறை ஒன்று உண்டு. அஃது, அன்பு முறை. அடக்குமுறையால் ஒத்துழையாமையை ஒடுக்க முயல்வது, அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாத கருவியாகிய அஞ்சாமையை வளர்ப்பதாக முடியும்.

லார்ட் செம்ஸ்பர்ட் சத்தியாக்கிரகத்தின் செம்பொருள் உணராது இடர்ப்பட்டார்; ஓட்வியர் செய்த பஞ்சாப் படுகொலையை ஆதரித்தார்; பின்னர்த் தோன்றிய ஒத்துழையா இயக்கத்தின் பொருள் தேருது 'அவ்வியக்கந் தானே சாகட்டும்' என்று கூறி வாளா கிடந்தார். லார்ட் ரெடிங்குக்கும் ஒத்துழையா இயக்கத்தின் உண்மை புலனுகவில்லை என்பது அவர் பேச்சாலும் செயலாலும் நன்கு விளங்குகிறது. லார்ட் ரெடிங்குக்கு ஒத்துழையா இயக்கத்தின் உண்மை புலனுகியிருந்தால், பண்டித மதன்மோகன் மாளவியாவைத் தலைமைகொண்டு, தம்மைக் கண்ட பிரதிநிதிக் கூட்டத்தின் வேண்டுகோளுக்கு அவர் இணங்கி யிருப்பார். லார்ட் ரெடிங் பிடிவாதம், தேசத்தில் அஞ்சாமையை வளர்க்கும் என்பதிற் சந்தேகமில்லை.

காந்தியடிகள், சத்தியாக்கிரகத்தை இந்தியாவில் பிரசங்கித்தபோது, அவரது பிரசங்கத்துக்கு ஒரு சிலரே செவி சாய்த்து வந்தனர். மற்றவர், 'இவர் சொல்வது நடவாத காரியம்' என்று பேசினர். 'சகல சுகங்களையும் வெறுத்து எவரையா சிறைபுகுவார்?' என்று அச்சந் தரத்தக்க உரைகளை வழங்கிக்கொண்டிருந்தனர் பல நண்பர். ஆனல் இப்

பொழுதோ காந்தியடிகளின் அஞ்சாமை, செல்வத்திற் சிறந்த மோதிலால் நேருவையும், வருவாயிற் சிறந்த சித்தரஞ்சின் தாஸரையும் சிறையில் நிறுத்தி யிருக்கிறது. அடிகளின் அஞ்சாமை சிறைகளில் நிரம்பி வருகிறது. எங்கணும் அஞ்சாமை !

கொழுந்துவிட்டெரியும் அஞ்சாமையை எவர் அடக்க முயலினும் அஃது அடங்காது. காங்கரஸ் ஆணையை மீறி, எவராவது மூர்க்க சக்தியை உபயோகித்தால், கொழுந்துவிட்டெரியும் அஞ்சாமை அடங்கி ஒடுங்கிப்போகும். மலையாளத்தில் எழுந்த மூர்க்க சக்தியால் - அங்கே நிகழ்ந்த குழப்பத்தால் - காங்கரஸ் முயற்சி எவ்வளவோ தளர்ச்சி பெற்றது என்று கூறலாம். மூர்க்கசக்தியை உபயோகிப்பது காந்தியடிகளுக்கு அவமானத்தையும், தேசத்துக்குக் கேட்டையும், காங்கரஸுக்குத் தோல்வியையுந் தேடுவதாகும் ; இப்பொழுது தோன்றியுள்ள அஞ்சாமையையும் வீழ்த்துவதாகும். ஆகலால் எந்த மூலையிலும், எந்த முடுக்கிலும், எந்தச் சந்திலும், எந்தப் பொந்திலும் மூர்க்கசக்தி எழாதவாறு பாதுகாக்க வேண்டுவது காங்கரஸ் ஊழியர் கடமை. எதிரிகள் மூர்க்கசக்தியைக் கிளப்பினும், காங்கரஸ்காரர் தம் அறிவால் - அன்பால் - பொறுமையால் - மூர்க்க சக்திக்கு இடந்தாராது போதல் வேண்டும். காங்கரஸ் கட்சியில் சேர்ந்தவர் தமது இரத்தத்தைப் பிறர் சிந்த இடங் கொடுக்கலாம் ; பிறர் இரத்தத்தைத் தாம் சிந்த மனத்திலும் நினைத்தலாகாது. அவ்வாறு நினைப்பவன் அஞ்சாமையின் பெருமையை உணராத கோழையாவன்.

இப்பொழுது எதிரிகள் பலவழியிலும் அச்சமூட்டி வருவது பலர் அறிந்ததொன்றே. முதலாவது கைராட்டினத்தைப் பற்றிப் பல அஞ்சுமொழிகள் வெளிவருகின்றன. 'கைராட்டினத்தால் வாழ்வு நடைபெறாது ; பொருள் வாராது; வயிற்றுக்கே வனவாசஞ் செய்தல் வேண்டும்; இரண்டணாகூடக் கிடைக்காது' என்று அச்சமூட்டுவோர் சிலர் ; 'கைராட்டினம் ஒத்துழையா இயக்கத்தின் சார்பாகப் பரவி

வருகிறது. ஆதலால் அது கூடாது' என்று அச்சுறுத்துவோர் சிலர்; அதிகாரிகளுக்குக் கதர் உடையும் காந்தி குல்லாயும் பிடிப்பதில்லை. அவைகளை அணிதல் வேண்டாம்' என்று பயமுறுத்துவோர் சிலர்; 'ஒத்துழையா இயக்கம் பெருங் குழப்பத்தை உண்டுபண்ணும். அதில் தலையிடாதிருப்பதே நல்லது' என்று கிலியூட்டுவோர் சிலர்; 'ஒத்துழையா இயக்கம் சிறைவாசத்தில் கொண்டுபோய் நிறுத்தும். அதில் சேரவேண்டாம்' என்று நடுக்குறுத்துவோர் சிலர். இவ்வாறு தேச மக்கள் பெற்றுவரும் அஞ்சாமையை வேரோடு அறுத்துத் தள்ள எதிரிகள் முயன்று வருகிறார்கள். இவர்தம் அச்ச உரைகளுக்குச் செவிசாய்ப்பது தேசத்தை வஞ்சிப்பதாகும். அஞ்சாமையை இயல்பாக வளர்க்கும் ஓர் இயக்கத்தின் வேரைக் கல்ல முயல்வோரோடு சேராதிருக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அஞ்சுகிற மனிதன் விலங்கினும் தாழ்ந்தவன். அச்சம் என்பது அஞ்ஞானம். அஞ்சாமை என்பது ஞானம். அஞ்சாமையைப்பற்றிய கல்வியைப் பயிலல் வேண்டும்; அதைப்பற்றிக் கூறும் நூல்களை ஓதல்வேண்டும்; அதைப் பற்றிப் பேசும் கூட்டத்தலைவரோடு பழகல்வேண்டும். அஞ்சாமையை வளர்க்கப் பல சங்கங்களைக் கண்டு, பல சொற்பொழிவுகளைக் கேட்பது நல்லது. அஞ்சாமையை அருந்தி, அஞ்சாமையை உண்டு, அஞ்சாமையில் வாழ்வது சிறப்பு. காண்டல் கேட்டல் முதலியன யாவும் அஞ்சாமை மயமாக இருத்தல் வீர வாழ்வுக்கு வழிகோலுவதாகும். காந்தியடிகள் அஞ்சாமை என்னும் ஞானவாள் ஏந்தி நிற்கிறார். அவர் மனைவியார் அவ்வாயுதந் தாங்கி அவர் பின்னே நிற்கிறார். அவர் குமாரருள் ஒருவர் கல்கத்தாவில் சிறைபுகுந்தார். மற்றொருவர் அல்லகாபாத்தில் சிறைபுகத் தொடை தட்டுகிறார். மோதிலால் நேரு சிறைபுகுந்தார். அவர் பின்னே அவர்தம் மகனார் அஞ்சாது சிறைசென்றார். அவர்தம் உறவினர் பலர் சிறைநோக்குகிறார். வங்காளத்தில் சித்தரஞ்சனதாஸர்

சிறைபுகுந்தார். அவர் பின்னே அவர்தந் தந்தை சித்த ரஞ்சினதாஸர் சிறைவாசத்தை நாடினார். தாயாரோ வலிந்து வலிந்து சிறை நோக்குகிறார். இப்பெரியோர் குடும்பத்தில் அச்சத்தைக் காணோம். என்ன அஞ்சாமை !

தேசத்தினிடத்தில் உண்மையான அன்பு கொள்வோரிடத்து அஞ்சாமை இயல்பாகவே அமையும். கல்கத்தாவில் கண்டோரை நடுக்குறச் செய்யும் பீரங்கிகளும், துப்பாக்கிகளும் ஏந்திய போர்வீரர்கள், அணி அணியாகச் சூழ்ந்துள்ள ஓரிடத்தில், கதர் உடை தரித்துச் சென்ற குற்றத்தின்பொருட்டு, ஒரு சார்ஜண்ட்டின் கோபத்துக்குள்ளாகிய ஓர் இளைஞன், அவ்விடத்தில் காட்டிய அஞ்சாமை போற்றத் தக்கது. சார்ஜண்ட் கதர் உடையைக் கிழித்தபோதும் ' காந்திக்கு ஜெய் ' என்று இளைஞன் கோஷித்தான் ; அவன் சார்ஜண்டால் அடி உதை வாங்கியபோதும் முகமலர்ச்சியோடு ' காந்திக்கு ஜெய் ' என்று முழங்கினான் ; வழியே தாணாவுக்குச் சார்ஜண்ட் அவனை இழுத்துக்கொண்டு போனபோதும் ' காந்திக்கு ஜெய் ' என்று சங்கீர்த்தனஞ் செய்தான். ' தன் உடையும் முழக்கமும் சார்ஜண்டுக்குக் கோபமூட்டுமே ; கோபமேலீட்டான் அவன் தன்னைப் பெரிதும் துன்புறுத்துவானே ' என்ற அச்சம் இளைஞனுக்குத் தோன்றவில்லை. அத்தகை அஞ்சாமை, சிறுவனுக்கு எங்கேயிருந்து தோன்றியது ? அவனிடத்துள்ள தேசபக்தியினின்றும் அது தோன்றியதென்றே கூறல்வேண்டும். உண்மையான தேசபக்தி உள்ளவரிடத்தில் அஞ்சாமை இயல்பாகத் தோன்றும்.

சகோதரிகளே ! சகோதரர்களே !! எதற்கும் அஞ்ச வேண்டாம். ' அஞ்சுவது யாதொன்றுமில்லை ; அஞ்ச வருவதுமில்லை ' என்ற திருவாக்கு நமது தமிழ்நாட்டில் பிறந்ததன்றோ ? தமிழ்மக்களே ! எழுங்கள் ! அஞ்சாதேயுங்கள் ! பொன் பொருள் பூமி காணி மனைவி மக்கள் உற்றார் பெற்றார் மீது கவலை வேண்டாம். திடீரென மரணம் நேர்ந்தால், நம் உயிர்ச்சார்பும் பொருட்சார்பும் உடன் வருமோ ?

எல்லாவற்றையும் எல்லாரையுங் காக்க ஓர் ஆண்டவன் இருக்கிறான். அவன்மீது பாரத்தைச் சுமத்தி, வந்தேமாதர முழக்கத்தோடு, 'அஞ்சாமை' என்னும் ஞான வாளேந்தி எழுங்கள். (30–12–1921)

# பாவம்

'பாவம்' என்னுஞ் சொற்கு விரிபொருள் கூறவேண்டுவதில்லை. அஃது ஆதியா அநாதியா என்னும் ஆராய்ச்சியும் வேண்டுவதில்லை. உலகில் பாவம் என்னுஞ் சொல் வழக்கிலிருக்கிறது. பாவவினை இஃது என்று ஒவ்வொருவருக்குந் தெரியும். 'பாவஞ் செய்யாதே' என்று சொல்லாத பெரியோரில்லை. மனச்சான்றெனுந் தெய்வ உணர்வுக்கு மாறுபட்டு நிகழ்த்தப்பெறும் வினையைப் பாவம் என்று சுருங்கக் கூறலாம்.

'பாவம் என்பது மனிதப் பிறப்புக்குத்தானா உண்டு? ஏனைய விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்கட்கில்லையோ' என்னும் வினா சில இடங்களினின்றும் எழலாம். மனிதன் பாவ வினை யாற்றும்போது, 'அதைச் செய்யாதே' என்று அவன்மாட்டுள்ள ஓர் அறிவு தடைசெய்கிறது. அவ்வறிவு விளக்கம் விலங்கு முதலிய உயிர்கட்கில்லை என்பது வெள்ளிடைமலை. ஆதலால், விலங்கு முதலிய உயிர்களைப் பற்றி ஈண்டு ஆராயவேண்டுவதில்லை. 'பாவஞ் செய்யாதே' என்று உணர்த்தும் அறிவுடைய மனிதனைப் பற்றியே சிந்தித்தல் வேண்டும்.

'பாவஞ் செய்யாதே' என்று மனிதனை நோக்கியே ஆன்றோர் அருளிய தெய்வ நூல்கள் கூறுகின்றன. மனிதன்பாலுள்ள மனச்சான்றெனுந் தெய்வ உணர்வும் அவ்வாறே அறிவுறுத்துகிறது. எந்நூல் கூறினும், எவர் அறிவுறுத்தினும், எவ்வறிவு தடுப்பினும் மனிதன் பாவஞ் செய்யா திருக்

கிறனே? மனிதன் பாவஞ்செய்து கொண்டே யிருக்கிறன். பாவச் செயல்களில் ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் வேற்றுமை யிருக்கலாம். ஒருவன் ஒருவித பாவஞ் செய்கிறன். மற்றொருவன் மற்றொருவித பாவஞ் செய்கிறன். பாவத்தினின்றும் நீங்கிய மனிதன் இருக்கிறனு என்பதும், அதனின்றும் பிழைத்து வாழும் முறை இருக்கிறதா என்பதும் ஆராயற்பாலன.

உலகில் பாவம் நிகழ்த்துவோரை ஒறுக்கச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதனுல் ஆக்கப்படுஞ் சட்டங்களால் பாவவினைகள் அறவே களையப்படும் என்று நாம் கூற முந்தவில்லை. சில சமயங்களில் சட்டங்களே பாவவினைக்குத் துணைநிற்பன வாகின்றன. இருந்தாலும் பொதுவாகச் சட்டஞ் செய்யப்படுவதன் நோக்கம், பாவத்தைத் தகையவேண்டு மென்பதன்றே?

பண்டை நாளில் மனிதன் அரசாங்கம் கோலினன். எந்நோக்குடன் அவன் அதைக் கோலினன்? உலகில் பாவச் செயல்களைத் தடுத்துப் புண்ணியச் செயல்களைப் பெருக்கற்கென்றே மனிதன் அரசாங்கத்தைக் கோலினன். நாளடைவில் அந்நோக்கம் சிதையலாயிற்று. அரசாங்கம் பாவிகளால் நடத்தப்படுமானல் உலகில் பாவமே தாண்டவம் புரியும்.

அரசாங்கத்தை நடாத்துவோர் மனிதராகலானும், மனிதர் பாவத்துக்கு எளியராகும் இயல்பினராகலானும் அரசாங்கத்தால் பெரிதும் நலன் விளையாதொழிகிறது. அரசாங்கமும், அஃது ஆக்குஞ் சட்டமும் கடவுள் இயற்கைச் சட்டத்துக்கு அரண் செய்வனவாக இருப்பின் தீமையை ஒருவாறு விலக்கிக்கொள்ளலாம்.

மனிதனைப் பாவத்தினின்றும் பிழைப்பிக்க இயற்கைச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அச்சட்டங்களைச் சிலர் நூருகவும் சிலர் பத்தாகவும் சிலர் எட்டாகவும் சிலர் ஐந்தாகவும் தொகுத்துள்ளார். 'கொலை செய்யாதே; களவாடாதே; கள்ளுண்ணுதே; பிறர்மனை விழையாதே; பொய் பேசாதே' என்னும் இவ்வைந்தில் எல்லாம் அடங்கும். இவ்வைந்தறங்

களையும் முறையே நிகழ்த்தி வருவோன்பால் பாவம் அணுகாது என்று அறநூல்கள் கூறுகின்றன.

ஒவ்வொருவரிடம் ஒவ்வொருவிதக் குற்றம் எப்படியோ நிகழ்ந்துவிடுகிறது. உலகில் 'பாவஞ் செய்யாதே பாவஞ் செய்யாதே' என்று பேசுவோர் பலர்; எழுதுவோர் பலர். பேசுவோரும் எழுதுவோரும் தம்மைச் சோதித்துப் பார்த்துத் தமது நிலைகண்டு தமது குறையுணர்ந்து வருந்தல்வேண்டும். பிறர் மனைவியை விழையும் ஒரு நீதிபதி, பிறர்மனை விழைந்த ஒருவனைத் தண்டிக்கிறான். நியாயச் சட்ட வழி நின்று இவன் தண்டனை கூறியது போற்றத்தக்கதே. ஆனால் தண்டிக்குமிவன் பாவத்தினின்றும் பிழைத்தானா என்பது கவனிக்கப்படல் வேண்டும். அவனும் கோயிலுக்குப் போய், 'ஆண்டவனே! நான் பாவி! என் பாவத்தை மன்னித்தல் வேண்டும்' என்று வேண்டுகிறான். உலகில் பாவஞ்செய்யும் ஒருவன், மற்றொருவனை நோக்கிப் 'பாவஞ்செய்யாதே' என்று சொல்லிவருகிறான். இம்முறையால் பாவம் எவ்வாறு நீங்கும்?

மனிதன் பாவத்தில் பிறந்து பாவத்தில் வளர்வது கண்கூடு. பாவஞ் செய்வது தவறு என்பதை மனிதன் உணர்கிறான். உணர்ந்தும் அதை அவன் செய்யாம லிருக்கிறானா? இல்லையே! என் செய்வது! ஒருவன் பிறர்க்குப் போதிப்பதோடு, தன்பாலுள்ள குறையைக் களைய முயலல்வேண்டும். எவன் ஒருவன் தன்பாலுள்ள குறையைக் களையாது, அக்குறையைப் போக்குமாறு பிறர்க்குப் போதிக்கிறானோ, அவனினுங் கொடியன் வேறொருவனிருப்பனோ? எவன் ஒருவன் தனது குற்றமுணர்ந்து வருந்துகிறானோ அவனே தூயனாதற்கு வழிதேடுகிறவன். திருவருள் ஞானங் கைவரப்பெற்ற பெரியோரும், 'குலம் பொல்லேன், குணம் பொல்லேன்' என்று அருளிச் செய்திருப்பது உன்னத்தக்கது.

'குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற

விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே.'

மனிதன் பாவத்தினின்றும் விலக - அடிக்கடி - கூடுமானால் இடையறாது - ஆண்டவனைப் பலவழியிலும் போற்றிய வண்ணமாயிருத்தல்வேண்டும். மனிதன் கடவுள் திருவருளைக் கொழுகொம்பாகக் கொண்டு, தான் ஆற்றும் பாவங் கருதி வருந்தி வருந்தி, அழஅழப், பாவநீக்கமும் - அவ்விடத்தில் திருவருள்பதிவும் - நிகழ்ந்துகொண்டே போகும். ஒருவன் அறியாமையால் ஆற்றும் பாவங்கருதி, ஆண்டவனை நோக்கிக் கசிந்து கசிந்து, உண்மையாக உருகுவானாயின், அவன் மீண்டும் அப்பாவம் நிகழ்த்த ஒருப்படான். அவ்வாற்றலைக் கடவுள் அருள் நல்குகிறது. ஆதலால், கடவுள் நெறியே பாவ நீக்கத்துக்குரிய செந்நெறி யாகும்.

கடவுளைத் தொழுதல்போல் நடித்துப் பழிபாவங்கள் செய்துவரும் வஞ்ச நெஞ்சினர் பேச்சே ஈண்டு வேண்டாம். மனிதன் பாவத்துக்கு எளியன் என்பது உண்மை. எளியன் எளியன் என்று பாவத்தையே செய்வோன் விலங்கினத்தில் சேர்ந்துவிடுவான். மனிதன் தன்பாலுள்ள எளிமையை மனந் திரும்புதலாலும், ஆண்டவன் அருள்நாடி வருந்துவதாலும் போக்க முயலல் வேண்டும். இம் முயற்சியின்றி வாழ்வோன் மனிதனாகான்.

பாவத்தையுணர்ந்து, (மீண்டும் பாவஞ் செய்யவிடாத) திருவருள்நெறி நிற்போர்வழி அரசு நடைபெறின், உலகம் நன்னிலை எய்தும். அரச அமைப்பு, மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது. நன்மக்கள் வாழும் ஊரில் நல்லரசு நிலவுதலியல்பு. மக்கள் பழிபாவங்களுக்கு அஞ்சும் வழியில் நின்றொழுகல்வேண்டும். அதுவே கடவுள்வழி என்பது. பாவமில்லாக் கடவுளைப் பாவி போற்றினால் பாவங் கழியப் பெறுவன்.

தற்கால உலகில் பாவம் எவ்வெவ்வழியில் பரவுகிறது என்பதை நினைக்கும்போது உள்ளம் நடுங்குகிறது. ஆ! ஆ! எத்துணை வழியில் பாழும் பாவம் பரவுகிறது! அதற்கேற்ற கல்வியும், அதற்கேற்ற வழக்க ஒழுக்கங்களும் பரவிவருகின்றன. பாவத்தைப் போக்கவந்த மனிதன், இங்குப் பாவத்திலே அழுந்துவதன் கொடுமையை என்னென்று சொல்வது? பாவத்தை யொழிக்கக் கடவுள்நெறி நிற்பதில் பேர்பெற்ற இந்தியாவும் தனது நிலையினின்றும் பிறழ்ந்துநிற்றல் நேர்ந்திருக்கிறது. கடவுள் நினைவும், கடவுள் வழிபாடும், கடவுளைப் பாடும் முறையுமே வாழ்வாகப் பரிணமித்திருந்த நாடா பாவத்துக் கிரையாவது? இயந்திர வாழ்வும், வக்கீல் தொழிலும், வயிற்றுப் படிப்பும் பாவத்தை வளர்க்காது பின்னை எதை வளர்க்கும்? நாட்டைத் திருத்தி நல்வழிப்படுத்த ஒத்துழையாமை தோன்றிற்று. அதுவும் பாவத்தால் விழுங்கப்பட்டது. ஒத்துழையாமையின் ஒடுக்கம், நாட்டின் பாவப்பெருக்கைப் புலப்படுத்தவில்லையோ?

பாவத்தைப் போக்கும் வழியைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமானால், நாட்டுக்கல்வி, சமயப்பற்று முதலியவற்றை உயிர்ப்பித்தல் வேண்டும். நிர்மாணவேலை என்பது காங்கரஸ் குறிக்கும் வேலை மாத்திரமன்று. மற்றும் பல வேலைகளையும் நாம் கூட்டிக்கொள்ளலாம். நமது நீதி நூல்களை - அற ஒழுக்க நூல்களை - அன்பு நூல்களைப் படிக்க வேண்டாமென்று காங்கரஸ் கூறுமோ? காங்கரஸ் தொண்டர் ஒவ்வொருவரும் திருக்குறள் படித்தலாகாதோ? பாவத்துக்கு அஞ்சும் அறிவு பெறுதற்குரிய பணியாற்றத் தொண்டர்கள் முயலல்வேண்டும்.

மக்கள் உள்ளத்தில் அன்பு இரக்கம் ஈகை முதலிய நறுங்குணங்கள் பெருகப் பெருகப் பாவஎழுச்சி தானே ஒடுங்கிப் போய்விடும். அக் குணப்பேற்றிற்கு அருள்வடிவாய ஆண்டவன் வழிபாட்டைவிட வேறொன்றிருத்தல் எமக்குத் தெரியவில்லை. மனிதன் பாவத்தைக் குறித்துக் கழிவிரக்கமும், மீண்டும் அப் பாவ எண்ணந் தோன்றாதவாறு காக்கத் திருவருள் நாட்டமும் பெற முயலல்வேண்டும்.

ஒருவன் தான்செய்யும் பாவங்குறித்து ஆண்டவனை நோக்கி அழுதால் ஆண்டவன் அருள் செய்யானோ? பாவத்தை மன்னித்து அருள்புரிய ஆண்டவனிருக்கிறான். அஃதே அவன் வேலை. பாவத்தை ஆற்றிக்கொண்டே - கடவுளை நோக்கி அழுதுகொண்டே-இருந்தால், பாவம் கழன்றுவிடுமோ என்று சிலர் கேட்கலாம். அறியாமையால் செய்யும் பாவங் குறித்து வருந்தும் மனமுடையான், மீண்டும் அப்பாவம் செய்ய ஒருப்படான். 'பாவங் குறித்து வருந்தல்' என்பதன் நுட்பத்தை உணர்வோர்க்கு எவ்வித ஐயமும் நிகழாது. ஈண்டுப் பெரியோர் திருவாக்குகளிற் சில எடுத்துக்காட்டுகிறேன்.

'இருப்பு நெஞ்ச வஞ்சனேனை ஆண்டு கொண்ட
நின்ன தாள்'

'யானே பொய் என்னெஞ்சும் பொய் என்னன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதா லுன்னைப் பெறலாமே'

'இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலு மேலுநற் குழலி பங்கனே'

'கல்லை மென்கனி யாக்கும் விச்சை கொண்டு
என்னை நின்கழற் கன்பனாக்கினாய் எல்லையில்லை நின்கருணை'

'கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை'

'ஏசினும் யானுன்னை யேத்தினும்
என்பிழைக் கேகுழைந்து வேசறு வேனை விடுதிகண்டாய்'

'வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்'

'பேயேன துள்ள பிழைபொறுக்கும் பெருமையனை'

'கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால் நிற்பானை'

'வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை
நின்பெருமையினல் பொறுப்பவனே'

'வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே'

'அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ யளித்த
அருளினை மருளினல் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரிவாயே'

'பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே'

'இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்
என்புருக்கிக் கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினை'

—மாணிக்கவாசகர்

பாவத்தை அழிக்க வல்லது கடவுள்நெறி ஒன்றே. கடவுள் முன்னிலையில் பாவத்தை வெளியிடும் ஆண்மைக் குணம் மனிதன் பெறல்வேண்டும். (12–6–1925)

# ஒழுங்கு

## I

ஒழுங்கு என்பது எல்லாவற்றிற்கும் எவர்க்கும் இன்றியமையாதது. ஆண்டவன் தொழிலும், சராசரங்களின் இயக்கமும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டே நிகழ்கின்றன. பஞ்சபூதங்களும், பிறவும் ஒழுங்குபெறத் தங் கடமைகளை ஆற்றி வருகின்றன. ஒழுங்கிற்கு மாறுபட்டு இயற்கை காரியப்படின், உலக வாழ்வே சிதைவுறும். மக்கட்கு மரங்கள் பயன் பட்டு வரும் ஒழுங்கும், மரங்கட்கு மக்கள் பயன்பட்டு

வரும் ஒழுங்கும் சிந்திக்கற்பாலன. சூரியன் தன் கடனை நிகழ்த்திவரும் ஒழுங்கை என்னென்று வருணிப்பது ?

ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு இயங்கும் உலகத்தில் வாழும் மக்கள், ஒழுங்குக்குக் கட்டுப்பட வேண்டு மென்பது நியதி. ஒழுங்கைக் கருதாத மனிதன் வாழ்வும், சமூகத்தின் வாழ்வும், தேசத்தின் வாழ்வும் இடர்ப்பட்டு வீழும். ஒழுங்கைப் போற்றும் மனிதவாழ்வும் பிறவும் வளம்பெறும். ஆதலால், மனித வாழ்வுக்கு இயன்றியமையாது வேண்டப்படும் பலவற்றுள் தலையாயது ஒழுங்காகும். மனிதனல்லாத மற்ற உயிர்களின் வாழ்வை இயற்கை ஒழுங்குபெற நடத்துகிறது. இஃது, அஃறிணை உலகுக்கு ஆண்டவன் அளித்த வரம் என்னலாம். உயர்திணை இனத்தவனாகிய மனிதனுக்குப் பகுத்தறிவு உண்மையான், இயற்கைக்கு மாறுபடாத ஒழுங்கை, அவன் தானே தேடவேண்டியவனாயிருக்கிறான்.

மனிதன் ஒவ்வொருவனும், தன் தன் எண்ணத்தை - உரையை - செயலை - ஒழுங்குபடுத்திக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒழுங்கைக் கைப்பற்றி ஒழுகுவானாயின், அவன் ஒன்றி வாழும் சமூகம் ஒழுங்குபடும்; அதனால் தேசமும் ஒழுங்காக நடைபெறும். ஒரு மனிதனையும், ஒரு சமூகத்தையும், ஒரு தேசத்தையும் உயர்த்துவது ஒழுங்கேயாகும்.

மேல்நாட்டார் இந்நாளில் (எவ்வித நாகரிகத்திலோ) ஏற்றமுற்றுள்ளனர். அவர் ஏற்றமுற்றதற்குக் காரணங்கள் பல கூறலாம். அவைகளுள் ஒன்று - சிறந்த ஒன்று - ஒழுங்கு. அவர் ஒழுங்குவழி நின்று, ஒழுங்கைப்பற்றி, ஒழுங்குக்குட்பட்டுக் காரியங்களை நடத்துகிறார். அதனால் அவர் தொடங்குவனவெல்லாம் நலம் விளைத்து வருகின்றன. மேல்நாட்டார்க்கு உயிர் ஒழுங்கு என்று கூறல் மிகையாகாது.

நம்மவர்களிடம் ஒழுங்கில்லை என்று இதுபோழ்து எவருங் கூறுகிறார். ஒழுங்கைப்பற்றிப் பேசுவோர் எழுதுவோரும் ஒழுங்கைக் கடைப்பிடித்தொழுக முடிவதில்லை. ஒழுங்கில்லாச் சமூகத்தில் ஒருவர் இருவர் ஒழுங்கைக்

கடைப்பிடித் தொழுகுதற்கும் இயல்வதில்லை. இவ்வொழுங்கினம் தொன்றுதொட்டு வருவதென்று கூறுதற்கும் இடமில்லை.

நம் முன்னோர் ஒழுங்கைப் பெரிதும் போற்றினர் என்பதற்குப் பல சரிகளிருக்கின்றன. நம் அறநூல்கள், நீதிநூல்கள், ஒழுக்கநூல்கள், புராணங்கள், இலக்கிய இலக்கண நூல்கள் முதலியன ஒழுங்கைப் போதிக்கின்றன. ஒழுங்கைப் போற்றிய நம் முன்னோர் கண்ட ஓவியமும் சங்கீதமும் மனதை உருகச் செய்கின்றன. ஒழுங்குபட்ட வாழ்வில்லாச் சமூகத்தினிடையில் சிறந்த ஓவியமும், நுண்ணிய இசையும், பாக்களும், பிறவும் அரும்புமோ ? நம் முன்னோர் நுண்ணறிவைக் கூர்ந்து கூர்ந்து ஆய்ந்தால், அவர்தம் ஒழுங்குநெறி புலனாகும். அத்தகை ஒழுங்கு நமது தேசத்தில் இப்பொழுது வீழ்ந்துபட்டதன் காரணத்தை ஆராய இது நேரமன்று. ஆராய்ந்து தெளிவதினும் ஒழுங்குவழி நிற்க முயல்வது நலம்.

ஒவ்வோர் இந்தியனும் தன் நாட்டுக்குரிய வாழ்க்கையை நடாத்த உறுதிகொள்வானாயின், தேசத்தில் வீழ்ந்துபட்ட ஒழுங்கு மீண்டும் தளிர்த்துச் செழுமையுறும். நம்மவர் ஒழுங்கை விரும்புவது உண்மையானால், அவர் முதலாவது தற்கால மேல்நாட்டு நாகரிகக் கல்வியிலுள்ள அவாவைத் தணித்துக் கொள்ளல்வேண்டும். ஒழுங்குக்கு அடிப்படையான மேல்நாட்டுக் கல்வியைத் தொலைக்க முயல்வது அறிவுடைமையாகுமா என்று சிலர் வினவலாம். மேல்நாட்டுக் கல்வி மேல்நாட்டு ஒழுங்குக்கு அடிப்படை என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். அதை நாம் மறுக்கவில்லை. அக்கல்வியால் நமது நாட்டு ஒழுங்கு இடர்ப்படுகிறதென்பதையே ஈண்டு நாம் வலியுறுத்துகிறோம். ஆங்கிலம் பயின்ற மக்களிற் பெரும்பான்மையோர் - அவர் எவ்வளவு செல்வமுடையவராயினும் - அடிமைத் தொழிலையே விரும்புகிறார். அடிமைத் தொழிலின் பொருட்டுத் தேச ஒழுங்குகள் பலவற்றிற்கு மாறுபட்ட வாழ்க்கையை நடத்துங் கடமை அவருக்கு ஏற்படுகிறது. அடிமைக் கல்வியும் அடிமைத் தொழிலும் மனிதனுடைய

மனோநிலையை மாற்றும் என்பதிற் சந்தேகமில்லை. மனோநிலை கோணின் ஒழுங்கும் கோணும். நம்முன்னோர்கள் பெற்றிருந்த அறிவாற்றலும் தொழில் வல்லமையும் இப்பொழுது எங்கே ஒழிந்தன? ஒழுங்கில்லாத இடத்தில் அறிவேது? தொழிலேது?

ஆங்கிலம் பயின்ற கூட்டத்தார், தத்தம் பழந்தொழிலை இழிவெனக் கருதிப், பத்துக்கும் பதினைந்துக்கும் திண்டாடி, ஒழுங்கை ஒழித்துவிட்டனர். நமது நாட்டுக்குக் கேடு சூழ்வித்தோர் ஆங்கிலம்பயின்ற கூட்டத்தவரே - அவரே - அவரே - என்று ஒரு முறைக்குப் பன்முறை அறைகூவு கிறோம். நாட்டு உணர்ச்சியை - நாட்டுக் கல்வியை - நாட்டுத் தொழிலை - ஒழித்த ஒரு கல்வியை நாம் எவ்வாறு போற்று வோம்! ஆங்கிலப் புலமையை நாம் பழிப்பதாக எவரும் கருதலாகாது. அறிவை வளர்க்கும் நூல்கள் ஆங்கிலத்தில் இலட்சக்கணக்காக இருக்கின்றன. அறிவு வளர்ச்சிக்காக ஆங்கிலம் பயில்வதனால் நமது நாட்டுச்சிறப்புக் குன்றாது. வயிற்றுக்காக ஆங்கிலம் பயில்வது இழிவு என்பதை மட்டும் குறிப்பிடுகிறோம்.

தற்போதுள்ள ஆட்சி முறையில் எல்லாக் காரியங் களும் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. அதனால், நம்ம வர்கள் தொழிலின்பொருட்டு ஆங்கிலம் பயில அவாவு கிறார்கள். அவ்வவாவை எழுப்புகிறது எது என்பது கவனிக்கற்பாலது. சுதேச மொழிகளில் ஆட்சிமுறைக் காரியங்கள் நடைபெறுங் காலத்து ஆங்கிலம் பயில அவாவு வோரை அறிஞரெனப் போற்றலாம். அறிவு வளர்ச்சி கருதி ஆங்கிலம் பயின்றாலென்ன? ஜெர்மன் பயின்றா லென்ன? ஒழுங்குக்கு இடையூறு செய்யுங் கல்விமுறை எதுவாயினும், அஃது ஒழிதல் வேண்டும்.

நமது நாட்டில் மனித வாழ்விற்குரிய ஒழுங்குமுறைகள் பல இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவ்வொழுங்குவழி நடப்பாராயின் தேசம் ஒழுங்குபடும். சுயராஜ்யம் விரைவில் அரும்பும். (5–5–1922)

# II

அடிமை வாழ்க்கை முதலியன தேசத்தின் ஒழுங்கைக் கெடுத்து வருவதைச் சென்ற வாரங் குறிப்பிட்டோம். அடிமை வாழ்க்கை முதலியவற்றை ஒழிக்கவேண்டுமானால், ஒவ்வொருவருந் தனித்தனியாக ஒழுங்கைப் போற்றி வாழ முயலல் வேண்டும். ஒவ்வொருவர் ஒழுங்கும் தேசத்தின் அடிமை வாழ்க்கையை அறுக்குங் கருவி என்பதை ஈண்டு வலியுறுத்துகிறோம். ஒழுங்கைக் கவனியாத மனிதர் செய்யும் முயற்சிகளால் பயன் விளையாது. ஆதலால், மனிதர் ஒழுங்கை ஒரு பெருஞ் சுதந்திரக் கருவியாகக் கொள்ளல் வேண்டும்.

நம்முடைய தேசத்தில் உள்ள ஒழுங்கீனங்கள் எண்ணில. நம்மவர்களிற் பெரும்பான்மையோர் கருமத்தின்மீது பழிசுமத்தி ஒழுங்கைக் கவனிப்பதில்லை. ஒழுங்கைக் கருதாத சோம்பேறியால் என்ன காரியம் இவ்வுலகில் சாதித்தல் முடியும்? அவன் பூமிக்குப் பாரமாகித் தனக்கும் பிறர்க்கும் இடர் விளைத்துக்கொண்டிருப்பன். நம்மவர்களிற் பெரும்பான்மையோர் உடல் வாழ்வின் ஒழுங்கைக் கருதாது உயிர்வாழ்வைப்பற்றி ஞானம் பேசுகிறார். இஃது எமக்கு வியப்பாகவே தோன்றுகிறது.

ஒவ்வொருவரும் தம் வாழ்வை ஒழுங்கு என்னும் ஓர் எல்லைக்கு உட்படுத்தல்வேண்டும். உணவு, உடை, கல்வி, ஒழுக்கம், தொழில், குடும்பம், கூட்டம், அரசு முதலியவற்றை ஒழுங்குபடுத்திக்கொள்ளல் வேண்டும். தாய் தந்தையர் பிள்ளைகளை இளமையிலேயே ஒழுங்கு நெறியில் நிறுத்தி வளர்த்து வருதல்வேண்டும். நமது நாட்டுத் தாய்மார் மனத்தில், வாக்கில், செயலில் ஒழுங்கு பொலியுமானால், தேசத்தில் ஒழுங்கு நிலவாதொழியுமோ? எல்லாம் தாய்மாரிடத்தி லிருக்கின்றன. தாய்மார் அறியாமையாலும், மூடநேசத்தாலும், பிடிவாதத்தாலும் எத்தனையோ பிள்ளைகளின் வாழ்வு குலைந்துபோகிறது.

சில தாய்மார் வேளை நேரம் முதலியவற்றைக் கருதாது குழந்தைகள் அழும்போதெல்லாம், அவைகட்கு உணவு ஊட்டியவண்ணமா யிருப்பர். உணவில் ஒழுங்கைக் கொள்ளாதவர், பிறவற்றில் ஒழுங்கை எப்படிக் கொள்வர்? வேளை நேரமின்றியும், அளவு முறை முதலியவற்றைக் கருதாமலும், பன்றிகள்போல் கண்டதைத் தின்று காலங்கழிப் போரது வாழ்க்கையின் ஒழுங்கை என்னென்று கூறுவது?

உடைகளிலும் ஒழுங்கு கவனிக்கப்படல் வேண்டும். பிறர்க்குக் களிப்பூட்டவேண்டுமென்ற கருத்தோடு உல்லாச உடைகளைத் தரிப்பதும், சீதோஷ்ண நிலைக்கு மாறுபட்ட உடைகளை அணிவதும், சுகாதாரத்தை இடர்ப்படுத்தும் பலநிற உடைகளைப் பூண்பதும் ஒழுங்கீனமே யாகும்.

அறிவு விளக்கத்துக்குரிய கல்வி பிள்ளைகளுக்குப் போதிக்கப்படல் வேண்டும். அவ்வறிவால் ஒழுங்குமுறை தானே அரும்பும். அடிமைக் கல்வியால் ஒழுங்கு அறவே ஒழியும். (12–5–1922)

## III

ஒழுங்குக்கு ஒழுக்கம் இன்றியமையாதது. ஒழுக்க ஈனத்தால் ஒழுங்கு பாழ்படுவதுண்டு. ஒழுக்கம் தனித்தனி வாழ்வில் ஊடுருவி நிற்றல் போற்றத்தக்கதே. ஒருவன் தன் செயலால் பொதுஜன வாழ்விற்குத் துன்பம் நிகழாதவாறு ஒழுக்கத்தை ஓம்புதல் வேண்டும். நமது நாட்டில் இது குறைவென்றே கூறலாம். கண்ட இடத்தில் மலஜலங் கழிப்பதில் நம்மவர் பேர் பெற்றவர். ஆற்றோரங்களிலும், குளிக்குமிடங்களிலும், பானத்துக்குரிய நீர்நிலைகளிலும் பலர் கவலையின்றி மலஜலங்கழித்து, அவைகளிலேயே நீராடி நீருண்டு பூசை செய்கின்றனர். இஃதென்ன ஒழுக்கம்? இஃதென்ன ஒழுங்கு? குஷ்டரோகிகள், மற்றவர் நலத்தை மனத்தில் கொள்ளாது தெருத்தெருவாகத் திரிகிறார்கள். அவர்கள் கண்ட இடங்களில் எச்சில் துப்புகிறார்கள். காச நோயால் பீடிக்கப்பட்டவர்களிற் பலர், பிறர் சுகத்தைக்

கருதாது, பொதுப் பாதைகளில் எச்சில் உமிழ்கிறார். 'நமது எச்சிலால் எத்துணை மக்கள் வாழ்வு கெடுமோ' என்ற எண்ணம் நோயாளர்க்கு உதயமாவதில்லை. தெரிந்தவர் கூறினுங் கேளாது, செருக்கால் வேண்டுமென்றே தீச்செயலைச் செய்வோரும் நமது நாட்டிலுளர். குஷ்டரோகம் முதலிய கொடிய நோய்களால் பீடிக்கப்பட்ட ஆங்கிலேயன் தன் செயலால் மற்றவர்க்குத் தீங்கு விளைதலாகாது என்ற எண்ணத்தோடு வாழ்வன். குஷ்டரோகிகள் முதலிய நோயாளிகள் ஒதுங்கி ஓரிடத்தில் வாழ்வதற்குரிய அமைப்புகள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் உண்டு. நம்முடைய தேசத்துச் செல்வர் களியாடல்களுக்கும், வேசிகளுக்கும், தேர்தல்களுக்கும், உற்சவங்களுக்கும், பிற இழிதுறைகளுக்கும் செலவழிக்கும் பணத்தைப் பொதுஜன நலங்கருதி வைத்தியசாலை முதலியவற்றிற்குப் பயன்படுத்துவதில்லை. ஒருவன் தனியாக ஒழுக்கத்தை ஓம்புவதோடு, பொதுஜனங்களுக்குந் தன் செயலால் எவ்விதக் கேடும் நிகழாதவாறு, ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் வேண்டும். ஒழுக்கம் ஒழுங்கை ஓம்பும்.

குடும்ப ஒழுங்கு பெரிதும் போற்றத்தக்கது. குடும்பத்தை ஒழுங்குபட நடத்த இயலாத சமூகம், சுதந்திர இன்பத்தை நுகர்தல் இயலாது. குடும்பம் என்பது ஓர் அரசாங்கம். அதை ஒழுங்காக நடாத்தும் ஆற்றல் பெறல்வேண்டும். இப்பகுதி பெரிதும் பெண்மக்களுக்குரியது. திருக்குறளில் 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத்தைக் கவனிக்க. ஒவ்வொரு வீட்டிலும் பெண்மக்கள் அரசிகளாயிருந்து வருவாய்க்கேற்ற செலவு செய்தல்வேண்டும். இவ்வொழுங்கு, பண்டைநாளில் நமது நாட்டில் நிலவியிருந்தது. இந்நாளில் வருவாய்க்குமேல் செலவுசெய்து, குடும்ப ஒழுங்கைக் கெடுக்கும் பேய்களல்லவோ பெரிதும் வீடுகளில் வசிக்கின்றன? அவர்கள் என் செய்வார்கள்? தற்கால நாகரிகப் பேயின்வழி அவர்கள் ஆடுகிறார்கள்.

கூட்டம் கூட்டுறவு முதலியவற்றின் ஒழுங்கைப்பற்றி விரித்துக்கூறினால் இக்கட்டுரை இவ்வாரமும் முடிவுபெறாது.

நம்மவரிற் பலர்க்குக் கூட்டம், கூட்டுத் தொழில் முதலிய வற்றின் ஒழுங்கு இன்னும் புலனாகவில்லை என்றே கூறலாம். கூட்டங்களும் கூட்டுத் தொழில்களும் இடையூறுபட்டே ஒழிகின்றன. நமது தேசத்தில் விடயத்தில் கருத்தைச் செலுத்தாது, தம் பெருமையில் கருத்தைச் செலுத்துவோர் தொகை பெருக்கெடுத்தோடுகிறது. தம் பெருமை தந் நலம் முதலியவற்றைக் கருதிப், பொதுஜன ஊழியத்தில் நுழையும் மாபாவிகளால் தேசத்தில் சுதந்திர சூரிய ஒளி வீசுவதில்லை. கூட்டுத் தொழில்களில் செய்யப்படும் மோசங் களுக்கு அளவில்லை. மேல்நாட்டில் கூட்டங்களும் கூட்டுத் தொழில்களும் பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகின்றன. நமது நாட்டில் இன்று தோன்றும் கூட்டமும் கூட்டுத்தொழி லும் நாளை காலன்உலகம் புகச் சித்தமாயிருக்கின்றன. அந்தோ! ஒழுங்கென்னும் ஒன்றைக் கைசோரவிடுவதனால் தேசமே அல்லற்படுகிறது. தந்நம்பிக்கையும் பிறர் நம்பிக்கை யும் கூட்டத்துக்கும் கூட்டுத் தொழிலுக்கும் இன்றியமை யாதன.

ஆட்சி முறைக்குரிய ஒழுங்கும், மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது. ஒழுங்கில்லாத மக்கள் வாழும் தேசத் தின் ஆட்சிமுறை ஒழுங்கீனமாகவேயிருக்கும். ஒழுங்குள்ள மக்களால் நடத்தப்படும் ஆட்சி ஒழுங்காகவே நடைபெறும். ஒழுங்கில்லாதார் அடிக்கடி மற்றவர்க்கு அடிமைப்படுவர். ஒழுங்குள்ளவர் என்றுஞ் சுதந்திர மூர்த்திகளாக வாழ்வர்.

இப்பொழுது நமது தேசத்தில் கிளம்பியுள்ள சுயராஜ்ய இயக்கத்துக்கு இன்றியமையாதது ஒழுங்கு. ஆட்சிமுறை மையை ஒழுங்குபடுத்தவேண்டுமென்பதே இவ்வியக்கத்தின் நோக்கம். எவர்மீதும் எந்த வகுப்பார்மீதும் துவேஷங் கொள்ளவேண்டுமென்பது இவ்வியக்கத்தின் நோக்கமன்று. மகாத்மா காந்தி, தம் வாழ்க்கையை ஒழுங்காக நடாத்தி, ஒழுங்காகக் கிளர்ச்சிசெய்து, ஒழுங்காகச் சிறையில் வதி கிறார். அவரைப்போல ஒவ்வோர் இந்தியரும் ஒழுங்கைக் கடைப்பிடித்தொழுகல் வேண்டும்.

நேயர்களே! ஒழுங்கைக் கவனியுங்கள்! ஒழுங்கு உங்களைக் கரையேற்றும் நாவாய்; ஒழுங்கைக் கைசோர விடாதேயுங்கள்; ஒழுங்கு உயர்வளிக்குமா என்ற எண்ணம் வேண்டாம்; ஒழுங்கு உயர்வளிக்கும்; ஒழுங்கைப் போற்றுங்கள்; போதியுங்கள். (19–5–1922)

## ஒழுக்கம்

இப்பொழுது இங்கே (சேந்தமங்கலத்தில்-26–4–1925) பேச எடுத்துக்கொண்ட பொருள் ஒழுக்கம் என்பது. ஒழுக்கத்தைப் பலதுறைபற்றிப் பேசலாம். தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், பிற ஒழுக்கம் என்று பொருளைப் பாகுபடுத்திப் பேசலாம். அவ்வழிபற்றி ஈண்டு யான் பேசப்போகிறேனில்லை. அவ்வாறு பேசுதற்குக் குறிப்பிட்டுள்ள காலவரை போதாது. இவ்விடத்தில் அவ்வாறு பேசவேண்டுவதும் அநாவசியம். ஆதலால், ஒழுக்கத்தைப்பற்றிப் பொதுப்படச் சில உரைகள் பகர விரும்புகிறேன். நிகழுங் குற்றங் குறைகளை மன்னிப்பீர்களாக.

ஒழுக்கம் என்னும் சொற்பொருளை ஆராய்தற்கு முன்னர், ஒழுக்கம் என்பது நல்லொழுக்கமா தீயொழுக்கமா என்பது கவனிக்கப்படல் வேண்டும். அடைமொழியின்றி ஒழுக்கம் என்று சொல்லும்போது, அது நல்லொழுக்கம் என்னும் பொருளையே நல்குவதாகிறது. இது தமிழ் மரபு. ஒழுக்கம் என்பதின் சொற்பொருளை விரித்து ஓதி, உங்கள் அரிய காலத்தைச் செலவழிக்க விரும்புகிறேனில்லை. ஒழுகு, ஒழுக்கு, ஒழுக்கம் - சொல் தோற்றங் காண்க. நேர்மையாக நடத்தலை ஒழுக்கம் என்று நந்தமிழ் மக்கள் கொண்டார்கள். நீரொழுக்கு, ஆற்றொழுக்கு என வரூஉந் தொடர்களைக் கவனிக்க. சுருங்கக்கூறின் நன்னடை என்பது ஒழுக்கத்தின் பொருள் என்று கூறலாம். வடமொழியாளர் அதனை ஆசாரம் என்பர். ஆங்கிலத்தார் - Charecter - Conduct

Morality - என்னுஞ் சொற்களால் ஒழுக்கத்தின் பொருளைத் தெரிவிப்பர். நேர்மையான நடை - செம்மை நெறி - என்று கொள்வது ஒழுக்கத்தின் பொருளை ஒருவாறு விளக்குவதாகும்.

ஒழுக்கம் மக்கள் வாழ்விற்கு இன்றியமையாததா? தீயொழுக்கத்தால் விளையுங் கேடு என்னை? நல்லொழுக்கத்தால் விளையும் ஆக்கமென்னை? என்று எண்ணுவோர் - வினவுவோர் - உலகில் இல்லாமல் இல்லை. இவைகளுக்கு விடையிறுக்கும் முகத்தான் எனது சொற்பொழிவை நிகழ்த்துகிறேன்.

இயற்கையில் நியதி என்பதொன்றை ஆண்டவன் அமைத்திருக்கிறான். அந்நியதிக்கு மாறுபட்டு எவரும் நடத்தல்கூடாது. மரத்தை வளர்க்க வெந்நீர்விடுவது நியாயமோ? வெந்நீர்விட்டால் என்ன என்று கேட்கலாமோ? மலை உச்சி காண விரும்பும் ஒருவன் எவ்வழிச் செல்லுதல் வேண்டும்? ஒழுங்காக நிறுவியுள்ள வழியேயன்றோ செல்லுதல் வேண்டும்? அவ்வழி விடுத்து, அவன் வேறுவழிச் செல்வானாயின், அவனுக்கு எவ்வளவு இடர்நேரும்! இடர் மட்டுமன்று - முயற்சியும் பயன்படா தொழியும். மனிதன் நாடோறும் நீராடுதல் நலமென்று சொல்லப்படுகிறது. நீராடல் என்பதொன்று கொண்டு எந்நீரிலாவது ஆடலாமோ? எவ்வேளையிலாவது குளிக்கலாமோ? அதற்கென உள்ள நீரிலும் குறித்த காலத்திலும் ஆடுவதே சிறப்பு. ஆண் பெண்ணொடுகூடி வாழவேண்டு மென்பது நியதி. பெண்ணொடு கூடி வாழல் என்பதை மாத்திரங் கொண்டு,நோயுள்ள பெண்களுடன்கூடி வாழலாமோ? வரைவின்மகளிருடன் இன்பந்துய்க்கலாமோ? இவ்வெடுத்துக்காட்டுக்களான் விளங்குவதுஎன்னை? எவ்வினையும் நேர்மைபற்றி ஒழுகவேண்டுமென்பது. இஃது இயற்கை நியதியின் நோக்கம். இதற்கு மாறுபட்டு நடப்போன் வாழ்வு இன்னலுறுவது இயல்பு. 'நேர்பட ஒழுகு' எனவரூஉம் ஆன்றோர் திருவாக்கை ஓர்க.

'ஒழுக்கம் உயர்குலத்தி னன்று'

'ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்று நந்தமிழ்ப் பெரியோர் ஒழுக்கத்தின் சிறப்பை விளக்கியுள்ளார்.

உயிரின் ஆக்கம் ஒழுக்கத்தைப்பற்றிக் கிடப்பது. இதனால், உயிரினும் ஒழுக்கம் ஓம்பப்பட வேண்டுமென்னும் வழக்கு எழுந்ததுபோலும். மரத்துக்கு, ஒளி மண் புனல் காற்று முதலியன எவ்வளவு இன்றியமையாதனவோ, அவ்வளவு உயிர்க்கு ஒழுக்கம் இன்றியமையாதது. ஒழுக்கம் இல்லையேல் உயிர் பிறவிப்பயனைத் துய்த்தல் அரிது.

உயிர்நலத்துக்கு உடல்நலம் வேண்டற்பாலது. இதனை,

'உடம்பா ரழியில் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே'

எனவரூஉந் திருமூலர் திருவாக்கால் உணர்க. இத்திருவாக்கால் உடலோம்பலின் அவசியம் புலனாகிறது.

உடல்நலத்துக்கு அழகு அவசியம். எவன்பால் அழகு பொலிகிறதோ அவன் உடல்வளமுடையனாவன். அழகோம்ப மேல்நாட்டார் பலதுறையிலும் உழைத்துவருகிறார். உடல் நலத்துக்குரிய அழகைக் காக்க நம் முன்னோர் ஒழுக்கநெறி காட்டினர். நல்லொழுக்கமுடையான் உடலில் செழுமையும் வளமையும் அழகும் கொழித்துக்கொண்டிருக்கும். அவன் உள்ளத்தில் சீற்றம் முதலிய தீ நீர்மைகள் உறுதல் அரிது. தீ நீர்மைகள் பெரிதும் உடல் உரம் இல்லாதாரிடத்து உறுதல் இயல்பு. ஒழுக்கத்தைக் காப்போர் நீண்டநாள் உலகத்தில் வாழ்தல்கூடும். அவர்கள் நோய்வாய்ப்படுதலும் அரிது.

ஒழுக்க நிகழ்ச்சிக்கு உறைவிடம் எது என்பதைச் சிறிது சிந்திப்போம். நன்னடக்கைக்கு மனச்சான்று உறைவிடமா யிருக்கிறது என்று ஜேம்ஸ் ஆலன் கூறியுள்ளார். எவருமில்லா மாந்தோப்புக்குள் ஒருவன் நுழைகிறான். ஆங்கே தேமாங்கனிகள் அவன் மனத்தைக் கவர்கின்றன. அவன்பாலுள்ள சாத்தான் கனிகளைக் கவர்ந்து தின்னுமாறு ஏவுகிறான். ஆனால் மனச்சான்றெனுந் தெய்வம், 'வேண்டாம், அவை இன்னொருவன் பொருள்' என்று தடுக்கிறது. இங்கே மனிதனை நேர்மைவழியில் நடத்துவது அவனது மனச்சான்றன்றோ ? ஒருவன் பெண்மக்கள் நிரம்பிய தெருவூடே செல்கிறான். அவன்பாலுள்ள பேய் பெண்ணாசையைக் கிளப்புகிறது; ஆனால் அவனது மனச்சான்று 'வேண்டாம்; பிறன் மனைவி' என்று தகைகிறது. இக் காட்டுகளான், மனச்சான்றுக்கும் ஒழுக்கத்துக்கும் உள்ள தொடர்பு நனிவிளங்கும்.

உலகவழக்கில் கல்வி அறிவு ஒழுக்கம் என்று சொல்லப்படுவதை நோக்குங்கள். ஒருவன் சிறந்த கல்வியாளனாயிருப்பன். அவன்பால் ஒழுக்கமின்றேல் அவனை உலகங் கொள்ளுமோ ? இன்னொருவன் கூர்த்த மதியிற் சிறந்தவனாயிருப்பன். அவன்பாலும் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் இல்லையேல், அவனை மனிதனாக உலகம் ஏற்குமோ ? ஒழுக்கமிலாக் கல்வியும் ஒழுக்கமிலா அறிவும் போற்றப்பட மாட்டா. கல்வி அறிவினும் ஒழுக்கமே உயர்வுடைத்து. கல்வியறிவின் பயனே ஒழுக்கம் என்பது. கல்வியறிவில்லா ஒருவனிடத்து ஒழுக்கமென்ப தொன்றிருக்குமேல், அவன் கல்வி அறிவின் பயனைப் பெற்றவனாவன். கல்வி பயில்வது எற்றுக்கு ? அறிவு விளக்கம் பெறுதல் எற்றுக்கு ? ஒழுக்கத்துக்கன்றோ? ஒருவன் கல்வியின்றியோ அறிவின்றியோ வாழலாம். ஆனால் ஒழுக்கமின்றி வாழ்தல் கூடுமோ ? ஒழுக்கமிலா வாழ்வு வாழ்வாகுமோ ? ஒழுக்கம் உயர் குலத்தினும் விழுமியது ; உயிரினும் மேம்பட்டது. அது மக்கள்வாழ்விற்கு இன்றியமையாதது.

ஒழுக்க முறையை அறிஞர், புறப்புறவொழுக்கம் புறவொழுக்கம் அகப்புறவொழுக்கம் அகவொழுக்கம்எனநான்கு

வகையாகப் பிரிக்கின்றனர். அந்த நான்கும், புறம் அகம் என்னும் இரண்டில் அடங்கும். கூர்ந்து சிந்திப்பின் அகமே புறம் என்பதும் விளங்கும். இதைப்பற்றி அறிஞர் ஜேம்ஸ் ஆலன் தனியாக ஒரு நூலும் எழுதியுள்ளார். புறத்துக்கும் அகத்துக்கும் உள்ள தொடர்பைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரித்துக் கூறுகிறது.

புறவொழுக்கம் அகவொழுக்கம் என்னும் இரண்டில், முதலாவது புறவொழுக்கத்தை எடுத்துக் கொள்வோம். அதைப்பற்றியும் முற்றும் பேசுதற்கு இங்கே இடமில்லை. சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட்டுச் செல்கிறேன். ஆசிரியர் திருவள்ளுவனார் 'புறந் தூய்மை நீரா னமையும்' என்று கூறியுள்ளார். ஆதலால், நீராடலின் அவசியத்தைப் பற்றிச் சுருங்கச் சொல்லலாமென நினைக்கிறேன்.

'வைகறைத் துயிலெழு' என்பது மூதாட்டியார் திருவாக்கு. வைகறையில் துயிலெழாது படுக்கையில் கிடப்பவன் உடலில் இரத்தக் கொதிப்பு உண்டாகும். அந்நேரத்தில் படுக்கையில் கிடந்து பழகிக்கொண்டவன் பலதிற நோய் வாய்ப்படுவன். இரத்தக் கொதிப்பு வேகத்தால் அவன் அடிக்கடி சினமுறுவன். நஞ்சுண்டவனது நிலைக்கும் அவனது நிலைக்கும் வேற்றுமையில்லையென்று கூறலாம். அவன் குருதி கரிய நஞ்சாகிறது. வைகறையில் எவ்வுயிரும் உறங்கலாகாதென்பது இயற்கை விதி. அஃறிணைகளாகிய பறவைகள் வைகறையில் துயில்விடுத்து எழுகின்றன; மன எழுச்சியோடு ஆடியும் பாடியும் ஆகாயத்தில் பறந்து செல்கின்றன. மன எழுச்சிக்குரிய காலம் வைகறையே. அக்காலத்தை உறங்குவதில் கழிப்பவன் நாளடைவில் எழுச்சி யில்லாச் சோம்பேறியாவன்; பூமிக்குச் சுமையாவன். ஆதலால், வைகறைத் துயிலெழுவது வாழ்விற்கு ஊக்கமூட்டுவதாகும். அந்நேரத்திலெழுந்து, காலைக் கடன்களை முடித்து, எவ்வித வேலை செய்யாமலும் உணவு கொள்ளாமலும் நீராடுதல்வேண்டும். விடியற்காலத்தில் நீராடி, இளஞாயிற்றொளி உடலிற் படர, புனித உயிர்ப்பு மூக்கில் அடர, வீடு சேர்கிறவன்

இவ்வுலகில் பன்னெடு நாள் வாழும் பேறு பெறுவான். நீராடலின் சிறப்பை உணர்த்த ஈண்டொருவர் வரலாற்றுக் குறிப்பை நினைவூட்டுகிறேன்.

பிரான்சு தேசத்தில் எண்பது வயதுடைய ஒரு கிழவி இருந்தாள். வயதைக்கொண்டு அவளைக் கிழவியென்று அழைக்கலாமேயன்றி, அவள் வடிவத்தைக்கொண்டு அம் மொழியால் அவளை அழைத்தல் தகாது. அவள் வடிவம் இளங்குமரி வடிவமாகப் பொலிந்திருந்தது. அவளுக்குப் பிள்ளைகளுண்டு. பேரப் பிள்ளைகளுமுண்டு. ஒரு நாள் ஒரு பேரன் அவளை உற்று உற்று நோக்கி, அவளைத் தன் விருப்பத்திற்கு இணங்குமாறு கேட்டான். அவளது கட்டழகு அவனைக் காமுறச்செய்தது. அவள் வயதென்ன ? இவன் வயதென்ன ? முறையிலோ அவள் பாட்டி ; இவன் பேரன். பேரன் மனத்தைத் தகாதவழியில் அவளழகு நடாத்தியதெனில், அவளது இளமை வளத்தை என்னென்று கூறுவது? பேரன் விருப்பத்திற்குப் பாட்டி இணங்குவளோ? அக் குறிப்புணர்ந்த பேரன், நாணமேலீட்டான் தூக்கிட்டுக்கொண்டு இன்னுயிர் துறந்தான். எண்பது வயதுடைய ஒருத்தி, இத்தகைய இளமை வாய்ந்திருந்ததற்குக் காரணமாக நின்றது எது ? அவளது வீட்டுக்கு அணித்தாய் ஓடும் ஒரு சிற்றருவியில் அவள் நாடோறும் பன்முறை நீராடி வந்ததேயாகும். இதனை ஹாரிகேஸ் என்பவர் எழுதிய 'என்றும் வாழ்வதெப்படி ?' (How to live for ever ?) என்னும் நூலில் பரக்கக் காணலாம். இதனால் நீராடலின் சிறப்புச் செவ்வனே விளங்கலாம்.

நமது நாட்டிலும் விடியற்காலையில் நீராடும் பழக்கம் உண்டு. இன்னும் கிராமங்களில் அக் காலைக்காட்சியைக் காணலாம். நீரின் பெற்றியுணராது சுகாதாரமுறைக்கு மாறுபட்ட பல காரியங்களை நம்மவர் நிகழ்த்துகிறார். ஆற்றில் ஒருபக்கம் ஒருவன் நீராடுவன் ; மற்றொருபக்கம் இன்னொருவன் நாணமின்றிச் சௌசம் செய்வன் ; வேறொருவன் குதிரை கழுவுவன். ஆற்றோரத்தில் நம்மவர் நிரை நிரையாக மலஜலங் கழிக்கச் சிறிதும் அஞ்சுவதில்லை. மக்கள் நடமாடும் வழிகளில்

மலஜலங் கழிப்பதினும் பாவம் வேறொன்றுண்டோ? பெருநோய்கள் பெரிதும் மலஜலங்களை மிதிப்பதினால் உண்டாகின்றன. விரிவு சுகாதார நூல்களிற் காண்க. 'ஆற்றுநீர் ஓடுநீர். அதற்குத் தீட்டில்லை' என்று போலிச் சாக்குப் போக்குகளை நம்மவர் சொல்வது வழக்கம். ஓட்டமின்றிக் கட்டுப்பட்டு நிற்கும் நீர் நிலைகளிலாவது நம்மவர் அசுத்தஞ் செய்யாமலிருக்கிறாரா? கரையோரத்தில் மலஜலக் கழிவு ஒருபக்கம்; சௌசம் மற்றொருபக்கம்; துணி தோய்த்தல் இன்னொருபக்கம்; தலை முழுகல் வேறொருபக்கம்; நீரருந்தல் பிறிதொருபக்கம்; பெண்மக்கள் நீர்முகத்தல் அதன் பக்கம். ஆண்மக்கள் பெண்மக்கள் வேற்றுமை யின்மையையும் அங்குக் காணலாம். ஒரே குளத்தில் ஒரே இடத்தில் ஒருவன் சௌசம் செய்துவிட்டு, உடனே அதேயிடத்தில் முகங்கழுவி, அந்நீரை வாயில் விட்டு உமிழ்கிறான்! என்ன சுகாதாரம்! என்ன அறிவு! நீரைக் கடவுளெனப் போற்ற வேண்டுமென்று நூல்கள் கூறுகின்றன. அந் நீரைக் கெடுப்பதில் நம்மவர் மிகவும் பேர்பெற்று விளங்குகிறார்.

எந்நீரில் மூழ்குதல் வேண்டும் என்பதைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். ஓடு நீரில் காலையில் முழுகுவது நலம். ஓடாது கட்டுப்பட்ட நீரில் மூழ்குவது கூடாது. ஆறில்லா ஊரில் வாழ்வோர் பெரிதும் வெந்நீரில் மூழ்குதல்வேண்டும். பெரிதும் மூளைவேலை செய்வோர் வெந்நீரிலேயே தலை முழுகுதல் சிறப்பு. கங்கை, காவிரி போன்ற பெருநதிகளில் மூளைவேலை செய்வோரும் நீராடுவதால் எவ்விதத் தீங்கும் விளையாது. தண்ணீர் நரம்புகளுக்கு உரம் ஏற்றும். வெந்நீர் விரைவில் அழுக்கை அகற்றும். எப்படியாவது சுகாதார முறை வழிநின்று நீராடல் வேண்டும். எக்காரணம் பற்றியும் அசுத்த நீரை உபயோகித்தலாகாது.

நீரால் புறத்தைத் தூய்மை செய்த பின்னர், நீதிவடிவினனாகிய ஆண்டவனை நினைத்தலும் பாடலும் போற்றலும் வேண்டும். ஒழுக்கத்துக்கும் ஆண்டவன் வழிபாட்டுக்கும் தொடர்பு உண்டு. மனிதன் சார்ந்ததன் வண்ணமாகும்

இயல்பினன். ஆண்டவன் மாசிலாமணியாய், நீதிப் பொருளாய், ஒழுக்கமயமா யுள்ளவன்.

'இன்னவுரு இன்னநிறம் என்றறிவ தேலரிது நீதிபலவும்
தன்னவுரு வாமெனமி குத்தவன்'—சம்பந்தர்

'சீலந் தான்பெரி தும்முடை யானை'—சுந்தரர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒருமுறை உரைத்த பொய்ம்மைக்கு, அவருடைய இரண்டு கண்களையும் பிடுங்கிய இறைவன், எத்தகை ஒழுக்கம் உடையவன் என்பதை விரித்துக் கூற வேண்டுவதில்லை. அன்றுதொட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய பல பதிகங்களில் ஆங்காங்கே கடவுளைச் சீலனெனவும் பண்பனெனவும் ஒழுக்கமுடைய னெனவும் பாடியிருத்தல் காண்க. ஒழுக்கமயமான ஆண்டவனை, மனமொழி மெய்களால் வழிபடுவது ஒழுக்கத்தில் உறைந்து நிற்பதாகும். இக் காரணத்தால் ஒழுக்கத்துக்கு ஆண்டவன் வழிபாடு வேண்டற்பாலதே.

இன்னுமுள்ள பல முறைகளை ஈண்டு விரித்துப் பேசப் போதிய காலமின்மை குறித்து வருந்துகிறேன். ஆயினும் இரண்டொன்றைக் குறித்துவிட்டு மேலே செல்வேன். உணவையும் உடையையும் குறிப்பிடாமற் செல்ல என் மனம் எழவில்லை. உணவைப்பற்றி இரண்டோருரையும், அவ்வாறே உடையைப்பற்றிச் சில உரையும் பகரவிழைகிறேன். உணவு நல்லொழுக்கத்தை வளர்ப்பதாக இருத்தல் வேண்டும். சினத்தையும் கொதிப்பையும் திமிரையும் உண்டாக்கும் உணவு கொண்டால் ஒழுக்கத்தை எப்படி ஓம்பமுடியும்? கள்ளருந்தும் ஒருவன் ஒழுக்கமுடையவனுவனோ? காப்பிக்கும் தேநீர்க்கும் கள்ளுக்கும் என்ன வேற்றுமை? வேற்றுமை சிறிதே! இவ் வெம்மை நாட்டிற்குக் காப்பியும் தேநீரும் முற்றும் அநாவசியம். புலாலுணவுங் கூடாது. புளி மிளகாய் கலந்த உணவும் கொள்ளலாகாது. கனியுணவு உடலைப் பாது காப்பதாகும். அவ்வுணவு கொள்வோர் உலகில் நீண்டநாள் வாழ்வர். சாத்விககுணமும் பெருகும். இக்குணம் ஒழுக்கத்தை எவ்வெவ் வழியில் வளர்க்கும் என்பதை நான்

சொல்லவும் வேண்டுமோ? ரஜோகுண, தமோகுண உணவுகளை உண்போன் எவ்வாறு நல்லொழுக்கமுடையவனாயிருத்தல் முடியும்? பெருந் தீனி, ஒழுக்கத்தைக் கெடுப்பதோடு, உடல் வளத்தையும் சிதைத்து, முடிவில் மரணத்தையும் விரைந்து கூட்டும். ஒழுக்கத்துக்கு விரதம் மிக இன்றியமையாதது. விரதம் காக்கக் காக்க ஒழுக்க உணர்வு ஓங்கி வளரும்.

நாம் அணியும் உடை மிக எளியதாயிருத்தல் வேண்டும். போர் போராக உடைதரித்தல் உடல் நலத்தைக் கெடுக்க வழி தேடுவதாகும். இயந்திரங்களால் நெய்யப்படும் உடைகளை மனிதன் தரிப்பது தவறு. இயந்திர ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் குடியராதற்குக் காரணமென்னை? அவர்கள், இயந்திரங்களில் ஓயாது வேலை செய்வதாலும், இயந்திர இயக்க ஒலிகளைக் கேட்பதாலும் உண்டாகும் அயர்ச்சி, அவர்களைக் குடித்துத் திமிர் கொண்டு வெறித்து ஆடுமாறு செய்கிறது. மகாத்மா காந்தி இதைப்பற்றிப் பல இடங்களில் விரித்துப் பேசியிருக்கிறார். கையால் நூல் நூற்பதாலும் நெய்வதாலும் ஒழுக்கம் ஓம்பப்படும். வீட்டிலுள்ள தாய்மார் - பெரிதும் செல்வத் தாய்மார் - தற்பொழுது ஒழிந்த நேரங்களில் என்ன செய்கிறார்? வீணான தீய எண்ணங்களை எண்ணுகிறார். அவ்வேளைகளில் தாய்மார் ராட்டினத்தைச் சுழற்றி நூல் நூற்பதில் கருத்தைச் செலுத்துவாரானால் அவர் மனத்தில் தீய எண்ணங்கள் உறா. மேலும் ராட்டினத்தைப் பிடித்துச் சுழற்றுவதால் முதுகில் வளைவு நேராது. முதுகு நிமிர்ந்து எக்கெழுத்தம்போல் உரம்பெற்று நிற்கும். முதுகந்தண்டத்திலும் நரம்புக் கொடிகளிலும் எத்தகைய ஊறும் நேராதவாறு ராட்டினம் காக்கும். ஆகவே, கரத்தால் நெய்யப்பட்ட உடை தரிப்பதும் ஒருவழியில் ஒழுக்கத்தை ஓம்புவதாகும்.

உறங்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல உண்டு. அவைகளிலும் இரண்டொன்றைக் குறிப்பிட்டுச் செல்கிறேன். உறக்க வேளையை விழிப்பில் போக்கலாகாது.

ஒரு மனிதன் குறைந்தது நான்கு மணி நேரமாவது தூங்குதல் வேண்டும். உறக்கத்தை விழிப்பில் போக்குவதால் உடலின் அமைப்பு முறைகளும் கட்டுக்களும் நாளடைவில் குலைந்துவிடும். அவை குலையப்பெற்ற உடல், நல்லொழுக்கத்துக்கு நிலைக்களனுகாது. உரங் குன்றப்பெற்ற உடலுடையான், சிற்றின்பத் துறைக்கு விரைவில் எளியனுவன். ஆகவே, உடலின் கட்டுக்கோப்பைக் கெடுக்கும் வழியில் உறக்கத்துக்கு இன்னல் தேடுவது கூடாதென்க.

நாடோறும் உறக்கத்தை வலிந்து கெடுத்துக்கொள்ளுகிறவன்பால், சில மாதங்களில் ஒரு மாறுதல் நிகழ்வது காணலாம். இயல்பாக இடது கரத்தைக் கீழே ஊன்றிப் படுப்பதற்குப் பதிலாக, அவன் வலது கரத்தை ஊன்றிப் படுக்க விரும்புவன். ஒருவன்றன் உடல் நிலையை அளந்தறிய வேண்டுமானுல், அவன் எக்கரத்தை ஊன்றிப் படுக்கிருன் என்பதைக் கவனித்தல் வேண்டும். இரத்தம் ஒழுங்காகவும் முறையாகவும் ஓடும் பேறுடையான் இடதுகரத்தை ஊன்றிப் படுப்பன். மற்றவன் மற்றக் கரத்தை ஊன்றிப் படுப்பன். அன்னுன் சுகாதார ஆராய்ச்சி யுடையனுய், வலிந்து இடது கரத்தை ஊன்றி உறங்கினுலும், இயற்கைத்தேவி, அவனை அறியாது, அவன் கரத்தை மாற்றிவிடுவாள். இம் மாற்றத்தால் விளையுங் கேடுகள் பல. ஒழுக்கத்தைப்பற்றிய இவ்வுபந்நியாசத்தில் அவைகளை விரித்துக் கூறுவது அநாவசியம். புறவொழுக்க முறைகளை இவ்வளவோடு நிறுத்திவிடுகிறேன். இனி அகவொழுக்கத்தின்மீது சிறிது கருத்தைச் செலுத்துகிறேன்.

'புறந்தூய்மை நீரா னமையும்' என்று கூறிய நாயனுரே, 'அகந்தூய்மை வாய்மையால் அமையும்' என்று கூறியுள்ளார். வாய்மையின் சிறப்பைத் திருவள்ளுவரின் திருக்குறளிற் காண்க. அரிச்சந்திரன் வரலாறும், மகாத்மா காந்தியின் வரலாறும் வாய்மைக்கு இலக்கியமாக விளங்குகின்றன. இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், நமது நாட்டைச் சுற்றிப் பார்த்துச் சென்ற கிரீஸ் தேசத்துச்

சரித்திரக்காரன் ஒருவன், 'இந்தியாவில் பொய் பேசும் ஓர் ஆண்மகனையுங் கண்டேனில்லை; கற்பிழந்த ஒரு பெண்மகளை யுங் கண்டேனில்லை' என்று கூறியிருக்கிறான். நமது நாட்டில் பண்டை நாளில் வாய்மை ஒவ்வோர் இல்லினும் வளர்ந்து வந்தது. அவ்வாய்மைக்கு உறையுளா யிலங்கிய நமது அரிய தெய்விக நாடு, இற்றைஞான்று எந்நிலை எய்தியிருக்கிறது? இதற்கு ஆட்சி முறையும், தற்காலக் கல்வி முறையும், பிற நாட்டு வழக்க ஒழுக்கங்களும், இவைபோன்ற பிறவுமே காரணம். தேர்தல் காலங்களில் நம் மக்கள் எப்படி வாய்மை காத்து வருகிறார் என்பதைக் கவனித்தால், நமது நாட்டின் தற்காலநிலை இனிது விளங்கும்! வாய்மையின்றி அக வொழுக்கங் காத்தல் அரிது.

அகவொழுக்கத்துக்கு இன்றியமையாதது மற்றொன் றுளது. அஃது எது? அதுவே இல்லறம் என்னும் நல்லறம். ஒருவன் ஒருத்தியோடு கூடி இல்லறம் நடத்தா தொழிவ னேல், அவன் இறக்குமட்டும் ஆ! ஆ! எத்துணைத் தீயொழுக் கங்கட்கு ஆளாகிறான். அந்தோ! உலகிடை அப் பாவி ஏன் பிறந்தான்? இந்நாளில் போலித் துறவு எங்கணும் மலிகிறது. இத்துறவால் விளையுங் கேடுகள் பல. போலித் துறவு அருகுதல் வேண்டும். இல்லையேல், உலகம் தீயொழுக் கத்திற்கு உறைவிடமாகும்.

அகப்புற வொழுக்க முறைகளைச் செந்நெறி நின்று கடைப்பிடிப்பது நல்லது. அவ்விரண்டும் அன்பொழுக் கத்தை ஈனும். அன்பொழுக்கத்தால் மெய்யுணர்வு அரும்பும். அவ்வுணர்வே மனித வாழ்வில் முடிவாக வேண்டற்பாலது. அதற்கு அடிப்படையாகவுள்ள அகப்புறவொழுக்க முறை களை அலட்சியம் செய்யாது ஓம்புதல் வேண்டும்.

அன்பொழுக்கமுடைய ஒருவன் தன்னைப் போலப் பிறரையும் நேசிப்பன். அவ்வொழுக்கம் இல்லா ஒருவன் சாதி, மதம், சமயம், தேசம், பாஷை முதலிய பேதங்களிற் கருத்துக்கொண்டு வாழ்வன். பேத புத்தியால் மெய்யுணர்வு அரும்பாது.

அன்பொழுக்கம் உடைய ஒருவனும், தன்னைப்போலப் பிறரையும் அவ்வொழுக்கத்தைக் கடைப்பிடிக்குமாறு பல வழியிலும் முயன்று வரல் வேண்டும். ஒரு பதியில் ஒருவன் ஒழுக்கமுடையவனாய் வாழ்ந்து, ஏனையோர் ஒழுக்கமின்றி வாழ்வாராயின், அன்னார்செயல், நல்லொழுக்கமுடையான் செயலுக்கு அடிக்கடி ஊறு நிகழ்த்திக்கொண்டே யிருக்கும். ஆதலால், நல்லொழுக்கமுடையான், பிறரையும் அவ்வொழுக்க வழியில் திருப்ப, ஒல்லும் வகையாதல் தொண்டு செய்தல் வேண்டும்.

பெண் ஒழுக்கமுடையளாயிருந்து, ஆண் தீயொழுக்கமுடையனாயிருப்பின், அவன் சேர்ந்து வாழும் குடும்பத்தில் இன்பம் ஏது? ஆண் பெண் ஆகிய இருபாலாரும் ஒழுக்கமுடையராயிருத்தல் வேண்டும். ஒழுக்கமுடைய தந்தை, மகனை ஒழுக்கமுறையில் நிறுத்தி வளர்த்தல்வேண்டும். அவ்வாறே உலகில் ஒழுக்கத்தில் உயர்ந்தோர், ஒழுக்கத்தில் உயரா திருக்கும் கூட்டத்தாரை, ஒழுக்கத்தில் உயர்த்த முயலல் வேண்டும்; முயலாது வாளாகிடப்பாராயின், தீயொழுக்கமுடையாராற்றும் பாவங்களெல்லாம், நல்லொழுக்கமுடைய உத்தமரையும் வந்து அடர்க்கும். நல்லொழுக்கமுடையார் தங்களைப் பிறர்க்கு ஆற்றாத காரணமே தீயொழுக்க நிகழ்ச்சிக்கு வித்தாயிருக்கிறது. உலகில் தீமைக்குக் காரணர் தீயர் என்று சொல்வதை யான் ஏற்றுக்கொள்ளேன். நல்லோர் எனச் சொல்லப்படுவோர், தீயோரை நல்வழியில் திருத்தத் தொண்டு ஆற்றாதொழிவதே தீமைப்பெருக்கிற்குக் காரணம். ஆதலால் ஒழுக்கமுடையார் பிறரையும் ஒழுக்கமுடையராக்க முயலல் வேண்டும். இஃது ஆண்டவன் பணியாகும். தம் மட்டில் ஒழுக்கத்தை ஓம்ப எண்ணுகிறவர் எண்ணம் பயன் தாராதொழியும். பலர் தீயொழுக்கம் சிலர் நல்லொழுக்கத்தை விழுங்கிவிடும்.

கல்வி உயர்ந்தது என்று சொல்லப்படுகிறது. ஆசையை ஒட்டி ஒழுக்கத்தைக் குலைக்கவல்ல கல்வியும் உலகில் இல்லாமலில்லை. கல்வி கல்வி என்று தீயொழுக்கக் கல்வியைப்

பயில்வது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்ட கதையாக முடியும். ஒழுக்கக் கல்வி பயில்வது நலம். திருக்குறள் போன்ற நூல்களைப் பயில்வதால், மனிதர் வாழ்வு எவ்வெவ் வழியில் பண்படும் என்பதை நான் விரித்துச் சொல்ல வேண்டுவதில்லை. அருளுக்கும், அன்புக்கும், அறத்துக்கும், இவைகட்கு உயிரென இலங்கும் ஒழுக்கத்துக்கும் உறை யுளாயுள்ள சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த தெய்வ மணங் கமழும் திருத்தொண்டர் புராணமென்னும் ஒன்றை ஓதி உணர்ந்தால் போதுமே. திருநீலகண்ட நாயனார், மெய்ப் பொருள் நாயனார், வன்றொண்டப் பெருந்தகையார் முத லிய . தமிழ்ச் சான்றோர் வரலாறுகளில் ஒழுக்கமன்றி வேறென்ன ஒழுகுகிறது ? அவ்வரிய நூலை இந்நாளில் எத் துணை பேர் பயில்கிறார் ? அப்பயிற்சிக் குறைவு ஒழுக்கக் குறைவை உண்டுபண்ணியிருக்கிறது. இத்தகைய நூல்களைப் போதிக்கும் கல்லூரிகளல்லவோ ஒழுக்கத்தை ஓம்புவன வாகும் ?

காரைக்காலம்மையாரின் அன்பும், கண்ணகியின் வீரமும், மணிமேகலையின் அறமும் நாட்டை நன்முறையில் ஓம்பி வந்தன. இப்பொழுது அவைகள் நாட்டிடைப் பரவுவதில்லை. பரவாமைக்குக் காரணம், தற்காலச் சிறுமைப் பாடசாலைகளின் பெருக்கென்றே கூறுதல்வேண்டும்.

தற்காலக் கல்வி, ஒழுக்கத்தைப் போதிக்கிறதா? அஃது ஆசையை யன்றோ புகட்டுகிறது ? ஆசை என்னும் பேய் வாய்ப்படுவோன் ஒழுக்கத்தை எவ்வாறு ஓம்பவல்லான் ? ஆகவே, ஆசையை எழுப்புங் கல்வி முறையைத் தொலைத்தல் வேண்டும்.

தற்காலக் கல்வியாளர் நோக்கம் என்னை ? எவ்வழியி லாவது வயிற்றுக்குப் பிழைப்புத் தேடிக்கொள்ளல்வேண்டு மென்பதன்றோ ? பரீக்ஷையில் தேர்வதற்கெனவும் பட்டம் பதவிக்கெனவும் பயிலும் கல்வி கல்வியாமோ ? பாடசாலை யில் பயிலும் மாணக்கர் தற்போது எண்ணுவன பேசுவன என்ன ? தூர்த்த உணர்வு இளமைப்பருவத்திலேயே இக்

நாளில் அரும்பிவிடுகிறது. நகரங்களிலுள்ள பாடசாலைகளின் அணித்தே வேசையர் விடுதிகள் காட்சியளிக்கின்றன. எவ்வழியிலுழன்றேனும் பரீக்ஷையில் தேறிப் பட்டம் பெற்று உத்தியோகந்தானே செய்தல்வேண்டும்! தற்காலக் கல்வியின் கொடுமை என்னே! என்னே!! கலைவாணி! நின் ஒழுக்கக் கல்வி எங்கே சென்றது? யாண்டுற்றது? நினது ஒழுக்கக் கல்வி இந்நாளில் அருகியுள்ளமையால், திருவள்ளுவர், இளங்கோவடிகள், சாத்தனார், திருத்தக்க தேவர், தெய்வச் சேக்கிழார், கம்பர் முதலிய புலவர் தோன்றுவதில்லை.

ஆங்கிலம் பயில வேண்டாமென்று யான் சொல்லவரவில்லை. ஆங்கிலம் அறிவு வளர்ச்சிக்குப் பயிலவேண்டுமென்பது எனது கருத்து. ஷேக்ஸ்பியர், ஷெல்லி, காண்ட், ஸ்பைனேஜா முதலியோர் அரிய உரைகளைக் காட்டித், தீயொழுக்கத்தை வளர்க்கும் தற்காலப் பெரிய பெரிய கல்லூரிகளைப் பார்க்கிலும், 'ஆத்திசூடி' 'கொன்றைவேந்தன்' முதலிய ஒழுக்க நூல்களைப் போதிக்கும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எத்துணையோ மடங்கு சிறந்தன என்று அஞ்சாது சொல்வேன். 'அறஞ்செய விரும்பு,' 'ஆறுவது சினம்' என வரூஉம் அற உரைகளாம் விதைகளை இளங் குழந்தைகளின் உள்ளமெனும் நிலத்தில் விதைத்தல் நல்லது. 'இராமன் பூனையை அடித்தான்; கிருஷ்ணன் கண்ணாடியை உடைத்தான்' என்று அடித்தல் உடைத்தல் என்னும் தீயொழுக்கக் கருத்துக்களை இளங் குழந்தைகள் உள்ளத்தில் பதியச் செய்வது நல்லதன்று. பரலோக ராஜ்யத்துக்கு ஒப்பான பிள்ளைகள் உள்ளத்தில் நச்சு விதையை விதைப்பது தவறு.

நமது நாட்டில் இப்பொழுது பெருகிவரும் ஜில்லா போர்டு தாலுக்கா போர்டு பாடசாலைகளிலும் பழைய ஒழுக்க நூல்கள் போதிக்கப்படுவதில்லை. சதகங்களை இந்நாளில் படிப்போர் எத்துணைபேர்? எவ்வளவு அறவுரைகள் - ஒழுக்க முறைகள் - சதகங்களில் இருக்கின்றன? அவைகளைத் தொடுவோரைக் காணோம். நாட்டுக்கல்விக்கென ஏற்பட்ட கல்லூரிகளிலும் சதகங்கள் போதிக்கப்படுவதில்லை. நாட்டுக்கல்லூரிகளிலுள்ள போதகாசிரியரும் தற்காலக் கல்வி பயின்றவரே.

சதகப் பெயராதல் அவருக்குத் தெரியுமோ தெரியாதோ அறிகிலேன்.

நமது நாட்டு அற ஒழுக்கங்களையும் மேல்நாட்டுச் சுகாதார முறைகளையும் ஒன்றுபடுத்தி, இக்கால வாழ்வுக் கேற்ற ஒழுக்கக் கல்வியை வளர்க்கத்தக்க பாடசாலைகள் பல காணப்படல்வேண்டும். அப் பாடசாலைகள் ஈனும் மாணுக்கர் வயதடைந்து, சமூக சேவையில் ஈடுபட்டு, அரசாட்சி நடத்துவாராயின், குடும்பமும், சமூகமும், அரசும், பிறவும் எல்லாம் ஒழுக்கமயமாக மிளிரும்.

தற்போதைய மேல்நாடு போரில் அறிவைச் செலுத்துகிறது; கீழ்நாடு உணர்ச்சியின்றிக் கிடக்கிறது. இதனுல் மக்கள், தாங்கள் கடவுள் பிள்ளைகள் என்பதை மறந்து, அன்பொழுக்கத்தைத் துறந்து, சாதிச் சண்டை சமயச்சண்டை தேசச்சண்டை முதலிய கயமைத்துறைகளிலிறங்கி, விலங்கு வாழ்வு நடத்திவருகிறுர்கள். இந்நாளில் உலகைத் திருத்தப் பல காந்தியடிகள் தேவை. உலகில் ஒழுக்கநெறி பரவினுல் சாதி மத தேச பாஷைச் சண்டைகள் ஒழியும். எல்லாரும் ஒழுக்கச் சாதியாரென்னும் ஒரு சாதியாராவர். அவ்வொரு சாதியை ஆண்டவன் இவ்வுலகுக்கு அருள்வாணுகை. காலமாகிவிட்டது. இவ்வளவில் எனது புல்லிய மொழியை நிறுத்திக்கொள்கிறேன். (17, 24-7-1925)

## மலைவாசம்

மலைவாசத்தைப் பற்றிய நினைவு இன்று நமக்கு எற்றுக்கு உண்டாயிற்று? காலம் வேனிற்காலம். கடற்கரையில் உலா. அங்கே பலர் கூடுவதும் பலதிறப் பேச்சுப்பேசுவதும் வழக்கம். ஒருபோது, 'மலைவாசம்' என்று ஓர் ஒலி நமது செவியிலுற்றது. 'மலைக்குப் போகிறேன்' என்று ஒருவர் சொற்றதும், 'மலையினின்று வருகிறேன்' என்று மற்ருெருவர்

புகன்றதும் கடற்காற்றின் வேகத்தால் நமது செவியில் விழுந்தன. பொதுவாக மலை என்பது எம்மலை என்னும் ஐயம் நமக்கு நிகழவில்லை. நீலகிரியை 'மலை' 'மலை' என்று நகர வாசிகள் சொல்லிக்கொள்வது நமக்குத் தெரியும்.

ஐரோப்பியருள் பலர் வேனிற்காலத்தில் தமக்கு உறைவிடமாக நீலகிரியைக் கொண்டுள்ளார். அவரைத் தொடர்ந்து நம் கருந் துரைகளிற் சிலரும் ஆண்டுச் செல்கிறார். இவர் இந்நாளில் நீலகிரியை 'மலை' 'மலை' என்று வழங்கலாயினர். முன்னை நாளில் 'மலை' என்பது திருப்பதி மலை என்று கொள்ளப்பட்டது. இன்னும் பழைய உலகில் வாழ்பவரது கொள்கை மாறுபடவில்லை.

ஐரோப்பியர் நீலகிரிமலை நோக்கிச் செல்வதைக் கண்டு, அவர் பின்னே 'மலை - மலை' என்று ஓடும் நம்மவருள், 'மலை வாசமும் மேல்நாட்டவரிடமிருந்து பயின்ற கல்வித் துறைகளுள் ஒன்று' என்று கூறுவோருமிருப்பர். காலத்தின் கோலத்தை என்னென்று கூறுவது? மேல்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றவரென்றும், இந்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றறியா மூடர் என்றும் சொல்லப்படுங் காலமன்றோ இக்காலம்? வயிற்றின்பொருட்டுக் கல்வி பயிலும் காலமன்றோ இக்காலம்? பிறந்த நாட்டிடைப் பற்றை உண்டுபண்ணாத கல்வியைப் பயில்வோர் என்னதான் சொல்ல மாட்டார்? இயற்கைக் கல்விப்பயிற்சி அருகிவரும் இந்நாளில், நம் முன்னோர் மலையில் வாழ்ந்த இன்புற்றதை நினைவுபடுத்தவே இன்று மலைவாசத்தைப்பற்றி எழுதப் புகுந்தோம்.

பண்டைத் தமிழ்மக்கள் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்தார்கள். அவை, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பன. இப்பிரிவைப்பற்றி எழுந்தவழக்கே நானுவித உலகம் என்பது. இவ்வழக்குத் தமிழ்நாட்டிலே தோன்றியபோது, மேல்நாட்டில் மனிதர் எவ்வுணர்ச்சியோடு உலவினர் என்னும் வினாவைச் சரித்திரக்காரர்களை நோக்கிப் பொறித்தல் வேண்டும்.

தமிழ்மக்கள் வகுத்த நால்வகை நிலத்துள் முதன்மையது குறிஞ்சி. ஆசிரியன்மாருட் சிலர் சிற்சில காரணம்பற்றி

யும், தாம் விரும்பியவாறும் நிலங்களை முறை பிறழவும் ஓதி யிருக்கிறார். எவர் எவ்வாறு ஓதினும், குறிஞ்சி முதன்மையது என்பதை அறிஞர் மறுக்கமாட்டார். குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமுமாம். நாம் குறிஞ்சிக்குப் பதிலாக மலை எனக் கூறிச் செல்வோம். குறிஞ்சி நிலத்துக் குரிய முதற்பொருள் உரிப்பொருள் கருப்பொருள் முதலி யனவற்றைத் தொல்காப்பியம் முதலிய பண்டைத் தமிழ் நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

மனித வாழ்வு முதல் முதல் தொடங்கப்பட்ட இடம் மலையேயாகும். இஃது அறிஞர் பலராலும் ஒப்ப முடிந்த உண்மை. மலையிலுள்ள மூங்கிலைக் கொண்டே மக்கள் முதல் முதல் முகத்தல் நீட்டல் முதலிய அளவைப் பொருள்கள் செய்தார்கள்; வேய்ங்குழல் கண்டார்கள்; கம்பு செய்தார் கள்; வில் செய்தார்கள்; வீடுகள் கட்டினார்கள்; வேறு பல மலைபடு பொருள்களாலும் வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக் கொண்டார்கள். நம் முன்னோர் ஆங்கிருந்தே வானசாஸ்திரம் பயின்றார்; வயித்தியங் கற்றார்; கடவு ளுண்மை கண்டார்; அரசு வகுத்தார்; இசை பயின்றார். அவைகளைப் பற்றி ஈண்டு ஆராய்ச்சி செய்யவேண்டுமென் பது நமது நோக்கமன்று.

கடவுளின் இயற்கைவடிவா யிருப்பது மலை. அதில் விளையும் பொருள்களும் இயற்கைமயமா யிருப்பன. அங்கே உற்பத்தியாகும் அருவியும் ஆறும் இயற்கையின் ஊற்றாகும். மலையில் வாழும் மக்களும் இயற்கை வடிவா இலங்கு வோர். மலையும், அதன் உள்பொருளும், அதன்கண் உறை உயிரும், பிறவும் கடவுள் வடிவான இயற்கை வண்ணமா யிருப்பன. இயற்கை மணம் நீங்கப்பெறாத மலையில் வாழ் வதை எவரே வெறுப்பர்?

பண்டைத் தமிழ் மக்கள் மலையின் சிறப்பை உணர்ந்து அதன்கண் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் மலையில் வதிந்து தாங்கள் கண்ட காட்சிகளையும், பெற்ற இன்பங்களையும் நூல்களாக எழுதினார்கள். மலையைச் சிறப்பித்துக் கூறாத நன்னூல் தமிழில் இல்லை என்றே சொல்லலாம். மலையின்

இயற்கை இன்பத்தைத் தமிழ்ப் புலவர்கள் எவ்வெவ் வழியாகவோ பாக்களில் இறக்கி நமக்கு உதவியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க.

மலை பூமியினின்றும் ஓங்கலாக மக்கள் வாழ்வுக்கெனக் கடவுளால் அமைக்கப்பட்ட சிறந்த இயற்கை மாளிகை. அம்மாளிகையில் மக்கள் வாழ்வுக்குரிய பொருளெல்லாம் இயற்கையாகவே தோன்றியிருக்கின்றன. விதவிதமான பூக்கள் மலர்கின்றன. பலதிற மூலிகைகள் வளர்கின்றன. பறவைகள் பறக்கின்றன. விலங்குகள் வாழ்கின்றன. பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன. தினை முதலிய தானியங்கள் பயிராகின்றன. அருவிகள் ஓடுகின்றன. மனத்தைக் கவர மயிலின் ஆட்டமும் மானின் ஓட்டமும் சாலும். இத்துணைப் பொருள்களைத் தாங்கும் மலையில் வாழ்பவருக்கு வறுமை உண்டோ? இக்கருத்துப் பற்றியே கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்துள் ஒரு செய்யுள் நாட்டுப் படலத்தில் பாடியிருக்கிறார். அச்செய்யுள் வருமாறு :—

‘ தேனும் செந்தினை இடிகளும் தீஞ்சுவைக் கனியும்
ஊனும் துய்ப்பன ; உடுப்பன மாவுரி தழைகள் ;
வானுந் தோய்சுனை ஆடுவ ; மணிவரை இருப்ப ;
ஏனஞ் சூழ்ந்தகுன் றவர்க்கொரு நல்குரா வின்றே’

[துய்ப்பன - உண்பன. வரை - மலை. ஏனம் - பன்றி. குன்றவர்க்கு - குன்றில் வாழும் மக்கட்கு. நல்குரவு - தரித்திரம்.] உணவுக்கும், உடைக்கும், நீராடுதற்கும், இருத்தற்கும் பயன்படுவன இயற்கைப் பொருள்களாகவே இருப்பது கவனிக்கத்தக்கது.

சகோதரர்களே! செய்யுளை உற்று நோக்குங்கள்; இயற்கை வாழ்வின் பெருமையை உன்னுங்கள்; மலைவாசிகளுக்கு வறுமையில்லை என்று ஆசிரியர் கூறியிருப்பதைக் கருதுங்கள். இப்பொழுது - நாகரிகம் பழுத்த இந்நாளில் - வயிற்றுக்குக் குறைவறச் சோறு கிடைக்கிறதா? மக்கள் வறுமைநரகத்தில் வீழ்ந்து வருந்துகிறார்கள். பாடசாலைகளாம்; சர்வகலாசாலைகளாம்; நீண்ட பட்டங்களாம்; அவை

களுக்குப் போட்டியாம்; பரீட்சையாம்! மலைகளிலிருந்து இயற்கைப் பொருள்களை உண்டு, வறுமை அறியாது, நம் முன்னோர் வாழ்ந்தனர். இந்நாளில் வயிற்றுக்காகக் கல்வி; வயிற்றுக்காகத் தொழில்; வயிற்றுக்காக எல்லாம்—ஆனால் பட்டினி, வறுமை! செயற்கை இயந்திரங்கள், ரெயில்கள், தந்திகள், விசிறிகள், விளக்குகள், கூத்துகள், நாடகங்கள், சினிமாக்கள், நாவல்கள், வேறுபல ஆட்டங்கள் பாட்டங்கள் வறுமையை வளர்த்து வருகின்றன. மலைகளில் வாழ்ந்த மக்கள் வயித்தியசாலைகளை நாடினாரில்லை; தேடினாரில்லை. முனிசிபாலிடிகள், இயற்கைச் சுகாதாரத்தைக் கெடுத்து, நோய்களை உண்டாக்கி, வயித்தியசாலைகள் கட்டுகின்றன. வயிற்றுக்காக நாட்டுப்புறங்களிலுள்ளவர் கூட்டங் கூட்டமாக நகரங்களில் கூடுகிறார். ஒரு வீட்டில் முப்பது நாற்பது பேர் வாழ்கிறார். ஒருவர் விடுஞ் சுவாசத்தை மற்றவர் பருகுகிறார். அழுக்குக் கழுவல் கழித்தல் எல்லாம் வீட்டிலேயே. அவ்வழுக்குகளெல்லாந் திரண்டு பூமிக்குள் ஓடுமாறு சாக்கடைகள் வாய்க்கால்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. சாக்கடைநீர் தேங்கும் கிணறுகளில்—அந்தோ! கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் மூழ்குகிறார்! கொடுமை! கொடுமை! ஒருவனுக்கு மாடி வீடு; மற்றொருவனுக்குச் சாக்கடைக் குழியா? ஐயோ! நாகரிகமே! பழையகாலத்தை அநாகரிகக் காலமென்று கூறும் தற்கால ஞானிகளே! சிந்தியுங்கள்!

நாட்டுப்புறங்களை விடுத்து, மக்கள் நகரங்களில் போந்து, இயந்திரங்களோடும் தொழிற்சாலைகளில் கூட்டங் கூட்டமாகச் செறிவதால் விளையுந் தீமைகள் பல. கிராமங்களில் பயிர்த்தொழில்கள் அழிகின்றன. நகரங்களில் சுகாதாரங் கெடுகிறது. ஆயிரம் பேர் வாழுமிடத்தில் பதினாயிரம் பேர் வாழ்ந்தால் சுகாதாரநிலை கெடுதல் இயல்பே. நகரங்களில் பெரிதும் ஏறக்குறைய எல்லாவித உத்தியோக சாலைகளுமிருக்கின்றன. இவைகளால் நகரத்தில் கூட்டம் பெருகுகிறது. கூட்டத்தால் நோய்கள் பெருகுகின்றன. மலைகளையும் காடுகளையும் நாடுகளையும் மக்கள் விடுத்து நகரத்தில் போந்து இடர்ப்படுகிறார்கள்.

மலை இடங்களில் வாழ்வது நல்லது. அது விரும்பத் தக்கது. மலையிலிருக்கிறவர்களுக்கு நோய் அணுகாது. அசுத்தக் காற்றும் அசுத்த நீரும் நோய்களை உண்டாக்குவன; வளர்ப்பன; மனிதரைக் கொல்வன. மலையில் அசுத்தக் காற்றும் அசுத்த நீரும் தோன்றுதற்கு இடமில்லை. மலைக் காற்றுக்கு ஒப்பாகவாதல் உயர்வாகவாதல் பிற காற்று களைச் சொல்லுதல் முடியாது. கடற்காற்றை இரண்டாவ தாகச் சொல்லலாம். மலையில் வாழ்வோர், அதிகாலையில் சூரியன் உதயமாகும்போது, சூரியனது இளங்கதிர்களின் வாயிலாக நுகரும் தூயகாற்றின் (உயிர்ப்பு) முன்னே எந்த நோய் நிற்கும்? அவ்விளங்கதிர் படிய உலவும் மனிதரை எந்த வியாதி அணுகும்? சூரியனது இளங்கதிரொளியும், தூய காற்றும், ஊற்றுநீரும் அல்லவா மனிதரை வளர்ப் பவை? இம் மூன்றையும் மலைவாசத்தில் எளிதில் பணங்கா சின்றிப் பெறலாம். வயித்தியர்களுக்கும் டாக்டர்களுக்கும் பணத்தை அள்ளி அள்ளி இறைக்கும் பொருட்செல்வர்களே! மலையில் வாழ விரும்புங்கள்; மலையைச் சுற்றித் திரியுங்கள்; மலை உங்களைக் காக்கும்; உங்களை வளர்க்கும்.

பூமியினின்றும் மலை எழுந்து நிற்றலால், பலவித வளங் கள், மலையில் இயல்பாக அமைந்து கிடக்கின்றன. ஞாயிற் றொளி நன்றாகப்படிகிறது. மலைக்காற்றில் தும்புதூசுகளில்லை. ஊற்று நீரில் கிருமிகள் இரா. இக்காரணங்களால் மலைநிலங் களில் பொருள்கள் விரைவில் அழுகமாட்டா. மற்ற நிலங்களில் ஒருநாளில் அழுகும்பொருள்கள், மலைநிலங்களில் நீண்ட நாள் அழுகாமலிருக்கும். மலைகளிலுள்ள மூலிகைகளையும், உலோகங்களையும், பிறவற்றையும் ஆறுகள் அடித்துக்கொண்டு ஓடுகின்றமையாலல்லவோ, அவை பெருமைப்படுகின்றன? நாட்டுக்கு இன்றியமையாத ஆறுகளின் பிறப்பிடம் பெரிதும் மலை என்பதை அறியாதாரில்லை. இவ்வளவு வளமுடைய மலை யில் வாழவேண்டுமென்று ஒருவர் கூறுதலும் வேண்டுமோ?

பண்டைத் தமிழ்மக்கள் நாளுக்குநாள் குறிஞ்சிவிடுத்து, முல்லை மருதம் நெய்தல் ஆகிய நிலங்கள் போந்து வாழ்ந்தா

லும், அவர்கள் மலையினிடத்திலும் மலைப்பொருள்களினிடத்திலும் தொடர்பு வைத்துக்கொண் டிருந்தார்கள். குறிஞ்சியின் உதவியின்றி ஏனைய நிலவாழ்வு நடைபெறுதல் அரிது. மலைபடு பொருட்கு மிக ஆவலோடு மற்ற நிலத்தவர் காத்திருப்பர். மேகந் தவழும் மலைகளில்லாவிடின், காடேது? நாடேது? நகரமேது? காடு நாடு நகரம் ஆகிய இவ்விடங்களில் வாழ்வதால் விளையும், இன்பத்தையும், வேறு பலவித இன்பத்தையும் மலைவாசத்தால் பெறலாம்.

நம் முனிவர் பலர் மலைகளைத் தமக்கு உறைவிடமாகக் கொண்டிருந்தனர். இன்னும் - இந்நாளிலும் - சில பெரியோர் மலையில் வாழ்கிறார். பண்டைக் காலத்தில் மலைகளும் காடுகளும் முனிவர் வசத்திலிருந்தன. 'இம்மலை இம்முனிவர் மலை; இக்காடு இம்முனிவர் காடு' என்று வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுதோ? — —

மலைத்தொடர்பு மக்கட்கு இருத்தல் வேண்டும் என்ற எண்ணங்கொண்டு, நம் பண்டை மூதறிஞர் மலைகளிலும் மலைசார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். இறைவனை வழிபடும் பொருட்டு, மக்கள் செல்லின், அச் செலவால், மக்கள் மலையில் சிலநாளாவது உறையும் பேறுபெற்றுப் பிணியின்றி வாழ்வார்கள் என்ற கருணையால், அறிஞர் மலைகளிலும், அவை சார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். திருப்பதி திருக்கழுக்குன்றம் முதலிய க்ஷேத்திரங்கள் நினைவிற்கு வருகின்றன. அங்கும் முனிசிபாலடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இயற்கையின் பெருமை கெடுகிறது!

நமது நாட்டிலுள்ள மலைகள் எண்ணிறந்தன. மலைகளிலே உயர்ந்த மலை நம்முடைய தேசத்திலே இருக்கிறது. நமது நாட்டில் குறுக்காகவும் நெடுக்காகவும் கோணலாகவும் வட்டமாகவும் சதுரமாகவும் மலைகள் வரிசை வரிசையாக நிற்கின்றன. மலைவளஞ் செறிந்த நமது தேசத்தைக் காமதேனு என்று கூறலாம். அத்தகைத் தேசத்தைப் பஞ்சம் பிடித்தாட்டுகிறது!

நகரத்தில் வாழும் மாந்தர்களே! நோயாளிகளே! பிள்ளைப் பேறில்லாது வருந்தும் பேதையர்களே! நீண்டகாலம் வாழ விரும்பும் நேயர்களே! உங்கள் விருப்பம் நிறைவேறப் பணத்தைச் சொரிதல் வேண்டாம்; உங்கள் வீடுகளில் மருந்துகளைச் சேர்த்தல்வேண்டாம். வயித்தியர்கள் - டாக்டர்கள் - உங்கள் வாயிலை மிதித்தலாகாது. மலையை நோக்குங்கள்; மலையைச் சுற்றுங்கள்; மலையிலேறுங்கள்; மலையில் வாழுங்கள். மலையில், இளஞாயிற்றொளி உங்கள்மேல் வீசும்; தும்புதூசுகளில்லாக் காற்று உங்களைக் காக்கும்; அருவிநீர் உங்களை வளர்க்கும். மலைகளைப் பற்றிய வருணனை நூல்களை அடிக்கடி ஓதுங்கள்; நம்முடைய வாழ்வு தொடங்கப்பட்ட இடம் மலை என்பதை மறவாதேயுங்கள். மலைவாசத்தால் எல்லா நன்மைகளும் விளையும். (9–6–1922)

## இமயமலை.

எல்லாவற்றிலும் நமது நாடு உயர்வு உடையது என்று நம்மவர் சொல்வது வழக்கம். இது மெய்யோ பொய்யோ என்னும் வினா எழுந்தால் சிலர் மெய்யென்று கூறுவர்; சிலர் பொய்யென்று கூறுவர். நாம் மெய்யென்றுங் கூறுவோம்; பொய்யென்றுங் கூறுவோம். என்னை? முன்னை நாள் நினைவு தோன்றும்போது மெய்யென்று அறைகூவ மனம் எழுகிறது. இந்நாள் நினைவு தோன்றும்போது பொய்யென்று சொல்ல மனம் எழுகிறது. முன்னோர் நமக்குச் சேமித்து வைத்த விழுப் பொருள்களையெல்லாம் இழந்த பாவிகளாகிய நாமா 'எல்லாவற்றிலும் நமது நாடு உயர்வுடையது' என்று இறுமாந்து கூறவல்லேம்! நம் உயர்வுகளெல்லாம் போயின.

நமது கல்வி உயர்வு என்ன! நமது ஞானஉயர்வு என்ன! நமது ஒழுக்க உயர்வு என்ன! அவ் வுயர்வுகளெல்லாம் இப்பொழுது எங்கே எங்கே என்று வானத்தை அண்ணாந்து

பார்க்கவேண்டியதே. அண்ணாந்து பார்த்தால் ஓருயர்வு நினைவிற்கு வருகிறது. அஃதென்னை ? அஃது இமயமலையின் உயர்வு. 'மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு' என்று மலை உயர்வு ஒன்று கூறி மகிழும் இறுமாப்பு இன்னும் நமக்குண்டு. அத்தகை உயர்வையுங் காணும் முயற்சி இதுபோழ்து நடைபெற்று வருவது நேயர்கட்குத் தெரியும். அம்முயற்சி உலக நாட்டத்தைத் திருப்பி யிருக்கிறது. நமது மனமும் இப்பொழுது அதன்மீது படிகிறது.

இமயமலையின் வானளாவிய உச்சி கௌரிசங்கர் என்னும் பெயருடையது. அஃது இந்நாளில் 'எவரெஸ்ட்' என்னும் பெயர் பெற்றிருக்கிறது. அவ்வுயரிய உச்சியைக் காண, மேல் நாட்டார் இப்பொழுது முயன்று, சுமார் இருபத்தெண்ணாயிரம் அடிவரை சென்று திரும்பியுள்ளார். இன்னும் எஞ்சியுள்ள ஆயிரமடி சென்று முடி காணப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. இமயத்தின் கோட்டைக் காண்பது எளிதன்று. அதைக் காணும் முயற்சியில் தலைப்பட்ட மக்களை என் னென்று வாழ்த்துவது ? ஒவ்வொரு முறையும் சிலர் மாண்டு விடுகிறார். அம்மரணங் கண்டுங் கேட்டும் மற்றவர் அஞ்சு கிறாரில்லை. மேலும் மேலும் முயன்று மலையின் முடி காணவே அன்னார் முயன்று வருகிறார். என்ன ஊக்கம் ! இவ்வூக்க முடையார் பக்கம் தெய்வத் துணை நில்லாதோ ?

இமயத்தின் முடி காண்டற்கு நான்காம் முறையாக ஒரு கூட்டத்தை அனுப்ப, இங்கிலாந்து நிலநூல் கழகத்தார் முயன்று வருகிறார். இவ்வேளையில் ஸ்விட்ஜர்லண்டினின் றும் ஒரு கூட்டம் புறப்பட விரைந்து நிற்கின்றதாம். இன் னும் பலர் அம்முயற்சியில் தலைப்படுவாராம். இமயத்தின் முடியைக் காண மேல்நாட்டார் பெருமுயற்சி செய்துவரும் இந்நாளில், அவ்விமயத்தை 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று கூறும் நம்மவர் என் செய்கிறார்? அம்முயற்சி யில் இவர் ஏன் தலைப்படவில்லை என்னும் வினா பிறக்கு மாயின், அதற்கென்ன விடையிறுப்பது ?

நமது நாட்டில் கற்றோர் என்று தற்போது சொல்லப்படு வோர் பலர் பகலெல்லாம் உழைத்து, மாலை வீடுபோந்து

உண்டு இளைப்பாறும் வேளையில், பத்திரிகைகளைப் பார்த்து, இமயமலையை மனத்தால் அளந்துவிடுகிறார்! பண்டைக்கால வழக்க வொழுக்கமுடையார், 'இமயமுடியையா காணல் முடியும்; அப்படிப்பட்ட இராவணேசுரனாலேயே அதைக் காணல் முடியாமற் போய்விட்டது; வீண் முயற்சி' என்று சொல்வர். சில வாய்வேதாந்த சித்தர், 'ஒரு குளிகை செய்யும் வேலைக்கு வெள்ளைக்காரர் எவ்வளவு சிரமப்படுகிறார்; ஒரு மணியிருந்தால் இமயத்தின் மேலே பறக்கலாம்; இதற்குக் கூட்டமாம்; ஆகாய விமானமாம்; காற்றுப்பையாம்; வெள்ளைக்காரர்களுக்கு என்ன தெரியும்; சுண்ணாம்பிலிருக்கிறது சூட்சுமம்' என்று பேசுவர். சில கிழவர், 'காலங் கலிகாலம்; தேவ பூமியை மனிதன் காணப்போகிறானாம்; ஐயோ! தெய்வமே' என்று வருந்துவர். இன்னும் பலவாறு பேசுவோரும் நமது நாட்டிலிருப்பர். இது காலத்தின் நிலை. இந்தியர் மனோசக்தியை இழந்துள்ள காலம் இக்காலம்.

'நம் முன்னோர் எவராவது இமயத்தின் முடியைக் கண்டிருப்பரா?' என்று சிலர் ஐயுறலாம். இதற்கென்ன கூறுவது? நம் முன்னோரிற் சிலர் இமயமலையைப்பற்றி எழுதிய நூல்களிருக்கின்றன. இமயமலையைப்பற்றிய வருணனைகள் பலபடக் கிடக்கின்றன. நமது நாட்டுக்கும் இமயமலைக்கும் பெருந் தொடர்பு உண்டு என்பதை எவரும் மறுத்தல் முடியாது. நால்வகை ஆச்சிரமங்கள் ஒழுங்குபெற நடைபெற்று வந்த நாளில், இந்திய மக்கள் பெரிதும் சந்நியாச ஆச்சிரமந் தாங்கி, இமயமலைச் சாரல்போந்து வதிவதைப் பெருவழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இருடிகட்கும் முனிவர்கட்கும் உறைவிடம் இமயச்சாரல் என்று கூறுவது மிகையாகாது. சம்பிரதாயமாக உலகவெறுப்புத் தோன்றும்போது, நம்மவர் - பெரிதும் வட இந்தியர் - 'என்ன கிடக்கிறது; இமயச்சாரல் சேர்ந்து காலங் கழித்தால்போச்சு' என்று சொல்வது வழக்கம். காந்தியடிகளும் சிலமுறை அவ்வாறு கூறியுள்ளார். 'சந்நியாசம் பேசுங் காந்திக்கு இங்கென்ன வேலை; இமயமலைக்குப் போகச் சொல்லும்' என்று சிலர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். இன்னோரன்ன பிறசான்று

களால், இமயத்துக்கும் இந்திய மக்கள் வாழ்விற்கும் ஒரு பெருந் தொடர்பிருப்பது நன்கு விளங்கும்.

புலவர் பலர் இமயத்தைப்பற்றித் தமது பாக்களில் வருணித்துள்ளார். வடமொழிப் புலமையிற் சிறந்த காளிதாசர் மொழிகளில் சிலவற்றை நோக்குழித், தற்போது இமயமுடி காண முயன்று முயன்று திரும்புவோர் வெளியிடும் சில குறிப்புகள், அவையிற்றில் மிளிர்வது காணலாம். தமிழ் நூல்களிலுள்ள திருமலைச் சருக்கம் போன்ற பகுதிகளில் இமயங் காணக்கிடக்கிறது. இராவணன் இமயங் கடக்க முயன்று முடியாது திரும்பிய கதை ஒன்று நமது நாட்டில் வழங்கப்படுகிறது. திருநாவுக்கரசர் என்ற பெரியார் அம் முயற்சியில் தலைப்பட்டுத் திரும்பியதாகவும் ஒரு சரித்திரங் கூறுகிறது. நாரதர் முதலிய முனிவரும், போகர் முதலிய சித்தரும் நினைத்த மாத்திரையில் இமயம் போந்து வந்தனர் என்பதுபோன்ற கதைகள் பல உண்டு. தற்போதுஞ் சித்தரும் முனிபுங்கவரும் இமயத்தின் பல பகுதிகளில் வாழ்கிறார் என்று சொல்லப்படுகிறது. யோக நூல்களில் இமயம் பேசப் பட்டிருக்கிறது.

அங்ஙனமாயின், இமயஞ்சென்று அதன் முடியைக்காண நம் முன்னோர் கொண்ட முறை எதுவாயிருக்கலாம் என்பதைச் சிறிது சிந்திப்போம். இப்பொழுது இருபத்தெண்ணாயிரம் அடி தூரஞ் சென்றோர் கூறுவதைக் கவனித்தால், நம் முன்னோர், ஆராய்ச்சிக்குரிய கருவிகளில்லாக் காலத்திலிருந்தவராதலால், அவர் நீண்டதூரஞ் சென்றிருப்பரோ என்று ஐயுறுதற்கு இடம் நேர்கிறது. ஆயினும் பழமையிற் சிறிது புகுந்து பார்ப்போம்.

'இருபத்துமூவாயிரம் அடிக்குமேல் வெறும் பாறைகளும், உறையாப்பனியும், உறைந்த பனியுமே யிருக்கின்றன. காற்றுக் கிடையாது. மதிமயக்கம் உண்டாகிறது. சிந்தனை எழுவதில்லை. நாங்களெடுத்துச் சென்ற பிராணவாயு இல்லாவிடின் எல்லாரும் மாளவேண்டியவரே' என்று டாக்டர் நார்டன் என்பவர் தமது அனுபவத்தைத் தெரிவித்துள்ளார். இவ்வனுபவ உரைகளால், பிராணவாயுவைத் திரட்டி எடுத்துச்

சென்றாலன்றி, மனிதர் இமயம் நாடமுடியாதென்பது செவ்வனே தெரிகிறது.

பண்டைக் காலத்திலிருந்த நம் பெரியோர் பிராணவாயுவைத் திரட்டிப் பண்படுத்தி யாண்டுஞ் சென்றனர் என்பது தெரியவில்லை. அவ்வாயுவைத் திரட்டுந் திறமையாதல் அவர் பெற்றிருந்தனர் என்பதுந் தெரியவில்லை. பின்னை எவ்வாறு அவர் இமயஞ் சென்றிருப்பர்? அவர் சென்றது பொய்யாயிருக்குமா? நம் முன்னோர் அங்குச் சென்றதைப் பொய் யென்று சொல்லுதல்வேண்டும்; அல்லது வேறு முறைபற்றிச் சென்றாரென்று கூறுதல்வேண்டும்.

டாக்டர் நார்டன் முதலியோர் கூறுமாறு இமய முடியைக் காணச் செல்வோர்க்கு இன்றியமையாது வேண்டற்பாலது பிராணவாயு. மனிதன் வாயுவின்றி ஒரு நொடிப் பொழுதும் உயிர்பெற்று வாழ்தல் முடியாது. இப்பொழுது இமயத்தின் குடுமி காணச் செல்வோர் பிராணவாயுவைத் திரட்டிச் சேமித்துத் தம்முடன் கொண்டேகுகிறார். அவ்வாயுவின் துணைகொண்டே அவர் தங்கடனாற்றுகிறார். இஃது அருஞ்செயல்! அருஞ்செயல்! நம்முன்னோரும் பிராணவாயு துணைகொண்டே சென்றிருக்கலாம். ஆனால் பிராணவாயுவை அவர் பயன்படுத்திய முறை வேறாக இருத்தல்வேண்டும்.

பிராணனைப்பற்றியும் வாயுவைப்பற்றியும் நம் பண்டை மூதறிஞர் அறியாமலில்லை. இந்தியர் வாழ்வே பிராணாயாமத்தால் பண்படுத்தப்பட்டிருந்தது. இக்கூற்று, இப்பொழுதுள்ள இந்திய அறிஞர்க்குப் புதுமையாகத் தோன்றலாம். நம் முதுமக்கள், புற பூத சக்திகளைக்கொண்டு, மின்சாரக் கருவிகளையும் ஆகாய விமான முதலியவற்றையுங் காண முயன்றாரில்லை. இவைகளால் இப்பொழுது செய்யப்படுங் கருமங்களை அவர்கள் அஷ்டாங்க யோகப் பயிற்சியால் நிகழ்த்திவந்தார்கள். இக் கருமங்களா - இவைகளினும் அரிய கருமங்கள் பல - அவர்களால் ஆற்றப்பட்டு வந்தன. 'இவ்வாறு கூறுவது புண்டிதர் இயல்பு' என்று இக்கால அறிஞர் சொல்லமுற்படுவர். இந்நாளில் மேல் நாட்டார் கருவிகள் துணைகொண்டு கண்டுவரூஉம் மண்டில இயல்பு, கோளியல்பு

முதலியவற்றை நம்மவர் எவ்வாறு கண்டனர் என்பதைச் சிறிதுநேரம் அவ்வறிஞர் சிந்திப்பாராக.

நமது நாட்டு நூல்களில் சந்திரமண்டிலம் சூரிய மண்டிலம் முதலிய மண்டிலச் சிறப்புகள் பேசப்பட்டிருக்கின்றன; பெரிதும் விளக்கமாகப் பேசப்பட்டிருக்கின்றன. அவைகளின் உண்மைகளை நம்மவர் எப்படிக் கண்டனர்? கருவி கொண்டோ கண்டனர்? அக்காலத்தில் கருவி ஏது? ஆகவே, அரிய யோகத்தால் மண்டில உண்மைகளை நம்மவர் கண்டனர் என்றே கூறுதல் வேண்டும்.

பிராணயாமம் கைவரப் பெற்றவர்க்கு அண்டமும் பிண்டமும் ஒன்றுபட்டு விளங்கும். பிராணனை விருப்பம் போல் நிறுத்தி ஆளவல்லவர்க்கு ஆகாய கமனம் முதலியன எளிதில் கைகூடும். அவரைத் தூலதேகம் சேட்டையோ தடையோ செய்யாது. இமய முடியில் அவர் சென்றாலும் இப்பொழுது டாக்டர் நார்டன் முதலியோர்க்கு வேண்டப் படும் முறையில் வாயு அவர்க்கு வேண்டுவதில்லை. இவர் வாயுவைத் திரட்டிச் சேமித்துச் செல்கிறார். அவர் பிராணனைத் தம்வழி யாட்டும் வித்தை பயின்றவராதலால், புகைக் கூடுபோல மேலே பறந்து சென்றார். வாயுபந்தம் செய்வோர்க்குப் பிருதிவி தத்துவஞ் சுருங்கி நிற்பது இயல்பு. பிராணயாமஞ் சித்திபெற்று, யோகப் பேறு பெற்றவர் என்னதான் செய்யவல்லார்? நாரதர் முதலிய முனிவரும், மற்றச் சித்தரும் தூல தேகத்திலிருந்தே, அதன் தொடர் பின்றிச், சூக்குமதேகத் தொடர்புகொண்டு, நினைக்குமிடம் செல்லும் வல்லமை பெற்றிருந்தார். அவ்வரிய வித்தை இப்பொழுது செத்தது.

அட்டமா சித்துக்களைப்பற்றியும் அட்டாங்க யோகத்தைப்பற்றியும் பேசுதலும் அச்சமாயிருக்கிறது; எழுதுதலும் அச்சமாயிருக்கிறது. நமது நாட்டு வித்தைகளைப்பற்றிப் பேசுவோரையும் எழுதுவோரையும் தற்கால நாகரிக நஞ்சையுண்டு வெறித்துக்கிடப்போர் குறைகூறுகிறார்; எள்ளி நகையாடுகிறார். குறை கூறுவதையும் எள்ளுவதையும் அவர் பெருந்தொண்டாகவுங் கொண்டுள்ளார். இக்கூட்டத்தாரை

எந்நாட்டினரெனக் கூறுவதென்பது தெரியவில்லை. யோகப் பயிற்சியால் இமயமுடியை எளிதில் கண்டு வந்த பரம்பரையில் தோன்றி, இப்பொழுது அப் பரம்பரை வித்தையைப் பழித்துக் கூறும் அறிஞரைப் பார்க்கினும் ஆகாய விமானம் முதலிய கருவிகளின் துணைகொண்டு இமயமுடி காண முயன்றுவரும் மேல் நாட்டார் மேம்பட்டவராவர். அவரை வாழ்த்தவேண்டுவது நமது கடமை. மேல் நாட்டார் முயற்சியை நாம் பாராட்டுகிறோம். வீண் பேச்சை வெறுக்கிறோம்.

இமயத்தைக் காண இப்பொழுது தூலதேக உணர்வோடு பிராணவாயு உதவி நாடப்படுகிறது. முன்னை நாளில் சூக்கும தேக உணர்வோடு மேலெழும் பயிற்சி ஆட்சியிலிருந்தது. அப்பயிற்சியை மீண்டும் புதுக்க எவரும் முயல்கிறாரில்லை. மேல்நாட்டார் புறப்பொருள் உதவிகொண்டு இப்பொழுது பல காரியங்கள் ஆற்றிவருகிறார். நாளடைவில் அவர் புறநாட்ட முயற்சியில் சலிப்புற்று, அகநாட்ட முயற்சியில் தலைப்படநேரின், அப்பொழுது நம் முன்னோர் மாண்பு இனிது புலனாகலாம்.

மேல்நாட்டாரைப் போலப் புறநாட்ட முயற்சி செய்யாமலும், நம்மவர்களுக்குரிய அகநாட்ட முயற்சியில் தலைப்படாமலும், வாளா காலங்கழிக்கும் பட்டதாரிகள் படித்தவர்களா என்பது கேள்வி. நமது நாட்டுக் கல்வியைக் கொலைசெய்து வருவோர் தற்கால நாகரிகக் கல்வியாளரே என்று நாம் கூறுவோம். இக்கூட்டத்தாரே பெரிதும் ஆட்சிமுறை அங்கங்களாக விளங்குகிறார். இவரால் விளையுங் கேடுகள் எண்ணிலடங்கா. இக்கூட்டத்தார் துணையின்றியே நமது நாட்டுக் கல்வியை வளர்க்க முயலல் வேண்டும். மேல் நாட்டார் இமயத்தின் முடிகாண முயன்றுவருவது, இந்தியர் உறக்கத்தைப் போக்கி ஊக்கமூட்டுமென நம்புகிறோம்.

(25–7–1924)

# மழை

மழை என்றவுடனே உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. மழை இல்லை என்றதும் மனம் வருந்துகிறது. மழையால் உலகம் நடைபெறுகிறது. மழை இன்றேல் உலகம் என்னும் ?

மழையின் மாண்பை நம் முன்னோர் நன்கு உணர்ந்து, அதைக் கடவுளுக்கு இரண்டாவதாக வைத்துப் போற்றினர். மழையைக் காணுங்கடவுள் என்றுஞ் சிலர் கூறுவர். கடவுளைத் தந்தையாகவும் மழையைத் தாயாகவும், சில பெரியோர் வாழ்த்தியுள்ளார். சில அன்பர் மழையை ஆண்டவன் அருள் என்று அருளியிருக்கிறார். பண்டை மூதறிஞர் பலர் மொழிந்துள்ள வாழ்த்துக்கள்தோறும் மழை பொழிந்து கொண்டிருக்கும். 'வீழ்க தண்புனல்', 'மழை வளஞ் சுரக்க' 'மழை வழாது பெய்க' எனவரூஉம் மொழிகள் மழையின் இன்றியமையாமையை விளங்கச் செய்கின்றன. தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் முதலில் 'கடவுள் வாழ்த்து'க் கூறி இரண்டாவதாக ' வான்சிறப்பு ' ஓதியிருக்கிறார்.

உலகம் மழையால் நிலவுதலால், மழை அமிழ்தம் என்று போற்றப்படுகிறது. மழை உணவுப் பொருள்களை நல்குவதோடு, தானே உணவாகவும் நின்று உலகை ஓம்பி வருகிறது. இத்தகை மழை பொய்த்துவிடின், உலகம் பசி நோயால் பீடிக்கப்படும். பசி சில வேளைகளில் ஆண்டவன் பூசையையும் மறக்கச் செய்யும். உலகம் பசிநோய்க்கு இரையாகும்போது, உலகத்தில் தானமும் தவமும் தலைகாட்டா. தானமும், தவமும், ஆண்டவன் பூசையும் நன்கு நடைபெறவேண்டுமானால், மக்கள் வயிறார உண்ணும் பேறு பெறுதல் வேண்டும். அப்பேற்றை அளிக்கவல்லது மழை. 'நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும் - வானின் றமையா தொழுக்கு' என்றார் வள்ளுவனார்.

பண்டை நாளில் நம் முனிவர் நாடோறும் பூசா காலங்களில் 'உயிர்கள் வாழ்க. அவைகளுக்கு உணவுப் பொருள் குறைவின்றிக் கிடைக்க. காலம் வழாது மழை பெய்க' என்று உலகநலன் நாடி ஆண்டவனை வழுத்துவர்; மழை கருதி அறவேள்வி செய்வர்; வேறு பல அறச் செயல்களும் ஆற்றுவர். நன்மக்கள் எண்ணங்கள் செயற்கருஞ் செயல்களைச் செய்யும் ஆற்றல் வாய்ந்தன. மழையின் பொருட்டு இந்திர விழா நடாத்தும் வழக்கமும் நமது நாட்டிலிருந்தது. மழை நோக்கி நம் முன்னோர் செய்த முயற்சிகள் பல.

மக்கள் வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளும் ஆண்டவன், அவர்கள் நலத்துக்கென இயற்கையை வழங்கியிருக்கிறான். இயற்கை, பல வடிவந் தாங்கிப், பல குணம் பெற்றுப், பல வழியில் உலகத்துக்குத் துணைபுரிந்து வருகிறது. பண்டைக் காலத்தில் மக்கள் இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்தி வந்தார்கள். இப்பொழுது இயற்கை இன்பம், நூல்களில், பாடசாலை அறைகளில், ஆசிரியர் வாயில், அவர் காட்டுங் கருவிகளில், மாணாக்கர் செவியில் ஒழுகுகிறது. வாழ்வில் இயற்கை இன்பத்தைக் காணோம். நாடோறும் இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சி பெருகிக்கொண்டே போகிறது. ஏராளமாக நூல்கள் எழுதப்படுகின்றன. அவைகளை வாசிப்போர் தொகையும் பெருகுகிறது. ஆனால் இயற்கையோ டியைந்த வாழ்வைக் காணோம்.

நம் முன்னோர் இயற்கைப் பொருளின் தன்மைகளை உணராமலிருந்தார் என்று சொல்லுதல் முடியாது. மலையின் நிலையையும், கானின் பான்மையையும், கடலின் நீர்மையையும், ஞாயிற்றின் தன்மையையும் அவர் உணராம லிருந்தாரில்லை. அவைகளை உணர்ந்தும், மழை நோக்கி அவர் ஆண்டவனை வழுத்தி வந்தனர். இவ்வுண்மை காணாது, வாய் கூசாமல், நம் முன்னோரை 'மூடர்' என்று கூறும் 'மேதாவிகள்' காலம் இக்காலம். இக்காலம் மழை பெய்விக்கவும் கருவிகள் கண்டுள்ள காலம் என்பதை நாம்

அறிவோம். தற்கால நாகரிகம், மனித வாழ்வையே இயந்திர வாழ்வாகத் திருப்பியிருப்பதும் நமக்குத் தெரியும். மழைக்கும் இயந்திரங்களைத் தேடுங்காலம் இப்பொழுது நேர்ந்திருக்கிறது. இது நிற்க.

நாம் வாழும் தமிழ் நாட்டில் காலத்தில் இம்முறை மழை பொழியவில்லை. பல இடங்களில் பயிர்களின் பசுமை மாறிவிட்டது. பயிர்களெல்லாம் கருகிக் கருகி எரிகின்றன. குடிமக்கள் அத்தோற்றத்தைக் கண்டு கண்ணீர் விடுகிறார்கள். வானத்தை நோக்கி வாழும் உயிர்கள் என் செய்யும்? கால்நடைகளின் கதி என்னாகும்? மழைவளங் குன்றினமையால்; நகரங்களில் பலவித வெம்மை நோய்களுந் தோன்றுகின்றன.

சென்னை நகரின் நிலை இரங்கத்தக்கதா யிருக்கிறது. வெஞ்சுரமும் அம்மையும் சென்னையில் சண்டதாண்டவம் புரிகின்றன. சென்னைநகர வாசிகள் இப்பொழுது குடித்து வரும் தண்ணீரைப்பற்றி நாம் விரித்துக் கூறவேண்டுவதில்லை. இன்னுஞ் சின்னாள் மழை பெய்யாதிருக்குமாயின், சென்னை வாசிகள் பருகு நீருக்கு என்செய்வார்களோ தெரியவில்லை. சென்னை வாசிகள் வாழ்வு புழலேரி ஜலத்தில் அடங்கிக் கிடக்கிறது. சென்னையில் பல வீடுகளில் கிணறுகளில்லை. சில பகுதிகளில் கிணறுகள் தூர்க்கப்பட்டன. பல இடங்களில் கிணறுகள் பாழடைந்து விட்டன. தோட்டப் பக்கங்களிலுள்ள கிணறுகளில் சுகாதாரத்தின் பொருட்டுத் திரவகங்கள் விடப்பட்டிருக்கின்றன. சென்னையில் பெரிதுங் கிணறுகளில்லை. உள்ள கிணறுகளுள் பெரும்பான்மையன பயன்படாதன.

நகர பரிபாலன சங்கத்தாரும் சுகாதாரக் கூட்டத்தாரும் என் செய்வார் பாவம்! அன்னார் அறிக்கை வெளியிடுவர்; அம்மை குத்த முயல்வர்; புழலேரியின் சேற்றுநீரைச் சுத்தப்படுத்த ஓடுவர்; ஆங்கே ஊற்றுக்குழிகள் எடுக்க எண்ணுவர்; சுகாதாரத்தில் கைபோன அறிஞரை வரவழைத்துப்

பணத்தைச் செலவழிக்க உன்னுவர். அவரால் வேறு என்ன செய்தல் கூடும்? அவர் வேலையை அவர் செய்க.

மழை கருணை நீரைப் பொழிந்தால், மக்கள் துயர் ஒருவாறு ஒழியும். மழைவளஞ் சுருங்கினதற்குப் பூதபௌதிக நூல்வல்லார் கூறுங் காரணங்கள் பல இருக்கின்றன. அவைகளை நாம் மறுக்கவில்லை. அவைகள் ஒருபால் கிடக்க. நாம் நமது கடமையைச் செலுத்தல் வேண்டும். நமது நாட்டில் ஆண்டவன் வழிபாடு குறைந்து வருகிறது; உயிர்களிடத்து அன்பு செலுத்துமுறை குலைந்து வருகிறது; உண்மைவழி நடப்போர் தொகை அருகி வருகிறது; அறநெறி குன்றிவருகிறது. இக்குறைகளால் நமக்குத் துன்பங்கள் நேர்கின்றன. குறைகளை நிவர்த்திசெய்ய நாம் முயலுதல் வேண்டும்.

காந்தியடிகள் குறைகளை ஒழிக்கச் சிறைச்சாலையில் தவங் கிடக்கிறார். அவர் கோலிய அருள்நெறியை வளர்க்க வேண்டிய கடமை காங்கரஸ்காரரைப் பொறுத்து நிற்கிறது. தமிழ் நாட்டுக் காங்கரஸ் கூட்டத்தில் தெய்வமணம் பெரிதுங் கமழ்வதில்லை. கட்சியும், பொறாமையும், புறங்கூறலும் நாளுக்கு நாள் வளர்ந்தே வருகின்றன. ஒருவர்மேல் ஒருவர் பழி சுமத்தவே முயல்கிறார். ஒருவரை ஒருவர் சந்தேகிப்பது பொது அறமாகக் கொள்ளப்படுகிறது. தற்போதைய காங்கிரஸ் பழையபடி ஊன அரசியல் அமைப்பாயில்லை. அது தெய்வ மணம் வீசும் காந்தி அமைப்பாக மாறியிருக்கிறது. இதைத் தமிழ்நாட்டார் உணர்ந்து நடத்தல் வேண்டும். சத்தியத்தால் நமக்கு வெற்றி உண்டாகுமென்பதை நாட்டார் கவனித்தல் வேண்டும்.

இப்பொழுது மழையின்றி நாடு வருந்துகிறது. காங்கரஸ்காரர் என்ன செய்கிறார்? வாரத்தில் சில நாட்கள் குறிப்பிட்டு, அந்நாட்களில் ஒவ்வொரு சமயத்தாரையும் அவ்வச் சமயக் கடவுளைப் பூசிக்குமாறு கேட்கலாம்; பெருங் கூட்டங்கள் சேர்த்துத் தெய்வ வாழ்த்து நிகழ்த்தலாம். எல்லாச் சமயத்தாரும் ஒன்று சேர்ந்து தத்தம் மதாசாரப்படி குறிப்பிட்ட நாட்களில் ஆண்டவனை வழிபடும் ஒரு நெறியில்

தமிழ்நாட்டைப் பயிற்சி செய்வித்தல் வேண்டும். தெய்வ வழிபாடும் சத்தியமுமே நமது துன்பத்தைப் போக்குவன என்பதை நாட்டிற் பிறந்த ஒவ்வொருவரும் உணர்ந்து நடத்தல் வேண்டும்.

ஆண்டவனே! எல்லாம் உன்னுடைய செயல் என்பதை மறந்தோம்; அறியாமையை அறிவாகக் கொண்டோம். அத னல் துக்கம் மேம்பட்டு வருகிறது. மழைவளமுஞ் சுருங்கு கிறது. உன்னைவிட எமக்கு வேறு களைகணில்லை. பயிர்கள் மடிகின்றன. உழவர் வாடுகிறார். கால்நடைகள் சாய்கின்றன. உயிர்களெல்லாம் உன்னையே நோக்குகின்றன. கருணை மழை பொழிக. நீயே எல்லா உயிர்களுக்குந் தலைவன். உன்னை நோக்கியே விண்ணப்பஞ் செய்கிறோம்.

(6–10–1932)

## இயற்கையின் முனிவு

உலகம் போற்றும் ஒருவர் சிறையில் உறைகிறார். 'இந்திய கோகிலம்' கூட்டிலிருக்கிறது. அறிஞர் அபுல்கலாம் அஜாத், பண்டித மாளவியா முதலியோர் தவக்கோட்டம் நண்ணியுள்ளார். அடங்குமுறை ஒருபால்; அடக்குமுறை மற்றொருபால். நாட்டில் எங்கணும் குழப்பம். இவ்வேளை யில் இயற்கையன்னை முனிவுற்று நாட்டை முடுக்குகிறாள்.

நமது அருமைத் தென்னாடு, இரண்டு திங்களாக இயற்கை யின் முனிவால் உற்றுவருந் துன்பத்தை என்னென்று கூறு வது? கடந்த திங்களில் புயலும் மழையும் சோழ நாட்டைப் பாழ்படுத்தின. இத்திங்களில் அவை தொண்டை நாட்டைப் பாழ்படுத்தின.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமெனப் போற்றப் பெறுந் தஞ்சை ஜில்லா, புயலாலும் மழையாலும் உற்ற துன்பத்தி னின்றும் மீட்சி பெறாது வருந்திக்கொண்டிருக்கும்போது,

அப் புயலும் மழையும், சென்னை - செங்கற்பட்டு - வடார்க்காடு முதலிய இடங்களில் புகுந்து பேரிடுக்கண் விளைத்திருக்கின்றன. சென்னை நகரும் செங்கற்பட்டு ஜில்லாவும் காற்றுக்கும் நீருக்கும் இரையாயின. வடார்க்காடு ஜில்லா பெரிதும் நீருக்கு இரையாயிற்று.

சின்னாளாகப் பெருமழை பெய்துகொண்டிருந்தது. திடீரெனச் சென்ற வெள்ளிக்கிழமை இரவு ஏறக்குறைய 11 மணிக்குப் புயல் புகுந்தது. பெரும் புயலும் பெருமழையும் ஒன்றினால், உயிர்கள் நிலை என்னாகும் என்பதைச் சொல்லுதலும் வேண்டுமோ?

எங்கணும் வெள்ளக்காடு; ஓயாமழை; புயல்சுழற்சி; ஆறுகள் அருவிகள் பெருக்கம்; ஏரி குளங்கள் உடைப்பு; வானளாவிய மரங்கள் முறிவு; ஏழைக்குடில்கள் வீழ்ச்சி; தந்திக்கம்பிகள் அறுப்பு; வண்டிகள் நிறுத்தம்; இன்னோரன்ன பிற அலைவுகள். இவைகளிடை எறும்பு முதல் மனிதர் ஈறாகவுள்ள எல்லா உயிர்களும் பட்ட பாட்டை எவ்வெழுத்தால் எழுதுவது?

சென்ற புகைவண்டிகளின் கதியும், வந்த புகைவண்டிகளின் கதியும் என்னவாயின என்று அதிகாரிகளாலும் அறிந்துகொள்ள இயலாத ஒருநிலையைப் பன்னிரண்டு மணி நேரத்தில், இயற்கையன்னை புயலால் உண்டுபண்ணி விட்டாள். இவள் திறம் என்னே! என்னே! பல்லாயிரக் கணக்கான வேலை நிறுத்தங்கள் பன்னெடுநாள் நடைபெற்றாலும் இந்நிலையுறுங்கொல்! இயற்கை யன்னையின் கிளர்ச்சியைத் தகைய வல்ல சட்டங்களுண்டோ? படுத்தவல்ல சிறைகளுண்டோ? சுடவல்ல குண்டுகளுண்டோ?

இயற்கையன்னை வெகுண்டெழுந்து, கோர ரூபந்தாங்கி, மின்னொளி காட்டி, இடிகுரலெழுப்பித், தன் படைகளாகிய காற்றையும் நீரையும் நெருப்பையும் பிறவற்றையும் ஏவும்போது, அவளை எதிர்க்கவல்லார் யாவர்? குண்டுபீரங்கிகளும், ஆகாய விமானங்களும், நீர்மூழ்கிகளும், மற்றும் பல படைகளும் என்செய்யும்? இயற்கைஅரசி, முனிவுகொண்டு,

மாகாளியாய்க், கொண்டல்களைத் திரட்டி, நாலுபக்கங்களி லுங் காற்றாய், மழையாய் விசிவிசிப் பொழிந்து சண்ட தாண்டவம் புரியும் வேளையில், அவள்முன் மற்றவர் தாண்ட வம் என் செய்யும்? விண்ணும் மண்ணும் அவள்வழி; நீரும் நெருப்பும் அவள்வயம்; காற்றும் அவள் பக்கம்; யாண்டும் அவள் ஆணை; யாண்டும் அவள் ஆட்சி.

ஐப்பசி - கார்த்திகையில் இயற்கைத் தாய் கனிந்து கருணைமழை பொழிவது வழக்கம். அக்கருணை பல வழியி லும் நாட்டைப் புரந்துவரும். இம்முறை இயற்கையன்னை யின் கனிவு முனிவாக மாறிவிட்டது. இதற்கு முன்னருஞ் சில சமயம் அவள் முனிவு காட்டி யிருக்கிறாள். அம்முனிவி னும் இம்முனிவு பெரிது என்று கால அறிஞர் கூறுகிறார்.

தென்னாட்டுக்குற்றுள்ள துன்பம் அளப்பரிது. அத் துன்பத்தினின்றும் நாடு விடுதலையடைய எத்துணை நாளா குமோ? துன்பக் கொடுமைகள் நகரங்கட்குப் பெரிதும் புல னாவதில்லை. அவைகள் கிராமங்கட்கே புலனாகும். கிராமங்கள் நிலையை உன்னும்போது உள்ளம் உருகுகிறது. கெடுத்தல் எடுத்தல்—இரண்டும் இயற்கையின்மாட் டுண்டு. முனிவால் கிராமங்களைக் கெடுத்த இயற்கைத் தாயே கனிவால் அவை களை எடுப்பாள். ஆண்டவன் அருள் செய்வானாக.

1928-ம் ஆண்டு முதல் 1936-ம் ஆண்டுவரை, உலகில் பலதிற இன்னல்கள் விளையுமென்றும், பின்னே அமைதி நிலைபெறுமென்றும் எகிப்தின் பழைய நிலைய மொன்றில் பொறிக்கப்பெற்றுள்ள தீர்க்கதரிசன மொழிகளைப் பீடிகை யாக்கொண்டு, சில ஆண்டுகட்கு முன்னர் 'நவசக்தி'யில் நாம் வெளியிட்ட கருத்துக்கள் நேயர்கள் நினைவிலிருக்கலாம். இப்பொழுது அவ்வின்னல்கள் படிப்படியாக ஆங்காங்கே நிகழ்ந்துவருகின்றன. ஐரோப்பாவில், அமைதியில்லா வாழ்வு ஏற்பட்டிருத்தல் வெள்ளிடைமலை. ஆங்கே முதலாளி தொழி லாளி போராட்டம் நிகழ்ந்தவண்ணமா யிருக்கிறது. யாண் டாயினும் எம்மூலையிலாதல் ஹிம்சைகள் நிகழ்ந்தே வருகின் றன. சீனப் போரும், பாலஸ்தீனக் குழப்பமும், ஆப்கான்ஸ்

தானப் புரட்சியும், பிறவும் நேயர்கட்குத் தெரியும். நமது பாரத நாட்டின் தற்கால நிலையை விரித்துக் கூறவேண்டுவ தில்லை. மன்பதையின் எண்ணமெல்லாம் போராட்டத்தில் செல்கின்றன. அழகிலும் பாட்டிலும் புந்தி செலுத்துவோர் தொகை நாளுக்கு நாள் அருகி வருகிறது. சுருங்கக் கூறின் மக்கள் வாழ்வு இயற்கைச் செந்நெறியை விடுத்துச் செயற்கை வெந்நெறியில் வீழ்ந்து கிடக்கிறது என்னலாம். அதனால் உலகில் இன்னல்கள் விளைந்து வருகின்றன. உலகில் படிந் துள்ள மாசுகளைத் தவிர்ப்பதற்கு இன்னல்கள் தோன்றுகின் றன என்று கொள்ளுதல் வேண்டும். இயற்கையன்னை, உயிர் களை முன்னேற்ற முயல்வாளே யன்றிப், பின்னே வீழ்த்த ஒருபோதும் முயலாள். இன்னல்கள் நெருக்கி இடர்ப்படுத் தப் படுத்த உயிர்கட்கு நல்லறிவு பிறக்கும். அப்பொழுது குறைபாடுகளை உணர்தற்கும், அவைகளைக் களைதற்கும் உரிய நிலைமைகள் ஏற்படும்.

எகிப்து நிலயத்தின் மொழிகளின்படி பல நிகழ்ச்சிகள் உற்றிருக்கின்றன; உற்றும் வருகின்றன. ஆதலால், சில ஆண்டுகள் உலகம் போராட்டத்துக்கு இரையாகலாம். உயிர் களை உயிர்கள் வருத்துங் கொடுமை உள்ளவரை இன்னல்கள் விளைந்துகொண்டே போகும். அக்கொடுமை, இயற்கைச் செந்நெறியின்பாற்பட்ட தாகாது. ஆகவே, இயற்கைச் செந் நெறியில் நிற்க உலகம் பயிற்சிபெறல் வேண்டும்.

இயற்கைச் செந்நெறி என்னும் சகோதர நேயத்துக்கு இடையூறு செய்துவருங் குறைபாடுகள் படிப்படியாகக் களை யப் பெறல்வேண்டும். குறைபாடுகள் அகம் புறம் என்னும் இரண்டு கிளைகளாகப் பிரிந்து உலகை அலைத்து வருகின் றன. முதல்முதல் புறக்குற்றங்கள் தொலைதல் வேண்டும். நாடு நிறம் மொழி முதலியவற்றை இயற்கையின் தோற் றங்களென்று கொள்ளாது, அவைகளை வேற்றுமைகளாகக் கொண்டு, பூசல் விளைத்து வருவது அறியாமை. இவ்வேற் றுமை உணர்வு சகோதர நேயத்தைக் குலைக்கிறது. இப்புற வேற்றுமை உணர்வு அழிய அழிய, அகவேற்றுமை உணர்வு தானே அழிந்துபடும்.

ஆகவே, புறக் குறைபாடுகளைக் களைய உலகம் விரைந்து முயலுதல் வேண்டும். இயற்கையன்னை 'முனிவு' என்னும் மறக்கருணையால் உலகைப் பண்படுத்தி வருகிறாள். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னுஞ் சமரசக் கொள்கை யாண்டும் பரவுவதாக.

இயற்கையின் முனிவு சிற்சில இடங்களில் பெருகிவிடு கிறது. அப்பெருக்கம், இதுபோழ்து தென்னாட்டில் மழை காற்று வாயிலாக வெளிவந்தது. அதைத் தணிவிக்குமாறு இயற்கை யன்னையின் கொழுநனாகிய இறையப்பனை வேண்டு கிறோம். சகோதர நேயப் பெருக்கிற்குரிய துறைகளில் இறங்கி உழைக்குமாறு நமது அருமைத் தமிழ்நாட்டாரை வேண்டுகிறோம். (3-12-1930)

## வெள்ளக் கொடுமை

ஆண்டவன் மறக் கருணையோ, இயற்கைத் தேவியின் ஆற்றொணாச் சினமோ, நாட்டார் தீவினையோ தெரியவில்லை. சில ஆண்டுகளாக நமது நாடு வெள்ளத்தால் பாழ்பட்டு வருகிறது. வங்காள வெள்ளமும், கர்நாடக வெள்ளமும், வைகைப் பெருக்கும், பொருநைப் பெருக்கும் விளைத்த துன்ப நோய் இன்னும் போகவில்லை. இப்பொழுதோ நமது அரிய தென்னாடே வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது. சேர நாட்டில் வெள்ளம், கொங்கு நாட்டில் வெள்ளம், சோழ நாட்டில் வெள்ளம், பாண்டி நாட்டில் வெள்ளம், மைசூரிலும் வெள்ளம் வெள்ளமாம். இவ்வெள்ளக் கொடுமையோடு செங்கோட்டையில் பூகம்பம்! என்ன கொடுமை!!

வெள்ளப் பெருக்கும் பூகம்பமும் நிகழ்த்திய கேடு களுக்கு அளவும் உண்டோ? எத்துணைக் கிராமங்கள் மூழ்கின! எத்தனை வீடுகள் அழிந்தன! எவ்வளவு பாலங்கள்

உடைந்தன ! ரெயில் வண்டிகள் ஓடாது நிற்கின்றன; தபால்கள் நிற்கின்றன ; போக்கு வரவு நிற்கின்றன. இத் துன்பத்திடை வீழ்ந்து கிடக்கும் மக்கள் நிலையை என்னென்று எழுதுவது ? ஆங்காங்கே பெண்மணிகள் என்னென்ன துயருற்றார்களோ? குழந்தைகள் என்னென்ன துயருற்றனவோ? கிழவர்கள் துயரம் என்னவோ ? அந்தோ ! பகுத்தறிவில்லா ஏழைக் கால்நடைகளின் நிலையை உன்னும்போது உள்ளங் குழைகிறது. என்ன நிலை ! என்ன கொடுமை ! இப் பெருவெள்ளத்துக்குக் காரணம் மைசூரிலும், மேற்கு மூலையிலும், நீலகிரியிலும் பெய்த பெருமழையே யாகும். இயற்கையின் எழுச்சியைக் கட்டல் எவரால் முடியும் ?

திருவாங்கூரும் கொச்சியும் இன்னும் நீரால் சூழப்பட்டிருக்கின்றன. திருச்சூர், வெள்ளத்திடைத் தத்தளிக்கிறது. கோயமுத்தூருக்கருகே மன்னூரைச் சுற்றிப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள பாலங்களில் ஒன்றேனும் அழியாமலில்லை. அப்பகுதியில் மனிதருள் நூற்றுப்பதின்மரும் கால்நடைகளுள் எண்ணிறந்தனவும் துறக்கம் புகுந்தனர். பல்லோர் ஊறுபட்டனர். இடிந்த கட்டடங்களுக்கு அளவில்லை. சேரனூர் பாலம் உடைந்துவிட்டது. பல ராஜபாதைகள் நீரில் மறைந்து கிடக்கின்றன. இன்னும் நிலைமை மாறவில்லை என்றே தெரிகிறது. மலையாளத்தில் இன்னும் மழை ஓயவில்லை.

பைக்காரா தபால் நிலையமே மழையால் சிதறுண்டதென்று குன்னூர்ச் செய்தி தெரிவிக்கிறது. மழைக்கு அஞ்சித் தொழிலாளர் தபால் எடுத்துச் செல்லவும் மறுக்கின்றாராம். சில பாலங்களும் உடைந்தனவாம்.

சேலம் ஜில்லாவில் திருச்செங்கோடு நாமக்கல் என்னும் இரண்டு தாலுக்காக்களின் வழியே காவேரி பெருக்கெடுத்து ஓடுகிறது. நதிதீரத்தில், சேடர்பாளையம் முதல் உருப்பந்தூர் வரை சுமார் இருபத்தைந்து மைல் தூரம் வெள்ளத்தால் கேடு விளைந்திருக்கிறது. உருப்பந்தூரின் ஒரு பகுதி மூழ்கியே விட்டது. நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமாயினவாம்.

விளைந்த நஷ்டத்தின் விவரம் இன்னுந் தெரியவில்லை. ஆங்கே காவேரியின் உருமல் இன்னும் ஒடுங்கவில்லை.

கோயமுத்தூர் ஜில்லா நாலா பக்கத்திலும் வருந்தல் நேர்ந்திருக்கிறது. கோயமுத்தூரிலுள்ள ஏரிகள் ஜல மயமாக இருக்கின்றன. நொய்யலாற்றின் வெள்ளம் வீழ்ந்தும் எழுந்தும் அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. மேகங்கள் தவழ்ந்தவண்ணமா யிருக்கின்றனவாம். குறிச்சிக்குளத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்பு பெருகாதிருக்க மக்கள் ஆண்டவனை வேண்டுகிறார்களாம்.

ஈரோடு பாலத்தில் காவேரிப் புனல் இப்பொழுது இருபத்தொன்பது அடி எழுந்து ஓடுகிறது. பாலத்துக்கு அபாயம் நேருமோ என்னும் அச்சம் ஒழியவில்லை. காவேரியின் பின்னை எழுச்சிக்குக் காரணமாக நிற்பது பவானியாற்றின் புதிய பெருக்கே யாகும்.

மேட்டுப்பாளையத்தண்டை, பவானி நதி இருபத்து மூன்றடி உயரம் பரவி ஓடியதாகவும், இப்பொழுது அதற்கு மேல் பதின்மூன்றடி எழுந்து வீறுக ஓடுவதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. பவானிநகர் முன்னரே பெருந்துன்பத்துக்கு உட்பட்டு வருந்திக்கொண்டிருந்தது. சுமார் தொள்ளாயிரம் வீடுகள் இடிந்து வீழ்ந்தன என்றும், மூவாயிரம் மக்கள் வீடுவாசலின்றி வருந்துகிறார்களென்றும் அரசாங்கச் செய்தி தெரிவிக்கிறது. இத் துக்க சாகரத்தில் வீழ்ந்து இடர்ப்படும் மக்களுக்கு, 'பவானி வெள்ளம் பெருகுகிறது; எச்சரிக்கை' என்று அதிகாரிகள் பறைசாற்றினார்களாம். பவானிவாசிகள் நீரில் நீந்தியும் படகுகளிலேறியும் குமாரபாளையம் நோக்குகிறார்கள். குமாரபாளையத்தருகே ஓடும் காவேரி முன்னினும் இரண்டடி வெள்ளம் உயர்ந்து ஓடுகிறதாம். பவானிவாசிகள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் வருந்துகிறார்கள். பவானி நிலையை என்னென்று கூறுவது !

காவேரியின் சினம் பிறக்குமிடம் மைசூர் ; முதிருமிடம் கொங்குநாடு ; பொங்கிப் பரவுமிடம் சோழநாடு. சோழ

நாட்டைப் புனல் நாடாக்கி, அதை ஓம்பும் தாயாகிய காவேரி, அந்நாட்டை முப்பதாண்டுக் கொருமுறை அச்சுறுத்துவது வழக்கம் போலும்! காவேரி சினந்தெழுந்து தனது பூரண உருவத்தோடு உறுத்து உருமிச் சண்டதாண்டவம் புரிந்தால், திரிச்சி ஜில்லாவின் ஒரு பகுதியும், தஞ்சை ஜில்லா முற்றும் ஊர்பேரில்லாமலே போய்விடும். காவேரியின் சினத்தைத் தணிவிக்கும் பூசனைவழிபாடுகள், திரிச்சி தஞ்சை வாசிகளைப் பெரிதும் பொறுத்திருக்கின்றன.

திரிச்சியில் காவேரி பெருக்கெடுத்த வேகத்தைக் கண்டதும், 'ஸ்ரீரங்கம் போய்விடுமோ; திருவானைக்கா போய்விடுமோ' என்று மக்கள் நடுக்குற்றார்கள். இவ்விரண்டு திருப்பதிகளும் காவேரிக்குங் கொள்ளிடத்துக்கும் நடுவண் மிளிர்தலால், அவைகளின் நிலை அபாயமாகக் கருதப்பட்டது. நேற்றுக் கிடைத்த செய்தியால் அவ்விரண்டு ஊர்களுக்கும் நேர இருந்த ஆபத்து நீங்கிற்று என்று தெரியவந்தது. ஆண்டவனை வாழ்த்துகிறோம்.

திரிசிராப்பள்ளியில் காவேரியும் கொள்ளிடமும் கனன்றெழுந்த மிடுக்கு அளவிடற்பாலதன்று. 1840-ம் ஆண்டு பன்னெடுநாள் உழைத்து மிக உரமாகக் கட்டப்பெற்ற கொள்ளிடப் பாலத்தை வீழ்த்திக் காவேரிப்பாலத்தையும் பிளந்து வெள்ளம் ஓடியதெனில், அதன் வேகத்தை என்னென்று சொல்வது? அவ்வளவு மிடுக்கோடு ஓடிய வெள்ளம், எத்தனை ஊர்களை முட்டியிருக்கும்; எத்தனைக் கிராமங்களை இடித்திருக்கும்; எத்துணைப் பதிகளைக் குலைத்திருக்கும்; எத்துணை நகரங்களைக் கலக்கியிருக்கும்! இடையிடையே வெடிப்புகள், கமர்கள், உடைப்புகள், குழிகள் எண்ணில எண்ணில வாய்த் தோன்றியிருக்கும்! இந்நிலையில் திடீரெனக் காவேரியில் நேற்று ஓர் அடிவெள்ளம் எழுந்ததாம்! இதற்குக் காரணம் பவானியின் பெருக்காம்.

திரிச்சியில் காவேரிப் பால வெடிப்பு முதிர்ந்து பாலத்துக்குக் கேடு நிகழ்த்தாதவாறு, அதிகாரிகள் காத்து வருகிறார்கள். அப்பாலத்தின் வீதி காவேரி தேவியின் திரு

வருளைப் பொறுத்து நிற்கிறது. தேவி சிறிது வெகுண்டால் பாலம் சாய்ந்துவிடும். முருங்கப்பேட்டையில் ஏற்பட்டுள்ள பெரிய உடைப்பை முப்பதினுயிரம் ரூபா செலவழித்து அடைக்கப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. காவேரிக்கரையிலுள்ள சிந்தாமணி முதலிய ஊர்வாசிகள் எவ்வளவு கஷ்டத்துக்கு உட்பட்டுக் கிடப்பார்களென்பதை நாம் விரித்துக்கூற வேண்டுவதில்லை. அத்துன்ப எல்லை விடுத்து ஆங்குள்ள மக்களை வெளி வருமாறும் - அவர்களுக்குப் போதிய உதவி நல்குவதாகவும் - கூறி, உதவி புரிய முற்பட்டுள்ள திரிச்சிச் செல்வர்களாகிய ஸ்ரீமான்கள் காஜாமியான் ராவுத்தருக்கும், நங்கவரம் ஐயருக்கும் நமது நன்றியறிதலைச் செலுத்துகிறோம். ஆங்காங்குள்ள செல்வர்களும் தங்கள் தங்களாலியன்ற உதவி செய்ய முற்படுவார்களாக.

வெள்ளப் பெருக்கால் வருந்தும் சில பகுதிகளில் வியாபாரிகள் விலைகளை உயர்த்தினார்களென்றும், சிலர் திருடுகிறாரென்றும் செய்தி கிடைத்திருக்கிறது. இக்கொடுமையினுங் கொடுமை வேறொன்றிருக்குமோ? வெள்ளக் கலக்கத்தில் திருடப்புகுந்தவரை மனிதரென்ரு சொல்வது? விலங்குகளும் அந்நிலையில் மக்களை ஒன்றுஞ் செய்யாவே! இவ்விருகால் விலங்குகள், நாற்கால் விலங்குகளினும் இழிந்த பிராணிகளேயாகும்.

தஞ்சை ஜில்லா நடுக்குற்றது. 'கும்பகோணத்துக்கு ஆபத்து; மாயவரத்துக்கு ஆபத்து' என்று சொல்லப்பட்டது. ஆபத்து நிகழவில்லை. கரை ஓரத்திலுள்ள கிராமங்களுக்குப் பலதிறக் கஷ்டங்கள் ஆங்காங்கே நிகழ்ந்திருக்கின்றன என்று அறிகிறோம். கொள்ளிடம் ரெயில் பாலம் உடையுமோ என்னும் அச்சம் தோன்றுமலில்லை. பாலம் உடையவில்லை. வெள்ளம் மோதி முட்டியோடுகிறது. பாலத்தருகே வெள்ளம் அறுபதடி தூரம் நிலத்தைக் கிழித்திருக்கிறது. ரெயில் பாதையில் பல உடைப்புகள் தோன்றியிருக்கின்றன. அவைகளால் போட்மெயில் முதலிய வண்டிகள் ஓடுவதில்லை. சீர்காழிக்கும் வைத்தீசுரன் கோயிலுக்கும் இடையே ரெயில் பாதை பல இடங்களில் நீரால் அரிக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லா வெள்ளத் துன்பத்தினின்றும் இப்பொழுது பிழைத்தாலும், பின்னை அது பெருந் துன்பத்தை அநுபவிக்க நேரும் என்பதை நினைக்கத் துயரம் பெருகுகிறது. கண்ணம்பாடி அணைக்கட்டால் தஞ்சைக்கு இடையறாத தலைநோய் ; வரி உயர்வு மற்றொரு நோய்; இந்நோய்களோடு வெள்ளத்தால் விளைவு நலந்தாராத நோய் பெருநோயாக அடர்க்கும். தஞ்சை வாசிகளின் பின்னிலை குறித்து இரங்குகிறோம். ஏழைமிராசுதாரர்களைக் கடவுள் காப்பாரூக.

வெள்ளம் பாண்டியநாட்டையும் தீண்டாமல் விடவில்லை. திடீரென வைகையில் வெள்ளம் பெருகிற்று. பெரியாற்றணையில் உடைப்பு உற்றதென்ற வதந்தி கிளம்பிற்று. அது வதந்தியாகவே ஒழிந்தது குறித்து மகிழ்வெய்துகிறோம். வைகை வெள்ளம் பெருகாது அடங்கிவிட்டது. தென்காசி முதலிய சில இடங்களிலும் கங்கை தனது சீற்றத்தைச் சிறிது வீசியிருக்கிறதென்று தெரியவருகிறது.

மைசூரிலே நஞ்சங்கோடு, ஸ்ரீரங்கப் பட்டணம் முதலிய இடங்களில் நீர்ப்பெருக்கு, துன்பம் விளைத்திருக்கிறது. பல பாலங்கள் உடைந்தன. பல கிராமங்கள் நீரில் மூழ்கின. பயிர் பச்சைகளழிந்தன. சில இடங்களில் தபால் ரெயில் போக்கு வரவு கிடையா.

இவ்வெள்ள மேகத்திடையில் பூகம்ப மின்னல் செங்கோட்டை வழித் தோன்றிப் பெருஞ்சேதம் விளைத்தது. தொழிலாளர் பலர் மறைந்தனர். தந்திக் கம்பங்கள் மறைந்தன. ரெயில் வண்டிச் சக்கரங்களை மட்குவியல் மறித்ததாம். சில இடங்களில் மண் மேடிட்டதாம். அதனால் தென்னிந்திய ரெயில் போக்கு வரவு ஆங்கே நின்றிருக்கிறது.

வெள்ளத்துக்குத் தாயாகிய காவேரியின் ஆடிப் பெருக் கொன்றிருக்கிறதே என்று சோழ நாட்டு மக்கள் கவலையுறுகிறார்களாம். கவலையுற்று வருந்துவதைப் பார்க்கிலும் கடவுளைப் பூசிப்பது நலம்.

வெள்ளத்தால் நேர்ந்த உடைப்புகளையும் பிறவற்றையும் அரசாங்கத்தார் புதுக்கி ஒழுங்குபடுத்த அதிதீவிர முயற்சி செய்வர் என்பதில் சந்தேகமில்லை. ஆங்காங்கே

வெள்ளத்தால் வீடிழந்து, மாடிழந்து, பொன்னிழந்து, பொருளிழந்து, உடையின்றி, உணவின்றித் துன்பக் கடலில் மூழ்கியுள்ள அருமை மக்களைக் காக்கும் வழி தேடவேண்டுவது நாட்டார் கடமை. வெள்ளக்கேட்டால் வருந்தும் உயிர்களின் துன்பத்தை ஒவ்வொருவரும் தமது துன்பமாகப் பாவித்தல் வேண்டும். திரிச்சி கலெக்டர் ஒருவழியில் முயன்று வருகிறார் என்று தெரிகிறது. சென்னை அரசாங்கத்தார் பெருமுயற்சிசெய்ய உடனே முற்படல் வேண்டும். செல்வர்கள் பதுங்கலாகாது. சட்டசபை அங்கத்தவர்கள் 'தேர்தலுக்குப் பணம் வேண்டுமே' என்று எண்ணுதிருப்பார்களாக.

'கடைசியாகக், காங்கரஸ்காரருக்கே நாம் விண்ணப்பஞ் செய்கிறோம். காங்கரஸ் தன் பூரண ஊக்கத்தையும் ஜீவகாருண்ய முயற்சியில் செலுத்தல் வேண்டும். தமிழ் நாட்டுக் காங்கரஸ் தன்பாலுள்ள பொருள் முழுவதையும்குறிப்பிட்ட ஓரிடத்தில் (உதாரணமாகப் பவானி போன்ற ஓரிடத்தில்) செலவழித்து நலஞ் செய்தல்வேண்டும். பணத்தாலன்றோ காங்கரஸில் பிளவுகளும் பிணக்குகளும் நிகழ்கின்றன? அதை நல்வழிக்குப் பயன்படுத்தச் சமயம் வாய்த்திருக்கிறது. சர்க்கா சுழற்றுவதையும் நிறுத்தி, வருந்தும் உயிர்களுக்கு உதவ முந்துவது சிறப்பெனத் தோன்றுகிறது. இதைப்பற்றிப் பின்னும் எழுதுவோம். ஆண்டவனே! அருள் சுரக்க; தென்னாடு வருந்துகிறது; ஏழையேம் என் செய்ய வல்லேம்; பிழை பொறுக்க; மன்னிக்க; திருவருள் பொழிக; நின்னருள் வேண்டும். எந்தாய்! நின்னருள் வேண்டும்.

'மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை யெந்தாய்'—இராமலிங்கசுவாமிகள்

(25–7–1924)

# மனிதனும் அழகும்

'லட்சுமி.' ஆசிரியர் ஒரு கட்டுரை வரைந்தனுப்புமாறு கேட்டனர். 'லட்சுமி' என்னும் பெயர் எனக்கு அழகு நினைவைத் தோற்றுவித்தது. அதனின்றும் 'மனிதனும் அழகும்' என்னுந் தலைப்புப் பிறந்தது.

மனிதன் எவன் ? அழகு எது ? மனிதனுக்கும் அழகுக்குமுள்ள தொடர்பு என்னை ? இம் மூன்றையுஞ் சிறிது ஆராய்வோம். மனிதன் எவன் என்பதற்குப் புலவர் பலவாறு கூறுவர். மனிதன் எவன் என்பதை ஈண்டு அழகுடன் பொருத்தியே சிந்தித்தல் வேண்டும். வேறு முறைபற்றி அதை ஈண்டு ஆராயவேண்டுவதில்லை.

மனிதன் அழகின் நுண்மையைப் புலப்படுத்தவும், அழகின் இன்பத்தை நுகரவும் ஆண்டவனால் படைக்கப்பட்ட உயரிய உயிர்ப்பொருளாவன். அழகின் அருமையை உணரவும் உணர்த்தவும் மனிதப் பிறவி இன்றியமையாதது. மனிதப் பிறவி தாங்கிய ஒருவன் எல்லாச் செல்வமும் பெற்றும், அழகொன்றைப் பெறுனாயின், அவன் பிறவியினாலாய பயனைப் பெறாதவனாவன். அழகுக்கெனவே மனிதன் படைக்கப்பட்டான் என்று கூறுவது மிகையாகாது. மனிதன் ஆண்டவன் சாயலாகப் படைக்கப்பட்டான் என்று விவிலிய வேதங் கூறுகிறது. அதன் பொருளென்னை ? மனிதன் அழகின் சாயலாகப் படைக்கப்பட்டான் என்பது. அழகினின்றுந் தோன்றிய மனிதன் அழகிடையே வளர்கிறான். அழகிடை வளர்ந்துவரும் அவன் இடையிடை அழகை மறந்து, அழகைக் குலைக்குந் துறைகளில் வீழ்ந்து ஆடுகிறான். அதனால் அவன் அழகிழந்து, தானடைய வேண்டிய பேற்றை இழக்கிறான். வாழ்வுக்கு இன்றியமையாத அழகைக் காவாது குலைப்பவனை மனிதனென்று எவ்வாறு கூறுவது ? ஆகவே, அழகைக் காத்து, அழகனாய் வாழ்வோனே மனிதனாவன். மற்றையோன் எவனோ ?

அழகு எது? அழகை உன்னுவோம்; அழகில் நிற்போம்; திளைப்போம்; எழுவோம். அழகைப் பற்றிப் பலர் பலவாறு கூறியுள்ளார். முதலாவது அழகு ஒரு பொருளா என்பது சிந்திக்கற்பாற்று. அழகு ஒரு பொருளே. ஆனால் அது நுண்பொருள்; பருப்பொருளன்று.

உலகில் 'இஃது அழகாயிருக்கிறது; அஃது அழகாயிருக்கிறது' என்று மக்கள் பேசுகிறார்கள். அவர்கள் அழகை உணர்ந்து பேசுகிறார்களா உணராது பேசுகிறார்களா எனில், உணராத ஒன்றைப்பற்றிப் பேசுவது எது? காணும் ஒன்றைப்பற்றியோ - உணரக்கூடிய ஒன்றைப்பற்றியோ - மக்கள் பேசுவார்கள். அழகு காணவுங்கிடப்பது; உணரவுங் கிடப்பது. ஆனால் காட்சிக்கும் உணர்வுக்கும் புலனாகும் அழகு எது என்றால், அதைச் சொல்ல இயல்வதில்லை. அவ்வழகோ நாற்பக்கமும் நிலவுகிறது. திங்களில் அழகு ஒழுகுகிறது. பூக்களில் அழகு பொலிகிறது. பறவைகளின் அழகை என்னென்று பகர்வது? பரந்த கடலின் அழகை என்னென்று பன்னுவது? மகளிரோ அழகுமயமாய்த் திகழ்கிறார். குழவிகளோ அழகின் பிழம்பா யிலங்குகின்றன. பாக்களின் அழகென்ன! பண்களின் அழகென்ன! நாற்பக்கங்களிலும் அழகைக் காண்கிறோம்; உணர்கிறோம். அவ்வழகு எத்தகைத்து எனில் சொல்ல முடிவதில்லை. இஃது அழகின் பெற்றி! இப்பெற்றி யுணர்ந்தே பண்டைக்கால கிரேக்கரும், தமிழரும் அழகைக் கடவுளாக்கொண்டு போற்றினர் போலும்!

அழகுள்ள இடத்தை இளமை என்று சிலர் கூறுப; கொழுமை என்று சிலர் கூறுப; வளமை என்று சிலர் கூறுப. அன்புள்ள இடத்திலும் இன்புள்ள இடத்திலும் அழகு உறையும் என்று சிலர் சொல்வர். அழகு அகப்பொலிவின் எழுச்சி என்றும், ஆன்மாவின் தூய்மைக் கிளர்ச்சி என்றும் சிலர் சொல்வர். பலவினீட்ட ஒருமைப்பாட்டின் இசையில் அழகிருக்கிறதென்பது சிலர் கருத்து. அழகு யாண்டும் பரவியிருப்ப தென்பதும், செழுமை செறியுமிடத்தில் அது

தன்னைப் புலப்படுத்து மென்பதும் சிலர் கொள்கை. பாட்டு அழகென்பர் சிலர், சிலர் மனமே அழகுக்குக் காரணமென்பர். இன்னும் பலவாறு பகர்வோருமுளர்.

பலபடப் பலரால் பேசப்படும் அழகு கண்ணைக் கவர்கிறது. மனத்தைக் கவர்கிறது; பாட்டாக நிற்கிறது. அதைப் பாடலாம்.

பாட்டு இயற்கை. இயற்கையின் வடிவு அழகு. ஆகவே, செயற்கை அல்லாதனவெல்லாம் அழகு என்று சுருங்கச் சொல்லலாம்.

இப் பெற்றித்தாய அழகுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பென்னை? மனிதன் பிறக்கிறான்; வளர்கிறான்; இறக்கிறான். மனிதனைப் பிறப்பிப்பது அழகு; அவனை வளர்ப்பது அழகு; அவனைக் கொல்வது அழகோ!

மனிதன் அழகை மறந்த காலமே அவனது அழிவுக் காலம். அழகு மனிதனை மறப்பதில்லை. மனிதனே அழகை மறந்து மாள்கிறான். அழகைப்பெற மனிதனுக்குப் பொருள் வேண்டுவதில்லை. பொருளின்றிப் பெறும் பொருளைப் பெற முயலாது சாகும் மனிதன் அறியாமை என்னே!

அழகு தன்பால் என்றும் நிலவும்வழியில் மனிதன் தன் வாழ்வை நடாத்துவானாயின், அவன் என்றும் அழகியனாய் வாழ்வன். என்றும் அழகுடையனாய் வாழ எண்ணாத மனிதன் இரான். எல்லோரும் என்றும் அழகுடையவராக வாழவே எண்ணுகிறார். எண்ணுவதால் என்ன பயன்? எண்ணியவாறு நடக்கப் பயிலல் வேண்டும். நடப்போர் எத்துணைப்பேர்?

மனிதன் முதலாவது கைபுனைந்தியற்றா இயற்கையில் அழியா அழகுண்மையையும் கைபுனைந்தியற்றுஞ் செயற்கையில் அழியா அழகின்மையையும் நன்கு உணரல் வேண்டும். இதை ஆய்ந்து உண்மை தெளிவது மனிதனது முதற்கடமை என்றுங் கூறலாம். இம் முதற்கடமையால் மனிதன் தன் உடலின் அருமையை உணரப்பெறுவான். உடலின் அருமையை உணர்ந்த பின்னர் அவன் அதனை ஓம்ப முயல்வான். உடலை முறைப்படி ஓம்பும் ஒருவன் என்றும் அழகியனா

யிருப்பது திண்ணம். ஒருவன் தோலைப் பார்த்து அவனது அழகை அளந்து கூறுவது மடமை. அழகென்பது தோலி லும், நிறத்திலும் இருப்பதன்று.

மனிதன் தனது உடலைப் பெரிதும் ஓம்புதல் வேண்டும். உடலை ஓம்பாத ஒருவன் அழகுத் தெய்வத்தைப் போற்று தவறுவன். உடல் தெய்வத்தின் இயற்கைக் கோயில்.

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே'

எனவரூஉம் திருமூலர் திருவாக்கை ஓர்க. இவ்வாறு எல்லா நாட்டிலும் தோன்றிய அறிஞர் பலருங் கூறியுள்ளார்.

உடலோம்பினல் அழகு செறியுமோ என்று சிலர் வின வலாம். அழகு தசையின் செழுமைக்கண் திகழ்வது. தசை வளத்துக்கு இரத்த வோட்டமும் தூய்மையும் இன்றியமை யாதன. இவ்விரண்டும் மக்களுடைய உறைவிடம், உடை, உணவு, ஒழுக்கம் முதலியவற்றைப் பற்றி நிற்பன. ஆகவே, உறைவிடம், உடை, உணவு, ஒழுக்கம் முதலியவற்றின்மீது பெருங்கவலை செலுத்தல்வேண்டும். இவைகளைப்பற்றி எழு தப்பட்டுள்ள நூல்கள் பல. தமிழ் மொழியிலுஞ் சில நூல் கள் எழுதப்பட்டிருக்கின்றன. உடல்வளம் சுருங்கியுள்ள யானும் உடலோம்பும் முறைகளை விரித்துக் கூறும் மேல் நாட்டு நூல்களை ஆராய்ந்து வருகிறேன். தமிழ்நாட்டுக் கேற்றபடி ஒரு நூல் எழுத வேண்டுமென்னும் அவா எனக் குண்டு. உடலோம்பு முறைகளை விரித்துக்கூற இக்கட்டுரை இடந் தாராது. ஆயினும் சில உரை பகர்கிறேன்.

உறைவிடத்தைப்பற்றி இந்திய மக்களுக்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. கிராம வாழ்வை நினைவூட்டினால் போதும். வயிறு வளர்க்கக் கிராமங்களினின்றுந் திரண்டு நகரங்களில் குழுமும் மக்கள் நிலை பரிதபிக்கத்தக்கது. ஒரு தொழிற்சாலையில் எத்துணைப்பேர் வேலை செய்கிறார்? ஒரு வீட்டில் எத்தனைபேர் குடியிருக்கிறார்? ஒரு தெருவில் உறைவோர் தொகை எவ்வளவு? நெருக்க மிக்க நகரங்களில் வாழ்வோர் உடல்வளம் எவ்வாறு நலமுறும்? சாக்கடை நாற்றமும், மலசலப் பெருக்கும், பிறவும் மக்கள் செழுமையைக் குலைத்து, அவர்களைப் பலதிற நோய்வாய்ப்படச் செய்கின்றன. நகரத்தில் நோய்வாய்ப்படாதார் அரியர். இந் நகரில் வாழ்வோர்பால் அழகு எங்ஙனம் அரும்பும்?

நாட்டின் இயற்கை வளத்துக் கேற்றவாறு உடை அணிவது ஒழுங்கு. பழைய நாட்டு உடை இயற்கைக் கேற்றது. குளிர் நாட்டில் வதிவோர் அணியுமாறு உடை அணிதல் உடல் நலத்தைக் கெடுப்பதாகும். வெயில் வேளையில் மேல் நாட்டு முறைப்படி உடை அணியும் 'பெரியோர்' படும்பாடு சொல்லுந் தகையதன்று. ஆண்டவனருளால் ஞாயிற்றொளி நமது நாட்டில் நன்றாக வீசுகிறது. அவ்வொளியில் ஒருவித உணவு உண்டு. மூவகை ஸ்நானங்களுள் சூரிய ஸ்நானமுமொன்று. ஞாயிற்றின் ஒளிபடத் தொழில்புரியும் ஒருவன் முகத்திலுள்ள இயற்கை அழகு, மின்சார விசிறியின் கீழிருந்து வேலை செய்யும் ஒருவனுக்கு இல்லையென்பது வெளிப்படை. அதனால் பின்னவன் செயற்கை அழகு செய்துகொள்ள விரும்புகிறான். நாட்டுக்கேற்ற உடையை நாடோறும் தோய்த்து உலர்த்தி அணிதல் நலம். பலதிறக் கட்டுகள்போல் உடைகளைக் கட்டிக்கொள்வது தவறு. அக் கட்டு, இரத்த வோட்டத்துக்கு இடர் விளைக்கும்; அழகைக் குலைக்கும்.

உணவுக் கேற்றவாறு அழகும் பரிணமிக்கும். அழகு விரும்பும் ஒருவன் பெரிதும் பழ உணவுகளை அருந்தல் வேண்டும். பழ உணவு ஒருவேளை உண்டு, நன்னீரருந்தி, நறுங்காற்றுப் பருகி, ஞாயிற்றொளி மருவ வாழ்பவன்

என்றும் அழகியனுயிருப்பன். காரம் புளி கலந்த உணவும், புலால் உணவும் மனிதன் உடல்வளத்தைச் சுருக்குவனவாம். காரமும் புளியும் ஜீரணக் கருவிகளின் ஆற்றலைக் குறைப்பன. புலால் உணவு மனித இயல்பைக் கெடுப்பது. இவ்வுணவுகளால் இரத்தம் வெந்து நஞ்சாகி, உடல்வளத்தைக் கெடுத்து அழகை அழிக்கிறது.

ஒருவேளை பழ உணவு கொள்ளுதல் ஒழுங்கு. வேறு உணவுகொள்வோர் இருவேளை உண்ணலாம். இருவேளைக்கு மேல் சாப்பிடுவோர் உடலில் நோய் குடிகொள்ளும். நோயுள்ள உடலில் அழகேறல் அரிது. எவ்வித உணவு கொள்ளினும் அதை நன்ருக மென்று மென்று உமிழ்நீரோடு கலப்பித்து உட்கொள்ளல் வேண்டும். மெல்லாது உணவை விழுங்குவோர் நீண்டநாளிரார்; இருக்கும்வரை சுழுமுனையின் வலி குன்றி, நோயாளராக இருப்பர். அழகிற்கு உணவு மிகஇன்றியமையாததாகலான், அதனை உடலுக்கேற்றவாறு அளவாக அருந்தலில் பெருங் கவலை செலுத்தல் வேண்டும்.

அருந்தும் நீர் தூயதா யிருத்தல்வேண்டும். தூயநீரில்லாத இடத்தில் கிடைக்கும் நீரைக் காய்ச்சி ஆறவைத்து அருந்துதல் நலம். கொதிக்கும் நீரருந்துவதனுல் பல கெடுதிகள் உண்டு. காப்பி தேநீர் கொக்கோ முதலியன அருந்தலாகாது. காப்பிக்கடைகள் யமன் போன்றவை.

தூயநீ ரருந்தலைப் போலவே தூயநீராடல் வேண்டும். தூயநீராடலின் அவசியத்தைப்பற்றி ஹாரி கேஸ் (Harry Gaze) என்பவர் தாம் எழுதிய ஒரு நூலில் எடுத்துக்காட்டியுள்ள ஒரு குறிப்பு ஈண்டு நினைவிற்கு வருகிறது. பிரான்ஸில் அழகில் பேர்பெற்ற மாது ஒருத்தி யிருந்தாள். அவள் பெயர் நினன்டி லென்குலோ (Ninonde Lenclos) என்பது. அவள் எண்பதாவது வயதிலும் அழகு மிகுந்த இளமையுடையவளாயிருந்தாள். அவளது எண்பதாவது வயதில் அவள் பேரன்மாருள் ஒருவன் அவளழகைக் கண்டு காமுற்ருனும். பாட்டி அவன் விருப்பத்துக்கு இணங்காமை கண்டு, நாணமுற்று அவன் தற்கொலை செய்துகொண்டான்.

அப்பெண்மணி எண்பதாவது வயதிலும் அழகும் இளமையும் வாய்ந்தவளாயிருந்ததற்குக் காரணம் என்னை? காரணம் மிகச் சிறியது; பயனோ பெரியது. என்னை? அவள் நாடோறும் பன்முறை தூயநீராடி வந்ததே அவளது இளமைக்கும் அழகுக்குங் காரணம்.

மனிதன் தனக்கேற்ற உடை தரித்தும் நல்லுணவு கொண்டும் ஒழுக்கத்தை ஓம்பாதிருப்பானாயின், அவனது உடல்நலங் குன்றும்; அழகும் அழியும். ஒழுக்கம் உயிரினும் சிறப்பாக ஓம்பப்படல் வேண்டும். ஒழுக்கமே மனிதனுக்கு விழுப்பமளிப்பது. நல்லொழுக்கம் உடையவனது உடலின் அழகு மனத்தைக் கவர்ந்துவிடும். அழகுக்கு உயிர்நாடியாயிருப்பது ஒழுக்கம்.

ஒழுக்கத்தைக் காக்க விரும்புகிறவன் ஒருத்தியோடு வாழும் அறவோனா யிருத்தல்வேண்டும். ஒருவனது அழகு தங்கும் இளமையை வளர்ப்பது ஒருத்தியினது இன்பம். பெண், மாதர் என்னுஞ் சொற்கள் அழகுப்பொருளுடையன. ஆகுபெயராக அச்சொற்கள் மகளிருக்கு வழங்கி வருகின்றன. அழகைப் பெண்ணெனவும் மாதரெனவும் போற்றி வந்த தமிழ்மக்களின் கூர்த்தமதி வியக்கத்தக்கது. அழகாய மகளிரை வெறுக்கிறவன் வேறு எவ்வழகை விரும்புவான்? அழகை வெறுப்பவனுக்கு அறிவிருக்குமோ? இளமையில் இல்லறத்தை நீப்பவன் பல அல்லலுக்குட்படுவன்.

தாவர முதல் மக்கள் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் ஆண் பெண் வடிவாகப் படைக்கப்பட் டிருக்கின்றன. இக் காரிய உலகைப் படைக்குங் காரணனாகிய இறைவனும் ஆண் பெண் வடிவாக இருக்கிறான் என்று நமது பண்டை மூதறிஞர் கண்டுள்ளார். இயற்கையும் இறைவனும் ஆண்பெண் மயமாக இருக்கும்போது, ஒருவன் ஒருத்தியை வெறுப்பதும், ஒருத்தி ஒருவனை வெறுப்பதும் நியதிக்கு மாறுபட்ட செயல்களாகும். தனக்கு ஒத்த கல்வி குணம் உணவு முதலியவற்றை உடைய ஒருத்தியோடு ஒருவன், அளவுடன் கூடி வாழ்ந்து வருவானாயின், அவனும் அவளும் கட்டழகுடைய

ராக உலகில் வாழ்வர். அழகரும்பலுக்கு இல்லறமும் உறு கருவி என்பது கவனிக்கற்பாற்று.

பலதிற மகளிர் சேர்க்கையும், வரைவின்மகளிர் கூட்டுறவும், வயது முதிர்ந்த பெண்டிரைக் காமுறலும் காளையின் அழகைக் கல்லுவனவாம். கட்டழகைக் காதலிக்கும் எவனும் படிற்றொழுக்கத்தில் படுதலாகாது.

தனக்கொத்த குணம், நலன், கல்வி முதலியன வாய்ந்த ஒரு பெண்தெய்வத்தோடு வாழ்பவன் பெரிதும் வழுக்கி வீழான்; ஒருவேளை வீழினும் எழுதற்கு இடம் பெறுவான். அவன் இன்பந் தரத்தக்க நினைவுகளை நினைக்கவும், பேச்சுக்களைப் பேசவும், செயல்களைச் செய்யவும் வாய்ப்புடையவனாவன். இவ்வாய்ப்பு மகனது அழகைக் காத்துவரும். அழுக்காறு அவா வெகுளி இன்னோரன்ன பிறவோ, குருதியை நஞ்சாக்கி, உறுப்புக்களைக் குலைத்து, முடிவில் அழகைக் கெடுக்கும்.

வாழ்வில் கவலை இருத்தல் கூடாது. அழகுக்குப் பகை கவலை. மனிதன் நரம்புகளைக் கவலை அரித்தரித்துத் தின்னும். இந்நாளில் கவலையில்லாத இடம் இல்லை. இந்நாளில் கவலை இளம் பிள்ளைகளையே அரிக்கிறதென்னில், மற்றவர் அதற்கு இரையாவதைப்பற்றிக் கூறவேண்டுவதில்லை. மாணாக்கர் உள்ளத்தில் பரீட்சைக் கவலை படிந்து விடுகிறது. அவரது இளமையைக் கவலை குலைத்துவிடுகிறது. அழகுக்கு உறைவிடமான இளமை குலைந்தால், பின்னே அழகரும்புதல் அரிது. மாணாக்கர் நிலை இவ்வாறாயின், மற்றையோர் நிலையை விரித்துக்கூற இப் பத்திரிகை இடந்தாராது. கவலையின்றி வாழும் அழகிய வாழ்வை இறைவன் அருள்வானாக.

மனிதன் தனது அன்றாடக் கடன்களை அன்றாடம் நிறைவேற்ற முயலல்வேண்டும். அவன் உலவவேண்டிய காலத்தில் உறங்கியும், உறங்கவேண்டிய காலத்தில் உணவு கொண்டும் வாழ்தல் ஆகாது. ஒருவன் நாடோறும் தனது இயற்கைக் கடன்களை ஒழுங்குபெற ஆற்றி வருவானாயின், அவன் மலச்சிக்கல் முதலிய நோய்வாய்ப்படாது செவ்விய

வாழ்வை நடாத்தவல்லவனுவன். மலச்சிக்கல் மனிதனது அழகைக் கெடுக்கும் நச்சுவிதை. அந்நோய் காணப்பெறுவோர் உடனே அதை ஒழிக்க முயலல்வேண்டும். அஃது எல்லா நோய்களையும் ஈனும் தாய். அதை மருந்துகளால் தொலைக்க முயல்வதைப் பார்க்கிலும், இயற்கைச் சார்பால் தொலைக்க முயல்வது சிறப்பளிப்பதாகும். நாடோறும் வைகறையில் துயிலெழுந்து, நடந்து, ஊற்று நீரில் முறைப்படி மூழ்கி, மெல்லிய உணவுகொண்டு, வாழ்வோரைக் கண்டு நோய்கள் ஓடும் ; மலச்சிக்கல் தலைகாட்டாது. மருந்து தற்காலச் சாந்தியே செய்யும்.

மனிதன் அடிக்கடி இயற்கையோடு உறவாடல் வேண்டும். காடுகளிலும் மலைகளிலும் புகுந்து ஆங்காங்குள்ள இயற்கை வனப்பைக் கண்டுகண்டு மகிழ்தல்வேண்டும். செடிகளின் அழகும், கொடிகளின் அழகும், பூக்களின் அழகும், பறவைகளின் அழகும், பிற அழகுகளும் அடிக்கடி மனதிற் படிவதால் உடலில் அழகரும்பும். கடலோரத்தமர்ந்து கடலைக் காணக் காண மகிழ்ச்சி பொங்கும். வானத்தை நோக்கினுல் அழகிய நீல நிறமும், விண்மீன்களும், திங்களும் மகிழ்ச்சியூட்டும். மகிழ்ச்சி அழகை வளர்க்கும். ஆதலால், மனிதன் என்றும் இயற்கை வாழ்வை விரும்புதல் வேண்டும். சினிமா, பயாஸ்கோப் முதலிய செயற்கை நாகங்களில் வீழ்வது மனிதன் தன் அழகைக் கெடுத்துக்கொள்ள முயல்வதாகும். இயற்கைக் கடலைக் கண்டின்புருத மனிதன் சினிமாவில் காட்டப்படும் செயற்கைக் கடலைக் கண்டு களிக்கிருன். இவன் அழகை விரும்பும் ஆத்திகனுகான். தற்கால நாகரிகப் பொருள்கள் பெரிதும் மனிதனது இயற்கை அழகை அழிப்பன என்று கூறலாம்.

இவ்வுண்மை கண்ட அமெரிக்க நாட்டு அறிஞர் பலர், மனிதன் அழகு கெடாதவாறு காக்கும் முறைகளைக் கண்டு வருகிருர். அவர் அழகு வளர்ச்சிக்கெனப் பல நூல்கள் எழுதுகிருர் ; சங்கங்கள் காண்கிருர். அவர்தம் முயற்சி ஆங்குப் பயன்தருமாயின் உலகம் சீர்படும். மனிதனும் அழகு பெறுவான். அமெரிக்க அறிஞர் கண்டுவரும் முறைகள்

பெரிதும் நம் முன்னோர் கொண்டனவாம். இந்தியாவின் பழைய வாழ்வு மீண்டும் புத்துயிர் பெற்றால், அழகெனுங் கடவுள் நாட்டில் தாண்டவம் புரியும். அம்முயற்சியில் தலைப்பட்டு வழிகாட்டுங் காந்தியடிகளை வாழ்த்துகிறேன்.

தமிழ் நாட்டின் பண்டை நிலையை ஆராய்ந்தால், பழந் தமிழ்மக்கள் அழகுடன் எவ்வளவு உறவுகொண்டிருந் தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். பழந்தமிழ் மக்கள் அழகைப் பெறுதற்குக் கொண்ட முறைகள் பல. அவைகளைப் பழந்தமிழ் நூல்களிற் காணலாம். அந்நூல்களை வாசிக்கும்போது உள்ளம் இயற்கையழகில் தோயும்; அழகு மயமான பாட்டில் படியும்; இன்பத்திற் றிளைக்கும். இன்ப எழுச்சியால் அழகு அரும்பும்.

பழந்தமிழர் இயற்கையின் வனப்புக் கண்டு, அதன் அழகைக் கடவுளாகப்போற்றியது கவனிக்கத்தக்கது. அவர் இயற்கை இறைவனை இளமை வாய்ந்த அழகனைப் போற்றி னர். இளமை வாய்ந்த அழகன் முருகன். முருகன் என்னுஞ் சொற்பொருளை ஓர்க. அழகைக் கண்ட தமிழ்நாடே! நீ யாண்டுள்ளாய் யாண்டுள்ளாய் என்று கதறுகிறேன்.

மக்கள், கடவுளை இளையனை அழகனை வழிபட்டால் மனதில் அழகூர்ந்து உடலிலும் அஃது அரும்பும். மனிதன் என்றும் அழகோடு தொடர்புகொண்டு வாழ்வது சிறப்பு. உயிர்களின் நல்வாழ்வுக்கென்றே இயற்கைப் பொருளெலாம் இலங்குகின்றன. இயற்கை அழகுத் தொடர்பை மனிதன் அறியாமையால் அறுத்துக்கொள்ளலாகாது. மனிதன் அழகின் பெற்றியுணர்ந்து, இளமை ஓம்பி, அழகு காத்து வருவானாயின், அவன் காலனைக் காணாது, கடவுள்நிலை அதாவது அழியா அழகுநிலை யடைவான். கட்டுரை விரிகிறது. இவ்வளவோடு நின்றுவிடுகிறேன். (29-8-1924)

# பிள்ளைப் பேறு

பிள்ளைப்பேற்றைப் பற்றிய ஆராய்ச்சி இதுபோழ்து யாண்டும் மலிந்து கிடக்கிறது. அதுகுறித்து வெளிவரும் நூல்களும் எண்ணில..மகாத்மா காந்தியும் அடிக்கடி பிள்ளைப் பேற்றைப்பற்றி எழுதுகிறார். ஒவ்வொரு காலத்தில் ஒவ் வொரு பொருளின்மீது மக்கள் கருத்துப் படிதல் இயல்பு. அதைப்பற்றிய ஆராய்ச்சியைக் காலதேவதை எழுப்பிவரும். இதுபோழ்து அறிஞர் பிள்ளைப் பேற்றின்மீது கவலை செலுத்துமாறு திருவருள் புரிந்திருப்பது காலதேவதையே யாகும். காலதேவதைக்கு அடிமையாகாத மக்கள் இவ் வுலகில் உண்டோ ?

மக்கள் கற்கவேண்டுவனவற்றை முறையே கற்று, அக் கல்விக்கேற்றவாறு ஒழுகி, வாழ்வு நடாத்துவரேல், பிள்ளைப் பேற்றைப் பற்றிய ஆராய்ச்சித் தோற்றத்துக்கு இடம் நேர்ந்திராது. மக்கள் இக்காலத்தில் நெறியல்லா நெறி நின்று வாழ்வு நடாத்துவதால், அவர்கள் சிற்றின்பத் துறைகட்கு எளியராய், ஏற்றுவரும் இடுக்கண், அவர்களைப் பிள்ளைப் பேறு குறித்து ஆராயத் தூரத்தியிருக்கிறது. அவ்வாராய்ச்சி யாற் போந்த உண்மைகள் பலதிறத்தன. அவைகளை ஈண்டு விரித்துக் கூறவேண்டுவது அநாவசியம்.

பிள்ளைப் பேறு இயற்கையா, செயற்கையா ? இயற்கை என்று எவருங் கூறுவர். அது, தாவர முதல் மக்களீறாக உள்ள எல்லா உயிர்களிடத்தும் இயல்பாய் அமைந்து கிடத் தல் கண்கூடு. உயிர்வகைகளுள் மரஇனமாதல், பறவை இன மாதல், விலங்கினமாதல், பிற அஃறிணையாதல் பிள்ளைப் பேற்றைப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துவதில்லை. ஆறறி வுடைய உயர்திணை மகனே இவ்வாராய்ச்சியில் பெரிதுந் தலைப்பட்டிருக்கிறான்.

அஃறிணை உயிர்களில் பெண்ணினம் இல்லாமலில்லை. அஃறிணை ஆணினம், பெண்ணினத்தை விடுத்துப் பிரிந்து

துறவு பூண்டொழுகுவதுமில்லை. அவ்வினம் பெண்ணுடன் கூடி உலகை வளர்த்து வருகிறது. அவ்வாறே உயர்திணை மனிதனும் பெண்ணுடன்கூடி உலகை ஓம்புதல் வேண்டும்.

இயற்கையிலே இவ்வாறாக, மனிதன் பிள்ளைப் பேற்றைக் குறித்து ஆராயவும், அதை ஒடுக்குதற்குரிய வழிகளைக் காணவும் முயல்வது எற்றுக்கு என்னுங் கடா எழுகிறது. அஃறிணை உயிர்கள் இயற்கைவழி வாழ்வை நடாத்துகின்றன. உயர்திணை மனிதனே இயற்கை வாழ்வினின்றும் பிறழ்ந்துவிட்டான். அஃறிணை உயிர்கள் கலவியை இயற்கைக்குரிய அளவில் நிறுத்திவிடுகின்றன. மனிதனே! அம்மம்ம! எழுதவும் கைநடுக்குறுகிறது! கலவிக்கென்றே தான் படைக்கப்பட்டதாகக் கருதி வாழும் ஒரு கொடிய செயற்கை அரக்க வாழ்வில் வீழ்ந்துவிட்டான். வழுக்கி வீழ்ந்த அன்னான் என்செயல்வேண்டும்? மீண்டும் இயற்கைவழி ஒழுக முயலல்வேண்டும். அம்முயற்சியில் தலைப்படாது, பிள்ளைப் பேற்றை ஒடுக்கச் செயற்கை முறைகளைக் கையாளப் புகுவது அழிவிற்கு வழிதேடுவதாகும்.

படைப்பில் ஆண் பெண் வேற்றுமை பொலிவதால், ஆண் பெண்ணுடனும் பெண் ஆணுடனும் வாழவேண்டுவது இயல்பு. அவ்வியல்புக்கு மாறுகொண்டு வாழ்வதும் தவறு. அவ்வியல்பைத் துர்விநியோகப் படுத்துவதும் தவறு. அதை இயற்கை அளவினதாகப் பயன்படுத்தலே அறிவுடைமை. ஒவ்வோர் ஆண்மகனும் பெண்மகளும் முறையே தந்தை தாயாகி அன்புத் தொண்டு செய்தல்வேண்டும்; இல்லையேல் வாழ்வின் நோக்கத்தை உணராதொழிவர்.

திருமணத்துக்கு முன்னர், ஒருவனும் ஒருத்தியும் வாழ்வின் நோக்கு இஃது என்பதைக் கலையாலாதல், கலைஞானிகள் கூட்டுறவாலாதல் உணர்ந்தவராதல் வேண்டும். அவ்வுணர்வு பெற்ற ஒருவனும் ஒருத்தியும் திருமணத்தைச் சிற்றின்பத்துறையாக எண்ணார் நல்ல கல்வியும், தூய உணவும், நல்லோரிணக்கமும், கடவுளன்பும் எற்றுக்கு உலகிடை ஏற்பட்டிருக்கின்றன? மக்கள் வாழ்வு, காமக்குழியில்

வீழ்ந்து இடர்ப்படாது, காதற்புனலாடி உய்தற்பொருட்டே அவைகள் ஏற்பட்டிருக்கின்றன.

பிள்ளைப்பேறு குறித்துத் திருமணஞ் செய்தல்வேண்டு மென்றும், வெறுங் காம இச்சை கருதித் திருமணஞ்செய்தல் கூடாதென்றும் நமது நாட்டு நூல்கள் கூறுகின்றன. அக் கூற்றுக்களின் நுட்பம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குங்காலம் அணித்தே காட்சி அளிக்கப்போகிறது. பிள்ளைப்பேறு குறித்துத் திருமணஞ் செய்தல் வேண்டும் என்பதன் பொருள், எந்நேரமும் புற்றீசல்போலப் பன்றிக் குட்டிகளை ஈனுவது என்பதன்று. அதன் பொருள், உலக வளர்ச்சி நாடி மன்றல் புரிதல் வேண்டுமென்பதும், காமக் கிளர்ச்சி நாடி மன்றல் புரிதலாகா தென்பதுமேயாகும். இதை விரிக்கிற் பெருகும்.

திருமணத்தின்பெற்றி கூறப்புகுந்த நூல்கள், திருமணத்தின் பின்னர், இருவரும் வாழ்வு நடாத்தவேண்டிய முறைகளைக் கூறுமற் போகவில்லை. அவைகளை நோக்குழித் தலைவன் தலைவி சேர்க்கைவிதிகள் புலப்படும். தெருப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் பயிலும் சதகங்களிலும் அவ் விதிகளைக் காணலாம். அவ்விதிகளின்படி இல்லறம்நடாத்தும் ஒருவனும் ஒருத்தியும் எந்நேரமுஞ் சிற்றின்பத்துக் கெளிய ராகார். அன்னார் இரண்டொரு பிள்ளைகளைப் பெற்றுப் பின்னர்ச் சேர்க்கை யொழித்த சீவன்முக்த ராவர்.

'சிற்றின்பத்துக்கும் எளிமையாதல் வேண்டும்; பிள்ளையும் பெறுதல் கூடாது' என்னும் ஆராய்ச்சி இதுபோழ்து நடைபெற்று வருகிறது. இவ்வாராய்ச்சி கொலைப் பெருக்கில் கொண்டுபோய் விடுமென்பது ஒருதலை. கருத்தடை, கருச் சிதைத்தல், கரு உறுப்பைக் குலைத்தல் முதலியன பெரும் பாவம். வேறு செயற்கை முறைகளைக் கையாளலும், வாழ்வையும் அறிவு விளக்கத்தையுங் குலைத்து, நோய்வாய்ப்பட்டு, வாழ்வின்பத்தைக் கெடுத்துக்கொள்வதாகும். சின்னாள் அதாவது இரண்டொரு பிள்ளை பெறுமட்டும் மெய்யுறு புணர்ச்சி கொண்டு, பின்னை அப்பிள்ளைகட்குத் தாயாய்த் தந்தையாய்த்

தொண்டுபுரியும் அன்புலகில் புகுதல் வேண்டும். இளமை தொட்டு ஒழுங்குபட்ட வாழ்வை நடாத்துவோர்க்கு இஃது இயல்பாக அமையும். இம்முறையில் மெய்யுறு புணர்ச்சியை விலக்கவேண்டுமே யன்றி, வலிந்து அதை விலக்கல் கூடாது. வலிந்து விலக்கல் மனத்தை எரித்துக்கொண்டிருக்கும். அவ் வெரியும் உடல்வளத்தைக் குலைக்கும். ஆகலால் எதையும் வலிந்து தள்ளுதல்கூடாது. இயல்பாக அது தொலையும்முறை, அவரவர் இளமை வாழ்வைப் பொறுத்து நிற்கிறது.

இளமை தொட்டே பெண்ணிடத்துள்ள தெய்வத் தன்மையை யுணர்ந்து, அவளை வணங்கும் ஒரு பெரும் நெறி நின்று பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். பெண்ணைத் தெய்வமாகப் போற்றல் என்றதும், சிலர் 'வாய்ப் பேச்சு' என்பர். இந்நண்பர் சிற்சில நுட்பங்களை ஊன்றிக் கவனிப்பரேல் அங்ஙனங் கூறத் துணியார்.

ஒவ்வொருவரும் தாய் வயிற்றிலேயே பிறக்கிறார். தாயைக் கடவுளெனப் போற்றுமாறு அறிவுறுத்தாத ஆன்றோரில்லை. பலர் தாயைக் கடவுளாகப் போற்றிவாலுங் கண்கூடு. தாய் யார்? பெண்தெய்வமல்லவோ? தாய்மைப் பெண்ணை வணங்குவது உலக வழக்கம். இது வாய்ப் பேச் சன்று.

தாய் வயிற்றில் தோன்றும் மைந்தன் தாயெனும் பெண்ணைப் போற்றுதலோடு, தன்னுடன் பிறந்த பெண்ணை யும் அன்போடு போற்றுகிறான். இளமையில் தாய் சகோதரி இவர்களின் என்பு தோல் வனப்பா ஆண்மகன் கண்ணையும் மனத்தையுங் கவர்கிறது? இல்லை. அப் பெண் தெய்வங்களிடத்துள்ள நுண்மைப் பொருளாய அன்பெனுங் கடவுளல்லவோ இவனுக்குக் காட்சியளிக்கிறது? அவ் வன்புக் கடவுள், மனைவியாக வாய்க்கும் பெண்ணின்பா லில்லையோ? உண்டு. காமக் குருடருக்கு அது புலனாதலில்லை. 'தாய்க்குப் பின்னால் தாரம்' என்னும் பழமொழியுங் கருதற் பாலது. உலக வளர்ச்சியின் பொருட்டு இரண்டொரு

பிள்ளைப் பேற்றிற்குக் கருவியாகத் திருமணம் ஏற்பட்டிருக்கிறதன்றி, வெறுக்கத்தக்க இழிதுறையில் வீழ்தற்கு அஃது ஏற்படவில்லை.

இப்பொழுது பிள்ளைப்பேற்றைப்பற்றி வெளிவரும் நூல்களுள் சிலவே இயற்கைக்கு அரண் செய்வன. செயற்கை முறைகளை அறிவுறுத்தும் நூல்களைப் படியாதிருக்குமாறு இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

நமது நாட்டைப்பற்றி இரண்டோர் உரை பகர்ந்து இக்கட்டுரையை முடித்துவிடுகிறோம். நமது நாட்டில் இது போழ்து சுயராஜ்யமில்லை. வறுமைத் துன்பத்துக்கு ஓர் அளவில்லை. மக்கள் வருவாய் மிகமிகச் சுருக்கம். பழைய வழுக்க ஒழுக்கங்களும் பட்டுப்போயிருக்கின்றன. இந்நிலையிலுள்ளவர் திருமணஞ் செய்து பல பிள்ளைகளைப் பெறல் எவ்வளவு துன்பந் தருவது என்பதைப்பற்றி விரித்துரைக்க வேண்டுவதில்லை. மாதம் பத்து, பதினைந்து சம்பாதிப்போர், பத்தெட்டுப் பிள்ளைகளைப் பெறுதல் கொடிது. கொடிது. அவ்வுயிர்களின் பசி, பட்டினி, பிணி, மரணம் அளத்தற்கரியன. சுயராஜ்யம் பெறும்வரை திருமணஞ் செய்தலையும், செய்தோர் பிள்ளை பெறுதலையும் நிறுத்துமாறு மகாத்மாகாந்தி கூறுகிறார். இஃதொரு தேசநிலையை ஒட்டிய நியதி. இஃது என்றும் நிலவத்தக்க நியதியன்று. (24–9–1926)

## ஆன்மசக்தி

உலகில் பலதிறச் சக்திகள் நிலவுகின்றன. அச்சக்திகளனைத்தையுந் திரட்டி நோக்குழி அவைகள் இருகூறி லடங்கும். ஒன்று மூர்க்கசக்தி; மற்றொன்று ஆன்மசக்தி. மூர்க்க சக்தியினின்றும் பிரிந்த கவடு கோடுகள் பல. ஆன்மசக்தியினின்றும் பிரிந்த கவடு கோடுகள் பல. இவையிரண்டனுள் கொள்ளத்தக்கது எது? தள்ளத்தக்கது எது?

மக்கட் பிறவி விலங்கினின்றும் முகிழ்த்தது என்று தற்கால ஆராய்ச்சிக்காரர் கூறுப. மக்கள் விலங்கினின்றுந் தோன்றியவர்களாதலால், அவர்கள்மாட்டு விலங்கு நீர்மை திகழ்தல் இயல்பு. விலங்கு நீர்மை திகழினும் அந் நீர்மைக்கு அவர்கள் இரையாகவேண்டுவதில்லை. என்னை? மக்கள்பால் மற்றுமொரு தன்மை பொலிந்துகொண்டிருத் தலா லென்க. அத்தன்மை எது ? கடவுட்டன்மை. இதனால் மக்கள் உலகம் விலங்குக்கும் இறைமைக்கும் நடுவண் நிற்ப தென்பது பெறப்படுகிறது.

மக்கள் தங்கள்பாலுள்ள விலங்கு நீர்மையைச் செகுத்துக் கடவுள் நீர்மை பெறுதற்கு முயலுதல்வேண்டும். இம் முயற்சிக்குப் பகுத்தறிவு பெருந்துணை செய்யும். பகுத்தறிவு உணர்த்தும் வழிநின்று, மக்கள் வாழ்வு நடாத்தி வருவரேல், அவர்கள் விரைவில் கடவுட்டன்மை எய்தல் ஒருதலை. பகுத்தறிவை நேரிய வழியில் செலுத்தா தொழி வோர் விலங்குநிலை எய்தல் திண்ணம்.

விலங்கு நீர்மை என்னும் மூர்க்க சக்திவழி மக்கள் உழல உழல அவர்கட்கு நாளடைவில் துன்பம் பெருகும். இவ்வுலகில் துன்பச் சேற்றில் வீழ்ந்து வருந்துவதா மக்கள் வாழ்வின் நோக்கம் ? இல்லை. பின்னை வாழ்வின் நோக்கம் யாது ? கடவுள் நீர்மை என்னும் ஆன்மசக்திவழி நின்று, இன்பத்தில் திளைப்பதே வாழ்வின் நோக்கமாகும். ஆதலால், மக்கள் மூர்க்க சக்தியில் முனைந்து வலிந்து வீழாது, ஆன்ம சக்தியில் நிலைத்து வாழ்வு நடாத்துவது அறிவுடைமை.

இம் மண்ணில் மூர்க்கசக்தியில் உறுதிகொண்டு வாழ்ந் தவர்களின் வரலாறும், ஆன்மசக்தியின்வழி நின்று வாழ்ந் தவர்களின் வரலாறும் நமக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இரணியன், சூரபன்மன், இராவணன், சிசுபாலன் முதலியோர் மூர்க்க சக்தியை நம்பி மோசம் போனதை இதிகாசங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. மார்க்கண்டன், பிரகலாதன், அரிச்சந்திரன், புத்தர், சோக்ரதர், கிறிஸ்து, அப்பர் முதலிய ஆன்ம சக்தி நேயர் களின் வரலாறுகளும் உலகுக்குத் தெரியும்.

பண்டைக்காலக் கதைகள் ஒருபால் கிடக்க. இந்நாளில் ஆன்மசக்தியின் மாண்புக்கோர் இலக்கியமாய் ஒருபெரியார் விளங்குகிறார். அவரது ஆன்மசக்தி நிகழ்த்திவரும் அருவினைகளை என்னென்று கூறுவது? தென்னாப்பிரிக்காவில் அவ்வான்ம சக்தி பெரும் பெருஞ் செல்வர்களையும், பெரும் பெருங் கல்வியாளர்களையும் தன்வயப்படுத்திற்று. இந்தியாவில் அவ்வான்ம சக்தி புரிந்த அருளாடல்களைச் சொல்லவும் வேண்டுமோ? சாம்பரான், கெய்ரா, ஆமதாபாத் முதலிய இடங்களில் அவ்வான்ம சக்தி நடம்புரிந்து நாட்டிற்கு நலன் செய்ததை எவரே அறியார்? ரௌலட் சட்டத்தை விழுங்கிய பெருமை அவ்வான்ம சக்திக்கு உண்டு. ஒத்துழையாக் காலத்தில் அப்பெருஞ் சக்தி இந்தியாவையே ஆண்டது என்று கூறல் மிகையாகாது.

இச் சக்தி யுடையார் எவர்? சபர்மதியில் வீற்றிருக்கும் சாந்த மூர்த்தி மகாத்மா காந்தியே யாவர். மகாத்மா காந்தியால் பொதுவாக உலகமும், சிறப்பாக இந்தியாவும் விடுதலை அடையும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். காந்தியடிகளின் ஆன்ம சக்தித்திறனை என்னென்று கூறுவோம்! காந்தியடிகள் ஆறு ஆண்டுகட்கு முன்னர் ஆன்ம சக்தியை எழுப்பிப் பொறுமைப்போர் துவங்கக் கருதிய ஓரிடத்தில் இப்பொழுது என்ன நிகழ்கிறது? நேயர்களே! உன்னுங்கள்!

அன்று காந்தியடிகள் கருதிய பர்தோலியில் இன்று ஆன்ம சக்தி எழுந்து தாண்டவம் புரிகிறது. இந் நிகழ்ச்சி ஆண்டு உறுமென்று எவரேனுங் கனவிலாதல் கருதியிருப்பரோ? எதிர்பாராத ஒன்று நிகழ்ந்து வருகிறது. 'காந்தியடிகள் ஒடுங்கிவிட்டார்; அவரது ஆன்ம சக்தியும் ஒடுங்கி விட்டது' என்று எத்துணைப் பேர் இறுமாந்து கூறினர். இப்பொழுது என்ன நிகழ்ந்திருக்கிறது? பர்தோலியில் அடிகளின் ஆன்மசக்தி உலகநோக்கத்தைத் தன்மீது திருப்பியிருக்கிறது. பர்தோலிப் போர் உலகை ஈர்ப்பினும் ஈர்க்கும்.

ஆன்ம சக்தி யுடையார் தமது நெஞ்சில் ஒருமுறை நினைப்பது, என்றாதல் கைகூடும் என்பதில் ஐயமில்லை. அவர்

தம் நிலையின் பெற்றிதேறாது எள்ளி நகையாடல் அறியாமை. ஆன்ம சக்திக்குத் தோல்வி என்றும் இல்லை.

நமது நாடு பல சாதிகளாலும் பல சமயங்களாலும் ஆக்கப்பட்டதென்று பலர் எள்ளி நகையாடுவதுண்டு. இச்சாதி வேற்றுமையும் சமய வேற்றுமையும் இந்தியாவின் விடுதலைக்குப் பெருந்தடையா யிருக்கின்றன என்று பேசுவோருமுளர். சாதி வேற்றுமையும் சமய வேற்றுமையும் ஆன்ம சக்தியின் முன்னே பர்தோலியில் பாழ்பட்டு வருகின்றன. இதைக் கூர்ந்து நோக்குவோர்க்கு இந்தியாவின் விடுதலை ஆன்ம சக்தியில் உண்டு என்னும் உண்மை இனிதுபுலனாகும். ஆன்ம சக்தியை மறந்து, மக்கள் மூர்க்க சக்தியை எழுப்புங்கால் நாட்டில் சாதிப் பூசலும் சமயப் பிணக்கும் நிகழ்ந்துவிடுகின்றன. ஆகவே, இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆன்மசக்திப் போர்த்துறையில் பயிற்சி பெறுவாராக.

அன்பர்களே! பர்தோலியை நோக்குங்கள். ஆண்டுச் சாதி வேற்றுமையும் சமய வேற்றுமையும் என்ன செய்கின்றன? சாதி வேற்றுமை சாய்ந்துவிட்டது. சமய வேற்றுமை பறந்துவிட்டது. எல்லாரும் பாரதப் புதல்வர் என்ற நினைவில் படிந்து கிடக்கிறார். பாரதப் புதல்வர் என்னும் நினைவு கிராம அதிகாரிகளிடத்தும், போலீசாரிடத்தும், சட்டசபை நேயரிடத்தும், மற்றவரிடத்தும் புகுந்து, அவரையுந் தேசபக்தராக்கி யிருக்கிறது. இனி, பர்தோலி இயக்கம் காங்கரசையும் தேசத்தையும் தன்வயப் படுத்தப்போகிறது. இவ்வளவிற்குங் காரணம் ஒரு சிறிய உடலினின்றும் எழுந்துள்ள ஆன்மசக்தி, ஆன்மசக்தியே யாகும்.

ஆன்மசக்தியை எள்ளி நகையாடுவோர்க்குப் பர்தோலி ஒரு நல்ல பாடங் கற்பித்துவிட்டதென்றே கூறுவோம். ஆங்காங்குச் சாதிப் பூசலையும் சமயப் பிணக்கையும் எழுப்பி, நாட்டைக் குலைத்துவரூஉஞ் சகோதரர்கள், பர்தோலியை நோக்கியாதல் ஆன்மசக்தியில் பற்றுள்ளங் கொள்வார்களாக. இப்பொழுது நாட்டில் தோன்றியுள்ள சாதி இயக்கங்கட்கும் அவைகளின் ஆக்கத்துக்குங் காரணம், முன்

னெழுந்த பொறுமைப் போரின் வீழ்ச்சியேயாகும். மீண்டும் அப்பொறுமைப் போர் எழுந்துவிட்டது. இனிச் சாதி இயக்கங்கள்மீது கருத்துச் செலுத்தி இடர்ப்படுவது அறிவுடைமை யாகாது.

இந்நாளில் நமது அருமைத் தமிழ்நாடு உற்றுள்ள நிலையை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது. தமிழ்நாடு சாதிப் பூசலானும் சமயப் பிணக்கானும் மோதுண்டு அல்லலுறுகிறது. எங்கணும் போர்! எங்கணும் பூசல்! எங்கணும் பிணக்கு! தமிழ்த்தாய் எரிகிறாள்! கரிகிறாள்! தமிழ்மக்களே! தாய்முகம் நோக்குங்கள்; சாதிப் பூசலை நிறுத்துங்கள்; சமயச் சண்டையை நிறுத்துங்கள்; ஆன்ம சத்தியில் உறுதி கொள்ளுங்கள். வேற்றுமை உணர்வு ஒழியும். (11–7–1928)

## விலங்கு - மனிதன் - தெய்வம்

கடவுள் படைப்பில் எண்ணிறந்த உயிர்கள் எண்ணிறந்த உடல்கள் தாங்கி, இவ்வுலகிலும் வேறு உலகங்களிலும் வாழ்கின்றன. பூதபௌதிக அறிஞரும் படைப்பை முத்திரமாக வகுத்திருக்கிறார். அவை தாவரம், லோகம், ஜெந்து என்பன. இன்னும் இவைகளைப்பற்றிய ஆராய்ச்சி மேல்நாட்டில் வளர்ந்து வருகிறது. மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரிகளிற் சிலர், ஜெந்துக்களின் இயல்களை நன்கு ஆய்ந்து, 'விலங்கினின்றும் மனிதன் வந்தான்' என்பதை நிறுவிக் காட்டியுள்ளார். நமது நாட்டுப் பண்டை மூதறிஞரும் இவ்வுண்மையைக் கண்டவர் என்று கூறலாம்.

ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் அவதாரத்தின்மீது கருத்துச் செலுத்துவோம். அவ்வவதாரம் மச்சத்திற் றொடங்கிப் படிப்படியாக, உள்ளதுசிறந்து, வளர்ந்து வந்ததைப் புராணங்கள் கூறுகின்றன. மச்சம், கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி) ஆகிய இம்மூன்றன்பின் தோன்றியது நரசிம்மம். நரசிம்மத்தில் விலங்கு மனிதக் கலப்பு உண்டு. அதற்குப் பின்னர் வாமனர் (குள்ளர்) தோன்றினர். மனிதத்தோற்றம்

இவ்வவதாரத்தில் அரும்பிற்று. பின்னர்ப் பரசுராமர் உதித்தார். அவர்பால் சினம் பொங்கிக்கொண்டிருந்தது. அவர் காலத்திலேயே ஸ்ரீராமர் அவதரித்தார். அவ்வவதாரத்தில் கோபக்குறி கிடையாது. சாந்த மணமே கமழ்ந்துகொண்டிருந்தது ; ஆனால் பூர்வஞானம் என்றும் நிலவவில்லை ; ஒவ்வொருவேளை அந்த ஞானம் தோன்றி மறைந்ததை இராமாயணம் அறிவுறுத்துகிறது. இவ்வவதாரத்துக்குப் பின்னே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தோன்றினார். இவர்பால் பூர்வஞானம் என்றும் நிலவிக்கொண்டிருந்தது. மூலப்பொருளுக்கு என்னென்ன இயல்புகளுண்டோ அவையெல்லாம் கண்ணபிரானிடத்திலும் இருந்தன. அவர் எல்லாம் வல்லவராக இவ்வுலகில் வாழ்ந்தார். அவர் உபதேசித்த உண்மைப் பொருள் " பகவத்கீதை " என்னும் நூலாகப் பரிணமித்தது. புராணங்கள் கூறும் தசாவதார நுட்பத்தைத் தத்துவ சாஸ்திரவாயிலாக ஆராய்ந்தால், அதன்கண் உள்ளதுசிறத்தல் (Evolution) என்னும் உலக வளர்ச்சியைக் காணலாம்.

விலங்கினின்றும் மனிதன் தோன்றினன் என்பதை உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. விலங்கினின்றுந் தோன்றிய மனிதன் அடையவேண்டிய நிலை தெய்வநிலை யாகும். அந்நிலையைக் கண்ணபிரான் அவதாரமும் அவரது உபதேசமும் அறிவுறுத்துகின்றன. தெய்வநிலை என்பது மனிதனுக்கு வேறாக விளங்கும் ஒன்றன்று. அது மனிதனிடத்துப் பொலிவது. மனிதன் தன்பாலுள்ள தெய்விகத்தை உணர்ந்து அதைப் பெற முயலுதல்வேண்டும்.

உலகில் தற்போதைய மனிதன் எப்படி வாழ்கிறான் ? தான் எங்கே இருந்து வந்திருக்கவேண்டும் - எங்கே போகவேண்டும் - என்பதை அடிக்கடி மனிதன் நினைக்கிறானா ? தன் கண்முன்னே பிறப்பும் இறப்பும் உறுவதை அவன் உற்று நோக்குகிறானா ? பெரிதும் இல்லை. மனிதன் தன் வாழ்வையே பெரிதுங் கவனிக்கிறான் ; தனக்கு வேண்டுவனவற்றைத் தேட முயல்கிறான் ; தனக்கு வேண்டுவன கிட்டாதபோது பிறரை வருத்தி, அவர் உடைமையைக் கவர்ந்து வாழ விரும்புகிறான். இவ்வியல்புகளை விலங்குகளிடத்துங் காண

கிரும். விலங்கினின்றும் மனிதன் தோன்றினமையால், விலங்கியல்புகளும் அவன்பால் விளங்குகின்றன. அவ்வியல் புகளை ஒழித்து மனிதன் தன்பால் தெய்விக இயல்புகளைப் பொலிவிக்க முயலல்வேண்டும். இக்காரணம் பற்றியே மக் கட் பிறவியும் படைப்பில் நிகழப்பெறுகிறது ; இல்லையேல், விலங்கோடு படைப்பு நின்றிருக்கும். ஆதலால், மனிதன் தெய்வநிலை அடையும் முயற்சியில் தலைப்படவேண்டும்.

முன்னோர் வாழ்வு தெய்வநிலையைக் குறிக்கொண்டு நின்றதா ? அல்லது விலங்கு நிலையைக் குறிக்கொண்டு நின் றதா ? முன்னோர் வாழ்வு தெய்வநிலையை அடிப்படையாகக் கொண்டு நின்றதை விளக்க வேண்டுவதில்லை. அன்னார் எழும்போதும், நீராடும்போதும், உண்ணும்போதும் தொழில் முறைகளில் தலைப்படும்போதும், உறங்கும்போதும் தெய்வத் தன்மையை உணர்த்தக்கூடிய வினைகளை ஆற்றி வந்தனர். அவை இப்பொழுது ஏடுகளில் உறங்கிக் கிடக் கின்றன. இப்பொழுது நம்மவர், ஊன அரசியலில் தலைப் பட்டுத் தெய்விகத்தை மறந்து, விலங்கு இயல்புகளை எழுப்பக் கூடிய முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுகிறார்.

மனிதன் விலங்குக்கும் தெய்வத்துக்கும் இடையில் நிற்கிறான். மனிதன் இப்படிச் சார்ந்தால் விலங்காகிறான் ; அப்படிச் சார்ந்தால் தெய்வமாகிறான். இப்பொழுது மனிதன் தெய்வச் சார்பைத் தள்ளி, விலங்குச் சார்பைக் கொண்டுவரு கிறான். தெய்வச்சார்பு எது ? விலங்குச்சார்பு எது ? சாந்தம் பொறுமை அருள் அன்பு முதலியன தெய்வச் சார்பு ; கோபம் பொறாமை வன்கண் துவேஷம் முதலியன விலங்குச் சார்பு. மனிதன் எதில் தோய்கிறானோ அதன் வண்ணமாவன்.

தற்போதைய மனிதன் தெய்வ இயல்புகளைப் பெறல் அரிது. காரணமென்னை ? காரணம் மேல்நாட்டரசியல் தொடர்பு என்று கூறலாம். அவ்வரசியல் மனிதனிடத்தில் தெய்விக இயல்புகளை அரும்பவே செய்யாது.

அரசியல் என்பது, மனிதன் கடவுள்நிலை பெறுதற்கு இடையூறு நிகழாதவாறு காப்பதொன்று ; மனிதனைப் பாவச்

செயல் நிகழ்த்தாதவாறு காப்பது என்றுங் கூறலாம். அரசியல் மனிதவாழ்வுக்கு இன்றியமையாததே. மனிதனுக்குப் பொய் பொறாமை முதலியவற்றை ஊட்டக்கூடிய ஒன்றை அரசியலென்று கூறலாகாது. அதை நாத்திக அரசியல் - ஊன அரசியல் - என்று கூறலாம். ஆத்திக அரசியல் - ஞான அரசியல் - என்று கூறல் முடியாது.

அரசியல் நெறியை லௌகிக நெறி யென்றும், சமய ஞானத்தை வைதிக நெறியென்றும், அரசியலில் தலைப்படுவோர் பொய் பொறாமை சூழ்ச்சி தந்திரம் முதலியன செய்யலாமென்றும், சமயஞானம் பேசும் வைதிகர் ஒதுங்கி நிற்கவேண்டுமென்றும், இக்கால அரசியல்நூல் வல்லார் சொல்கிறார். இவ்வுண்மை கண்டே சுவாமி விவேகாநந்தர், '(தற்போதைய) அரசியல் ஆபாசம் எனக்கு வேண்டாம்; என்னுடைய அரசியல் கடவுளும் உண்மையுமே' என்று கூறியுள்ளார். இத்திருமொழி போற்றற்குரியது. கடவுளையும் உண்மையையும் உணர்த்தக்கூடிய அரசியல் இப்பொழுது உலகில் பரவி நிற்கவில்லை என்பது வெள்ளிடைமலை.

இப்பொழுது உலகமெங்கும் ஒருவித நாத்திக அரசியல் பரவி வருகிறது. அதனால் மனிதனுக்குத் தெய்வநினைவு தோன்றுவதில்லை. தற்கால அரசியல் முறைகள் தெய்வ நினைவை ஒருநாளும் உண்டுபண்ணா. மேல்நாட்டின் சீரைக் குலைத்த கொலைக்கருவி தற்கால அரசியலேயாகும். மேல்நாட்டார்க்குத் தெய்வம் அவ்வரசியலன்றிப் பிறிதென்னை? அவ்வரசியல் முதலாவது சுயநலத்துக்கு அடிகோலுகிறது. சுயநலத்தினின்றும் காமகுரோதங்கள் பிறக்கின்றன. சுயநலத்தை அடிப்படையாகக்கொண்ட மனிதவாழ்வில் தெய்வநிலை எளிதில் அரும்பாது. சுயநலம் அற்ற இடத்தில் தெய்வ ஒளி வீசும்.

தற்கால அரசியலில் பலதிறக் கட்சிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அக்கட்சிகளை ஆதரிக்கப் பத்திரிகைகளிருக்கின்றன. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு கட்சியை ஆதரித்து எழுதும். அரசியற் பத்திரிகைகளின் திருவிளையாடல்கள் பல. அப்பத்திரிகைகள் யோக்கியனை அயோக்கிய

னுகக் கூறும்; அயோக்கியனை யோக்கியனுகக் கூறும்; காலத்துக்கேற்ற பொய்ம்மைகளைக் கட்டுக்கட்டாகக் கட்டிவிடும்.

தற்கால அரசியல் ஞானம் பரவியுள்ள மேல்நாட்டில் பத்திரிகை வாசியாதவரைக் காண்டல் அரிது. ஏறக்குறைய எல்லாரும் பத்திரிகை வாசிப்பர். மேல்நாட்டுப் பத்திரிகைகள் இலட்சக்கணக்காகச் செலவழியும். நமது நாட்டில் இன்னும் பத்திரிகை வாசிப்போர்தொகை பெருகவில்லை. அரசியல்ஞானம் பெருகப் பெருகப் பத்திரிகை வாசிப்போர் தொகையும் பெருகும். நமது நாட்டுப் பத்திரிகைகளும் மேல்நாட்டு வழிநோக்கி ஓடுகின்றன. மேல்நாட்டவரைப் போல நம்மவர்க்கு இன்னும் அரசியல் கட்சிப்பற்று அவ்வளவாக உண்டாகவில்லை. அக் கட்சிப்பற்று வளர வளரப் பத்திரிகைகளின் மெய்ம்மைவளஞ் சுருங்கும்.

நமது நாட்டில் மேல்நாட்டு அரசியல் பாடம் போதிக்கும் 'தற்போதைய வேதம்' மாண்டேகு - செம்ஸ்பர்ட் சீர்த்திருத்தம். இச் சீர்திருத்தத்தால் வாக்காளர்தொகை சிறிது பெருகியிருக்கிறது. அபேட்சகர் வாக்காளரை இப்பொழுது ஏமாற்றி வருகிறார். சில இடங்களில் வாக்காளரும் அபேட்சகரை ஏமாற்றுகிறார். பொய்யும் ஏமாற்றமும் மக்களைத் தம்வயப்படுத்தி வருகின்றன. மேல்நாட்டு அரசியற் கலாசாலையில் நம்மவர் பயின்றுவரும் பாடங்களுள் பொய்ம்மையையும் ஏமாற்றத்தையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். பொய்யும் ஏமாற்றமும் உள்ள இடத்தில் தெய்வச் சாயலாவது நிலவுமோ?

மனிதன் ஏன் பிறந்தான்? பொய்யையும் ஏமாற்றத்தையும் பயிலவா? தற்போதைய மனிதவாழ்வு விலங்கு வாழ்வாக மாறிவருகிறது. பொய்யையும் ஏமாற்றத்தையும் வளர்த்து வளர்த்து முடிவில் மனிதன் அடைவதென்னை? முடிவில் பாவி மனிதன் மரணமே அடைகிறான். மரணத்தின் பின் அவன் அடையும் நிலை என்னை? அந்நிலையை ஆராயவும் தற்கால மனிதனுக்கு ஓய்வு உண்டோ? இது காலநிலை என்று சொல்லப்படுகிறது. காலநிலை அன்று. மனிதன் அறியாமையால் இந்நிலையை உண்டாக்கிக்கொண்டான்.

மனிதனை விலங்காக்கி வருவது தற்கால அரசியல். சுயநல அரசியலை மனிதன் என்று கொண்டானோ அன்று தொட்டு மனிதவாழ்வே குலைந்தது. இவ்வரசியல் வளர வளர மனிதன் விலங்காகவே மாறிவிடுவான். மனிதனுக்கு நான்கு கால் மீண்டும் உண்டாகுமோ என்னவோ தெரியவில்லை!

விலங்கினின்றும் பிறந்த மனிதன் ஓர் உயரிய நிலையை யன்றோ அடைதல்வேண்டும்? தற்காலப் போக்கை ஆராயும் போது, மனிதன் அந்நிலையை அடைவனோ என்றும் ஐயுற லாம். 'உயரிய நிலையொன்றுண்டு' என்னும் உணர்வு மனித னிடத்தில் அரும்புதல் அரிதாயிருக்கிறது. மக்கள் தெய்வ உணர்விழந்து, விலங்குநீர்மை பெற்று, உலகில் வாழ்ந்தால், குடும்பங்களின் கட்டுக் குலையும்; நாடும் காடாகும்.

மனிதனை விலங்காக்கும் அரசியலை வளர்ப்பதா தேய்ப் பதா? இப்பொழுது அதைத் தேய்த்தால் மனித சமூகமே அழிந்துபடுமென்று தற்கால அரசியல் அறிஞர் பலர் கருது கிறார். தற்கால அரசியல் வளர்ந்துவரின் உலகத்தில் அமை தியே நிலவாது. எந்நேரமும் உலகில் போரே நிகழ்ந்து கொண்டிருக்கும். இடையறாப் போர் நிகழ்ச்சியால் உலகம் என்ன பாடுபடல் நேரும்? உலகத்துக்குப் பலவித அல்லலைத் தேடி வைப்பது இப்பாழான அரசியலேயாகும். தற்காலச் சுயநல அரசியலை அறவே தொலைத்துத் தெய்விக அரசியலைக் கோலல் வேண்டும். 'இது முடியுமா' என்று தற்கால அரசியல் நேயர் கேட்கிறார். ஒன்றைக் கொள்ளுந் திறனும், மற்றொன்றைத் தள்ளுந் திறனும் மனிதனிடத்தில் அடங்கி யிருக்கின்றன. மனிதன் மனங் கொண்டால் எல்லாஞ்செய்ய லாம். எல்லாவற்றிற்குங் காரணம் மனமே.

மனிதன் தெய்வத்தை மறந்து, விலங்கு நீர்மைகளை வளர்த்து வருநாளில், ஆண்டவன் அருளால் பெரியோர் தோன்றி, மக்கட்குத் தெய்வ உண்மையை அறிவுறுத்துவது வழக்கம். இப்பொழுது நம்மிடை மகாத்மாகாந்தி தோன்றி யிருக்கிறார். அவர் போதிப்பதென்னை? அவர் சத்தியாக்கிர கத்தைப் போதிக்கிறார். காந்தியடிகள் உபதேசவழி உலகம்

னின்றால் தற்போதைய அரசியல் முறைகள் ஒழியும்; மனிதனுக்குத் தெய்வஉணர்வு உண்டாகும்; மனிதனிடத்தில் ஏற்பட்டுள்ள மிருக சுபாவங்களெல்லாம் தொலையும். காந்தியடிகள் அறிவுறுத்தும் அஹிம்சா தருமம் மனிதனைத் தெய்வமாக்குவது. தற்கால உலகமோ கத்தி முனையால் ஆளப்பட்டு வருகிறது. ஆதலால், முதலில் அஹிம்சையை வளர்ப்பதற்கு ஹிம்சையோடு கூட்டுறவு கொள்ளா முறையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இம்முறையைக் காந்தியடிகள் அறிவுறுத்துகிறார். அவரது அறிவுறுத்தல் உலகில் பரவ இந்தியா துணைநிற்றல் வேண்டும்.

இந்தியா துணைநிற்குமா? துணைநிற்க இந்தியா சித்தமா யிருக்கிறது. ஆனால், அதை நடத்துந் தலைவர்கள் - மேல் நாட்டு அரசியலில் வல்லவர்கள் - குறுக்கே நிற்கிறார்கள். அவர்கள் போதனை, காந்தியடிகள் போதனைக்குக் கேடு சூழ்ந்து வருகிறது. ஏழைமக்கள் காந்தியடிகள் உபதேச வழி நின்று வருகிறார்கள். சுயராஜ்யக் கட்சியெனுஞ் சட்ட சபைப் பிரவேசக் கட்சி அவர்கள் மனோநிலையைக் குலைத்து வருகிறது. இச்சமயத்தில் காந்தியத்தை வளர்க்கவேண்டு வது இந்தியர் கடமை. அதை வளர்க்க முன்வருவோர் யாவர்?

காந்தியத்தை வளர்க்க முயல்வோர் சிலருளர். அவர் முயற்சியைக் கெடுக்கச் சில போலித் தலைவர்கள் முயன்று வருவதை நாம் அறிவோம். உண்மையைச் சிதைத்தல் எவரா லும் இயலாது. போலித்தலைவர்களின் கூக்குரலுக்கும், சிறுமைப் பத்திரிகைகளின் வசைக்கும் உண்மையாளர் சிறிதும் அஞ்சுதலாகாது. (30-11-1923)

# ஹிந்துமதமும் வழிபாடும்

ஹிந்து என்னுஞ் சொல் வரலாற்றைப்பற்றி ஈண்டு விரித்துக் கூறவேண்டுவதில்லை. அது வழக்கில் எவரைக் குறித்து நிற்பதென்பது உலகறிந்ததொன்று. அக்கூட்டத்தார் தமது உயிருக்குரிய பற்றுக்கோடாகக் கொண்டொழுகும் மதம், ஹிந்துமதமென வழங்கி வருதல் கண்கூடு. அம் மதத்தில் உயரிய கொள்கை நிலவினும், அஃது உருவ வழிபாட்டு மதமென்றும், பல கடவுளரைப் போற்றும் மதமென்றும், பலதிறப் புறவழிபாடுகளையுடைய மதமென்றுஞ் சொல்வோர் பலர். ஆதலால், ஹிந்து மதத்துக்குரிய வழிபாடு யாது என்பது ஆராயற்பாலது.

ஹிந்துமத வழிபாட்டின்மீது கருத்தைச் செலுத்துமுன், அம்மதத்தின் உள்ளக்கிடக்கையை ஈண்டுச் சுருங்கச் சொல்வது நலம். ஹிந்து மதத்துக்குரிய வேதம் நான்கு. அவைகளின் முடிந்த உண்மையைக் கூறுவது வேதாந்தம். அவ்வேத வேதாந்த நுண்பொருள்கள், கடல்போல் பரந்து கிடத்தலால், வேதவியாசர் என்னும் பெரியார், அக்கடல் கடைந்து, 'வேதாந்த சூத்திரம்' அல்லது 'பிரம சூத்திரம்' என்னும் அமிழ்தை உலகுக்குத் தந்தார். வேத வேதாந்தங்களை ஒட்டி எழுந்த வழிநூல்கள் எண்ணில. அவை யாவும் மக்கள் அறிவாற்றலுக் கேற்றவாறு அறிஞரால் யாக்கப்பட்டன. அவைகளின் நுண்ணிய பொருள் வேத வேதாந்த ஆராய்ச்சி யுடையார்க்கே செவ்விதிற் புலனாகும்.

'வேதாந்த சூத்திர'த்துக்குப் பலர் உரை கண்டுள்ளார். ஒவ்வோர் உரையில் ஒவ்வொருவித சுவையுண்டு. ஒரு மூலத்துக்கு உரை காணப் புகுவோர் உள்ளத்தெழுங் கருத்து, பெரிதும் அவரவர் வதியுங் காலநிலை தேசநிலை முதலியவற்றைப் பொறுத்து நிற்றல் இயல்பு. அவ்வுரைகளை மதமாகக் கொள்வது தவறு. உரைகளை மதமாக்கொண்டு நம்மவர் இடர்ப்படுகிறார். இது, மூல மதத்துக்குக் கேடு நிகழ்த்தி

யிருக்கிறது. உரைகளை ஆராய்ச்சிக்குக் கருவியாகக் கொள்ள லாம். ஒவ்வோர் உரைமீதுமட்டுந் தூரபிமானங் கொண்டு, பிறவுரைகளைக் குறைகூறுவது அறிவுடைமை யாகாது.

ஹிந்துமத நூல்களை ஆய்ந்தால் தொடக்கத்தில் பன்மை உணர்வும், முடிவில் ஒருமை உணர்வும் தோன்றும். ‘ உலகம் பலவிதம் ’ என்பது பழமொழி. அப் பலவிதத்தில் ஒருவிதம் காண்பது அறிவுடைமை.

ஹிந்துமதம் இறைவனுக்கு எட்டு மூர்த்தம் சொல் கிறது. அவை, மண் புனல் தீ வளி வெளி திங்கள் ஞாயிறு உயிர் என்பன. இப்பன்மை எட்டையும் ஓர் ஒருமை இசை பட நிறுத்தி இயக்கும் பெருமை வியக்கற்பாலது.

‘ இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே ’

‘ நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசைபத் தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ ’

என்று தமிழ் வேதம் முழங்குதல் காண்க.

இவ்வெட்டுக்கும் வேறாக உலகில் ஒரு பொருளிருக் குமோ ? எல்லாம் அவைகளில் அடங்கும். இவ்வெட்டுக்கும் அடிப்படையாய்த் தாரகமாய் நிற்கும் பொருள் ஒன்றுளது. அதுவே சித்தெனுஞ் செம்பொருள். அது மண்ணில் மண் ணாகவும் பிறவற்றிற் பிறவாகவும் நீக்கமற நிறைந்து எல்லா வற்றையும் இயக்கி வருகிறது. ‘அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமா ’ யிலங்கும் அப் பரம்பொருளை உணர வேண்டு

மேல், அதன் இயற்கை வடிவாகிய மண் முதலிய எட்டையுங் கருவியாகக் கோடல்வேண்டும். அக்கருவிகொண்டு ஆய்ந்து உண்மை உணர்ந்தவர்கள் முனிபுங்கவர்கள். அவர்களே உண்மை வேதாந்திகள்.

மண் முதலியவற்றைக் கருவியாக்கொண்டு வழிபாடு நிகழ்த்த நிகழ்த்த, அவைகளோடு அத்துவிதமாகக் கலந்து நிற்கும் அகண்டாகார ஒருமைப்பொருள் புலனாகும். அப்போது மண் முதல் உயிர் ஈறாக உள்ள எல்லாம் மறைந்து போகும். அந்நிலையில் தோன்றும் ஒருமைக் காட்சியைக் கண்ணால் காணல் முடியுமோ? கருத்தால் கருதல் முடியுமோ? அந்நிலையை மணிவாசகனார்,

‘ இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றிஒன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே ’

என்று விளக்கியிருத்தல் காண்க.

அப்பெருநிலையை உலகிற் பிறந்த மக்கள் ஒவ்வொருவரும் ஒருபோது எய்தவேண்டியவரே. அந்நிலை ஒருவர்க்கு மட்டும் உரியதன்று; ஒரு கூட்டத்தார்க்கு மட்டும் உரியதன்று; ஒரு தேசத்தார்க்கு மட்டும் உரியதன்று. அஃது அகிலத்து உறையும் அனைவர்க்கும் உரியது. அந்நிலை குறிக்கும் மதமும் அனைவர்க்கும் உரியதே. அதை ஈண்டு வலியுறுத்திக் காட்ட வேண்டுவதில்லை. ஆகவே, வேதாந்தம் ஓரினத்தவர்க்கு மட்டும் உரியதன்று என்றுரைத்து மேலே செல்கிறேன்.

பஞ்சபூதமாகவும், சந்திரனாகவும், சூரியனாகவும், ஆன்மாவாகவும் ஒளிரும் அகண்டாகார சச்சிதானந்த சிவத்தைப்

பெறுதற்கு அவ்வெட்டையே துணைக்கருவியாகக் கோடல் வேண்டும் என்பது மேலே சொல்லப்பட்டது. நாடோறும் மனிதன் தன்னுடன் உள்ள ஆன்மாவைக் காணுதொழியி னும், அதைப்பற்றி ஆராயாதொழியினும், மண் முதலிய வற்றைக் காண்கிறான் ; ஆராய்கிறான் ; அவைகளின் துணை யால் வாழ்கிறான். இக்காட்சியும் ஆராய்ச்சியும் எட்டு மூர்த்த மாக உள்ள ஒன்றை மனிதனுக்கு உணர்த்துகின்றனவா ? இல்லையே ! அவ்வுணர்வைப் பெறுதற்கு வழிபாடு வேண்டற் பாலது.

எட்டில் எதை விடுவது ? எட்டில் ஒவ்வொன்றை வழி படுவோருளர் ; சிலவற்றை வழிபடுவோருளர்; எல்லாவற்றை யும் வழிபடுவோருளர். இவ் வழிபாட்டு முறைகள் பற்பல. அவைகளே பல மதங்களாக உலகில் நிலவுகின்றன. அவ்வழி பாடுகளை உருவம் அருவம் அருவுருவம் என்னும் மூன்றனுள் அடக்கலாம். உருவத்தைக் கொண்ட மதங்கள் சில ; அருவத்தைக்கொண்ட மதங்கள் சில ; அருவுருவத்தைக் கொண்ட மதங்கள் சில. எல்லாவற்றையுங் கொண்டது வேதாந்தமெனும் ஹிந்து மதம். ஆதலால், ஹிந்து மதத்தை எந்த மதத்திலுங் காணலாம். ஹிந்து மதம் கண்டப்பட்ட ஒன்றன்று. அஃது அகண்டமாக எல்லாவற்றிற்கும் இடந் தந்து நிற்பது.

மண் முதலிய ஒவ்வொன்றையுந் தனித்தனியே வழிபடு வோர் அவ்வப்பொருளில் கடவுளுண்மை காண்பர். அவர் மற்றப் பொருளில் கடவுளுண்மை காண்பதில்லை. கடவுளை யாண்டுங் காண்பது எப்படி ? அதற்குரிய வழிபாடு செய்தல் வேண்டும். எட்டுக்கு வேறாகப் பொருளின்மையால், யாண் டுங் கடவுளைக் காட்டும் வழிபாட்டிற்குரிய பொருள் அவ் வெட்டனுள் ஒன்றாகவே யிருத்தல் வேண்டும். அஃதெது ? அதுதான் ஆன்மா. மற்ற ஏழும் ஆன்மாவைப்போன்ற அறி வுடைப் பொருளல்ல. அறிவுடைப் பொருளாம் ஆன்மாவின் வழி ஆண்டவனை வழிபடுவோர், ஆண்டவன் உண்மையை மற்றப் பொருள்களிலுங் காணலாம். மண் முதலியன அறி

வுடைப் பொருள்களல்லவாகலான், அவைகளுக்கு எல்லை இடம் முதலியன உண்டு. ஆன்மா அறிவுடைப் பொருளாக லான், அதற்கு எல்லையுமில்லை ; இடமுமில்லை ; ஒன்றுமில்லை.

ஆன்ம வழிபாட்டைப்பற்றி எழுதலாம் ; பேசலாம். ஆனால் அதைச் செயலில் நிகழ்த்துவது அரிது. முடிந்த வழிபாடு அஃது என்பதை மாத்திரம் எவரும் மறத்த லாகாது. அதைக் குறிக்கொண்டே மற்ற வழிபாடுகளை நிகழ்த்தல் நல்லது. இவ்வான்ம வழிபாட்டை அறிவுறுத் தும் ஹிந்து மதமா உருவ வழிபாட்டு மதம்? பல கடவுளரை வழிபடும் மதம்? பலதிறக் கிரியைகளையுடைய இழிந்த மதம்? இவைகள் ஹிந்து மதத்திலில்லை என்று யான் சொல்லவில்லை. இவைகள் ஹிந்து மதத்தில் உண்டு. இவைகள் யாவும் ஹிந்து மதத்தின் படிகள் என்க. உருவங்களை மாத்திரம் வழிபடலே ஹிந்துமதம் என்று சொல்வது தவறு. ஆன்ம வழிபாடெனும் பெருவழிபாட்டைக் குறிக்கொண்டு, அவரவர் தத்தம் நிலைக்கேற்றபடி ஒவ்வொருவித வழிபாட்டைப் படிப் படியாகச் செய்துவரலாம்.

ஹிந்துக்கள் பெரிதும் உருவங்களை வழிபடுவோராய், பல கடவுளரைப் போற்றுவோராய், கிரியையாளரா யிருப்ப தற்குக் காரணம் என்னை என்று வினவலாம். உலகில் வாழும் மக்களுள் பெரும்பான்மையோர் எந்நீரார் என்பதைக் கவ னித்தல்வேண்டும். பெரும்பான்மையோர் - ஏறக்குறைய எல் லோரும் - மன உணர்வோடு - புலனறிவோடு - வாழ்வோரே யாவர். அவர் சொல் பொருள் என்னும் ஈருலகில்வாழ்வோரே யாவர். ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருளுண்டு. ஒரு சொல் சொல்லும்போது அதன் பொருள் மனத்தில் உறு தல் பெறுகிறோம். மனத்தில் பொருளுணர்த்தாத தொன்று வெறும் பாழாகவே யிருத்தல்வேண்டும். தென்னை என்றதும், தென்னையின் வடிவம் மனத்திலுறாமற் போகாது. மனிதன் மன உணர்வோடு வாழுமட்டும் உருவங்கடந்த ஒன்றை எவ்வாறு வழிபட வல்லான் ? 'நினைப்பும் மறப்பும் அற்றவர் நெஞ்சில்-வினைப்பற் றறுக்கும் விமல னிருப்பன்', 'நினைப்பற நினைந்தேன்' என வரூஉம் ஆன்றோர் மொழிகளைக் காண்க.

மன உணர்வு கடந்த நிலையை எய்துதற்கு மனவுணர்வோடு வாழும் மனிதன் என்ன செயல்வேண்டும்? தன்னிலைக்கேற்ற வழிபாடுகளைப் படிப்படியாகக்கொண் டொழுகல்வேண்டும்.

சிலர், 'ஹிந்துக்கள் உருவத்தை வழிபடுவோர்; நாங்கள் உருவங்கடந்த ஒன்றை வழிபடுவோர்' என்று வாயாற் பேசி 'பரலோகத்துள்ள எங்கள் பிதாவே' என்று ஆண்டவனை வழுத்துகிறார். பரலோகம் யாண்டுளது? அங்கே பிதா எப்படியிருக்கிறார்? 'பரலோகம்' 'பிதா' என்னுஞ் சொற்களுக்கு என்ன பொருள் அவர்கள் உள்ளத்தில் தோன்றுகின்றன? செபஞ் செய்யுங் கோயிலும் தொப்பியும் தாடியும் நீண்ட அங்கியும் தோன்றும் போலும்! இல்லையேல் அன்னார் வெறும் பாழைப் போற்றுவோராவர். மன உணர்வு உள்ளவரை மனிதன் மனத்தில் வடிவம் புலப்பட்டுக்கொண் டிருத்தல் இயல்பு. அத்தகை மனத்தை ஒரு வடிவில் பதிய வைத்துப் பயிற்சி செய்யச்செய்ய, அது மனிதனைப் பல துறையில் அலைத்து அலைத்து இடர்ப்படுத்தாது. முதலாவது நெஞ்சை ஓரிடத்தில் நிலைபெறச் செய்யல்வேண்டும். அதற்கு உருவ வழிபாடு இன்றியமையாதது. வழிபாட்டுடன், நெஞ்சை மேலும் நிலைபெறுத்தச் சில கிரியைகளும் வேண்டற்பாலன.

'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே'

என்று அப்பர் சுவாமிகள் அருளிச்செய்திருத்தல் காண்க. இத் திருப்பாடல், 'விறகிற் றீயினன் பாலிற் படுநெய் போல் - மறைய நின்றுளன் மாமணிச் சோதியன் - உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால் - முறுக வாங்கிக் கடைய முன் னிற்குமே' என்றும், 'காயமே கோயிலாக' என்றும்,

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே' என்றும் உலகோர்க்கு அறிவுறுத்திய பெரியாரால் அருளிச் செய்யப்பட்டதென்பது கருதற்பாலது.

உருவ வழிபாட்டில் பலதிற மூர்த்தி பேதங்கள் தோன்றும். ஆனால் வழிபாடோ ஒரு நிலையது. பேத உணர்வையே குறிக்கொண்டு, உயர்வு தாழ்வு வாதமிடுவோர், உண்மை காணும் முயற்சியில் தலைப்பட்டுழைப்பவரல்லர். மூர்த்தி வழிபாடு அவரவர் விரும்பியவாறு செய்யலாம். ஒரு மூர்த்தியின்மாட்டுக் கொண்ட பற்ருல், மற்ற மூர்த்திகளைக் குறை கூறுவோர், ஆன்ம வழிபாடெனும் பெருநிலை எய்தல் அரிது. மூர்த்தி வாதத்தில் தலையிட்டுக் காலங் கழிப்போர் ஒருவித நாத்திகரே யாவர்.

பஞ்சபூதப் பெருவடிவையே முதல் முதல் மனிதன் மனத்தில் உன்ன இயலாதெனக் கருதி, நம்முன்னோர், பஞ்சபூத நுட்பத்தைக் கோயில்கள் வாயிலாகவும் பூசைகள் வாயிலாகவும் விளங்கவைத்துச் சென்ருர். பஞ்சபூதம் ஆண்டவன் வடிவம் என்பதை அறிவுறுத்த நமது தமிழ் நாட்டிலேயே ஐந்து திருப்பதிகளுண்டு. அவை காஞ்சி (மண்), திருவானைக்கா (புனல்), திருவண்ணுமலை (நெருப்பு), திருக்காளத்தி (காற்று), சிதம்பரம் (வெளி) என்பன. பூசைக்காலத்திலும் இக்குறிகளுண்டு. மூர்த்தி மண்ணுக்கு அறிகுறி. அபிடேகமும் தீபமும், நீரையும் நெருப்பையும் உணர்த்துவன. விசிறி காற்றைக் குறிப்பது. பாடல் ஒலிவடிவான ஆகாயத்தை அறிவுறுத்துவது. சூரிய நமஸ்காரம் ஒளியை விளக்குவது. தியானம் அமைதி கூட்டுவது. மக்களின் நிலைக்கேற்ற வண்ணம் பல முறைகள் வகுக்கப்பட்டன. இம்முறைகள் இதுபோழ்து பொருளிழந்து கிடத்தல் கண்கூடு.

திருக்கோயில் வழிபாடும் பூசைமுறைகளும் நெஞ்சை நிலைபெறுத்துவனவாகலான், அவைகள் தொடக்கத்தில் கொள்ளற்பாலன. உருவ வழிபாட்டைக் குறைகூறுவோரும்

ஆண்டவனைத் தொழுதற்கெனத் தனிநிலையங் கோலிக்கொள்வது காண்கிறோம். இம்முறை, வெவ்வேறு வழியில் மனவுணர்வுடைய மனிதர் ஒவ்வொருவராலும் தம் தம் மதப் பெயரால் கொள்ளப்படுவது. இது ஹிந்துமதத்துக்கு முதற் படியாக விளங்குவது.

உருவ வழிபாட்டால் ஒருமைமனம் பெற்ற ஒருவன், செயற்கை உருவங்களையும் செயற்கை முறைகளையும் விடுத்து, இயற்கை உருவங்களை வழிபடும் ஒரு நிலையை எய்துவன். மலையையும் காட்டையும் வயலையும் கடலையும் ஆண்டவன் வடிவாகப் போற்றும் மனம் பரந்த பாட்டொழுகுவதாகும். இயற்கை யின்பமும் மனவுணர்வும் ஒன்றுபடும்போழ்து மனம் ஒடுங்குதல் காணலாம். அஃது ஒடுங்க ஒடுங்க ஆன்ம மூர்த்த வழிபாடு கூடும். அவ்வழிபாடு கூடப்பெற்ற ஒருவன் எல்லாவற்றையும் தன்னில் காணும்பேறெய்துவன். அவ்வழிபாட்டுக்கு மேற்பட்ட தொன்றில்லை. பின்னைக் கூடும் பெருநிலையைப் பற்றிய பேச்சு எற்றுக்கு? 'உரையற்ற தொன்றை உரைசெயும் ஊமர்காள் - கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ' என்னுந் திருமூலர் திருவாக்கைப் போற்றுகிறேன்.

ஹிந்து மதத்துக்குரிய வழிபாட்டு முறைகளைத் தாலிபுலாக நியாயம்பற்றி இக்கட்டுரையில் அடங்குமாறு சுருங்கக் கூறினேன். ஹிந்துமதம் உருவ வழிபாட்டளவோடு நிற்பதன்று என்பதொன்றே ஈண்டுக் கருதற்பாற்று.

நாளடைவில் ஹிந்துக்கள், படிகளாக உள்ள வழிபாடுகளையே முடிவாகக் கருதிப் பூசல் மூழ்கல் மடி கட்டல் மணியுருட்டல் முதலியனவே ஒழுக்க முறைகள் எனக் கொண்டமையான், அவர்களிடையில் ஆன்ம மூர்த்த வழிபாடும், அதற்குரித்தாய ஆன்மநேய வழிபாடும் பெரிதும் இறந்துபட்டன என்னலாம். அக்காலத்திலேயே (அதாவது இடைக் காலத்தில்) ஹிந்துக்களுக்குள் சாதிப்பூசலுஞ் சமயச்சண்டையும் தலைகாட்டலாயின. இச்சண்டைகள் அழுக்காறு வெகுளி முதலிய அரக்க குணங்களைத் தெய்வங்களாகப் போற்றச்

செய்தன. திருநீறு திருமண் சண்டையும், வடகலை தென் கலைச் சண்டையும், இவை போன்ற பிறவும் எங்நீர்மையைப் புலப்படுத்துகின்றன ? மக்கள் நிலை இவ்வாறாகவே புற வழி பாட்டிற்குரிய தெய்வநிலையங்கள் தத்தம் நோக்கத்தினின் றும் வழுவலாயின. ஹிந்து கோயில்களின் நிலையையும் மடங் களின் நிலையையுங் கூறவும் வேண்டுமோ ?

ஹிந்துக்கள் தெய்வ வழிபாட்டு முறைகளின் வீழ்ச்சி, அவர்களுக்குள் கலாம் விளைத்து, ஒற்றுமை குலைத்து, அவர்கள் தேசத்தையும் அவர்களிடத்திருந்து இழக்குமாறு செய்தது. ஆன்ம மூர்த்தத்தை வழிபடும் பெரும்பேறெய்திய ஹிந்துக்கள், இதுபோழ்து உலகிலுள்ள எல்லா மக்களினும் தாழ்நிலையுற்றுள்ளார்கள். ஹிந்துக்களுக்கெனச் சுயராஜ்யம் பெற்ற தேசமில்லையெனில், அவர்கள் சிறுமை நிலையை என்னென்று கூறுவது ? மீண்டும் ஹிந்துக்கள் பழைய நிலையை எய்தவேண்டுமேல், அவர்கள் பழையபடி தெய்வ வழிபாடுகளில் தலைப்பட்டு, ஆன்மஞானத்தை வளர்க்க முயலல்வேண்டும். புற வழிபாட்டிற்கென ஏற்பட்டுள்ள நிலையங்கள், ஆன்ம விளக்கத்துக்கு இனித் துணைபுரியுங் கருவிகளாக நிற்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆண்டுச் செல்வதினும் வீட்டிலேயே ஓர் அறை வகுத்து உருவ வழிபாடு செய்வது நலம். உருவ வழிபாட்டை ஒரோ வழிகொண்டு பெரிதும் இயற்கையை வழிபடுவதில் பயிற்சி பெறல்வேண்டும். இப்பயிற்சி, எட்டு மூர்த்தங்களுள் சிறந்த ஆன்மாவைத் தாங்கும் இயற்கைக் கோயில்களை வழிபடுந் துறையைக் காட்டுவதாகும். நடமாடுங் கோயில்களாகிய உயிர்கள் வழிபாடு இதுகாலை வேண்டற்பாலது.

'படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயிற் பகவற்கங் காமே'

எனவரூஉந் திருமூலர் திருவாக்கை ஓர்க. படமாடுங் கோயிலாகிய செயற்கைக் கோயிலினும், நடமாடுங்

கோயிலாகிய இயற்கைக் கோயிலே சாலச் சிறந்ததென்க. ஹிந்துக்களுக்குள் ஒற்றுமை உரிமை வேண்டுமெனில், அவர்கள் சாதி சமய வேற்றுமை கருதாது, நடமாடுங் கோயில்களாகிய உயிர்களை வழிபாடு செய்வார்களாக. உயிர்கள் வழிபாடு புத்துயிர் பெற்றெழுந்தால் சாதிச் சண்டையும் சமயச் சண்டையும் மாய்ந்தொழியும்; அன்பு மதம் யாண்டும் பெருகும்; உண்மை ஹிந்துமத ஆட்சியை யாண்டுங் காணலாம்.

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'—தாயுமானார்

(29–1–1926)

# ஹிந்துக்கள் கொள்கையும் அநுஷ்டானமும்

சகோதரர்களே!

இந்த எட்வர்டு பார்க்கில் தொழிலாளர் இயக்கத்தைப் பற்றி நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளேன். இன்று (16–2–25) சென்னை ஸ்ரீ வேங்கடேச குணாமிருத வருஷிணி சபையின் சார்பில் 'ஹிந்துக்கள் கொள்கையும் அநுஷ்டானமும்' என்னும் பொருள்பற்றிப் பேசுதல் நேர்ந்திருக்கிறது.

முதலாவது ஹிந்து என்னும் சொற்பொருளை ஆராய்வோம். முன்னோர், சிந்து நதிக்கரை சேர்ந்து வதிந்தபோது, அவரைக் கண்ட பாரசீகர் அவரை ஹிந்துக்கள் என்று அழைத்தனர். பின் வந்த கிரேக்கர் அவரை இந்து என்று கூப்பிட்டனர். அன்றுதொட்டு நம்மனோர் ஹிந்துக்களென்றும் இந்தியர்களென்றும் சொல்லப்பட்டு வருகிறார். இவ் ஹிந்துக்கள் அநுஷ்டிக்கும் மதம் எதுவோ, அதுவே ஹிந்து மதம் என்று வழங்கப்படுகிறது.

இப்பொழுது ஹிந்துக்கள் என்று சொன்னதும், சைவர், வைணவர், ஸ்மார்த்தர், மாத்வர் முதலியோரனைவரும் தம்மைக் கருதிக்கொள்கிறார். இவர், ஒரு முறையில் தம்மை வெவ்வேறு சமயத்தவராகக் கருதினும், இன்னொரு முறையில் தம்மை ஒரே சமயத்தவர் என்று கருதுவது உண்டு. ஹிந்துக்களுக்குள் பிரிவும் உண்டு; ஒருமையும் உண்டு. ஆகவே, ஹிந்துக்களைப் பிரிப்பன எவை என்பதும், கூட்டுவது எது என்பதும் ஆராயற்பாலன.

ஆகமங்கள், ஸ்மிருதிகள், பாஷ்யங்கள், புராணங்கள் முதலியன ஹிந்துக்களை வெவ்வேறாகப் பிரிப்பன. அவர்களை ஒன்றுபடுத்துவது வேதம். ஆகவே, வேதமென்பது ஹிந்துக்கள் அனைவர்க்கும் உரியதென்க. ஹிந்துக்களுக்குப் பொதுவாகவுள்ள வேதத்தின் பொருளே ஹிந்துக்களின் கொள்கையாகும்.

வேதத்தில் கர்மமும் ஞானமும் மலிந்து கிடக்கின்றன. அதனால் பெரியோர் ஞானப் பகுதியை வேதாந்தமாக விளக்கிக் காட்டினர். வேதாந்தமே உபநிடதம். உபநிடதங்கள் பொருளுண்மையைப் பலதிறமாகக் கூறியிருத்தலால், அவைகளின் சாரத்தை உலகோர் உணரவேண்டி, வியாசர், பிரமசூத்திரம் என்னுஞ் சீரிய நூலாக நமக்குத் தந்தார். வேத முடிவை வேதாந்தத்திலும், வேதாந்தத்தின் சாரத்தைப் பிரமசூத்திரத்திலுங் காணலாம். இம் மூன்றும் ஹிந்துக்களெல்லோர்க்கும் உரியன.

ஹிந்துக்களின் கொள்கை வேதாந்தத்தில் சொல்லப்படுவதாகும். வேதாந்தம் ஒரு கட்டுப்பட்ட மதம் அன்று. உலகில் தோன்றிய மக்கள் கூட்டத்தார் அனைவர்க்கும் அஃது உரியது. உலகிலுள்ள மக்களை இருகூறாகப் பிரிக்கலாம். அவை அஞ்ஞானக்கூட்டம் மெய்ஞ்ஞானக்கூட்டம் என்பன. எவன் தேகத்தைப் பொருளாக்கொண்டு ஆன்மவிளக்கமின்றி வாழ்கிறானோ, அவன் அஞ்ஞானியாவன். ஆன்மவிளக்கத்தைக் காணப்பெறுகிறவன் எவனோ, அவன் மெய்ஞ்ஞானியாவன். ஆகவே, மக்களுக்குரிய மதங்களை

அஞ்ஞான மதம், மெய்ஞ்ஞான மதம் என இரண்டாகப் பிரிக்கலாம். மெய்ஞ்ஞான மதம் வேதாந்தமென்பது. இஃது ஒரு நாட்டார்க்குமட்டும் எங்ஙனம் உரியதாகும் ?

உலகிடைத் தோன்றிய மெய்க்குரவர் பலரும் மெய்ஞ்ஞான நிலையையே தாம் கண்டும் கொண்டும் உலகுக்கும் அறிவுறுத்தினர். கிருஷ்ணன், புத்தர், கிறிஸ்து, மஹம்மது, ஆழ்வார், நாயன்மார் முதலிய பலரும் கண்ட வுண்மை ஒன்றே. அவ்வொன்றே மெய்ஞ்ஞானம் என்னும் வேதாந்தம். ஆதலால், வேதாந்தமென்பது மன்பதைக் குரியதன்றி, ஒரு கூட்டத்தார்க் குரியதாகாது: முதல்முதல் இந்நாட்டுச் சான்றோர், இவ்வுண்மையைக் கண்டமையான், இந்நாட்டிற்குச் சிறப்பாக இதைக் கொள்கிறோம். ஜெர்மெனி தேசத்துத் தத்துவஞானிகளுள் ஒருவராய சோப்பன்ஹேர் (Schopenhauer) என்பார், உபநிடதங்கள் உண்மை ஞானத்தை உணர்த்துவன என்று இயம்பியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

ஆன்ம விளக்கத்துக்குரிய மெய்ஞ்ஞானத்தை அறிவுறுத்துவது வேதாந்தம். இதுவே ஹிந்துக்களின் மதம் அல்லது கொள்கை என்பது. ஆன்மஞானம் விளங்கப்பெற்ற ஒருவன் எல்லாப் பொருளினிடத்தும் ஆண்டவனைக் காணும் பேறு பெறுகிறான். யாண்டும் ஆண்டவனைக் காண்டல் மக்கள் வாழ்வின் முடிந்த நோக்கமாகும். ஹிந்துக்களின் கொள்கை எது என்று ஒருவன் வினவுவானாயின், ‘ அது யாண்டும் ஆண்டவனைக் காண்டல் ’ என்று விடையிறுக்கலாம்.

இனி இக்கொள்கையை நம் ஆன்றோர் எவ்வாறு அநுஷ்டானத்திற் கொணர்ந்தார் என்பதைச் சிறிது கவனிப்போம். அநுஷ்டான முறைகள் பல. அவைகளில் இரண்டொன்றைக் குறிக்கிறேன். முதலாவது அட்டாங்கயோகம் நினைவிற்கு வருகிறது. இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டும் அட்டாங்க யோகமாகும். இவ்வொவ்வொன்றையுந் தனித்தனியே கூறுபடுத்திப் பேசப்புகுந்தால் அது தனித்தனி உபந்யாசமாக முடியும். காலதேவதைக்கு அஞ்சுகிறேன்.

இயமம் நியமம் முதலிய சொற்களைக் கேட்டதும், 'வைதிகம்' என்று சிலர் சொல்கிறார். இயமம் நியமம் முதலியன உடலைத் தூய்மைசெய்யும்; அவ்வழி உயிரின்பத்தையும் கூட்டும். மேல்நாட்டு அறிஞர் இயற்றியுள்ள சுகாதார நூல்களை வாசித்துப் பாருங்கள். அவைகள், இயம நியமங்களுக்கு மாறுபாடாக ஒன்றும் சொல்லவில்லை. நம்முடைய ஸ்மிருதிகளிலுள்ள நித்திய ஆசாரங்கள் உடல் நலத்துக்குரிய சிறந்த முறைகளாம்.

இயம நியமாதிகளை முறையாகக் கடைப்பிடித் தொழுகுவோர், ஆண்டவன் உண்மைக் காட்சி முதலாவது தம்மிடத்திலும், பின்னே படிப்படியாக மற்ற உயிர்களிடத்திலும் வளர்ந்து பொலிவதைக் காணுதல் கூடும். இதற்கு உலகியல் தொடர்பு இன்றியமையாதது. உலகியல் தொடர்பு அற்ற எவ்வநுஷ்டானமும் செயலில் வாராது. இதுபற்றியே நம் முன்னோர் லௌகிகத்தையும், வைதிகத்தையும் வேறுபடுத்தினாரில்லை; ஒன்றோடொன்று இயைந்து நிலவுமாறு முறைகளையுங் கோலியுள்ளார். இவ்வுண்மை தேறாது, 'நம்மவர் உலகிற்கு அப்புறப்பட்ட ஒன்றைக் குறித்து உளறுபவர்' என்று சிலர் எள்ளி நகையாடுகிறார். நம் பெரியோர் உலகை விடுத்து ஓடி அறத்தை வளர்க்குமாறு யாண்டுங் கூறினாரில்லை. வருணாச்சிரம தருமத்தின் உள்ளக்கிடக்கையை நன்கு ஆராய்ந்து தெளியின், நம் முன்னோர் உலகியல் முறையையும் அதையொட்டிய வைதிக முறையையும் அறிவுறுத்தியிருத்தலை உணரலாம். வருணம் ஆச்சிரமம் என்பன தற்போது விபரீதமாகக் கொள்ளப்பட்டுள்ளன. வருணத்தைப் பற்றியும், ஆச்சிரமத்தைப் பற்றியுஞ் சிலவுரை பகர விரும்புகிறேன்.

பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரும், பிரமசரியம் கிருஹஸ்தம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் நான்கு ஆச்சிரமத்தாரும் எந்நாட்டில் இல்லை? உழுதல் முதலிய தொழில் செய்வோரும், வாணிபம் செய்வோரும், போர்புரிவோரும், வேதம் ஓதுவோரும் எந்நாட்டிலும் இருக்கின்றனர். எந்நாட்டில் மாணுக்கரில்லை? எந்

நாட்டில் மனைவியோடு வாழ்வோரில்லை? எந்நாட்டில் அறவோரில்லை; துறவோரில்லை. பல இடங்களில் இந்நாளில் பின்னிரண்டு நெறியும் அருகிநிற்றலுண்மை. ஆத்திகவுணர்வுடையோரனைவரும் இவ்விரண்டையும் எதிர்க்க மாட்டார். சிலர், மனைவியோடு கூடி வாழ்வதே வாழ்வின் முடிந்தநோக்கம் என்றும், அது குறித்துப் பொருளீட்டல் முதலியன செய்யப்படல் வேண்டுமென்றும் கருதி வாழ்வு நடாத்துகிறுர். முன்னோர் கல்வி பயிறலையும், மனைவி மணத்தலையும் அஞ்ஞான நீக்கத்துக்குத் துணைக்கருவிகளாகக் கொண்டவர். கல்வி, ஆன்மஞானத்தை ஏட்டளவில் உணர்த்துவது. மனைவாழ்க்கை அவ்வேட்டு ஞானத்தைச் செயலால் அறிவுறுத்துவது. ஏட்டில் 'அன்பு, அன்பு' என்று படிப்பதை, மனைவியோடு வாழும்போது செயலிற் காணலாம். எங்கும் அன்பு வடிவாயுள்ள இறைவன் தோன்றுமிடம் இல்லறமென்று கூறுவது மிகையாகாது. இவ்வில்லற வழிநின்று ஒழுகின், எவ்வுயிரையும் தம்முயிர்போல் பாவிக்கும் முதல்நிலையை அது கூட்டும். வானப்பிரஸ்தமும், பெருநிலையாம் சந்நியாசமும் பின்னே தாமே இயல்பாகக் கூடும். 'சந்நியாசம்' என்னுஞ் சொல் தன் உண்மைப் பொருளை இந்நாளில் இழந்து கிடக்கிறது. சந்நியாசமென்பது, மொட்டைத்தலையன்று; காஷாயமன்று. எவ்வுயிரிடத்தும் ஆண்டவனைக் காண்பதும், அக்காட்சியான் எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாதிருப்பதும் சந்நியாசமாகும். இந்நிலை பெற்றவரே உண்மைச் சந்நியாசிகளாவர். இதுவே நம்மனோர் வாழ்வின் முடிவு; வேதாந்தநிலை; ஹிந்து மதம். இந்நிலை எய்திய பெரியோர் முனிவரெனப்படுவர். நமது நாடும் முனிவர் கூட்டத்துக்குப் பேர்பெற்றது.

பண்டைக்கால முனிவருக்கும் இக்கால அரசியல் தலைவருக்கும் பல வழியிலும் வேற்றுமையுண்டு. இக்கால அரசியல் தலைவருக்கு ஆன்மஞான விளக்கத்தால் பெருமை ஏற்படுவதில்லை. மக்களின் எண்ணிக்கைத் தொகையால் இவருக்குத் தலைமைப் பதவி கிடைக்கிறது. மக்கள் மனங்கொண்டால் இவரைத் தாழ்த்தலாம்; உயர்த்தலாம். அரசியல் உலகிலே முயன்று பெறுந் தலைமைப்பேறு இன்றிருந்து நாளை ஒழியி

னும் ஒழியும். பொய்யாலும், வஞ்சனையாலும், பத்திரிகை மோசங்களாலும், லஞ்சத்தாலும் தலைமைப்பதவி பெறுவது என்றும் ஆபத்தே. ஆன்ம ஞானத்தால் மெய்ஞ்ஞானம் பெற்று முனிவராதலே சிறப்பு. முனிவர் சொல்வழி உலகம் நடக்க ஒருப்படும். இதற்குக் காரணம் என்ன? அவர் சத்தியம், தர்மம் முதலியவற்றால்பெற்ற ஆன்மஞான விளக்கமே யாகும். அரசியல் தலைவரின் பேச்சுக்களும் எழுத்துக்களும் இன்று தோன்றி நாளை மறைவன. முனிவர் திருவாக்கோ என்றும் உயிருடன் உலவுவது. ஆதலால், மனிதரால் தலைவராகக் கொள்ளப்படுவதைப் பார்க்கிலும் ஆன்ம ஞானத்தால் அழியாப் பேறு பெறுவதே பெருமையுடைத்து. இது நிற்க.

எவ்வுயிரிலும் ஆண்டவனைக் காண்பதென்றால் ஆண்டவன் வடிவத்தைப்பற்றிப் பலதிற ஐயம் நிகழலாம். ஆண்டவன் வடிவத்தைப்பற்றி வேதாந்தம் என்ன சொல்கிறது? வேதாந்தம் ஆண்டவனுக்கு மூன்று வடிவம் சொல்கிறது. அவை உருவம், அருவம், அருவுருவம் என்பன. இம் மூன்றும் எட்டு மூர்த்தத்தில் அடங்கும். எட்டு மூர்த்தங்களாவன: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா என்பன. இவ்வெட்டிலும் அடங்காதன உண்டோ?

இறுதியாகச் சொல்லப்பட்ட ஆன்ம மூர்த்தத்தை வழிபடின், மற்ற மூர்த்தங்களில் செம்பொருளிருப்பதைக் காணலாகும். இக்காரணத்தால் உபநிடதங்களெல்லாம் ஆன்ம மூர்த்தத்தையே சிறப்பாக வழுத்துகின்றன. ஆன்ம மூர்த்தத்தை விடுத்து, ஏனைய பொருளில் ஆண்டவனை இருத்தி, வழுத்துவது அகண்ட ஞானத்தைப் புலப்படுத்துவதாகாது. ஆன்ம வழிபாடொன்றே பரிபூரண ஞானத்தை அளிப்பது. நம் முன்னோர் தம்முளிருக்கின்ற ஆன்ம மூர்த்தத்தையே வழிபடலாயினர். 'மாயனை நாடி மனநெடுந் தேரேறிப் - போயினம் நாடி யாதே புலம்புவம் - தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக் - காயமிந் நாட்டிடைக் கண்டுகொண்டேனே' என்றார் பெரியோர். ஆன்மாவில் ஆண்டவனைக்

கண்டவரே முனிவராவர். 'அவர் ஆண்டவனைக் கண்டாரா எனச் சிலர் கருதலாம். கண்டாரென்றே யான் சொல்வேன்.

இப்பொழுது மேல்நாட்டிலே பிறர் நினைப்பதைச் சொல்லல், கம்பியில்லாத் தந்திப் பேச்சு முதலியன நிகழ்ந்து வருதல் நமக்குத் தெரியும். சூரிய மண்டிலம் சந்திர மண்டிலம் முதலிய மண்டிலங்களின் இயல்களை அந்நாட்டார் கண்டு உணர்த்துவதையும் கேட்கிறோம். இன்னும் பல அருஞ் செயல்கள் அவர்களால் ஆற்றப்படுவதை அறிகிறோம். இவை யாவும் புறப்பொருள் கருவிகொண்டு அவர்களால் காணப் பட்டும் செய்யப்பட்டும் வருகின்றன. நம்முடைய உபநிடதங் களில் மானதக்காட்சி, மண்டிலங்களின் இயல்பு முதலியன சொல்லப்பட்டிருக்கின்றன. மேல்நாட்டுக் கணித சாத்திர உதவியின்றி நம்மவரால் பஞ்சாங்கங்கள் கணிக்கப்படுகின் றன. இவைகளைக் கண்ட நமது பண்டைக்கால மக்கட்குப் புறமுகப் பூதபௌதிக ஆராய்ச்சிக் கருவித்துணை இல்லை என் பது வெளிப்படை. பின்னை இவைகளை எவ்வாறு அவர் கண்டனர் ? சிறிது சிந்தித்தால் உண்மை புலனாகும். அகமுக ஆராய்ச்சியும் ஆன்ம விளக்கமுமே நம்மனோர்க்கு உறுகருவி யாகத் துணைசெய்தன. ஆன்ம சக்திக்குள்ள ஆற்றல் வேறு எதற்கு உண்டு ? அகமுக ஆராய்ச்சி குன்றியுள்ள இவ்வேளை யில் எல்லாம் பொய்யாகவும் தோன்றலாம்.

உலகில் மக்களின் அறிவு ஒரு பெற்றித்தா யிருக்கிறதா? இல்லையே ! பர்மாவில் ஒரு சிறு குழந்தை பௌத்த தர்ம சாஸ்திரங்க ளெல்லாவற்றையும் ஓதி யுணர்ந்து சொல்வது போல் கேட்போர் வியக்குமாறு சொல்வது ஆராயற்பாலது. அறிவு விளக்கம் உடல் நிலையைப் பொறுத்து நிற்கிறது. உடல், ஸ்தூலம் சூக்குமம் காரணம் என மூன்று நிலை உடை யது. ஸ்தூலதேக வுணர்வுடையவனுக்குக் கட்டுப்பட்ட அறிவே விளங்கும். அவனுக்கு அகமுக நோக்கு இராது.

இப்பொழுது நமது நாட்டில் சூக்கும காரண சரீர ஆராய்ச்சி கிடையாது. ஐந்து வயதில் பிராணயாமம் பயின்று, உற்ற வயதில் மானதக்காட்சி பெறுவது, இந் நாளில் மங்கிப் போயிற்று. இந்நாளில் அமெரிக்க தேசத்து

அறிஞர் சிலர், ஸ்தூல தேகத்தினின்றுஞ் சூக்கும தேகந் தாங்கி, வானிடை நிகழும் பல உண்மைகளைக் கண்டு, தம் அநுபவத்தை நூல் வழியாக உலகிற்கு அறிவுறுத்தி வருகிறார். இந்நூலாராய்ச்சி யுடையோர் முச்சரீர உண்மையை மறுக்க மாட்டார்.

நம் முன்னோர் உழைப்பெல்லாம் அகமுகத்தைப் பற்றி யனவே. அவ்வுழைப்பால் உயிர்களில் ஆண்டவன் உண்மை யைக் கண்டின்புறும் வாழ்வை நம்மனோர் நடாத்தலாயினர். அவ்வாழ்வு, ஒழுக்கத்தை ஓம்புதற்குத் துணைசெய்து நின்றது. அந்நாளில் நமது நாடுபோந்த ஒரு கிரேக்க சரித்திர ஆராய்ச்சிக்காரர், 'ஒரு ஹிந்து ஆண்மகனாவது பொய் சொல்லுதலில்லை' என்றும் - 'ஒரு ஹிந்து பெண்மகளாவது கற்பு இழந்து நிற்பதில்லை' என்றும் சொல்லியதைச் சுவாமி விவேகாநந்தர் எடுத்துக் காட்டியிருக்கிறார். மெய்ம் மையும் கற்பும் நாட்டுவாழ்வாக நிலவியதற்குக் காரணமாக நின்றமை, எல்லா உயிர்களிலும் ஆண்டவன் உண்மையைக் காணச்செய்த ஆன்மஞானமே யாகும்.

இந்நாளில் அந்த ஞானம் குன்றியிருத்தலால் பல தீய ஒழுக்கங்கள் உலகில் நிகழ்கின்றன. முன்னாளில் பத்திரப் பதிவுச்சாலையும் நீதிஸ்தலங்களும் தற்போதிருப்பதுபோல இல்லை என்றே சொல்லலாம். தற்கால நாத்திக ஞானம் நுழையாத நாட்டுப்புறங்களில் சத்தியநெறி குன்றாதிருப் பதை இன்றுங் காணலாம். தற்காலக் கல்வி - கொண்ட மனைவியை விடுத்தல், இரக்கமின்றிப் பிறர்மனை புகுதல், வரைவின்மகளிர் இன்பந் துய்த்தல் முதலிய தீய ஒழுக்கங் களில் மக்களை வீழ்த்திக் களியாடச் செய்வது கண்கூடு. பொன்னுக்கும் பொருளுக்கும் பெண்ணை விலைக்கு வாங்க லும் விற்றலும் எந்நெறி? அன்பு நெறியா? கிராமத்தான் மனைவாழ்க்கை மேற்கொண்டதும் மனைவிக்குச் செலுத்த வேண்டிய கடமைகளை உணர்ந்து நடக்கிறான். பட்டினத்தில் வாழும் பாவிகள் அக்கடமைகளை உணர்ந்து நடக்கிறார்க ளில்லை. தற்கால நாகரிகக் கல்வி யுடையார்க்குப் பெண்ணைக் கொடுக்கச் சிறிது யோசனை செய்தல்வேண்டும். எனக்குப்

பெண்ணில்லை. இருப்பின் ஏர் உழுகின்றவனுக்குப் பெண்ணைக் கொடுப்பேன். சென்னையில் மணஞ்செய்துகொண்ட சில இளம்பெண்கள் கண்ணீர் விடுவது எனக்குத் தெரியும். சுருங்கக் கூறின், ஆன்ம ஞான நெறியே நல்லொழுக்கத்துக்கு வித்தாகும். எந்நெறி நின்று, எத்துறை புகுந்து, எக்கட்டுற்றினும் அதை அதை நிஷ்காமியமாக ஆற்றுமாறு அறநூல்கள் அறிவுறுத்துவது கருதற்பாலது.

பண்டைக் காலத்தில் கொள்கை வேறாகவும் அநுஷ்டானம் வேறாகவும் இல்லை. அரிச்சந்திரன், தசரதன், ஸ்ரீராமன் முதலியோர் வரலாறுகளை நோக்குக. இரண்டும் ஒத்த வாழ்வில் தோய்ந்துகிடந்த நம்மவர் வழக்க ஒழுக்கங்கள் இடைக்காலத்தில் எவ்வாறு மாறின என்பதைப்பற்றிச் சிறிது பேச விரும்புகிறேன்.

இடைக்காலத் தொடக்கத்தில் ஹிந்துக்களிடையில் கொள்கைக்கும் அநுஷ்டானத்துக்கும் தொடர்பின்மை தலைகாட்டலாயிற்று. அதனால் தீயொழுக்கம் வாழ்வில் புக இடம் பெற்றது. அவ்வேளையில் வாழ்வைத் தூய்மை செய்யச் சமணமும் பௌத்தமும் தோன்றலாயின. ஹிந்து மதம், அவ்விரு மதங்களிலுள்ள சாரங்களை ஏற்றுப் பிறவற்றைத் தள்ளிற்று. தற்போதைய ஹிந்து மதத்தில் சமண பௌத்த மதக் கருத்துக்கள் பல உண்டு. ஹிந்துக்களின் உபநிடதங்களிலுள்ள பல பொருள்கள் சமண பௌத்த மதங்களில் காணப்படுவன. அவ்விரு மதமும் ஐந்தொழில் புரியும் ஆண்டவன் உண்மையை மறுத்தமையால், நாட்டில் வேத சம்பந்தமுடைய வைதிகர்கட்கும் சமண பௌத்தர்கட்கும் ஒன்றிய அன்பு நிகழாதொழிந்தது; பிணக்கு நேர்ந்தது. இப்பிணக்கும், நாட்டின் கேட்டுக்கும் வேதாந்த அநுஷ்டான வீழ்ச்சிக்கும் ஒரு காரணம் என்று சுவாமி விவேகானந்தர் கூறுமாறு யானுங் கூறுகிறேன். அந்நாளில் ஹிந்துக்கள் மனம், சமண பௌத்த மதங்களைத் தொலைப்பதிலேயே பெரிதுந் தோய்ந்து கிடந்தது. இதனாலும் ஹிந்துக்களின் கொள்கையும் அநுஷ்டானமும் பெற்றிருந்த ஒன்றிய நிலைக்கு ஊறு நேர்ந்ததென்னலாம்.

பின்னை ஹிந்துக்களுக்குள் பலதிறப் பிரிவுகள் தோன்ற லாயின. ஆகமங்களும் ஸ்மிருதிகளும் புராணங்களும் தோன்றித் தோன்றி மலியலாயின. வேதாந்த சூத்திரத் துக்கு நீலகண்டர் சங்கரர் இராமாநுஜர் மத்வர் முதலியோர் பேருரை கண்டனர். வேதாந்தத்திலுள்ள அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பலதிறப் பொருள்கள் கூறப்பட்டன. பொருள் ஒன்று வேறு வேறு என்ற ஆராய்ச்சி, பெரிய வாதப் போராக முடிந்தது. அத்துவித துவித வாதமும், ஆகம ஸ்மிருதிப் போராட்டமும், சைவ வைணவச் சண்டை யும் யாண்டும் மலியலாயின. அவரவர் சார்பாக மடங்கள் அமைக்கப்பட்டன. குல குருமாரும் பரம்பரை ஆச்சாரி யரும் ஏற்பட்டனர். அவரவர் அவ்வந் நூலில், அவ்வப் பாஷியத்தில், அவ்வம்மடத்தில், அவ்வக் குருமாரிடத்தில் அபிமானங் கொண்டனர்; கொண்ட அவ்வளவோடு நின்றிருந்தால் போதுமே. அபிமானங் காரணமாகப் பிறரைத் தூஷிப்பதையே மதாநுஷ்டானமாக நம்மவர் கொண்டனர். சைவ வைணவக் கண்டன நூல்களைக் கண்கொண்டும் பார்த்தல் முடியுமோ? இவ்வுட்பிரிவுகள் கட்டுப்பாட்டைச் சிதைத்துவிட்டன. வேதம் எல்லாரையும் ஒன்றுகப் பிணித் துள்ள உண்மையை நினைக்கவோ பிணக்கின்றி வாழவோ நம்மவர் மனங் கொண்டாரில்லை. பிரிவுகள் தோன்றினு லென்ன? பல பாஷ்யங்கள் தோன்றினுலென்ன? இவைகளை மதங்களாக்கிக்கொண்டு பொறாமையானும் துரபிமானத்தா னும் சண்டையிடுவானேன்?

பலபடப் பிரிந்த நூல்களையும் உரைகளையும் ஆராய்ந் தால், அவை யாவும் 'ஆண்டவனை யாண்டுங் காண்டல்' என்னும் வேதாந்த உண்மையையே பெரிதும் அறிவுறுத்து கின்றன. நூற் கொள்கையில் மாறுபாடு பெரிதும் ஏற்பட வில்லை. அவைகளை ஆண்ட மக்களிடையே வேற்றுமைக் குறிகள் நிலைத்துவிட்டன. மக்களறிவு, கொள்கையிலாதல் அநுஷ்டானத்திலாதல் பதியாது, வீண் வழக்க ஒழுக்கங் களிலும், போலி ஆசாரங்களிலும் பதியலாயிற்று. 'ஆண்ட வனை யாண்டுங் காண்டல்' என்னும் வேதாந்தக் கொள்கை,

வாசா ஞானமாய்ச் செயலற்றுச் சொல்லளவில் நிலவலாயிற்று. சுருங்கக் கூறின், ஹிந்துக்கள் குளித்தல் தோய்த்தல் சின்னமணிதல் முதலியவற்றைத் தங்களுக்குரிய மதமாகவும், கண்டனம் வாதம் புறக்கிரியைகள் முதலியவற்றை அநுஷ்டானமாகவுங் கொண்டார்கள் என்னலாம். ஆண்டவனை யாண்டுங் காண்டற்குப் படிகளாக ஏற்பட்ட இயம நியமாதிகளும், வருணச்சிரமங்களும் தத்தம் உயிரிழந்தன. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதப்பட்டன. பிறப்புப் பெருமை பாராட்டப்பட்டது. பலப்பல அநாசாரங்களும் பொய்ம்மைகளும் குடிபுகுந்தன. நித்திய லௌகிக வாழ்வை வேறாகவும், சமய ஞானத்தை வேறாகவும் பிரித்து வாழும் பொல்லாத வாழ்வு நடைபெறலாயிற்று. நூற் புராட்சிகளும் கண்மூடி வழக்க ஒழுக்கங்களும் நிரம்பி மலியலாயின. கொள்கை வேறாகவும் அநுஷ்டானம் வேறாகவும் பிரிந்தன. இன்னும் இடைக்கால நிலையை விரித்துக் கூறப் போதிய நேரம் இன்மையால், இவ்வளவோடு நிறுத்தித், தற்கால நிலையைப்பற்றிச் சில உரைகள் பகர்ந்து, எனது சொற்பொழிவை முடித்துக்கொள்கிறேன்.

தற்கால நிலையை நினைக்கும்போது வயிறெரிகிறது. இடைக்காலத்தில் நம்மிடை நுழைந்த கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் தற்காலச் சிறுமை நிலைக்குக் காரணம் என்று சொல்லலாம். தற்கால வேதாந்தம் ஏட்டு வேதாந்தம்; அநுஷ்டானம் உலகாயதம். வேதம் வயிற்றுக்கு - வேதாந்தம் வயிற்றுக்கு - கோயில்கள் வயிற்றுக்கு - மடங்கள் வயிற்றுக்கு - எல்லாம் வயிற்றுக்காயின. சொல் வேறு, செயல் வேறாயின. நாமம் விபூதி முதலிய வேடங்களையே மதமாகப் பலர் கருதுகிறார். அவைகளைப்பற்றிய சண்டைகளும் உண்டு. வடகலை தென்கலைச் சண்டையைப்பற்றி நான் ஒன்றுஞ் சொல்லவேண்டுவதில்லை. நம்மவர் மதச்சண்டை நீதிமன்றம் ஏறும் நிலையையும் அடைந்திருக்கிறது. இச்சண்டை ஆண்டவனை யாண்டுங் காட்டும் வேதாந்த உணர்வை நல்குமோ?

ஹிந்துமதம் எங்கே? மன ஒருமைப்பாட்டிற்கு ஏற்பட்ட கோயில்களின் நிலை என்ன? ஞான நூலாராய்ச்சிக்கு

ஏற்பட்ட மடங்களின் நிலை என்ன? கோயில்கள் கள்ளர் குகைகளாயின. மடங்கள் கொலைக்கும் தீயொழுக்கத்துக்கும் நிலைக்களன்களாயின. சொத்துக்கள் களவாடப்படுகின்றன. திருவாரூர்ப் பொன் ஸ்தூபி களவாடப்பட்டதாக இளமையிலேயே கேள்வியுற்றிருக்கிறேன். லார்ட் கோஷன் வெள்ளக் கஷ்டத்தைக் காணத் தென்னாடு போந்தபோது, திருப்பனந்தாள் மடத்தார், தாசிகளைக்கொண்டு நடனக் காட்சி வழங்கியதாகப் பத்திரிகைகளில் படித்தோம்.

மடங்களில் சமயக்கட்டுப்பாடுகளும் சாதிக்கட்டுப்பாடுகளும் ஏற்பட்டமை, ஞான உணர்வுக்குக் கேடு நிகழ்த்துவதாகும். ஹிந்து மடங்களெல்லாம் ஹிந்துக்களுக் குரியனவாயிருத்தல் வேண்டும். திருவாவடுதுறை முதலிய சைவ மடங்களுக்கு யான் போவதில்லை. ஏன்? ஞான தாகமுடைய எல்லா வகுப்பார்க்கும் மடம் இடமளித்தல் வேண்டும் என்பது எனது கருத்து. கோயில்களிலும் அப் பழக்கம் இருத்தல் வேண்டும். கோயில்களில் அதிகாரிகள் சென்றால் அவர்கள் கடவுளாகப் பாவிக்கப்படுகிறார்கள். இக் கோயில்களில் ஆண்டவனிருப்பனோ? ஏன் அங்கே மக்கள் போதல் வேண்டும்? அங்குச் செல்ல எனக்கு விருப்பம் எழுவதில்லை. தற்கால உற்சவங்கள் அன்புநெறியை வளர்ப்பனவல்ல. தேவடியாள் ஆடலும் பாண வேடிக்கைகளுமே தற்கால உற்சவங்கள். இவ் வாபாசங்களுக்குத் தத்துவார்த்தஞ் சொல்லப்படுகிறது! வெட்கம்! வெட்கம்!

இப்பொழுது ஒரு புதிய மதம் நம்மிடைப் பரவி வருகிறது. அதை 'மேல்நாட்டு அரசியல் மதம்' என்று சொல்வேன். அம் மதம் பிராமணர் பிராமணரல்லாதார் பிரிவை உண்டுபண்ணுவது; சகோதர நேயத்தைக் கெடுப்பது. மதமும் - வேதாந்தமும் - அநுஷ்டானமும் - எல்லாம் பிராமணர் பிராமணரல்லாதார் போராக முடிந்திருக்கின்றன. ஏமாற்றமும் மோசமும் சண்டதாண்டவம் புரிகின்றன. வக்கீல் கூட்டம் பெருகப் பெருக வேதாந்தமேது? ஆண்டவனை யாண்டுங் காண்டலேது? வக்கீல்கள் முனிவர்களாக இந்நாளில் போற்றப்படுகிறார்கள். இஃதொன்றே

தற்கால நிலையைக் காட்டும். வேதாந்தக் கல்வி - கடவுள் கல்வி - தலைகாட்டல் முடியுமோ? தற்போது வாயிலே ஹிந்து மதமும் செயலிலே உலகாயத மதமும் நிலவிவருகின்றன.

இந்நிலையில் நாம் என்ன செய்தல்வேண்டும்? நாம் அனைவரும் ஹிந்துக்கள் என்று எண்ணவும், கொள்கையையும் அநுஷ்டானத்தையும் ஒன்றுபடுத்தவும் முயலல் வேண்டும். நம்மை ஒன்றுபடுத்த வல்லது வேதம் ஒன்றே. ஹிந்துக்களில் எல்லாப் பிரிவினரும் வேதத்தை உடன்பாடாகக் கொள்கிறார். அப் பொதுநூலைப் பழையபடி கொண்டு வாழ முயலல்வேண்டும். இவ்வொரு நெறியை வளர்க்க வடக்கே ஆரிய சமாஜம் காணப்பட்டிருப்பது உங்கட்குத் தெரியும். பிரிவுகளை உண்டுபண்ணிய நூல்களை அச் சமாஜம் தள்ளியே விடுகிறது. தென்னிந்தியாவிலும் அச் சமாஜம் போன்றதொரு ஹிந்து சமாஜம் ஏற்படுத்தி நமது சமய வாழ்க்கையை நன்முறையில் உயிர்ப்பித்தல் வேண்டும்.

ஹிந்து சமாஜத்தின் கொள்கை எவ்வுயிரிலும் ஆண்டவன் இருத்தலை அறிவிப்பதா யிருத்தல் வேண்டும். லௌகிகம் வேறாகவும் வைதிகம் வேறாகவும் பிரிக்கப்படலாகாது. உடல்நலம் உயிர்நலம் ஆகிய இரண்டையும் பேணல் வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள உயிர்களெல்லாங் கடவுள் என்று அவைகளை வழிபட வேண்டுவது நமது கடமை. நம்மைச் சுற்றிலுமுள்ள தேசமக்களை முதலாவது வழிபடுவோம். 'ஒருவனுக்கு முதற் கடவுளா யிருப்பவர் அவனது தேசத்தாரே' என்று சுவாமி விவேகாநந்தர் சொல்லியிருப்பதை நோக்குங்கள். மனிதர்களைத் தெய்வமாக வழிபடுவது நமது ஹிந்து மதம். அதுவே வேதாந்தம். மனிதர்களைத் தெய்வமாகக் கொள்வது சிறந்த தேசபக்தி. அவ் வழிபாடு வளர்ந்துவரின் தீண்டாமை நிலவுமோ? சாதிச் சண்டை, சமயச் சண்டை சாத்திரச் சண்டை முதலிய சண்டைகள் வளருமோ? மக்களை வழிபடும் அன்பு மதம் நம்முடையது. அதன் பயனாகக் கிடைப்பது சுயராஜ்யம். அன்பு மத வழி நின்று, உயிர்கள் வழிபாட்டைச் செய்து, சுயராஜ்யப் பேறு பெற முயல்வோமாக. (20, 27-2-1925)

# ஹிந்துமத தர்ம ஸ்தாபனங்கள்

ஹிந்துமதம் எது ? ஹிந்து என்னும் பெயரைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். 'ஹிந்து' என்னும் பெயர் சரித்திர சம்பந்தமானது. இதைப் பற்றி விரித்துக் கூற வேண்டுவதில்லை. 'ஹிந்து என்னும் பெயர் சரித்திர சம்பந்தமானதன்று ; அது பழமையானது' என்று ஒரு சிறு கூட்டத்தார் கூறுவது பலர்க்குத் தெரியாது. பெயரைப் பற்றிய வாதத்தைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்க்கு விட்டு விடுவோம். 'ஹிந்து மதம் எது' என்பதைமட்டும் நாம் கவனிப்போம்.

ஹிந்து மதம் எது என்பதற்குப் பலர் பலவாறு கூறுவர். 'ஹிந்து மதம் ஒரு மதமன்று ; எல்லா மதங்களுஞ் சேர்ந்த ஒரு பெருஞ் சமரச சமயம்' என்று சிலர் கூறுவர். 'ஹிந்து மதம் எல்லா உயிர்களிடத்துஞ் சீவகாருண்யஞ் செலுத்தும் ஒரு கொள்கை யுடையது' என்று வேறு சிலர் கூறுவர். 'அறிவின் முடிவாயிருப்பது ஹிந்துமதம்' என்றும், 'அப்பொருள் தரும் வேதாந்த மென்னும் பெயரால் ஹிந்து மதம் அழைக்கப்பட்டு வருகிறது' என்றும் இன்னுஞ் சிலர் கூறுவர். 'ஹிந்து மதம் புண்ணிய பூமியாகிய பாதகண்ட வாசிகளால் அநுஷ்டிக்கப்படும் ஒரு தருமமதம்' என்று மற்றுஞ் சிலர் கூறுவர். 'ஹிந்து மதம் பிறப்பை யொட்டி யிருப்பது' என்று கூறுவோருமுளர். ஹிந்துமதம் 'பலியிடும் மதம்' 'யாகமதம்' 'கிரியாமதம்' என்று கூறுவோருமுளர். இன்னும் பல பொருள் கொண்டு ஹிந்து மத உண்மை கூறுவோருமுளர். ஹிந்துமதம் மக்கள் ஆராய்ச்சிக்கும் அறிவாற்றலுக்கும் அநுபவத்துக்கும் ஏற்றவாறு பொருளை விளங்க வைத்துக்கொண் டிருக்கிறது. 'ஹிந்து மதம் எது' என்பதற்கு என்ன உரைப்பது ?

ஹிந்துக்கள் என்று உலகத்தவரால் அழைக்கப்படுவோர் யார் ? 'ஹிந்து' என்னும்போது எவன் 'தான்' என்று

கருதுகிறான் என்பது கவனிக்கற்பாற்று. சிவபெருமானை வணங்குவோனுந் தன்னை ஹிந்துவென்றே கருதுகிறான். விஷ்ணு மூர்த்தியை வணங்குவோனுந் தன்னை ஹிந்துவென்றே நினைக்கிறான். இரு மூர்த்திகளையும் ஒன்றுபடத் தொழுவோனும் தன்னை ஹிந்துவென்றே எண்ணுகிறான். காட்டேறி முனியன் மதுரைவீரன் கறுப்பன் சங்கிலி முதலிய தேவதைகளைக் கும்பிடுவோருந் தம்மை ஹிந்துக்களென்றே சொல்லிக்கொள்கிறார். சைவ உணவு அருந்துவோரும் அசைவ உணவு அருந்துவோரும் தம்மை ஹிந்துக்களென்றே பேசிக்கொள்கிறார். இவரனைவருஞ் சேர்ந்ததே ஹிந்து சமூகம் என்று வழங்கப்பட்டு வருகிறது.

ஹிந்துக்கள் என்று சொல்லப்படுவோர், தெய்வ வழிபாடுகளில், அநுஷ்டான முறைகளில், சாதி பேதங்களில் வேற்றுமை யுடையவரா யிருந்தாலும், தம்மை ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்வதில் ஒற்றுமை யுடையவரா யிருக்கிறார். இவ்வொற்றுமையை உண்டுபண்ணும் ஒன்று எது என்பது ஆராயற்பாலது. ஹிந்துக்களென்போர் புராணங்களில் - ஆகமங்களில் - ஸ்மிருதிகளில் - வேறுபல நூல்களில் - அபிப்பிராயபேத முடையவரா யிருந்தாலும், வேதத்தைக் கொள்வதில் மாத்திரம் அபிப்பிராயபேதமின்றி வாழ்கிறார். எனவே ஹிந்துக்களை ஒன்றுபடுத்துவது வேதம் ஒன்றே யாகும். வேதத்தை உடன்பாடாகக் கொண்டது ஹிந்து மதம். ஹிந்து மதம் எது என்னும் வினாவிற்கு 'ஹிந்து மதம் வேதமதம்' என்ற விடையிறுக்கலாம். வேத உண்மைகளை ஆராயுங்காலத்து ஏற்படும் பல அபிப்பிராய பேதங்களே ஹிந்துமதக் கிளைகளாகப் பிரிந்து நிற்கின்றன.

வேதம் ஒரு கூட்டத்தார்க்கு உரியதோ அல்லது உலகிலுள்ள அனைவருக்கும் உரியதோ என்பதை ஆராயவேண்டுவது அநாவசியம். வேதம் நூலாயினுமாக; அறிவாயினுமாக; வேறு எதுவாயினுமாக. வேதம் ஹிந்துக்களென்னும் நெல்லிக் காய்களை ஒன்றுபடுத்திக் கட்டி வைக்கும் கோணி(சாக்கு) போன்றது. வேதத்தைக்கொள்ளாத ஹிந்து இரான். ஹிந்து மதத்தைச் சீர்திருத்த எழுந்த ஆரிய சமாஜம் முதலியனவும்

வேதத்தை அவமதிக்கவில்லை. அன்னார் வேதத்தையே வலி யுறுத்திப் பேசுகிறார்; வேத மதம் ஒன்றையே உறுதிப்படுத் தவும் புறப்பட்டிருக்கிறார். நாம் இங்கே கூறப்புகுந்தது ஹிந்துமதம், வேதமதம் என்பதே.

ஹிந்துமதத்தில் அறமும் ஞானமும் வாரிதிபோல் கிடக் கின்றன. ஹிந்துமதத்தில் எல்லாங் காணலாம். உலகத்தி லுள்ள எல்லா மதக் கொள்கைகளும் ஹிந்துமதத்தில் உண்டு. பண்டை ஹிந்துக்கள் தெய்வவழி நின்றொழுகித் தெய்வ மயமாகத் தெய்வ வாழ்வைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் தேகாத்ம வாழ்வை நடாத்தவில்லை. அவர்கள் வாழ்வு, தொழில், அரசு முதலிய யாவும் தெய்வத்தைப் பற் றியே நின்றன. தெய்வ நிலையைப் பெறுவதற்கு இளமையி லேயே ஒவ்வொருவரும் அறத்தை உணரக்கூடிய கல்வி பயின்று வந்தனர். அக்கல்வி தேகாத்ம புத்தியை அழிக்க லாயிற்று. தெய்விகக் கல்வி தேசத்தில் வளர்ந்து வந்தமை யால், முன்னோர் கிராமப் பஞ்சாயத்து ஆசிரம தருமம் முதலியவற்றை வகுத்துத் தேசத்தில் அமைதி நிலைபெறுத் தினர். ஹிந்துக்கள் பண்டைநாளில் பெற்றுவந்த கல்வி தெய்வத்தன்மை வாய்ந்ததாகலான், அக்கல்வி பல தேசங் களை ஹிம்சை முறையில் பற்ற அவர்களைத் தூண்டவில்லை. அக்கல்வி, ஆசையை அறுக்கத் துணைபுரிந்தது.

தெய்விகக் கல்வியை வளர்க்க மடங்களும் அக் கல்வியா லாய பயனைப்பெற ஆலயங்களும், பிற தருமசாலைகளும் மக ரிஷிகளாலும், ஆச்சாரியர்களாலும், மன்னர்களாலும், மற்ற வர்களாலும் ஏற்படுத்தப்பட்டன. அவைகளுக்கு நிலங்கள், கிராமங்கள், நிதிகள் முதலியன வைக்கப்பட்டன. அவை களைப் பரிபாலனஞ்செய்ய அதிபர்களும் நியமிக்கப்பட்டார் கள். இவ் வதிபர்கள் பண்டைக் காலத்தில் மிக உண்மை யாளர்களாக இருந்தார்கள்; பொய்க்கு அஞ்சினார்கள்; பாவ காரியங்களில் தலையிட மாட்டார்கள்; அதருமங்களையொழிக் கும் தரும மூர்த்திகளாக வாழ்ந்தார்கள். அவர்கள் உப தேசம், ஒழுக்கம், செயல், பரோபகார சிந்தை முதலியன தேசத்தைத் தரும வழியில் வளர்த்தன. அரசர்களும்

அவர்களை வணங்குவார்கள். அவர்கள்வழித் தேசமும் அரசும் நடந்தன என்னலாம். அறத் தலைவர்களின் உண்மை — தேசத்தையும் அரசையும், தேச அரசுகளின் உண்மை — அறத் தலைவர்களையும் தூய்மை செய்துவந்தன என்று சுருங்கக் கூறலாம். ஒருவர்நிலை மற்றவர் நிலையைப் பொறுத்திருப்பது கவனிக்கத்தக்கது.

நாளடைவில் நாட்டுக் கல்வியின் வளன், அரசாட்சி மாற்றத்தால் சுருங்கப்பெற்றது. நமது தெய்விகக் கல்வி வளஞ் சுருங்கவே, அதை வளர்க்க ஏற்பட்ட அறநிலையங்களின் நிலையுங் குலையத் தொடங்கிற்று. சோற்றுக் கல்வி தேசத்தில் தேகாத்ம புத்தியை வேரூன்றச் செய்தது. அதனால் தேசம் தர்ம ஸ்தாபனங்களைக் கவனியாது விடுத்தது. தேசத்தின் கவனக் குறைவு, தர்ம ஸ்தாபனத் தலைவர்களின் மனோநிலையைக் கெடுத்தது. தர்ம ஸ்தாபனங்கள் அதர்ம ஸ்தாபனங்களாக மாறிவிட்டன. நமது நாட்டுக்குரிய கல்வி ஒழுக்கம் செயல் முதலியன அருகின. தர்மத்துக்குக் கர்த்தர்களாக ஏற்பட்டவர்களும், மடங்களுக்கு அதிபர்களாகப் போந்தவர்களும், அதர்ம கர்த்தர்களாகவும், மடமைக்கு அதிகாரிகளாகவும் மாறிவிட்டார்கள். கோயில் ஊழியர்களும் மடத்துச் சீடர்களும் உண்மைநெறி விடுத்துப் பிறழத் தொடங்கினார்கள். அதிபர்கள் தங்கள் ஊழியர்களையும் சீடர்களையும் சந்தேகிக்கலானார்கள். இவர்கள் அவர்களைச் சந்தேகிக்கலானார்கள். சந்தேகத்தால் பல கேடுகளும் விளையலாயின. மடாதிபதிகள் கணக்குகளில் கருத்தைச் செலுத்தினார்கள்; அதற்குத் துணைசெய்ய ஆங்கிலங் கற்றவரை அடைந்தார்கள்; வக்கீலை நண்ணினார்கள்; அதிகாரிகள் நட்பை நாடினார்கள்; கோர்ட்டுகளைத் தேடினார்கள். அறமும் உண்மையும் நிலையங்களை விடுத்து ஆகாயத்தில் பறந்து மறைந்தன.

மேலும் மேலும் தர்ம ஸ்தாபனத் தலைவர்கள் பலப்பல பாவச் செயல்களுக்கு உடன்பட்டார்கள்; தீயொழுக்கங்களிலுந் தலைப்பட்டார்கள். மடாதிபதிகளைத் திருத்தப் பல நாவல்களும் எழுந்தன. அவர்களைக் கெடுக்கப் பல நாவலருங்

கிளம்பினர். மடங்களில் பஞ்சமா பாதகங்கள் நிரம்பின. மடங்கள் பாவத்துக்கு ஊற்றாகிவிட்டன. மடாதிபதிகள் தேவேந்திர போகிகளாகிவிட்டார்கள். அவர்களைப்பற்றி வெளியில் கிளம்புங் கதைகளை நினைக்கவும் மனம் நடுங்குகிறது. பொல்லாத பாவிகள் என்று மடாதிபதிகள் சொல்லப்பட்டார்கள். காஷாயந் தரித்த மடாதிபதிகள் காசிப் புடவைமேல் கருத்தைச் செலுத்துங் காலத்தைக் கண்டுவருகிறோம். ஞானவளர்ச்சிக்கும் தருமவளர்ச்சிக்கும் முன்னோர் சேமித்துவைத்த செம்பொருள் விலைமாதருக் கன்றோ பயன்படுகிறது! மடங்களில் விலைமாதருக்குள்ள சிறப்புத் தொண்டருக்குமில்லை. ஆண்டவன் திருவடியை வருடிய பரம்பரையில் தோன்றிய மடாதிபதிகள், விலைமாதர் பாத கமலங்களை வருடுகிறார்கள். விலைமாதருக்கு இஃதொரு காலம் போலும்! பணங்கருதிச் சில குலமாதரும் மடம் புகுகிறார் என்று கேள்வியுறுகிறோம். இன்னும் மடாதிபதிகளென்னும் பாதகர் செயலை எழுத மனமெழவில்லை.

இவர்கள் அடாத செயல்களை எத்துணைநாள் இறைவன் பார்த்திருப்பான்? இப்பொழுது இறைவன் திருவருள் பாலிக்கிறான். அறநிலையத் தலைவர்கள் அதிகாரத்தைப் பிடுங்க ஆண்டவன் திருவுளம்பற்றி யிருக்கிறான். ஆண்டவன் தேசத்தார் கண்ணைத் திறக்கிறான். தேசம் இன்னும் கண்ணைத் திறக்கவில்லை. இறைவன் காட்டுவான்; ஊட்டுவானோ? தேசத்தின் கண் என்று திறக்குமோ? தேசங் கண்ணைத் திறந்து, அற நிலையங்களை உற்று நோக்கி, வேண்டுவ செய்துகொள்ள இதுவே காலம்.

ஹிந்து தர்ம ஸ்தாபனங்களைச் சீர்திருத்த வேண்டுமென்று மந்திரி இராமராய நிங்கார் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். அம் மசோதாவைக் கண்டு நடுங்கிச் சில மடாதிபதிகள் சென்னை சேர்ந்து அங்குமிங்கும் ஓடுகிறார்கள். அவர்கள் ஓட்டத்தைக் கவனித்து வருகிறோம். அவர்கள் எக்கருத்துடன் ஓடித் திரிகிறார்கள்?

'மசோதாவை மந்திரி கொண்டு வருவது நியாயம் அன்று' என்றும், 'அரசாங்கத்தார் சமய உரிமைகளில்

தலையிடலாகாது' என்றும் சிலர் கூக்குரலிடுகிறார். 'அரசாங்கத்தார் மசோதாவை நிறைவேற்றா தொழியின், மடாதிபதிகளும் மற்றவர்களும் பழையபடி களியாட்டங்களில் பொருளைச் செலவழிப்பார்களே. அதற்கென் செய்வது?' என்று சிலர் கவலையுறுகிறார். இக் கூக்குரலும் கவலையும் மாகாணத்தையே கலக்குகின்றன.

அற நிலையங்களின் பொருட் குவியல்கள் மடாதிபதிகளுடையன வல்ல. அவைகள் பொதுமக்களுடையன. அவைகளில் தற்போதைய (இரட்டையாட்சி) அரசாங்கம் தலையிடலாகாது; சுத்த சுயராஜ்யக் காலத்தில் அரசாங்கம் தலையிடல் தகுதி. மடாதிபதிகளின் படிற்றொழுக்கம் பெருகி வரும் இவ்வேளையில் - மந்திரி மசோதா கொண்டுவந்துள்ள இந்நேரத்தில் - தேசத்தார் கண்விழித்துக் கடனாற்ற முன் வருதல்வேண்டும். இந்நிலையைத் தேசத்தார்க்கு ஆண்டவனே கூட்டிவைத்தான். தேசம் கடனாற்ற எழுவதாக.

ஹிந்து மதத்தார் நான்கு பகுதியினராகப் பிரிந்திருக்கிறார். அன்னார் சைவர், வைணவர், ஸ்மார்த்தர், மாத்துவர் எனப்படுவர். இவர் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமஹாநாடு கூடி ஒரு தலைமைக் கமிட்டி ஏற்படுத்தல் வேண்டும். அக் கமிட்டி, ஒவ்வொரு மதத்தார் சேர்ந்த ஒவ்வொரு கிளைக் கமிட்டியை ஏற்படுத்தி, அவ்வம்மத தரும ஸ்தாபனங்களைப் பரிபாலிக்க முயலல்வேண்டும். ஒவ்வொரு தரும ஸ்தாபனமும், அவ்வம் மதத்தவரால் தெரிந்தெடுக்கப்படும் கமிட்டிகளின் பார்வைக்கீழ் நடைபெறின், மடங்கள் பழைய நிலை அடையும்; நாட்டுக்குரிய கல்வி ஒழுக்கம் சமயம் முதலியன சீர்பெறும். மடாதிபதிகள் பெருமையுங் குன்றாது. அவர்களும் நல்லவர்களாவார்கள். பொருளுக்கும் பழுதுநேராது. முன்னோர் விருப்பமும் நிறைவேறும். கமிட்டிகளின் அமைப்பு முறைகளை ஏற்றபடி ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். அதைப்பற்றி இங்கே இன்று விரித்துரைக்க வேண்டுவதில்லை.

இப்பொழுது சைவர் வைணவர் ஸ்மார்த்தர் மாத்துவர் ஆகிய நால்வரும் செய்யவேண்டுவ தென்ன? அனைவருஞ் சேர்ந்து முதலாவது 'மசோதா நிறைவேறாதவாறு முயற்சி செய்தல்வேண்டும்; அதே சமயத்தில் அறநிலையங்களைத் தம் வழிப்படுத்தவும் முயலல் வேண்டும். 'இதற்கு மடாதிபதிகள் இணங்குவார்களோ?' என்று சிலர் வினவலாம். மடாதிபதிகள் யார்? சமய பரிபாலனஞ் செய்ய நம்மால் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதிகளே யாவர். அவரை நமது விருப்பப்படி மாற்றலாம். அவர் நமது விருப்பத்துக்கு இணங்கியே தீரல்வேண்டும். பொதுமக்கள் கண்திறந்து தங்கள் உரிமை உணர்ந்து தங்கள் விருப்பத்தை மடாதிபதிகளுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்தால், அவ்விருப்பத்துக்கு அவர்கள் இணங்குவார்கள். மக்களும் மடாதிபதிகளும் ஒன்றுபட்டால், மந்திரி மசோதா நிறைவேறாது. மசோதா நிறைவேறினால் அது ஹிந்துமக்களின் அறியாமையையும், மடாதிபதிகளின் கவலையீனத்தையுமே குறிப்பதாகும். இம்மசோதா நிறைவேறினால் ஹிந்து மதத்தின் உயிர்போய்விடும் என்பதில் சந்தேகமில்லை. ஹிந்துக்களே! 'எச்சரிக்கை.' சமயத்துக்காகவாவது ஒன்றி உழைக்கமாட்டீர்களா? (12–1–1923)

# மாற்றம்

ஒரு சமயம் விடுத்து இன்னொரு சமயம் புகும்வழக்கம் நீண்டகாலமாக உலகிடை நிலவிவருகிறது. மக்கள் பற்பல ஆராய்ச்சியில் தலைப்பட்டுப் பலதிறப் புதுமைகளைக் காணும் இந்நாளினும் அது நிகழாமலில்லை. பத்திரிகைகளில் - அடிக்கடி - ஏறக்குறைய நாடோறும் - 'சமய மாற்றம்' என்னுந் தலைப்பின்கீழ்ச் செய்திகள் காட்சியளித்துக்கொண்டே யிருக்கின்றன. இம்மாற்றங் காரணமாகச் சில இடங்களில் போர் கொலை முதலியன நிகழ்கின்றன. ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் சார்தல் அவசியமா அநாவசியமா என்பதைக் கூர்த்தமதியினர் ஆய்வாராக.

சமயம் என்பது என்ன ? இதற்குப் பலவாறு பொருள் கூறுப. கடவுள் நெறியே சமயம் என்று சுருங்கச் சொல்லலாம். மனிதன் கடவுளை உணர்ந்து இன்புறுதற்குக் கொண்ட செந்நெறியே சமயம் என்பது. அச்சமயம் ஒன்றாயிருத்தல் வேண்டுமா அல்லது பலவாயிருத்தல் வேண்டுமா ?

கடவுளை உணர்ந்து இன்புறுதற்கு நாடுகளின் இயல்புக் கேற்றவண்ணம் மக்கள் கொள்ளும் முறைகள் பலவாயிருக்கலாம். ஆனால் அம்முறைகளின் முடிந்தநிலை பலவாயிருத்தல் கூடாது. என்னை ? கடவுள் ஒன்றாயிருத்தலான் என்க. கடவுள் ஒன்றாயிராது பலவாயிருப்பின் பல நிலைகள் வேண்டற்பாலன. கடவுள் ஒன்றேயன்றிப் பல அல்ல.

உலகிடை வாழும் மக்கள் தங்கள் தங்கள் ஆராய்ச்சியாற் பெறும் உணர்வுகொண்டு கடவுள் இயல்களைப் பலவாறு கூறி வருகிறார்கள். ஆண்டவன் இயல்களை அளந்து கூறல் எவரால் இயலும் ? பல அறிஞர் கூறிய இயல்களைக்கொண்டு கடவுளர் பலர் என்று போரிடுவது அறியாமை. கடவுள் ஒன்றே.

இந்நாளில் கடவுள் ஒன்றே என்று வலியுறுத்த வேண்டுவதில்லை. அவ்வுணர்வு பல இடங்களில் ஒருவாறு படர்ந்து வருகிறது. அவ்வுணர்வு பாரிடைப் பரவிப் பரவிப் படியப் படிய அமைதி நிலவும் என்பதில் ஐயமில்லை.

கடவுள் ஒன்றே என்னும் உணர்வு பரவி வரும் இந்நாளில் சமய மாற்றம் நிகழ்வது எற்றுக்கு? அவரவர் விரும்புமாறு செயல் நிகழ்த்த அவரவர்க்கு உரிமை உண்டு. இதை மறுக்கின்றோமில்லை. ஆனால் செயலால் விளையும் பயன் என்னை என்பதையும் அளந்து ஆராய்தல் வேண்டுமன்றோ?

மனிதன் நிலையை இருகூறாகப் பிரிக்கலாம். ஒன்று விலங்கெனத் திரிந்து பொருந்தாச் செயலாற்றித் திரிவது; மற்றொன்று விலங்குணர்வினின்றும் வேறுபட்டுப் பொருந்துஞ் செயல் புரிந்து வாழ்வு நடாத்துவது. தன்னலங் காரணமாக மறவினை நிகழ்த்துவது பொருந்தாச் செயலின்பாற் படும்; தன்னலங் கருதாது அறவினை நிகழ்த்துவது பொருந்துஞ் செயலின் பாற்படும்.

மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அவன் அவ்வறிவுவழி நின்று நேரிய முறையில் கடனாற்றல் வேண்டும். அவ்வறிவுவழி நில்லாதவன், மனிதவுடல் தாங்கியும், விலங்குணர்வுடைய மாக்களினத்திற் சேர்ந்தவனாகிறான்.

விலங்குணர்வினின்றும் விடுதலையடைய மகன் முயன்றே தீரல்வேண்டும். விலங்குணர்வு ஒவ்வொருவர்பால் ஒவ்வொரு விதமாக நிகழும். அவ்வுணர்வைப் படிப்படியாகச் செகுக்கவேண்டுவது மக்கள் கடமை. அக் கடனுக்கென ஏற்பட்டதே கடவுள்நெறி யெனுஞ் சமயம். சமயமாவது மனிதனை விலங்கினின்றும் பிரிப்பது. தன்னை விலங்குணர்வினின்றும் பிரித்து ஆட்கொள்ள ஏற்பட்டது சமயம் என்பதை மனிதன் நன்கு உணர்வானாக.

சமயவழி நிற்கும் ஒருவன், நாடோறும்-இரவும் பகலும்-எப்போதும்-ஆண்டவன் நினைவுடையவனாக வாழ்வு நடாத்தல் வேண்டும். இனைப்பொழுதுகூட ஆண்டவனை மனிதன் மறத்த

லாகாது. 'தினைத்தனைப்பொழு தும்மறந் துய்வனே' என்றார் அப்பரும். ஆண்டவன்மாட்டு இடையறாது அன்பு செலுத்தச் செலுத்த, மகன்பாலுள்ள விலங்கியல்புகளெல்லாம் முறை முறையே நீறுபட் டொழியும். இக் கடனாற்றவே மனிதன் படைக்கப்பட்டான். மனிதனது மற்றைய வாழ்வுத் துறைகள் யாவும் இச்செந்நெறியையே குறிக்கொண்டு நிற்றல் வேண்டும்.

மனிதன்பாலுள்ள குறைபாடுகளைக் களைய ஏற்பட்ட சமயம், இப்பொழுது எப்பொருளில் பெரிதுங் கொள்ளப்படுகிறது? விரிக்கவும் மனமெழவில்லை. தன்பாலுள்ள குறைபாடுகளைக் காத்தற்கும் ஓம்புதற்குஞ் சமயத்தையும் ஒரு கருவியாகப் பாவிமனிதன் கொள்ளலானான். காமத்துக்கும் பொருளுக்கும் கொலைக்கும் சமயமென்னுஞ் சொல் இரையாகிறது! விலங்குணர்வின் கேட்டுக்கெனத் தோன்றியது சமயம். அந்தோ! அதன் பெயரால் அவ்வுணர்வின் ஆக்கத்துக்குரிய வினைகள் நிகழ்த்தப்படுகின்றன! கொடுமை! கொடுமை!

இந்நிகழ்ச்சிக்குக் காரணமென்னை? பலகடவுளர் உணர்வும் பலசமய உணர்வுமாகும். இவ்வுணர்வு வளர வளரச் சமயமென்னும் பெயரால் போருங் கொலையும் நிகழ்ந்த வண்ணமா யிருக்கும். ஆகவே, ஒருகடவுள் உணர்வும் ஒரு சமய உணர்வும் யாண்டும் பரவுமாறு ஆங்காங்குள்ள அன்பர்கள் உழைப்பார்களாக.

உலகுய்ய ஆங்காங்கே தோன்றிய பெரியோர் அறிவுறுத்திய தென்னை? சமயப் பெயரால் போரிட்டுக் கொலை செய்வதையா அவர் அறிவுறுத்தினார்? இல்லை! இல்லை! மனிதன், அஞ்ஞானத்தினின்றும் - விலங்குணர்வினின்றும் - பேய்ச் சோதனையினின்றும் - விழித்தெழுந்து, அன்புணர்வு பெற் றுய்தல்வேண்டும் என்னும் இரக்கத்தால் பெரியோர் செம்மை மொழிகளை அறிவுறுத்திப் போந்தார். அம்மொழிகளை அறிஞர் மன்பதைக்குப் போதிக்கலாம். அப்போதனை கேட்கும் மனிதன் மனந்திரும்பி, அன்பு நெறி அல்லது கடவுள்நெறி யெனும் சமயவழி நிற்க முயல்வன்.

விலங்குணர்வினின்றும் நீங்கிக் கடவுள்நெறி நிற்றல் வேண்டும் என்னும் உணர்வு, கேட்போன் உள்ளத்தில் பதியும் முறையில் அறிஞர் செந்நெறியை அறிவுறுத்தல் நலம்.

ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகல் என்பதன் பொருள் விளங்கவில்லை. மனிதன் பாவத்தினின்றும் மனந் திரும்ப வேண்டுமே யன்றிப் புறக்கோலத்தாலும் புறவினையாலும் மாறுதலடைவதுமட்டும் கடவுள்நெறி நிற்பதாகாது.

மத மாற்றத்துக்கெனச் சில சடங்குகளுஞ் செய்யப்படுகின்றன. இவைகள் பிழைப்பின்பொருட்டுச் சிலரால் கோலப்பட்டன. சமயத்துக்கும் சடங்குகட்கும் தொடர்பில்லை. மனிதனைப் பாவத்தினின்றுந் தடுத்தாட்கொள்ள ஏற்பட்ட சமயத்தைச் சடங்குகளின் பெயரால் சிலர் கெடுத்தே வருகிறார். இச் சடங்குகளால் ஒருவன் மனம் பாவத்தினின்றும் மாறுதல் அடையுமா என்பது உன்னத்தக்கது. பாவத்தினின்றும் மனம் மாறுபடுவதே கடவுள் நெறியெனுஞ் சமயவழி நிற்பதாகும். இதற்கு ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகுதல் என்னும் நிகழ்ச்சி எற்றுக்கோ தெரியவில்லை? கடவுளும் ஒன்றே - சமயமும் ஒன்றே. மாற்றத்துக்கு இடம் எங்கே? ஆதலால் 'மாற்றம்' என்பது அநாவசியம்.

வேண்டற்பாலது ஒன்று. அது மனமாற்றம். அம் மாற்றமாவது பாவத்தினின்றும் விலகுதல்; விலகி நிற்கும் நெறி சமயம் என்பது. இச் சமயநெறியில் மக்களை நிறுத்த அறிஞர் முயல்வாராக. சடங்குகளால் சமயமாற்றம் என்று சொல்லப்படுவது பொருளற்ற தொன்றாகும்.

ஒருவனது புறக்கோலமும் பிறவும் அவனைக் கடவுள் நெறியில் கூட்டுவனவல்ல. கடவுள்நெறிக்கு வேண்டற்பாலது உண்மை அல்லது சத்தியமொன்றே. எந்நாட்டிலாதல் வதிந்து, எம்மொழியையாதல் பேசி, எந்நிலையிலாதல் நின்று, எக்கோலமாதல் தாங்கி, எத்தொழிலையாதல் செய்து உண்மை

வழியில் ஒழுகுவதே அறிவுடைமை. 'இச் சமயம்' 'அச் சமயம்', 'போதல்' 'வருதல்' என்னும் வழக்கங்கள் தொலைந்தே தீரல்வேண்டும். இது குறித்து இத் தலையங்கத்தில் விரித்துக் கூறவேண்டுவதில்லை. சமயம் நேர்ந்துழி இன்னும் விரித்துக் கூறுவோம். (28–3–1928)

## சமரச சன்மார்க்கம்

சத் + மார்க்கம் = சன்மார்க்கம் — வடமொழிச் சந்தி. சத் = உண்மை. அஃது என்றும் அழியாமலும், மாறாமலும் இருப்பது. மார்க்கம் = நெறி ; வழி. உண்மை வழியே சன்மார்க்கம் என்பது. எவ்வித அழிவும் மாறுதலும் இல்லாத பொருள் எது? கடவுள் ஒன்றே. எனவே, கடவுள்வழியே சன்மார்க்கம் என்றுணர்க.

கடவுளை அடைதற்குரிய வழிகள் யாவும் சன்மார்க்கத்தைப்பற்றி நிற்பனவேயாம். கடவுளை அடைதற்குரிய வழிகள் எவை? உலகத்திலுள்ள சமயங்கள். ஆகவே, சமய நெறிகள் யாவும் சன்மார்க்கமே என்க. கடவுளை அடைதற்குரிய சமயநெறிகள் உள்ளத்தில் புலனாகுங் காலத்துப் பன்மைத் தோற்றமும், சன்மார்க்கம் புலனாகுங் காலத்து ஒருமைத் தோற்றமும் மருவுதல் கவனிக்கத்தக்கது. சமயங்கள் யாவும் முடிவில் ஒரு கருத்தையே வெளியிடுகின்றன. பெயர் வேற்றுமையால் மயக்கம் உண்டாகிறது. சன்மார்க்கம் அம்மயக்க உணர்ச்சியையுந் தோற்றுவியாது.

சன்மார்க்கம் என்பது உலகத்தில் சாதாரண வழக்கிலிருப்பது. சாதாரண வழக்கிலுள்ள அதைப் பெரும்பான்மையோர் கடைப்பிடித்தொழுகுகிறார்? இல்லை. ஏன்? உலகம் ஐயம் திரிபு மயக்கம் என்னும் மூன்றால் பிணிக்கப்பட்டிருத்தலால் என்க.

கடவுள் படைப்புக்கு உட்பட்ட மக்கள் அனைவரும் சகோதரரே யாவர். 'நாம் அனைவரும் சகோதரர்' என்ற

உணர்ச்சியை மனிதர் பெற்று, அதை வாழ்வில் கொண்டு வருவாராயின், உலகத்தில் நீதிமன்றங்களும், அரசாட்சிகளும் ஒழிந்துபடும். அச் சகோதர நேயம் எழாமலிருப்பதற்குக் காரணம் என்னை ? மன்பதையை ஐயமும் திரிபும் மயக்கமும் தம்வயப்படுத்தி அலைத்தலைச் சிறந்த காரணமாகக் குறிக்கலாம். இம் மூன்று குற்றமுடைய மனிதர் அனுஷ்டிக்கும் மார்க்கம் எங்ஙனம் சன்மார்க்கமாகும் ? சன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்போர் ஐயந் திரிபு மயக்கமென்னும் மூன்று குற்றமுமில்லாத சமரச ஞானமுடையவரா யிருத்தல்வேண்டும்.

சமரச நோக்கு இல்லாதார்க்குச் சன்மார்க்கம் புலனாதல் அருமை. சாதி மதம் மொழி நாடு முதலியவற்றைப்பற்றி எழும் வேற்றுமைஉணர்வு சமரச நோக்குக்கு இடர் செய்கிறது. அதனால் சன்மார்க்கம் புலனாவதில்லை. கடவுள் பிள்ளைகளாகிய மனிதர், உலகத்திலே தோன்றிய பின்னர்ச் சாதி பேதத்தாலும், சமய வித்தியாசத்தாலும், மொழி மாறுபாட்டாலும், நாட்டு வேற்றுமையாலும், பிற கட்டுப்பாடுகளாலும் தம்முடன் பிறந்தவரை மறந்து, ஒருவர்மீது ஒருவர் பகைமைகொண்டு, கலாம் விளைத்து, இடர்ப்படுமாறு செய்விப்பது அஞ்ஞானம். அப் பாழும் அஞ்ஞானம் எங்கிருந்து முளைத்ததோ தெரியவில்லை. அவ்வஞ்ஞான இருளில் உலகம் விழுந்து தலைதடுமாறி உழலுவதை என்னென்று கூறுவது ? சாதிச்சண்டை புரிவோர் யாவர் ? அவருங் கடவுள் பிள்ளைகளே. சமய வாது செய்வோர் யாவர் ? அவரும் ஆண்டவன் குழந்தைகளே. மொழிப் பூசல் விளைப்போர் எவர் ? அவரும் இறைவன் சேய்களே. தேசப்பகைமை புரிவோர் எவர் ? அவரும் ஈசன் புதல்வரே. வேறு காரியங்களில் போர் நிகழ்த்துவோரும் தெய்வத்தினிடந் தோன்றியவரே யாவர். இவர் அனைவருஞ் சமரச ஞானத்தால் தம்மை ஆராய்வாராயின், அவருக்குச் சன்மார்க்கம் புலனாகிச் சகோதரநேயம் உண்டாகும். ஆதலால், மக்கள் அனைவரும் சமரச ஞானத்தால் சன்மார்க்கத்தை அடைய முயல்வதே அவரது தலையாய கடமை.

சமரச சன்மார்க்கம் உலகத்தில் பரவுமாயின், உலகத்தில் யாண்டும் எவ்விதப் பகைமையும் விளையாது; சகோதரநேயம் வளரும்;ஜீவகாருண்யம் பெருகும்; சமயப்பகைகள் ஒழியும்; பேராசை என்னும் பேய் இறந்துபடும் ; ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தைத் துன்புறுத்தமாட்டார் ; மனிதரை மனிதர் கொலைசெய்யக் கருவிகளைப் புதிது புதிதாகக் காணும் முயற்சி அற்றுப்போய்விடும் ; கொலை களவு முதலிய பாவங்கள் தலைகாட்டா ; உலகம் அன்பு மயமா யொளிரும் ; எங்கணும் புத்தர், கிறிஸ்து, மகம்மது, திருவள்ளுவர் உலவுவர்; எல்லாஞ் சாந்தமயமாய்ப் பொலியும்; ஆத்மஞானம் வளரும் ; இன்னோன்ன பயன்கள் பல விளையும்.

இத்துணை நலங்களை நல்கவல்ல சமரச சன்மார்க்கத்தை வளர்க்கவேண்டுவது அறிஞர் கடமை. இப்பொழுது உலகத்தில் பலவகை முயற்சிகள் நிகழ்கின்றன. அம் முயற்சிகளில் பலவழியாக அறிவைச் செலவழிப்பதைப் பார்க்கிலும், சமரச சன்மார்க்க வளர்ச்சி யொன்றுக்கு அவ்வறிவைச் செலவிடுவது நலம். இவ்வொன்றால் எல்லா நலனும் விளையும். சகோதரநேயத்துக்கு உயிராயுள்ள இவ்வொரு நெறியை வளர்ப்பதினுஞ் சிறந்த புண்ணியம் வேறொன்றில்லை.

சமரச சன்மார்க்கத்துக்கு அடிப்படையா யிருப்பது அருள் ஒன்றே. அருள், தயை, இரக்கம், கருணை, கிருபை முதலியன ஒருபொருட் சொற்கள். அருள் விளங்கும் உள்ளத்தில் கொலைகளவு முதலிய பாவ நினைவே தோன்றாது. ஒவ்வொருவரும் அருளாளராய்விடின், உலகமும் அருள் மயமாகிவிடும். அவ் வருள்நிலையை - அவ்வின்ப வூற்றை - அக் கடவுள் வடிவை - நினைக்கும்போதும், எழுதும்போதும், பேசும்போதும் உள்ளத்தில் ஒருவித ஆனந்தம் பொங்குகிறது. எல்லா உயிர்களிடத்தும் தயை செலுத்துவோர் சமரச சன்மார்க்கத்தில் தலைப்பட்டவரே யாவர். தமக்கு வேண்டிய சில உயிர்களிடத்துக் கருணைபாலித்து, மற்ற உயிர்களிடத்து அதைப் பாலியாதிருப்போர்க்குச் சமரச சன்மார்க்கம் அணித்தாகத் தோன்றாது.

'தயையுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே இங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருணெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகஎன் றெனக்கிசைத்த நண்புறுசற் குருவே
உயலுறுமென் உயிர்க்கினிய உறவேயென் அறிவில்
ஓங்கியபே ரன்பேஎன் அன்பிலுறும் ஒளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தென் அரசேஎன் மாலையணிந் தருளே'

'அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே ஆதலினால் அவருடனே கூடித்
தெருளுடைய அருணெறியிற் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கஎனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தொளிரும் ஒளியே
மருளுடையார் தமக்குமருள் நீக்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேஎன் மாலையுமேற் றருளே'

—இராமலிங்க சுவாமிகள்

சமரச சன்மார்க்கம் தயையுடைய எல்லாரிடத்திலும் பரவியிருக்கிறது. சமரச சன்மார்க்கம் உலகுக்கு உரியது. மனிதர்க்கு இயல்பாக அருட்குணம் உண்டு. சிற்சில செயற்கைகளால் அவ்வருட்குணம் மாய்ந்துவிடுகிறது. இரக்கமிலாத மனிதர் எல்லாப் பாவங்களையுஞ் செய்ய ஒருப்படுவர். பாவங்களெல்லாவற்றையும் அரிக்கும் ஆற்றல் கருணை ஒன்றனுக்கே உண்டு. மனிதன் பெருமுயற்சிசெய்து ஈட்டவேண்டிய செல்வம் இரக்கமே யாகும். பொருட் செல்வத்தைச் சேர்த்தல் எளிது. அருட் செல்வத்தைச் சேர்த்தல் அரிது. பொருட்செல்வம் மனிதனுக்குப் புறமாயிருப்பது. அருட் செல்வம் அவனிடத்தினின்றும் பிரியாத ஒன்று. இயல்பாகத் தன்பால் அமைந்துள்ள அருளை ஓம்பாது, தனக்குப் புறமாய் அழிவதாயுள்ள பொருளை நாடி உழைப்பதில் மனிதன் கண்ணுங் கருத்துமா யிருப்பது அறிவுடைமையாகாது.

தன்பால் இயல்பாக அமைந்துள்ள அருளை ஓம்பாத மாக்க ளுக்குச் சமரச சன்மார்க்கம் புலனாகாது. அருட் குணமின் றிச் சமயச் சின்னங்கள் பூண்பதும், சமய வேடந் தாங்கு வதும், மந்திரங்கள் செபிப்பதும், பூசை புரிவதும் வெறும் பாழையாகும். சமயச் சின்னங்களும், பிறவும் அருளை வளர்க்க ஏற்படுத்தப்பட்டனவாம். இப்பொழுது எத் துணையோ கொலைஞர்கள் சமயச் சின்னங்கள் தாங்குகிறார் கள்; சமய மந்திரங்கள் செபிக்கிறார்கள். இவர்கள் அருளா ளர்களாகி விடுவார்களோ? அருட்செல்வம் ஒரு சாதியார்க் காதல், ஒரு சமயத்தார்க்காதல், ஒரு தேசத்தார்க்காதல், ஒரு நிறத்தார்க்காதல் சொந்தமானதன்று. அஃது எல்லாச் சாதி யார்க்கும் சமயத்தார்க்கும் தேசத்தார்க்கும் நிறத்தார்க்கும் பொதுவாகப் பொலிவது.

சமரச சன்மார்க்கத்தில் காதலுடையோர் அருளை வளர்க்க முயலுதல்வேண்டும். அதை வளர்க்க இல்லற ஒழுக்கமும், அறிவு நூலாராய்ச்சியும், நல்லோர் கூட்டுறவும், அருள் வடிவினனான ஆண்டவன் நினைவும் வேண்டற்பாலன. இவைகளை வலியுறுத்தாத பெரியோரில்லை. பெரியோர் உப தேசவழி நடவாது அவருக்கு உற்சவஞ் செய்வதனால் என்ன பயன் விளையும்? வெளிவேடத்தால் என்ன விளையும்? ஆண்டவன் அருள்பெற்ற பெரியோர் அனைவரும் அருள் நெறியாகிய சமரச சன்மார்க்கத்தையே அறிவுறுத்தி யிருக் கின்றனர்.

இப்பொழுது உலகத்தில் சமரச சன்மார்க்கம் குன்றி யிருப்பதற்குக் காரணம் யாது? அருட்கல்விப் போதனை குன் றியதே யாகும். 'பண்டைக் காலத்தைப் பார்க்கினும் இப் பொழுது மேல்நாடுகளிலும் கீழ்நாடுகளிலும் எண்ணிறந்த சர்வகலாசாலைகள் தோன்றியிருக்கின்றன. இக்காலத்தில் கல்வி செவ்வனே வளர்ந்துவருகிறது' என்று சிலர் கருதல் கூடும். இப்பொழுதுள்ள சர்வகலாசாலைகளின் போதனை அருட்குணத்தை வளரவொட்டாமல் தடுத்து வருகிறது. இங்கிலாந்து, ஜெர்மெனி, அமெரிக்கா முதலிய தேசங்களில் சர்வகலாசாலைக் கட்டடங்கள் கண்ணைக் கவர்வனவா

யிருக்கின்றன. அவைகளில் போதிக்கப்படும் பூதபௌதிக சாஸ்திரங்களோ அருள்நெறியை அழித்து வருகின்றன. இச் சர்வகலாசாலைகளின் கல்வி – தங்கள் தேசத்தை நேசிக்கவும், அதன் வளர்ச்சிக்காக மற்றத் தேசங்களைப் பிடிக்கவும், அதன்பொருட்டு ஆயுதங்கள் கப்பல்கள் ஆகாய விமானங்கள் செய்யவும் பயன்படுகிறது. மற்ற நாட்டாரைப் பகைவர் என்று கருதி, அவர் நலனைத் தாம் நுகரவேண்டுமென்று நினைக்கும் உள்ளத்தில் கருணை உதயமாகுமோ ?

சமரச சன்மார்க்கத்துக்கு இடையூறாக நிற்பது தற்காலக் கல்விமுறை. இக் கல்விமுறை இனி மனிதரைப் புலி கரடி சிங்கங்களாக்குமோ என்னவோ தெரியவில்லை. இக் கல்வி முறையை மாற்றுதற்குரிய முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அதற்குச் சமரச சன்மார்க்க போதனை, பத்திரிகை, பாடசாலை, சங்கம் முதலியன வேண்டற்பாலன.

முதலாவது வேண்டற்பாலது சங்கமேயாகும். இப் பெயரால் சில சங்கங்கள் இருப்பதை நாம் அறிவோம். அவைகளை ஒன்றுபடுத்தி ஒரு தலைமை அமைப்புக்குக் கொண்டுவர முயலல்வேண்டும். அதன் வாயிலாகச் சமரச சன்மார்க்கத்தை வளர்க்கலாம். (6–5–1921)

## சமரசம்

சகோதரிகளே ! சகோதரர்களே !

திருவாரூர் – விஜயபுரம் என்னும் இத் திருப்பதியில் நற்றொண்டாற்றி வரும் சமரச சமாஜத்தின் ஒன்பதாம் ஆண்டு விழாவிற்குத் தலைமை வகிக்கும் பேற்றை அடியேனுக்கு வழங்கிய சமாஜத்தாருக்கு எனது நன்றியறிதலான வணக்கம். இவ்வேளையில் வரவேற்பு அறிக்கைகள் வாசித்துக் கொடுத்த வேறு மூன்று சங்கத்தார்க்கும் ஓர் அன்பர்க்கும் எனது நன்றியறிதல் உரியதாக.

நிகழ்ச்சி முறையில் ' தலைவர் முன்னுரை ' என்றொரு குறிப்பு மிளிர்கிறது. எப்பொருள்பற்றி அம் முன்னுரை நிகழ்த்தலாம் என்று உன்னிப் பார்த்தேன். சமாஜத்தின் பெயருக்குரித்தாய ' சமரசம் ' என்னும் பொருள்பற்றிப் பேசுவதே நலம் என்னும் முடிவிற்கு வந்தேன். சமரசம் என்பதற்குச் சொற்பொருள் விளக்கமாதல் வேறு ஆராய்ச்சியாதல் உங்கள் முன்னிலையில் கிளத்திப் பேசப்போகிறேனில்லை. ' சமரசம் ' என்பதுபற்றிப் பொதுவாகச் சில உரை பகர விழைகிறேன்.

இப்பொழுது உலகம் சமரசத்தைக் குறிக்கொண்டு நிற்றல் வெள்ளிடைமலை. சமரசம் மூலைமுடுக்குகளிலும் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது. இப்பேச்சானும் எழுத்தானும் சமரச வேட்கை ஒருவாறு உலகிடை அரும்பியிருக்கிறதென்பது புலனாகிறது. அவ்வேட்கை செயலிலும் முகிழ்க்கும் காலம் விரைவில் நண்ணுதல் வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவனை வழுத்துகிறேன்.

சமரசம் செயலில் முகிழாதிருப்பதற்குக் காரணங்கள் பல கூறலாம். அப் பலபட்ட காரணங்களை விரித்துக்கூறி உங்கள் அரிய காலத்தைக் கொள்ளைகொள்ள எனது மனம் ஒருப்படவில்லை. ஆகவே, இரண்டொன்றை மட்டும் ஈண்டுக் குறித்துச் செல்கிறேன். பல்வேறு நாடுகளும், பல்வேறு மொழிகளும், பல்வேறு வகுப்புக்களும், இன்னோரன்ன பிறவும் சமரச உணர்வுக்கு இடையூறு விளைவிப்பதாகச் சில அறிஞர் கூறுகிறார். இக்கூற்றில் உண்மையில்லை என்று சொல்லல் முடியாது. ஒரு நாட்டார் இன்னொரு நாட்டைப் பற்றித் தம் நாட்டிற்கு நலஞ்செய்ய விரும்புகிறார். ஒரு நாட்டில் ஒருவன் பிறந்தமையால் மற்றொரு நாட்டினிடத்து அவன் ஏன் பகைமை கொள்ளல் வேண்டும் ? நாடுகள் என்பன ஆறுகளாலும் மலைகளாலும் கடல்களாலும் பிறவற்றாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரிவால் மக்களுக்குள் பகைமையும், பிணக்கும் நிகழும் காரணம் என்னோ தெரியவில்லை. இந்நாட்டார் ஆன்மாவிற்கும் அந்நாட்டார் ஆன்மாவிற்கும் ஏதாவது

னும் வேற்றுமை யுண்டோ? இயற்கை சில காரணம்பற்றி உலகை நானுவித நாடுகளாகக் கூறிட்டிருக்கிறது. இக்கூறு பாடு, 'பன்மைவழி மக்கட்கு ஒருமைவழி கூட்டல்வேண்டும்' என்னும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்நுட்பந் தேருது வேறுபாடு கருதிப் பிணக்குறுவது அறியாமை. பன்மையில் ஒருமை காண்டலே அறிவுடைமை. பன்மைப்பட்ட மொழி, வகுப்பு முதலியவற்றையுங் காரணமாகக் கொண்டு பிணக்குறுதல் தவறு.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று முதலியன வேண்டா மென்று நான் சொல்கிறேனில்லை. நாட்டுப்பற்றும், மொழிப் பற்றும், பிறபற்றும் வேண்டற்பாலனவே. அப்பற்றைப் பகைமைக்குப் பயன்படுத்தலாகா தென்பது எனது உள்ளக் கிடக்கை.

நாடு, மொழி, வகுப்பு முதலியவற்றில்மட்டும் கருத்துச் செலுத்தாது, அவைகளை அடிப்படையாகத் தாங்கியுள்ள ஒன்றன்மீது கருத்துச் செலுத்தினல், 'சமரசம்' இனிது புலனுகும். அவ்வொன்று எது? அதைக் கடவுள் என்று கொள்க. கடவுள் என்பதைப்பற்றிப் பலர் பலவாறு கூறுப. கடவுள் என்பது அவரவர் அறிவாற்றலுக்குத் தக்கவாறு விளங்கும் ஒன்று.

கடவுள் உண்டா, இல்லையா என்னும் ஆராய்ச்சி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிகழ்ந்து வந்தது. இஃது அவ்வப்போது தோன்றிய நூல்களால் விளங்குகிறது. கடவுள் உண்டு என்னும் கொள்கை நீண்ட காலத்துக்கு முன்னரே நிறுவப்பெற்றது. இந்நாளில் அது குறித்துப் போராராய்ச்சி நிகழ்த்தவேண்டுவதில்லை. சிற்சில இடங்களில் கடவுளைப் பற்றிய ஐயப்பாடு எழுப்பப்படுகிறது. கடவுள் உண்மையில் உறுதிகொண்டுள்ள நமது நாட்டிலும், சில பாகங்களில் அவ்வுண்மை மறுக்கப்பட்டு வருதல் உங்களில் பெரும்பான்மையோர்க்குத் தெரிந்திருக்கலாம்.

'கடவுள் எப்படி யிருக்கிருர்? அவர் எந்நிறமுடையார்? அவருக்கு உருவமுண்டோ?' என்று சிலர் ஐயுறுகிருர்; சிலர்

வினவுகிறார். கடவுள் உண்மையை நிறுவிக் காட்டுதற்குப் பல ஏதுக்கள் உண்டு. அவை சிலர் அறிவுக்கு விளங்கும்; சிலர் அறிவுக்கு விளங்கா. கல்வி கேள்வி ஆராய்ச்சியில் வல்லவருக்குப் புதிதாக நான் ஒன்றும் சொல்லவேண்டுவ தில்லை. நாத்திகப் பிரசாரத்தால் சிலர் 'கடவுளிருந்தால் கண் ணுக்கு விளங்கவேண்டுமன்றோ' என்று கலக்குற்று மயக் குறுகிறார். அவ்வாது ஆராய்ச்சிக்குச் சிற்சில பொருள்களை ஈண்டுக் கிளத்துகிறேன்.

மயக்குறுஞ் சகோதரர்கள் தாங்கள் காண்டல், கேட்டல் முதலியன யாண்டுச் சென்று நிலைக்கின்றன என்று சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாக. காண்டல் கேட்டல் முதலியன தங்கள் மனத்தில் சென்று படிகின்றன என்பது அவர்களுக்கு விளங்காமற் போகாது. அம்மனம், 'எப்படி யிருக்கும்? எங்கிற முடைத்தா யிருக்கும்? அதன் உருவம் என்னை?' என்று கேட்கிறேன். இவ்வாறு சிலரை நேரிற் கண்டு கேட்டு மிருக்கிறேன். அவர்கள் விழிக்கக் கண்டுமிருக்கிறேன். 'மனம்' கண்ணுக்குப் புல னாகாத ஒன்று யிருத்தலான், அதனை இல்லை யென்று கூறுவது அறிவுடைமையாகுமா? சிந்தித்துப் பாருங்கள். கண்ணுக்குப் புலனாகாத ஒன்றை இல்லை என்று அறிவிற் சிறந்த ஆராய்ச்சியாளர் கூறார். நம்மிடத்துள்ள மனத்தை விளக்கி எடுத்துக்காட்டுதற்கு அருகரல்லாத நாம், மனத்தைக் கடந்து விளங்கும் கடவுளுண்மைக்கு மறுப்புக் கூற முந்துவது என்ன அறியாமை!

இப்பந்தரை எடுத்துக்கொள்வோம். இப்பந்தர் என்பது எது? இக்கம்பமா? இவ்வோலையா? இத்துணியா? என்னை? உன்னுங்கள். இக்கம்பமும் ஓலையும் துணியும் பிறவும் பிரிக் கப் பெற்ற பின்னர்ப் பந்தர் யாண்டுச் செல்கிறது? எங்கே ஒடுங்குகிறது? பந்தர் என்னும் பெயர் எதைப்பற்றி எழுந்தது? பந்தர் என்பது பேய்த்தேரா? கூர்ந்து ஓர்ந்து பாருங்கள். பந்தர் என்பது கம்பமன்று; ஓலையன்று; பிற வன்று. பந்தர் என்பது ஓர் அருவம். அஃது ஒருவனது

எண்ணத்தினின்றும் பிறப்பது. எண்ணம் நமது கண்ணுக்குப் பருமையாகத் தோன்றாதொழியினும், அஃது உருவமுடையதேயாகும். கண்ணுக்குப் புலனாகாத உருவங்கள் உண்டு. அவை அருவங்கள் என்று சொல்லப்படுகின்றன. அருவமென்பது இன்மையன்று; உள்ளதே.

உருவம் இரண்டு விதம். ஒன்று கண்ணுக்குப் புலனாவது; மற்றொன்று புலனாகாதது. புலனாகும் ஒன்று உருவம் என்பது. புலனாகாதது அருவம் என்பது. கண்ணுக்குப் புலனாகும் உருவத்தை நோக்க அருவம் நுண்மையேயன்றி, அஃது ஒன்றுமில்லாத பாழைக் குறிக்கும் இன்மையன்று.

(பந்தர் என்னும்) எண்ணத்தின் பரிணாமமாய்க் - கம்பம், ஓலை, தாணி முதலியவற்றின் கூட்டுறவு பெற்று, அவைகளுடன் இரண்டற விரவிக் காட்சியளிப்பது இப் பந்தராகும். இப் பந்தருக்கு இன்மை கூறுவது அறியாமை அன்றோ? ஆகவே, கண்ணுக்குப் புலனாகாத ஒரு காரணம்பற்றி ஒன்றற்கு இன்மை கூறுதல் தவறென்க.

இவ்வுலகமும் ஏனைய கோள்களும் ஞாயிற்றைச் சுற்றி வருகின்றன. ஞாயிற்றின் சக்தி இக்கோள்களை ஈர்த்து ஏந்தி இயக்குகிறது. ஞாயிற்றையும், அதன் சக்தியினால் ஈர்க்கப்பெற்றுள்ள கோள்களையும் கொண்ட ஒரு பெரும் வட்டம், எத்தனை நிலைக்களனைக் கொண்டு நிற்கிறது என்பது உன்னற்பாலது. அந்நுட்பத்தை உன்ன உன்ன உண்மை புலனாகும். அவ்வொன்றே அகண்டாகார ஒரு பெரும் சிச்சக்தி யென்று கூறுப. அச்சக்தியை உலகோர் பற்பல பெயரால் அழைக்கிறார். அச்சக்தி இல்லாத இடமில்லை. அஃது எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

உலகிடைத் தோன்றிய சமயாச்சாரியர் பலரும் அகண்டாகார அருட்பெருங் கடவுளைப் போற்றி, அதன் உண்மையை உலகோர்க்கு அறிவுறுத்தினார். ஈண்டுச் சிலர்க்கு ஒருவித ஐய்ப்பாடு தோன்றலாம். ஒவ்வொரு சமயத் தலைவரும், ஒவ்வொரு கடவுளைச் சொல்லிச் சென்றிருப்ப,

எல்லாச் சமயத்தலைவரும் ஒரே கடவுளைச் சொல்லிச் சென்றார் என்று கூறுவது என்னை என்பது அவ்வையம். அவ்வையம் பன்மை உணர்வு உடையோர்க்குத் தோன்றுதல் இயல்பு. அவ்வந்நாட்டில் தோன்றிய சமயத் தலைவர், அவ்வந்நாட்டிற்குரிய மொழியால் கடவுளைப் போற்றிப் போந்தார். மொழி வேற்றுமை பின்னை நாளில் கடவுள் வேற்றுமையாகக் கொள்ளப்பட்டது. இஃது எவர் குற்றம்? சமயத்தலைவர் குற்றமா அல்லது அவருரையைப் பிறழக் கொண்ட உலகோர் குற்றமா? மொழி வேற்றுமையை நீக்கிப் பொருளை நோக்கினால், பொருள் ஒன்றா யிருத்தல் செவ்விதிற் புலனாகும்.

'தமிழ் நாட்டில் தோன்றிய சமயத் தலைவர் பல கடவுளரைக் குறிப்பிட்டு நாட்டைக் கெடுத்தனர்' என்று சிலர் கூறித் திரிகின்றார். அச் சகோதரர், தமிழ் நாட்டுப் பெரியோர் அருளிய மறைமொழிகளைக் காய்தல் உவத்த லின்றி ஆராய்ச்சி செய்வாராக. உள்ளத்தில் எரி மூட்டி ஒன்றை ஆராய்ந்தால் உண்மை காண்டல் அரிதாகும். ஆராய்ச்சித் துறையில் நண்ணுதற்கு முன்னர், நடுநிலைமை என்னும் பேரறத்துக்கு உள்ளத்தை இருக்கையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

தமிழ் நாட்டுப் பெரியோர் ஒருமைக் கடவுள் உண் மையை மக்களுக்கு அறிவுறுத்திய செம்மொழிகள் எண் ணிறந்தன. அவைகளுள் சில வருமாறு :—

'தேவராயும் அசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி கால்நீரு
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசனென்னும்
மூவராய முதலொருவன் மேய்து முதுகுன்றே'

'வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வனலால் தேவர்மற் றில்லையே'

'விரிவிலா அறிவி ஞர்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்'

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'

'ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே'

'வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை'

'பெருகியபே ரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்த ராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தப் பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவ மென்பன் இவை சித்துவிளை யாட்டே.'

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பொருள் ஒன்றாக இருத்தல் வேண்டும். இதைப்பற்றி விரிந்த ஆராய்ச்சி வேண்டுவதில்லை. அகண்டம் ஒன்றாய் இருக்குமேயன்றிப் பலவாயிருத்தற்கு நியாயமில்லை.

'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றோ பராபரமே'

எனவரூஉம் தாயுமானார் திருவாக்கை உற்றுநோக்குக.

எங்குமுள்ள ஒரு கடவுளை அடைதற்கு நாடுகளின் இயல்புக் கேற்றவாறு நெறிகள் கோலப்பட்டன. நெறிகள் பலவாயினும் அவைகளின் உள்ளுறை ஒன்றே. உலகில் சமயங்கள் பலப்பல என்று சொல்லப்படினும், அச் சமயங்கள்

யாவும் ஒன்றையே குறிக்கொண்டு நிற்கின்றன. சில முறைகளின் வேற்றுமைகளைக் கொண்டு, பன்மை உணர்வால் மருண்டு போரிடுதல் அறியாமை. எல்லாச் சமயங்களிலும் கூறப்படும் உண்மை ஒன்றே. இந்நுட்பந் தேறுது போரிடுவோர் சமய ஞானிகளல்லர். அன்னார் சமய வெறியராவர். சமயவெறி கடவுளை மறப்பிக்கும் அஞ்ஞானமென்க. சமய வெறியர் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் கொண்டு, கடவுள் நெறி என்னும் சமயத்தையே குறைகூறுவது மதியீனம்.

'ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல்யா திங்கென்னில்
இதுவாகும் அதுவல்ல எனும்பிணக்க தின்றி
நீதியினல் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நிற்பதுயா தொருசமயம் அதுசமயம் பொருணூல்'

என்று தமிழ்நாட்டுப் பெரியார் ஒருவர் அருளியிருத்தல் காண்க. தமிழ் நாட்டுப் பெரியோர்களின் சமரச நோக்கை விளக்குதற்கு இன்னும் பன்மொழி வேண்டுங்கொல்?

கருநிறப் பசு ஒன்று; செந்நிறப் பசு ஒன்று; வெண்ணிறப் பசு ஒன்று. இம்மூன்று பசுக்களும் அளிக்கும் பாலில் நிறவேற்றுமை உண்டோ? புறநிற வேற்றுமைகொண்டு போரிடுவது அறியாமையா அறிவுடைமையா? சமயச் சார்பாக ஏற்பட்டுள்ள சில முறைகளின் வேறுபாடுகளைக் கருதி, 'உன் சமயம், என் சமயம்' என்று வாதிடுவது கடவுள் நெறியாகாது. ஒரே கடவுள் - ஒரே சமயம். இச் சமரச ஞானம் யாண்டும் ஓங்குக.

'கடவுள் யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள பொருளாயின், அஃது ஏன் புலனாகவில்லை?' என்று சிலர் வினவுகிறார். புலனாகாத பொருள் கடவுள் என்று எவரும் கருதவேண்டுவதில்லை; அது புலனாகக் கூடியதே. ஆனால் மனிதனிடத்துள்ள சில குறைபாடுகள் அவனது அகக்கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றன. தன்நாடு, தன்மொழி, தன்வகுப்பு என்று, மற்ற நாடுகளையும், மொழிகளையும், வகுப்புக்களையும் பழிப்ப

தும், உறுப்பதும் மனிதனிடத்தில் இருத்தல் கூடாது. தன் நாட்டையும் பிறவற்றையும் நேசித்தற்கு அறிகுறி, பிறநாடு முதலியவற்றுடன் பிணங்குவதன்று. இயற்கையில் ஏற்பட்டுள்ள பன்மையில் ஒருமை காண்டலே அறிவிற்கு அழகு. இப் புறக்குற்றங்கள் போக, வேறு பல அகக்குற்றங்களும் இருக்கின்றன. அவைகளையும் களைதல் வேண்டும். அக் குற்றங்களுள் கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐந்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவ்வைந்து பாவங்களையும் அகத்தேகொண்டு 'கடவுள் கண்ணுக்குப் புலனாகவில்லை. ஆதலால் அது பொய்' என்று சொல்வது அறமாகாது.

'சீர்திருத்தம்' 'சீர்திருத்தம்' என்று, இந்நாளில் சிலர் கடவுள் உண்மைக்கே மறுப்புக் கூறுகிறார். அஃது உண்மைச் சீர்திருத்த மாகாது. உண்மைச் சீர்திருத்தம் என்பது மனிதனைச் செம்மைப் படுத்துவதாகும். மனிதன் உள்ளம் ஐம்பெரும் பாவங்கட்கு இடந்தரும்வரை அவன் சீர்திருத்தம் பெறல் அரிது. உலகியல்வழி நின்று செய்யப்பெறும் புறச் சீர்திருத்தங்களால் மனிதன் ஓரோவழிச் செம்மைப்படுதலுங் கூடும். மனிதன் முற்றும் செம்மையுறுதற்கு அகச்சீர்திருத்தமே வேண்டற்பாலது. அகச் சீர்திருத்தமாவது பாவங்களினின்றும் விடுதலையடைய முயல்வது. பாவங்களினின்றும் விடுதலையடையும் ஒருவன் கடவுள் காட்சி பெறுவது உறுதி.

ஐம்பெரும் பாவங்களுள் பொய் என்னும் ஒன்றை ஒழித்தால் பிற தாமே அகன்றுவிடும்.

> 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று'

என்றார் திருவள்ளுவனாரும்.

> 'பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே'

என்பது தாயுமானார் திருவாக்கு.

இம் மெய்யுரைகளை நோக்குவோம். கடவுள் காட்சிப் பொருள் என்பதில் ஐயமில்லை. அது சிலர்க்குக் காணும்

காட்சியாகவும், சிலர்க்குக் காணக் காட்சியாகவும் இருக்கிறது. எவர் காணும் காட்சி? எவர் காணுத காட்சி? பொய்வளரா நெஞ்சினர் காணும் காட்சி. 'பொய்வளரு நெஞ்சினர் காணுத காட்சி.'

'பொய் வளரும் நெஞ்சினர்கள் காணுத காட்சியே' என்று எதிர்மறை முகத்தான் கூறிய தாயுமானுர், மீண்டும் பொய்யாமையின் பெற்றியை வலியுறுத்த,

'பொய்யிலா மெய்யர் அறிவில் போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப் போக்குவா வற்ற பொருளே'

என்று உடன்பாட்டு முகத்தானும் அறிவுறுத்தி இருத்தலை நோக்குக.

இப்பொழுது நமது நெஞ்சை நாம் தொட்டுப்பார்த்தல் வேண்டும். 'பொய்யினின்றும் நாம் எவ்வளவு தூரம் விடுதலை அடைந்திருக்கிறோம்' என்பதைச் சிந்தித்தல்வேண்டும். தற்கால நிலையை உங்களுக்கு விளங்க உரைக்கவும் வேண்டுமோ? சகோதரர்களே! தேர்தலை நினையுங்கள்; பாழான தேர்தலை நினையுங்கள். பொய்புகாத தேர்தல்விழா உண்டோ? பொய்யில் புகுந்து விளையாடிப் பொய்வடிவாய் இலங்கும் மனிதன், பொய்க்குப் புலனுகாத கடவுள் ஆராய்ச்சியில் தலைப்பட்டுக் 'கடவுள் எங்கே? என் கண்ணுக்குப் புலனுகவில்லை. அது பொய்; ஏமாற்றம்' என்று புகல்கிறுன்! இப் பொய்யுலகில் வாழும் மனிதன் சீர்திருத்தம் பேசுகிறுன்! இவன் சீர்திருத்தம் என்னே! என்னே!! சீர்திருத்தமாவது அகக் குற்றங்களைக் களைந்து மெய்யறிவில் நிற்பதென்க.

மெய்யறிவு விளங்கப்பெற்ற ஒருவனுக்குக் கடவுள் புலனுதல் ஒருதலை. அவன் கடவுளுக்கு அங்கு இங்கு என்று இருக்கை கூறுன். பொய்களுக்கெல்லாம் அடிப்படையான பொய் ஒன்று இருக்கிறது. அப் பொய் எது? எங்குமுள்ள கடவுளை அங்கு இங்கு என்றுசுட்டிக்குறிப்பது. அங்குஇங்கு என்று கடவுளைக் கூறுபடுத்தும் பொய்மை விடுத்து, எங்கும் கடவுள் என்னும் மெய்ம்மையில் நிற்க முயல்வது மனிதனது

சமய ஒழுக்கமாகும். இச்சமய ஒழுக்கத்தைப் புரட்டு என்று கூறும் காலத்தையும் காண்கிறோம்.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுள் உண்மைக்கு மறுப்புக் கூறும் மனமுடையாரும் உளர். அம் மனமுடையாரை நோக்கி இரங்குதல் வேண்டுமே யன்றி அவரை ஏசுதல் கூடாது. பலர்க்குப் பலதிற மன இயல்புகள் உள. விலங்கு மனம், குழந்தை மனம், மனித மனம், தெய்வ மனம் என்று மனக்கூறுகள் பலவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் விலங்கு மனமுடையார் 'கண்டதே காட்சி' என்னும் கொள்கையில் திளைத்து நிற்பர். அன்னார்க்கு நுண்ணிய ஆராய்ச்சியில் வெறுப்புத் தோன்றும். அவர் மனம் இயற்கை அழகில் படியாது. அவருள்ளத்தில் பன்மை, பிரிவு, பகைமை, வஞ்சனை முதலிய பேய்கள் குடிகொண்டு நிற்கும். அவர்கட்குச் சமரச உணர்வு தோன்றுதல் அரிது. சமரசம் என்பது கொலை, களவு முதலிய பாவங்களைக் கடந்து நிற்பது. அச்சமரச ஞானம் கொண்டே கடவுளை உணர்தல் வேண்டும். சமரசத்திற்கு ஊறு செய்யும் வஞ்சனை, பொய், பொறாமை முதலியவற்றால் கடவுளைக் காணல் இயலாது.

'வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா றாய்உளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பராபரமே'

'கொலைகளவு கள்காமம் கோபம்விட் டாலன்றோ
மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே'

என வரூஉம் தாயுமானார் அருள் உரைகளை ஓர்க.

அன்பர்களே! அகத்தைச் சீர்திருத்திச் சமரச உணர்வு பெற்று, எங்குமுள்ள கடவுளைக் காணவே நாம் மனிதப் பிறவி தாங்கியுள்ளோம். மனிதப் பிறவியின் நோக்கமும் அதுவே. அந்நோக்கத்தை நிறைவேற்ற நாம் என் செய்கிறோம்? உன்னிப் பார்ப்போமாக! வாழ்நாள் வீணே போகிறது. போராட்டத்தில் காலம் கழிகிறது. என்றோ நாம் சமரச ஞானத்தைப் பெறுவது?

சமரச ஞானமெனும் சமய வாழ்வு எற்றுக்கு என்று நீங்கள் கருதல் வேண்டாம். நமது வாழ்வு, இவ்வுடலள வில் - இவ்வுலக அளவில் - முடிவதில்லை. நம் வாழ்வு மேலும் மேலும் தொடர்ந்து செல்வது. இவ்வுடல் மறைந்ததும் நமது வாழ்வு போய்விடும் என்று கருதற்க. பின்னைப் பெரு வாழ்விற்கென்றே இவ்வுடல் நமக்கு நல்கப்பட்டிருக்கிறது; இவ்வுலகமும் நமக்கு நல்கப்பட்டிருக்கிறது. இவ்வுடல் கொண்டு, இவ்வுலகில் வாழ்ந்து, மேலைவாழ்வுக்கு வேண்டப் படும் சமரசஞானம் பெற முயல்வோமாக.

மேலைவாழ்வு உண்டு என்று நமது நாட்டுப் பெரியோர் முன்னர்க் கூறிச் சென்றனர். அக் கூற்றுக்களில் சிலர் நம்பிக்கை கொள்வதில்லை. மேல்நாட்டு அறிஞர் சிலர், நுண் ணுடலைப் படம் பிடித்திருக்கிறார்; பருவுடல் நீத்த நுண் ணுடல் ஆவியுடன் உரை ஆடுகிறார். இன்னுமா பின்னை வாழ்வில் ஐயம்? ஐயம் வேண்டாம்; வேண்டாம். இவ்வுல கில் அன்பைக் கூறுபடுத்தி, ஆன்மநேயத்தைக் கெடுக்கும் அகக் குற்றங்களைக் களைந்து, எவ்வுயிரினும் ஈசனிருப்பைக் கண்டு, சமரச ஞானம் பெற்றுப், பின்னைப் பெருவாழ்வைப் பெற ஊக்கமும் உறுதியும் கொள்வோமாக. (9-1-1929)

## சன்மார்க்கம்

சத் + மார்க்கம் = சன்மார்க்கம். சத்-உண்மை. என்றும் இருக்கும் ஒன்றே சத் அல்லது உண்மை என்பது. சத் தெனுஞ் செம்பொருட்குத் தோற்றமில்லை; ஒடுக்கமில்லை; மாறுதலில்லை. அதற்குப் போக்குவரவில்லை. அஃது எங்க ணும் நீக்கமற நிறைந்திருப்பது. அஃது அறிவாய் அன்பா யிருப்பது.

சத்தெனுஞ் செம்பொருட்கு உடலாயிருப்பதுஇயற்கை. இயற்கையைக்கொண்டே சத்தின் உண்மையை உணர்தல்

வேண்டும். இயற்கையை விடுத்துச் சத்தெனுஞ் செம் பொருளை உணர்தல் அரிது. இயற்கைவாயிலாகவே சத்தினை உணர்தல்வேண்டும். இயற்கை, சத்தெனுஞ் செம் பொருளை உணர்த்தற்குரிய மார்க்கம் அல்லது நெறியாதல் காண்க. ஆகவே, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒன்று 'சத்' என்பதையும், அதற்குரிய 'மார்க்கம்' இயற்கை என்பதையும் தெளிக.

உலகில் சத்தெனுஞ் செம்பொருட்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அங்ஙனே மார்க்கமெனும் இயற்கைக்கும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. இப்பெயர்கள் உலகில் பல சமயங்களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. புறப்போர்வையை நீக்கி, எச்சமயத்தை ஆராய்ந்தாலும், அதன் உள்ளம் சத்மார்க்கமா யிருத்தல் வெள்ளிடைமலை.

சன்மார்க்கத்தை ஓம்புதற்குப் பல இடங்களில் பல பெரியோர் தோன்றினர். அவர் தத்தம் தாய்மொழியில் சன்மார்க்கத்தை விளக்கிச் சென்றனர். அம் மொழிவேற்றுமைகளை நீக்கிப் பொருளைப் பார்த்தால் ஒற்றுமை புலனாகும். பொருளை நோக்கி ஒருமையின்பம் நுகரும் பொறுமையை யிழந்து, புறப்பெயர் மொழி முதலியவற்றில் மட்டுங் கருத்தைச் செலுத்தி உலகம் பாழ்படுகிறது.

புறப் பெயர்களைமட்டும் பற்றிப் பூசல் விளைப்பதற்கு ஆங்காங்கே நாளடைவில் மடங்கள் காணப்பட்டன. மடங்களில் 'குருமார்கள்' கோயில்கொண்டார்கள். அவர்கள் தங்களைக் கடவுள் பிரதிநிதிகள் என்றுஞ் சொல்லிக்கொண்டார்கள். அவர்களாலேயே உலகில் பல கடவுள் பல சமயம் என்ற எண்ணம் உண்டாயிற்று. சமயப் போர்களை ஆங்காங்கே நடாத்தினவர்களும் அவர்களே. அவர்களின் கொடுஞ் செயல்கள் பலப்பல. அவைகளை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சங் குழைகிறது. கடவுள் பெயராலும் சமயப் பெயராலும் எவ்வளவோ அதிக்கிரமங்கள் அவர்களால் செய்யப்பட்டு வருகின்றன.

சம்பிரதாயங்கள், கண்மூடி வழக்க வொழுக்கங்கள் முதலிய பேய்கள் மடங்களினின்றும் பிறக்கலாயின. இப் பேய்கள் இப்பொழுது உலகத்தையே பிடித்தாட்டுகின்றன. இப்பேய்களைச் சத்தெனுஞ் செம்பொருளாகவும் மக்கள் கொண்டிருக்கிறார்கள். சம்பிரதாயங்களும் கண்மூடி வழக்க வொழுக்கங்களுமல்லவோ கடவுள் நெறியாகக் கொள்ளப் படுகின்றன ? என்ன அநியாயம் ! சம்பிரதாயங்கட்கும், கண்மூடிவழக்க வொழுக்கங்கட்கும், கடவுள் நெறிக்கும் என்ன தொடர்பு இருக்கிறது ? மடத் தலைவர்களின் சூழ்ச்சியை என்னென்று சொல்வது ? அச்சூழ்ச்சி மன்பதையை வதைக்கிறது ; சிதைக்கிறது.

மடத் தலைவர்களின் அட்டூழியங்கள் கோயில்களிலும் புகுந்துகொண்டன. கோயில்கள் மடத் தலைவர்கள் பார்வையில் வந்த நாள்தொட்டுக் கோயில்களிலும் துன்மார்க்கப் பேய்கள் நுழைந்துகொண்டன. இயற்கையைக் கோயிலாக் கொண்ட ஆண்டவனுக்குச் செயற்கைக் கோயில்கள் வேண்டுவதில்லை. மக்கள் இயற்கைக் கடவுளை நினைந்து அமைதிபெறுதற்குத் தனி இடங்களை நாடினார்கள். அத்தனி இடங்களில் கோயில்கள் அமைக்கப்பட்டன. அமைதிக் கென ஏற்பட்ட கோயில்கள் இப்பொழுது எந்நிலையிலிருக் கின்றன ? ஆண்டும் மடப் பேய்கள் தாண்டவம் புரிகின்றன.

நமது நாட்டுக் கோயில்களில் மற்றப் பேய்களுடன் சாதிப் பேயும் தாண்டவம் புரிகிறது. ஆண்டவன் கோயிலில் தீண்டாமைப் பேயும் நுழைந்துவிட்டது. கோயிலில் தீண் டாமைப்பேயை நுழைத்த தேசம், மதம், மடம், நூல் முதலி யன சபிக்கப்பட்டே போகும். தீண்டாமைப் பேய் ஒழியும் வரை நமதுதேசத்துக்கு விடுதலை இல்லைஎன்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. ஆண்டவன் நினைவூட் டுங் கோயில்களை மடங்கள் பாழ்படுத்திவிட்டன. மடங்களால் விளைந்துள்ள தீமைகள் எண்ணிறந்தன ; எண்ணிறந்தன.

கடவுள், சமயம் என்னும் பெயரால் மடத்தார்கள் உலகத்துக்கு ஒருவழியில் கேடு சூழ்ந்தார்கள். அரசியல்

வாதிகள் என்னும் மற்றொரு கூட்டத்தார் கிளம்பிக் குடியாட்சி கோனாட்சி குடிக்கோனாட்சி முதலிய பெயர்களாலும், விடுதலை, நாடு முதலிய பெயர்களாலும், வேறு வழியில் உலகை அலைக்கிறார்கள். அரசியல் வாதிகளால் உலகம் படும்பாட்டை என்னென்று கூறுவது? பத்திரிகைகளைப் பார்க்கவும் மனமெழவில்லை. சண்டை போர் கொலை கொள்ளை புரட்சி முதலியவற்றிற்கு உலகம் இரையாகிறது. நாளுக்கு நாள் அரசியல் வாதிகளின் சூழ்ச்சி பெருகி வருகிறது.

இவ்வல்லல்களை எப்படித் தொலைப்பது? மன்பதைக்கு உண்மை விடுதலையை எப்படித் தேடுவது? 'உலகம் இப்படித் தான் இருக்கும்; இவைகளைப் போக்குவது என்பது பைத்தியக்காரப் பேச்சு' என்று சிலர் கருதுகிறார். அது தவறு. சமயத்தின் பெயராலும் அரசியலின் பெயராலும் சூழ்ச்சிகள் பெருகப்பெருக உலகம் என்னாகும்? சூழ்ச்சிகளைத் தொலைக்க முயன்றே தீரல்வேண்டும். பழைய சூழ்ச்சிகளைத் தொலைக்கப் புது சூழ்ச்சிகளில் தலைப்படுதல் கூடாது. தூய நெறியில் தலைப்பட்டுச் சூழ்ச்சிகளைப் போக்குதல்வேண்டும். அதற்கு என் செய்வது?

தொல்லைகள் எங்கே இருந்து பிறக்கின்றன? -மடத்தார் சூழ்ச்சியாலும், மற்றவர் சூழ்ச்சியாலும் மக்கள் மதிமயங்கித் தங்களுக்குள் வேற்றுமை இருப்பதாகக் கருதி ஒருவரோடொருவர் பிணங்குவதினின்றுமே தொல்லைகள் பிறக்கின்றன. இத் தொல்லைகளை ஒழித்தல் - சாதி இயக்கங்கள், மத இயக்கங்கள், அரசியல் இயக்கங்கள் முதலியவற்றால் இயலுமோ? இயலவே இயலாது. சாதி, மதம், அரசியல் முதலியவற்றால் பிரிவும் பிணக்கும் விளைந்து வருதல் கண்கூடு. அங்ஙனமாக, அவ்வியக்கங்களில் தலைப்படுவதால் என்ன பயன் விளையும்? ஒன்றும் விளையாது.

பிரிவு பிணக்குகளைக் கடந்து நிற்பதாய் - பிரிவு பிணக்குகளை ஒழிக்க வல்லதாய் - ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்க்கவல்லதாய் - உலகத்தார் அனைவர்க்கும் உரிய ஒன்று

யிருப்பதாய் - உள்ள ஓரியக்கமே தேவை ? அவ்வியக்கம் எது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அது சன்மார்க்க இயக்கம் என்பது நனிவிளங்கும்.

சன்மார்க்கத்திற்குச் சாதியில்லை; மதமில்லை; நாடில்லை; நகரமில்லை; எக்கட்டுமில்லை. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒன்றன்மீது கருத்துச் சென்றால், வேற்றுமை யாண்டிருந்து தோன்றும் ? இப்பயிற்சி மக்களிடை ஓங்க ஓங்க உலகில் பல தொல்லைகள் ஒழியும். 'சத்தெனுஞ் செம்பொருளே எல்லாம் வல்ல இறை ; அதன் கோயில் இயற்கை' என்னும் எண்ணம் எத்தகைச் சமரசத்தை வளர்க்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? சமரசத்தை வளர்க்கும் ஆற்றல் சன்மார்க்கத் துக்கே உண்டு. இன்று இவ்வளவில் நின்றுவிடுகிறேன்.

(20-4-1932)

## சன்மார்க்க சங்கம்

அடிக்கடி 'சன்மார்க்க சங்கம்' என்று மட்டுங் குறிப்பிட்டு யான் பேசியும் எழுதியும் வருவதைப்பற்றி நண்பர் சிலர் கடிதங்கள் விடுத்து வருகிறார். அவருட் சிலர் 'சன்மார்க்க சங்கத்தின் அமைப்பென்னை ?' என்று வினவி யிருக்கிறார்; சிலர் 'இதுபோழ்து வேண்டற்பாலது சுயராஜ்ய சங்கமன்றோ ? சன்மார்க்க சங்கம் எற்றுக்கு ?' என்னுங் கருத்துப்பட எழுதியிருக்கிறார் ; சிலர் 'சன்மார்க்க சங்கம் அமைப்பதினும் காட்டுக்குப்போதல் நலம்' என்று சொல்லி யிருக்கிறார். இவர் அனைவர்க்கும் வணக்கஞ் செலுத்த வேண்டுவது எனது முதற் கடமை. அக் கடனாற்றிக் கடிதங் களை யொட்டிச் சிலவுரை பகர விரும்புகிறேன்.

முதலாவது சங்க அமைப்பைப்பற்றியது. சன்மார்க்கம் என்பதும், அப்பெயர் கொண்ட சங்கம் என்பதும் புதியன வல்ல. ஆதலால், அச் சங்கம் ஒருவரால் காணப்பெற

வேண்டுவதும், அதற்குப் புதிய அமைப்பு வகுப்பதும் அநாவசியம். சத்தெனுஞ் செம்பொருள் என்று உண்டோ அன்றே அச் சத்துக்குரிய மார்க்கமும் உண்டு. சத்தெனுஞ் செம்பொருளைப் பற்றிப் பெரியோர் எழுதிய நூல்கள் மலைபோலவுங் கடல்போலவும் பெருகிப் பரந்து கிடக்கின்றன. அவைகளிற் போந்துள்ள கருத்துக்களை யெல்லாந் திரட்டிக் கூர்ந்து நோக்கின், கடவுள் அன்பு என்பதும், அவ்வன்புக் கடவுள் எவ்வுயிரிலுங் கோயில்கொண்டிருப்பது என்பதும், அன்புநிலை அடையவேண்டுமேல் அழுக்காறு அவா வெகுளி முதலிய தீமைகளின்றி உயிர்கட்கு அன்புத் தொண்டாற்றல் வேண்டும் என்பதும் நனிவிளங்கும். இக் கொள்கை உலகில் பற்பல சமயப் பெயரால் உலவுகிறது. அச் சமயங்களெல்லாம் ஒரே கொள்கை யுடையனவாயினும், பெயர் வேற்றுமையால், அவை யுணர்த்தும் அன்பு நெறிக்குச் சில வேளைகளில் கேடு நேர்கிறது. ‘பல கடவுளர், பல சமயம்’ என்னும் எண்ணம் உலகைப் பலவாறு பிரித்து நிற்கிறது. ஆதலால், சமயங்களின் சமரசக் கொள்கையைச் சன்மார்க்கமெனக் கோடல் பொருந்தும்.

இச் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுக ஒரு கூட்டம் வேண்டற்பாலது. அதுவே ‘சன்மார்க்க சங்கம்’ என்பது. (க) இச்சங்க நோக்கமென்னை ? (உ) சங்க அங்கத்தவர் யாவர் ? (ஙு) நிர்வாக அங்கத்தவர் யாவர்? (ச) அமைச்சர் எவர் ? (ரு) தலைவர் எவர் ? (சூ) சந்தா எவ்வளவு ? இவ் வினாக்கட்கு யான் இறுக்கப்புகும் விடை சிலர்க்கு வியப்பூட்டும் ; சிலர்க்கு நகைப்பூட்டும்.

(க) சங்க நோக்கத்தையும், அந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க முறைகளையும் ஈண்டு விரிக்கிற் பெருகும். அவைகள் தொன்றுதொட்டு நிலவிவருவன. ஆனால் காலநிலைக்கு ஏற்றவாறு அவைகள் ஓரளவில் நடைமுறைப் பொருட்டுக் கணிக்கப்படல் வேண்டும். ஈண்டு அவைகளைப்பற்றிப் பொதுப்படச் சில சுருங்கச் சொல்கிறேன். சத்தாகிய கடவுள் யாண்டும் வீற்றிருத்தலால், எவ்வுயிர்க்கும் மன மொழி மெய்களால் தீங்கு நிகழ்த்தாது,

தன்னுயிரைத் தான்பரிந்து ஓம்புமாறுபோல மன்னுயிரையும் ஓம்பி, அவ்வுயிர்நலன் கருதித் தொண்டுசெயல் சங்கத்தின் தலையாய நோக்கம். இப் பெருநோக்கத்தை நிறைவேற்ற அகமுகத்திலும் புறமுகத்திலும் பணிசெய்தல் வேண்டும். அகமுகப் பணிகளாவன :—அகத்திலுள்ள மெய்ப்பொருளைக் காணவேண்டி, அழுக்காறு அவா வெகுளி முதலிய தீ நீர்மைகளைக் களைதல், கொலை களவு கள் காமம் பொய் யெனும் ஐம்பெரும் பாவம் நிகழவொண்ணுதவாறு தன்னைக் காத்தல் முதலியன. புறப் பணிகளாவன:—தேசத்தொண்டு, அத் தொண்டுக்கு இடையூறுக உள்ள குறைகளைக் களைதல் முதலியன. தேசத் தொண்டும் கால நிலையைப் பொறுத்து நிற்பது. இப்பொழுது நமது நாட்டிலுள்ள குறைபாடுகளில் கருத்துச் செலுத்தி அவைகளைக் களையப் பாடுபடல் சிறந்த தேசத் தொண்டாகும். சுதேசியத்துக் குழைத்தல், பெண்ணுரிமைக்குப் பாடுபடல், தீண்டாமை விலக்கல், வகுப்புப் பூசலொழித்தல், கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுத்தல், தேசத்திற் பிறந்தாரிடை அன்பு வளர்த்தல், கண்மூடி வழக்க ஒழுக்கங்களை அன்பு வழியில் தொலைத்தல் முதலிய அறத்துறைகளோம்ப முயலுதல் தற்காலத்துக்குரிய சிறந்த தேசத்தொண்டாகும். (உ) உலகிலுள்ள அனைவருஞ் சன்மார்க்கத்தை விரும்புகிறுர். ஆனல் விரும்பும் வழிநிற்கச் சிலரே முயல்கிறுர். அவ்வழி நிற்பவரோ மிகச் சிலர். இம் முத்திறத்தாருஞ் சன்மார்க்க சங்க அங்கத்தவராவார். ஆகவே, இவ்வுலகிலுள்ள கடவுள் பிள்ளைகள் அனைவரும் சன்மார்க்க சங்க அங்கத்தவரென்க. (ங) அவருள் நிர்வாக சபையார் 'தம்முயிர்போல் மன்னுயிரையுங்' கொண்டு ஒழுகும் அருளொழுக்கத்தில் தேர்ச்சிபெற்றவர். (ச) சங்க அமைச்சர் நங் கண்முன் காட்சியளிக்கும் இயற்கை அன்னையார். (ரு) சங்கத்தலைவர் சத்தெனுஞ் செம்பொருளாகிய அருட் கடவுள். (சு) சங்கத்துக்குச் சந்தா உயிர்களிடத்துச் செலுத்தும் அருள். இவைகள் சங்கத்தின்

அமைப்பாகும். இச் 'சன்மார்க்க சங்கமே' என்றால் அடிக்கடி குறிப்பிடப்படுவது.

இப்பெருஞ் சங்கத்துக்குக் கிளைகளாகப் பல சங்கங்கள் ஆங்காங்கே அமைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு வீட்டிலும் கிளைச்சங்கம் அமைக்கலாம். வீட்டின் தலைவரும் தலைவியரும் முறையே சங்கத்தின் தலைவராகவும் அமைச்சராகவும் இருக்கலாம். அவ்வீட்டிலுள்ள மற்றவரும் சங்கத்தின் அங்கத்தவராகலாம். இவர் சங்க நோக்கத்தை நிறைவேற்ற முயலல்வேண்டும்.

சன்மார்க்க போதனைக்கென ஒரு சங்கமும் ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு கிராமத்திலும் அமைத்துக்கொள்ளலாம். சங்கத்துக்கெனப் பெருங் கட்டடங்கள் எழுப்ப வேண்டுவதில்லை. ஓர் அழகிய சிறு நிலையஞ் சாலும். சங்கத்துக்கெனத் தலைவர் அமைச்சர் முதலியோரைத் தெரிந்தெடுத்தல், சந்தா சேர்த்து வரவு செலவு கணக்குப் படித்தல் முதலியன வேண்டாம். தேர்வும் பொருளீட்டமும் மக்களைச் சன்மார்க்கத்தில் செலுத்தா. அவை முனைப்பை எழுப்பிப் போர் மூட்டும். சங்கத்தின் எவ்வினைக்காதல் பொருள் வேண்டியிருப்பின், அவ்வினைக்கெனப் பொருள் சேர்த்து அதை ஆற்றல் வேண்டும். பின்னை அப்பொருளில் மிகுதி நின்றால், அதை உடனே ஏழை மக்கட்குப் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டும். பெரும் பொருட் செலவுக்குரிய வினையொன்றும் சங்கத்தில் நடைபெறல் கூடாது. சங்கத்துக்கெனத் தனி நிதி திரட்டல் அநாவசியம். பெரு நிதியால் தற்கால மடங்களும் கோயில்களும் பேயுறையும் இருட் குகைகளாக மாறியதொன்றே நமக்கு எடுத்துக்காட்டு. ஆதலால், விலங்குணர்வும் பேயுணர்வும் தோன்றாதமுறையில் சங்கத்தை நடாத்தல் வேண்டும். அருளொழுக்கத்தில் முதிர்ச்சி பெற்றாரைக் கொண்டு சங்கத்தில் சன்மார்க்க போதனை செய்விக்கலாம். சங்க நோக்கத்தை ஒட்டிப் பலதிறத் தொண்டுகள் செய்யலாம்.

'இப்பொழுது வேண்டற்பாலது சுயராஜ்யசங்கமன்றோ? சன்மார்க்க சங்கம் எற்றுக்கு' என்னுங் கருத்துக்கொண்ட

கடிதங்கள்மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். சுயராஜ்யம் என்பது சன்மார்க்கத்துக்கு வேறுபட்டு நிற்பதன்று. சுத்த சன்மார்க்கரெல்லாருஞ் சுயராஜ்யம் பெற்றவரே யாவர். சன்மார்க்கம் விடுத்துச் சுயராஜ்யக் கூச்சலிடுவது ஆகாயக் கோட்டை கட்ட முயல்வதாகும். சுயராஜ்யக் கிளர்ச்சி என்னும் பெயரால் நாட்டிடைத் துன்மார்க்கச் செயல்களும் நடைபெறுகின்றன. சன்மார்க்கத்துக்கு மாறுபட்ட சுயராஜ்யக் கிளர்ச்சியால் உண்மைச் சுயராஜ்ய உணர்ச்சியும் ஊக்கமும் நாட்டில் குலைந்துவரல் கண்கூடு. உண்மைச் சுயராஜ்யம் நாட்டில் அரும்பவேண்டுமேல், நாட்டில் சன்மார்க்கம் ஆக்கம் பெறல் வேண்டும்.

இப்பொழுது நடைபெற்று வரும் தேர்தல் முயற்சியில் மக்கள் நல்லொழுக்கத்துக்கு ஊறு விளைக்கவல்ல வினைகள் எவ்வளவோ நிகழ்ந்துவிடுகின்றன. அவைகளை நினைக்க நினைக்கக் குடல் நடுக்குறுகிறது. மனிதன் விலங்காகுங் காலமும் நேருமோ என்னும் ஐயந் தோன்றுகிறது. 'தேர்தல் காலங்களில் இத்தகைய வினைகள் நிகழ்வதும் நிகழ்த்துவதும் இயல்பு' என்று இக்காலக் கல்வியாளர் கூறுகிறார். இக்கூற்று முற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. மனிதனே குற்றஞ் செய்யும் நீர்மையன். அந்நீர்மையினின்றும் விலக அவன் உலகில் பலவழியிலும் முயலல்வேண்டும். அம்முயற்சியில் தலைப்பட் டுழைக்கவேண்டிய மனிதன், மேலும் மேலும் பாழில் வீழ்ந்து இடர்ப்படின், அவன் வாழ்வு என்னும்? தேர்தலில் வெற்றியொன்றே குறிக்கொண்டு 'கற்றவர்' புரியுந் திருவிளையாடல்கள் நாட்டின் வாழ்வையே குலைக்கின்றன. இக்கற்றவர் முயற்சியால் சுயராஜ்யம் அரும்புதல் அரிது. ஒருவேளை அரும்பினும் அது சுயராஜ்யமாகாது; கலகக் குழப்ப அராஜகமாக முடியும். சுயராஜ்யமில்லாத நாட்டில் மக்களுக்குள் ஒற்றுமை அன்புமுதலிய நறுங்குணங் கமழ்ந்து மணம் வீசுமாறு கற்றவர் முயலல்வேண்டும். இப்பொழுது நாட்டில் அதற்கு முற்றும் மாறுபட்டவினைகள் நிகழ்ந்துவருகின்றன. தலைவேறு கால்வேறு கைவேறு

ஆகுமாறு பாரதமாதாவைத் தூண்டிக்கக் கல்வியறிவுள்ள தலைவர்கள் முயன்று வருகிறார்கள். இவ்வாறு நாட்டைச் சூலைத்து வகுப்புப்பூசலைத் தலைவர்கள் எழுப்புதற்குக் காரண மென்னை? அவர்கள் குறிக்கொண்டுள்ள சுயராஜ்யத்தின் அடிப்படையில் சன்மார்க்கக் காலின்மையே யாகும்.

சுயராஜ்ய உணர்ச்சி சன்மார்க்க வாயிலாக நாட்டு மக்களிடத்திருந்து அரும்பல் வேண்டும். இப்பொழுது சுயராஜ்ய உணர்வு அரும்பாமலா இருக்கிறது? அரும்பியே வருகிறது. எவர் உள்ளத்தில் அஃது அரும்பி வருகிறது? நாட்டின் சன்மார்க்க இயல்புக்கு வேறுபட்ட கல்வி அறிவு ஒழுக்கம் முதலியவற்றில் தோய்ந்து கிடப்போரிடம் அஃது அரும்பி வருகிறது. அச் சுயராஜ்யம் நாட்டுக்குரியதாகாது. ஒருவன் தன் உடற்கூற்றிற்கு மாறுபட்ட உணவு கொள்வனேல் அவன் நோய்வாய்ப்படல் ஒருதலை. இந்நாட்டின் சன்மார்க்க இயல்புக்கு மாறுபட்ட கல்வி அறிவு ஒழுக்கமுடையார் நோய் வாய்ப்பட்டாரை ஒப்பர். அந்நியர் அளிக்குஞ் சீர்திருத்த வழி ஆட்சிமுறை நடாத்தவும், அதனால் உட்கலாம் எழுப்பவும் முனைந்து நிற்பவர்பால் உண்மைச் சுயராஜ்ய உணர்வு எங்ஙனம் அரும்பும்? நாட்டின் இயல்புக்குரிய சன்மார்க்கக் கல்வி அறிவு ஒழுக்கமுடையார் உள்ளத்தெழும் சுயராஜ்ய வேட்கையே சுயராஜ்யத்துக்கு அடிப்படை. மக்கள் உள்ளம் நாட்டின்மீதும் சன்மார்க்கத்தின்மீதும் பதிந்து, நாட்டில் சன்மார்க்கம் வளரின், நாடு தானே சுயராஜ்யம் பெறும். சன்மார்க்கத்தில் சுயராஜ்யம் அடங்கலால், சுயராஜ்யத்துக்கெனத் தனிச் சங்கம் வேண்டுவதில்லை. காங்கரஸ் மகாசபை என்று ஒன்றிருத்தலால், அதற்கு மாறுபட்டு ஒரு தனிச் சுயராஜ்ய சங்கங் காணலும் முறையன்று. காங்கரஸுக்கு உயிரளிக்கச் சன்மார்க்க சங்கம் வேண்டற்பாலது.

'சன்மார்க்க சங்கம் அமைப்பதினுங் காட்டுக்குப்போதல் நலம்' என்று எழுதிய நண்பர் நிலைகுறித்து வருந்துகிறேன். சன்மார்க்கம் காட்டுக் குரியதென்பது அவர் கருத்துப் போலும்! சன்மார்க்கம் காட்டுக்கும் நாட்டுக்கும் உரியதென்பது எனது உள்ளக்கிடக்கை. சன்மார்க்கத்தை உலகி

னின்றும் பிரிப்பது அறியாமை. உலகில் மக்கள் பிறவி தாங்கியதன் நோக்கமென்னை? தங்கள் மாட்டுள்ள குறைபாடுகளைக் களைந்து நிறைவெய்தவேண்டு மென்பதன்றோ? விலங்குகள்போல் திரிந்து மாண்டுவிடுவதா பிறவிநோக்கம்? மனிதனிடத்துள்ள குறைபாடுகளைக் களையவல்லது சன்மார்க்கம் ஒன்றே. அச் சன்மார்க்கத்துக்குரிய கல்வி வாழ்வு சேர்க்கை அரசு முதலியன அமைதல் வேண்டும். இவ்வமைப்பால் மனிதன்வாழ்வு தூய்மையுறும்.

'சன்மார்க்கம் என்பது வாய்வேதாந்தம். அது செய்கை உலகிற்குப் பொருந்தாது' என்று கூறுவோருமுளர். இவ்வாறு கூறிப் பழி பாவங்களை வளர்க்கப் புகுவது வாழ்வையே குலைப்பதாகும். சன்மார்க்கத்தை வாய் வேதாந்தமென்று தள்ளித் தள்ளிச் சென்று, துன்மார்க்கத்துக்குத் துணை நின்றால் உலகம் எங்ஙிலை எய்தும்? ஆதலால், துன்மார்க்கத்தைத் தொலைக்கவும் சன்மார்க்கத்தை வளர்க்கவும் ஒல்லும்வகையாதல் முயலல்வேண்டும்.

சன்மார்க்கம் நாட்டுக்குரியதன்று என்று கருதுவது தவறு. சன்மார்க்கம் நாட்டுக் குரியதன்று எனில் பின்னை எது நாட்டுக்குரியது? குடியிலுங் கொலையிலுந் தோய்ந்து கிடக்கும் ஒருவனுக்கு மேலும் மேலும் பொருளீந்து, அவனைக் குடிக்கச்செய்து தேர்தல் கூட்டங்களில் கலாம் விளைக்குமாறு தூண்டுஞ் செயல் நாட்டுக்குரியது போலும்! 'நாட்டைச் சன்மார்க்கத்தில் திருப்பல் இயலாது' என்னும் எண்ணமே எழுதலாகாது. சன்மார்க்கம் நாட்டுக்கு வேண்டாம் என்போர் காட்டுக்குப் போதல் நலம். துன்மார்க்கம் நாட்டுக்கு வேண்டாம். நாட்டுக்கு வேண்டற்பாலது சன்மார்க்கம், சன்மார்க்கமே.

நண்பர் விடுத்த கடிதங்களையொட்டிச் சன்மார்க்க சங்கத்தைப்பற்றி இன்று சில உரை தொகுத்துக் கூறினேன்? இனிச் சமயம் நேர்ந்துழி வகுத்துக் கூற எண்ணியிருக்கிறேன்.

இப்பொழுது நாட்டில் எங்கணும் வகுப்புப் போரும், ஒருவரை ஒருவர் தூற்றுவதும், ஒருவர்மீது ஒருவர் இல்லாத

பொல்லாத பழிகளைப் புனைந்துரைப்பதும், வேறு பல இழிவு களும் நிரம்பி யிருக்கின்றன. இவ்வளவிற்குங் காரணம், நாடு அந்நிய ஆட்சிமுறையின் வயப்பட்டுக்கிடப்பதும், அவ்வாட்சியில் வேட்கைகொண்டு தலைவரென்போர் அர சியல் கட்சிகளை வகுத்துப் பிணக்குறுவதும் ஆகும். உரிமை யில்லா நாட்டில் அரசியல் கட்சிகளை வகுப்பது நாட்டைத் துன்மார்க்கத்தில் அழுத்துவதாகும். அரசியல் கட்சிகளால் நாட்டுக்கு நலன் இல்லை என்னும் முடிவிற்கு வந்துள்ளோர், கட்சிப்பிணக்கில் சிக்குறாது, 'சன்மார்க்க அரசியல்வாயி லாக நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களைதல்கூடும்' என்னும் உறுதிகொண்டு உழைப்பாராக. ஆண்டவன் அருளும், அன்பர் துணையும் சன்மார்க்க முயற்சிக்குத் தேவை.

(5-11-1926)

## சந்நியாசிகள்

நமது நாடு சந்நியாசத்தில் பேர்பெற்றது. நாடு முழுவதும் சந்நியாச கோஷம் அதிகம். 'சந்நியாசம் சந்நி யாசம்' என்னும் பேச்சு வீடுதோறும் பேசப்படுகிறது. சாஸ்திரங்களெல்லாம் 'சந்நியாசம் சந்நியாசம்' என்றே முழங்குகின்றன. 'சந்நியாச'த்தைப்பற்றிக் கூறாத நூல்கள் அருமை. ஆண்மக்களும் சந்நியாசத்தைப்பற்றிப் பேசு கிறார்கள்; பெண்மக்களும் சந்நியாசத்தைப்பற்றிப் பேசு கிறார்கள். செல்வர், வறியர், அரசர், தொழிலாளர், பெரி யோர், சிறியோர் முதலியோர் சந்நியாசத்தைக் குறித்துப் பேசுகிறார். உலகத் துன்பம் மேம்பட்டுத் தாக்குறும் இக் காலத்தும் பெரிதும் 'சந்நியாச' நினைவு தோன்றி மறை கிறது. சந்நியாசத்தைப்பற்றி ஏன் இவ்வளவு பேசுதல் வேண்டும்? அதில் ஏதாயினும் சிறப்புண்டோ?

நம் முன்னோர் மக்கள் வாழ்க்கையை நான்கு கூறாக வகுத்தனர். அவை பிரமசரியம், கிருகஸ்தம், வானப்

பிரஸ்தம், சந்நியாசம் என்பன. இந்நான்கு ஆச்சிரமங்களைப் பற்றி நமது நாட்டு நூல்கள் மிக விரிவாகக் கூறியிருக்கின்றன. விரிவையும் விவரத்தையும் அவைகளிற் காண்க. இந்நான்கு ஆச்சிரமங்களும் ஒவ்வொரு மனித வாழ்க்கையில் அரும்பி மலர்ந்து காய்த்துக் கனியவேண்டுவன. இப்பொழுது உலகத்தில் (இந்தியாவிலும்) முதலிரண்டு ஆச்சிரமங்களே நிலவுகின்றன என்று கூறலாம். புத்தர்பெருமான் காலத்திலும், அவர்தம் அறம் ஆட்சிபெற்ற காலத்திலும் நமது நாடு சந்நியாச மயமாயிருந்தது. பௌத்த தருமம் இந்தியாவில் குன்றிய நாள்முதல் உண்மைச் சந்நியாசமும் குன்றத் தொடங்கிற்று.

மனித வாழ்வின் இன்பம் சந்நியாசத்தில் உண்டு என்பதை உலகத்துக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்க வைத்த பெரியார் பலர். அவருள் தலையாயவர் புத்தர்பெருமான். சந்நியாசத்தில் மனிதனுடைய ஆணவம் - அறியாமை - முனைப்பு - அறவே ஒழிந்துபடுவதைப் புத்தர்பெருமான் கண்டார்; அதை உலகத்துக்கும் அறிவுறுத்தினர். மனிதனுடைய ஆணவத்தில் கால்பங்கு பிரமசரியத்திலும், அரைப்பங்கு கிருகஸ்தத்திலும், முக்கால் பங்கு வானப்பிரஸ்தத்திலும், முற்றும் சந்நியாசத்திலும் ஒழிகின்றன என்று கூறலாம்.

துறவொழுக்கத்தின் மாண்பை ஆசிரியர் திருவள்ளுவரும்,

இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

என்று கூறிப் போந்தார்.

சந்நியாசம் என்பது பிறப்பால் விளங்குவதன்று; பெண்ணை வெறுத்தலால் விளங்குவதன்று; வேஷத்தால் விளங்குவதன்று; விருதால் விளங்குவதன்று; காட்டுக்குச் செல்வதால் விளங்குவதன்று; காற்றைப் புசிப்பதால் விளங்குவதன்று. சந்நியாசம் 'நான்' என்னும் ஜீவபோதம் அற்ற இடத்தில் விளங்குவது. 'நான்' என்னும் முனைப்பு உள்ள மட்டும் சந்நியாச உணர்வே அரும்பாது. 'நான்' என்னுஞ் செருக்கை ஒழித்தவன் எவனோ அவனே சந்நியாசி. அவன் உள்ளம் சதா ஜீவகாருண்ணியத்தில் திளைத்து நிற்கும். மற்றவர்க்காக வாழும் மகன் சந்நியாசி எனப்படுவான். தனக்கென ஒரு பற்றுமின்றி, மற்றவர்பொருட்டு வாழும் பற்றையே தனக்குரிய பற்றாகச் சந்நியாசி கொள்வான்.

சந்நியாசிகள் மற்றவர் நலங்கருதி வாழ்தலால், மற்றவரும் அவர்கள் நலங்கருதி வாழ்தல் வேண்டும். சந்நியாசிகள் தங்கள் ஆத்மசக்தியாலும், இடையறாத தியானத்தாலும் உயிர்களின் நலத்தையே நாடுவார்கள். அவர்கள் உடலுக்கு எவ்வித் கேடும் உறாதவாறு உலகத்தார் பாதுகாத்தல் வேண்டும். உயிர்கள் நலத்தை நாடுஞ் சந்நியாசிகளைப் பசியால் மெலிவிப்போர் எரிவாய் நிரயத்துக்கு ஆளாவர். ஒப்புரவின்பொருட்டு உடல்தாங்கி, அறம்வளர்க்குஞ் சந்நியாசிகளைக் கண்டு, அவர்களுக்குச் சோறிடாது உண்டு கழிப்போர், பலவித இடர்களால் பீடிக்கப்படுவர். வியர்வைநீர் நிலத்தில் சிந்த உழைத்துப் பெறும் ஊதியத்தைக்கொண்டு, மக்கள் இடும் சோற்றை உண்ணுஞ் சந்நியாசியும், தன் கடமையைச் செய்யா தொழிவனேல், அவனைக் குஷ்ட ரோகம் முதலிய நோய்கள் துன்புறுத்தும். அவன் பெரும் பாவியாவான்.

இப்பொழுது சந்நியாசிகளிற் பெரும்பான்மையோர் தங் தருமத்தினின்றும் வழுவி நடக்கிறார். இவர் நெறிபிறழவே

மற்றவர் நெறியும் பிறழ்ந்துவிட்டது. இப்பொழுது போலிச் சந்நியாசிகள், வேஷச் சந்நியாசிகள், கோபச் சந்நியாசிகள், தூர்த்தச் சந்நியாசிகள், வயிற்றுச் சந்நியாசிகள், திருட்டுச் சந்நியாசிகள், குடிச் சந்நியாசிகள், கஞ்சா சந்நியாசிகள், மடச் சந்நியாசிகள், தடிச் சந்நியாசிகள், கொலைச் சந்நியாசிகள் பெருகி வருகிறார்கள். வட இந்தியாவில் சந்நியாச தருமம் இன்னுஞ் சிறிது ஒழுங்காகவே வளர்ந்து வருகிறது. தென்னிந்தியாவில் - தமிழ் நாட்டில் - குடி கெடுக்குஞ் சந்நியாசக் கூட்டம் பெருகிவிட்டது. உழைப்புக்கு அஞ்சி, மனைவி மக்களைப் போற்றிக் காக்க இயலாது, தாய்தந்தையரை வஞ்சித்துக், குடும்பத் துன்பத்துக்குப் பயந்து, சோம்பேறிகளாய்த் திரியப் பலர் சந்நியாசம் ஏற்கிறார். இவரால் சந்நியாச தருமத்துக்கே பங்கம்நேர்ந்துவிட்டது. உண்மைச் சந்நியாசிகள் தொகை அருகினமையால் நாட்டில் பலவிதக் கொடுமைகள் கூத்தாடுகின்றன.

சில நாளாகப் 'பரோபகாரிகள்' என வெளிவருவோர் சந்நியாச தருமத்துக்கு மாறுபட்ட ஒழுக்கங்களைக் கடைப் பிடித்து ஏழைமக்களை ஏமாற்றி வருகிறார். பரோபகாரிகளாகக் கிளம்புவோர் எவ்விதக் கைம்மாறுங் கருதாது உழைத்தல் வேண்டும். பண்டைக்காலத்தில் பயன் கருதாது உழைத்தவரே சந்நியாசிகளென்று போற்றப்பட்டார். இந்நாளில் 'பரோபகாரிகள்' என்று வெளிவருவோர் கதைகளை நாம் அறிவோம்.

இப்பொழுது தேசத்தில் அரசியல் கிளர்ச்சி தோன்றியிருக்கிறது. அக்கிளர்ச்சி தேச சுதந்திரத்தைக் கருதி எழுந்தது. தேச சுதந்திரத்தைக் கருதி உழைப்பவர், மனைவி மக்களோடு வாழ்பவர்யினும், அவர் மனம் பரோபகாரத்தில் பதிந்து சந்நியாசம் பெறல்வேண்டும். இம்மனமுடைய தேசபக்தர் ஒரு சிலரே யாவர். அவரைத் தெய்வமாகப் போற்றுகிறோம். பல சகோதரர் சுயநலத்தை அகத்தில் அடக்கி, உருத்திராட்ச பூனைபோல் நடித்துத், தேசபக்தர்கூடும் மேடைகளில் சொன்மாரி பொழிந்து ஏழைமக்களை ஏமாற்றுகிறார். சிலர் சுயநலங்கொண்டு தமக்குள்ள ஏராளமான பொருட்

குவியலில் ஒரு சிறு பகுதியை ஏழைகளுக்குத் தந்து தமது காரியத்தை முடித்துக்கொள்கிறார். இவர் கதைகள் பல உண்டு - இன்று தேசபக்தர் - நாளை நகர பரிபாலன சங்க அங்கத்தவர் ; இன்று பரோபகாரி - நாளை சட்டசபை அங்கத்தவர் ; இன்று சந்நியாச நாடகம் - நாளை நிருவாக அங்கம் - இச் சண்டாளர், பொது ஜனங்களைப் பரோபகாரச் சொல்லால் - சந்நியாச நடிப்பால் - ஏமாற்றாது, நேர்மையாகத் தம் கருத்தை வெளியிட்டு, நகர பரிபாலன சங்கத்தை நாடலாமே ; சட்ட சபைக்கு ஓடலாமே ; நிருவாக சபையில் நிற்கலாமே ; இப்பதவிகளை மனத்திற்கொண்டு, அவைகளைப் பெற, ஏழை மக்கள் உதவியை நேராக நாடாது, அவர்களிடைப் பரோபகார நாடகம் நடித்து, பொருள் மாரி பொழிந்து, வழியல்லா வழிச்சென்று, தங்கருத்தை நிறைவேற்றுகிறார். இவரது 'பரோபகாரமும்', 'சந்நியாசமும்' உயர் பதவி கிடைக்குமட்டுந்தான். அப்பால் வன்மமும் வன்கண்மையுமே. இத்தகைக் கூட்டம் நாளுக்கு நாள் பெருகினால் தேசத்தின் அருட்செல்வம் அருகிவிடும். அரசியல் கிளர்ச்சியில் தலைப்பட்டுள்ள 'பரோபகாரிகளி'ன் நாடகத்தைக் கண்டு நமது கண்களுங் கூசிவிட்டன.

இப்பொழுது நமது நாட்டுக்கு ஒரு திருக்கூட்டம் தேவை. அக் கூட்டம் பயன் கருதாது தேசத்தொண்டு செய்தல் வேண்டும். அக் கூட்டத்தில் சேர்வோர்க்கென வீடு வாசல் பொன் பொருள் இருத்தல் கூடாது. அன்னார் உணவுக்கும் உடைக்கும் ஒருவரிடம் சேவை செய்தலாகாது. அக் கூட்டத்தார் கிராமம் கிராமமாகச் சென்று வாய்த்தொண்டுங் கைத்தொண்டுஞ் செய்தல்வேண்டும். மக்களுக்கு நல்லுபதேசஞ் செய்வது வாய்த்தொண்டு ; ஏழை மக்கள் வீடுகள் தெருக்கள் முதலியவற்றை உழவாரப்படையால் சுத்தஞ் செய்தல் போன்றது கைத்தொண்டு. இத் தொண்டுகளைச் செய்து, உச்சிவேளைக்குள் கையேந்திப், பிச்சை

யெடுத்து உண்டு கழித்தல்வேண்டும். எவ்வழியிலும் எக் காரணம் பற்றியும் தமக்கென்று அக்கூட்டத்தார் பொருள் சேர்த்தலாகாது. அக் கூட்டத்தார் வாய்த்தொண்டும் கைத் தொண்டும் பலபேரை உண்மைத் தொண்டராகச் செய்து விடும்.

பொருளாசையை வெறுத்து இரந்துண்டு தேசத் தொண்டு செய்ய வெளிவருஞ் சகோதரர் எவராயினும் அவரைச் சந்நியாசி என்றே நாம் கூறுவோம். அவர் ஊர்களில் போகுங்காலத்து, ஊரவர் அவரைப் பாதுகாத்தல் வேண்டும். இருவருந் தத்தங் கடமையை வழாது செய்தல் வேண்டும். இவ்வாறு நல்லோர் தொண்டு செய்ய நுழைவாராயின், சுய நலக் கபடராது வேஷம் வெளியாகும். வஞ்சனை ஏமாற்றம் முதலியன ஒழியும். தொண்டு செய்வோர் தொண்டு ஏற் போர் ஆகிய இருவரும் தூயராவர். அதனால் தேசமே தூய் மையுறும். எக்கிளர்ச்சி தேசத்தில் தோன்றினும், அக் கிளர்ச்சியால் தேசத்துக்குப் பயன் விளையும். தொண்டு செய்வோரிடத்தில் தூய்மை இல்லை எனில், எக் கிளர்ச்சியா லும் பயன் விளையாது. ஆதலால் தொண்டுசெய்ய முற்படு வோர் தியாகமூர்த்திகளாய், பொருள்பற்று முதலிய பற்றுக் களைப் பற்றுதவராய், ஊர் ஊராக மதிப்புடன் இரந்துண்பவ ராய் வாழ முயலல்வேண்டும்.

புத்தரும் அவர் சீடரும் சுத்த சந்நியாச தருமவழி நின்று, தருமோபதேசஞ் செய்தமையால், அவர் காலத்தி லேயே தரும நெறி செழித்தோங்கிற்று. மதங்கள் பெரிதும் மதாச்சாரியர்கள் காலத்துக்குப் பின்னரே வளர்ந்தன. ஆனால் பௌத்தமதம் புத்தர் காலத்திலேயே இந்தியா முழு வதும் பரவி, வெளி நாடுகளின் பல பாகங்களிலும் ஓங்கி வளர்ந்தது. இதற்குக் காரணம் யாது? பௌத்த சந்நி யாசிகள் எவ்விதக் கைம்மாறுங் கருதாமலும், சந்நியாச தருமத்துக்கு மாறுபட் டொழுகாமலும் தருமோபதேசஞ் செய்தமையே யாகும். கூலிக்கு மாரடிக்கும் கிறிஸ்துவப் பாதிரிமார்களைப் போலப் பௌத்த சந்நியாசிகள் தங்கள்

மதத்தைப் பரப்பவில்லை. தேசத் தொண்டர்கள் பௌத்த சந்நியாசிகளைப்போலப் புறப்பட்டு உழைக்க வேண்டுமென் பது எமது பிரார்த்தனை. பௌத்த சந்நியாசிகள் செய்த பிர சார முறைகளில் சில 'நவசக்தி'யில் வெளிவந்திருக்கின்றன. அம்முறை பற்றித் தேசபக்தர் தொண்டுசெய்யின் நாடு நலமுறும். (11-11-1921)

## அந்தண நிலையும் அரசியலும்

உலகத்தில் பிறந்த ஒவ்வோருயிரும் ஒரு காலத்தில் அந்தணநிலை யடைதல் வேண்டும். அந்தணநிலை யடையாது பேரின்பம் நுகர்தல் அருமை. ஒவ்வொருவரும் அந்தண நிலையைக் குறிக்கொண்டே தம் வாழ்க்கைப் படிகளிலேற முயலல் வேண்டும். அந்தண நிலையில் வருவது இன்பம். ஏனைய நிலைகளில் துன்பம் விளையும்.

அந்தண நிலையாவது என்னை? 'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுக லான்' என்னுந் திருக்குறளில் போந்துள்ள செந்தண்மை நிலை அந்தணநிலை எனப்படும். எல்லா உயிரையும் தன்னுயிர் போல் கருதி, எவ்வுயிர்க்கும் மறந்துங் கேடு சூழாமலும், தன்னலங் கருதாமலும், கருணைமேலீட்டான் மற்றவர்க் குழைக்கும் சீர்மையுடையான் அந்தணன் எனப்படுவன். இத்தன்மையுடையான் இந்நாட்டில் இச்சமயத்தில் இக்குலத் தில் பிறத்தல்வேண்டும் என்னும் நியதியில்லை. அவனுக்கு நாட்டு வேற்றுமை சமய வேற்றுமை சாதி வேற்றுமை முத லிய வேற்றுமைகள் தோன்ற. வேற்றுமை தோன்றப்பெறு வோர் பொறுமைக் களஞ்சியமாவர். அன்னவர் தீச்செயலா லும் போர் பொறுமை அரும்பா உள்ளமுடைய புனிதரே அந்தணர் என்போர்.

அந்தணநிலை யடைந்த பெரியோர் எல்லா நாடுகளிலும் இருந்தனர் ; இருக்கின்றனர் ; இருப்பர். புத்தர், கிறிஸ்து, மகம்மது, டால்ஸ்டாய் முதலியோர் அந்தணநிலை அடைந்தவரே யாவர். பாரதநாட்டு முனிவர், ஆச்சாரியர் முதலியோர் அந்தணராய் வாழ்ந்தவரே. திருவள்ளுவர் நமது தமிழ் நாட்டில் தோன்றிய சிறந்த அந்தணர். இப்பொழுது அந்தணநிலை பெற்று நம்மிடை மகாத்மா காந்தி வதிகிறார்.

அந்தணநிலை என்பதும் சந்நியாசம் என்பதும் ஒன்றே. பண்டைக்காலத்து மன்னர் செங்கோலோச்சி நாடு புரந்து, பின்னர்ச் சந்நியாசம் பெற்றுவந்ததை நூல்கள் விரித்துக் கூறுகின்றன. மனிதவாழ்வின் நோக்கம் அந்தண நிலை யடையவேண்டு மென்பது. அது மனித வாழ்வை ஆராய்வோர்க்குப் புலனாகும். ஒவ்வொருவர் கல்வியும் தொழிலும் பிறவும் அந்தண நிலையைக் குறிக்கொண்டு நிற்றல்வேண்டும். நமது நாட்டுக் கல்வியும் தொழிலும் பிறவும் அந்தண நிலையைக் குறிக்கொண்டு நிற்பதை இந்நாட்டு ஆராய்ச்சியுடையார் உணரலாம்.

இவ் வந்தணநிலை கேடுறாது ஓங்கி நிலவ வேண்டுமென்றெண்ணி, நம் முன்னோர் அரசியலை ஏற்படுத்தினர். அரசியலாவது அந்தண நிலையை வளர்க்கும் சிறந்த துறைகளுள் ஒன்று. நாட்டில் அந்தண நிலையைக் கெடுப்பன குழப்பம், குடி, திருடு முதலியன. இவைகளை ஒழித்து அந்தண நிலையை ஓம்புவது அரசியல் துறை. பண்டை அரசியலில் அந்தண நிலை அடையும் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. அந்தண நிலைக்கென ஏற்பட்ட நமது நாட்டு அறநூல்கள் - அன்பு நூல்கள் - அறிவு நூல்கள் - அந்தோ ! எங்குக் கிடக்கின்றனவோ ? நமது நாடு எந்நிலைக்கு வந்துவிட்டது ! கடவுள் சோதனையோ ? பாரத நாடே......

அந்தண நிலைக்கென ஏற்பட்ட அரசியல் இதுகாலை அழிந்துபட்டது. பொருளாசையால் பொறாமையைக் கிளப்பிப் போரை மூட்டும் பாழான அரசியல் உலகத்தில் தோன்றியிருக்கிறது. அவ்வரசியலால் அந்தணநிலை அருகி வருகிறது. உலகத்தில் அழுக்காறும் அவாவும் மிகக் கோரமாக

நடம்புரிகின்றன. அறத்துறைகளெல்லாம் மறைகின்றன. மறத்துறைகளெல்லாம் மலர்கின்றன. அறத்தைக் கெடுத்து மறத்தை வளர்க்கும் ஓர் அரசியல் வழியில் நடந்தால் என்ன விளையும்?

இப்பொழுது அறத்துக்குரிய அரசியலைக் கொள்வதா மறத்துக்குரிய அரசியலைக் கொள்வதா என்பது ஆராயற்பாலது. அந்தணநிலை வேறு, அரசியல்நிலை வேறு என்று பிரிப்பது அறிவுடைமையா என்பதும் ஆராயற்பாலது. இவ்வாராய்ச்சியில் தலைப்பட்ட அறிஞர் பலதிறக் கருத்துக்களை வெளியிடுகிறார். ஒருசிலர் அந்தண நிலைக்குரிய அரசியலே சிறந்ததென்றும், அந்தண நிலைக்கு உடலாயுள்ள அரசியலை வேறு பிரித்தலாகாதென்றுஞ் சொல்கிறார். வேறு சிலர் அந்தணநிலை வேறு என்றும், அதனுடன் ஆசை பொறாமை முதலியவற்றை வளர்க்கும் அரசியலைக் கொணர்ந்து நுழைத்தல் கூடாதென்றுஞ் சொல்கிறார். முன்னது நமது நாட்டுப் பழைய அரசியல்; பின்னது மேல்நாட்டு அரசியல். மகாத்மாகாந்தி, பொறுமை அன்பு முதலியவற்றை வளர்க்க வல்ல முன்னைய அரசியலை வலியுறுத்துகிறார். சிலர் 'அது சந்நியாசம், வேண்டாம்' என்கிறார்.

அந்தண நிலையை வளர்க்கும் ஞான அரசியலையே நாமும் விரும்புகிறோம். அதனால் சகோதர தர்மம் நிலைபெறும். மேல்நாட்டு ஊன அரசியலால் மனிதவாழ்வின் நோக்கம் நிறைவேறாது; சகோதர தர்மத்துக்குக் கேடு விளையும். இவ்வரசியலால் மனிதனிடத்தில் இயல்பாக உள்ள கடவுள் தன்மை ஒழிந்து அவனிடத்தில் மிருக பைசாச மிலேச்சத் தன்மைகள் பதிகின்றன. மனிதனை மிருகமாக்கும் - பைசாசமாக்கும் - மிலேச்சனாக்கும் - அரசியலால் பெறும் சுயராஜ்யம் எமக்கு வேண்டாம். அது சுயராஜ்யமுமாகாது.

ஒவ்வொரு மனிதனும் தன் அறியாமையை உணர்ந்து, தேகத்தைப் பொருளாகக் கருதாது, ஆன்ம வாழ்வில் அறிவைச் செலுத்தும் சுதந்திர மன்றோ சுயராஜ்யமென்பது? அமெரிக்காவிலுள்ள அனைவரும் - இங்கிலாந்திலுள்ள அனை

வரும் - ஜப்பானிலுள்ள அனைவரும் - இந்தச் சுயராஜ்யம் பெற்றிருக்கிறாரா? ஞான சுயராஜ்யம் பெற்ற தேசத்துக்குப் போர்வீரர் வேண்டுவதில்லை; சேவகர் வேண்டுவதில்லை; காப்பே வேண்டுவதில்லை. 'வாயால் பேசலாம்; எழுத்தால் எழுதலாம். இது முடியுமா?' என்று சில நண்பர் எள்ளி நகையாடுகிறார். ஆகாயத்தில் பறந்தும் தண்ணீரில் மூழ்கியும் உயிர்களை வருத்தும் அறிவை, நாம் கூறும் அரசியல்வழிச் செலுத்தினால் ஏன் முடியாது? மனங்கொண்டால் மனிதன் எல்லாஞ் செய்யலாம். ஞான சுயராஜ்யம் பெற்ற முனிவரர் வழியில் தோன்றிய நம்மவரே ஞான அரசியலை வெறுக்கிறாரெனில், ஏனையோர் அதை வெறுப்பதைக் குறித்து நாமென்ன கூறுவது? ஒரு கூட்டத்தார் காந்தியடிகளின் அந்தண அரசியலைக் குறைகூறினும், ஏனையோர் அதன் நுட்பத்தைச் சிந்தித்துச் சிந்தித்து உண்மை தெளிந்து உலகத்துக்கு உழைப்பாராக.

காந்தியடிகள் சத்தியாக்கிரகம் ஒடுங்காதென்பதற்கு அகாலியர் செயலை எடுத்துக்காட்டாக உலகங் கொள்ளல் வேண்டும். அகாலியர் சீக்கியர். சீக்கியர் என்றால் சிங்கங்கள் என்பது பொருள். அன்னார் அடிபட்டும், உதைபட்டும், அறைபட்டும், மண்டைகள் உடையப்பெற்றும், வேறுபல உறுப்புக்கள் சிதறப்பெற்றும் நிலைகலங்காது பொறுமையை நெகிழவிடாதிருப்பது சத்தியாக்கிரகத்தின் வெற்றியைப் புலப்படுத்துகிறது. இன்னும் மூர்க்கசக்தி கிளம்புகிற இடங்களிலெல்லாம், ஆன்மசக்தி எழும்புமென்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு பல இடங்களில் ஆன்ம சக்தியின் உண்மை வெளிவருமானால் உலகம் அதைப் பற்றவே முயலும். லாயிட் ஜார்ஜ் போன்றவரும் காந்தியடிகள் சீடராயினும் ஆவர். ஆகவே, உலகத்துக்கே நன்மை செய்யும் பழைய அந்தண அரசியலை வளர்க்கவந்த பெரியார் சொல்வழி நிற்க முயலல்வேண்டும். அந்தண நிலையை வேறாகவும் அரசியலை வேறாகவும் இந்திய மக்கள் கருதலாகாது.

பாரதப் புதல்வர்களே! நீங்கள், அந்தணர் - முனிவர்- அன்பர் - பரம்பரையில் வந்தவர்கள். உங்கள் பரம்பரை கள்ளருடையதன்று. உங்கட்கு உரியது அந்தணநிலையே. அந்நிலையில் நிற்க முயலுங்கள். உங்களுக்குக் கடவுள் வேண்டுமா? பிசாசு வேண்டுமா? கடவுள் வேண்டுமானால் சாந்தியைத் தேடுங்கள்; சாந்தியடையுங்கள். (29-9-1922)

## எவர் கடமை?

சகோதரிகளே! சகோதரர்களே! சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; நமது உலக வாழ்வை ஆராயுங்கள். நாம் எங்கே இருந்து வந்தோம்? ஏன் பிறந்தோம்? நாம் இறக்கப்போகிறோமா? என்றும் இருக்கப்போகிறோமா? இக்கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அவைகளுக்குப் பதில் உங்கள் உள்ளத்துள்ள ஒரு பொருள் இறுக்கும்.

உலகம் நாடோறும் மாறுதலடைந்து வருகிறது. மரங்கள் வளர்கின்றன; சாய்கின்றன. விலங்குகள் பிறக்கின்றன; சாகின்றன. மனிதனும் பிறக்கிறான்; இறக்கிறான். தாவர முதல் மனிதன் ஈறாக உள்ள பொருள்களெல்லாம் தோன்றி மறைவதைக் கண்கூடாகக் காண்கிறோம். இறப்பும் பிறப்பும் இவ்வுலகில் என்றும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இறப்பு நிற்குங் காலமும் பிறப்பு நிற்குங் காலமும் உண்டோ என்னும் ஆராய்ச்சியும் உலகத்தில் நடைபெறுகிறது. உலகத்தில் சின்னாள் வாழ்ந்து மறையும் மக்கள் நினைப்பனவும் பேசுவனவும் செய்வனவும் அளப்பரியனவாம். மனிதன் ஆகாயக்கோட்டையைக் கட்டிக் கட்டி அழிகிறான். எம்மனிதனும் சில குறைகளை உடையவனாகவே வாழ்கிறான். குறையின்றி வாழும் மக்களைக் காண்டல் அருமை.

குறையுடைய மனிதன் தன் குறையை நிறைவு செய்தற்கு எண்ணாத எண்ணங்களை எண்ணி எண்ணி ஏங்கி முடிவில் இறந்துபோகிறான். உலகத்தில் ஒவ்வொரு மனிதன் எண்ணும் எண்ணம் ஆகாயம்போல் விரிந்து நிற்கிறது. இவ்வளவு எண்ணங்களை எண்ணும் இவன் எங்கே செல்கிறான்? அந்தோ!

உலகத்தில் மனிதன் எதற்காகப் பிறந்தான்? வீணான எண்ணங்களை எண்ணி எண்ணி இறந்துபடவோ? இறந்துபடவே மனிதன் பிறந்தான் என்று சொல்லல் முடியாது. வேறொரு காரணத்துக்காகவே மனிதன் பிறக்கிறான். அக்காரணத்தை ஆராய்ந்து காண்டல்வேண்டும். அவ்வாராய்ச்சி செய்து காரணங் கண்ட முன்னோர் வரலாற்றையும், அவர்தம் அநுபவ மொழிகளையும் நோக்கல்வேண்டும். புத்தர், கிறிஸ்து, மகம்மது, திருவள்ளுவர் முதலிய பெரியோர் உலகத்துக்கு என்ன அறிவுறுத்தி யிருக்கிறார்? 'மனிதன் மரம்போல வளர்ந்து வாழ்வதற்குப் பிறக்கவில்லை' என்னும் கருத்தைப் பல முகமாகக் காலதேச வர்த்தமானத்துக்கேற்றவாறு அவர் வெளியிட்டுள்ளார். அவர் கருத்துவழி நடந்தால் மனிதன் தன் பிறப்பு நோக்கத்தை உணர்வான்.

மனிதன் உலகத்தில் பிறந்து வளர்ந்து வருங்கால் அவனைக் கெடுப்பன இரண்டு. ஒன்று ஆசை; மற்றொன்று பொறாமை. இவை யிரண்டும் மனித வாழ்வையே குலைத்து வருகின்றன. இவை மனிதனது பிறப்பு நோக்கத்தை அழிக்கின்றன. ஆசைக்கு அளவேயில்லை. அது கூடாதவழிப் பொறாமை கிளம்பி வாழ்வை நாசமாக்குகிறது. இவைகளினின்றும் வேறு பல தீக்குணங்கள் பிறக்கின்றன. நாள்தோறும் மனிதன் இத் தீக்குணங்களுக்கு இரையாகிறான். இவைகளுக்கு இரையாகும் மனிதன் எங்ஙனம் தன் பிறப்பு நோக்கத்தை நிறைவேற்ற வல்லவனாவன்? அவனுக்கு இன்பம் துன்பமாகவும் துன்பம் இன்பமாகவும் காணப்படுகின்றன. ஆசையும் பொறாமையும் மனிதக் குலத்தை அலைத்துவருந் தன்மையை என்னென்று வருணிப்பது?

முன்னை நாளில் ஆசையும் பொறாமையும் தனித்தனி ஆளை வருத்தி வந்தன. நாளடைவில் அவை தேசங்களை வருத்துவனவாயின. இப்பொழுது ஆசையும் பொறாமையும் வல்லரசுகளை ஆள்கின்றன. அவைகளின் வழி உலகம் ஆடுகிறது. அறிவும் அன்பும் உலகத்தை ஆள்வதற்குப் பதிலாக ஆசையும் பொறாமையும் அதை ஆள்கின்றன. ஆசைக்கும் பொறாமைக்கும் அதிதேவதையாக உள்ள சாத்தான் அரசு இதுபோழ்து' உலகத்தில் நடைபெறுகிறது. கடவுள் அரசு என்று வருமோ தெரியவில்லை. 'அரசு எவ்வழி அவ்வழி குடிகள்' என்னும் பழமொழிப்படி குடி மக்களும் சாத்தான்வழி உழல்கிறார்கள். சாத்தான் ஆட்சி - சாத்தான் நீதி - சாத்தான் கல்வி - இப்பொழுது உலகத்தை இடர்ப்படுத்துகின்றன. சாத்தான் ஆட்சியைக் கொலையாட்சியென்று கூறலாம். ஆயுதபலத்தையே அவ்வாட்சி நாடும். ஆன்மபலத்தை அது நாடவே நாடாது. சாத்தான் ஆட்சியில் வாழுங் குடிமக்கள், தெய்வத்தை மறந்து, தங்கள் உலக வாழ்வை நிலைபேறாகக் கருதி, ஆசையாலும் பொறாமையாலும் அலைக்கப்பட்டுப், பிறரைத் துன்புறுத்தித் தாங்கள் வாழவே கருதுவார்கள். இப்பொழுது உலகம் இவ்வழியில் உழல்கிறது.

இப்பொழுது உலகத்தில் எவர் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்? மேல்நாட்டாரல்லரோ? உலகத்தின் பெரும் பாகத்தை ஆள்வோர் அவரேயாவர். அவர் ஆசை, பொறாமை என்னும் இரண்டையும் தமக்குரிய பூஷணங்களாக அணிந்திருக்கிறார். ஆசையும் பொறாமையும், கீழ்நாட்டிற் றோன்றிய புத்தர் - கிறிஸ்து - மகம்மது - திருவள்ளுவர் முதலிய பெரியோரால் உதையுண்டு, நிற்க இடமின்றித் தவித்து, மேல்நாட்டில் குடிபுகுந்து, ஆங்குள்ள மக்களை மணந்துவிட்டன போலும்! மேல்நாட்டாரும் மக்களே யாவர். அவரும் நம் சகோதரரே யாவர். ஆனால் அவர் ஆசை, பொறாமை என்பனவற்றின் அதிதேவதையாகிய சாத்தானுக்கு அடிமைகளாயினர்.

அவரவர்க்குக் கடவுள் அளித்த தேச அளவோடு அவ ரவர் நிறைவுகொள்வது அறம். பிற தேசங்கள்மீது ஆசை கொண்டு, அவைகளைப் பிடித்தாள்வது இயற்கையுடன் மாறு படுவதாகும். பிற தேசங்களைப் பற்றவேண்டி அடிக்கடி போர் புரிவதும், அப்போரின் பொருட்டுக் கருவிகள் செய் வதும் இயற்கை நோக்குக்கு இடர் செய்வதாகும். கடவுள் நினைவு உடையவர், தம் தேச அளவோடு நின்று, தம் பிறப்பு நோக்கத்தை யுணர்ந்து, அதை நிறைவேற்ற வேண்டிய காரியங்களைச் செய்வர். ஐரோப்பாவில் சாத்தான் ஏவுத லால் நடைபெற்ற மகாயுத்தம் முடிந்த பின்னராவது அங்கே சகோதர நேயம் ஏற்பட்டதா? இல்லையே! ஒவ்வொரு தேசத்தாரும் உருமிக்கொண்டே தம் மூர்க்க சக்தியை வளர்க்க மேலும் மேலும் முயன்று வருகிறார். மேல்நாடு இப்பொழுது பின்னையொரு போருக்கு அடிகோலி வரு கிறது. இன்னும் எத்துணைநாள் மேல்நாடு இவ்வழிபற்றி யொழுகும்?

மேல்நாட்டார் தமக்குள் சண்டை செய்துகொள்வ தோடு, மூர்க்க சக்தியை வெறுக்கும் வேறு தேசங்களையும் தம் கீழ்ப்படுத்தி வருகிறார். மேல்நாட்டார் மூர்க்க சக்தியால் செல்வாக்குப் பெற்றுவருவதைக் கண்ட ஜப்பான் முதலிய கீழைத் தேசங்களும், சாத்தானுக் கெளியனவாகி, மேல் நாட்டு வழியைப் பின்பற்றுகின்றன. ஜப்பான் பௌத்தர் பெயரைச் சொல்வதையும், மேல்நாடு கிறிஸ்து பெயரைச் சொல்வதையும் விபசாரி கற்பைப்பற்றிப் பேசுவதற்கு ஒப் பிடலாம். கீழ்நாடும் மேல்நாட்டைப் பின்பற்றிக் கெட்டு வருகிறது. மேல்நாடு திருந்திச் சன்மார்க்கத்தைப் பற்றி நடக்குமாயின், உலகத்தில் சாத்தான் நெறி குன்றிக் கடவுள் நெறி வளரும்.

மேல்நாட்டாரைத் திருத்துங் கடமையைக் கீழ்நாடு ஏற்றுக்கொள்ளல் வேண்டும். கீழ்நாட்டின் உயிர் நிலையாகிய இந்தியா அக் கடமையை ஏற்று நடத்தல் தகுதி. இந்தியா இப்பொழுது மேல்நாட்டவர் இலக்கணத்தை நன்கு உணர்ந் திருக்கிறது; அவர் குணஞ் செயல்களையும் நன்கறிந்

திருக்கிறது ; அவர் ஆசை பொறாமை வாய்ப்பட்டு இடர்ப்படு வதையும் நன்கு தெரிந்திருக்கிறது. ஆசையையும் பொறாமை யையும் அடிப்படையாகக் கொண்ட ஒருவிதப் பேய் நாக ரிகக் கடலில் மேல்நாட்டார் மூழ்கிக்கிடக்கிறார். அக் கடலி னின்றும் அவர் தெய்விகக் கரையில் ஏறுவாராயின், அவர் நன்மக்களாவார். மேல்நாட்டு மக்களை வெறுத்தல் பிழை ; பெரும் பிழை. அவர்மீது பகைமை கொள்வதுந் தவறு. அவர்மீது இரக்கங்கொண்டு அவரைப் பிடித்தாட்டும் தற்கால நாகரிகப் பேயைப் பலியிட்டால், அவர் திருத்த முறுவர்.

நம் முன்னோர் ஆசை பொறாமை ஆகியவற்றை வளர்ப் பதற்குப் பதிலாக இரக்கத்தை வளர்க்குமாறு நமக்கு அறி வுறுத்தி யிருக்கிறார். இரக்கத்தை நமக்குத் தெரிந்த ஒருவர் மீது செலுத்துவதைப் பார்க்கிலும், நமக்குத் தெரியாத மற்றவர்மீது செலுத்துவது நலம். அதை ஒருவர் இருவர் மீது செலுத்துவதைப் பார்க்கிலும், ஒரு குடும்பத்தார்மீது செலுத்துவது நலம். ஒரு தேசத்தார்மீது இரக்கஞ் செலுத்து வது பெருநலம். அதனினுஞ் சிறந்தது உலகத்திலுள்ள அனைவர்மீதும் இரக்கஞ் செலுத்துவது. இஃது இந்தி யாவின் அறம்.

தற்கால மேல்நாட்டார் ஆசைக் குழியில் வீழ்ந்து தடுமாறித், தமது ஆன்ம சுகத்துக்கும், மற்றவர் லௌகிக சுகத்துக்கும் இடையூறு செய்துவருவதை இந்தியர் கண்டுங் கேட்டும் வாளா கிடக்கலாமோ ? வெள்ளை உலகம் தற்காலப் பேய் நாகரிக எரியால் தகிக்கப்படும் இவ்வேளையில், இரக்கம் என்னும் தண்புனலால் அவ்வெறியைத் தணிவித்து அவ் வுலகை ஆட்கொள்ள இந்தியர் முந்துதல் வேண்டும். இத் தொண்டைத் தாதாபாய், திலகர் பெருமான் முதலியோர் காலத்துக் கேற்றவாறு செய்தனர். காந்தியடிகள் இப் பொழுது மேல்நாட்டார்மீது கருணைபொழிந்து வருகிறார். மேல்நாட்டவர் தமது தவறுதலை நாளடைவில் உணர்ந்து ஆத்மஞானிகளாவர். ஆதலால் மேல்நாட்டவரைக் காப்பது எவர் கடமை என்பதை உன்னிப் பார்க்க.

“ அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த வுலக ரனைவரையுஞ்
சுகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திடவவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற் கென்றே யெனையிந்த
யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனே ’

‘ துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே
தூக்கத்தை விடுகின்ற துணையொன்று கருதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையுந் தவிர்ந்திட விரும்பீர்
பன்மார்க்கஞ் செல்கின்ற படிற்றுள மடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்
என்மார்க்க மெச்சுகம் யாதுநும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே ’

“ பண்ணாத தீமைகள் பண்ணுகின் றீரே
பகராத வன்மொழி பகருகின் றீரே
நண்ணாத தீயின நண்ணுகின் றீரே
நடவாத நடத்தைகள் நடக்கவந் தீரே
கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைந்தே
கண்ணார நீர்விட்டுக் கருதறி யீரே
எண்ணாத தெண்ணவு நேருமோர் காலம்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே ’

“ அரைசெலாம் வழங்குந் தனியர சதுகின்
அருளர செனவறிந் தனன்பின்
உரைசெய்கின் றருண்மே லுற்றபே ராசை
உளமெலா மிடங்கொண் டெந்தாய்
வரைசெயா மேன்மேற் பொங்கிவாய் ததும்பி
வழிகின்ற தென்வசங் கடந்தே
இரைசெய்யென் றுவி தழைக்கவவ் வருளை
ஈந்தரு ளிற்றையிப் போதே ’ —இராமலிங்க சுவாமிகள்

(3–6–1921)

# நீத்தார் பெருமை

பார்ப்பாரப்பட்டி அழைப்பு அடிக்கடி வருவதுண்டு. இம்முறையே இணங்குதல் நேர்ந்தது. இப்பொழுது 'நீத்தார் பெருமை' என்னும் பொருள்பற்றிப் பேச யான் அழைக்கப்பட் டிருக்கிறேன்.

'நீத்தார் பெருமை' என்னுமொரு தலைப்புத் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் பாயிரத்துள் இருக்கிறது. அத்தலைப்பின் கீழுள்ள பாக்களுக்கு உரை கூறுமுகத்தான் யான் சொற்பொழிவு நிகழ்த்தப்போவதில்லை. ஆனால் 'நீத்தார் பெருமை'யின் இறுதியிலுள்ள 'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுக லான்' என்னும் பாட்டைப் பீடிகையாக்கொண்டு யான் பேசப்போகிறேன்.

நீத்தார் பெருமை என்பதை நான் இருகூறுபடுத்திக் கொள்கிறேன். ஒன்று நீத்தார் யாவர் என்பது; மற்றொன்று அன்னார் பெருமை யாது என்பது.

நீத்தார் யாவர் எனில் உலக ஆசையினின்றும் நீத்தாரே நீத்தார் என்று பொதுவாக நமது தேசத்தில் சொல்லப்படுவது வழக்கம். உலக ஆசைக்கூறுகள் பலவகை. அவைகளை மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை என்று தொகுத்துக் கூறலுமுண்டு. எல்லா ஆசைகளினுங் கொடியது பெண்ணாசை என்றும், அவ்வாசையை அறுத்தால் மற்றைய ஆசைகளை ஒழித்தலாகும் என்றும் சொல்வோருமுளர். மண் பொன் பெண் மூன்றையும் பற்றிய ஆசையைத் தொலைத்தவரே நீத்தார் என்று ஞான நூல்கள் சொல்வது உங்கட்குத் தெரியும். ஆசையை நீத்தல் என்பதற்கும், பொருளை நீத்தல் என்பதற்கும் வேற்றுமையுண்டு. ஆகவே, மண் முதலிய மூன்றையும் நீப்பது, நீத்தலாகாதென்க. 'மண் பொன் பெண் மூன்றும் மாயை. அவைகளை நீத்தல் வேண்டும்' என்று எழும் எண்ணத்தினின்றும் நீப்பது அதாவது விடுதலையடைவது நீத்தல் என்று யான் சொல்கிறேன்.

'இஃதென்ன! முற்றும் மாறுன கொள்கை' என்று உங்களிற் சிலர் கருதலாம். மண் பொன் பெண் ஆகிய மூன்றன்கண் ஆண்டவன் இருக்கிருனு இல்லையா என்பதைத் தயைசெய்து சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவன் எங்கும் இருப்பவன். மண் பொன் பெண்ணிலும் ஆண்டவனிருக்கிருன். அங்ஙனமாக, மண் பொன் பெண்ணை ஏன் வெறுத்தல் வேண்டும்? அவைகளை மாயையாகக் காட்டுவது அறியாமை. அவ்வறியாமையினின்றும் நீத்தலே நீத்தலாகும்.

அறியாமையைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டு. அறியாமையை உள்பொருளென்று சிலர் கூறுப; இல்பொருளென்று சிலர் கூறுப. இது நூல்வாதம். நூல்வாதம் இங்கு வேண்டுவதில்லை. அறியாமையை இல்பொருளெனக் கூறுவோரும் விவகாரத்தில் அதை உள்பொருளென்று கூறுகிருர். யான் விவகார உலகில் வாழ்பவன். எனக்கு அறியாமை உண்டு. எனக்கு அறியாமை உள்பொருளே. அதனின்றும் விடுதலை யடையவே யான் முயலல்வேண்டும்.

அறியாமை எப்படி யிருக்குமென்று சிலர் கருதலாம். குரு சீடனுக்குப் பொருளுண்மை உணர்த்தும்வரை சீடனுக்குப் பொருளுண்மை விளங்காமலிருக்கிறது. பொருளுண்மை விளங்காதவாறு மறைப்பது அறியாமை என்பது. ஒன்றையொன்ருகத் திரித்துக் காட்டுவது அறியாமை. பொருளல்லவற்றைப் பொருளாகக் காட்டுவது அறியாமை. மனிதனிடத்துள்ள எல்லாப் பொல்லாமைக்குங் காரணமாக நிற்பது அறியாமை. அறியாமை தொலைந்தால் மெய்ப் பொருள் புலனுகும்.

மண் புனல் தீ காற்று வானம் திங்கள் ஞாயிறு உயிர் என்னும் எட்டினும் ஆண்டவன் கலந்து நிற்கிருன். அறியாமையினின்றும் விலகியவனுக்கு அக்கலப்பு நன்கு புலனுகும்; விலகாது கிடப்போனுக்கு அவை மண் முதலிய பொருளாகவே தோன்றும். அறியாமையே எல்லாத் துன்பங்கட்கும் மூலமா யிருத்தலால், அதைத் தேய்க்க முயலல் வேண்டும். அறியாமை தேய்ந்தொழிந்தால் மெய்யறிவு இயல்பாக

மிளிரும். ஆகவே, அறியாமையினின்றும் விலகினவனே நீத்தோனுவன் என்க.

'உலகம் மாயை, அதை நீத்தல் வேண்டும்' என்னும் எண்ணம் மாறி, 'எல்லாஞ் சிவமயம்' என்னும் எண்ணம் பெறுதற்குரிய வழி என்னே என்பதை ஆராய்ந்து தெளிய வேண்டுவது நமது கடமை. ஏட்டு நூல்களைப் படிப்பதாலும், காவியுடுத்தல் முதலிய கோலங்களாலும், காட்டுக்கு ஓடுவதாலும் மனத்துக்கணுள்ள ஆசைநோய் போகாது. மனமாசு அகலவேண்டுமானல், மனிதன் இல்லற மேற்கொண்டொழுகல் வேண்டும். 'மனத்தின்கண் மாசிலனாதல் அனைத்தறம்' என்று அறவியல்பு அறிவுறுத்திய திருவள்ளுவனார், பின்னை இல்லற நெறியின் இன்றியமையாமையையும், அதற்குரிய வாழ்க்கைத்துணை நலத்தையும், புத்திரப் பேற்றையும் முறை முறையே விளந்து கூறிச் செல்லுதல் காண்க.

உலகில் இல்லறநெறியில்லையேல் பெரியோர் தோற்றத்துக்கே வழியில்லாமற் போய்விடும். மகாத்மா காந்தியின் தாய் தந்தையர் இல்லறம் நடத்தாதொழிந் திருப்பரேல் இவ்வுலகம் அவரைக் கண்டிருக்குமோ? ஆதலால் அன்பர் அருளாளர் பெரியோர் தோன்றுதற்கு நிலைக்களனுயுள்ள இல்லறம் இன்றியமையாததென்க.

இல்லறம் படிப்படியாக ஒருவனது மாசையும் ஒருத்தியினது மாசையும் துடைக்கவல்லது என்பது கவனிக்கத்தக்கது. மனிதனது தன்னலம் இல்லறத்தில் எவ்வாறு பலியாகிறதென்பதுங் கவனிக்கற்பாலது. ஒருவன் ஒருத்தியோடு வாழ்தற்கு முன்னர்ப் பெரிதும் அவன் தன்னையே நேசிக்கிறுன்; மனைவியோடு வாழுநாள் தொட்டுத் தன்னைப்போலத் தன் கிழத்தியையும் நேசிக்கத் தொடங்குகிறுன்; பின்னை அந் நேசம் பிள்ளைகளிடத்தில் பரவுகிறது; பின்னைப் பிற உயிர்களிடத்தில் பரவுகிறது. உயிர்களை நேசிக்கும் உள்ளத்தில் தன்னலம் ஏது? திருவள்ளுவனார் வகுத்துள்ள அதிகார முறை வைப்பை நோக்குக. அறச் சிறப்பு, இல்லறம், வாழ்க்கைத் துணை நலம், புத்திரப்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல்

முதலிய அதிகாரங்களின் வைப்பு முறையை நோக்குக. ஒருவன் ஒருத்தியோடு வாழாது கிடப்பது இயற்கைக்கு மாறுபாடு. சுருங்கக்கூறின் தன்னலக்கேட்டுக்கும், அன்புப் பெருக்குக்குங் கருவியாயிருப்பது இல்லறம் இல்லறமே யாகும்.

இல்லறத்துக்குரிய பெண்ணைப் பழிப்பதும், அவ ளாசை நீத்தால் முத்தி யடையலாம் என்று நினைப்பதும் அறியாமை. கடவுளது இயற்கைப் படைப்பாகிய பெண்ணை எவ்வாறு நீத்தல் இயலும்? தாவரமுதல் மக்கள் ஈறாக உள்ள எல்லாப் பொருளும் ஆண் பெண் வடிவாயிருக்கின்றன. அவைகட்குக் காரணராயுள்ள கடவுளும் ஆண் பெண் வடிவாயிருக்கிறார். இங்ஙனமாக ஒருபாதி இயற்கையை எப்படி நீப்பது ? நீப்பது வாழ்வைக் குலைப்பதாகும்.

'மண்ணாசை தன்னில் பொன்னாசை தன்னில் பெண்ணாசை நீத்தல் அரிதே பெரியோர் தமக்கும்' என்று ஆன்றோர் கூறியதென்னை என்று சிலர் கேட்கலாம். பெண் ணாசை துறத்தல்வேண்டும் என்பதற்கு வண்டி வண்டியாகப் பாட்டுகள் திரட்டுதல் கூடும். பெண்ணாசை என்பதில் ஆசை எவரிடத்திலிருக்கிறது என்பதைச் சிந்தியுங்கள். ஆசை பிறக்கிற இடம் ஆண்மகன் மனமன்றோ ? அம்மனந் திருந்தினால் பெண் மாயையாகத் தோன்றுவளோ ? அவள் தெய்வமாகவன்றோ தோன்றுவள் ? பெண்ணை மாயையாகக் கருதும் குற்றம் ஆடவன்பாலதே.

மனமாசகற்றப் பெண்ணை விடுத்துக் காட்டுக்கோ மலைக்கோ சிலர் ஓடுகிறார். எங்கே ஓடினாலும் காமஞ் சுடா தொழியுமோ? பெண்ணைக் காமப்பொருளாகக்கருதிக்கொண் டிருக்குமட்டும் மனமாசகலாது. அம் மனத்தோடு எங்கு வாழ்ந்தாலும் மனிதன் காமத்தால் எரிக்கப்படுவன். மனிதன் பெண்ணைக் காமப்பொருள் என்று எண்ணும் எண்ணத்தி னின்றும் நீத்தல்வேண்டும். அவ்வாறு நீத்தாரே நீத்தாராவர். தெய்வ வடிவாய பெண்ணையும் பிறவற்றையும் மாயையெனக் கருதி அவைகளை நீப்பது நீப்பதாகாது. பொருளல்லவற்றைப்

பொருளாகக் காட்டும் அறியாமைக் கட்டினின்றும் துறப்பதே துறவு.

மகாத்மா காந்தியைப் பாருங்கள். மகாத்மா காந்தி உலக நடுவில் - மண் பொன் பெண்ணடுவில் - வீற்றிருக்கிறார். அவர் பெண்மக்களைக் கண்டால் காய்ந்து விழுவதில்லை; 'மாயை மாயை' என்று ஓடுவதில்லை. அவர் பெண்மக்களை அன்புத் தெய்வ வடிவாகக் காண்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு உங்கட்குத் தெரியும். இயற்பகையார் சிறுத்தொண்டர் முதலிய செயற்கருஞ் செயல்செய்த தீரர்கள் பெண்ணைவிடுத்துக் காட்டுக்கோடினார்களில்லை. அவர் இல்லறத்திருந்து எல்லா உயிரையுஞ் சிவமாகக் கண்டவரேயாவர்.

ஆண்மக்களுடைய பாழ்மனம் - பேய்மனம் - பெண்ணுலகைக் கெடுப்பதை ஈங்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. ஆண்மக்கள் அறியாமை வேசையர் கூட்டமாக உலகில் பரிணமித்திருக்கிறது. இக் கருத்துப்பட மகாத்மா காந்தி பாரிஸால் வேசையர் முன்னிலையில் பேசியிருக்கிறார். ஆதலால் சகோதரர்களே! நீத்தார் என்றால் எல்லாவற்றையும் விடுத்து ஓடுவோர் என்று கொள்ளற்க. உலகை மாயையெனக் கருதும் அறியாமையினின்றும் நீத்தவரே நீத்தாராவர். அவர்க்கு எல்லா உயிருந் தம்முயிர்போல் தோன்றும். அவரே அந்தணர்; அறவோர். இக் கருத்துப்பற்றியே திருவள்ளுவனார் 'நீத்தார் பெருமை' என்னும் அதிகார இறுதியில் 'அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுக லான்' என்று அருளிச் செய்துள்ளார்.

இனி நீத்தார் பெருமை கூறப் போதிய காலமின்மை குறித்து வருந்துகிறேன். சுருக்கமாகச் சில உரைகளால் அப்பெருமை புகன்று எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். திருவள்ளுவர் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று நீத்தார் பெருமையில் ஓதியிருக்கிறார். பெரியர் என்பதற்குப் பெருமையுடையார் என்பது பொருள். பெருமையாவது எது? செயற்கருஞ் செயல் செய்வது.

செயற்கருஞ் செயல், குண்டு பீரங்கி செய்வதா? ஆகாய விமானம் விடக்காற்று முதலியன செய்வதா? அன்று அன்று. உலகை மாயையெனக் கருதுங் கருத்தினின்றும் நீத்து, எல்லாங் கடவுள் மயம் என்னுங் கருத்துப் பெற்று, எவ்வுயிரையும் தம்முயிர்போல் பாவித்து, அவர்க்கு நலஞ் செய்வது செயற்கருஞ் செயலாகும். அச் செயற்கருஞ் செயல் நீத்தார் பெருமை. இந்நீத்தார், பிறர்க்கினிது செய்வதோடு, பிறர் தம்மைத் துன்புறுத்த நேரும்போதும், பழிக்குப் பழிவாங்கும் உளங்கொள்ளாது, அன்புளங்கொண்டு, அவர் துன்பத்தைப் பொறுத்து அவர்க்கும் நலஞ்செய்வார். இது நீத்தார் பெருமை. (11–9–1925)

# இதிகாச புராணங்கள்

இதிகாச புராணங்கள் நமது நாட்டின் புறவளர்ச்சிக்கும் அகவளர்ச்சிக்கும் உறுகருவிகளா யிருந்தன. இப்பொழுது அவைகள் எக்கருவிகளா யிருக்கின்றன?

இதிகாச புராணங்களால் நாட்டுக்கு விளைந்துவந்த நலங்கள் பல. அவைகள் இந்தியாவை ஆண்டுவந்தன என்றுங் கூறலாம். அவைகளின் ஆட்சி குன்றிய நாள்தொட்டு நாட்டின் நலங்களும் குன்றின. இப்பொழுது நாட்டில் காந்தியடிகளின் உழைப்பால் பழைய உணர்வு தோன்றிவருகிறது. அவ்வுணர்வை வளர்க்குங் கருவிகளாகிய இதிகாச புராணங்கள்மீது எமது கருத்துச் செல்கிறது.

இதிகாச புராணங்களைப் பற்றிப் பலதிறக் கருத்துக்கள் உலவுகின்றன. 'இதிகாச புராணங்களா' என்று ஏப்பமிடுவோர் சிலர். 'இதிகாச புராணங்களா - குப்பை குப்பை' என்று ஒதுங்குவோர் சிலர். 'இதிகாசமாவது புராணமாவது பொய் பொய்' என்று எள்ளுவோர் சிலர். இந்நாளில் இதிகாச புராணங்களைப் போற்றுவோர் தொகை அருகியும் தூற்றுவோர் தொகை பெருகியும் வருகின்றன. இப்பொழுது

இதிகாச புராணங்கள் படும்பாட்டை என்னென்று வருணிப்பது? அந்தியேட்டிகளிலும், வேறு பல கருமங்களிலும் இதிகாச புராணங்கள் கூலிக்குப் படிக்கப்படுகின்றன. இக்காட்சி கண்டு இதிகாசங்கள் ஏங்குகின்றன; புராணங்கள் புலம்புகின்றன. அவைகளின் அழுகையொலி நாட்டுணர்ச்சியுடையார் செவிக்கு எட்டுகிறது. நாட்டின் துறைகள் பல வற்றுக்கும் உற்றுள்ள ஊறு, இதிகாச புராணங்களுக்கும் உற்றுள்ளது.

இதிகாச புராணங்களை எள்ளி நகையாடும் நண்பர்கள், அவைகளை நன்கு ஆராய்ந்தார்களோ இல்லையோ என்பது ஐயம். அஃது அவர்கள் மனச் சான்றுக்கே தெரியும். ஒரு பொருளைப் போதிய அளவு ஆராயாது, அதைப்பற்றி அபிப்பிராயங் கூறுவது அறிவுடைமையாகாது. இதிகாச புராணங்களை முற்றும் ஆராயாமலே இதுகாலைப் பலர் அவைகளை இகழ்கிருர். இழிவான காமக் கிளர்ச்சியை எழுப்பும் சிறு நூல்களை வாசித்துப் பொழுதுபோக்கும் இக்கால 'அறிஞருக்கு' இதிகாச புராணங்கள் காடு முரடாகத் தோன்றுவது இயல்பே. பெரும் புலவர் உழைப்பு இதுகாலை எவ்வாறு பயன்படுகிறது. அந்தோ! காலமே!

இதிகாச புராணங்களிலுள்ள சில கதைகளைக்கொண்டே அவைகளைப் பொய் என்று சிலர் ஒதுக்குகிருர். இதிகாச புராணங்கள் கதைகளை மாத்திரம் அறிவுறுத்த எழுந்த நூல்களல்ல. அவைகளில் மெய்க் கதைகளுமுண்டு; பொய்க் கதைகளுமுண்டு; பலவகைத் தத்துவங்களை விளக்கும் புனைந்துரைகளுமுண்டு. ஆராய்ச்சியில் பழுத்த அறிஞர் 'இது மெய்ப் புராணம், இது பொய்ப் புராணம், இது புனைந்துரைப் புராணம்' என்று புராணங்களை வகுத்துக்கொள்ளுதல் கூடும். கதைப்பற்று ஒன்றே கொண்டு, இதிகாச புராணங்களைப் பண்டைக் காலத்தினர் வாசிப்பதில்லை. கதை ஒரு கூறு. கதைகள் மெய்யாயினுமாக; பொய்யாயினுமாக. ஒருவர்க்கு மெய்யாகத் தோன்றுவது மற்றொருவர்க்குப் பொய்யாகத் தோன்றும். ஒருவர்க்குப் பொய்யாகத் தோன்றுவது இன்னொருவர்க்கு மெய்யாகத் தோன்றும்.

ஆதலால் கதைகளுக்காக மட்டும் இதிகாச புராணங்களைப் படித்தல் கூடாது. கதைகளைப் பற்றிய வாதத்தை நாம் ஈண்டுத் தொடங்கப்போவதில்லை.

இதிகாச புராணங்கள் பெரிதும் பாக்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவை பாக்களால் ஆக்கப்பட்டதன் நோக்கத்தைக் கூர்ந்து ஆராய்தல்வேண்டும். காகிதம் அச்சுத் தொழில் அந்நாளில் இன்மையால் இதிகாச புராணங்களும் பிறவும் பெரிதும் பாக்களாகப் பாடப்பட்டன என்று சிலர் சொல்வர். எளிதில் மனப்பாடஞ் செய்யும் பொருட்டு முன்னைநாளில் நூல்கள் பாக்களால் யாக்கப்பட்டன என்று வேறு சிலர் கூறுவர். உரைநடையில் இதிகாச புராணங்கள் எழுதப்பட்டிருப்பின் அவை எப்பொழுதோ இறந்துபட்டிருக்கும் என்று மற்றுஞ் சிலர் உரைப்பர்.

இந்நாளில் சில அறிஞர் இதிகாச புராணங்களை உரைநடைகளில் வரைந்து வெளிப்படுத்தி யிருக்கிறார். அவை இயற்கை இன்பமுணர்ந்த புலவர்க்கு விருந்தாவதில்லை. உரைச் செய்யுளுக்கும் பாச் செய்யுளுக்கும் வேற்றுமை உண்டு. உரைச் செய்யுள் சுவரிலடித்துள்ள சுண்ணம்பூ போன்றது. பாச் செய்யுள் சுவரில் எழுதப்பட்டுள்ள ஓவியம் போன்றது. முன்னது காண்போர் மனத்தைக் கவராது; பின்னது கவரும்.

பாக்களால் ஆக்கப்பட்ட இன்பக் குழவிகள் என்று இதிகாச புராணங்களைக் கூறலாம். உலகத்தில் பல இன்பத் துறைகளிருக்கின்றன. அவைகளுள் தலையாயது பாத்துறை. மண்ணில் ஒருவித இன்பம் உண்டு. பெண்ணில் ஒருவித இன்பம் உண்டு. காட்டில் ஒருவித இன்பம் உண்டு. நாட்டில் ஒருவித இன்பம் உண்டு. ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவித இன்பம் உண்டு. பாட்டிலோ எல்லாவித இன்பமும் உண்டு. பாட்டில் மண் பெண் குழந்தை காடு நாடு கடல் மலை ஆறு முதலிய எல்லாம் உண்டு.

பாட்டைப் பார்க்கப் பார்க்க மனங் குழைந்து குழைந்து இயற்கையோடு ஒன்றுபடும். என்றும் நிகழாத ஒருவித இன்பம் அதில் விளையும். அவ்வின்பத்தைப் பேரின்பம்

என்றுங் கூறலாம். பேரின்பத்தை அளிக்கவல்ல பாக்கள் மயமாக உள்ள இதிகாச புராணங்களோடு உறவுகொண்டு பார்த்தால் உண்மை விளங்கும். ஒரு தனியிடத்தில் ஒருவன் இருந்து இதிகாச புராணங்களை ஓதிவருவானாயின், அவன் எத்துணையோ உலகத்தில் யாத்திரை செய்பவனாவன். அவனது மனம், மண் புனல் தீ வளி வெளி திங்கள் ஞாயிறு உயிர் ஆகிய உலகங்களிலும், இவைகளின் வடிவாகவுள்ள இறையுலகிலும் சென்று சென்று இன்பம் நுகரும். நாவல்களை வாசித்து அவைகளிலுள்ள தூர்த்தரோடு கொஞ்சும் நேயரே! இதிகாச புராணங்களிலுள்ள இயற்கை அணங்கோடு பேச முயலலாகாதோ?

'இதிகாச புராணங்களில் பாஅழகு ஒன்றுதான் உண்டோ? வேறு பொருளும் உண்டோ?' என்று சிலர் வினவலாம். அவைகளில் வேறு பல பொருள்களும் உண்டு. அப்பொருள்கள் பாக்களென்னும் பளிங்கறையில் விளங்கிக் கொண்டிருக்கின்றன. பாக்கள் வாயிலாக இதிகாச புராணங்களைத் துருவி ஆராய்ந்தால், அவைகளில் காணும் பொருள்களுக்கு அளவும் உண்டோ? உடலின்பத்துக்கும் உயிரின்பத்துக்கும் வேண்டப்படும் பொருள்களைப் புராணங்களிற் காணலாம். அறிவின் உழைப்புக்குத் தக்கவாறு புராணங்கள் பொருளைக் காட்டும். ஆதலால், புராண ஆராய்ச்சிக்கெனச் சிறு சிறு கருவிநூல்களாம் உணவருந்தி, மதியைக் கொழுமைப்படுத்தல் வேண்டும்.

இதிகாச புராணங்களைத் திறந்ததும் முகத்தில் கடவுள் வாழ்த்துக்கள் பொலிகின்றன. முதலில் இதிகாச புராணங்கள் கடவுளைக் காட்டுகின்றன. கடவுளின் உருவநிலை, அருவநிலை, அருவுருவ நிலை, அவைகடந்த நிலை முதலியவற்றை வாழ்த்துக்கள் அறிவிக்கின்றன. கடவுள் துணைகொண்டு மேலே செல்லின் மலைச்சிறப்பு, ஆற்றுச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு முதலிய சிறப்புக்களைக் காணலாம். இப்பொழுது பெரும்பான்மையோர் இப்பகுதிகளைத் தள்ளிவிடுகிறார். அறிவு கொழித்துவிடுமென்பது இவர் கருத்துப்போலும்!

மலைகளையும் ஆறுகளையும் நாடுகளையும் நகரங்களையும் நம் புலவர்கள் பாக்களால் எழுதியுள்ள ஓவியத்தின் வனப்பை என்னென்று கூறுவேம்! இந்நாளில் நம்மவர் மலை ஆறு நாடு நகரம் முதலியவற்றை மறந்தமையாலன்றோ வயிற்றுக்கும் பாடுபடும் நிலை நேர்ந்திருக்கிறது !

மலையும் ஆறும் நாடும் நகரும் வாழ்விற்கு இன்றியமையாதன. இதிகாச புராணங்களில் வீணாக இயற்கைப்பொருள் வருணிக்கப்படவில்லை. புலவர் தமது உள்ளத்தில், இயற்கை வடிவான மலையையும் ஆற்றையும் கானையுங் கடலையும் நாட்டையும் நகரையும் தாங்கி, அவைகளையும் அவைகளிலுள்ள பொருள்களையும் பாக்களால் நமக்கு வழங்கியுள்ளார். அப் பாக்களுடன் உறவுகொண்டால், புலவர்பெற்ற இன்பத்தை நாமும் பெறலாம். மலை ஆறு முதலிய இயற்கையோடு வாழாத மக்கள், வாழ்வென்னும் இன்பத்தையிழந்து, நோய் வாய்ப்பட்டு மெலிந்து, குரங்கு பேய்வடிவம் பெற்று, வாழ்வின் நோக்கத்தை இழந்துவிடுகிறார்கள். இயற்கையோடு பழக இயலாத மக்கள் இதிகாச புராணங்களில் இயற்கையைப் பா வடிவாகக் கண்டாதல் இன்புறலாம். மலை ஆறு முதலியவற்றைக் கவனியாது வாழ்வோர் உடல் உரம் பெறாது மெலிவதுபோல அவைகளைப் பாவாகக் கண்டு மகிழாத அறிவும் உரம் பெறாது மெலிந்துபோகும்.

மலைகளைப்பற்றிப் புலவர் வருணிக்கும்போது அவைகளிலுள்ள பொருள்களையும், காடுகளையும், மரங்களையும், அவைகளைத் தவழும் மேகத்தையும், அவைகளினின்று பெருகும் அருவிகளையுங் காட்சிக்குப் புலப்படுவதுபோல அழகிய சொற்களால் எழுதுவர். ஆறுகளைப்பற்றிய வருணனை உள்ளத்தைக் கவரும். நாட்டைப்பற்றிப் புலவர் ஒழுங்காக ஓதியிருப்பதை ஈண்டு என்னென்று எழுதுவது ? இவைகளையெல்லாம் வருணித்துப் புலவன் நகரத்தைப் பாவில் இறக்கும்போது அவன் உள்ளம் எவ்வித இன்பத்தில் துளும்பும் என்பதைக் கூறவும் வேண்டுமோ ? வாழ்வுக்கு இன்றியமை

யாத மலை ஆறு முதலியவற்றைப் பாட்டால் காட்டும் இதிகாச புராணங்களை இகழ்வது அறியாமை.

இதிகாச புராணங்களில் மரங்களையும் செடிகளையும் கொடிகளையும் காணலாம். இவைகள் மனிதனை வளர்ப்பன அல்லவோ? நாரத்தை, கிச்சிலி, எலுமிச்சை, மாதுளை, புன்னை, சுரை, அவரை, காரை முதலியன வீடுகளைச் சூழ்ந்து பொலிவதாகப் புராணங்கள் புகல்வதை, ஒருபக்கம் மோட்டார் வண்டி ஓடிவர, மற்றொரு பக்கம் டிராம் வண்டி ஓடிவர, எதிரிலே குப்பை வண்டி முட்ட, பின்னே குதிரை வண்டி தாக்க, இவைகளின் சந்தடி காதுகளைச் செவிடுபடுத்த, தூசுகள் கண்களை மூட, துர்நாற்றம் மூக்கில் ஏற, வெம்மையால் நெற்றியில் வியர்வை சொரிய, காற்சட்டை கைச்சட்டை அணிந்து, கையில் நாவல் ஒன்று தாங்கி, வயிற்றுக்கு உத்தியோகசாலை நோக்கி ஓடும் இக்காலப் புலவர் இகழ்ந்து வேறென்செய்வர்? தற்கால நகரங்களில் நாரத்தை ஏது? எலுமிச்சை ஏது? காலையிலும் மாலையிலும் குப்பை வண்டிகளையும் குப்பைக் கூடைகளையும் காணலாம். தற்கால நகரத்தை நரகமென்று கூறுவதே இயல்புடைத்து. முன்னை வினையால் தற்கால நகரமென்னும் நரகத்தில் வீழ்ந்து வருந்தினும், பண்டைப் புராணங்களை ஓதியாவது அவைகளிலுள்ள இயற்கை இன்பத்தை நுகர்தலாகாதா? முப்பதுவயதுக்குள் குரங்கு முகம் பெறும் தற்கால நாகரிக மனிதர்களே! நூறு வயதாகியும் மன்மதனைப்போலிருந்த மக்களைப்பற்றிக் கூறும் இதிகாச புராணங்களைப் போற்றமாட்டீர்களா?

இதிகாச புராணங்களில் பெரிதும் ஆண்டவன் வழிபாடு பேசப்படுகிறது. வழிபாட்டின் திறத்தைப் பல அடியவர் சரித்திரங்களால் இதிகாசபுராணங்கள் அறிவுறுத்துகின்றன. இதிகாச புராணங்களில் ஒழுக்கத்தைப்பற்றிய சரித்திரங்கள் பல உண்டு; இல்லற துறவற மாண்பை விளக்குஞ் சரித்திரங்கள் இருக்கின்றன; வீரர் வரலாறுகள் ஓதப்படுகின்றன; நீதியும் தருமமும் நிரம்பிக் கிடக்கின்றன; தியாகத்தைப்பற்றிய கதைகளும் திகழ்கின்றன.

இதிகாச புராணங்கள் மனிதன் புறவாழ்வையும் அக வாழ்வையும் வளர்க்குங் கருவிகள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குவதொன்று. பண்டைக் காலத்தில் இதிகாச புராணங்களே நமது தேசத்தை வளர்த்துவந்தன. இதிகாச புராண தருமங்கள்வழித் தேசம் நடைபெற்ற காலத்தில் மக்கள் மிகவும் செழியர்களாக வாழ்ந்தார்கள். இதிகாச புராணங்கள் இழித்துக் கூறப்படும் இக்காலத்து வாழும் மக்கள் வயிற்றுக்கே வனவாசஞ் செய்கிறார்கள்.

தேசபக்தர்களே! இதிகாச புராணங்களின் நோக்கத்தை ஆராயுங்கள்; அவைகளில் கூறப்பட்டுள்ள பொருள்களைச் சிந்தியுங்கள்; உங்கள் மனம் இயற்கையிலும் இன்பத்திலும் திளைத்து நிற்கும். அவைகளின் பயனை நீங்கள் நுகர்ந்தால் உங்கள் உடலும் உயிரும் நலம்பெறும்.

(26–5–1922)

## வேள்வி

மனிதன் நிலை என்றும் ஒருபெற்றியா யிருப்பதில்லை. மனிதன் நிலை நாளுக்குநாள் வளர்ந்தே வருகிறது. இதற்குக் காரணம் என்னை? மனிதன்மாட்டுப் பகுத்தறிவு உண்மையே யாகும்.

மனிதன் அவ்வக் காலத்துக்கு ஏற்றவண்ணம் தன் வாழ்வுக்குத் துணை செய்யத்தக்க கடவுள், சமயம், வேதம், கல்வி, அரசு, தொழில் முதலியவற்றை ஒழுங்கு செய்து கொள்கிறான். மனிதன், இக்கடவுள் - இச்சமயம் - இவ்வேதம் - இத்தகைக் கல்வி - இத்தகையரசு - இத்தகைத் தொழில் என்று கட்டுப்பட்ட முறையில், அவைகளை என்றுங் கட்டி யழுதல்வேண்டும் என்னும் நியதியில்லை. இவை யாவும் அவ்வக்கால நாகரிகத்துக்கு இயைந்து நிற்குமுறையில் தாமே ஒழுங்குபட்டு வளரும். இவ்வளர்ச்சிக்கு இயற்கை துணைபுரிதல் இயல்பு.

நமது நாட்டில் வேள்வி(யாகம்) என்பதொன்று முன்னை நாளில் நடைபெற்று வந்தது. அதைப்பற்றிய குறிப்புகள் அறிந்து வேதத்திலுண்டு. வேள்வியின் வரலாற்றைப் பலர் பலவாறு கூறுப. அவரவர் கூற்றுக்களைத் திரட்டி ஆராய்ந்துழிச் சில உண்மைகள் கிடைக்கின்றன. அவைகளைப்பற்றி ஈண்டு விரிவுரை வேண்டுவதில்லை ; சுருங்கிய உரை சாலும்.

ஆரியர் குளிர் மிகுந்த நாட்டில் வதிந்தபோது, பெரிதும் புலால் உணவு உண்ணும் அவசியம் அவர்க்கு ஏற்பட்டது. அவர் பாரதநாடு புகுந்தபோதும், அவ்வுணவு அவர் வாழ்விற்கு இன்றியமையாததா யிருந்தது. பழக்கம் கொடியதன்றோ ?

பாரத நாட்டிற் குடிபுகுந்த ஆரிய மக்கள், புலால் உணவின் பொருட்டுப் பெருமுயற்சி செய்தார்கள். புலால் உணவு தேடுவதே அவர்கள் வேலையா யிருந்தது என்றுங் கூறலாம். அதற்கென ஆடுமாடுகளைக் காப்பதிலும், வளர்ப்பதிலும், மேய்ப்பதிலும் அவர்கள் பொழுது கழியலாயிற்று. வேறு துறைகளில் அவர்கள் கருத்துப் படியாதிருந்தது.

அதுகண்ட அறிஞர் சிலர் ஒன்றுகூடிப் புலால் உணவின் மீது படிந்து கிடந்த தம்மவர் கருத்தை, வேறு துறைகளில் திருப்ப நினைந்து, புலால் உணவுக்குச் சில வரம்புகள் கோலினர். அவ்வரம்புகட்கு உட்பட்ட ஒன்றே வேள்வி என்பது. ஊன் உண்போர் நேரே ஓருயிரைக் கொன்று அதன் ஊனை உண்ணலாகாதென்றும், நெருப்பில் மந்திர பூர்வகமாக வேள்வி செய்து அதை உண்ணல் வேண்டுமென்றும் சில வரம்புகள் கோலப்பட்டன. முறைகளும், கிரியைகளும், பிறவும் பெருக்கப்பட்டன. இவ்வரம்பு முறைகள் அம் மக்கட்கு ஊனுணவைச் சுருக்கின. 'சிறு ஊனுக்கு எவ்வளவு உழைப்பு' என்னுஞ் சோர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால் அவர்கள் முயற்சி வேறு துறைகளில் சென்றது.

இவ்வாறு தோன்றிய வேள்வியால் நாளடைவில் மக்களுக்குத் தேவர் பித்தேறிவிட்டது. வேள்வி செய்தால் தேவர் மகிழ்ச்சியுறுவர் என்றும், மழை பெய்யும் என்றும்,

வாழ்வுக்கு நலனுண்டு என்றுங் கருதப்பட்டன. இந்நம்பிக்கை நாளுக்குநாள் மக்களிடை உறுதிப்பட்டது. பின்னை இவ்வினைக்கென ஒரு சிலர் பிரிக்கப்பட்டனர். இவரது வேலை எந்நேரமும் வேள்வி செய்வதாக முடிந்தது. 'நாட்டுக்கு நலன்' என்னும் நம்பிக்கை கொண்டு, கடவுள் பெயரால் உயிர்கள் நெருப்பில் வதைக்கப்பட்டன. இக் கொலைச் செயலை நிறுத்த விருஷபதேவர், மஹாவீரர், புத்தர், திருவள்ளுவர் முதலிய அறவோர் அவ்வப்போது பெருமுயற்சி செய்தனர்.

இப்பேரருளாளர் உழைப்பால் வேள்வியின் உயிர்க் கொலை அருகிற்று. ஆனால் வேள்வி என்பது நிற்கவில்லை. உயிர்க்கொலைவழி நிகழ்ந்துவந்த வேள்வி அவ்வழி நிகழாதொழிந்தது. வேள்விக்கென நெல் உளுந்து முதலிய தானியங்கள் கொள்ளப்பட்டன.

பின்னே எழுந்த வேதாந்தம் வேள்விக்கு வேறுபொருள் கூறத் தொடங்கிற்று. வேள்வியில் ஆடு மாடு முதலியவற்றைக் கொல்லுதல் என்று சொல்லப்படுவது அவ்வுயிர்களைக் குறிப்பதன்று என்பதும், ஜீவபோதத்தைத் தடிவதையே அது குறிக்கிறது என்பதும் கொள்ளப்பட்டன. எங்ஙனே ஊன் வேள்வி அருகி, ஊனில் வேள்வி பெருகிற்று. இவ்வளர்ச்சிக்குக் காரணம் மனிதனிடத்துள்ள பகுத்தறிவாகும்.

பின்னே நாளேற நாளேற மனிதன் அன்புவழிக் கடவுளைப் போற்றத் தொடங்கினன். சடங்குகள், கிரியைகள் முதலியவற்றை அறிஞர் வெறுக்கலாயினர். எவ்வுயிரையும் தம்மைப்போல் கருதி, அவைகள்மாட்டுச் செந்தண்மை பூண்டொழுகுவது கடவுள் வழிபாடு என்று அறிஞர் கொண்டனர். இக்கொள்கை இந்நாளில் யாண்டும் பரவிவருகிறது. இவ்வேளையில் கடவுள் பெயரால் கொலை வேள்வி செய்தல் எத்தகை அறியாமை! எத்தகை அநாகரிகம்! எத்தகை இழிவு!

ஒடுங்கி மாண்டொழிந்த ஊன் வேள்வி மீண்டும் மூலை முடுக்குகளில் உயிர் பெற்றெழுகிறது. இப்பொழுது பல

இடங்களில் அவ்வேள்வி செய்யப்படுகிறது ; அதுவும் பிடிவாதமாகச் செய்யப்படுகிறது. வைதிகம் பிடிவாதமாகி விட்டது.

இந்நாளில் கொலை வேள்வி எற்றுக்கு எனில் வேதப் பிரமாணம் காட்டப்படுகிறது. அவ்வேதம் எந்நாளையது? அந்நாளில் மனிதன் நிலை எவ்வாறிருந்தது? அந்நாளைய வழக்கத்துக்குரிய ஒன்றை உறுதிப்படுத்த வேதப்பிரமாணம் காட்டுவது அறிவுடைமையா? பின்னை புத்தர் திருவள்ளுவர் முதலிய பெரியோர் தோன்றி, அன்பு நெறியை அறிவுறுத்திப் போந்தனர். தன்னுயிரைப்போல மன்னுயிரையுங் கொண்டு வழிபடும் அன்புநெறி வளர்ந்தோங்கி வரும் இந்நாளில், கடவுள் பெயரால் உயிர்க்கொலை நிகழ்த்துவதன் நோக்க மென்னை?

இக்கொலைக்குத் தத்துவார்த்தஞ் சொல்லச் சிலர் புறப்படுவர். தத்துவார்த்தம் எல்லாவற்றிற்கும் ஏலாது. உயிரைக் கொலை செய்துவிட்டுத் தத்துவார்த்தம் பேசுவது இழுக்கே யாகும். சித்திரவதைக்கும் தத்துவார்த்தமா? கொடுமை! கொடுமை!

'யாகத்தில் கொல்லப்படும் ஆடு முத்தி அடைகிறது' என்னுஞ் சமாதானம் சொல்லப்படுகிறது. இதற்குப் பிரமாணமும் காட்டப்படுகிறது. பிரமாணம் எதற்கு இல்லை! எல்லாவற்றிற்கும் பிரமாணம் உண்டு! பிரமாணங்கட்கு உலகம் அடிமைப்பட்டது போதும்! போதும்! அவரவர் தத்தம் செயலுக்கு ஆதாரவாக நூல்களை எழுதிவைப்பர். அந்நூல்கள் தெய்வ மொழியாகவும் முனிவர் மொழியாகவும் பிற்காலத்தில் போற்றப்படுவது வழக்கம். கொலைஞர், கொலைநூல் எழுதுவது இயல்பு: கொலைஞருக்கு அது பிரமாண மாகுமன்றோ! எல்லாம் வல்ல அன்புமயமான கடவுள், கொலைவேள்வி வாயிலாகவோ - சித்திரவதைக்குப் பின்னோ - ஆட்டுக்கு முத்தியளித்தல் வேண்டும்? கொலைக்கு முன்னே - சித்திரவதைக்கு முன்னே - ஆட்டுக்கு முத்தி வழங்கும் ஆற்றல் ஆண்டவனுக்கு இல்லை போலும்! ஆண்டவன்மீதும் வீண்பழி! முத்தியின்மீதும் வீண்பழி!

'புலால் நாற்றம் வீசும் நாடு' என்று சொல்லப்படும் மேல்நாட்டிலேயே இப்பொழுது புலால் மறுப்புக் கிளர்ச்சி தோன்றி யிருக்கிறது. உலகம் முழுவதும், அப் பேரறம் விரைந்து வளர்ந்து வருகிறது. புலால் உண்போர் பலர் புலாலை ஒழித்து வருகிறார். புலால் உண்பவரும் நன்னாட்களில் புலால் உண்பதில்லை. 'உயிர்க்கொலை கடவுள் நெறிக்கு மாறுபட்டது' என்னும் உண்மை, ஏறக்குறைய எல்லாரிடத்திலும் பரவியிருக்கிறது. இவ்வேளையில் 'வேதம்' 'வேதம்' என்று கொலைவேள்வி செய்வது அறிவுடைமையாகுங்கொல்!

பண்டைநாளில் மந்திர சக்தியால் ஆடு மாடுகள் தாமே வீழ்ந்துபட்டன என்று சொல்லப்பட்டது. அது மெய்யோ பொய்யோ. அதைப்பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதில்லை. அந்நாளில் மந்திர சக்தியால் கொலை நடந்ததாகவே வைத்துக்கொள்வோம். அக்கொலையும் அந்நாளில் அருளாளரால் மறுக்கப்பட்டது. இந்நாளில் மந்திர சக்தியுமில்லை; மற்றச் சக்தியுமில்லை. மூர்க்க சக்தியால் உயிர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றன.

எளிய ஆடு - 'அம்மா அம்மா' என்று கதறும் ஏழை ஆடு - சித்திரவதை செய்யப்படுகிறது! கொலைஞனுதல் ஒரு நொடிப்பொழுதில் ஆட்டை வெட்டிவிடுகிறான். அந்தோ! வேள்விக் கொலையோ! எழுதவும் கை நடுக்குறுகிறது! சித்திரவதை! சித்திரவதை! வாயில்லாப் பிராணி வதையைக் கேட்க அரசில்லையா? உயிர்க்கொலையைத் தகையச் சங்கங்களில்லையா? ஜீவகாருண்ய சங்கங்கள் என்ன செய்கின்றன? ஆண்டவனே! உன் படைப்பு, உன் பெயரால் சித்திரவதை செய்யப்படுகிறது! உனக்குக் காணக் கண்ணில்லையா? கேட்கக் காதில்லையா? உடன்கட்டை ஏறுதலை நிறுத்திய அரசாங்கம் - சேடலாடுதலைத் தகைந்துவரும் அரசாங்கம் - என்ன செய்கிறது? அருளாளர்கள் - அறிவுடைய மக்கள் - வாயில்லா ஏழைப் பிராணிகட்காகப் போராடல் வேண்டாமா? அருளாளர்களே! அறிவுடைய மக்களே! அறவழியில் போராட எழுங்கள்! எழுங்கள்!

கொலையைத் தடுக்க மக்கள்பிறவி தாங்கியுள்ள ஒவ்வொருவர்க்கும் உரிமையுண்டு. இதில் பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு வேண்டுவதில்லை. புத்தர் திருவள்ளுவர் முதலியோர் அருண்மொழிகளை யுணர்ந்த பிராமணர் கொலை வேள்வியை மறுத்தே தீர்வர். தமிழ் நாட்டிலுள்ள பிராமணரிற் பெரும்பான்மையோர் ஆரியரல்லர்; அவர் தமிழர்; ஆரிய வழக்க வொழுக்கங்களை மேற்கொண்டவர். கொல்லாமை அவர் தம் அறம். அவ்வறவழி நின்று, கொலை வேள்வியைத் தகையும் முயற்சியில் அவருந் தலைப்படுவாராக.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நாட்டிடை வாழ்ந்த மக்களது வழக்கவொழுக்கங்களைக் கூறும் வேதத்தின் பகுதிகளைச் சரித்திர முறையில் படித்துக்கொள்ள வேண்டுமேயன்றி, அவைகளை மீண்டும் வாழ்வில் புதுக்க முயல வேண்டுவதில்லை. பழமையில் இக்காலத்துக்கு வேண்டப்படும் பொருளிருப்பின், அப்பொருளைக் கொள்ளலாம். உயிர்க் கொலை வேள்வி இப்பொழுது எற்றுக்கு? அதனல் வாழ்வுக்கு ஏதேனும் நலன் உண்டா? எக்காரணம் பற்றியோ ஒருகாலத்தில் அவ்வேள்வி நிகழ்ந்து வந்தது. பின்னே அது பலவழியிலும் மாற்றப்பட்டது; சிதைக்கப்பட்டது.

வேத காலத்துக்குப் பின்னே சமணம் பௌத்தம் என்னும் அருட்சமயங்கள் தோன்றி, மக்கள் வாழ்வைச் செம்மை செய்தன. அச் சமயங்களின் கருத்துக்கள் பல, இக்காலச் சைவ வைணவ சமயங்களில் நுழைந்திருக்கின்றன. தற்காலச் சைவ வைணவர்களிற் பலர் உயிர்க்கொலை வேள்விக்கு ஆதரவு நல்கமாட்டார். நாளுக்குநாள் மக்கள் அறிவு வளர்கிறது. 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்னும் அறத்தின் வழி நிற்க மக்கள் முயன்று வருகிறார்கள். இவ்வேளையில் வேதத்தின்மீது பழிசுமத்திக் கொலைவேள்வியை மீண்டும் புதுக்க முயல்வது, ஹிந்துமதத்தை அழிக்கக் கால்கொள்வதாகும்.

தற்போதைய ஹிந்துமதம் வெறும் வேதத்தின் பழைய பகுதிகளை மட்டும் கொண்டு நிலவுவதன்று. அப் பகுதிகட்கு

மாறுபட்ட பலதிறக் கருத்துக்கள் புக ஹிந்து மதம் இடந் தந்திருக்கிறது. ஹிந்துக்கள் என்று சொல்லப்படுவோருள் பலர் வேதத்தின் எல்லாக் கூறுகளையும் ஏற்றுக்கொள் பவரல்லர்.

இந்நாளில் வேதமென்றும் மதமென்றும் கடவுளென் றும் சொல்லிக் கொலைவேள்வியால் வாயில்லாப் பிராணி களைச் சித்திரவதை புரிவது அநாகரிகமாகும். இவ்வநாகரிகச் செயலை நியாய முறையில் தகையப் பொதுவாக எல்லாரும், சிறப்பாகத் தற்கால நாகரிக முணர்ந்த பிராமணரும் முயல் வாராக. (15–6–1928)

## அகக்கண்

'முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்-அகத் திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்' என்பது திருமூலர் திருவாக்கு. இந்நாளில் அகக்கண் பேச்சும் உண்டோ? அகக் கண் என்றதும் எள்ளி நகையாடுவோர் பலர் இருக்கிறார். தற்கால வாழ்வின்நிலை இவ்வாறிருக்கிறது! இந்நாளிலும் ஒருவர் 'அகக்கண்' என்று சொல்கிறார்; எழுதுகிறார்; அக் கண் விழிப்புக்கு உழைக்கிறார். அவர் யாவர்? சபர்மதியி லுள்ள சத்தியாக்கிரக ஆசிரமத்தின் தலைவர் மகாத்மா காந்தி.

சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்திலுள்ள இளைஞர் சிலர் சிற்றின்பத் துறைக்கு எளியரான காரணங்கொண்டு காந்தியடிகள் ஒன்பதுநாள் உண்ணாவிரதம் இருந்தார். அவ் விரதத்தைப்பற்றி அடிகள் 'யங் இந்தியா'வில் எழுதியுள்ள குறிப்பு வருமாறு:—

> 'பொதுமக்கள் எனது உண்ணாவிரதத்தைப்பற்றிக் கவலை யுற வேண்டுவதில்லை. அதை அவர்கள் கவனியாதிருப்பார் களாக. விரதம் என்னோடு கலந்ததொன்று. கண்ணிழந்து வாழ்தலுங் கூடும். உண்ணா விரதமின்றி நான் வாழ்தல்

முடியாது. புறத்துக்குக் கண்கள் எவ்வாறோ அவ்வாறே உண்ணாவிரதம் அகத்துக்காகும்.

இப்பொன்னுரைகள் நமது அகத்தைக் கவர்கின்றன. தற்கால அரசியல் மேடைகளில் பேசப்படும் பேச்சையும் நம்பெருமான் மொழியையும் நோக்குழி, முன்னையது அகக் கண்ணை மறைப்பதென்பதும், பின்னையது அதைத் திறப்ப தென்பதும் விளங்குதல் காண்க. உண்ணா விரதமாவது அகக் கண் திறப்பு என்று அடிகள் கூறுவது உன்னற்பாலது. அடிகள் அடிக்கடி உண்ணாவிரதம் ஏற்கிறார். ஆமதாபாத் முதலாளிகள் பொருட்டும், பம்பாய், சௌரி சௌரா, கோஹத் முதலிய இடங்களில் எழுந்த மூர்க்க சக்தியின் பொருட்டும் அடிகள் உண்ணாவிரதம் இருந்தது நேயர்கட் குத் தெரியும். இதுபோழ்து அடிகளின் தலைமைக்கீழ் நடை பெற்றுவருஞ் சத்தியாக்கிரக ஆசிரமத்திலுள்ள சிறுவர் சிறுமியர் சிலர், நிறைகாக்க இயலாது, சோதனைக்கு எளிய ரானது கண்டு, அடிகள் உண்ணாவிரதம் ஏற்றார். அது குறித்து அவர் எழுதியது வருமாறு :—

'சத்தியாக்கிரக ஆசிரமம் என்பது என்னால் நடத்தப்படுவது. நிலத்துக்கும் கட்டடத்துக்கும் மாத்திரம் கெழுதகைநண்பர்கள் இரண்டு லட்ச ரூபா உதவியிருக்கிறார்கள். ஆசிரம நடை முறைக்கென அவர்கள் ஆண்டுதோறும் பதினெண்ணாயிரம் ரூபா உதவி வருகிறார்கள். இவ்வளவும் நான் இங்குள்ளவர்க ளிடை ஒழுக்கத்தை ஓம்பி வருவதாக எண்ணியே அவர்கள் செய்கிறார்கள். ஆசிரமத்தில் வயதுற்ற மகளிரும் ஆடவரும் இருக்கிறார் ; கட்டிளங் குமரிகளும் குமார்களும் இருக்கிறார் கள். பின்னவர்கள் ஒல்லும்வகை மணமின்றி வாழவே பயிற்சி செய்யப்படுகிறார்கள். ஆசிரமத்தில் பெண்மக்கள் பெற்றுள்ள உரிமையைப்போல வேறெவ்விடத்திலும் அவ் வினத்தார் பெற்றிருப்பதாக யான் அறிந்தவரை இல்லை என்றே சொல்வேன். எனது முயற்சிகளுள் தலையாயது இதுவே. சிறுவர்களிடத்தில் தவறுதல் நிகழ்தல் கண்டேன்.

இத்தவறுதலுக்கு உட்படாத பள்ளிகள் இல்லை. இஃது எனக்குத் தெரியும். மன்பதையின் ஆண்மையையும், இளைஞர் குண நலத்தையும் கல்லும் அத்தவறுதல் ஆசிரமத்தில் நிகழலாகாதென்பது எனது விருப்பம். பிள்ளைகளை ஒறுக்க அநுமதியில்லை. என்னால் நடத்தப்படும் இரண்டு பள்ளிக்கூடத்திலும் யான் பெற்ற அநுபவம் 'ஒறுத்தல் தூய்மை விளைப்பதில்லை' என்று அறிவுறுத்தியிருக்கிறது. இத்தகை நிகழ்ச்சிகளில் உண்ணாவிரதம் பயனளித்திருப்பதை யான் தென்னாப்பிரிக்காவில் உணர்ந்திருக்கிறேன். அதையே மீண்டும் கொண்டிருக்கிறேன்.'

இவ்வுரைகளில் அறியக் கிடக்கும் உண்மைகள் பலப் பல. பொருள் உதவுவோர் கருத்துக்கு மாறுபட்ட வினைகள் நிகழலாகாதென்பது கவனிக்கப்படல் வேண்டும். கொடையாளர் கருத்துக்கு மாறுபட்ட வினைகள் உலகில் நடவாமலில்லை. இவ்வாறு எத்துணையோ கொடைகள் பாழ்படுகின்றன. இங்கு ஆலயங்களும், மடங்களும் நினைவிற்கு வருகின்றன. கொடையாளர் கருத்துக்கு மாறுபட்ட வினைக்குக் கழுவாய் ஆசிரமத் தலைவரே தேடுதல் — அதுவும் உண்ணாவிரதம் இருந்து தம்மைத் தாம் ஒறுக்கும் நெறி நின்று தேடுதல் — எவ்வளவு அருமை! அருமை! இத்தகைப் பெரியோர் எந்நாளில் தோன்றினர்? எந்நாளில் தோன்றுவார்?

தவறிழைத்த மக்களை ஒறுத்தல் தவறென்று உணர்ந்து, அவர்களைத் தூய்மைப்படுத்த அடிகள் நோன்பேற்றதை நினைக்க நினைக்க அஹிம்சையின் நுண்மை புலனாகிறது. மற்றப் பாடசாலைத் தலைவர்களும் காந்தியடிகள் வழிபற்றி நடந்தால் பிள்ளைகள் தூய்மை யுறுவார்கள். பிரம்பாலும் கம்பாலும் புடைக்கும் ஆசிரியன்மார் பிள்ளைகளை நல்வழியில் திருத்தாதொழிவோரே யாவர். நமது அஹிம்சா தர்ம ஐயன் காட்டும் வழி உலகில் என்று பரவும்?

ஈண்டுச்' சிறப்பாக நோக்கற்பால தொன்றுளது. கட்டழகும் இளமையும் செறிந்த கன்னிகளும் காளைகளும் ஓரே இடத்தில் எவ்வித்க் கட்டுப்பாடுமின்றி வானம்பாடி

யைப்போல் ஆனந்தமாக ஆடியும் பாடியும் வாழ்வரேல், அவரை உலக இன்பம் தன்வழிப்படுத்தா தொழியுமோ என்று பலர் கருதலாம். சோதனை, பிள்ளைகளைச் சில வேளை களில் செயற்கை முறைகளைக் கையாளவுந் தூண்டும். அவை களின் கொடுமையை அடிகளே கூறியிருக்கிறார்.

பெண்ணும் ஆணும் படைக்கப்பட்டதன் நோக்கம் என்னை? வெறும் இழிந்த விலங்கின்பத்தை நுகர்தற் பொருட்டோ? அன்று; அன்று. மெய்யுறு புணர்ச்சி பிள் ளைப் பேற்றின் பொருட்டு ஒவ்வொருபொழுது நிகழவேண்டு வது இயல்பே. அப்பீடையே பெண்ணுக்கும் ஆணுக்கும் ஏற்பட்ட வாழ்வுநிலை என்று கோடல் தவறு. அது கிட்டா வேளையில் செயற்கைத்துறை நண்ணலும் தவறு. அப் பீடையே பிறவிப்பயன் என்று கருதுவோர் விலங்கினுங் கடையாயரென்க. பெண்ணிடத்துள்ள அழகும், பாட்டும், கடவுட்டன்மையும் ஏனோ காமக் குருடருக்குப் புலனாவ தில்லை? இளமைப் பழக்கத்தின் கொடுமை மக்களை எரிக் கிறது. இளமையில் பிரமசரியம் காத்த வீரர், உற்ற வயதில் எவ்வினையும் எளிதில் ஆற்றவல்லவராவர்; முடிவில் எவ்வுயி ரையும் தம்முயிர்போல் கொள்ளும் ஒரு பெரும் நிலையையும் எய்துவர். இருக்கும்போதும் நிற்கும்போதும் எப்போதும் இழிவான எண்ணங்கொள்ளும் மக்கள், விரைவில் ஆண் டகைமையிழந்து, எவ்வின்பமும் நுகராது, பிறந்தும் பிற வாத மாக்களாய் மாள்வார்கள். அவர்களைப்பற்றிப் பெரிதும் இரங்குகிறோம்! காந்தியடிகள் பண்டைப் பிரமசரிய நிலையை உயிர்ப்பிக்க முயன்றுவருதலை இந்தியர் உணர்வாராக. இதைப்பற்றிச் சமயம் நேரும்போது விரித்துக் கூறுவோம். காந்தியடிகள் எழுதியுள்ள குறிப்பில்,

உண்ணாவிரதமே என் வாழ்வில் முடிவா யிருக்கவேண்டு மென்று யான் விரும்புகிறேன். இத்தகைய விரதம் இன்னும் இருக்கநேரும் என்று என்னுள்ளத்துள்ள ஒன்று அறிவிக்கிறது. எதை எவர் அறிவார்? இதனிலுங் கடியதொன்று நிகழ லாம். யான் செய்வது முற்றுந் தவறாகவும் இருக்கலாம். யான்

உயிர் துறந்ததும் 'ஏ! அறிவிலி! தக்கதே பெற்றாய்; வேண்டும் வேண்டும்' என்று உலகம் சரமகவி பாடுதலுங்கூடும். தற்போழ்து எனது செயல் பிறர்க்குத் தவறாகத் தோன்றினாலும், அஃது என்னுடன் விரவியே நிற்கும்.

என்று வரைந்துள்ள உரைகளை நேயர்கள் முகக்கண்ணால் நோக்காது அகக்கண்ணால் நோக்குவார்களாக.

காந்தியடிகளை உண்ணாவிரதத்துக்கு இரையாக்காது காக்கும் பொறுப்பு சத்தியாக்கிரக ஆசிரமவாசிகளிடத்தும், தேசத்தாரிடத்தும் இருக்கிறது. இந்திய மக்களே! காந்தியடிகளைக் கொலை செய்யப்போகிறீர்களா? வாழச்செய்யப் போகிறீர்களா? அவர் வாழ்வை நீங்கள் விரும்பின், சத்தியாக்கிரக நெறியில் நில்லுங்கள். (4–12–1925)

## பாரதியாரும் தேசபக்தியும்

இந்நாளில் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெரும் பாவலரா யிலங்கிப் புகழுடன் தாங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி அறியாத தமிழறிஞர் இருத்தல் அரிது. சுப்பிரமணிய பாரதியாரைத் தேசபக்தர் சுப்பிரமணிய பாரதியார் என்று சொல்வது வழக்கம். தேசபக்தி இஃது என்னும் உண்மை கண்டவருள் பாரதியாரும் ஒருவர். ஸ்ரீபாரதியார் தேசபக்தியின் இயல்பைப் பலவாறு பாக்களால் ஓதியிருக்கிறார். அவர் பாடல்களை நேயர்கள் ஓதுவதோடு நில்லாது அவைகளைத் துருவித் துருவி ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்தால் தேசபக்திக்குரிய செம்பொருள் பல காணலாம். அவைகளை அகழ்ந்தெடுத்துப் புலவர்கள் சொற்பொழிவுகள் வாயிலாகவும், கட்டுரைகள் வாயிலாகவும் நாட்டார்க்கு அறிவுறுத்தல் நல்லது. அது நாட்டிடைத் தேச பக்தியை வளர்ப்பதாகும். சிறப்பாக நமது நாட்டுக்கு இப்பொழுது அத்தகைப் போதனை மிக மிக இன்றியமையாதது. தேசபக்தியை வீழ்த்தும் பலதிறக் கிளர்ச்சிகள் தலைவிரித்தாடும் இந்நாளில்

பாரதியார் பாடல்களின் உள்ளக்கிடக்கைகளை நாட்டில் உலவச் செய்யவேண்டுவது அறிஞர் கடமை.

நாட்டிற் பலதிற அறிஞர் தோன்றுகிறார். ஒவ்வோர் அறிஞர் ஒவ்வொரு துறையில் நாட்டை ஓம்புகிறார். அவை எல்லாவற்றையும் வளர்ப்பவர் பாவலரேயாவர். தொழிலாளரிடத்துத் தொழிலைக் காணலாம்; வீரரிடத்து வீரத்தைக் காணலாம்; மற்றவரிடத்து மற்ற மற்றக் கலைகளைத் தனித் தனியே காணலாம். பாவலரிடத்திலோ எல்லாவற்றையுங் காணலாம். கம்பன் பாடிய இராமாயணத்தில் என்ன இல்லை? உலகம் இருக்கிறது என்று சுருங்கச் சொல்லலாம். எனவே, தேசம் பாவலரிடத்திருப்பது என்று கூறுவது மிகையாகாது. ஒரு தேசம் உரிமையிழந்து குலைந்தழியும் வேளையில் அதற்கு உரிமை வழங்கும் ஆற்றல் பாவலர்க்குண்டு. பாவலர் வீரரினுஞ் சிறந்தவர். அதைப்பற்றி ஆராய ஈண்டுப் புகவேண்டுவதில்லை. உரிமையைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் பாவலர்கள் பாடிய பாடல்கள் நமது கூற்றை வலியுறுத்தும்.

நமது நாடு இதுபோழ்து உரிமையிழந்து கிடத்தல் கண்கூடு. உரிமைபெற நாட்டில் பலர் பலதுறை நின்று உழைத்து வருகிறார். பாரதியார் எத்துறை நின்று நாட்டுக்கு உழைத்தார்? செந்தமிழ்ப் பாக்களைப் பாடி அவர் தேசத்தின் கண்ணைத் திறந்தார். தேசத்தின் பல கலைகளாம் பயிர்களை வளர்க்கச் செய்யும் உரிமைப் பாடல்களாம் அருவி, பாரதி என்னும் மலைவாயினின்றும் இழிந்தது. தேசக் கலைகளிடத்துக் கருத்தமையாது 'தேசம் தேசம்' என்று கூவுவது காக்கைக் கூட்டக் கூச்சலேயாகும். பாரதியார் பாடல்களில் தேசபக்தி ததும்புதற்குக் காரணம் அவர் தேசக்கலைகள்மீது கொண்ட பக்தியாகும்.

பாரதியார் பிறந்த நாடு தமிழ்நாடு. பாரதியார்க்குத் தாம் பிறந்த தமிழ்நாட்டின் நினைவு தோன்றும்போது தம் முள்ளூறும் நிகழ்ச்சியை,

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'

என்னும் இன்பெழு மொழியால் வெளியிட்டிருத்தல் காண்க.

நாடுகளின் பெயர்கள் பெரிதும் அவ்வந் நாடுகளின் மொழிப் பெயரால் அமைகின்றன. நாட்டின்மீது அன்பு என்பது, அந்நாட்டின் மொழிமீது அன்புகொண்டு இன்புறுவதாகும். பாரதியார் தாய்நாட்டு மொழிமீது எத்தகைக் காதலுடையார் என்பது, அவர் அம்மொழிகுறித்துப் பாடிய பாக்களால் நனி விளங்கும்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'

எனவரூஉம் பாரதியார் பாட்டை உற்று நோக்குக. இப்பாட்டில் 'இனிதாவது' 'தேமதுரத் தமிழ்' எனவரூஉங் குறிப்புக்களை ஓர்க. தமிழின்பம் உணராது தமிழரென வாழ்தலைப் பாரதியார் வெறுக்கிறார். 'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ' என்று அவர் வினவுகிறார். இதுபோழ்து தமிழின்பம் இன்னதென் றுணராது தமிழரென வாழ்வோர் எத்துணைப்பேர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? தமிழ் மக்கட்குத் தமிழ்மனம் வேண்டும்.

பாரதியார் தமிழராகப் பிறந்தமையால் தமிழுக்கு ஏற்றம் கூறினர் என்று எவரும் கருதவேண்டுவதில்லை. தமிழ்மொழியில் யாக்கப்பெற்றுள்ள காவியங்களை ஆராய்ந்தால் தமிழின் பெற்றி புலனாகும். பாரதியார் அப்பெற்றியுணர்ந்தே தமிழ் மாண்பு கூறலானார்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை

அள்ளும் சிலப்பதி காரமென்—றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு '

' யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர் '

இப் பாக்களில் தமிழ்க்காவிய மாண்புகள் மிளிர்தல் காண்க. வள்ளுவனைக் குறிக்கும்போது 'உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றதும்—சிலப்பதி காரத்தைக் குறிக்கும்போது 'நெஞ்சை அள்ளும்' என்றதும்—பாரதியார் அந் நூல்களின் ஆழத்தைக் கண்டவர் என்பதைத் தெற்றென விளக்கும். சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளுவது, அந்நூ லாராய்வோர் அநுபவ நிகழ்ச்சியில் உணர்வதொன்று. பாரதியார் தமிழ்நாட்டுப் புலவர்களில் மூவரைக் கொண்டதும் அவரது தமிழாராய்ச்சியைத் தெரிவிக்கிறது.

நாட்டுமொழியும், அதனால் ஆகிய பனுவல்களும் தேச பக்திக்கு அடிப்படை. பாரதியார் அவ்விரண்டையும் பற்றி உரைத்துள்ள கருத்துக்கள் அவரது தேசபக்தியை விளங்கச் செய்வன. மொழி காவியங்களோடு வேறு கலைகளும் தேசபக்தியை எழுப்பும். அவைகளைப்பற்றியும் பாரதியார் பலபடக் கூறியிருக்கிறார். அவைகளுள் இரண்டொன்று வருமாறு :—

' மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னவை யிருப்பிடங் கொண்டாள்

'ஓாத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்'

'வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழு மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிபஞ் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்'

காவியங்களும், மற்றக் கலைகளும், தொழின்முறைகளும் சேர்ந்த ஒன்றே தேசம் என்று உன்னி, அவைகளின்மீது அன்புகொண்டு, அவைகளின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது தேசபக்திக்கு அறிகுறியாகும். நாட்டுக் கலைகள்மீது பற்றின்றித் தேசத்தின்மீது செலுத்தும் பக்தி பொருளற்றதென்க. பாரதியார் நாட்டுக் கலைகளின்மீது சொல்லொணு ஆர்வம் உடையாராகலின், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்றார்.

தேசத்தில் தோன்றிய மக்களுள் உயர்வு தாழ்வு பாராட்டி வாழ்தலுந் தேசபக்தி யாகாது. நமது நாட்டில் சாதி பேதத்தால் சாதி பக்தி நிலவுகிறதேயன்றித் தேச பக்தி நிலவுதல் அரிதாக இருக்கிறது. அன்பிற் சிறந்த பாரதியார்க்கோ சாதிபக்தி தோன்றியதில்லை. தேசக்கலை யுணர்ந்த ஒருவர்க்குச் சாதிபக்தி எங்ஙனந் தோன்றும்? பாரதியாரைத் தேசபக்தியே விழுங்கி நின்றது.

'வந்தே மாதா மென்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்'

'ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே

'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே'

'எல்லோரு மொன்றென்னுங் காலம் வந்ததே'

'எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்'

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே
வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே'

இவையனைய பாக்கள் பல உள.

ஒரு நாட்டில் ஆண்மக்களைப்போலவே பெண்மக்களும் உரிமைபெற்று வாழ்தல் வேண்டும். பெண்ணடிமை கொண்ட நாடு அடிமைக்குழியில் என்றும் வீழ்ந்தே கிடக்கும். நமது நாட்டில் பெண்மக்கள் இடைக்காலத்தில் அடிமைக்குழியில் வீழ்ந்தது பலர்க்குத் தெரியும். நமது நாட்டின் ஜனத்தொகை முப்பது கோடி. அத் தொகையில் ஒரு பகுதி கல்வியறிவின்றிக் கிடக்கிறது. பாரதமாதாவின் ஒருபக்கம் பாரிசவாயு உற்றிருக்கிறதென்றுஞ் சொல்லலாம். தேச விடுதலைக்கு உழைக்கும் தேசபக்தர் பெண்ணடிமை கண்டு வாளா இருப்பரோ? ஒருபோதும் இரார். பெண்மக்களை அடிமைக் குழியில் இருத்தி விடுதலைக்குமட்டும் போராடுதல் நாட்டைத் துயரக்கடலில் வீழ்த்துவதாகும். தேசபக்தர் பாரதியார், பெண்ணுரிமையைப்பற்றிப் பாடிய பாக்கள் பெரிதும் எமது உள்ளத்தில் இன்பமூட்டிக்கொண் டிருக்கும். தமிழ் நாட்டில் தோன்றிய புலவருள் பெண்ணுரிமைக்குப் போராடிய வீரருள் தலைசிறந்து விளங்குபவர் பாரதியாராவர். அவருள்ளமெலாம் பெண்ணுரிமைமீது தவழ்ந்து நின்றது என்று

கூறுதற்கு அவர் பாடல்களில் பல எடுத்துக்காட்டுக்களிருக்கின்றன. அவைகளுள் சில வருமாறு :—

‘ மாதர் தம்மை இழிவு செய்யு மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னி லெந்த வகையினும் நமக்குளே
தாத ரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக வாழ்வ மிந்த நாட்டிலே ’

‘ ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் ’

‘ பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக் கிங்கேபெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி ’

‘ வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந்தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடு வோம் ’

இன்று இவ்வளவோடு நிற்போம். மொழிப்பற்று, கலைவளர்ச்சி, சமத்துவம், பெண்ணடிமை நீக்கம் முதலியவற்றைப் பொருளாக் கொண்ட துறைகள்வழி நின்று, பாட்டு வாயிலாகத் தேசபக்தி செலுத்தி வந்தவர் நம் பாரதியார். இக்கால உரிமையுணர்ச்சிக்கு இன்றியமையாத தேச பக்திக்குப் பாரதியார் பாடல்கள் ஊற்றாயிருக்கின்றன. பாரதியார் பாடல் வாயிலாகத் தேசபக்தி இத்தகைத்து என்பதை உணர்தல்கூடும். அவ்வழி நின்று தமிழர் தேச பக்தியை வளர்ப்பாராக. (22–10–1926)

# எனது நிலை

சகோதரிகளே! சகோதரர்களே!! இன்று இவண் வேறொரு கட்டுரை வரையப் புகாது, 'எனது நிலை' என்னுந் தலைப்பீந்து வரையப் புகுவது குறித்துப் பெரிதும் வருந்து கிறேன். வருந்தும் உளத்தோடு இஃதெழுதப் புகுதற்குக் காரணமாக நிற்பது, எனது கெழுதகை நண்பரும் உழுவலன் பருமாகிய திரு. ஈ.வே. இராமசாமி நாயக்கரை ஆசிரியராகக் கொண்ட 'குடியரசு' என்னும் பத்திரிகையின் கூற்றேயாகும். கடந்த மூன்று வாரமாகக் 'குடியரசு' என்னைத் தாக்கி எழுது வதில் பெருங்கவலை செலுத்திவருகிறது. முதல் வாரம் அப் பத்திரிகை எழுதிய இழிமொழிகளைக் கண்ணுற்றபோது அதன் சினக்குறிப்பு என் முன்னே புலனாயிற்று.

ஒருவரது உள்ளத்தூருஞ் சினத்தின் நுண்மை அவரது எழுத்தில் பருமையாகப் புலப்படுதல் இயல்பு. நல்லோர் சிலரும் சினத்துக்கு இரையாகும்போது தம்மையறியாது தமது நீர்மைக்கு மாறுபட்டு இழிதுறையிலிறங்கி வினையாற்றுத லுண்டு. சினம் ஒடுங்கப்பெற்றதும் அவர் மனமே அவரை ஒறுப்பதாகும். இத்தன்மை, மக்களிடத்து இயல்பாய் அமைந் திருப்பது. என்றுஞ் சினத்தால் எரிந்துகருகும் உள்ளமுடைய மாக்களைப்பற்றி ஈண்டு ஒன்றுங் கூறவேண்டுவதில்லை.

திரு. இராமசாமி நாயக்கர் சத்தியாக்கிரக நெறி நின்று மும்முறை சிறைபுகுந்த சீலர். அன்னார் 'குடியரசு' இப் பொழுது சினத்தால் விழுங்கப்பட்டு நஞ்சை உமிழ்ந்து வருகிறது. பின்னே அது, சினத்தால் உமிழ்ந்த உரைகளில் எரியும் நஞ்சு கண்டு வருந்தும் என்பதை எதிர்பார்க்கிறேன்.

சென்ற வாரக் 'குடியரசு' என்னை மனம்போனவாறு தாக்கிப் புடைத்திருப்பது கண்டு வியப்படைந்தேன். 'குடி யரசி'ன் கூற்றுக்கட்குச் செவ்வனிறை இறுக்கவேண்டுவது அநாவசியம் என்றிருந்தேன். எதற்கும் ஓர் அளவு உண்டு.

திரு. நாயக்கர்மாட்டு யான் இன்னும் நட்புரிமை பூண்டுள்ளேன். அவர் மருண்டு கிடக்கிறார். அவர் மருட்சியைப் போக்கவேண்டுவது எனது கடன் என்று உணர்கிறேன். இன்று அவர்பொருட்டு இச் சிறுதுறையில் இறங்குகிறேன். நேயர்கள் மன்னிப்பார்களாக.

காஞ்சி மகாநாட்டின் நடைமுறையில் சிற்சில கூறு திரு. நாயக்கர் விழைந்தவாறு நிகழாமையே அன்னார் 'குடியரசு' என்னைக் குடைதற்குக் காரணம் என்பது அதன் உரைகளால் நன்கு தெரிகிறது. 'குடியரசி'ன் சினக்குறிப்பைப் புலப்படுத்தப் பல உரைகள் வேண்டுவதில்லை. அதனின்றும் அகழ்ந்து ஈண்டுச் சில உரைகளை எடுத்துக் காட்டுதலே சாலும்.

> 'ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தான் பயங்காளி என்றும், தான் ஒரு பெண் ஆத்மா என்றும், ஆண் ஆத்மா அல்ல என்றும் அடிக்கடி ஒளிக்காமல் சொல்லிக்கொள்வதுண்டு.'

இவ்வம்புகள் என்னை நேர்முகமாகத் தாக்குவனவல்லவோ? திரு. நாயக்கர் 'குடியரசி'ல் இத்தகைய 'மணிகள்' பல ஒளிர்கின்றன. 'பயங்காளி' என்று யான் யாண்டுஞ் சொன்னதில்லை. 'பெண் ஆத்மா' 'ஆண் ஆத்மா' என்றும் யான் சொல்லிக்கொள்வதில்லை. ஆத்மாவில் பெண் ஏது? ஆண் ஏது? திரு. நாயக்கர் யான் காஞ்சியில் அளித்த தீர்ப்பை எவ்வாறு திரிபாக உணர்ந்து இடர்ப்படுகிறாரோ, அவ்வாறே 'பெண்' 'ஆண்' என்று யான் சொல்வதையும் திரிபாக உணர்ந்து இடர்ப்படுகிறார் போலும்! பல இடங்களில் பெண்மக்களைப்பற்றிப் பேச நேரும்போதெல்லாம், ஆணினத்தினும் பெண்ணினத்தைச் சிறப்பித்துக் கூறுவது எனது வழக்கம். திரு. நாயக்கர் நண்பராகலான், அவரது ஐயந்திரிபைக் களையவேண்டுவது எனது கடமை.

நண்பரே! நாயக்கரே! கேண்மின். யான் குறிப்பிடும் ஆண் பெண் என்பன வடிவத்தையொட்டியனவல்ல. அவை இயல்பைக் குறிப்பன. ஆணில் பெண்ணும் பெண்ணில் ஆணும் உண்டு. ஓருயிர் ஆண்வடிவந் தாங்கி யிருப்பினும்

அதன்பால் பெண்ணியல்பு அமைந்துகிடத்தல் வேண்டும். பெண்ணியல்பு அமையப்பெறாத ஆண்மகன் கொலைஞனாய் இரக்கமிலனாய் வன்கணனாய் உலகிடை வாழ்வன். பெண் வடிவில் ஆண் இயல்பு பெற்றோரும் இன்னோரேயாவர். பெண்ணியல்பு பெற்ற ஆண்மக்களே தூயராய் - வீரராய் - கவிஞராய் - பாட்டோவியத்தில் கருத்துடையராய் - அன்புளத்தராய் - வாழ்ந்து உலகை நடாத்தினர்; நடாத்துகிறார்; நடாத்துவார். 'இரக்கத்துக்கு நிலைக்களனாக உள்ளது பெண்மை' என்று யான் சொற்றதை, நாயக்கர் திரிபாகக் கொண்டு, என்னைப் பெண்ணெனப் பேசியதுகுறித்து யான் வருந்தவில்லை. ஆணெனும் அரக்கனாக வாழ்வதினும் பெண்ணெனுந் தெய்வமாக வாழ்வதில் எனக்கு விருப்புண்டு. அதுகுறித்துத் தவமும் கிடக்கிறேன். நண்பர் நாயக்கர் என்னை இழித்துக்கூறும் முறையில் பெண்ணுலகைப் பயங்கொள்ளி யுலகாக்கியது குறித்து வருந்தாதிருக்க முடியவில்லை. பெண்ணை இழித்து இழித்துக் கூறியன்றோ நாடு இந்நிலையுற்றது? இன்னுமா அவ்வறியாமை! வைக்கம் வீரருக்கா அவ்வறியாமை! கொடுமை! கொடுமை! நாயக்கரே! அன்பரே! சீதையின் உறுதியை-பாஞ்சாலியின் விரதத்தை-கண்ணகியின் வீரத்தை - மணிமேகலையின் அறத்தை - பிறர்பால் கேட்டாதல் உணர்ந்து தெளிந்து உரிமைப்போரில் தலைப்பட்டு உழைப்பீராக.

இனிக் காஞ்சி மகாநாட்டுத் தலைவன் என்னும் முறையில் என்மீது திரு. நாயக்கர் சுமத்தும் பழி என்ன என்பதைத் தெரிந்துகொள்ளக் 'குடியரசி'லுள்ள குப்பைகளைக் கிளறிக் கிளறிப் பார்த்தேன்; ஒன்று விளங்குதல்கண்டேன். அஃது எது? அது, திரு. நாயக்கர் சார்பில் கொணரப்பெற்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தை மகாநாட்டின் முன்னர்க் கிளத்த யான் ஒருப்படாததைப் பற்றியது. அத்தீர்மானத்தை ஒழுங்கீனமென யான் தள்ளியது உண்மையே. அச்செயலைக் குறித்து நண்பர் நாயக்கர் மூன்று வாரமாகப் பக்கம் பக்கமாக வெண்மையில் - கருமை பதித்துவருகிறார். நண்பர் முயற்சிக்கு இரங்குகிறேன்.

'குடியரசு' என்னும் பத்திரிகை என் பொருட்டா நடத்தப்படுகிறது? அந்தோ! எங்குப் பார்த்தாலும் என் மயமாகவே யிருக்கிறது! நண்பர் நாயக்கர் என்னை மறக்க மாட்டார்போலும்! அவரது உடல் உரம், நெஞ்சுஉரம், மூளை உரம் எவ்வளவு உண்டோ அவ்வளவுவரை என்னைத் திட்டித் திட்டி அவர் ஓய்வடைவாராக. ஆனால் சினம், நண்பர் உரத்தைக் குலைக்குமே என்று யான் பெரிதுங் கவல்கிறேன். 'குடியரசி'ன் எப்பகுதியிலும் என்னைப்பற்றிய தூற்றல்! குறைகூறல்! வசை! தூற்றலுக்குத் தூற்றலும், குறைகூற லுக்குக் குறைகூறலும், வசைக்கு வசையும் வழங்குங் கல்லூரியில் யான் பயிலவில்லை. என்செய்வேன்! 'குடியரசி' லுள்ள வசைகளையெல்லாம் விலக்கி ஆராய்ந்தபோது கிடைக்கும் 'பழி' ஒன்றாகவே யிருக்கிறது. அவ்வொன்று, 'குடியரசி'ல் தூறாகப் படர்ந்து படர்ந்து பாம்பு தேள் முதலியன உலவுதற்கு இடந் தந்திருக்கிறது. அவ்வொரு பழியும் பழியா என்பது ஆராயற்பாற்று.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரித்து இது காறும் யான் எவ் வவைக்களத்திலும் பேசியதுமில்லை; எப் பத்திரிகையிலும் எழுதியதுமில்லை. அதனால் விளையுந் தீமைகளைப்பற்றிப் பல இடங்களில் பேசியிருக்கிறேன்; எழுதியுமிருக்கிறேன். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் நாட்டுக்கு நலன் விளையாதென்பது எனது உள்ளக்கிடக்கை. இது நண்பர் நாயக்கருக்கு நன்கு தெரியும்.

வகுப்புரிமைத் தீர்மானத்தை வீழ்த்தவே யான்முயன்று கொண்டிருந்தேன் என்பதை வலியுறுத்திக்காட்டத் திரு. நாயக்கர்'குடியரசு' இருபத்தொன்பது கடாக்களைப் பொறித் திருக்கிறது. காஞ்சி மகாநாட்டின் நடைமுறையையே பல வினாக்களாகக் 'குடியரசு' செப்பஞ் செய்திருக்கிறது. இன் னுஞ் சில கேள்விகளையும் அவைகளோடு 'குடியரசு' கூட்ட லாம். 'முதலியார் நின்றது உண்மையா? இல்லையா? இருந் தது உண்மையா? இல்லையா? வாய்திறந்தது உண்மையா? இல்லையா?' என்பனபோன்ற பல வினாக்களை வரும் வாரம் சேர்க்குமாறு 'குடியரசை'க் கேட்டுக்கொள்கிறேன்.

வகுப்புரிமைத் தீர்மானம் விஷயாலோசனைக் கூட்டத்தில் திரு. நாயக்கர் சார்பாகத் திரு. எஸ். இராமநாதனால் கொணரப்பட்டது. சிறிதுநேரங் கடந்து அவண் போந்த நண்பர் நாயக்கர் அதை ஆதரித்தார். அவ்வேளையில் திரு. கிருஷ்ணசாமி பாவலர் 'நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பிராமணரல்லாதாரா யிருத்தல் வேண்டும்' என்றொரு துண்டு ஒட்ட வைத்தார். அதே நேரத்தில் கும்பகோணம் திரு. சுப்பிரமணியபிள்ளை ஒரு தீர்மானங் கொணர்ந்து என்பால் சேர்த்தார். அஃது ஆங்கிலத்தில் வரையப்பட்டிருந்தது. அதனடியில் எவர் கையெழுத்துமில்லை. அதன்கண் 'நூற்றுக்கு எழுபத்தைந்துபேர் பிராமணரல்லாதாரா யிருத்தல் வேண்டும்' என்பது கண்டிருந்தது. அதன் வரலாற்றை ஆராய்ந்ததில், அஃது ஒரு சத்திரத்தில் திரு. கோவை இராமலிங்கஞ் செட்டியார் தலைமையின்கீழ்க் கூடிய பிராமணரல்லாதார் கூட்டத்தில் நிறைவேறப்பெற்றது என்று தெரிய வந்தது. அத்தீர்மானம் ஒரு முறையாகச் செப்பஞ் செய்து அனுப்பப்படவில்லை. வகுப்புரிமைத் தீர்மானத்தைப்பற்றி நடந்த வாதமுறைகளை ஈண்டு விரித்துரைக்க வேண்டுவதில்லை. அவைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. முடிவில் திரு. இராமநாதன் தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டது. அது தோல்வியுற்றது. பின்னர் அதை மகாநாட்டில் வலியுறுத்தப்போவதாக திரு. இராமநாதன் அறிவித்தார். அவ்வறிவிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்னை மகாநாடு கூடியதும், 'காங்கரஸில் சுயராஜ்யக் கட்சி ஒன்றல்வேண்டும் (காங்கரஸ் சட்டசபை நுழைவை ஏற்கவேண்டும்)' என்னும் மாறுதலோடு பாடலிபுரத் தீர்மானம் முதல்முதல் எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்டசபை நுழைவுப் பகுதியைத் திரு. நாயக்கர் மிக உரமாக எதிர்த்தார். அதைப்பற்றிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், விஷயாலோசனைக் கூட்டத்தில் வகுப்புரிமைத் தீர்மானம் தோல்வியுற்றமையால், அதை மகாநாட்டில் கொணர்தற்கு இருபத்தைந்து பிரதிநிதிகள் கையெழுத்துகள் வேண்டற்பாலன என்று அறிக்கை

செய்யப்பட்டது. அவ்வாறே கையெழுத்துகள் வாங்கப் பட்டன. வாதத்திலிருந்த முதல் தீர்மானம் ஒரு சிறு திருத்தத்தோடு நிறைவேறிற்று. சட்டசபை நுழைவுப் பகுதி நிறைவேறவில்லை. இது நாயக்கருக்கு மகிழ்ச்சி யூட்டிற்று. 'என்ன! நாயக்கர் காங்கரஸோடு சுயராஜ்யக் கட்சி யொன்றுதலையும் விரும்பவில்லை (காங்கரஸ் சார்பில் சட்ட சபை நுழைவை ஆதரிக்கவில்லை); வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்தையும் வலியுறுத்துகிறாரே' என்று யான் நினைந்து கொண்டிருந்தேன்.

பின்னே, பாடலிபுர முடிவின்படி முதல் தீர்மானம் (சட்டசபை நுழைவு கூடாதென்பது) நிறைவேறப் பெற்றமையானும், சட்டசபை நுழைவில்லாதபோது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இடம்பெறு தாகலானும், சட்டசபைத் தேர்தல் முதலியன சுயராஜ்யக் கட்சியைப் பொறுத்து நிற்றலானும், (அதுபோழ்து சட்டசபை நுழைவை ஆதரியாத) காங்கரஸ் சார்பாகக் கூட்டப்பெற்ற இம்மகாநாடு வகுப்புரிமைத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுவதே அநாவசியம் என்று எண்ணி அத்தீர்மானத்தை ஒழுங்கீனமென யான் தள்ளிவிட்டேன்.

'(சட்டசபை நுழைவை ஆதரித்த) சுயராஜ்யக் கட்சி காங்கரஸோடு ஒன்றுதலுங் கூடாது; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் வேண்டும்' என்று நாயக்கர் கருதிப் போராடுவதற்குப் பொருளேயில்லை. என்மீது வீண்பழி சுமத்தவே அவர் முயன்று வருகிறாரென்று கருத இடமுண்டாகிறது.

'ஏன் இருபத்தைந்து பேர் கையெழுத்துக் கேட்டீர்?' என்று என்னை நோக்கிக் 'குடியரசு' கேட்கிறது. இதை நண்பர் நாயக்கர் மகாநாட்டிலேயே என்னை நோக்கிக் கேட்டார். அதற்கு யான் அப்பொழுதே பதிலிறுத்தேன். 'கையெழுத்துக் கேட்டபோதிருந்த நிலை வேறு; ஒழுங்கீனத் தீர்ப்புக் கூறியபோது உற்ற நிலை வேறு' என்பதை மகாநாட்டில் நன்கு விளக்கினேன். அவ் விளக்க உரையைக் 'குடியரசு' ஓர்ந்துணராது, எவர் உபதேசத்துக்கோ மயங்கி, யான் தீர்மானத்தைத் தள்ளினேன் என்று சொல்வது அறமாகாது.

இருபத்தைந்து பேர் கையெழுத்துக் கேட்டது முதல் தீர்மானம் விவாதத்திலிருந்தபோ தென்பதையும், முதல் தீர்மானம் நிறைவேறிய பின்னை நிலைமை மாறினமையால் வகுப்புரிமைத் தீர்மானத்தைத் தள்ள நேர்ந்ததென்பதையும் நேயர்கள் கவனிப்பார்களாக.

முதல் தீர்மானத்தில் காங்கரஸோடு சுயராஜ்யக் கட்சி ஒன்றல்வேண்டும் என்னும் பகுதி பெரிதும் எனது முயற்சியால் கொணரப்பட்டது. திரு. ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலியோரும் அதற்கிணங்கினர். விஷயாலோசனைக் கூட்டத்தில் நண்பர் நாயக்கர் அதைப்பற்றி ஒன்றும் போசாது வாளா கிடந்தார்; மகாநாட்டில் மட்டும் வீறிட்டெழுந்து அதை மறுத்தார். இதைப்பற்றித் திரு. நாயக்கரை யான் ஏதாவது கேட்டேனா? கேட்கிறேனா? அஃது அவர் விருப்பம் என்றே யான் கருதுகிறேன். நண்பர் நாயக்கரைப் போலவே திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் காங்கரஸோடு சுயராஜ்யக்கட்சி ஒன்றுதல் கூடாது என்று மகாநாட்டில் பேசினார். 'விஷயாலோசனைக் கூட்டத்தில் வாளாகிடந்த நாயக்கர், இராஜகோபாலாச்சாரியார் உபதேசத்தால் மயங்கி மனச்சான்றை விற்று மகாநாட்டில் முதல் தீர்மானத்தை எதிர்த்தார்' என்று யானுங் கருதலாமன்றோ? யான் அவ்வாறு ஒருபோதும் கருதேன். சட்டசபைத் தேர்தலுக்குரிய ஒரு கட்சியைக் காங்கரஸோடு ஒன்றுமாறு கொணரப்பட்ட பகுதி நிறைவேறுதொழிந்த பின்னர், வகுப்புரிமைத் தீர்மானத்துக்கும் இம் மகாநாட்டுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று எனது மனச்சான்று கூறிற்று. அதன்வழி நின்றே யான் வகுப்புரிமைத் தீர்மானத்தைத் தள்ளினேன். எனது செயலைத் திரு. நாயக்கருடன் வெளியேறிய நான்கு ஐந்துபேர் தவிர, மகாநாட்டிலிருந்த மற்றவரெல்லாரும் ஆமோதித்தனர் என்பது, எனது முடிவுரையில் அப் பகுதியை யான் குறிப்பிட்டபோது புலனாயிற்று. உண்மை இவ்வாறாக, 'ஐயங்கார் ஆச்சாரியார் கைப்பிள்ளையாக முதலியார் ஆடினார்' என்று 'குடியரசு' கூறுவது வீண்பழியே யாகும். ஐயங்காரோ

ஆச்சாரியாரோ நாயக்கரோ நாயுடுவோ எவர் கருத்துக்கும் யான் அடிமையாகும் எளியனல்லன்.

ஒவ்வொன்றையும் அளந்தளந்து பார்த்து, எது எனது கருத்துக்கு அரண் செய்கிறதோ, அதற்கு ஆக்கந் தேட எவரோடும் இணங்கி உழைப்பேன் ; முரண் செய்யும் ஒன்றுடன் இணங்காதொதுங்குவேன். இஃது எனது இயல்பு என்பதை நாயக்கர் அறிந்தும் அறியாதார்போல என்மீது பழி சுமத்துவதை அறக்கடவுளுக்கு விடுக்கிறேன்.

பிரிட்டிஷ் சாமான் விலக்கலில் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் கருத்தோடு யான் மாறுபட்டதும், வேறு சிலவற்றில் ஸ்ரீநிவாச ஐயங்காரோடு மாறுபட்டதும் நாயக்கருக்குத் தெரியும். நண்பர் நாயக்கர் பன்முறை சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கருத்தின் பொருட்டுத் தங் கருத்துக்கு மாறுபட்டு நடந்த பழைய அநுபவக் கண் கொண்டு இதுபோழ்து என்னை நோக்குகிறார் போலும் ! நாயக்கரே ! மனச்சான்றுக்கு மாறுபட்டு யான் நடவேன் என்பதை உணர்வீராக. என் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகளை ஈண்டுக் குறித்தல் தற்புகழ்ச்சியின்பாற்படுமெனக் கருதி அவைகளைக் குறியாது மேற்செல்கிறேன். வானந் துளங்கினும் கடல் பொங்கினும் விரிசுடர் வீழினும் எனது நிலையினின்றும் யான் பிறழேன் பிறழேன் என்பதை உணர்வீராக. நாயக்கரே ! மருளற்க ; மகாநாட்டு நிகழ்ச்சிகளை மீண்டும் ஒருமுறை நினைவூட்டிக்கொள்க; நிலையை ஆராய்ந்து பார்க்க ; உண்மை புலனாகும். மருண்ட மனங்கொண்டு எதை நோக்கினாலும் திரிபாகத் தோன்றுதல் இயல்பே.

எனது தீர்ப்புத் தவறெனக் 'குடியரசு' வாரந்தோறும் கூறி வருகிறது. அக்கூற்றுக்களை யான் ஊன்றி நோக்கி வருகிறேன். எனது செயல் தவறு என்று யான் உணர்வனேல், உடனே ' தவறு ' என்று பறையறைவேன். தவறு என்று உணர்ந்தும் அதை வெளியிட இணங்காத மனமுடைய ஒருவன் மனிதனாகான். மனிதன் கடவுள் அல்லன். குறைவிலா நிறைவாயிருப்பவன் ஆண்டவன் ஒருவனே. ஆனால் ஒருவன் தனது செயலைத் தவறு என்று உணராத

வரை அவன் என்செய்தல் கூடும்? ஒழுங்கீனமென வகுப்புத் தீர்மானத்தை யான் தள்ளியது நியாயமென்றே எனது அறிவும் மனமும் எனக்கு இன்னும் அறிவுறுத்துகின்றன. என்செய்வல்!

திரு. நாயக்கர் அன்புளங்கொண்டு 'இவ்விடத்தில் யான் தவறிழைத்தேன்' என்று எனக்கு விளக்க முயலல் வேண்டும். அவரது விளக்க உரை என் தவறுதலை உணர்த்தும் ஆற்றல் பெறுதொழியின், எனது மனச்சான்றை அவமதித்தலை அவமொழித்தல் வேண்டும். இரண்டிலொன்றைச் செய்யாது வசைமொழியால் ஏன் அலங்கரித்து மனத்தைப் புண்படுத்திக்கொள்ளல் வேண்டும்?

தாம் தண்ணீர் அருந்தச் சென்ற வேளையில் தீர்மானத்தை வாக்குக்கு விட்டு ஏமாற்றினேன் என்றும், தீர்மானத்தை விரைவாக வாசித்து நிறைவேற்றினேன் என்றும், தம்மை மதிக்கவில்லை என்றும், மனம் போனவாறு 'குடியரசி'ல் நாயக்கர் எழுதுவது என்னை அநாவசியமாகத் தூற்றுவதாகும். நாயக்கர் தண்ணீர் அருந்தச் சென்றது எனக்கு எப்படித் தெரியும்? காலத்தின் அருமை நோக்கி மகாநாட்டைக் காலத்தில் முற்றுறச் செய்வது தலைவன் கடனன்றோ? நாயக்கரை யான் ஏன் அவமதிக்கிறேன்? மகாநாட்டிற் போந்திருந்த அனைவரிலும் நாயக்கரே எனக்குரிய தோழராவர். தோழமையின் பொருட்டு அநியாயத்தில் தலைப்படுவது அறமாகுமா?

நாயக்கரை நோக்கி யான் நகைத்ததாகக் 'குடியரசு' கூறுகிறது. புன்முறுவல் என்பால் ஊர்ந்துகொண்டிருத்தல் இயல்பு. இதற்கு யான் என்செய்வேன்! மகாநாடுகளில் சிலர் ஆவேசங்கொண்டு பேசும்போதும் வையும்போதும் 'ஏன் இப்படி இவர்கள் ஆடுகிறார்கள்' என்று யான் நகைப்பதுண்டு. நாயக்கரைப் பார்த்து நகைத்தது எனக்கு நினைப்பில்லை; நகைத்திருக்கலாம். நாயக்கர் ஏன் மிக நுட்பமாக எனது மெய்ப்பாடுகளைக் கவனித்து வந்தார் என்பது விளங்கவில்லை.

இன்னும் 'குடியரசி'ன் குப்பைகளைக் கிளறினால் நாற்றமே வீசும். இனிக் 'குடியரசு' மனந்திரும்பி நல்வழியில் நடப்பினும் நடக்க; மேலும் மேலும் என்மீது சொல்லம்புகளைப் பெய்யினும் பெய்க. அதைப்பற்றிய கவலை எனக்கில்லை.

காஞ்சி மகாநாட்டில் மனச்சான்று வழியே யான் நடந்தேன் என்று எனது நிலையை வலியுறுத்தவே இச்சிறு கட்டுரை வரையலானேன். என் கருத்துக்களைக் காஞ்சி மகாநாட்டின் முன்னுரையிலும் முடிவுரையிலும் வெளியிட்டுள்ளேன். எனது மனதுக்கியைந்தவழி நின்று என்னாலியன்றவரை என்னருமைத் தமிழ்நாட்டுக்குச் சேவைசெய்து வருவேன். தமிழ் நாட்டிலுள்ள அனைவரையுந் தமிழ்க் கடவுளாகக் காணவேண்டுமென்பது எனது தவம்.

(18-12-1925)

## சீர்திருத்தம்

### I

சீர்திருத்தம் பன்முகங் கொண்டது. காலதேச வர்த்தமானத்துக் கேற்றவாறு அஃது இயங்குவது. சில இடங்களில் அரசியல் சார்பாகவும், சில இடங்களில் மக்கள் வழக்க ஒழுக்கச் சார்பாகவும், சில இடங்களில் சமயச் சார்பாகவும் சீர்திருத்தம் நடைபெறும். அவ்வத் துறைக்கு வேண்டப்படும் அவ்வச் சீர்திருத்தத்தை அவ்வப்போது அவ்வவ்விடத்தில் இயற்கை நிகழ்த்திக்கொண்டே போகும். பெரிய சீர்திருத்த அரசி இயற்கை அன்னையேயாவள். அவள் ஆணை சில வேளைகளில் அறிவிற் சிறந்த சில அன்பர் வாயிலாக நிறைவேறுவதும் உண்டு. இயற்கைவழி நிகழுஞ் சீர்திருத்தத்தால் மக்கள் வாழ்விற்கு இடையூறு நேராது. இயற்கை நோக்கை உணரும் அறிவாற்றல் வாய்க்கப்பெறாது, முனைப்புக்கும் சீற்றத்துக்கும் இரையாகிக் கனன்று திரியுஞ் சிலரால் நிகழ்த்தப்பெறுஞ் சீர்திருத்தத்தால் உலகில் அமைதி

யின்மையும், குலைவும், பிறவும் ஏற்படும். ஆகவே, சீர்திருத்த மென்பது விளையாட்டன்று என்பதை நேயர்கள் உன்னுவார்களாக.

அரசியலிலோ சமுதாயத்திலோ சமயத்திலோ பிறவற்றிலோ வேண்டப்படுஞ் சீர்திருத்தம் நிகழ்த்தப் புகுவோர் முதலாவது இயற்கை நோக்கை உணர்பவரா யிருத்தல் வேண்டும்; அறிவும் அன்பும் நிரம்பிய மக்கள் இயற்கை நோக்குணர்ந்து முன்னர் அறிவுறுத்தியுள்ள உரைகளை ஆராய்ந்து நல்லறிவு பெற்றவராய், அவ்வறிவால் நன்மை தீமைகளைப் பகுத்துணர்பவரா யிருத்தல் வேண்டும்; அவ்வறிவுடன் உயிர்களிடத் தன்புடையரா யிருத்தல்வேண்டும். இவைகளுடன் வேறு சில நறுங்குணங்களும் சீர்திருத்தக்காரர்பால் நிலவுதல் வேண்டும். சீர்திருத்தத்துக்குத் தொடக்கத்தில் சிலர் மாறுபட்டு நிற்பர். சிலர் எதிர்ப்பர்; மோதுவர்; முட்டுவர்; வேறு பல இழி துறையிலும் இறங்குவர் அவர்மீது எக்காரணம் பற்றியும் சீர்திருத்தக்காரர் எரிந்துவிழுதல் கூடாது; பதிலுக்குப் பதில் செய்தல் என்னும் எண்ணமும் அவரிடை அரும்புதல் கூடாது. இன்னோரன்ன இயல்புகள் வாய்க்கப்பெற்றவரே இயற்கையின் ஏவல் வழி நின்று கடனாற்றுஞ் சீர்திருத்தக்காரராவர். இவ்வியல்புகள் வாய்க்கப்பெறுதார் சீர்திருத்தத்தில் இறங்குதலாகாது. இறங்குவரேல் அவரால் நலன் விளையாது; தீமை விளையும்.

இப்பொழுது நமது நாடு பல துறையிலுஞ் சீர்திருத்தத்தை விழைந்து நிற்றல் வெள்ளிடைமலை. அவ்வத் துறையில் வல்லவர் அவ்வத் துறைக்குரிய சீர்திருத்தத்தில் தலைப்பட்டுக் கடனாற்றி வருகிறார். அத்தகைச் சீர்திருத்தத் தொண்டுகள் தென்னாட்டிலும் நந்தமிழ் நாட்டிலும் நிகழ்ந்து வருகின்றன. தொண்டுகளுள் சமயச் சீர்திருத்தத்தைப் பற்றியதொன்று பெரிதுங் கவனிக்கத்தக்கதா யிருப்பது. சீர்திருத்தத் துறைகளுள் சமயச் சீர்திருத்தத் துறையிலிறங்குவோர் மிக எச்சரிக்கையுடன் அத்துறை நண்ணுதல் வேண்டும்.

இதுபோழ்து தென்னாட்டில் ஹிந்து மதத்தைப்பற்றிய சீர்திருத்தக் கிளர்ச்சி வீறிட்டு நிற்கிறது. பொதுவாகக் கிளர்ச்சி போற்றற்குரியதே. அக்கிளர்ச்சி நேரிய முறையில் இயங்கல்வேண்டும் என்பது நமது உள்ளக்கிடக்கை.

சீர்திருத்தக்காரர் என்று தம்மை நினைந்துகொள்ளும் சிலர்க்கும் மற்றவர்க்கும் தமிழ்நாட்டில் போர் மூண்டிருக்கிறது. இருசாரார் பேச்சிலும் எழுத்திலும் கனல் இல்லாமலில்லை. சீர்திருத்தத்துக்கு மாறுபட்டு நிற்போர் பேச்சிலும் எழுத்திலும் பறக்குந் தீப்பொறியைப்பற்றிக் கவ்லையுற வேண்டுவதில்லை. சீர்திருத்தத்துக்கெனப் புறப்படுவோர் பேச்சிலும் எழுத்திலும் அப்பொறி பறத்தலாகாது. அவர் பேச்சிலும் எழுத்திலும் தண்மை நிலவல்வேண்டும். தண்மைக்குரிய அறிவு அன்பு பொறுமை முதலிய நிலவுக்கால்கள் பொழியும் முறையில் சீர்திருத்தக்காரர் பேச்சும் எழுத்தும் முகிழ்த்தல் வேண்டும். மற்றவரைப்போலச் சீர்திருத்தக்காரர்களுங் கயமைத்துறையி லிறங்குவது உண்மைச் சீர்திருத்தத்தை நாடுவதாகாது. இழிதுறை நண்ணுவோர் சீர்திருத்தக்காரரல்லர். அவரும் தாங்கொண்ட ஒன்றைப் பிடித்து மல்லாடுவோரே யாவர். மற்றவர் பேச்சில் எழுத்தில் ஒரு வசைமொழி யிருந்தால் தற்காலச் 'சீர்திருத்தக்காரர்' பேச்சில் எழுத்தில் பத்து வசைமொழிகளிருக்கின்றன. இப்போர்முறை சீர்திருத்தமாகுமா ?

மூடக் கொள்கைகளை உடைத்தெறிய எழுந்த புத்தர் கிறிஸ்து முதலியோர் தமக்கு மாறுபட்டாரைத் தாக்கிப் போர் புரிந்தாரில்லை. அக்காலக் கொள்கையில் பற்றுவாய்ந்தோர் வாயினின்றும் பிறந்த வசைமொழிகளையும், கையினின்றும் பிறந்த அடி உதைகளையும் பெரியோர் பொறுமையுடன் ஏற்றே கடனாற்றி யிருக்கிறார். அவர் அடிச்சுவட்டைப் பற்றிச் சீர்திருத்தக்காரர் கடனாற்றுவாராக.

மற்றுமொன்று ஈண்டுக் குறிக்க விரும்புகிறோம். சீர்திருத்தத்தில் நுழைவோர், தாம் ஆற்றப் புகுந்தது சீர்திருத்தமா அல்லது அழிவா என்பதைச் சிந்திப்பாராக.

சீர்திருத்தமென்பது உள்ள ஒன்றை ஒழுங்குபடுத்துவதே யாகும். உள்ள ஒன்றை முற்றும் அழிப்பது சீர்திருத்த மாகாது ; அது தகர்ப்பே யாகும்.

தமிழ்நாட்டில் ஊறிந்து மதத்தைப்பற்றி எழுந்துள்ள கிளர்ச்சி, சீர்திருத்தத்தை ஒட்டியதா அல்லது முழு அழிவை ஒட்டியதா என்பதைப் பொதுமக்கள் கருதுங் காலம் நேர்ந்திருக்கிறது. எல்லாத் தொண்டுக்கும் நாட்டில் இடனுண்டு. எதற்கும் உரிமை இருந்தே தீரல்வேண்டும். ஆனால் தொண்டில் நுழைவோர் தமது முறை இஃதெனத் தெரிந்துகொள்ளக் கடமைப்படல் வேண்டும். சிலர் சீர்திருத்தம் என்னும் பெயரால் அழிவுவேலை செய்து வரு கிறார். அவர் சீர்திருத்தம் என்பதற்கு அழிவுவேலை என்று கொண்டு தொண்டாற்றுகிறாரோ என்னவோ தெரியவில்லை. சீர்திருத்தம் என்னும் பெயரால், நிகழ்த்தப்பெறும் அழிவு வேலையால், கண்மூடி வழக்கங்கள் உரம் பெறினும் பெறும். இதை அத்தொண்டாற்றுவோர் சிறிது அமர்ந்து உன்னுவா ராக. இவரால் உண்மைச் சீர்திருத்தக்காரர் தொண்டுக்கும் இடர் விளைகிறது. இன்னோரன்ன பல தடைகளை நேயர்கள் கூர்ந்து கூர்ந்து சிந்திப்பார்களாக. இன்று பொதுமுறை பற்றி எழுதலானோம். சிறப்புமுறைபற்றிச் சமயம் நேர்ந் துழி எழுதுவோம். (14–12–1927)

## II

சீர்திருத்தம் என்னுந் தலைப்பீந்து முன்னர் ஒருமுறை நாம் எழுதிய கட்டுரை நேயர்கள் நினைவிலிருக்கும். அக் கட்டுரைக்கண் சீர்திருத்தத்தின் பொதுஇயல்கள் பெரிதும் குறிக்கப்பட்டன. இன்று அக் கட்டுரையை ஒட்டிச் சீர் திருத்தத்தின் சிறப்பியல்களிற் சில குறிக்கப் புகுகிறோம்.

சீர்திருத்த முயற்சி உலகில் யாண்டும் நிகழ்ந்துவருவது நேயர்கட்குத் தெரியும். உலகில் குறைபாடுகள் உள்ளமட்டும் சீர்திருத்தக் கிளர்ச்சிகள் பன்முகங் கொண்டு இயங்கியே

தீரும். குறைபாடுகள் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. ஆனால் அவை ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு விதமாக நிலவி வருகின்றன. குறைபாடில்லாத நாடே யில்லை.

குறைபாடுகள் ஏன் உலகில் இருத்தல்வேண்டும்? இதற்கென்ன விடை யிறுப்பது? சுருங்கிய முறையில் ஒருவித விடையிறுக்கலாம். மனிதனிடத்தில் காம வெகுளி மயக்கம் முதலியன உள்ளமட்டும், உலகில் குறைபாடுகள் குடிகொண்டிருத்தல் இயல்பென்று சுருங்கச் சொல்லலாம். காமவெகுளி மயக்கம் முதலியன களையப்படின் உலகிடை குறைபாடுகள் இரா. ஆகவே, சீர்திருத்தத்துக்கு அடிப் படை மக்களிடை நிலவுங் குற்றங்களைக் களைய முயல்வ தாகும்.

மக்கள்மாட்டுள்ள குறைபாடுகளைக் களையப்புகுஞ் சீர் திருத்தக்காரர் நல்லியல்பு உடையவரா யிருத்தல்வேண்டும். காமவெகுளி மயக்கத்துக்கு இடந் தருவோர் சீர்திருத்தத் துறையில் நுழைவது குறைபாடுகளைப் பெருக்குவதாகவே முடியும். சீர்திருத்தக்காரர் காம வெகுளி மயக்கத்துக்கு எளியராகாது பொறுமைக்கு உறையுளா யிருத்தல்வேண்டும். இதுபற்றி முன்னைய கட்டுரையிலுங் குறிப்பிட்டிருந்தோம். அப் பொதுமுறைகளை மீண்டும் ஈண்டு விரித்தல் அநாவசியம். இன்று நமது நாட்டுக்குரிய சீர்திருத்தத்தின்மீது சிறிது கருத்துச் செலுத்துவோம்.

நமது நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களையச் சீர்திருத் தம் என்னும் பெயரால் பலர் உழைத்துவருகிறார். இந்நாளில் அன்னார் உழைப்புப் பெரிதும் பத்திரிகையளவில் - மகாநாட் டளவில் - பேச்சளவில் - கட்டுப்பட்டு நின்றுவிடுகிறது. அவைகளைக் கடந்து அவர்கள் உழைப்பு ஓடுவதில்லை. குற்றம் யாருடையது? மக்களுடையதா? - தலைவர்களுடையதா? குற்றம் இருசாரார்மாட்டும் உண்டு என்று சொல்லப்படு கிறது. இவ்வாறு கூறல் எளிது. கூர்ந்து நோக்குழி மக்களைப் பழித்தல் வேண்டுவதில்லை என்பது விளங்கும்.

மக்கள் மனோநிலை பெரிதும் தலைவர் என்று வெளி வருவோர் மனோநிலைக்கேற்றவண்ணம் அமைவது. தலைவர் புரட்சிக்காரரா யிருந்தால் மக்களும் புரட்சிக்காரராவர். தலைவர் பொறுமையாளரா யிருந்தால் மக்களும் பொறுமை யாளராவார். இது மன்பதையின் இயல்பு.

'தலைவர்கள் எத்துணை ஆண்டுப் பேசியும் எழுதியும் பாடுபடுகிறார்கள்! பாழும் நாடு திருந்தவில்லையே' என்று சிலர் அறைகிறார். நாடு என் செய்யும்? நாட்டை நடாத்தப் புகும் தலைவரையே எல்லாம் பொறுத்து நிற்கின்றன. ஆகவே, எல்லாப் பொறுப்பும் தலைவர் தலையில் வீழ்ந்து கிடத்தல் கருதற்பாலது.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் விளைவ தென்ன? இருவருங் குழியில் வீழ்ந்து இடர்ப்பட வேண்டு வதே. அதுபோலக் காமவெகுளி மயக்கத்தால் மோதுண்டு கிடப்போர் நாட்டைச் சீர்திருத்தவருவதால் நாட்டில் என்ன வளரும்? மக்களைச் சீர்திருத்த வருவோர் குணமெனுங் குன்றேறி, ஆன்மசக்தி பெற்றவரா யிருத்தல்வேண்டும். அவர் சொல்லே மக்களிடை நுழைந்து வாழ்வை ஒழுங்கு படுத்தும். மற்றவர் பேச்சும் எழுத்தும் அவரவர் அளவில் நின்றொடுங்கிவிடும். அவை மக்கள் வாழ்வில் நுழைந்து பயன் செய்யா. சீர்திருத்தத்துக்கு ஆன்மசக்தி வேண்டும். ஆன்மசக்தி யில்லாதார் பேசும் சீர்திருத்தம், 'சீர்திருத் தம்' என்னும் எழுத்தளவிலேயே நிற்கும். ஆன்மசக்தி பெற்ற தலைவர் நமது நாட்டுக்கு இதுபோழ்து வேண்டற் பாலர்.

ஆன்மசக்தி பெற்றவரே நமது நாட்டில் சீர்திருத்தத் துறையில் இறங்கி உழைத்துவந்தனர். இந்நாளில் பெரிதும் மேனாட்டுக் கூட்டுறவால் ஆன்மசக்தி எண்ணமும் அற்று விட்டது. இந்நாளில் எந்நெறி பற்றிச் சீர்திருத்தத்துறை நண்ணுவது என்று நேயர்கள் நினைக்கலாம். மேல்நாட் டவர்பாலுள்ள உலகியல் கட்டு ஒழுங்கு முதலியனவாதல்

தலைவர்களிடை நிலவுதல் வேண்டும். அதுவையும் இல்லை. என் செய்வது ?

ஆன்மசக்தியுமில்லை; கட்டு ஒழுங்குமில்லை. இரண்டும் இல்லா நாட்டின்நிலை என்னுகும் ?

சீர்திருத்தத் தலைவரெனக் கிளம்புவோர் ஆன்மசக்தி பெற முயல்வது அறிவுடைமை. அச்சக்தி முற்றும் ஒரு சிலர் பெறின், அவரால் நாட்டிலுள்ள குறைபாடுகளை மிக எளிதில் ஒழித்தல்கூடும். அச்சக்திபெற இயலாத தலைவர்கள் உலகியலுக்குரிய ஒழுங்குமுறைகளையாதல் கடைப்பிடித்தொழுகல் வேண்டும்.

இப்பொழுது நமது நாட்டில் சீர்திருத்த இயக்கங்கள் பல தோன்றியிருக்கின்றன. அவைகளிடை ஒழுங்குமுறைதானுண்டா ? வெட்கம் ! வெட்கம் ! நிந்தனையும் பகைமையும் பிற இழிவும் நாட்டை அல்லலற்படுத்துகின்றன.

இவ் வுலகவாழ்விற்கு அடிப்படை உடல்நலன். நமது நாட்டு மக்கள் உடல்நலன் மிக இழிவுற்றிருத்தல் கண்கூடு. அகாலமரணமும், குழந்தை மரணமும், கருச் சிதைவும் நமது நாட்டில் அதிகம் என்பதை அறியாத சீர்திருத்தத் தலைவரில்லை. நமது நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உலர்ந்தெழுந்த நரம்பினராய், வற்றிய தோளினராய், கூடுவிட்ட மார்பினராய், குழிவிழுந்த கண்ணினராய், பருத்த தொந்தியினராய் வாழ்ந்து வருவதை எவரே அறியார் ? இந்நிலையிலுள்ள நாட்டுக்கு முதல்முதல் எவ்வறிவுறுத்தல் வேண்டும் என்பதைச் சீர்திருத்த நேயர்கள் சிந்திப்பார்களாக.

சீர்திருத்தக்காரர் என்று சொல்லிக்கொள்வோர் நாட்டிடை மலிந்து கிடக்கிறார். இவரனைவரும் ஒன்றுபட்டு முதல் முதல் ஓராண்டு அல்லது ஈராண்டு மக்கள் உடல் நலச் சீர்திருத்தம் பெறும் முயற்சியில் தலைப்படலாகாதா என்று கேட்கிறோம். உடல்நலம் பெறாத நாட்டார் உலகில் எவ்வாறு நல்வாழ்வு நடாத்தல் கூடும் ? உடல்நலம்

விளையாட்டன்று. அது வாழ்விற்கு இன்றியமையாதது. சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதல் வேண்டும்?

உடல்நலத்தைக் கெடுத்துவரும் நமன்கள் இன்ன இன்ன என்று விரிக்கின் கட்டுரை நீளும். சிற்சிலவற்றை ஈண்டுக் குறிக்கிறோம். அவை: கட்குடி, காப்பிக்குடி, மில் அரிசி, சத்திலா உணவு-முதலியன. கட்குடியைத் தொலைக்க எழுந்த பேச்சுக்களும் எழுத்துக்களும் தீர்மானங்களும் எண்ணில. அவைகளால் பயன் விளைந்ததா? இல்லை. காரணம் என்னை? மதுவிலக்குத் தொண்டரிடத்தில் போதிய அளவு ஆன்மசக்தி யின்மையைச் சிறந்த காரணமாகக் கூற லாம். அஃதில்லா தொழியினும் அவர்கட்குள் ஒற்றுமை யாதல் இருத்தல் வேண்டும். அஃதும் இல்லை.

மதுபானத்தால் எவ்வளவோ கேடுகள் விளைகின்றன. நமது நாட்டில் மதுவிலக்குப் பிரசாரம் வீறிட்டெழும்; மீண்டும் கடலேறும். சட்டசபை நேயர்களிற் பலர் தேர்த லின் போழ்து மதுவிலக்கில் எத்தகைக் கருத்துச் செலுத்து கிறார் என்பதை எழுதவுங் கையோடவில்லை. மதுவிலக்குச் சீட்டில் கைச்சாத்திட்ட (உறுதிமொழி கூறிய) சகோதரர் சிலர், கள் வாணிபரிடம் போகும்போது என்ன சொல்கிறார்! 'ஐயன்மீர்! மகாத்மா காந்தியின் பெயர்மீது மக்கட்கு ஒரு விதப் பித்தேறிவிட்டது. மகாத்மாவோ மதுவிலக்கில் உறுதி கொண்டு நிற்கிறார். அவர்வழி நிற்பதாகக் காட்டிக் கொண்டாலன்றித் தேர்தலில் வெற்றிபெறல் முடியாது. ஆதலால் மதுவிலக்கில் ஈடுபடுவதாக வாக்குறுதி செய் தோம். சட்டசபை நுழைந்ததும் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிடுவோம். தங்கட்கு வாணிபத்துறையில் கேடு நிகழாதவாறு பார்த்துக்கொள்வோம்'. என்று சொல்கிறார். அன்னார் மதுவிலக்கில் உறுதியுடையார்மாட்டு அணுகும் போது, 'காந்தியடிகளின் திட்டங்களுள் மதுவிலக்கில் எமக்கு அதிக நம்பிக்கையுண்டு' என்று கூறுகிறார். மதுவிலக் குச் சீட்டில் கைச்சாத்திடாதவர், 'நாம் காந்திக்கு எதிர் கட்சிக்காரர்; மதுவிலக்கில் தலையிடாதவர். உங்கள் வாக்கால்தான் நாம் வெற்றியடைதல் வேண்டும். நமக்கு

வெற்றி கோரா தொழியின், நாளையே கள்ளுக்கடை கட்கு ஆபத்து வந்துவிடும்' என்று சொல்கிறார். இப்பொய்யர் புகலுஞ் சீர்திருத்தத்தால் ஏதாயினும் பயன் விளையுமா? இவர் சொல்லால் ஏதாயினும் நலன் விளையுமா? இவர் சொல்லில் ஏதாயினும் ஆற்றலிருக்குமா?

காப்பிக்குடி நிறுத்தத்தைப்பற்றி எக்கிளர்ச்சிக்காரரும் முயல்வதே யில்லை. இவ் வெம்மைநாட்டுக்குக் காப்பிக்குடி முற்றிலும் அநாவசியம். அதனால் விளையுங் கேடுகள் பலப் பல. அதைப்பற்றிய விரிவுரை ஈண்டு எற்றுக்கு? அக் குடி நாட்டில் நிலவுமட்டும் நாட்டார் உடல்நலன் உறுவது அரிது என்னலாம். அத்தகைக் கொடுமையை ஒழிக்க எத்தலைவர் முயல்வரோ என்பது தெரியவில்லை.

மில்லரிசிக் கொடுமையைப்பற்றி நாம் பன்முறை எழுதி யிருக்கிறோம். சீர்திருத்த மகாநாடுகளில் மில்லரிசி விலக்கைப்பற்றிப் பேச்சேனும் உண்டா? அந்தோ! சீர்திருத்த மகாநாடே!

உடல்நலனைச் சிதைக்கவல்ல நச்சுகளை ஒழிக்கச் சீர்திருத்தக்காரர் ஏன் ஒன்றுபடலாகாது? வீண் கூச்சலும் ஆரவாரமும் மக்கள்வாழ்வை எவ்வழியில் சீர்திருத்தும்? சீர்திருத்தக்காரர் நன்கு சிந்திப்பாராக. 'உடல்நலன் சீர்திருத்தத்தின்பாற் பட்டதன்று' என்று அவர் கூறிவிடுவார் போலும்!

இரண்டாவதாக ஈண்டொன்று குறிக்கிறோம். அதாவது சாதி. சாதி வேற்றுமை கூடாது என்று சொல்லாத சீர்திருத்தக்காரரில்லை. இது சீர்திருத்தக்காரர் உடைமை. ஆனால் சாதி வேற்றுமை வாழ்வுத்துறையில் எவ்வளவு ஒழிந்துள்ளது என்பதையும், இப்பொழுது சாதிவேற்றுமை வளர்ந்து வருகிறதா தேய்ந்து வருகிறதா என்பதையும் அன்பர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களாக.

முன்னே சாதி வேற்றுமை யிருந்தது. ஆனால் சாதிப் பூசல் பெரிதும் இல்லை. இப்பொழுது சாதி வேற்றுமை

வலுத்து வருவதோடு சாதிப் பூசலும் வலுத்து வருகிறது. ஒவ்வொரு சாதியாரும் மகாநாடு கூட்டித் தத்தமக்குச் சட்ட சபையில் இருக்கை வேண்டும் என்று கூக்குரலிடுகிறார். இதனால் சாதி வேற்றுமை எங்ஙனம் ஒழியும்? வகுப்பு வேற்றுமையைக் கடிந்து கூறும் சீர்திருத்தக்காரரும் சட்ட சபையை யொட்டி வகுப்புவாதத்தில் இறங்குகிறார். அவர் கூறும் காரணங்கள்மீது கருத்திருத்த வேண்டுவதில்லை. விளைவு என்ன என்பதொன்றே சிந்திக்கப்படல் வேண்டும். விளைவு என்னை? சாதிவேற்றுமை உணர்வு தேயாது வளர்வதேயாகும். பேச்சால் சாதிவேற்றுமையைத் தேய்த்தும், செயலால் அதை வளர்த்தும் வருவது எத்தகைச் சீர்திருத்தமோ நமக்கு விளங்கவில்லை!

'சாதிவேற்றுமை தொலைந்தே' தீரல் வேண்டும். அப்பேய் நாட்டில் உலவுமட்டும் நாட்டுக்கு உய்வில்லை என்பது உறுதி. சாதிப்பேயை எவ்வாறு ஓட்டுவது? பேச்சாலும் எழுத்தாலும் அப்பேய் ஓடாது. நடைமுறையில் படிப்படியாக அப்பேயை ஓட்ட முயலல்வேண்டும்.

'சாதிவேற்றுமையை அறவே தொலைத்தல்' என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, தற்கால நிலைமை நோக்கிப் படிப்படியாக முறைகள் கோலலாம். முதலாவது சாதிக்குள் சாதி யிருத்தலைத் தொலைக்கமுயல்வது நலன். ஒரு சாதியார் என்று சொல்லப்படுவோருள், எத்துணையோ உட்பிரிவுகள் இருக்கின்றன. அவைகளை முதலில் எளிதில் தொலைத்தல் கூடும். அத்தொண்டில் முதலாவது தலைப்பட்டுழைத்தால், பின்னை பிறப்பில் வகுப்பு வேற்றுமை களையப் புகுதற்கு இடன் உண்டாகும். இம்முறையையே கொள்ளல் வேண்டும் என்னும் நியதியில்லை. நடைமுறையில் வாத்தக்க எம்முறையையேனுங் கொள்ளலாம். வெறும் வசைபுராணம் வேண்டுவதில்லை என்பது நமது உள்ளக்கிடக்கை.

சீர்திருத்தக்காரருள் சட்டசபை விருப்புடையோர் இவ்வேளையில் சாதிவேற்றுமை யிருத்தல்வேண்டுமென்றே கருதுகிறார் பாவம்! இல்லையேல் அவர் சட்டசபையில் இருக்கைபெறல் அரிதாகும்போலும்!

வழக்கவொழுக்கங்களைப் பற்றிய சீர்திருத்தம் மிகவுஞ் சிக்கலுடையது. வழக்கவொழுக்கங்கள் என்பன நாகரிகத்தை ஒட்டியும் தட்பவெப்ப நிலையை ஒட்டியும் அரும்புவன. அவைகளில் சில நிலைபேறு யிருப்பன; சில காலத்துக் கேற்றவாறு மாறுவன. இன்னோரன்ன இயல்புவாய்ந்த வழக்கவொழுக்கங்களில் சீர்திருத்தஞ் செய்யப்புகுவோர் பேராராய்ச்சியும், அநுபவமும், குணநலனும் உடையவரா யிருத்தல் வேண்டும்.

ஆழ்ந்த ஆராய்ச்சியும் அநுபவமும் குணநலனும் இல்லாதார் காரணமின்றி வழக்கவொழுக்கங்களை மாற்றி மாற்றி இடர்ப்படுவர். வழக்கவொழுக்கங்களில் சிலவற்றைப் பழமை என்று எள்ளலும், சிலவற்றைப் புதுமை என்று போற்றலும், சிலவற்றைப் பெரும்பான்மையோர் கருத்து என்று கொள்ளலும், சிலவற்றைச் சிறுபான்மையோர் கருத்து என்று தள்ளலும் அறிவுக்குரிய செயலாகா. பழமையில் கொள்ளத்தக்கனவும், புதுமையில் தள்ளத் தக்கனவும் இருக்கும். தொகையில் பெரும்பான்மையோர் ஆராய்ச்சியில்லாதவராகவும், சிறுபான்மையோர் ஆராய்ச்சி யுடையவராகவும் இருக்கலாம். ஆகவே, இவைகளைக் காரணமாகக் கொண்டு மாற்றஞ் செய்வதால் வாழ்வு நலம் பெறுதொழியும். வழக்கவொழுக்கங்களிலுள்ள நலந் தீங்குகளை ஆராய்ந்து, உண்மை கண்ட பின்னரே, அவைகளில் தள்ளல் கொள்ளல் நிகழ்த்தப்புகுதல் வேண்டும்.

'தொன்மையவா மெனுமெவையு நன்றாகா இன்று
தோன்றியநூ லெனுமெவையும் தீதாகா துணிந்த
நன்மையினர் நலங்கொண்மணி பொதியுமதன் களங்க
நவையாகா எனவுண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினர் பழமையழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சாராராய்ந் தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர்ஏ திலருற்
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனவொன் றிலரே'

என வரூஉம் உமாபதி சிவாசாரியர் உரையை நோக்குக.

நமது நாட்டு வழக்கவொழுக்கங்கள் சிலகாலமாக நெறிபிறழ்ந்து குலைந்து வருகின்றன. நாட்டுக் கல்விவளன் குறைந்துள்ள இந்நாளில் வழக்கவொழுக்கங்கள் பலவாறு திரிக்கப்படுகின்றன. நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற வண்ணம் அமைந்துள்ள சில ஆன்ற வழக்கவொழுக்கங்களும் வாழ்வினின்றும் ஒதுக்கப்படுகின்றன. கால முறைக்குப் பொருந்தாத வழக்கவொழுக்கங்கள் மாற்றப்படலாம். அம் மாற்றம் அறிவையும் ஆராய்ச்சியையும் அநுபவத்தையும் அடிப்படையாகக் கொள்வதா யிருத்தல்வேண்டும்.

உடையிலும் உணவிலும் எடுத்துக்காட்டாக இரண்டொன்றை ஈண்டுக் குறிக்கிறோம். மேல்நாடு குளிர்மிகுந்த நாடு. அந்நாட்டுக்கென ஏற்பட்ட உடைமுறையை வெம்மை செறிந்த இந்நாட்டார் கொள்வது அறிவுடைமையா என்று வினவுகிறோம். வெயிற்காலத்தில் கால்சட்டை மேல்சட்டை உட்சட்டை கழுத்துச் சுருக்கு அணிந்து நரக வெம்மையில் எரிவது அறிவா? அறியாமையா? உன்னுங்கள். இவ் வுடைக்கோலம், சிலவேளைகளில் காய்ச்சல் அம்மை முதலிய வெந்நோய்களையும் உண்டாக்கும்.

முன்னாளில் நம்மவர்கள் தவிட்டுக் கொழியல் மூடிய அரிசியை உண்டு வாழ்ந்தார்கள்; நாளடைவில் நாகரிகம் என்னும் பெயரால் தவிட்டுக்கொழியலை முற்றும் ஒழித்துத் தீட்டிய அரிசியை உண்ணத் தொடங்கினார்கள். தவிட்டுக் கொழியல் ஜீரண சக்திக்கென அமைந்த ஒன்று. அதைத் தள்ளித் தீட்டிய அரிசியை உண்பது அறிவுடைமையா? ஆராய்ச்சி யின்றி ஒன்றைத் தள்வதும் மற்றொன்றைக் கொள்வதும் அறியாமையே யாகும்.

மூட வழக்கவொழுக்கங்கள் என்று பல சொல்லப்படுகின்றன. அவையிற்றுள் சில மடமையின்பாற்பட்டன என்பதில் ஐயமில்லை. அவைகளுடன் பூத பௌதிகத்துக்கு அரண் செய்யத்தக்க வழக்க வொழுக்கங்களையுஞ் சேர்த்து ஒதுக்கல் வாழ்வுக்கு இடுக்கண் தேடுவதாகும். வழக்கவொழுக்கங்களில் வாழ்வுக்கு அரண்செய்வன இவை

முரண்செய்வன இவை என்று பகுத்துணர்தல் எங்ஙனம் என்று சிலர் வினவலாம்.

இப்பொழுது மேல்நாட்டார் முயற்சியால் பூதபௌதிக ஆராய்ச்சி நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. அவைகளின் துணைகொண்டு நல்லன அல்லன காணலாம். வாழ்விற்குத் துணைசெய்யத்தக்க வழக்கவொழுக்கங்களையுங் குறைகூறுவோர் இருக்கிறார். அவர் அறியாமைக்கு இரங்க வேண்டுவதே.

சமயச்சீர்திருத்தஞ் செய்யச் சிலர் புறப்பட்டிருக்கிறார். ஆராய்ச்சியுடைய அறிஞரால் செய்யப்படுஞ் சீர்திருத்தங்களால் நலன் விளையும். மற்றவரால் செய்யப்படுஞ் சீர்திருத்தங்களால் தீமை விளையும். சமய உண்மைகள் என்றும் மாறமாட்டா. ஆனால் முறைகள் காலத்துக்கேற்ற வாறு மாறுதல் அடையும். முறைமாற்றம் வேண்டற்பாலதே. இன்று இவ்வளவோடு நின்றுவிடுகிறோம். (30–5–1928)

## 'குடியரசி'ன் குதர்க்கம்

ஈரோட்டினின்றும் வாரந்தோறும் வெளிவரும் 'குடியரசு' என்னும் பத்திரிகை குதர்க்கத்தில் பேர்பெற்றது என்பது நாடறிந்ததொன்று. அப் பத்திரிகை தோன்றிய நாள்முதல் இதுவரை எவரையேனும் தாக்குதல் வாயிலாகவே தனது செல்வாக்கை நிலைபெறுத்தி வருகிறது. எவரையேனும் போருக்கிழுப்பதே அதன் வேலை.

சில திங்களாகக் 'குடியரசு' நம்மை மறந்திருந்தது. அதன் நாட்டம் வேறு சிலர்மீது படிந்துகிடந்தது. இவ்வாரம் அப்பத்திரிகை தனது நாட்டத்தை மீண்டும் நம்மீது செலுத்தி யிருக்கிறது.

நமது 'நவசக்தி'யிற் போந்த சீர்திருத்தக் கட்டுரைகளைக் குறிக்கொண்டே 'குடியரசு' குதர்க்கத்திலிறங்கியிருக்கிறது.

அக் கட்டுரைகள் பொதுநெறி பற்றி எழுதப்பட்டனவே யன்றிக் 'குடியரசி'ன் ஆசிரியரையும், அவர் வளர்த்துவரூஉம் 'பெரிய' இயக்கத்தையுமே உளங்கொண்டு எழுதப்பட்டன வல்ல. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டனவெல்லாம் பேய்' என்னும் பழமொழிக் கேற்பச் சில சொற்களையும் சில சொற்றொடர்களையும் கண்டு மருண்டு 'குடியரசு' கூக்குரலிடுகிறது.

'நவசக்தி'யின் சீர்திருத்தக் கட்டுரைகளையும், 'குடியர' சின் மறுப்பையும் படித்துப் பார்ப்போர்க்கு நியாய அநியாயம் விளங்கும். 'குடியரசு' நமது கட்டுரைகளையாதல் வெளியிட்டுத் தனது கூக்குரலை எழுப்பிற்றா? 'குடியரசு' அவ் வறத்துறையும் நண்ணாது இழிவுரைகளால் வசை புராணம் பாடுவது ஆண்டகைமை யாகாது.

'குடியரசு' வலிந்து வலிந்து எவரையேனும் போருக்கு அழைத்தவண்ணமா யிருப்பதன் நோக்கம் ஏதாயினும் ஒன்றிருத்தல் வேண்டும். எவரையேனும் போருக்கு அழைத்து வசைபுராணம் பாடிக்கொண் டிருந்தால்தான் 'குடியரசி'ன் செல்வாக்கு நிலவும்போலும்! நமது கட்டுரை களின் முழுநோக்கத்தை நன்குணராது, ஆங்காங்குள்ள சில சொற்களையும் சில சொற்றொடர்களையும் கண்டு, காரண மின்றிக் 'குடியரசு' நம்மைத் தாக்கியிருக்கிறது. அவ்வாறு தாக்குவதன் நுட்பம் என்னை?

> 'சமீபத்தில் நாம் ஒரு தொல்லையிலிருந்து நீங்கிச் சற்று ஓய்வடைந்தோம் என்று எண்ணி இருந்தோம். திரு. முதலி யார்தொல்லை தவிர்க்கமுடியாததாகிவிட்டதால், அதன் முடி வையும் பார்த்துவிட வேண்டியது அவசியமாகிவிட்டதற்கு வாசகர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்றே நினைக்கின்றோம்'

எனவரூஉங் 'குடியரசு' உரைகளால் நுட்பம் புலனாகும்.

'குடியரசு'க்கு அஞ்சி நாம் மறைமுகமாகவும், பேர் ஊர் குறியாமலும் கட்டுரை வரைவதாகவும், பின்னே 'குடியரசு' நம்மைத் தாக்கியதும் நாம் அதையும் இதையும் கூறி வாளா

கிடந்து விடுவதாகவும் அப்பத்திரிகை ஆற்றுகிறது. 'குடியரசு'க்கு அஞ்சி நாம் ஒருபோதும் வாளா கிடந்ததில்லை என்பதை அதன் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். 'குடியரசு' நடத்துவோர் மனிதரா யிருக்கும்போது நாம் ஏன் அஞ்சுதல் வேண்டும்? மனிதருக்கு மனிதர் அஞ்சுவது எற்றுக்கு?

அச்சம் எது? அஞ்சாமை எது? என்பன 'குடியரசு'க்கு விளங்கவில்லையோ என்னவோ தெரியவில்லை! ஒருவரை வாயில் வந்தவாறு திட்டாதிருப்பது அச்சம் என்றும், திட்டுவது அஞ்சாமை என்றும் 'குடியரசு' உணர்ந்திருக்கிறது போலும்! சிறுமை உரைகளைப் பொருட்படுத்தாதிருப்பதும், சிற்றினங்களைக் கண்டு ஒதுங்குவதும், இன்னோரன்ன பிறவும் அச்சத்தின்பாற்பட்டன வல்ல. அவை பெருந்தகைமையின்பாற்பட்டனவாம். பெருந்தகைமையைக் கோழைமை என்று அறிஞர் கொள்ளார்.

'யாம் அச்சத்தால் ஒதுங்கிவிடும் நீர்மையேம்' என்னுங் கருத்துப்படக் 'குடியரசு' கூறுகிறது.

> "சீர்திருத்தக்காரர்களால் ஆபத்து! ஆபத்து! என்று சப்தம் போடுவதும் அதன்பேரில் ஏதாவது இரண்டு கிடைத்தால் வாங்கிக்கொண்டு பொறுக்க முடியாமல் 'நான் அப்படிச் சொல்லவில்லை; இப்படி நினைக்கவில்லை; அதற்கு இதல்ல அருத்தம்; அதல்ல பொருள்' என்று பல்லைக்காட்டுவதும்***"

எனவரூஉம் 'குடியர'சின் புன்மொழிகளை நேயர்கள் ஊன்றி நோக்குவார்களாக.

இன்னோரிடத்தில் 'ஆப்புக்கடாவினவுடன்* * *' என்று 'குடியரசு' 'திருவாய்மலர்ந்'திருக்கிறது. இவ்விழிவுரைகளை உமிழும் ஒரு பத்திரிகை 'சுயமரியாதை'ப் பத்திரிகையாம்! இது நாட்டைச் சீர்திருத்தப் போகிறதாம்! 'குடியர'சின் வசைமொழிகட்கு அஞ்சி, நாம் ஒதுங்கி வருவதாக அதன் தலைவர் கனவு கண்டு, நம்மை வசைமொழியால் அணி செய்ய உறுதிகொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

'குடியரசோ'டு அரசியல் துறையிலாதல் சமூகச் சீர் திருத்தத்திலாதல் போரிடும் அவசியம் ஒன்றும் இப்பொழுது நமக்கு ஏற்படவில்லை. நமக்கினியதாய்க் 'குடியரசுக்'கு மாறுபட்டதாயுள்ள ஓர் அரசியல் கட்சியில் நாம் சேர்ந் திருப்பின், 'குடியரசோ'டு அரசியற்போர் நிகழ்த்தல் நேரும். நமக்கினிய அரசியல் கட்சி யொன்றேனும் இப்போது இன்மையால், 'குடியரசோ'டு நிகழ்த்தற்குரிய அரசியற்போர் ஒன்றுமில்லை.

சமூகச் சீர்திருத்தத்தில் 'குடியரசு'த் தலைவர்க்கும் நமக்கும் பெரிதுங் கருத்துவேற்றுமை இல்லை. சாதி வேற் றுமை களைதல், பெண்ணடிமை தடிதல், தீண்டாமை விலக் கல் முதலிய அறத்தொண்டுகளை அவரவர் ஆற்றலுக் கியைந்த அளவில் இருவேமும் ஆற்றி வருகிறோம். ஆகவே, இத் துறைக்கண்ணும் இருவர்க்கும் வாதப்போர் நிகழ்தற்கு இடனில்லை. இன்னும் எஞ்சி நிற்பது ஒன்று. அஃதென்னை? அது சமயநெறி என்பது.

சமயத்தைப்பற்றிக் 'குடியரசி'ல் வெளிவருங் கட் டுரைகளிற் பல நமக்குப் பிடிப்பதில்லை. இதுகுறித்துக் 'குடியரசு' ஆசிரியரும் நாமும் பன்முறை நட்பு முறையில் பேசியும் இருக்கிறோம். கடவுளையாதல், கடவுள் நெறியை யாதல், அந்நெறியை உணர்த்திய அடியார்களையாதல் குறை கூறுதல் கூடாதென்பது நமது உட்கிடக்கை. மனிதனுக்குச் சமயம் இன்றியமையாதது என்பதும் நமது கருத்து. அச் சமயம் எச்சமயமாகவும் இருக்கலாம் என்று நாம் சொல்வ துண்டு. இக்காரணத்தால் நாம் சமரச சன்மார்க்கத்தை வலியுறுத்துவது வழக்கம். உலகில் தோன்றிய சமயாசாரி யர் அனைவரும் சமரச சன்மார்க்கத்தையே அறிவுறுத்திப் போந்தனர். சமரச சன்மார்க்கம் உலகில் பல சமயங்களாக நிலவிவருதலைக் குறித்து நாம் பன்முறை 'நவசக்தி'யில் எழுதியிருக்கிறோம்.

சமயத்தின்பேரால் கண்மூடி வழக்க வொழுக்கங்கள் ஆங்காங்கே நாட்டுக் கேற்றவாறு நுழைந்துகிடத்தல் உண்

மையே. இவைகட்குக் காரணர் யாவர்? சமயாசாரியரா? பின்வந்தவரா? சமயாசாரியர்க்குப் பின்வந்த மடத்தார் முதலியோர் கண்மூடி வழக்க வொழுக்கங்களைப் பெருக்கி விட்டார். அவைகளை ஒழிக்கவேண்டுவது அறிஞர் கடமை. ஆங்காங்குள்ள அறிஞர் அக்கடனாற்றி வருகிறார்.

'குடியரசு' கண்மூடி வழக்கவொழுக்கங்களை ஒழிக்க முன்வரின், அதற்கு அறிஞர் துணைநின்றே தீர்வர். 'குடியரசு' கண்மூடி வழக்கவொழுக்கங்களை அழித்தற்குப் பதிலாகக் கடவுள் நெறிக்கும் கலைகட்கும் கேடுசூழுந் துறையில் இறங்கித் திருவிளையாடல் புரிந்துவருகிறது.

நமது சீர்திருத்தக் கட்டுரைகளைக் கண்டு வெகுண்டு இவ்வாரம் 'குடியரசு' தீட்டியுள்ள உரைகள், 'குடியரசி'ன் சமயப் பகுதிமீது மட்டுங் கருத்துச் செலுத்துமாறு நமது பிடர்பிடித்து உந்துகின்றன. 'குடியரசு' வசைமொழிகளால் நம்மை அச்சுறுத்தி விடலாமெனக் கருதி வசைமொழி பொழியின் பொழிக. 'குடியரசு' வசைபாடுந் தீநெறி விடுத்துப் பொருளின்மீது கருத்திருத்தி அறமுறையில் வாதப் போர் நிகழ்த்துவதாக.

ஆண்டவன் திருவருளை முன்னிட்டே இப்போர்த் துறையில் நாம் இறங்குகிறோம். உலகியல் போரில் நாம் தலைப்படுகின்றோமில்லை. நாத்திகத்தை ஒழிக்கும் போரிலேயே நாம் தலைப்படுகிறோம். 'குடியரசி'ன் வசைமொழிகட்காதல், அதன் சார்புடைய சிலரது மருட்டலுக்காதல், தடியடிக்காதல் நாம் அஞ்சப்போவதில்லை. ஆண்டவன் அருள்நெறியின் பொருட்டு, முரடர்களால் தாக்கப்பெறும் பேறோ, கொல்லப்பெறும் பேறோ நமக்குக் கிடைத்தால் போதும்.

'குடியரசு'த் தலைவருக்கு ஆள்வலியுண்டு; தோள் வலியுண்டு; பொருள்வலியு முண்டு. எமக்கோ அவ்வலி யொன்றுமில்லை. ஆண்டவன் அருள்வலியொன்றே கொண்டு அறப்போரில் இறங்குகிறோம். பெரியோர்களை மிக இழிந்த உரைகளால் தூற்றுங் கட்டுரைகளை வெளியிட ஒருப்பட்

டுள்ள ஒரு பத்திரிகை இயக்கத்துடன் போர்புரிந்து உயிர் நீப்பதும் பிறவிப் பயனும் என்பதை நாம் நன்கு உணர்கி றோம். என்றைக்கிருந்தாலும் இவ்வுடல் ஒருநாள் மறையப் போவது திண்ணம். 1921-ம் ஆண்டு குண்டுகளுக்கிரையாக இருந்த உடல்தானே இது? அன்று தப்பிய உடலை இன்று தமிழ்ப் பெரியோர் பொருட்டு இரையாக்க முனைந்தே நிற்கிறோம்.

'குடியரசு'த் தலைவரே! ஒருநாள் வாய்ப்பேச்சு என்று நினையற்க. உம்மை நம்பொருட்டு எதிர்க்கப் புகுகிறோமில்லை. அன்பையும் அருளையும் தமிழில் குழைத்துக் குழைத்து ஊட்டிய அடியார்பொருட்டு உம்மை எதிர்க்கப் புகுகிறோம். நமக்கு ஆள்வலி வேண்டாம்; தோள்வலி வேண்டாம்; பிறவலிகளும் வேண்டாம். நமக்கு ஆண்டவன் அருள்வலி யொன்றே சாலும். 'செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே' என்றும், 'ஈனர்கட் கெளியேனலேன் திரு வாலவா யரனிற்கவே' என்றும், 'அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை' என்றும் அடியார் அருளிய மொழிகள் பெருந் துணையாக நிற்கின்றன. அச்சமில்லை; அச்சமில்லை.

அச்சங் காரணத்தால் சீர்திருத்தக் கட்டுரைகளில் மறைந்து மறைந்து 'குடியரசு' இயக்கத்தை நாம் தாக்குவ தாக அப்பத்திரிகை புகல்கிறது. அக்கட்டுரைகள் 'குடியர சி'ன் 'புனித' இயக்கத்தை உளங்கொண்டு எழுதப்பட்டன அல்ல அல்ல என்று பன்முறை அறைகூவுகிறோம். 'குடியரசு' இயக்கத்தைத் தாக்கவேண்டுமானால் நேர்முகமாகத் தாக்கு வோம். மறைமுகவேலை நமக்குத் தெரியாதென்பதைக் 'குடி யரசு'த் தலைவர் உணர்வாராக.

நமக்குப் போதிய செல்வாக்கில்லை என்னுங் கருத்துப் படக் 'குடியரசு' கூச்சலிடுகிறது. நாம் எப்பொழுதும் செல்வாக்கை விரும்பியதில்லை; விரும்பப்போவது மில்லை. 'குடியரசு' தனது செல்வாக்கைத் தானே புகழ்ந்துகொள்

கிறது. 'குடியரசு'க்குள்ள செல்வாக்கை நாம் அறிவோம். தெருக்கூத்துக்கும் கழைக்கூத்துக்கும் குத்துச்சண்டைக்கும் கூட்டஞ் சேர்வது இயல்பு என்பது 'குடியரசு'க்குத் தெரியும்.

'குடியரசு'த் தலைவர் சமயத்தைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தை ஆதரிப்போர் அவரியக்கத்தில் ஈடுபட்டுள்ளவருள் எத்துணைப்பேர் என்பது அத்தலைவர்க்கே தெரியும். அவருடன்சென்று சொற்பொழிவு நிகழ்த்துவோருள் எத்துணைப் பேர் நால்வர் ஆழ்வாரை மறந்திருக்கிறார்? திருநீறு திருமண் ணைப் பூசாதொழிந்தார்?

பார்ப்பனப் புரோகிதம் சடங்குகள் முதலியவற்றைத் தொலைக்க வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டு 'குடியரசு'த் தலைவருடன் சிலர் சுற்றுகிறாரேயன்றி, அத் தலைவரின் நாத்திகக் கூற்றுகட்கு உடன்பட்டு அவர் சுற்றுகிறாரில்லை. தாம் போகுமிடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவதைக் கண்டு 'குடியரசு'த் தலைவர் இறுமாந்து கிடக்கி றார் என்பது அவரெழுத்தால் விளங்குகிறது. அப்பெருங் கூட்டங் கூடுவதன் காரணம் யாது? 'குடியரசு'த் தலைவர் அறிவுறுத்தும் 'மேலான ஞான போதனையை'ச் செவி மடுக்கவா அக்கூட்டங்கள் கூடுகின்றன? இல்லை; இல்லை. பின்னை என்னை? பிராமணத் துவேஷமே காரணம். நாட்டில் பிராமணத் துவேஷம் நிரம்பியிருக்கிறது. இந்நாளில் ஒரு நாய் சென்று பிராமணத் துவேஷப் பிரசாரஞ் செய்யினுங் கூட்டஞ் சேரும் நிலையில் நாடு இருக்கிறது.

'குடியரசு'த் தலைவர் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்னும் போர்வை அணிந்து, ஊடே ஊடே பார்ப்பனர்மீது பழிசுமத்துவதுபோலத் தமது நாத்திகத்தைப் புகுத்துகிறார். 'குடியரசு'த் தலைவர் போதனையை மக்கள் இக்காதில் வாங்கி அக்காதின்வழி விடுப்பதை நாம் அறிவோம்.

'குடியரசு'த் தலைவர் பிரசாரம் உண்மையாக ஆக்கம் பெற்றிருந்தால், 'ஜஸ்டிஸ்' கட்சித் தலைவர்கள் நெற்றியில்

திருநீறும் திருமண்ணும் ஒளிசெய்யா திருத்தல் வேண்டும். திருவிழாக் காலங்களில் நாயும் நரியும் ஓடுதல் வேண்டும்.

திரு. இராமசாமி முதலியார் நெற்றியில் திருமண் ஒளிர்ந்துகொண்டே யிருக்கிறது. திரு. சின்னையா பிள்ளை நெற்றியில் திருநீறு பொலிந்துகொண்டே யிருக்கிறது. திருவிழாக்கள் நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றன. கூட்டங்கள் போய்க்கொண்டே யிருக்கின்றன. இதனால் நாயக்கர் சீர்திருத்த போதனை, அவரளவிலேயே கட்டுப்பட்டுக் கிடக்கிறதென்பது வெள்ளிடைமலையென விளங்குகிறது. சீர்திருத்தத்தில் இவ்வளவு செல்வாக்குப் பெற்றுள்ள 'தலைவர்' நமது செல்வாக்கைக் குறித்து எள்ளி நகையாடுகிறார்!

> 'முதலாவது ப்ராணக் குப்பை யுலகத்திலிருந்து மக்கள் விடுதலை அடைந்தே தீரவேண்டும். அது எந்தப் புராணமானாலும் நமக்கு அக்கரையில்லை. உதாரணமாக ராமாயணமோ, பாரதமோ, மச்ச புராணமோ, தவளைப் புராணமோ, பெரிய புராணமோ, சின்ன புராணமோ, சிவ புராணமோ, விஷ்ணு புராணமோ, அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் வித்தியாசம் பார்க்கமாட்டோம். அதோடு இந்தப் புராணங்களைப் படித்துவிட்டு பிரசங்கத்தில் வயிறு வளர்ப்பவர்களுக்கும் இவற்றை அச்சடித்து விற்பனைக்குக் காத்திருப்பவர்க்ட்கும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்பது நமக்குத் தெரியும்.'

புராணங்களைப் பற்றிக் 'குடியரசு'த் தலைவர் அறிவுறுத்தும் உரைகளை நேயர்கள் நோக்குவார்களாக. புராணங்களைப்பற்றி நாம்கொண்டுள்ள கருத்தைப் புதிதாக 'நவசக்தி' நேயர்கட்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டுவதில்லை. அவர்கட்கு நமது கொள்கை நன்கு தெரியும்.

இதிகாச புராணங்களைக் கவியழகு, இயற்கை வருணனை முதலியவற்றைக் கருதிக்கூடவா படித்தல்கூடாது? அந்தோ! தமிழ்க்கலைகளுக்குப் பிடித்தது ஏழரைநாட்டுச் சனி! 'குடியரசு' இயக்கத்துக்குக் கலைகள் வேண்டுவதில்லைபோலும்! 'ஷேக்ஸ்பியர் வேண்டுமா இந்தியா வேண்டுமா' என்னும் வினாவிற்கு எழுந்த விடை 'குடியரசு'க்குத் தெரியுமென்றே

நம்புகிறோம். கம்பன் கவிவனப்பையும், சேக்கிழார் அன்பின் திறத்தையும் உணரும் தவம் 'குடியரசு'த் தலைவர்க்கு மறு பிறவியிலாவது கூடுமாறு ஆண்டவனை வழுத்துகிறோம்.

இதிகாச புராணங்கள் எந்நாட்டிலில்லை? எம்மொழியிலில்லை? எச்சமயத்திலில்லை? உலகிலே மக்கள் உடல் தாங்கியுள்ளோர் அனைவரும் ஒரே நீர்மையரோ? உலகில் ஸர் ஒலிவியர் லாட்ஜ் போன்றார் இருக்கிறார்; டாக்டர் ஷில்லர் அனையார் இருக்கிறார்; ரவீந்திரநாத் தாகூர் ஒத்தார் இருக்கிறார்; ஈரோடு - இராமசாமி நாயக்கர்க் கடுப்பார் இருக்கிறார். கலைகளும் இவ்வாறு பலதிறப்பட்டு விளங்குகின்றன. புராணக் கலைகளை நாயக்கர் போன்றார்க்கு ஒப்பிட்டுக் கூறலாம். பத்திரிகைகளில் ஈரோடு 'குடியரசு' உலவுவது போலக் கலைகளில் குப்பைப் புராணங்களும் உலவுகின்றன. மன்பதையில் நாயக்கர் போன்றார்க்கு இடம் இருக்கும் வரை கலைகளில் புராணங்கட்கும் இடம் இருந்தே தீரும்.

'மூடநம்பிக்கை ஒழிதல் வேண்டும்' என்று 'குடியரசு' கூவுகிறது. மூடநம்பிக்கை எது என்பதை ஆராய்தல்வேண்டும். 'குடியரசு'த் தலைவர் முன்னே காங்கரஸில் ஒத்துழைப்பை நம்பினார்; பின்னே ஒத்துழையாமையில் உறுதி கொண்டார்; மீண்டும் ஒத்துழைப்பைப் பற்றி நிற்கிறார்; அந்நாளில் வகுப்புவாதத்தை எதிர்த்தார்; இந்நாளில் அதை நம்புகிறார். இன்னும் அவர் எவ்வெவ் மாறுதலுக் குட்படுவரோ தெரியாது. இந்நம்பிக்கைகளுள் எது மூடநம்பிக்கை என்பதை அறிய விரும்புகிறோம்.

> 'மூன்றாவது, அனுபவத்திற்கு ஒத்துவாராத சமயங்களும் மக்களுக்கு சுயமரியாதை அளிக்காத சமயங்களும் ஒழிந்தே தீரவேண்டியது மிக்க அவசியமான வேலை. அது எந்த சமயமானாலும் சரி, வைணவ சமயமோ, சைவ சமயமோ, ஸ்மார்த்த சமயமோ, மாத்துவ சமயமோ, மற்றைய சமயமோ என்பதைப் பற்றிய கவலை நமக்கு ஒரு சிறிதும் இல்லை.'

அநுபவத்துக்கு வந்துள்ள சமயம் எது என்பதை அறியவிரும்புகிறோம். 'சுயமரியாதை அளியாத சமயங்கள்

ஒழிந்தே தீரல்வேண்டும்' என்று 'குடியரசு' நவில்கிறது. முதலாவது 'குடியரசு'த் தலைவர்க்குச் சுயமரியாதை இன்னதென்று தெரியுமா? தெரிந்திருப்பின் பிறரை இழிவுரைகளால் திட்ட அவர் ஒருப்படுவரோ? தன்னைப்போலப் பிறரைப் பாவித்தலன்றோ சுயமரியாதைக்கு அழகு? இவ்வுண்மையை முதலாவது சுயமரியாதை இயக்கத் தலைவர் உணர்ந்து நடப்பாராக. இன்னுஞ் சுயமரியாதைப் பாடங்கள் பல உண்டு.

> 'ஆராய்ச்சிக்காரர்கள் என்பதற்காகவோ பண்டிதர்கள் என்பதற்காகவோ இவ்விஷயத்தில் நம்மிடத்தில் தனி மரியாதை ஒன்றும் இல்லை என்பதைப் பொதுமக்கள் உணர வேணுமாய் வேண்டுகின்றோம். ஏனெனில் ஆராய்ச்சியும் பண்டிதத் தன்மையும் வேறு அறிவு வேறு என்பது நமது அபிப்பிராயம்.'

என்று 'குடியரசு' சொல்கிறது. உலகில் ஆராய்ச்சியும் வேண்டாம்! பாண்டித்தியமும் வேண்டாம்! திட்டுவது மட்டும் வேண்டும்போலும்!

'குடியரசு'த் தலையங்கத்தை ஆராய ஆராய ஓர் உண்மை விளங்குகிறது. அஃதென்னை? 'குடியரசு'த் தலைவர் ஒருவரே கடவுள் என்பதும், அவர் மொழிவதே சத்தியம் என்பதுமாம். எல்லாரையும் பொய்யரென்றும் புரட்டரென்றும் கூறி இறுமாந்து திரியும் ஒருவரா சீர்திருத்தக்காரர்? உலகம் ஏமாறுதிருப்பதாக.

'குடியரசு'த் தலைவரே! அரசியற் றுறையிலாதல், சமூகச் சீர்திருத்தத்திலாதல் உம்முடன் மாறுபட்டுப் போர் தொடுக்க நாம் சிறிதும் விரும்புகிறேமில்லை. சமயச் சீர்திருத்தத்திலேயே நமக்குள் வேற்றுமை தோன்றியிருக்கிறது. அதுகுறித்து நமக்குள் அறமுறையில் வாதப்போர் நடத்தி ஒரு முடிவுக்கு வருவோமாக. (13-6-1928)

# திறந்த மடல்

அன்பார்ந்த நாயக்கரே! இவ்வாரக் 'குடியரசு' இதழ் வரப்பெற்றேன். அதன்கண் என்னைப்பற்றித் தாங்கள் தீட்டியுள்ள வெவ்வுரைகளைக் கண்டேன்.

சென்றவார 'நவசக்தி'யின் கட்டுரையிற் போந்துள்ள பொருள்களிற் சிலவற்றையே தொடுத்தும் விடுத்தும் தாங்கள் வாதப்போர் நிகழ்த்தியிருக்கிறீர்கள். இதனால் அளவை முறைப்படி ஏனைய பொருள்கள் தங்கட்கு உடன்பாடெனக் கொள்ளவேண்டுவது எனது கடன். அப்பொருள்கள் போக, வாதத்துக்கு எஞ்சி நிற்கும் பொருட்களைப்பற்றித் தாங்கள் வெளியிட்ட கருத்துக்கள் கொள்ளற்பாலனவல்ல.

வாதத்துக்கு இடந்தந்துள்ள பொருள்வைப்பை, ஈண்டு நான்கு கூறுபடுத்திச் செவ்வனிறை யிறுக்கப் புகுகிறேன். அவை வருமாறு :—

க. தங்கள் வசைமொழிகளைப் பற்றியது.

உ. 'நவசக்தி'யின் மொழிகளிற் சிலவற்றைத் தாங்கள் பிறழக்கொண்டு வருந்துவது.

ந. 'நவசக்தி'யின் சீர்திருத்தக் கட்டுரைகளைப் பற்றியது.

ச. புராணக் கலையை யொட்டியது.

க. தாங்கள் வசைமொழிகளைப் பெய்து பொருள் தெரிப்பது முற்றிலும் வெறுக்கத்தக்கது. அம் மொழிப் போர்வையின்றித் தங்கள் உட்கிடக்கை வெளிவாராது போலும்! தாங்கள் 'சுயமரியாதை' இயக்கத்துக்குத் தலைமைபூண் டிருக்கிறீர்கள். பிறரை அவமதிக்கும் வழியில் தன்மதிப்புத் தேடலா அறிவுடைமை என்பதை உன்னித் தெளிவுபெறுக.

இன்னாச்சொல் பெய்தே கருத்தை வெளியிடுவது நீண்ட நாள் பயிற்சியாயிருப்பின், அதைக் குறைத்துக்கொள்ளத் தாங்கள் முயலல்வேண்டும். நீண்டநாட் பழக்கம் விரைவில் தொலைதல் அரிதே. பழக்கம் மிகக்கொடியது. வாரம் வாரம் மெல்ல மெல்லச் சிறிது சிறிதாக வசைமொழித் தொகையைச் சுருக்கிச் சுருக்கிக் கட்டுரை வரைய முயல்க. மூன்று திங்களில் அம்முயற்சியில் வெற்றியடைவீர்கள்.

உ. சென்றவார 'நவசக்தி'யினின்றுஞ் சில சொற்களை மட்டும் எடுத்துக்காட்டித் தாங்கள் வருந்தியிருக்கிறீர்கள். சொற்கள் உவமைபற்றி ஆளப்படுதலுமுண்டு; பொருள் பற்றி ஆளப்படுதலுமுண்டு. உவமையைப் பொருளாக் கொள்வது இழுக்கு. 'நாய்' முதலிய சொற்கள் உவமையைக் குறிக்கொண்டு நிற்றலைத் தாங்கள் உணராது வருந்துவது குறித்து யானும் வருந்துகிறேன்.

ங. சீர்திருத்தக் கட்டுரைகள் பொதுநெறிபற்றி எழுதப் பட்டன என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். காய்தல் உவத்தல் அகற்றி, நெஞ்சை நடுநிலைப்படுத்தி, அக்கட்டுரைகளை மீண்டும் ஊன்றிப் படிப்பீர்களாக. அவைகளை முற்றுங் 'குடியரசி'ல் வெளியிட்டு மறுப்பெழுதுமாறு சென்றவாரமே கேட்டிருந்தேன். அதற்குத் தாங்கள் ஒருப்படவில்லை.

ஊர் பேர் முதலியன இல்லாத பொதுக்கட்டுரைகளில் ஒருவர் தம்மைப்பற்றிய குறிப்பு உளதாகக் கொள்வது முறையன்று. நீதிநூல்களில் சில இடங்களில் மக்கள்பாலுள்ள பலதிறக் குறைபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அக்குறைபாடுடையோர் தம்மைக் கருதியே நீதிநூல்கள் அவ்வாறு கூறுகின்றன என்று கொண்டால், அக்குற்றம் யாருடையதாகும்? உலகிலுள்ள சீர்திருத்தக் கட்டுரைகளிலெல்லாம் தங்களைப் பற்றிய குறிப்பிருப்பதாகக் கருதிப் போர்தொடங்குவீர் போலும்! சுவாமி விவேகாநந்தர் சீர்திருத்தத்தைப்பற்றி அருளிய அமிழ்த மொழிகளினின்றும் அகழ்ந்தெடுத்த சில மொழிகள் (இவ்வார 'நவசக்தி'யின்) முதற்பக்கத்தில் வெளியிடப்பட்

டிருக்கின்றன. அம்மொழிகளிலுந் தங்களைப்பற்றிய குறிப்பு உண்டு என்று கருதுவீர்கொல் !

'நவசக்தி'யின் கட்டுரைகளில் உணவு, உடை, சாதி, வழக்க வொழுக்கம், சமயம் முதலியவற்றைப்பற்றிய சீர்திருத்தக் கூறுகள் திகழ்கின்றன. அவைகளுள் எவை தங்களைக் குறிக்கின்றன ? பொதுவாகஉள்ள உரைகள்மீது கருத்திருத்தி, அவைகள் தங்களைக் குறிப்பன என்று கோடல் திரிபேயாம்.

மருண்ட மனமுடையானுக்குத் தெருவில் செல்வோர் பேச்சுக்களிலெல்லாம் ஐயந் தோன்றுதல் இயல்பு. தாங்களும் மருட்சியால் சீர்திருத்தக் கட்டுரைப் பொருளைப் பிறழ உணர்ந்திருக்கலாம். 'கட்டுரைகள் பொதுமுறைப்பற்றி எழுதப்பட்டன' என்று பன்முறை அறைகூவி அறிவு கொளுத்தினுந் திருந்தாது, வக்கீல் வாதஞ் செய்வது பெருந்தகைமைக் கழகன்று. 'கொடிறும் பேதையுங் கொண்டது விடா' என்னும் பழமொழிப்படி, தாங்கள் பிடிவாதத்தில் படிந்தால் யான் என்செய்தல் கூடும் ?

குறிப்பிட்ட சீர்திருத்தக் கட்டுரைகள் தங்களைக் குறிக்கொண்டு நிற்கின்றன என்று தாங்கள் ஊகித்தே போர் தொடங்கி யிருக்கிறீர்கள். ஊகத்தை அடிப்படையாகக் கொண்டுப் போர் துவங்குவதே அறியாமை. அவ்வூகத்தை உறுதிப்படுத்த முயல்வதை என்னென்று கூறுவது? உண்மை நாட்டமுடையார் ஊகத்தை உறுதிப்படுத்த முனையார்.

ஊகத்தால் ஒன்றை உறுதிப்படுத்த முயல்வது தவறு. உண்மை யுணர்த்தியும் தாங்கள் நிறைபெறாது, 'வேஷம்' 'திருடு' 'மறைமுகம்' 'நாணயம்' 'அயோக்யத்தனம்' முதலிய அம்புகளை என்மீது பெய்திருக்கிறீர்கள். அவைகள் என்பால் அணுகுமோ ? அவைகள் புகத்தக்க இடம் 'சுயமரியாதை' நிலையமே யாகும்.

நீலக்கண்ணாடி அணிந்தோனுக்கு உலகம் எவ்வாறு தோன்றும் ? மற்றவர்க்கு அஃது எங்ஙனம் தோன்றும் ? ஒருவர் அகக்கண் நிலைக்கேற்றவண்ணம் மற்றவர் தோற்றம் புலனாதல் இயல்பே.

'திரு. முதலியார் எழுதி மறையப் பார்ப்பார் என்று நாமும் நமது நண்பர்களும் முன்னமே நினைத்ததுதான். ஆனாலும் பின்னை அது யாரைப்பற்றி எழுதினது என்று கேட்டு, இம் முறை திரு. முதலியாரின் நாணயத்தின் யோக்கியதையைச் சந்திக்கு இழுத்துவிடவேண்டும் என்கின்ற எண்ணத்துடன் தான் சென்ற வாரம் 'குடியரசி'ல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்கின்ற தலையங்கம் எழுதினோம்.'

தங்களிடத்திருந்து பிறந்த இக்கூற்றுகள் தங்கள் அகநிலையைச் செவ்வனே புலப்படுத்துகின்றன. வேறு சான்று எற்றுக்கு?

சென்ற வார 'நவசக்தி'யிலுள்ள சில உரைகளை எடுத்துக்காட்டி,

'திரு. முதலியார் அவர்கள் 'சீர்திருத்தம்' என்று எழுதிய கட்டுரைகள் நம்மையும் நமது இயக்கத்தையும் பற்றி எழுதியது தான் என்று நாம் கொண்டது சரியென்றும், திரு. முதலியார் நம்மைப்பற்றி எழுதியது அல்ல என்று சொல்வது நாணயப் பொறுப்பற்ற பேடித்தனம் என்றும், திரு. முதலியார் அவர்களாலேயே 13-6-28ந் தேதி 'நவசக்தி' 'குடியரசின் குதர்க்கம்' என்று எழுதப்பட்ட தலையங்கத்திலேயே தாம் முன்எழுதிய 'சீர்திருத்தம்' என்னும் கட்டுரையை நம்மைப்பற்றியே எழுதியதாகவும், அதுவும் கடவுளையும் கடவுள் நெறியையும் அந்நெறி உணர்த்திய பெரியார்களையும் குறை கூறுவதனாலும் நாஸ்திகம் பரப்புவதனாலுமே நம்முடன் இப் போர் தொடுக்க நேரிட்டது என்றும் எழுதி ஒப்புக்கொண்டிருப்பதையும் வாசகர்களுக்கும் மெய்ப்பித்துவிட்டோம் என நினைக்கிறோம்.'

என்று தாங்களே வெற்றிச் சின்னம் பிடித்து மகிழ்கிறீர்கள். சென்ற வார 'நவசக்தி'யின் உரைகள், 'கடந்த வாரக் 'குடியரசி'ன் புன்மை மொழிகட்கு விடையாக எழுந்தன என்பதைத் தங்கட்கு நினைவூட்டுகிறேன். அவ்விடைக்கண் பொதுளுஞ் சில வுரைகள் கொண்டு சீர்திருத்தக் கட்டுரை

களைத் தாங்கள் எண்ணியவாறு மெய்ப்பிக்கப் புகுந்தது, தங்கள் போலி வக்கீல் வாதத்தைப் புலப்படுத்துகிறதே யன்றி, உண்மை வாதத்தைப் புலப்படுத்துவதாகாது.

சீர்திருத்தக் கட்டுரைகளைக் குறித்துக் கடந்தவாரக் 'குடியரசி'ல் தாங்கள் எழுதிய தலையங்கத்திலுள்ள இழிவுரைகட்கு மறுப்புக் கூறுமுகத்தான் பொறிக்கப்பெற்ற சில சொற்களைப் பொறுக்கித் தங்கள் கோளை நிறுத்த மன்றுடுகிறீர்கள் பாவம்! தங்கள் நிலைகுறித்துப் பெரிதும் இரங்குகிறேன்.

ச. புராணங்களைப்பற்றி யான் கொண்ட கருத்துப் பன்முறை 'நவசக்தி'யில் வெளிவந்திருக்கிறது. அக் கருத்து என்னால் எழுதப்பெற்ற சில நூல்களில் திகழ்கிறது. அதுகுறித்துப் பல மேடைகளிலும் பேசியிருக்கிறேன். 'நவசக்தி' நேயர்கட்கு அது பழம் பாடம். இன்னோன்ன காரணம் பல நினைந்து, "புராணங்களைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்தைப் புதிதாக 'நவசக்தி' நேயர் கட்குத் தெரிவிக்க வேண்டுவதில்லை. அவர்கட்கு நமது கோள் தெரியும். * * * புராணங்களைப்பற்றி ஈண்டு விரிக்கிற் பெருகும். மற்றுமொருமுறை அவைகளைப்பற்றி எழுதுவோம்" என்று விரிவுக்கஞ்சி எழுதியதைத் தங்கள் பாழும் மனம்,

> 'திரு. முதலியாரவர்கள் புராணங்களைப்பற்றி எழுதும் போதும் திருட்டுத்தனமாகவே எழுதுகிறார். அதாவது புராணங்களைப்பற்றிய தமது கருத்து நேயர்களுக்கு முன்னமே தெரியுமாம். ஆதலால் இப்பொழுது எழுதவேண்டியதில்லை என்று மறைந்துகொண்டார். இந்தப் போருக்கோ கட்டுரைக்கோ ஜீவாதாரமான விஷயம் இப்புராண விஷயந் தான் என்பது யாவரும் அறிந்ததாகும். அப்படியிருக்க, அதைப்பற்றி மற்றுமொரு சமயம் எழுதப் போகிறாராம். எப்பொழுது எழுதுவது என்பது நமக்கு விளங்கவில்லை.'

இவ்வாறு கொண்டது! தங்கள் மனமருளுக்கு இன்னுமா வேறு சான்று வேண்டும்?

சென்ற வாரக் 'குடியரசு' புராணத்தைப்பற்றி எழுதியது வருமாறு :—

'முதலாவது புராணக் குப்பை யுலகத்திலிருந்து மக்கள் விடுதலை அடைந்தே தீரவேண்டும். அது எந்தப் புராணமானாலும் நமக்கு அக்கரையில்லை. உதாரணமாக ராமாயணமோ, பாரதமோ, மச்சபுராணமோ, தவளைப்புராணமோ, பெரிய புராணமோ, சின்ன புராணமோ, சிவ புராணமோ, விஷ்ணு புராணமோ, அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் வித்தியாசம் பார்க்கமாட்டோம். அதோடு இந்தப் புராணங்களைப் படித்துவிட்டு பிரசங்கத்தில் வயிறு வளர்ப்பவர்களுக்கும், இவற்றை அச்சடித்து விற்பனைக்குக் காத்திருப்பவர்கட்கும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்பது நமக்குத் தெரியும்.'

இதற்கு 'நவசக்தி' நவின்றது வருமாறு :—

"இதிகாச புராணங்களைக் கவியழகு இயற்கை வருணனை முதலியவற்றைக் கருதிக் கூடவா படித்தல் கூடாது? அந்தோ! தமிழ்க் கலைகளுக்கும் பிடித்தது ஏழரைநாட்டுச் சனி! 'குடியரசு' இயக்கத்துக்குக் கலைகள் வேண்டுவதில்லை போலும்."

இவ்வாரக் 'குடியரசு',

'புராணங்களைக் கவி அழகு, இயற்கை வருணனை முதலியவற்றைக் கருதிக்கூடவா படித்தல்கூடாது என்கின்றார். அவ்வியற்கை அழகுக்கும் கவிஅழகுக்கும் உதாரணமாகக் கம்ப ராமாயணத்தையும், பெரிய புராணத்தையுமே காட்டத் துணிந்துவிட்டரர். இவ்வளவாவது துணிந்துவந்தது நல்ல காலமே. கம்ப ராமாயணத்தையும் பெரிய புராணத்தையும், கவியழகையும் வருணனையையும் குறிக்கொண்டு படிப்பவரிடம் நமக்கு வேலையில்லை என்பதைத் திரு. முதலியார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.'

என்று கூறுகிறது.

முதன்முறையே 'குடியரசு' புராணக் கலைகளைக் கவியழகு இயற்கை வருணனை முதலியன கருதிப் படிக்கலாம் என்பதை விளக்காது, 'இவற்றை அச்சடித்து விற்பனைக்குக் காத்திருப்பவர்கட்கும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்பது எமக்குத் தெரியும்' என்று எழுதி விடுத்ததன் நோக்கம் என்னை ?

புராணக் கலைகளை விற்றலே கூடாது என்னும் பொருள் பட முன்னே எழுதிப் பின்னைக் 'கவியழகு இயற்கை வருணனைக்குக்கூடவா படித்தல் கூடாது' என்னும் நன்மொழி கண்டு, அவை கருதி 'அவைகளைப் படிக்கலாம்' என்று தாங்கள் எழுதியது, 'திருட்டுத்தன'மா? அல்லது தாங்கள் மேலே குறிப்பிட்ட ஒன்று 'திருட்டுத்தன'மா? 'திருட்டுத் தனம்' என்று கைகூசாது தாங்கள் எழுதியது இழிவு! இழிவு! கவியழகு இயற்கை வருணனை முதலியன கருதிப் புராணக் கலைகளைப் படிக்கலாம் என்பது தங்கள் கருத்தாயின், 'அச்சடித்து விற்பவர்க்குக் கஷ்ட நஷ்டம்' விளைதலை ஏன் குறிப்பிட்டீர்கள்? ஒன்று கருதி வேறொன்று எழுதி விட்டதாகவாதல் தாங்கள் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.

'இதிகாச புராணங்களைக் கவியழகு இயற்கை வருணனை முதலியவற்றைக் கருதிக்கூடவா படித்தல் கூடாது' என்னும் வாக்கியத்திலுள்ள 'கூடவா' என்பதன் பொருளை யுன்னாது தாங்கள் 'குடியரசி'ல் முழங்கியிருக்கிறீர்கள்.

புராணங்களைப்பற்றி எனது உட்கிடக்கையை ஈண்டுப் புதிதாக விளக்கவேண்டுவதில்லை என்று மீண்டும் சொல்கிறேன். என்னால் யாக்கப்பெற்ற 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலின் ஒருபாங்கர் புராணத்தைப்பற்றி யான் கொண்ட கருத்தை விளக்கமாக ஓதி யிருக்கிறேன். அதன் ஊடே ஊடே புராணத்தைப்பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பல உண்டு. அவைகளை ஊன்றி நோக்குக.

நண்பரே! தங்கள் பொருட்டு எனது காலம் வீணே கழிகிறது. தாங்களும் யானும் சில அறிஞர் முன்னிலையில் சமய சீர்திருத்தப் பொருள்பற்றி வாதம் நிகழ்த்தி ஒரு முடிவிற்கு வருவது நலம். இதற்கு யான் ஒருப்படுகிறேன். தங்கள் கருத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். கல்வி கேள்வி ஆராய்ச்சியில் வல்ல சிலரிட்டமே சாலும். அன்னார் இன்னொரென நாமே கலந்து தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். தங்கள் பதிலை விரைந்து எதிர்நோக்குகிறேன்.

(20-6-1928)

# தொடர் முடங்கல்

அன்பு கெழுமிய நாயக்கரே !

இவ்வாரக் 'குடியரசு' வரப்பெற்றேன். '* * * அவ் விஷயத்தை தற்கால சாந்தியாக நிறுத்தி வைக்கிறோம்' என்றும்—'* * * முதலியார் அவர்களோடு போர்தொடுக்கக் கவலை கொள்ளவில்லை என்பதைத் திரு. முதலியாருக்கு வணக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்' என்றும்—சீர் திருத்தக் கட்டுரை வாதத்தைப்பற்றியும் புராணப் போரைப் பற்றியும் முறையே தாங்கள் குறிப்பிட்ட மொழிகளைக் கண்ணுற்றேன்.

யான் எவரிடமும் வலிந்து போர்தொடுக்கும் நீர்மையன் அல்லன் என்பதைத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 'நவசக்தி'யில் பொதுநெறிபற்றி எழுதப்பெறுங் கட்டுரைகளைக் கண்டு இனியாதல் ஐயுறாதிருக்குமாறு தங்களை வேண்டுகிறேன். அவ்வையத்தான் நாட்டுக்காதல் நமக்காதல் என்ன நலன் விளையும் ?

தங்களைச் 'சிற்றினம்' என்று நேர்பட யான் தாக்கியதாகத் தாங்கள் கருதியது தவறு. இவ்வாறு யான் கூறினால் 'இதுதான் முதலியார் வழக்கம்' என்று சொல்வீர்கள். என்பால் நண்புபூண்டு நீண்டநாள் நெருங்கிப் பழகியும் என்னைத் தாங்கள் செவ்வனே தெரிந்துகொள்ளவில்லை என்றே எண்ணுகிறேன். 'தங்களைச் சிற்றினமென யான் நினைப்பேனா' என்று தங்கள் மனச்சான்றை வினவுங்கள். அஃது இன்மை விடையே பிறக்கும். சிற்றினங் கண்டு ஒதுங்கல் அச்சத்தின்பாற்பட்டதன்று என்றும், அது பெருந் தகைமையின்பாற்பட்டதென்றும் விளக்கப் புகுந்த இடத்தில், பெய்யப்பெற்ற 'சிற்றினம்' என்னுந் தொடர், தங்களை நேர்படக் குறிப்பதாகத் தாங்கள் கருதியது குறித்துப் பெரிதும் வருந்துகிறேன்.

சீர்திருத்தக் கட்டுரை வாதத்தினின்றும், புராணப் போர் கிளம்பிற்று. அப்போரினின்றும் பெரிய புராண ஆராய்ச்சி கிளப்பப்பட்டிருக்கிறது. புராணத்தைப்பற்றிய எனது கட்டுரையில் பெரிய புராணம் தமிழ்ப் புராணம் என்னும் குறிப்பன்றி வேறொன்றுமில்லை. ஆகவே, கிளைவாதம் அநாவசியம்.

பெரிய புராணத்தின் உள்ளுறையைப்பற்றி எனது உள்ளக்கிடக்கையை உணரவேண்டிக் 'குடியரசி'ல் சில வினாக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. சுருங்கிய முறையில் விடையிறுக்கிறேன். பெரிய புராணத்தின் உள்ளுறை, இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள், அகச்சான்றுகள், அந்நாளில் நமதுநாடு போந்த அயல்நாட்டார் எழுதிய குறிப்புக்கள், வேறு சில புறச்சான்றுகள், சரித்திரப் பொருள்கள், காலநிலை முதலியவற்றிற்கு அரண் செய்யும் அளவில் கொள்ளத்தக்கது. இதுகுறித்து அறிஞர்கள் சுந்தரம்பிள்ளை, சீநிவாசபிள்ளை, சுவாமி வேதாசலம் முதலியோர் ஆராய்ச்சி முறையில் வரைந்துள்ள 'திருஞான சம்பந்தர் காலம்' 'தமிழ் வரலாறு' 'மாணிக்கவாசகர் கால வரலாறு' முதலிய நூல்களை ஆய்க.

ஒருவன் முற்றுங் கொள்ளத்தக்க நூல் ஒன்று உலகில் இருப்பது அரிது. மகன் அறிவு, என்றும் ஒருபெற்றியாயிருப்பதன்று. அது வளர்ந்து விரியும் நீர்மைத்து. இன்று ஒருவனுக்கு ஒன்று பொய்யெனத் தோன்றும். பின்னை அவனுக்கு அதே மெய்யெனத் தோன்றும். இதற்கு அவரவர் வாழ்வு அநுபவமே சான்று கூறும்.

மனிதன் வாழ்வு நிலையை என்னென்று கூறுவேன்? நாம் இருவரும் நட்பு பூண்ட நாள்முதல் இதுவரை நமக்கு உற்றுள்ள வாழ்வுநிலையை நாமே ஆராய்வோமாக. நமது மாறுபாடுகள் நமக்கே புலனாகும். குறைவிலா நிறைவாயிருப்பவன் ஆண்டவன் ஒருவனே. 'குறைவிலா நிறைவே கோதிலா அமுதே' என்றார் மாணிக்கவாசகனார்.

மகனே குறையுடையான். குறை ஒவ்வொருவர்பால் ஒவ்வொருவிதமாக விளங்கும்.

'குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே'

'குலத்திடையுங் கொடியனொரு குடித்தனத்துங் கொடியேன்
குறிகளிலுங் கொடியனன்றிக் குணங்களிலுங் கொடியேன்
மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலுங் கடையேன்
வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப் புலையேன்
நலத்திடையோர் அணுவளவும் நண்ணுகிலேன் பொல்லா
நாய்க்குநகை தோன்றநின்றேன் பேய்க்குமிக இழிந்தேன்
நிலத்திடைநான் ஏன்பிறந்தேன் நின்கருத்தை அறியேன்
நிர்க்குணனே நடராஜ நிபுணமணி விளக்கே'

'ஏறுகின்றேன் எனமதித்தே இறங்குகின்ற கடையேன்
ஏதமிலா நிறைமனத்தேன் இரக்கமிலாப் புலையேன்
சீறுகின்ற புலியனையேன் சிறுதொழிலே புரிவேன்
செய்வகையொன் றறியாது சிறியரினுஞ் சிறியேன்
மாறுகின்ற குணப்பேதை மதியதனால் இழிந்தேன்
வஞ்சமெலாங் குடிகொண்ட வாழ்க்கைமிக வுடையேன்
வீறுகின்ற உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
மெய்க்கருத்தை அறிந்திலேன் விளங்குநடத் தரசே'

'அரசரெலா மதித்திடப்பே ராசையிலே அரசோ
டாலெனவே மிகக்கிளைத்தேன் அருளறியாக் கடையேன்
புரசமரம் போற்பருத்தேன் எட்டியெனத் தழைத்தேன்
புங்கெனவும் புளியெனவும் மங்கியுதிர் கின்றேன்

பிரசம்வகை தெரிந்துகொளேன் தெரிந்தாரைப் பணியேன்
பசையறியாக் கருங்கன்மனப் பாறைசுமந் துழல்வேன்
விரசுநிலத் தேன்பிறந்தேன் நின்கருத்தை அறியேன்
வியக்குமணி மன்றோங்கி விளங்குபரம் பொருளே'

'தவம்புரியேன் தவம்புரிந்தார் தமைப்போல நடித்துத்
தருக்கின்றேன் உணர்ச்சியிலாச் சடம்போல இருந்தேன்
பவம்புரிவேன் கமரினிடைப் பால்கவிழ்க்குங் கடையேன்
பயனறியா வஞ்சமனப் பாவிகளிற் சிறந்தேன்
அவம்புரிவேன் அறிவறியேன் அன்பறியேன் அன்பால்
ஐயாநின் அடியடைந்தார்க் கணுத்துணையும் உதவேன்
நவம்புரியும் உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
நல்லதிரு உளமறியேன் ஞானநடத் திறையே'

எனவரூஉம் பெருமொழிகள் மனிதன் நிலையைப் புலப் படுத்துகின்றன.

பொதுவாக நூல்களினதும் சிறப்பாகச் சமய நூல்களினதும் நுட்பங்கள், மகன் கல்வி அறிவு ஆராய்ச்சி அநுபவம் முதலியவற்றிற்கு ஏற்றவாறு விளங்கும். ஒரு வேதாந்த சூத்திரம் எத்துணை விரிவுரைக்கு இடந் தந்ததென்பது தங்கட்குத் தெரியும்.

அழகிய காட்டிடை ஒரு பாவலன், ஓர் ஓவியன், ஒரு வேட்டுவன் ஆகிய மூவர் நுழைந்தனர். அவர் எதிரிலே மனத்தைக் கவரத்தக்க மயிலொன்று கலாம் விரித்து ஆடுகிறது. பாவலன் என் செய்கிறான்? ஓவியன் என் செய்கிறான்? வேட்டுவன் என் செய்கிறான்? பாவலன் மயிலின் இயற்கை வனப்பில் மூழ்கிப் பாட்டாகிறான். ஓவியன் அதனோடு கலந்து ஓவியமாகிறான். வேட்டுவனோ அதைச் சுடக் குறிபார்க்கிறான். பாவலன், மயிலைப் பாட்டில் கொண்டு திரும்புகிறான். ஓவியன், மயிலை ஓவியத்தில் கொண்டு திரும்புகிறான். வேட்டுவனோ * * * ?

மயிலெனும் ஒன்று மூவர்க்கு மூன்றுவிதமாக விருந்தாயிற்று. நூல்களின் உள்ளுறையும் இத்தன்மைத்தே.

தங்கள் பார்வையில் தற்போது நடைபெற்றுவரும் 'திராவிடன்' பத்திரிகையில் இரண்டு குறிப்புக்கள் திகழ்கின்றன. ஒன்று இராமலிங்கசுவாமியைப்பற்றியது; மற்றொன்று புத்தர் பெருமானைப் பற்றியது. இராமலிங்கசுவாமிகள் கண்டனக் கூட்டங்களும் புத்தமத மறுப்புக் கூட்டங்களும் குழுமிய நாட்களில் யான் பள்ளி மாணாக்கனா யிருந்தவன். அப்பொழுது எம்மேடையில் பேசினேன் என்பது எனக்குத் தெரியவில்லை.

அக் கண்டனங்களில் தலைப்பட்ட ஒருவர்பால் சிறியேன் சில தமிழ்நூல்கள் பயின்றது உண்மை. பள்ளி மாணாக்கனாயிருந்தபோது மற்றத் தோழர்களுடன் கலந்து கண்டனக் கூட்டங்கட்குச் சென்று வேடிக்கை பார்ப்பது வழக்கம்.

அந்நாளில் பௌத்தமதப் பிரசாரஞ் செய்தவருள் தோழர் சிங்காரவேலர் ஒருவர். அவர் பேச்சுக் கிடையிடையே மாணாக்கர்கள் கூக்குரலிடுவதுண்டு. அவருள் சேர்ந்திருந்த அடியேன், நாளடைவில் கூக்குரலை முற்றும் வெறுத்துத், தோழர் சிங்காரவேலர்பால் டார்வின் என்னும் புலவர் கண்ட உண்மை கேட்கும் மாணாக்கனாய்விட்டேன். அத்துறையில் தோழர் சிங்காரவேலர் என் ஆசிரியர். தங்கள் தினப்பதிப்பு, குறிப்பிட்ட முறையில் இரண்டும் நிகழவில்லை.

கட்சிப் போராட்டக் காலங்களில் இவ்வாறு கட்சிப் பத்திரிகைகள் எழுதுவது வழக்கம் என்பது எனக்குத் தெரியும். தங்கள் தொடர்புபெற்றுள்ள ஒன்று என்மீது இவ்வாறு பழிசுமத்தவேண்டுமா என்று நினைந்து அதனை மறந்தேன்.

திரிபுகட்கும் பிறழ்ச்சிக்கும் கட்சியும் மருட்சியும் காரணமாக நிற்பதோடு வேறொன்று இடையிடையே நம்மை அல்லற்படுத்துகிறது. தமிழ்நாட்டில் இரண்டொரு நாரதரிருப்பது நமக்குத் தெரியும். இப்பொழுது புது கிழ நாரதர் ஒருவர் புறப்பட்டிருக்கிறார். இப்போரில் அவர் சூழ்ச்சி நடம்புரிவதாக அறிகிறேன்.

'திறந்த மடலி'ன் இறுதியில் குறிக்கப்பெற்ற வாத சபையை எப்பொழுது கூட்டினுங் கூட்டுக. அவ்வவைக் களன் போந்து எனது உள்ளக்கிடக்கையைக் கிளத்த விரைந்து நிற்கிறேன்.

அன்புமுறையில் ஒருவருக்கொருவர் போர்புரிந்து திருந்தவே முயலல்வேண்டும். பிடிவாதம் பெரும் பேய்.

தங்கள்நலன் கருதித் திருவருளை வழுத்துகிறேன். தங்களைச் சிற்றினமெனக் கருதாத தோழன். (27–6–1928)

## விலகல்

தமிழ்நாட்டுக் காங்கரஸ் தலைவர், சென்னை

அன்பார்ந்த ஐய,

ஒத்துழையாமையே நாட்டுக்கு உரிமை நல்க வல்லது என்பது எனது அடிப்படையான கொள்கை. ஒத்துழையாமைக்கெனக் காந்தியடிகள் கோலிய திட்டம் இப்பொழுது காங்கரஸ் நிகழ்ச்சிமுறையில் இல்லாதொழியி னும், அதன்கண் ஒத்துழையாக் குறிப்பு வேறுபொருளில் இருத்தல் கண்டு, அதையாதல் நாடு நெகிழவிடாது காத்தல் சாலுமென்றும், ஒத்துழையாமை என்பது அறவே பட் டொழியாதவாறு, அதை உணர்வளவிலாதல் ஒருபுடை ஓம்பி வரின், பின்னை அஃது ஆக்கம் பெறுதற்குரிய துறை தோன் றும் என்றும், ஒரு பெருநோக்கங்கொண்டு, கான்பூர் காங் கரஸ் தீர்மானவழி நின்று யான் தொண்டாற்றத் தலைப்பட் டேன். இதுபோழ்து காங்கரஸ் அபேட்சகர்களிற் சிலர் ஒத் துழையா உணர்வே நாட்டில் வேரூன்றுதவாறு கல்விவருவது கண்கூடு. அவர்கள் நோக்கோடு எனது நோக்கு எங்ஙனே அரண் செய்யும்? காங்கரஸ் கூட்டத்தி லிருந்துகொண்டு

அவர்களுடன் பிணக்குற்றுப் போரிடுதலுஞ் சால்புடைத் தன்று.

நாட்டிலோ சாதி சமயப்பூசல், வகுப்புரிமை யுணர்வு முதலியன காட்டுத் தீப்போல் பரவி வருகின்றன. இக் கொடுமைகளைத் தொலைக்க உழைக்கவேண்டு மென்னும் அவா என்னைப் பிடர்பிடித்து உந்தாத நாளில்லை. இதற்கு அரசியல் கிளர்ச்சியும், அரசியல் கட்சியும், தேர்தல் பிரசாரமும் பெருமுட்டாக நிற்பதும் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. நாட்டிற் கனன்றெரியும் வகுப்புப் பிணக்கைத் தணிக்கவல்லது சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள காந்தியமெனுந் தண்புனல் என்பதை எனது மனச்சான்றெனுங் கடவுள் நன்கு அறிவுறுத்துகிறது. அம் மனச்சான்றுவழி நின்று தொண் டாற்ற வேண்டுமேல் காங்கரஸ் காரியக் கூட்டத்தில் அங்கம் பெற்றிருத்தல் அறமாகாது. ஆதலின் அதனின்றும் விலகவேண்டுமென உறுதிகொண்டேன்.

தயைகூர்ந்து எனது விலகுதலை ஏற்குமாறு வேண்டு கிறேன். இது முடிந்தமொழியன்றி மீண்டும் முன்னு மொழி யன்று என்பதையுந் தங்கட்கு வணக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (9-7-1926)

## எனக்கினிய தொண்டு

தமிழ்நாட்டுக் காங்கரஸ் காரியக் கூட்டத்தினின்றும் விலகவேண்டித் தலைவருக்கு விடுத்த கடிதம் பலர்க்குப் பலதிற ஐயப்பாடுகளை விளைக்குமென்று எவரும் ஊகித்தல் கூடும். ஐயப்பாட்டிற்குக் காரணம் காலநிலையைப் பொறுத்து நிற்கிறது. இக்காலத்தைப் போன்ற கொடுங் காலத்தை நமது நாடு கண்டிருக்குமோ என்று நானும் ஐயுறுகிறேன். அரசியல் கட்சிப் பிணக்குகளும், தேர்தல்

பிரசாரத்தில் சுயவர்கள் புனைந்துரைக்கும் பொய்புரட்டு களும், கட்சிப் பற்றால் உண்மைகளைத் திரித்துக் கூறும் பத்திரிகைகளும் மலிந்து மலிந்து திரண்டு திரண்டு குவியும் இந்நாளில் ஒருவரை ஒருவர் ஐயுறல் இயல்பாகிவிட்டது. நமது நாட்டிடை ஆன்ம நேயம், நம்பிக்கை முதலியன மீண்டும் உயிர்பெற்றெழுந்தாலன்றி நாட்டுக்கு உய்வில்லை என்பது திண்ணம்.

அரசியல்தொண்டில் தலைப்பட்டுள்ளோர்நிலை மிகவும் இரங்கத்தக்கதா யிருக்கிறது. ஒருவர் உள்ளக்கிடக்கையை மற்றொருவர் உணராது, தமது உள்ளக்கண்ணுக்குத் தோன்றுமாறு அவருள்ளத்தையுங்கொண்டு பொய்களைப் புனைந்துரைக்கிறார். அப்பொய்கள் நாட்டையே பாழ்படுத்து கின்றன.

இதுபோழ்து நமது தமிழ்நாட்டில் 'ஜஸ்டிஸ் கட்சி' என்றும், 'பார்ப்பனக் கட்சி' என்றும் மக்கள் பேசாத இடம் இல்லை. இவைகளால் உண்மைக் காங்கரஸ்காரருக்கு விளைந்துள்ள இடுக்கண் இயம்பற்பாலதன்று. அதினும் பிராமணரல்லாத காங்கரஸ்காரருக்கே இடுக்கண் பெரிது முண்டு. பிராமணரல்லாத காங்கரஸ்காரர், ஒருவேளை 'பார்ப்பனக் கட்சி'யாராகவும், மற்றொருவேளை 'ஜஸ்டிஸ் கட்சி'யாராகவும் கருதப்படுகிறார். அவர் காங்கரஸ்சார்பாகத் தொண்டாற்றும் வேளையில், அவர் 'பார்ப்பனக் கட்சியார்' என்று ஜஸ்டிஸ் கட்சியாரால் தூற்றப்படுகிறார். அவரே, காங்கரஸிலுள்ள குறைபாடுகளையோ, காங்கரஸ் பிராமணர் தவறுதலையோ எடுத்துக்காட்டும் வேளையில் பிராமணர் களால் அவர் 'ஜஸ்டிஸ் கட்சியார்' என்று தூற்றப்படுகிறார். அந்தோ! பிராமணரல்லாத காங்கரஸ்காரர்நிலை இருதலைக் கொள்ளி எறும்புபோ லிருக்கிறது! என் செய்வது!

எனது நிலை எனக்குத் தெரியும்; எல்லாம்வல்ல இறை வனுக்குத் தெரியும். நான் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவனு மல்லன்; பார்ப்பனக் கட்சியைச் சார்ந்தவனுமல்லன். சாதிக் கட்சியில் எனக்குச் சிறிதும் பற்றில்லை. தேசியம் எனக்கு

உரியது. அதுகுறித்துப் போராடும் காங்கரஸ் கட்சியே என்னுடையது. உண்மையறியாது எனது நிலையைப் பிறழக் கொண்டு உளறுவோர் உரைகள் என்னை என் செய்யும்?

முன்னே சுயராஜ்யக் கட்சி காங்கரஸோடு ஒன்றாது தனித்து நின்ற ஞான்று, அதை யான் தாக்கினேன். அதுபோது சிலர் என்னை 'ஜஸ்டிஸ் கட்சி'க்குத் துணைபோவோன் என்று பறைசாற்றினர். பின்னே சுயராஜ்யக் கட்சி தனித்து நில்லாது கான்பூரில் காங்கரஸோடு ஒன்றிய நாள்தொட்டு அதைத் தாக்காதொழிந்தது கண்ட சிலர் என்னைப் 'பார்ப்பனக் கட்சியான்' என்று மனங்கூசாது மொழிந்து வந்தனர். இப்பொழுது சில காரணம்பற்றிக் காங்கரஸ் காரியக் கூட்டத்தினின்றும் விலக உன்னியது காணுஞ் சிலர் என்னை 'எக் கட்சிக்காரன்' என்று சொல்ல முந்துவரோ தெரியவில்லை. சில இடங்களில் யான் 'ஜஸ்டிஸ் கட்சி'யில் சேரப்போவதாகச் சில வம்பர் புகன்று வருவதாகவுங் கேள்வியுறுகிறேன். அது முற்றிலும் பொய்.

வகுப்புரிமையை அடிப்படையாகக்கொண்ட 'ஜஸ்டிஸ்' கட்சியில் யான் எவ்வாறு சேர்வேன்? காங்கரஸ் சார்பாக நடைபெற்று வரூஉம் தேர்தல் பிரசாரத்திலும் நான் கலந்து கொள்ளேன். காரணம், யான் தமிழ்நாட்டுக் காங்கரஸ் தலைவர்க்கு விடுத்துள்ள கடிதத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கட்சியிலுஞ் சேராது சோம்புற்று வாளா கிடக்கவும் மாட்டேன். அக்கினி மந்தம் ஒருபாலும், மண்ணீரல் சவலை மற்றொருபாலும் முட்டிப் பீடித்துக்கொண்டுள்ள வேளைகளிலும் ஊர் ஊராகச் சென்று சொற்பெருக்கு நிகழ்த்திய அடியேன் ஒருபோதும் வாளாயிரேன். உடலுரங் குன்றிப் படுக்கையிலிருக்க நேரினும் உள்ளத்தாலாதல் தேசத்தொண்டு செய்வேன். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது எனது குருமொழி.

எனக்கினிய தேசத்தொண்டு எது என்பதை அவ்வப்போது காலதேவதை எனக்குச் செவ்வனே அறிவுறுத்தும். அரசியல் கிளர்ச்சியும் அரசியல் கட்சியுந்தான்

தேசத்தொண்டு என்று எனக்குத் தோன்றவில்லை. வேறு துறை பற்றியும் தேசத்தொண்டு செய்யலாம் என்பது எனது உள்ளக்கிடக்கை. எல்லாத் தொண்டுகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அருணெறி என்னுஞ் சன்மார்க்கத்தொண்டு எனக்குண்டு. அத் தொண்டுக்குப் பொன் பொருள் வேண்டுவதில்லை ; அமைப்புகள் வேண்டுவதில்லை ; அங்கம் வேண்டுவதில்லை. இவையெலாங்கொண்டோ புத்தர் கிறிஸ்து மகம்மது முதலியோர் அறநெறி வளர்த்து வந்தார் ? தற்கால அமைப்புமுறைகள் நாத்திகத்தையும் போர் பூசல்களையும் விளைத்துவரலை அநுபவத்தில் யான் கண்டிருக்கிறேன். முன்னோர் அடிச்சுவட்டைப் பற்றியே தொண்டாற்ற வேண்டுமென்னும் முடிவில் நிலைத்து நிற்கிறேன். 'பழைய பித்தன்' என்று சொல்வோர் சொல்க.

எனக்கினிய ஒரு தொண்டுக்கென ஆண்டவன் என்னைப் பண்படுத்தி வருகிறான் போலும். பல பாடநூல்களெழுதல் வேண்டும் என்னும் நோக்கோடு ஒரு கல்லூரியில் தமிழாசிரியனாயிருந்த என்னைத் திடீரெனத் 'தேசபக்தன்' ஆசிரியனாக்கியது எது ? 'தேசபக்தன்' ஆசிரியனாயிருந்த வேளையில் எனது மனைவி மக்களை என்னினின்றும் பிரித்து அவர்களை விண்ணுலகுக் கேற்றியது எது ? அவ்வேளையில் தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவிக்க என்னைத் தூண்டியது எது ? பின்னே 'தேசபக்தன்' ஆசிரிய பதவியை ஒரு நொடிப்பொழுதில் துறக்கச் செய்தது எது ? அதன்பின் 'நவசக்தி'யைத் தந்தது எது ? தற்செயலெனக் கூறுவோர் கூறுக. ஊழெனை உரைப்போர் உரைக்க. யான் ஆண்டவன் அருளென்றே கொள்கிறேன். தோன்றாத் துணையாக நின்று என்னை இயக்கிவரும் ஆண்டவன் அருள் என்னை நெகிழ விடாதென்னும் உறுதி எனக்குண்டு. அவ் வருட்டுணையால் எனக்கினிய தொண்டை யான் ஆற்றிவருவேன்.

யான் போதகாசிரியனாயிருந்தபோது, உலகில் இத்துணைப் பொய்ம்மை புனைசுருட்டு வஞ்சனை சூது மோசம் இருத்தல் எனக்குத் தெரியாது. அரசியல்தொண்டில் தலைப்பட்ட நாள்தொட்டு இன்றுவரை அதாவது ஒன்பது ஆண்டில்

உலகநிலை இஃதென்பது எனக்குச் செவ்விதிற் புலனாகி விட்டது. யான் பிறந்த நாட்டுக்குத் தற்போது ஆற்றவேண்டிய தொண்டு இஃதென்பதும் எனக்கு விளங்கிவிட்டது. அத் தொண்டாற்றிச் சன்மார்க்கத்தை நாட்டில் நிலைபெறுத்த வேண்டுமென்பது எனது தவம். அத் தவநெறியில் யான் புகுகிறேன்.

அத் தவநெறி நின்று 'நவசக்தி' வாயிலாகத் தமிழ் நாட்டுக்குத் தொண்டுசெய்வேன்; பிறவற்றைப் பற்றி 'நவசக்தி' வாயிலாக அவ்வப்போது தெரிவித்து வருவேன்.

தமிழ்நாட்டுக் காங்கரஸ் காரியக் கூட்டத்தினின்றும் விலகுதலைப்பற்றி மற்றவர் என்ன கருதினுங் கருதுக. ஒரு கட்சி புக நான் விலகவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். (9–7–1926)

## பொருளாராய்ச்சி

உலகத்தில் மக்கள் புரியும் பொருளாராய்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது. அவ்வளர்ச்சியின் வேகம் வருணனைக்கு எட்டாதது. அதை வருணிக்கும் ஆற்றல் எப்புலவருக்கு உண்டு? ஆராய்ச்சி வளர வளர அறியாமை தேய்ந்து தேய்ந்து அறிவு விளக்கமுறும். ஆதலால், மக்கட்குப் பொருளாராய்ச்சி இன்றியமையாதது.

பொருளாராய்ச்சி செய்யாது வாளா காலங் கழிக்கும் இனமோ, நாடோ, பிறவோ விரைவில் குலைந்துபோகும். ஒவ்வொருவரும் தாம் வாழும் உலகத்தைப்பற்றியும், ஞாயிறு, திங்கள், ஏனைய விண்மீன்கள் முதலிய வான் பொருள்களைப்பற்றியும் ஆராயும்நிலை நேர்ந்தால் மன்பதையில் தெய்விகம் தாண்டவம் புரியும். ஆராய்ச்சியால், பொருளுண்மை புலனாகும்; ஆராய்வோரது அறியாமை நீங்கி, அறிவு விளக்கமுறும்; பின்வரும் கூட்டத்தார் வாழ்வும்

நலம் பெறும். அத்தகைய ஆராய்ச்சியில் அறிஞர் தலைப்படாது வாளாகிடத்தல் பெரும் பாவமன்றோ?

ஆராய்ச்சியால் பெறும் உண்மைகளைச் சிலர் தம்மளவில் பயன்படுத்திக்கொள்கிறார்; சிலர் தம்மால் விரும்பப்பெற்ற ஒரு சிலர்க்கு அறிவுறுத்தும் அளவோடு நின்றுவிடுகிறார்; சிலர் உலகநலன் கருதி நூல்களாக எழுதிவைக்கிறார். தாம் பெற்ற இன்பத்தை ஏனையோரும் நுகர்தல் வேண்டும் என்று எண்ணித் தமது ஆராய்ச்சி அநுபவங்களையும் தாம் கண்ட உண்மைகளையும் நூல்வடிவாக உலகத்துக்கு உதவியுள்ள பெரியோர் வாழ்க.

இதுகாறும் அறிஞர் செய்துள்ள ஆராய்ச்சி பலமுகமாக விரிந்து பரந்து நின்றாலும், அதை முக்கூறாகப் பகுக்கலாம். அவை: உலகைப்பற்றிய ஆராய்ச்சி, உயிரைப்பற்றிய ஆராய்ச்சி, கடவுளைப்பற்றிய ஆராய்ச்சி என்பன. இம்மூன்றனுள் சிலர் ஒவ்வொன்றைப் பற்றியும், சிலர் இவ்விரண்டைப் பற்றியும், சிலர் மூன்றைப்பற்றியும் ஆய்ந்து நூல்கள் எழுதியுள்ளார். மூன்றும் இன்றியமையாதன என்பது எனது கொள்கை. உலக ஆராய்ச்சி, ஏனைய இரண்டாராய்ச்சிக்கும் அடிப்படை. இதை நமது நாட்டு ஆராய்ச்சிக்காரர் கவனிப்பாராக.

கண்கூடாகத் தோன்றும் உலகத்தை ஆராயப் புகாது, உயிரைப்பற்றியும் கடவுளைப் பற்றியும் ஆராயப்புகுவதால் நலன் விளையாது. உயிருண்மையையும் கடவுளுண்மையையும் உணர்த்துங் கருவி உலகம் உலகமேயாகும். உயிரும் கடவுளும் ஆராய்ச்சிக்கு எட்டாதன; கண்ணுக்குப் புலனாகாதன. ஆராய்ச்சிக்கு எட்டக்கூடியதாய், கண்ணுக்குப் புலனாவதாயுள்ள ஒன்றைவிடுத்துப் பிறவற்றை முதல்முதல் ஆராய்வதால் உண்மைகாண்டல் அரிதாகும். மக்கள் உயிருண்மை காணவேண்டுமாயின் - கடவுளுண்மை காணவேண்டுமாயின் - உலகை நன்கு ஆராய்தல் வேண்டும். உலக ஆராய்ச்சி சடப்பொருளாராய்ச்சி என்று அதை ஒதுக்குதல் பொருளுண்மை காண முயல்வதாகாது.

இந்நாளில் தாவரங்களைப்பற்றியும், பிராணிகளைப்பற்றி யும், பூத பௌதிகங்களைப்பற்றியும் ஆராய்ந்து எழுதப் பட்ட நூல்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. அவைகளைப் பயிலப் பயில இயற்கையின் நுட்பம் இனிது புலனாகும். இயற்கை ஆராய்ச்சியால் உயிருண்மையும் கடவுளுண்மை யும் விளங்கும். 'மரங்களைப்பற்றிய ஆராய்ச்சி, பறவை களைப்பற்றிய ஆராய்ச்சி, விலங்குகளைப்பற்றிய ஆராய்ச்சி எற்றுக்கு?' என்று நமது நாட்டவருள் பெரும்பான்மை யோர் இந்நாளில் வினவுவதை இயல்பாகக் கொண்டுள்ளார். என்செய்வது?

நமது கண்ணுக்கெதிரிலே ஒரு கொடி வளைந்தும் மற் றொன்று சுருண்டும் விளங்குவதையும், ஒரு பறவையின் மூக்கு நீண்டும் மற்றொன்றின் மூக்கு வளைந்தும் பொலி வதையும், ஒரு விலங்குக்குக் கொம்பு உண்மையையும், மற் றொன்றுக்கு அஃது இன்மையையும், இன்னொன்றுக்குத் துதிக்கை இருப்பதையும் ஆராய்ந்து உண்மை காணப் பொறுமை யில்லாதவரோ, வடிவமே யில்லாததாய், காட்சி யளவை கடந்தொளிர்வதாய் உள்ள உயிரையும் கடவுளையும் ஆராய்ந்தறியவல்லார்? நன்று! நன்று!!

கண்ணுக்கெதிரே தோன்றும் இயற்கையின் விசித்திரங் களை ஆராய்ந்து அறிஞர் நூல்கள் எழுதியுள்ளார்; விசித்திர அமைப்புக்களுக்குக் காரணங் கண்டிருக்கிறார். ஒரு விலங் குக்குக் கொம்பிருப்பதென்? மற்றொன்றுக்கு இல்லாததென்? என்பதை ஆராய்ச்சி செய்ய அவ்விலங்குகளே கருவிகளாக நின்று துணைசெய்யும். அவைகளை ஊன்றி ஊன்றி ஆராய்ந் தால் கொம்புண்மைக்கும் இன்மைக்கும் அவைகளே விடை பகரும். பிறவும் இவ்வாறே. அதுபோல உலகத்தை ஆராய ஆராயச் சிந்திக்கச் சிந்திக்க அவ்வுலகமே தன் வரலாற்றை யும் தத்துவத்தையும் அறிவுறுத்தும். உலகமாகிய நூலைப் படிக்கின்றவனல்லனோ புலவன்? ஏடுகளை நம்பிக்கையால் படிக்கின்றவனா புலவன்? சொற்களைக் கற்கள்போல அடுக்குகின்றவனா கவிஞன்? சுருங்கக் கூறின் பரும்

பொருள் ஆராய்ச்சியில் நுண்பொருளுண்மை புலப்படும் என்று கூறலாம்.

ஆராய்ச்சிக்குக் கருவியாகவுள்ள உலகை, எடுத்ததும் பொய்யென்று கூறி, அதை வெறுத்துத் தள்ள என் மனம் ஒருப்படவில்லை. என்னறிவை விளக்கி வரும் உடலை - நான் வாழும் இவ்வுலகை - எனக் கெல்லா வழியிலும் இன்ப மூட்டிவரும் இயற்கைத் தாயை - நான் பொய்யென்று வெறுப்பேனோ? அவைகளை வெறுக்குமாறு என் சகோதரர் களுக்குச் சொல்வேனோ? அவைகளைப் பொய்யென்று கூறுதற்குமுன் அவைகளை ஆராயுமாறு அவர்களை வணங் கிக் கேட்பேன். ஆராய்ச்சியில் அவைகள் பொய்யாயினு மாக ; மெய்யாயினுமாக.

பொருளாராய்ச்சி செய்து உலகைப் பொருளெனக் கொண்டோரும், உயிரைப் பொருளெனக் கொண்டோரும், கடவுளைப் பொருளெனக் கொண்டோரும், இரண்டையோ மூன்றையோ எதையோ பொருளெனக் கொண்டோரும் முறையில் அண்ணன் தம்பி போன்றவரே யாவர். பொரு ளாராய்ச்சி முறைகளை மதங்களாக்கொண்டு இடர்ப்படு வது அறியாமையாகும். பொருளாராய்ச்சியில் தலைப்பட்டுத் தாங்கண்ட உண்மைகளை அவ்வப்போது உலகத்துக்கு வழங்கிய எல்லா அறிஞரிடத்திலும் எனக்கு ஒரேவித அன்பு நிகழ்கிறது.

பூதபௌதிகங்களை ஆராய்ந்து பொருளுண்மை காண முயலாது, அவைகளிலுள்ள சில சக்திகளைக் கண்டு, அவ் வளவில் நின்று, அச்சக்திகளைக் கொண்டு, பலதிறக் கொலைக் கருவிகள் செய்து, உயிர்களை வருத்துவது இயற்கை வாழ் வுக்கு அரண்செய்வதாகாது. சில கூட்டத்தார் இயற்கையி லுள்ள சில சக்திகளைக்கொண்டு, கொலைக்கருவிகளும் விஷக் காற்றுகளும் கண்டு வருவது, மனித வகுப்பை நாசப் படுத்துவதாகும். சூரிய கிரணத்தின் வாயிலாக உயிர்களை வதைக்கும் முறைகள் காணப்படுகின்றன என்று பத்திரிகை களில் வாசிக்கும்போது குடர் நடுக்குறுகிறது. அக்

கூட்டத்தார் தம்மறிவையும் இயற்கைச் சக்தியையும் அன்புக்கு மாறுபட்ட நெறியில் பயன்படுத்தி வருவது வெறுக்கத் தக்கது ; மறுக்கத்தக்கது.

நமது நாட்டுப் பெரியோர் இயற்கையை ஆராய்ந்த போது, அவர்கட்கும் இயற்கையின்மாட்டுள்ள சக்திகள் புலப்பட்டிருக்கும். அவர் அவைகளைத் தம்மாராய்ச்சிக்குத் துணையாக்கொண்டு, பொருளுண்மை குறித்து உழைத்துக் கடவுளுண்மை கண்டனர். அவர் வெறும் புறப்பொருள் ஆராய்ச்சி செய்ததோடு நில்லாது, அகமுயற்சியிலுந் தலைப்பட்டு உழைத்து, அநுபவஞானம் பெற்றமையால், எங்குங் கடவுளுண்மை கண்டு, எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாத அற நெறியை நமக்கு அறிவுறுத்தினர்.

'எவ்வுயிரு நீங்கா துறையும்இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு' —சைவ சமய நெறி

[இது 'குமரன்' பத்திரிகைக்கென எழுதப்பெற்றது ; முற்றுப்பெறாதது.] (5-1-1923)

## திரு. வி. கலியாணசுந்தரனார் இயற்றிய நூல்கள்

திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் ... (அச்சில்)
பெரியபுராணம் - அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்
வசனமும் (அச்சில்) சன்மார்க்க போதமும் திறவும்... 2 0
தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு: (முதற்பகுதி) 5 0
,, (இரண்டாம் பகுதி) 5 0
திருக்குறள் விரிவுரை: (முதற்பகுதி-பாயிரம் நான்கதிகாரம்) 5 0
,, (இரண்டாம் பகுதி - அறத்துப்பால்-ஆறு அதிகாரம்) 5 0
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... 6 4
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... 5 0
இந்தியாவும் விடுதலையும் 5 0 உள்ளொளி ... 3 8
தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு ... 6 4
பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி ... 3 0
இருமையும் ஒருமையும்? 0 8 நாயன்மார் வரலாறு ... 4 0
தமிழ் நூல்களில் பௌத்தம் 0 8 முருகன் அல்லது அழகு 2 0
இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் ... 1 12
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... 1 8
முடியா? காதலா? சீர்திருத்தமா? ... 1 8
என்கடன் பணிசெய்து கிடப்பதே ... 1 0
சைவத்தின் சமரசம் 1 0 சைவத் திறவு... 0 12
தமிழ்நாடும் நம்மாழ்வாரும் 1 0 முதுமை உளறல் 0 12
இமயமலை அல்லது தியானம் ... 0 12
காரைக்காலம்மையார் திருமுறை - அரும்பதக் குறிப்
புரையுடன் 0 10 ஆலமும் அமுதமும் ... 0 8
கடவுள் காட்சியும் தாயுமானாரும் 0 8 சித்தமார்க்கம் ... 0 10
உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் ... 0 8
பொதுமை வேட்டல் 2 0 முருகன் அருள் வேட்டல்... 0 10
திருமால் அருள்வேட்டல் 0 12 சிவனருள் வேட்டல் 0 8
கிருஸ்துவின் அருள்வேட்டல் 0 6 புதுமை வேட்டல்... 0 10
கிறிஸ்து மொழிக் குறள் 0 12 இருளில் ஒளி ... 1 0
நாயன்மார் திறம் 0 6 சமரச தீபம் ... 0 6
நினைப்பவர் மனம் 0 6 சைவ சமய சாரம்... 0 4
அருகன் அருகே அல்லது விடுதலை வழி ... 0 8
பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும் 1 0
சித்தந் திருத்தல் அல்லது செத்துப் பிறத்தல் ... 0 8
வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் ... 0 8

முருகவேள் புத்தகசாலை,
15, மாதவப் பெருமாள் கோயில் தெரு, மயிலாப்பூர் சென்னை-4

# அரிய தமிழ் நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| திருவிளையாடற் புராணம் மூலமும், ஈக்காடு - இரத்தினவேல் முதலியார் இயற்றிய உரையும் விசேடமும் | ... | 10 | 0 |
| தமிழ் மறைத் திரட்டு | ... | 0 | 8 |
| விநாயகர் பனுவல் திரட்டு | ... | 0 | 6 |
| முருகவேள் பனுவல் திரட்டு | ... | 2 | 0 |
| முருகன் திருவருட்பா - இராமலிங்க சுவாமிகள் | ... | 0 | 8 |
| குசேலோபாக்கியானம் மூலமும் உரையும் | ... | (அச்சில்) | |
| கந்தபுராணச் சுருக்கம் மூலமும் உரையும் | ... | (அச்சில்) | |
| தேவி தோத்திர மஞ்சரி | ... | 0 | 4 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்-முதல் திருமுறை- அரும்பத உரையும் சாத்திரக் குறிப்பும் | ... | 0 | 12 |
| க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் | ... | 0 | 4 |
| சமயத்தொகுதி | ... | 0 | 2 |
| ஆறெழுத்தந்தாதி | ... | 0 | 2 |

## கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை, வேதப்ரவசன மந்திரத்து

சிவத்யானானந்த மஹரிஷி அவர்கள் எழுதிய

கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லை என்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1

**முருகவேள் புத்தகசாலை,**

15, மாதவப் பெருமாள் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4